6th Social Science Lesson 1

1] வரலாறு என்றால் என்ன?

**உங்களுக்குத் தெரியுமா?**

**வரலாறு** என்பது கடந்த கால நிகழ்வுகளின் காலவரிசைப் பதிவு.

வரலாறு என்ற சொல் கிரேக்கச் சொல்லான **"இஸ்டோரியா"** (Istoria) என்பதிலிருந்து பெறப்பட்டது. இதன் பொருள் "விசாரிப்பதன் மூலம் கற்றல்" என்பதாகும்.

**நாணயவியல்** – நாணயங்கள் பற்றிய படிப்பு, **கல்வெட்டியல்** – எழுத்துப்பொறிப்புகள் பற்றிய படிப்பு

**வலிமைமிக்க பேரரசர் அசோகர்:** பண்டைய இந்திய அரசர்களில் பேரும் புகழும் பெற்ற அரசர் அசோகர் ஆவார். இவரது ஆட்சியில் தான் புத்த மதம் ஆசியாவின் பல்வேறு பகுதிகளுக்குப் பரவியது. கலிங்கப் போருக்குப் பின் பல உயிர்கள் மடிவதைக் கண்டு வருந்தி, போர் தொடுப்பதைக் கைவிட்டார். அதற்குப் பிறகு புத்த சமயத்தைத் தழுவி, அமைதியையும் அறத்தையும் பரப்புவதற்காகத் தன் வாழ்வையே அர்ப்பணித்தார். பொதுமக்களுக்கு அவர் ஆற்றிய சேவை முன் மாதிரியாக விளங்கியது.

வெற்றிக்குப் பின் போரைத் துறந்த முதல் அரசர் அசோகர்தான். உலகிலேயே முதன்முதலாக விலங்குகளுக்கும் தனியே மருத்துவமனை அமைத்துத் தந்தவரும் அசோகரே ஆவார். இன்றும் அவர் உருவாக்கிய சாலைகளை நாம் பயன்படுத்திக்கொண்டு இருக்கிறோம். நமது தேசியக் கொடியில் இடம் பெற்றுள்ள 24 ஆரக்கால் சக்கரம் அசோகர் நிறுவிய சாரநாத் கற்றூணில் உள்ள முத்திரையிலிருந்தே பெறப்பட்டது. இதிலிருந்து அசோகரது முக்கியத்துவத்தை நாம் அறியலாம். ஆனால், இத்தகைய சிறப்புகளைக் கொண்ட அசோகர் குறித்த தகவல்கள், வரலாற்றின் பக்கங்களில் 19ஆம் நூற்றாண்டு வரை இடம்பெறவே இல்லை.

ஆங்கிலேய வரலாற்று ஆய்வாளர்களான வில்லியம் ஜோன்ஸ், ஜேம்ஸ் பிரின்செப், அலெக்ஸாண்டர் கன்னிங்ஹாம் போன்றவர்கள் வரலாற்று ஆய்வுகள் மூலம் கண்டுபிடித்த வரலாற்றுச் சான்றுகள்தான் மாமன்னர் அசோகரின் சிறப்புகளை வெளி உலகிற்குக் கொண்டு வந்தன. இதன் அடிப்படையில் சார்லஸ் ஆலன் எனும் ஆங்கிலேய எழுத்தாளர் அசோகர் குறித்த அனைத்து வரலாற்று ஆவணங்களையும் சேகரித்துத் தொகுத்து நூலாக வெளியிட்டார். அந்த நூலின் பெயர் 'The Search for the India's Lost Emperor' அதற்குப் பிறகு பல ஆய்வாளர்கள் தங்கள் ஆய்வுகள் மூலம் அசோகரின் பொற்கால ஆட்சி குறித்த செய்திகளை வெளிக்கொணர்ந்தனர். இதற்கான சான்றுகள் சாஞ்சி ஸ்தூபியிலும், சாரநாத் கற்றூணிலும் காணப்படுகின்றன. இவை அசோகரின் பெருமையை நமக்கு எடுத்துச் சொல்லுகின்றன.

**<u>சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:</u>**

1. பழங்கால மனிதன் தனது உணவைச் சேகரிக்க மேற்கொண்ட நடவடிக்கை

(அ) வணிகம்

(ஆ) வேட்டையாடுதல்

(இ) ஓவியம் வரைதல்

(ஈ) விலங்குகளை வளர்த்தல்

**<u>கூற்றையும் காரணத்தையும் பொருத்துக. சரியான விடையைக் குறியிட்டுக் காட்டுக:</u>**

1. கூற்று: பழைய கற்கால மனிதர்கள் வேட்டையாடச் செல்லும்போது நாய்களை உடன் அழைத்துச் சென்றனர்.

காரணம்: குகைகளில் பழைய கற்கால மனிதன் தங்கியிருந்த போது, விலங்குகள் வருவதை நாய்கள் தமது மோப்ப சக்தியினால் அறிந்து அவனுக்கு உணர்த்தின.

(அ) கூற்று சரி, காரணம் தவறு.

(ஆ) கூற்று சரி, கூற்றுக்கான காரணமும் சரி

(இ) கூற்று தவறு, காரணம் சுரி

(ஈ) கூற்று தவறு, காரணமும் தவறு

2. பண்டைய காலத்தில் வாழ்ந்த மனிதர்கள் பயன்படுத்திய பொருள்கள் அகழாய்வுகள் மூலமாகத் தோண்டியெடுக்கப்பட்டுள்ளன. அப்பொருள்கள் அக்கால மக்களின் வாழ்க்கை முறை பற்றி அறிந்து கொள்ளப்ப பாதுகாக்கப்படுகின்றன. இக்கூற்றுடன் தொடர்புடையது எது?

(அ) அருங்காட்சியகங்கள்

(ஆ) புதைபொருள்படிமங்கள்

(இ) கற்கருவிகள்

(ஈ) எலும்புகள்

**தவறான இணையைக் கண்டறி:**

1. பழைய கற்காலம் – அ. கற்கருவிகள்

2. பாறை ஓவியங்கள் – ஆ. குகைச் சுவர்கள்

3. செப்புத் தகடுகள் – இ. ஒரு வரலாற்று ஆதாரம்

4. பூனைகள் – ஈ. முதலில் பழக்கப்படுத்தப்பட்ட விலங்கு

**மற்ற தொடர்களிலிருந்து வேறுபட்ட ஒன்றைக் கண்டுபிடி:**

(அ) பாறைகள் மற்றும் குகைகளில் ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன.

(ஆ) வேட்டையாடுதலை குறிப்பதாக ஓவியங்கள் இருந்தன.

(இ) பழங்கால மனிதன் தனது குடும்ப உறுப்பினர்களுக்கு வேட்டையாடுதலை எடுத்துரைப்பதற்காக வரைந்திருக்கலாம்.

(ஈ) பல வண்ணங்களில் ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன.

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. பழைய கற்கால மனிதன் பெரும்பாலும் வாழ்ந்த இடங்கள் ___________

2. வரலாற்றின் தந்தை _____________

3. பழைய கற்கால மனிதன் பழக்கிய முதல் விலங்கு ___________

4. கல்வெட்டுகள் ____________ ஆதாரங்கள் ஆகும்.

5. அசோகச் சக்கரத்தில் _____________ ஆரக்கால்கள் உள்ளன.

**சரியா, தவறா எனக் கூறுக:**

1. பழைய கற்காலத்தைச் சேர்ந்த கற்கருவிகள் சென்னைக்கு அருகில் உள்ள அத்திரம்பாக்கத்தில் கிடைத்துள்ளன.

2. பழங்கால மனிதர்கள் பயன்படுத்திய பொருள்கள் தொல்லியல் துறையினரால் அருங்காட்சியத்தில் பாதுகாக்கப்படுகின்றன.

3. அசோகரது காலத்தில் புத்த சமயம் நாடு முழுவதும் பரவியது.

**பொருத்துக:**

1. பாறை ஓவியங்கள் – அ. செப்பேடுகள்

2. எழுதப்பட்டப் பதிவுகள் – ஆ. மிகவும் புகழ்பெற்ற அரசர்

3. அசோகர் – இ. தேவாரம்

4. மதச் சார்புள்ள இலக்கியம் – ஈ. வாழ்க்கை முறையைப் புரிந்து கொள்வதற்கு உதவுகிறது.

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: (விடைகள்)**

1. வேட்டையாடுதல்

**கூற்றையும் காரணத்தையும் பொருத்துக. சரியான விடையைக் குறியிட்டுக் காட்டுக:**

1. கூற்று சரி, கூற்றுக்கான காரணமும் சரி

2. அருங்காட்சியகங்கள்

**தவறான இணையைக் கண்டுபிடி:**

ஈ) பூனைகள் – iv) முதலில் பழக்கப்படுத்தப்பட்ட விலங்கு

**மற்ற தொடர்களிலிருந்து வேறுபட்ட ஒன்றைக் கண்டுபிடி:**

இ) பழங்கால மனிதன் தனது குடும்ப உறுப்பினர்களுக்கு வேட்டையாடுதலை எடுத்துரைப்பதற்காக வரைந்திருக்கலாம்.

**கோடிட்ட இடங்களை நிரப்புக: (விடைகள்)**

1. குகைகள் 2. ஹெரோடோடஸ் 3. நாய் 4. தொல்பொருள் 5. (24)

**சரியா? தவறா? (விடைகள்)**

1. சரி

2. சரி

3. சரி

**பொருத்துக: (விடைகள்)**

1. பாறை ஓவியங்கள் – வாழ்க்கை முறையைப் புரிந்து கொள்வதற்கு உதவுகிறது

2. எழுதப்பட்டப் பதிவுகள் – செப்பேடுகள்

3. அசோகர் – மிகவும் புகழ்பெற்ற அரசர்

4. மதச் சார்புள்ள இலக்கியம் – தேவாரம்

## 6th Social Science Lesson 2

## 2] மனிதர்களின் பரிணாம வளர்ச்சி

**உங்களுக்குத் தெரியுமா?**

மனிதர்கள் பரிணாம வளர்ச்சி அடைந்த கதையைத் தொல்லியல், மானுடவியல் ஆகியவற்றின் உதவியுடன் நாம் அறிவியல் நோக்கில் பயில முடியும்.

வரலாற்றுக்கு முந்தைய கால மனிதர்களையும் அவர்கள் பயன்படுத்திய பொருள்களையும் பற்றிப் படிப்பது தொல்லியல் ஆகும். தொல்லியல் ஆய்விற்கு முக்கிய ஆதாரமாக அகழ்வாராய்ச்சிப் பொருள்கள் உதவுகின்றன.

குகையில் வாழ கற்றுக் கொண்ட குரோமேக்னான்ஸ் மனிதர்கள் பிரான்சில் உள்ள லாஸ்காஸ் என்னுமிடத்தில் உள்ள குகைகளில் வாழ்ந்ததற்கான தொல்லியல் சான்றுகள் கிடைத்துள்ளன. இவர்களிடம் இறந்தவர்களை புதைக்கும் பழக்கம் இருந்தது.

மானுடவியல் (anthropology) மனிதர்கள் மற்றும் அவர்களின் பரிணாம வளர்ச்சியைப் பற்றி படிப்பது மானுடவியல் ஆகும்.

மானுடவியல் என்னும் சொல் இரண்டு கிரேக்க வார்த்தையிலிருந்து பெறப்பட்டது. Anthropology என்பதன் பொருள் மனிதன். Logos என்பதன் பொருள் எண்ணங்கள் அல்லது காரணம். மானுடவியல் ஆய்வாளர்கள், மனித குலத்தின் வளர்ச்சியையும், நடத்தையையும் ஆராய்ந்து மனிதனின் கலாச்சார மற்றும் சமூக நிகழ்வுகள் பற்றிய முழு விளக்கத்தையும் அடைவதற்கு முயல்கின்றனர்.

**மனிதர்களும் அவர்களது வாழ்விடங்களும்:**

1. ஆஸ்ட்ரலோபிதிகஸ் – கிழக்கு ஆப்பிரிக்கா

2. ஹோமோ ஹேபிலிஸ் – தென் ஆப்பிரிக்கா

3. ஹோமோ எரக்டஸ் – ஆப்பிரிக்கா மற்றும் ஆசியா

4. நியாண்டர்தால் – யூரேசியா (ஐரோப்பா மற்றும் ஆசியா)

5. குரோமேக்னான்ஸ் – பிரான்ஸ்

6. பீகிங் மனிதன் – சீனா

7. ஹோமோ சேப்பியன்ஸ் – ஆப்பிரிக்கா

8. ஹைடல்பர்க் மனிதன் – லண்டன்

**செதுக்கும் கலை:** ஒரு கல்லினை அடியில் வைத்துக் கூர்மையான மற்றொரு கல்லினால் அதனைத் தட்டிச் செதுக்குதல். ஒரு கற்கருவியை உருவாக்க இரு கற்கள் எடுத்துக்கொள்ளப்பட்டன. ஒரு கல்லில் உள்ள சீரற்ற பகுதிகளை நீக்கவும் அதைக் கூர்மையான கருவியாக்கவும் இன்னொரு கல் சுத்தியல் போல பயன்படுத்தப்பட்டது. தீப்பெட்டியைப் பயன்படுத்தாமல் நெருப்பை உருவாக்கும் பழக்கம் நீலகிரி மாவட்டத்தில் உள்ள சில கிராமங்களில் இன்றைக்கும் உள்ளது. வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் மனிதர்கள் குகைகளில் வசித்தார்கள். அவர்கள் அன்றாட நிகழ்வுகளை ஓவியங்களில் சித்தரித்தார்கள். பெரும்பாலும் விலங்குகளின் ஓவியங்களே வரையப்பட்டன.

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**

1. பரிணாமத்தின் வழிமுறை ___________

(அ) நேரடியானது

(ஆ) மறைமுகமானது

(இ) படிப்படியானது

(ஈ) விரைவானது

2. தான்சானியா ____________ கண்டத்தில் உள்ளது.

(அ) ஆசியா

(ஆ) ஆப்பிரிக்கா

(இ) அமெரிக்கா

(ஈ) ஐரோப்பா

**கூற்றுக்கான காரணத்தைப் பொருத்துக. சரியான விடையைத் தேர்ந்தெடு:**

1. கூற்று: உலகின் வெவ்வேறு பகுதிகளுக்கு இடம் பெயர்ந்த மனிதர்களின் உடலமைப்பிலும் நிறத்திலும் காலப்போக்கில் மாற்றங்கள் ஏற்பட்டன.

காரணம்: தட்பவெப்ப நிலை மாற்றமே.

(அ) கூற்று சரி.

(ஆ) காரணம் தவறு

(இ) கூற்றும் காரணமும் சரி

(ஈ) கூற்றும் காரணமும் தவறானவை.

**சரியான இணையைக் கண்டறி:**

அ. ஆஸ்ட்ரலோபிதிகஸ் – இரு கால்களால் நடப்பது

ஆ. ஹோமோ ஹேபிலிஸ் – நிமிர்ந்து நின்ற மனிதன்

இ. ஹோமோ எரக்டஸ் – சிந்திக்கும் மனிதன்

ஈ. ஹோமோ சேப்பியன்ஸ் – முகத்தின் முன்பக்க நீட்சி குறைந்து காணப்படுவது

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. தான்சானியாவில் காணப்பட்ட தொடக்க கால மனிதர்களின் காலடித்தடங்களை __________ உலகின் பார்வைக்குக் கொண்டு வந்தார்கள்.

2. பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னால், நம் முன்னோர்கள் ___________ வாழ்க்கை வாழ்ந்தார்கள்.

3. பழங்கால மனிதர்களின் முதன்மையான தொழில்கள் ____________ மற்றும் ____________ ஆகும்.

4. _____________ கண்டுபிடிக்கப்பட்ட நிகழ்வு விவசாயத்தை எளிதாக்கியது.

5. பாறை ஓவியங்கள் நீலகிரி மாவட்டத்தில் உள்ள _____________ என்னுமிடத்தில் காணப்படுகின்றன.

**சரியா, தவறா எனக் கூறுக:**

1. நாணயங்களை ஆராய்வதற்கான துறை மானுடவியல் ஆகும்.

2. ஹோமோ எரக்டஸ் மனிதர்களுக்கு நெருப்பு குறித்த அறிவு இருந்தது.

3. மனிதர்களின் முதல் அறிவியல் கண்டுபிடிப்பு சக்கரம் ஆகும்.

4. மனிதர்களால் பழக்கப்படுத்தப்பட்ட முதல் விலங்கு ஆடு.

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: (விடைகள்)**

1. படிப்படியானது 2. ஆப்பிரிக்கா

**கூற்றுக்கான காரணத்தைப் பொருத்துக. சரியான விடையைத் தேர்ந்தெடு: (விடை)**

1. கூற்றுக்குப் பொருத்தமான காரணம் தரப்பட்டுள்ளது.

**சரியான இணையைக் கண்டுபிடி: (விடை)**

அ) ஆஸ்ட்ரலோபிதிகஸ்

**கோடிட்ட இடங்களை நிரப்புக: (விடைகள்)**

1. மானுடவியல் ஆய்வாளர்கள் 2. நாடோடி

3. வேட்டையாடுதல், உணவைச் சேகரித்தல்

4. கலப்பை 5. கரிக்கையூர்

**சரியா? தவறா? (விடை)**

1. தவறு

2. சரி

3. சரி

4. தவறு

**சரியான விடை:** மனிதர்களால் பழக்கப்படுத்தப்பட்ட முதல் விலங்கு நாய்.

6th Social Science Lesson 3

**3] சிந்துவெளி நாகரிகம்**

**<u>உங்களுக்குத் தெரியுமா?</u>**

**நாகரிகம்** என்ற சொல் பண்டைய லத்தீன் மொழிச் சொல்லான "சிவிஸ்" (CIVICS) என்பதிலிருந்து வந்தது. இதன் பொருள் "நகரம்" ஆகும்.

தொல்லியலாளர்கள் எவ்வாறு புதையுண்ட நகரத்தைக் கண்டு பிடிக்கிறார்கள்?

அகழ்வாராய்ச்சியாளர்கள் செங்கற்கள், கற்கள், உடைந்த பானை ஓடுகள் போன்றவற்றை ஆராய்ந்து அவை பயன்படுத்தப்பட்ட காலத்தை அறிந்து கொள்கிறார்கள். பண்டைய இலக்கிய ஆதாரங்களைப் பயன்படுத்துகின்றனர். வான் வழிப் புகைப்படங்கள் மூலம் புதையுண்ட நகரங்கள் மற்றும் இடங்களின் மேற்பரப்பைக் கண்டறிந்து கொள்கிறார்கள். நிலத்தடியை ஆய்வு செய்ய காந்தப்புல வருடியை (Magnetic scanner) பயன்படுத்துகின்றனர். எஞ்சிய தொல்பொருள்கள் புதையுண்டு இருக்கின்றனவா இல்லையா என்பதை ரேடார் கருவி மூலம் அறிய முடியும். (தொலை நுண்ணுணர்வு முறை)

இந்தியத் தொல்லியல் துறை – ASI (Archaelogical Survey of India)

1861ஆம் ஆண்டு அலெக்ஸாண்டர் கன்னிங்ஹாம் என்ற நிலஅளவையாளர் உதவியுடன் நிறுவப்பட்டது. இதன் தலைமையகம் புது தில்லியில் உள்ளது.

வெண்கலக் காலம் என்பது, மக்கள் வெண்கலத்தாலான பொருள்களைப் பயன்படுத்திய காலம் ஆகும்.

**<u>மெஹர்கர் – சிந்து வெளி நாகரிகத்துக்கு முன்னோடி:</u>** மெஹர்கர் புதிய கற்கால மக்கள் வாழ்ந்த ஓர் இடம் ஆகும். இது பாகிஸ்தான் நாட்டில் பலுச்சிஸ்தான் மாநிலத்தில் போலன் ஆற்றுப் பள்ளத்தாக்கில் அமைந்துள்ளது. இது தொடக்க கால மனிதர்கள் வாழ்ந்ததாகக் கண்டறியப்பட்ட இடங்களுள் ஒன்று. மக்கள் வேளாண்மையிலும், கால்நடை வளர்ப்பிலும் ஈடுபட்டதற்கான சான்று இங்கு கிடைத்துள்ளது. கி. மு. (பொ. ஆ. மு) 7000–ஐ ஒட்டிய காலத்திலேயே மெஹெர்கரில் நாகரிகத்துக்கு முந்தைய வாழ்க்கை நிலவியதற்கான தொல்லியல் சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

செங்கற்களால் கட்டப்பட்ட சுவர்களைக் கொண்ட தானியக் களஞ்சியம் ஒன்று ஹரியானா மாநிலத்தில் உள்ள ராகிகர்கியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது முதிர்ச்சியடைந்த ஹரப்பா காலத்தைச் சார்ந்தது.

மனிதர்களால் முதன் முதலில் கண்டு பிடிக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட உலோகம் – செம்பு.

மொகஞ்ச–தாரோவில் வெண்கலத்தால் ஆன இந்த சிறிய பெண் சிலை கிடைத்தது. "நடன மாது" என்று குறிப்பிடப்படுகிற இந்தச் சிலையைப் பார்த்த சர் ஜான் மார்ஷல் "முதலில் இந்தச் சிலையை நான் பார்த்த பொழுது இரு வரலாற்றிற்கு முந்தைய காலத்தின் உருவாக்க முறையைச் சார்ந்தது என்று நம்புவதற்குக் கடினமாக இருந்தது. ஏனெனில் இதுபோன்று உருவாக்கம் பண்டைய மக்களுக்கு கிரேக்க காலம் வரை தெரியவில்லை. இவை ஏறத்தாழ 3000 ஆண்டுகளுக்கு முற்பட்டதாக இருக்கலாம் என நினைத்தேன். இச்சிலைகள் அக்காலகட்டத்துக்கு உரியதாகவே இருந்தன" என்றார்

**கே. வி. டி (கொற்கை–வஞ்சி–தொண்டி) வளாகம்:** பாகிஸ்தானில் இன்றும் கொற்கை, வஞ்சி, தொண்டி, மத்ரை, உறை, கூடல்கர் என்ற பெயர் கொண்ட இடங்கள் உள்ளன. கொற்கை, பூம்புகார் போன்ற சங்க கால நகரங்கள் மற்றும் துறைமுகங்களின் பெயர்களுடன் உள்ள இடங்கள் ஆப்கானிஸ்தானில் உள்ளன ஆறுகளான காவ்ரி, பொருண்ஸ் மற்றும் பாகிஸ்தானில் உள்ள ஆறுகளான காவிரி வாலா மற்றும் பொருனை ஆகிய பெயர்கள் தமிழ்ச்சொற்களை முழுமையாகப் பிரதிபலிக்கின்றன.

**சிந்துவெளி நாகரிகத்தின் மறைந்த பொக்கிஷங்கள்:** பழங்கால எழுத்துக்களைப் படிப்பதன் மூலம் அக்கால நாகரிகத்தை நாம் அறிந்துகொள்ளலாம். ஆனால் சிந்துவெளி எழுத்துகளை இன்று வரை நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை. எனவே, சிந்துவெளி மக்களின் வாழ்க்கை முறையை அறிவதற்கு வேறு ஏதாவது சான்றுகளையே நாம் நோக்க வேண்டி உள்ளது.

**உடை:** பொதுவாக பருத்தி ஆடைகளே பயன்பாட்டில் இருந்தன. அங்கு கண்டுபிடிக்கப்பட்ட நூலைச் சுற்றி வைப்பதற்கான சுழல் அச்சுக்கள் மூலம் அவர்கள் நூற்கவும் செய்திருக்கின்றனர் என்று தெரிகிறது. கம்பளி ஆடைகளும் உபயோகப்படுத்தப்பட்டன.

**அன்பும் அமைதியும்:** குடியிருப்புகள் தரைமட்டத்திலிருந்து நன்கு உயர்த்தப்பட்ட தளங்களில் கட்டப்பட்டிருந்தன. சிந்துவெளி மக்கள் அமைதியான வாழ்க்கை வாழ்ந்திருப்பதாகவே தோன்றுகிறது. ஏனென்றால் அவர்களிடம் படை இருந்ததற்கான எந்த ஆதாரமும் இல்லை. மேலும் சில ஆயுதங்கள் மட்டுமே அங்கிருந்து கிடைத்துள்ளன. அவர்கள் தங்களின் மேம்பட்ட நிலையை அவர்களுடைய ஆடைகள், விலைமதிப்பற்ற நகைகள் மற்றும் மேம்பட்ட நகர வாழ்க்கை மூலம் வெளிப்படுத்தினர்.

**அணிகலன்கள்:** ஆண், பெண் இருபாலரும் ஆபரணங்களை விரும்பி அணிந்திருக்கின்றனர். கழுத்தணிகள், கையணிகள், வளையல்கள், மோதிரங்கள், காதணிகள் மற்றும் காலணிகள் முதலியவற்றையும் அணிந்தனர். தங்கம், வெள்ளி, தந்தம், சங்கு, செம்பு, சுடுமண் மற்றும் விலையுயர்ந்த கற்களால் அணிகலன்கள் செய்யப்பட்டிருந்தன.

சிந்துவெளி மக்கள் இரும்பு மற்றும் குதிரையை அறிந்திருக்கவில்லை.

சிந்துவெளி மக்கள் ஆபரணம் செய்ய சிவப்பு நிற மணிக்கற்களைப் (carnelian) பயன்படுத்தினர்.

**கலைத்திறன்:** பொம்மை வண்டிகள், தலையையும், கால்களையும் அசைக்கக்கூடிய பசுபொம்மைகள், களிமண் பந்துகள், சிறிய பொம்மைகள், சிறிய களிமண் குரங்கு, சுடுமண் பொம்மைகள், கொட்டைகளைக் கொறிக்கும் அணில் பொம்மைகள், மண்ணால் ஆன நாய்கள், நடனமாடும் ஆண் பொம்மை போன்றவையும் கிடைத்துள்ளன. சுடுமண்ணால் செய்யப்பட்ட பல்வேறு வகையான பொம்மைகள் மக்களின் விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு ஆர்வத்தைக் காட்டுகின்றன.

மொகஞ்ச–தாரோவில் தொல்பொருள் ஆராய்ச்சி நடைபெறும் இடம் உலகப் பாரம்பரியத் தளமாக யுனெஸ்கோ அமைப்பால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

முதல் எழுத்து வடிவம் சுமேரியர்களால் உருவாக்கப்பட்டது.

**<u>கதிரியக்க கார்பன் வயதுக்கணிப்பு முறை – தொல்லியல் ஆய்வாளர்களுக்கான தரப்படுத்தப்பட்ட முறை:</u>** கார்பனின் கதிரியக்க ஐசோடோப் ஆன கார்பன்$_{14}$ ஐப் பயனப்டுத்தி, ஒரு பொருளின் வயதை அறியும் முறை கதிரியக்க கார்பன் முறை அல்லது கார்பன்$_{14}$($C_{14}$) முறை என்று அழைக்கப்படுகிறது.

**<u>சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:</u>**

1. சிந்துவெளி மக்கள் எந்த உலோகங்களைப் பற்றி அறிந்திருந்தனர்?

(அ) செம்பு, வெண்கலம், வெள்ளி, தங்கம்

(ஆ) செம்பு, வெள்ளி, இரும்பு, வெண்கலம்

(இ) செம்பு, தங்கம், இரும்பு, வெள்ளி

(ஈ) செம்பு, வெள்ளி, இரும்பு, தங்கம்

2. சிந்து வெளி நாகரிகம் எக்காலத்தைச் சார்ந்தது

(அ) பழைய கற்காலம்

(ஆ) இடைக்கற்காலம்

(இ) புதிய கற்காலம்

(ஈ) உலோக காலம்

3. ஆற்றங்கரைகள் "நாகரிகத்தொட்டில்கள்" என அழைக்கப்படக் காரணம்

(அ) மண் மிகவும் வளமானதால்

(ஆ) சீரான கால நிலை நிலவுவதால்

(இ) போக்குவரத்திற்குப் பயனுள்ளதாக இருப்பதால்

(ஈ) பெரும்பாலான நாகரிகங்கள் ஆற்றின் கரைகளில் தோன்றியதால்

**<u>கூற்றைக் காரணத்தோடு பொருத்துக. சரியான விடையைத் தேர்ந்தெடு.</u>**

1. கூற்று: ஹரப்பா நாகரிகம் ஒரு நகர நாகரிகம் எனலாம்.

காரணம்: திட்டமிடப்பட்ட நகர அமைப்பு, மேம்பட்ட கழிவு நீர் அமைப்பு.

(அ) கூற்றும் காரணமும் சரி

(ஆ) கூற்று தவறு, காரணம் சரி

(இ) கூற்று சரி, காரணம் தவறு

(ஈ) கூற்றும் காரணமும் தவறு

2. கூற்று – ஹரப்பா நாகரிகம் வெண்கல காலத்தைச் சார்ந்தது.

காரணம்: ஹரப்பா மக்களுக்கு இரும்பின் பயன் தெரியாது.

(அ) கூற்றும் காரணமும் சரி

(ஆ) கூற்று தவறு, காரணம் சரி

(இ) கூற்று சரியானது, ஆனால் அதற்கான காரணம் தவறானது

(ஈ) கூற்று மற்றும் காரணம் தவறானவை

3. கூற்று: ஹரப்பா மக்களின் பொறியியல் திறன் குறிப்பிடத் தக்கது.

winmeen.com

காரணம்: கடலின் அலைகள், ஓதங்கள் நீரோட்டத்தைக் கணித்த பின் கப்பல் கட்டும் தளத்தைக் கட்டியிருப்பது.

அ. கூற்றும் காரணமும். சரி

ஆ. கூற்று தவறானது, காரணம் சரியானது.

இ. கூற்று சரியானது, ஆனால் அதற்கான காரணம் தவறானது

ஈ. கூற்று மற்றும் காரணம் தவறானவை.

**கீழே கூறப்பட்டுள்ள மொகஞ்ச–தாரோவை பற்றிய கூற்றுகளில் எவை சரியானவை?**

அ. தங்க ஆபரணங்கள் பற்றித் தெரியவில்லை.

ஆ. வீடுகள் சுட்ட செங்கற்களால் கட்டப்பட்டன.

இ. கருவிகள் இரும்பினால் செய்யப்பட்டன.

ஈ. பெருங்குளம் நீர் கசியாமல் இருப்பதற்காக பல அடுக்குகளால் இயற்கை தார் கொண்டு பூசப்பட்டன.

**கீழ்காணும் கூற்றை ஆராய்க:**

அ. நகரங்கள், தெருக்களின் வடிவமைப்பு மற்றும் செங்கல் அளவுகள் ஆகியவற்றில் சீரான தன்மை.

ஆ. ஒரு விரிவான மற்றும் நன்கு வடிவமைக்கப்பட்ட வடிகால் அமைப்பு

இ. தானியக் களஞ்சியம் ஹரப்பா நகரங்களில் முக்கியமான பகுதியாக விளங்கியது.

மேலே கூறப்பட்ட கூற்றுகளில் எது / எவை சரியானவை?

(அ) 1 & 2

(ஆ) 1 & 3

(இ) 2 & 3

(ஈ) அனைத்தும் சரி

**பொருந்தாததை வட்டமிடு:**

காளைகள், ஆடுகள், எருதுகள், பன்றிகள், குதிரைகள்.

**தவறான இணையைத் தேர்ந்தெடு:**

1. ASI – அ. ஜான் மார்ஷல்

2. கோட்டை – ஆ. தானியக்களஞ்சியம்

3. லோத்தல் – இ. கப்பல் கட்டும் தளம்

4. ஹரப்பா நாகரிகம் – ஈ. காவிரி ஆறு

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. __________ மிகப் பழமையான நாகரிகம்.

2. இந்தியாவின் தொல்லியல் ஆய்வுத் துறை ____________ என்ற நில அளவையாளர் உதவியுடன் தொடங்கப்பட்டது.

3. ____________ தானியங்கள் சேகரித்து வைக்கப் பயன்பட்டது.

4. மக்கள் குழுக்களாகச் சேர்ந்து ___________ தை உருவாக்குகிறார்கள்.

**சரியா, தவறா எனக் கூறுக:**

1. மெஹர்கர் புதிய கற்கால மக்கள் வாழ்ந்த ஓர் இடமாகும்.

2. இந்தியாவின் தொல்பொருள் ஆய்வியல் துறை தொல்பொருள் ஆராய்ச்சிக்கும், நாட்டின் கலாச்சார நினைவுச் சின்னங்களின் பாதுகாப்பிற்கும் பொறுப்பானது.

3. தானியக் களஞ்சியம் தானியங்களைச் சேகரித்து வைப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டது.

4. முதல் எழுத்துவடிவம் சீனர்களால் உருவாக்கப்பட்டது.

**பொருத்துக:**

1. மொகஞ்ச–தாரோ – அ. மேடான பகுதி

2. வெண்கலம் – ஆ. சிவப்பு மணிக்கல்

3. கோட்டை – இ. உலோகக் கலவை

4. கார்னிலியன் – ஈ. இறந்தோர் மேடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: (விடைகள்)**

1. செம்பு, வெண்கலம், வெள்ளி, தங்கம் 2. உலோக காலம்

3. பெரும்பாலான நாகரிகங்கள் ஆற்றின் கரைகளில் தோன்றியதால்

**கூற்றைக் காரணத்தோடு பொருத்துக. சரியான விடையைத் தேர்ந்தெடு:**

1. கூற்றும் காரணமும் சரி

2. கூற்று சரியானது, ஆனால் அதற்கான காரணம் தவறானது.

3. கூற்று மற்றும் காரணம் தவறானவை

4. பெருங்குளம் நீர் கசியாமல் இருப்பதற்காக பல அடுக்குகளால் இயற்கை தார் கொண்டு பூசப்பட்டன.

5. அனைத்தும் சரி

6. குதிரைகள்

7. ஹரப்பா நாகரிகம் – காவிரி ஆறு

**கோடிட்ட இடத்தை நிரப்புக: (விடைகள்)**

1. ஹரப்பா 2. அலெக்ஸாண்டர் கன்னிங்ஹாம் 3. தானிய களஞ்சியம் 4. சமுதாயம்

**சரியா? தவறா? (விடைகள்)**

1. சரி

2. சரி

3. சரி

4. தவறு

**சரியான விடை:** முதல் எழுத்து வடிவம் சுமேரியர்களால் உருவாக்கப்பட்டது.

**பொருத்துக: (விடைகள்)**

1. மொஹஞ்ச–தாரோ – இறந்தோர் மேடு

2. வெண்கலம் – உலோகக் கலவை

3. கோட்டை – மேடான பகுதி

4. கார்னிலியன் – சிவப்பு மணிக்கல்

6th Social Science Lesson 4

4] தமிழ்நாட்டின் பண்டைய நகரங்கள்

**உங்களுக்குத் தெரியுமா?**

உலகின் மிகத் தொன்மையான நாகரிகம் மெசபடோமியா நாகரிகம். இது 6500 ஆண்டுகளுக்கு முற்பட்டது.

**தூங்கா நகரம்:** நாளங்காடி, அல்லங்காடி என்ற இரண்டு வகை அங்காடிகள் மதுரையில் இருந்தன. நாளங்காடி என்பது பகல் பொழுதியலான அங்காடியாகும். அல்லங்காடி என்பது இரவு நேரத்து அங்காடியாகும். இரவு–பகல் வேறுபாடு இல்லாமல் உயிர்ப்புள்ள நகரமாக மதுரை விளங்கியதால் தூங்கா நகரம் என்று அழைக்கப்பட்டது.

பெண்கள் எந்த விதப் பயமும் இன்றி இரவு நேரத்தில் அல்லங்காடியில் பொருள்களை வாங்கிச் சென்றனர். அந்த அளவிற்குப் பாதுகாப்பானதாக மதுரை நகர் விளங்கியது.

புகார்– துறைமுக நகரம், மதுரை–வணிக நகரம், காஞ்சி–கல்வி நகரம் ஆகும்.

சேர நாடு–கோவை, நீலகிரி, கரூர், கன்னியாகுமரி மற்றும் இன்றைய கேரள மாநிலத்தின் பகுதிகள்.

சோழநாடு–தஞ்சை, திருவாரூர், நாகை, திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங்கள்.

பாண்டிய நாடு–மதுரை, இராமநாதபுரம், சிவகங்கை, தூத்துக்குடி, திருநெல்வேலி உள்ளிட்ட தென் மாவட்டங்கள்.

தொண்டை நாடு–காஞ்சிபுரம், திருவள்ளூர், தருமபுரி, திருவண்ணாமலை, வேலூர், மற்றும் விழுப்புரம் மாவட்டத்தின் வடக்குப்பகுதி.

சோழ நாடு–சோறுடைத்து, பாண்டிய நாடு–முத்துடைத்து, சேர நாடு–வேழமுடைத்து, தொண்டை நாடு–சான்றோருடைத்து.

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**

1. 6500 ஆண்டுகளுக்கும் பழமையான நாகரிகத்தின் நகரம்

(அ) ஈராக்

(ஆ) சிந்துவெளி

(இ) தமிழகம்

(ஈ) தொண்டை மண்டலம்

2. இவற்றுள் எது தமிழக நகரம்?

(அ) ஈராக்

(ஆ) ஹரப்பா

(இ) மொகஞ்ச–தாரோ

(ஈ) காஞ்சிபுரம்

3. வங்காள விரிகுடாவுடன் தொடர்பில்லாத நகரம்

(அ) பூம்புகார்

(ஆ) தொண்டி

(இ) கொற்கை

(ஈ) காஞ்சிபுரம்

4. தமிழர்களின் நீர்மேலாண்மையை விளக்குவது.

i) கல்லணை ii) காஞ்சிபுர ஏரிகள் iii) பராக்கிரம பாண்டியன் ஏரி iv) காவிரி ஆறு

(அ) i மட்டும் சரி

(ஆ) ii மட்டும் சரி

(இ) iii மட்டும் சரி

(ஈ) i மற்றும் ii சரி

5. பின்வருவனவற்றுள் எது தொன்மையான நகரமல்ல?

(அ) மதுரை

(ஆ) காஞ்சிபுரம்

(இ) பூம்புகார்

(ஈ) சென்னை

6. கீழடி அகழாய்வுகளுடன் தொடர்புடைய நகரம்

(அ) மதுரை

(ஆ) காஞ்சிபுரம்

(இ) பூம்புகார்

(ஈ) ஹரப்பா

**<u>கூற்றுக்கான காரணத்தை ஆராய்ந்து சரியான விடையைத்தேர்ந்தெடு:</u>**

1. கூற்று: பூம்புகார் நகரத்திலிருந்து அண்டை நாடுகளுக்கு ஏற்றுமதியும், இறக்குமதியும் நடைபெற்றது.

காரணம்: வங்காள விரிகுடா கடல் போக்குவரத்திற்கு ஏதுவாக அமைந்ததால் அண்டைய நாடுகளுடன் வணிகம் சிறப்புற்றிருந்தது.

(அ) கூற்று சரி; காரணம் தவறு.

(ஆ) கூற்று சரி; கூற்றுக்கான காரணமும் சரி.

(இ) கூற்று தவறு; காரணம் சரி

(ஈ) கூற்று தவறு; காரணம் தவறு

2. i) திருநாவுக்கரசர், "கல்வியில் கரையில" எனக் குறிப்பிட்ட நகரம் காஞ்சிபுரம்.

ii) இந்தியாவின் ஏழு புனிதத் தலங்களுள் ஒன்று என யுவான்சுவாங் குறிப்பிட்டது காஞ்சிபுரம்.

iii) நகரங்களுள் சிறந்தது காஞ்சிபுரம் என காளிதாசர் குறிப்பிட்டுள்ளார்.

(அ) i மட்டும் சரி

(ஆ) ii மட்டும் சரி

(இ) iii மட்டும் சரி

(ஈ) அனைத்தும் சரி

**3. சரியான தொடரைக் கண்டறிக:**

(அ) நாளங்காடி என்பது இரவு நேரக் கடை.

(ஆ) அல்லங்காடி என்பது பகல் நேரக் கடை

(இ) ரோமானிய நாட்டு நாணயம் தயாரித்த தொழிற்சாலை கிடைத்தது பூம்புகார்.

(ஈ) கொற்கை அருகில் உள்ள உவரியில் இருந்து முத்து ஏற்றுமதி செய்யப்பட்டது.

**4. தவறான தொடரைக் கண்டறிக:**

(அ) மெகஸ்தனிஸ் தன்னுடைய பயணக் குறிப்புகளில் மதுரையைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

(ஆ) யுவான் சுவாங் தமிழ்நாட்டு நகரான காஞ்சிபுரத்திற்கு வந்தார்.

(இ) கோவலனும், கண்ணகியும் காஞ்சிபுரத்தில் வாழ்ந்தனர்.

(ஈ) ஈராக் நகரம் பட்டினப்பாலையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**5. சரியான இணையைக் கண்டறிக:**

(அ) கூடல் நகர் – பூம்புகார்

(ஆ) தூங்கா நகரம் – ஹரப்பா

(இ) கல்வி நகரம் – மதுரை

(ஈ) கோயில்களின் நகரம் – காஞ்சிபுரம்

**தவறான இணையைக் கண்டறிக:**

(அ) வட மலை – தங்கம்

(ஆ) மேற்கு மலை – சந்தனம்

(இ) தென்கடல் – முத்து

(ஈ) கீழ்கடல் – அகில்

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. கைலாசநாதர் ஆலயத்தைக் கட்டியவர் ____________

2. கோயில்களின் நகரம் என அழைக்கப்படுவது _____________

3. மாசாத்துவன் எனும் பெயர் தரும் பொருள் ____________

**சரியா, தவறா எனக் கூறுக:**

1. பூம்புகாரில் நடைபெற்ற அண்டைநாட்டு வணிகத்தின் மூலமாகப் பண்பாட்டுப் பரிமாற்றம் நடைபெற்றது.

2. மதுரையில் அல்லங்காடியில் பெண்கள் பயமின்றி இரவு நேரங்களில் பொருட்கள் வாங்கிச் சென்றனர்.

3. பல்லவர்கள் காலத்தில் எண்ணற்ற குடைவரைக் கோயில்கள் அமைக்கப்பட்டன.

4. போதிதர்மர் காஞ்சிபுரத்தைச் சார்ந்தவர்.

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: (விடைகள்)**

1. ஈராக் 2. காஞ்சிபுரம் 3. மதுரை

winmeen.com

4. அ மற்றும் ஆ சரி 5. சென்னை 6. மதுரை

**கூற்றுக்கான காரணத்தை ஆராய்ந்து சரியான விடையைத் தேர்ந்தெடு:**

1. கூற்று சரி, கூற்றுக்கான காரணமும் சரி

2. அனைத்தும் சரி

3. கொற்கை அருகில் உள்ள உவரியில் இருந்து முத்து ஏற்றுமதி செய்யப்பட்டது.

4. ஈராக் நகரம் பட்டினப்பாலையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**5. சரியான இணை:**

ஈ) கோயில் நகரம் – காஞ்சிபுரம்

**6. தவறான இணை:**

ஈ) கீழ்கடல் – அகில்

**கோடிட்ட இடங்களை நிரப்புக: (விடைகள்)**

1. இராஜசிம்மன் 2. காஞ்சிபுரம் 3. பெருவணிகன்

**சரியா? தவறா? (விடை)**

1. சரி

2. சரி

3. சரி

4. சரி

## 6th Social Science Lesson 5

## 5] பேரண்டம் மற்றும் சூரியக்குடும்பம்

**உங்களுக்குத் தெரியுமா?**

பேரண்டத்தைப் பற்றிய படிப்பிற்கு "பிரபஞ்சவியல்" (Cosmology) என்று பெயர். காஸ்மாஸ் என்பது ஒரு கிரேக்கச் சொல்லாகும்.

ஓர் ஒளியாண்டு என்பது ஒளி ஓர் ஆண்டில் பயணிக்கக்கூடிய தொலைவு ஆகும். ஒளியின் திசைவேகம் வினாடிக்கு 3, 00, 000 கி. மீ ஆகும். ஆனால், ஒலியானது வினாடிக்கு 330 மீட்டர் என்ற வேகத்தில் பயணிக்கும்.

கற்பனை செய்து பார்க்கவும். சூரியன் 1. 3 மில்லியன் புவிகளை தனக்குள்ளே அடக்கக்கூடிய வகையில் மிகப்பெரியதாகும்.

கோள்களின் வரிசையை நினைவிற் கொள்ள (Mnemonics): புது வெள்ளம் புவியில் செலுத்தினால் விவாதம், சண்டை, யுத்தம் நெருங்காது.

பண்டைத் தமிழர்கள் சூரியன் மற்றும் பிற கோள்களைப் பற்றி அறிந்திருந்தனர் என்பது சங்க இலக்கியங்கள் வாயிலாக நமக்குப் புலனாகிறது. உதாரணமாக, சிறுபாணாற்றுப்படையில் காணப்படும் "வாள் நிற விசும்பின் கோள் மீன் சூழ்ந்த இளங்கதிர் ஞாயிறு" என்று பாடல் வரிகளிலிருந்து நாம் தெரிந்துகொள்வோம்.

சூரியனுக்கும் புவிக்கும் இடையே உள்ள தொலைவு 150 மில்லியன் கிலோ மீட்டராகும். மணிக்கு 800 கி. மீ வேகத்தில் செல்லும் வானூர்தி சூரியனை சென்றடைய 21 வருடங்கள் ஆகும்.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (ISRO) செவ்வாய்க் கோளின் வளிமண்டலம் மற்றும் தரைப்பகுதியை ஆராய்வதற்காக 24. 09. 2014 அன்று மங்கள்யான் (Mars Orbiter Mission) எனப்படும் விண்கலத்தை அனுப்பியது. இதனால் இந்திய செவ்வாய்க் கோளினை ஆராயும் நாடுகளின் பட்டியலில் ரஷ்யா விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம், நாஸா (USA), ஐரோப்பிய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்திற்கு அடுத்ததாக நான்காம் இடத்தில் உள்ளது.

நிலவைப் பற்றி ஆராய்வதற்காக இந்தியாவால் அனுப்பப்பட்ட முதல் விண்கலம் சந்திராயன்–1 ஆகும். இது 2008 ஆம் ஆண்டு விண்ணில் செலுத்தப்பட்டது.

புவியின் சுழலும் வேகம் நிலநடுக்கோட்டுப் பகுதியில் 1670 கி. மீ/மணி ஆகவும், $60^{\circ}$ வடக்கு அட்சரேகையில் 845 கி. மீ/மணி ஆகவும், துருவப் பகுதியில் சுழலும் வேகம் சுழியமாகவும் இருக்கும்.

நள்ளிரவு சூரியன் என்பது இரு அரைக்கோளங்களிலும் கோடைக்காலத்தில் ஆர்க்டிக் வட்டத்திற்கு வடக்கிலும், அண்டார்க்டிக் வட்டத்திற்கு தெற்கிலும் 24 மணி நேரமும் சூரியன் தலைக்குமேல் தெரியும் நிகழ்வாகும்.

"சூரிய அண்மை புள்ளி (Perihelion)" என்பது புவி தன் சுற்றுப்பாதையில் சூரியனுக்கு மிக அருகில் வரும் நிகழ்வாகும். "சூரிய தொலைதூர புள்ளி" (Aphelion) என்பது புவி தன் சுற்றுப்பாதையில் சூரியனுக்குத் தொலைவில் காணப்படும் நிகழ்வாகும்.

மன்னார் வளைகுடா உயிர்க்கோள் பெட்டகம் இந்திய பெருங்கடலில் 10, 500 சதுர கி. மீ. பரப்பளவில் அமைந்துள்ளது.

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. பேரண்டம் உருவாகக் காரணமான நிகழ்வு ___________

2. இரு வான்பொருள்களுக்கு இடையிலான தொலைவை அளக்க உதவும் அளவு __________ ஆகும்.

3. சூரியக் குடும்பத்தின் மையம் ____________

4. கோள் என்ற வார்த்தையின் பொருள் ____________

5. அதிக துணைக்கோள்களைக் கொண்ட கோள் ____________

6. நிலவிற்கு அனுப்பப்பட்ட முதல் இந்திய விண்கலம் ____________

7. புவியின் சாய்வுக் கோணம் ____________

8. நிலநடுக்கோடு சூரியனை நேராகச் சந்திக்கும் நாள்கள் ____________ மற்றும் ___________

9. சூரிய அண்மை நிகழ்வின் போது புவி சூரியனுக்கு ____________ ல் காணப்படும்

10. புவியின் மேற்பரப்பின் மீது ஒளிபடும் பகுதியையும், ஒளிபடாத பகுதியையும் பிரிக்கும் கோட்டிற்கு ___________ என்று பெயர்.

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**

1. புவி தன் அச்சில் சுழல்வதை இவ்வாறு அழைக்கிறோம்.

(அ) சுற்றுதல்

(ஆ) பருவகாலங்கள்

(இ) சுழல்தல்

(ஈ) ஒட்டம்

2. மகர ரேகையில் சூரியக்கதிர்கள் செங்குத்தாக விழும் நாள்

(அ) மார்ச் 21

(ஆ) ஜீன் 21

(இ) செப்டம்பர் 23

(ஈ) டிசம்பர் 22

3. சூரியக்குடும்பம் அடங்கியுள்ள விண்மீன் திரள் மண்டலம்

(அ) ஆண்டிரோமெடா

(ஆ) மெகலனிக் கிளவுட் (Magellanic Clouds)

(இ) பால்வெளி

(ஈ) ஸ்டார்பர்ஸ்ட்

4. மனிதன் தன் காலடியைப் பதித்துள்ள ஒரே விண்பொருள்

(அ) செவ்வாய்

(ஆ) சந்திரன்

(இ) புதன்

(ஈ) வெள்ளி

5. எந்த கோளால் தண்ணீரில் மிதக்க இயலும்?

(அ) வியாழன்

(ஆ) சனி

(இ) யுரேனஸ்

(ஈ) நெப்டியூன்

**பொருந்தாததை வட்டமிடுக:**

1. வெள்ளி, வியாழன், நெப்டியூன், சனி

2. சிரியஸ், ஆண்டிரோமெடா, பால்வெளி மெகலனிக்கிளவுட்

3. புளுட்டோ, ஏரிஸ், செரஸ், அயோ

4. வால்விண்மீன், சிறுகோள், விண்வீழ்கல், குறுளைக் கோள்கள்.

5. தரை ஊர்தி, சுற்றுக்கலம், வானூர்தி, விண்கலம்.

**பொருத்துக:**

1. வெப்பமான கோள் – செவ்வாய்

2. வளையம் உள்ள கோள் – நெப்டியூன்

3. செந்நிறக்கோள் – வெள்ளி

4. உருளும் கோள் – சனி

5. குளிர்ந்த கோள் – யுரேனஸ்

**கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளை ஆராய்க:**

1. வெள்ளிக் கோள் கிழக்கிலிருந்து மேற்காகச் சுற்றுகிறது.

2. ஜீன் 21ஆம் நாளன்று கடகரேகையில் சூரியக் கதிர் செங்குத்தாக விழும்.

3. செவ்வாய்க் கோளுக்கு வளையங்கள் உண்டு.

மேற்கூறிய கூற்றுகளில் சரியானவற்றைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைப் பயன்படுத்திக் கண்டறிக.

(அ) 1 மற்றும் 2

(ஆ) 2 மற்றும் 3

(இ) 1, 2 மற்றும் 3

(ஈ) 2 மட்டும்

**கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளை ஆராய்க:**

கூற்று 1: புவி, நீர்க்கோளம் என அழைக்கப்படுகிறது.

கூற்று 2: புவி தன் அச்சில் சுழலுவதால் பருவ காலங்கள் ஏற்படுகின்றன.

சரியான கூற்றினை தேர்ந்தெடுத்து எழுதுக:

(அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

(ஆ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி.

(இ) இரண்டு கூற்றுகளும் சரி

(ஈ) இரண்டு கூற்றுகளும் தவறு

**பெயரிடுக:**

1. விண்மீன்களின் தொகுப்பு ____________

2. சூரியக் குடும்பத்திற்கு அருகில் உள்ள விண்மீன் திரள் மண்டலம் ____________

3. பிரகாசமான கோள் ___________

4. உயிரினங்களை உள்ளடக்கிய கோளம் ____________

5. 366 நாட்களை உடைய ஆண்டு ____________

**கோடிட்ட இடத்தை நிரப்புக: (விடைகள்)**

1. பெருவெடிப்பு 2. ஒளி ஆண்டு 3. சூரியன்

4. சுற்றிவருபவர் 5. வியாழன்

6. சந்திராயன்–1 7. 23 ½ 8. (மார்ச் 21, செப்டம்பர் 23)

9. அருகில் 10. ஒளிர்வு வட்டம்

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்க: (விடைகள்)**

1. சுழல்தல் 2. (டிசம்பர் 22) 3. பால்வெளி

4. சந்திரம் 5. சனி

**பொருந்தாததை வட்டமிடுக:**

winmeen.com

1. நெப்டியூன் 2. சிரியஸ் 3. அயோ

4. குறுளைக் கோள்கள் 5. வானூர்தி

**பொருத்துக:**

1. வெப்பமான கோள் – வெள்ளி

2. வளையம் உள்ள கோள் – சனி

3. செந்நிறக் கோள் – செவ்வாய்

4. உருளும் கோள் – யுரேனஸ்

5. குளிர்ந்த கோள் – நெப்டியூன்

**கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளை ஆராய்க: (விடை)**

1. 1 மற்றும் 2

2. இரண்டு கூற்றுகளும் சரி

**பெயரிடுக:**

1. விண்மீன்கள் 2. ஆண்ட்ரோமெடா மெகலனிங்

3. வெள்ளி 4. புவி 5. லீப்

6th Social Science Lesson 6

**6] நிலப்பரப்பும் பெருங்கடல்களும்**

**உங்களுக்குத் தெரியுமா?**

**இலக்கியத்தில் சங்க இலக்கியத்தில் நிலவகைப்பாடு:** குறிஞ்சி–மலையும், மலைசார்ந்த நிலமும்; முல்லை–காடும் காடு சார்ந்த நிலமும்; மருதம்–வயலும் வயல் சார்ந்த நிலமும்; நெய்தல்–கடலும் கடல் சார்ந்த நிலமும்; பாலை–மணலும் மணல் சார்ந்த நிலமும்.

**நிலச்சந்தி:** இரண்டு பெரிய நிலப்பரப்புகளை இணைக்கக் கூடியதும் அல்லது இரண்டு பெரிய நீர்ப்பரப்புகளை பிரிக்கக்கூடியதுமான மிக குறுகிய நிலப்பகுதி நிலச்சந்தி ஆகும்.

தருமபுரி பீடபூமி, கோயமுத்தூர் பீடபூமி மற்றும் மதுரை பீடபூமி ஆகியன தமிழ்நாட்டில் காணப்படும் பீடபூமிகளாகும்.

ஆற்றுச் சமவெளிகள் பண்டைய நாகரிகங்களின் தொட்டிலாக விளங்கின. இந்தியாவில் சிந்து நதி மற்றும் எகிப்தின் நைல் நதி போன்ற ஆற்றுச் சமவெளிகளில் நாகரிகங்கள் தோன்றி செழித்தோங்கி வளர்ந்தன.

புவியின் மேற்பரப்பிலுள்ள பொருள்களை (பாறைகள்) அரித்து அகற்றுதலே அரித்தல் எனப்படுகிறது. இவ்வாறு அரிக்கப்பட்ட பாறை துகள்கள் கடத்தப்பட்டு தாழ்நிலப் பகுதிகளில் படிய வைக்கப்படுகின்றன. இச்செயல் படியவைத்தல் எனப்படுகிறது.

உலகின் உயரமான எவரெஸ்ட் சிகரம் (8, 848 மீ) மரியானா அகழியில் (10, 994 மீ) மூழ்கிவிடும் என்றால் அதன் ஆழத்தை உணர்ந்தறிவாயாக. கடலின் ஆழத்தை மீ⁻ என்ற குறியீட்டால் குறிப்பிட வேண்டும்.

ஸ்பெயின் நாட்டின் மாலுமி பெர்டினாண்டு மெகல்லன் பசிபிக் என பெயரிட்டார். பசிபிக் என்பதன் பொருள் அமைதி என்பதாகும்.

6° கால்வாய் – இந்திரா முனையையும் இந்தோனேசியாவையும் பிரிக்கிறது. 8° கால்வாய் மாலத் தீவையும் மினிக்காய் தீவையும் பிரிக்கிறது. 9° கால்வாய் லட்ச தீவையும் மினிக்காய் தீவையும் பிரிக்கிறது. 10° கால்வாய் அந்தமான் தீவையும் நிக்கோபார் தீவையும் பிரிக்கிறது.

பாக் நீர்ச்சந்தி வங்காள விரிகுடாவையும் பாக் வளைகுடாவையும் இணைக்கிறது.

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**

1. மிகச்சிறிய பெருங்கடல்

(அ) பசிபிக் பெருங்கடல்

(ஆ) இந்தியப் பெருங்கடல்

(இ) அட்லாண்டிக் பெருங்கடல்

(ஈ) ஆர்க்டிக் பெருங்கடல்

2. மலாக்கா நீர்ச்சந்தியை இணைப்பது

(அ) பசிபிக் பெருங்கடல் மற்றும் அட்லாண்டிக் பெருங்கடல்

(ஆ) பசிபிக் பெருங்கடல் மற்றும் தென் பெருங்கடல்

(இ) பசிபிக் பெருங்கடல் மற்றும் இந்தியப் பெருங்கடல்

(ஈ) பசிபிக் பெருங்கடல் மற்றும் ஆர்க்டிக் பெருங்கடல்

3. அதிகமான கப்பல் போக்குவரத்து நடைபெறும் பெருங்கடல்

(அ) பசிபிக் பெருங்கடல்

(ஆ) அட்லாண்டிக் பெருங்கடல்

(இ) இந்தியப்பெருங்கடல்

(ஈ) ஆர்க்டிக் பெருங்கடல்

4. உறைந்த கண்டம்

(அ) வட அமெரிக்கா

(ஆ) ஆஸ்திரேலியா

(இ) அண்டார்டிகா

(ஈ) ஆசியா

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. உலகின் மிகப்பெரிய கண்டம் __________

2. இந்தியாவில் கனிம வளம் நிறைந்த பீடபூமி _____________

3. பெருங்கடல்களில் மிகப்பெரியது ____________

4. டெல்டா ____________ நிலை நிலத்தோற்றம்.

5. தீவுக்கண்டம் என அழைக்கப்படுவது ____________

**பொருந்தாததை வட்டமிடுக:**

1. ஆப்பிரிக்கா, ஐரோப்பா, ஆஸ்திரேலியா, இலங்கை

2. ஆர்க்டிக் பெருங்கடல், மத்திய தரைக் கடல், இந்தியப் பெருங்கடல், அட்லாண்டிக் பெருங்கடல்

3. பீடபூமி, பள்ளத்தாக்கு, சமவெளி, மலை

4. வங்காள விரிகுடா, பேரிங் கடல், சீனக் கடல், தாஸ்மானியா கடல்.

5. ஆண்டிஸ், ராக்கி, எவரெஸ்ட், இமயமலை.

**பொருத்துக:**

1. தென்சான்ட்விச் அகழி – அ. அட்லாண்டிக் பெருங்கடல்

2. மில்வாக்கி அகழி – ஆ. தென் பெருங்கடல்

3. மரியானா அகழி – இ. இந்தியப் பெருங்கடல்

4. யுரேஷியன் படுகை – ஈ. பசிபிக் பெருங்கடல்

5. ஜாவா அகழி – உ. ஆர்க்டிக் பெருங்கடல்

**கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளை ஆராய்க:**

1. சமவெளிகள் ஆறுகளால் தோற்றுவிக்கப்படுகின்றன.

2. இந்தியப் பெருங்கடலின் ஆழமான பகுதி "சான்ட்விச்" அகழி.

3. பீடபூமிகள் வன்சரிவைக் கொண்டிருக்கும்.

மேற்கூறிய கூற்றுகளில் சரியானவற்றைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைப் பயன்படுத்திக் கண்டறிக:

(அ) 1 மற்றும் 3

(ஆ) 2 மற்றும் 3

(இ) 1, 2 மற்றும் 3

(ஈ) 2 மட்டும்

**கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளை ஆராய்க:**

கூற்று 1: மலைகள் இரண்டாம் நிலை நிலத்தோற்றங்கள் ஆகும்.

கூற்று 2: உலகிலேயே மிகவும் ஆழமான அகழி மரியானா அகழி.

(அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

(ஆ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

(இ) இரண்டு கூற்றுகளும் சரி

(ஈ) இரண்டு கூற்றுகளும் தவறு.

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: (விடைகள்)**

1. ஆர்க்டிக் பெருங்கடல் 2. பசிபிக்பெருங்கடல் மற்றும் இந்தியப் பெருங்கடல்

3. அட்லாண்டிக் பெருங்கடல் 4. அண்டார்டிகா

**கோடிட்ட இடத்தை நிரப்புக: (விடைகள்)**

1. ஆசியா 2. சோட்டாநாகபுர் 3. பசுபிக் 4. (3) 5. ஆஸ்திரேலியா

**பொருந்தாததை வட்டமிடுக: (விடை)**

1. இலங்கை

2. மத்திய தரைக்கடல்

3. பள்ளத்தாக்கு

4. வங்காள விரிகுடா

5. எவரெஸ்ட்

**பொருத்துக: (விடைகள்)**

1. தென்சான்ட்விச் அகழி – தென் பெருங்கடல்

2. மில்வாக்கி அகழி – அட்லாண்டிக் பெருங்கடல்

3. மரியான அகழி – பசிபிக் பெருங்கடல்

4. யுரேஷியன் படுகை – ஆர்க்டிக் பெருங்கடல்

5. ஜாவா அகழி – இந்தியப் பெருங்கடல்

**கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளை ஆராய்க: (விடை)**

1. (1 மற்றும் 3)

2. இரண்டு கூற்றுகளும் சரி

6th Social Science Lesson 7

**7] பன்முகத் தன்மையினை அறிவோம்**

**உங்களுக்கு தெரியுமா?**

மேகாலயாவில் உள்ள மௌசின்ராம் அதிக மழை பொழியும் பகுதி ஆகும். ராஜஸ்தானில் உள்ள ஜெய்சால்மர் குறைவான மழைப்பொழியும் பகுதி ஆகும்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் எட்டாவது அட்டவணையின்படி 22 மொழிகள் அலுவலக மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 2004 ஆம் ஆண்டு இந்திய அரசால் முதல் செம்மொழியாக "தமிழ் மொழி" அறிவிக்கப்பட்டது. தற்போது 6 மொழிகள் செம்மொழிகளாக அறிவிக்கப்பட்டுள்ளது. சமஸ்கிருதம் 2005 ஆம் ஆண்டும் தெலுங்கு மற்றும் கன்னடம் 2008 ஆம் ஆண்டும் மலையாளம் 2013 ஆம் ஆண்டும் ஒரியா 2016 ஆம் ஆண்டும் செம்மொழிகளாக அறிவிக்கப்பட்டன.

இந்திய தொல்லியல் துறை இதுவரை கண்டுபிடித்த கல்வெட்டுச் சான்றுகளில் 60% தமிழ்நாட்டில் இருந்து கண்டு பிடிக்கப்பட்டவை ஆகும். அவற்றில் பெரும்பாலானவை தமிழ் மொழியிலேயே எழுதப்படுள்ளன.

**இந்திய நாட்டுப்புற நடனங்கள்:**

| மாநிலம் | புகழ்பெற்ற நடனம் |
|---|---|
| தமிழ்நாடு | கரகாட்டம், ஒயிலாட்டம், கும்மி, தெருக்கூத்து, பொம்மலாட்டம், புலியாட்டம், கோலாட்டம், தப்பாட்டம் |
| கேரளா | தெய்யம், மோகினியாட்டம் |
| பஞ்சாப் | பாங்க்ரா |
| குஜராத் | கார்பா, தாண்டியா |

winmeen.com

| | |
|---|---|
| ராஜஸ்தான் | கல்பேலியா, கூமர் |
| உத்திரப்பிரதேசம் | ராசலீலா |
| உத்தரகண்ட் | சோலியா |
| ஆசாம் | பிஹு |

இந்தியா **"வேற்றுமையில் ஒற்றுமை"** உள்ள நாடாக விளங்குகிறது. இச்சொற்றொடரானது நமது சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமரான ஜவஹர்லால் நேருவின் **"டிஸ்கவரி ஆஃப் இந்தியா"** என்ற நூலில் இடம்பெற்றுள்ளது.

இந்தியாவில் பல்வேறு இன மக்கள் காணப்படுவதால், இந்தியாவை "இனங்களின் அருங்காட்சியம்" என வரலாற்றாசிரியர் வி. ஏ. ஸ்மித் அவர்கள் கூறியுள்ளார்.

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**

1. இந்தியாவில் __________ மாநிலங்களும், __________ யூனியன் பிரதேசங்களும் உள்ளன.

(அ) 27, 9

(ஆ) 29, 7

(இ) 28, 7

(ஈ) 28, 9

2. இந்தியா ஒரு ___________ என்று அழைக்கப்படுகிறது.

(அ) கண்டம்

(ஆ) துணைக்கண்டம்

(இ) தீவு

(ஈ) இவற்றில் எதுமில்லை

3. மிக அதிக மழைப்பொழிவுள்ள மௌசின்ராம் ___________ மாநிலத்தில் உள்ளது.

(அ) மணிப்பூர்

(ஆ) சிக்கிம்

(இ) நாகலாந்து

(ஈ) மேகாலயா

4. கீழ்கண்டவற்றில் எந்த மதம் இந்தியாவில் நடைமுறையில் இல்லை?

(அ) சீக்கிய மதம்

(ஆ) இஸ்லாமிய மதம்

(இ) ஜொராஸ்ட்ரிய மதம்

(ஈ) கன்ஃபூசிய மதம்

5. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் அங்கீகரிக்கப்பட்டுள்ள அலுவலக மொழிகளின் எண்ணிக்கை ____________

(அ) 25

winmeen.com

(ஆ) 23

(இ) 22

(ஈ) 26

6. ____________ மாநிலத்தில் ஓணம் பண்டிகை கொண்டாடப்படுகிறது.

(அ) கேரளா

(ஆ) தமிழ்நாடு

(இ) பஞ்சாப்

(ஈ) கர்நாடகா

7. மோகினியாட்டம் __________ மாநிலத்தின் செவ்வியல் நடனம் ஆகும்.

(அ) கேரளா

(ஆ) தமிழ்நாடு

(இ) மணிப்பூர்

(ஈ) கர்நாடகா

8. "டிஸ்கவரி ஆஃப் இந்தியா" என்ற நூலினை எழுதியவர் __________

(அ) இராஜாஜி

(ஆ) வ. உ. சி.

(இ) நேதாஜி

(ஈ) ஜவஹர்லால் நேரு

9. "வேற்றுமையில் ஒற்றுமை" என்ற சொற்றொடரை உருவாக்கியவர் __________

(அ) ஜவஹர்லால் நேரு

(ஆ) மகாத்மா காந்தி

(இ) அம்பேத்கார்

(ஈ) இராஜாஜி

10. வி. ஏ. ஸ்மித் இந்தியாவை ___________ என்று அழைத்தார்.

(அ) பெரிய ஜனநாயகம்

(ஆ) தனித்துவமான பன்முகத்தன்மை கொண்ட நிலம்

(இ) இனங்களின் அருங்காட்சியம்

(ஈ) மதச்சார்பற்ற நாடு

<u>**கோடிட்ட இடங்களை நிரப்புக:**</u>

1. ஒரு பகுதியின் __________ நடவடிக்கைகளை அப்பகுதியின் நிலவியல் கூறுகளும் காலநிலைகளும் பெரிதும் தீர்மானிக்கின்றன.

2. மிகவும் குறைந்த மழைப்பொழிவுள்ள ஜெய்சால்மர் ___________ மாநிலத்தில் உள்ளது.

3. தமிழ் செம்மொழியாக அறிவிக்கப்பட்ட ஆண்டு ____________

4. பிஹூ திருவிழா ___________ மாநிலத்தில் கொண்டாடப்படுகிறது.

**பொருத்துக:**

1. நீக்ரிட்டோக்கள் – அ. மதம்

2. கடற்கரை பகுதிகள் – ஆ. இந்தியா

3. ஜொராஸ்ட்ரியம் – இ. மீன்பிடித்தொழில்

4. வேற்றுமையில் ஒற்றுமை – ஈ. இந்திய இனம்

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: (விடைகள்)**

1. தற்போது 28 மாநிலங்களும் 8 யூனியன் பிரதேசங்களும் உள்ளன 2. துணைக்கண்டம்

3. மேகாலயா 4. கன்ஃபூசிய மதம் 5. (22) 6. கேரளா 7. கேரளா

8. ஜவஹர்லால் நேரு 9. ஜவஹர்லால் நேரு 10. இனங்களின் அருங்காட்சியகம்

**கோடிட்ட இடங்களை நிரப்புக: (விடைகள்)**

1. பொருளாதார 2. இராஜஸ்தான் 3. (2004) 4. அஸ்ஸாம்

**பொருத்துக: (விடைகள்)**

1. நீக்ரிட்டோக்கள் – இந்திய இனம்

2. கடற்கரை பகுதிகள் – மீன்பிடித்தொழில்

3. ஜொராஸ்டிரியம் – மதம்

4. வேற்றுமையில் ஒற்றுமை – இந்தியா

## 6th Social Science Lesson 8

## 8] சமத்துவம் பெறுதல்

**உங்களுக்குத் தெரியுமா?**

**இனநிறவெறிக்கு முடிவு:** தென்னாப்பிரிக்காவின் முன்னாள் அதிபரான நெல்சன் மண்டேலா அவர்கள், 27 ஆண்டுகள் சிறைவாழ்க்கைக்குப்பின் 1990 ஆம் ஆண்டு விடுதலையானார். இவர் தென்னாப்பிரிக்காவிலிருந்த இனநிறவெறிக்கு முடிவு கட்டினார். தென்னாப்பிரிக்காவில் உலகளவில் அமைதி நிலவவும், மனித உரிமைகளுக்கான போராட்டத்தில் முன்னோடியாகவும் திகழ்ந்தார்.

**டாக்டர். பி. ஆர். அம்பேத்கார்:** இவர் பாபா சாஹேப் என பிரபலமாக அழைக்கப்படுகிறார். இவர் இந்திய சட்ட நிபுணராகவும், பொருளாதார நிபுணராகவும், அரசியல்வாதியாகவும், சமூகச் சீர்திருத்தவாதியாகவும் திகழ்ந்தார். இவர் 1915 இல் எம். ஏ. பட்டத்தை பெற்றார். பின்னர் 1927 இல் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் பி. எச். டி பட்டத்தை பெற்றார். அதற்கு முன்னர் இலண்டன் பொருளாதாரப் பள்ளியில் D. Sc பட்டத்தையும் பெற்றிருந்தார். இவர் அரசியலமைப்பு நிர்ணய சபையின் வரைவு குழுவின் தலைவராக இருந்தார். எனவே, இவர் இந்திய அரசியலமைப்பின் தந்தையாகக் கருதப்படுகிறார். இவர் சுதந்திர இந்தியாவின் முதல் சட்ட அமைச்சராகப் பணியாற்றினார். இவரது மறைவுக்குப் பின்னர், 1990 ஆம் ஆண்டு பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது.

**எழுத்தறிவு விகிதம் – 2011ஆம் ஆண்டு கணக்கெடுப்பு**

| அதிகம் | | | குறைவு | | |
|---|---|---|---|---|---|
| வ. எ ண் | மாவட்ட த்தின் பெயர் | விகி தம் | வ. எ ண் | மாவட்ட த்தின் பெயர் | விகி தம் |
| 1 | கன்னி யாகுமரி | 92. 14% | 1 | தருமபுரி | 64. 71% |
| 2 | சென் னை | 90. 33% | 2 | அரியலூ ர் | 71. 99% |
| 3 | தூத்துக் குடி | 86. 52% | 3 | விழுப்புர ம் | 72. 08% |
| 4 | நீலகிரி | 85. 65% | 4 | கிருஷ் ணகிரி | 72. 41% |

| பாலின விகிதம் – 2011ஆம் ஆண்டு கணக்கெடுப்பு தலா ஆயிரம் ஆண்களுக்கு நிகரான பெண்களின் எண்ணிக்கை | | | | | |
|---|---|---|---|---|---|
| அதிகம் | | | குறைவு | | |
| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | பாலின விகிதம் | வ. எண் | மாவட்டத்தின் பெயர் | பாலின விகிதம் |
| 1 | நீலகிரி | 1041 | 1 | தருமபுரி | 946 |
| 2 | தஞ்சாவூர் | 1031 | 2 | சேலம் | 954 |
| 3 | நாகப்பட்டிணம் | 1025 | 3 | கிருஷ்ணகிரி | 956 |
| 4 | தூத்துக்குடி, திருநெல்வேலி | 1024 | 4 | இராமநாதபுரம் | 977 |

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**

1. பின்வருவனவற்றில் எது பாரபட்சத்திற்கான காரணம் அல்ல

(அ) சமூகமயமாக்கல்

(ஆ) பொருளாதார நன்மைகள்

(இ) அதிகாரத்துவ ஆளுமை

(ஈ) புவியியல்

2. பாலின அடிப்படையில் நடத்தப்படும் பாகுபாடு

(அ) பாலின பாகுபாடு

(ஆ) சாதி பாகுபாடு

(இ) மத பாகுபாடு

(ஈ) சமத்துவமின்மை

3. பாலின அடிப்படையிலான ஒத்தக் கருத்து உருவாதல் பெரும்பாலும் சித்தரிக்கப்படுவது

(அ) திரைப்படங்கள்

(ஆ) விளம்பரங்கள்

(இ) தொலைகாட்சி தொடர்கள்

(ஈ) இவை அனைத்தும்

4. ஏ. பி. ஜே. அப்துல்கலாம் அவர்கள் எழுதிய புத்தகம்/கள்

(அ) இந்தியா 2020

(ஆ) அக்கினிச்சிறகுகள்

(இ) எழுச்சி தீபங்கள்

(ஈ) இவை அனைத்தும்

5. ஏ. பி. ஜே அப்துல்கலாம் அவர்களுக்கு பாரத ரத்னா விருது வழங்கப்பட்ட ஆண்டு

(அ) 1997

(ஆ) 1996

(இ) 1995

(ஈ) 1994

6. விஸ்வநாத் ஆனந்த் முதன்முதலில் கிராண்ட் மாஸ்டரான ஆண்டு

(அ) 1985

(ஆ) 1986

(இ) 1987

(ஈ) 1988

7. இளவழகி சிறந்து விளங்கிய விளையாட்டு

(அ) செஸ்

(ஆ) மல்யுத்தம்

(இ) கேரம்

(ஈ) டென்னிஸ்

8. அரசியலமைப்பின் எந்தப்பிரிவின் கீழ், எந்தவொரு குடிமகனுக்கும் எதிராக மதம், இனம், சாதி, பாலினம், பிறந்த இடம் ஆகிய அடிப்படையில் பாகுபாடு காட்டக்கூடாது எனக்கூறுகிறது?

(அ) 14 (1)

(ஆ) 15 (1)

(இ) 16 (1)

(ஈ) 17 (1)

winmeen.com

9. பி. ஆர். அம்பேத்கார் அவர்களுக்கு பாரத ரத்னா விருது வழங்கப்பட்ட ஆண்டு

(அ) 1990

(ஆ) 1989

(இ) 1988

(ஈ) 1987

10. 2011ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி தமிழகத்தில் அதிகமான கல்வியறிவு பெற்றுள்ள மாவட்டம்

(அ) நாமக்கல்

(ஆ) சேலம்

(இ) கன்னியாகுமரி

(ஈ) சிவகங்கை

**பொருத்துக:**

1. பாரபட்சம் – அ. தீண்டாமை ஒழிப்பு

2. மாறாக்கருத்து உருவாதல் – ஆ. மற்றவர்களை காட்டிலும் சிலரை தாழ்வாக நடத்துவது

3. பாகுபாடு – இ. சட்டத்திற்கு முன் அனைவரும் சமம்

4. பிரிவு 14 – ஈ. தவறான பார்வை அல்லது தவறான கருத்து

5. பிரிவு 17 – உ. பிறரை பற்றி எதிர்மறையாக மதிப்பிடுதல்

**<u>கோடிட்ட இடங்களை நிரப்புக:</u>**

1. ___________ என்பது மற்றவர்களைப் பற்றி எதிர்மறையாக அல்லது தாழ்வான முறையில் கருதுவதாகும்.

2. __________ ஆம் ஆண்டு ஏ. பி. ஜே. அப்துல்கலாம் பிறந்தார்

3. இந்தியாவில் மிக உயர்ந்த விளையாட்டு விருதான ராஜீவ்காந்தி கேல் ரத்னா விருதினை முதன் முதலில் பெற்றவர் ___________

4. சுதந்திர இந்தியாவின் முதல் சட்ட அமைச்சர்___________

5. 2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி குறைந்த பாலின விகிதம் உள்ள மாவட்டம் __________

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: (விடைகள்)**

1. புவியியல் 2. பாலின பாகுபாடு 3. இவை அனைத்தும்

4. இவை அனைத்தும் 5. (1997) 6. (1988) 7. கேரளம் 8. 15(1) 9. (1990)

10. கன்னியாகுமரி

**பொருத்துக: (விடைகள்)**

1. பாரபட்சம் – பிறரை பற்றி எதிர்மறையாக மதிப்பிடுதல்

2. ஒத்தக் கருத்து உருவாதல் – தவறான பார்வை அல்லது தவறான கருத்து

3. பாகுபாடு – மற்றவர்களை காட்டிலும் சிலரை தாழ்வாக நடத்துவது

4. பிரிவு 14 – சட்டத்திற்கு முன் அனைவரும் சமம்

5. பிரிவு 17 – தீண்டாமை ஒழிப்பு

**கோடிட்ட இடங்களை நிரப்புக: (விடைகள்)**

1. ஒத்த கருத்து 2. 1931 3. விஸ்வநாதன் ஆனந்த் 4. Dr B. R. அம்பேத்கர் 5. தர்மபுரி

6th Social Science Lesson 9

**9] வடஇந்தியாவில் வேதகாலப் பண்பாடும் தென்னிந்தியாவில் பெருங்கற்காலப் பண்பாடும்**

**உங்களுக்குத் தெரியுமா?**

**வேதகாலம்:** இந்திய வரலாற்றில் கி. மு. (பொ. ஆ. மு) 1500–600 காலகட்டம். "வேதங்கள்" என்பதில் இருந்து இப்பெயரைப் பெற்றது.

**அழிந்து எரித்து சாகுபடி செய்யும் வேளாண்முறை (Slash and Burn Agriculture):** இம்முறையில் நிலத்தின் மீதுள்ள மரங்கள் மற்றும் செடி, கொடிகள் அனைத்தும் வெட்டப்பட்டு எரிக்கப்படும். அந்நிலத்தில் குறுகிய காலகட்டத்திற்கு வேளாண்மை செய்து அதன் பின் அந்நிலம் கைவிடப்படும். பின்னர் மக்கள் மற்றொரு இடத்தில் இதே போன்று வேளாண்மை செய்யத் தொடங்குவர்.

**நான்கு வேதங்கள்:** ரிக், யஜுர், சாம, அதர்வன.

**இந்தியாவின் தேசிய குறிக்கோள்:** "சத்யமேவ ஜெயதே" ("வாய்மையே வெல்லும்") என்ற வாக்கியம் முண்டக உபநிடதத்தில் இருந்து எடுக்கப்பட்டது.

**வேதகாலத்தின் இரு கட்டங்கள்:** தொடக்க வேத காலம்–கி. மு (பொ. ஆ. மு) 1500–1000; பின் வேதகாலம் கி. மு. (பொ. ஆ. மு) 1000–600.

சபா – மூத்தோர்களை கொண்ட மன்றம்; சமிதி – மக்கள் அனைவரையும் கொண்ட பொதுக்குழு.

பாலி – இது ஒரு வரி ஆகும். ஒருவர் தனது விவசாய மகசூலில் அல்லது கால்நடைகளில் 1/6 பங்கை இவ்வரியாகச் செலுத்த வேண்டும்.

**ரிக்வேத கால மக்கள் அறிந்திருந்த உலோகங்கள்:** தங்கம் (ஹிரண்யா), இரும்பு (சியாமா), தாமிரம்/செம்பு (அயாஸ்).

**தமிழ்நாட்டின் பெருங்கற்காலம்/இரும்புக்காலம்:** பெருங்கற்காலம் ஆங்கிலத்தில் Megalithic Age என்று அழைக்கப்படுகிறது. Megalith என்பது கிரேக்கச் சொல்லாகும். 'Mega' என்றால் பெரிய, lith என்றால் "கல்" என்று பொருள். இறந்தவர்களைப் புதைத்த இடங்களைக் கற்பலகைகளைக் கொண்டு மூடியதால் இக்காலம் பெருங்கற்காலம் என அழைக்கப்படுகிறது.

தீபகற்ப இந்தியாவிலிருந்து எஃகு ரோம் நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது குறித்தும் அலெக்ஸாண்டிரியா துறைமுகத்தில் இவற்றின் மீது வரி விதிக்கப்பட்டுள்ளது என்பது குறித்தும் பெரிப்பிளஸ் குறிப்பிடுகிறார்.

**தமிழ்நாட்டில் பெருங்கற்கால நினைவுச் சின்னங்கள்:** புதிய கற்காலத்தின் கடைப்பகுதியில் வாழ்ந்த மக்கள் பெருங்கற்காலப் புதைப்பு முறைகளைப் பின்பற்றத் தொடங்கினர். இம்முறையின்படி இறந்தவர்களின் உடல் பெரிய மட்பாண்டத்தில் வைக்கப்படும். ஏனைய சில பொருட்களும் அதனுடன் வைக்கப்படும். இந்த

winmeen.com

பெருங்கற்கால நினைவுச் சின்னங்கள் இரும்பைக் குறித்த அறிவைப் பெற்றிருந்த, சமூகமாக கூடி வாழத் தெரிந்திருந்த மிகவும் முன்னேறிய தமிழ் நாகரிகத்திற்கான சாட்சிகளாகும்.

**கற்திட்டைகள் (Dolmens):** இறந்தவர்களைப் புதைத்த இடத்தில் இடபுறம் இரண்டு கற்பலகைகள் செங்குத்தாக நடப்பட்டு அவற்றின் மீது மற்றொரு கற்பலகை படுக்கை வசத்தில் வைக்கப்படும். இக்கற்திட்டைகள் வீரராகவபுரம் (காஞ்சிபுரம் மாவட்டம்) கும்மாளமருதுபட்டி (திண்டுக்கல் மாவட்டம்) நரசிங்கம்பட்டி (மதுரை மாவட்டம்) ஆகிய இடங்களில் காணப்படுகின்றன.

**நினைவு கற்கள் (Menhir):** பிரிட்டானிய (Breton) மொழியில் "மென்" என்றால் கல், "கிர்" என்றால் "நீளமான" என்று பொருள். ஒரே கல்லிலான இத்தூண்கள் இறந்தோரின் நினைவாக செங்குத்தாக நடப்படும். திருப்பூர் மாவட்டம் சிங்கரிபாளையம், தேனி மாவட்டம் வெம்பூர் ஆகிய இடங்களில் இவ்வாறான நினைவுத் தூண்கள் உள்ளன. இவை உப்பாற்றின் இரு கரைகளிலும் பழங்கால வாழ்விடங்கள் இருந்ததைச் சுட்டிக்காட்டுகின்றன. மதுரை மாவட்டம் நரசிங்கம்பட்டியிலும், ஈரோடு மாவட்டம் குமரிக்கல் பாளையத்திலும், கொடு மணலிலும் இது போன்ற நினைவுத் தூண்கள் உள்ளன.

**நடுகற்கள்:** இறந்துபோன வீரனின் நினைவைப் போற்றும் வகையில் நடப்படும் கல் நடுகல்லாகும் தனது கிராமத்தை கொடிய விலங்குகளிடமிருந்து அல்லது எதிரிகளிடம் இருந்து காப்பாற்றும் முயற்சியில் மதிப்பு வாய்ந்த மரணத்தைத் தழுவிய வீரர்களின் நினைவாக நடப்படுவது ஆகும். திண்டுக்கல் மாவட்டம் பழனிக்கு அருகேயுள்ள மானூர், தூத்துக்குடி மாவட்டம் வெள்ளாளன் கோட்டை, திண்டுக்கல் மாவட்டம் புலிமான் கோம்பை ஆகிய இடங்களில் நடுகற்கள் காணப்படுகின்றன.

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. ஆரியர்கள் முதலில் ___________ பகுதியில் குடியமர்ந்தனர்.

(அ) பஞ்சாப்

(ஆ) கங்கைச் சமவெளியின் மத்தியப் பகுதி

(இ) காஷ்மீர்

(ஈ) வடகிழக்கு

2. ஆரியர்கள் ___________ லிருந்து வந்தனர்

(அ) சீனா

(ஆ) வடக்கு ஆசியா

(இ) மத்திய ஆசியா

(ஈ) ஐரோப்பா

3. நம் நாட்டின் தேசிய குறிக்கோள் "வாய்மையே வெல்லும்"___________ லிருந்து எடுக்கப்பட்டது.

(அ) பிராமணா

(ஆ) ஆரண்யகா

(இ) வேதம்

(ஈ) உபநிடதம்

4. வேதகாலத்தில் என்ன விகிதத்தில் நிலவரி வசூலிக்கப்பட்டது?

(அ) 1/3

(ஆ) 1/6

(இ) 1/8

(ஈ) 1/9

**<u>பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:</u>**

1. கூற்று: வேதகாலம் குறித்து கற்க அதிக அளவு இலக்கியச் சான்றுகள் மற்றும் பயன்பாட்டு பொருள் சான்றுகள் கிடைத்துள்ளன.

காரணம்: நான்கு வேதங்கள், பிராமணங்கள், ஆரண்யங்கள் மற்றும் உபநிடதங்களை உள்ளடக்கியதே சுருதிகளாகும்.

(அ) கூற்றும் காரணமும் சரியானவை, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே.

(ஆ) கூற்றும் காரணமும் சரியானவை, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.

(இ) கூற்று சரி காரணம் தவறு.

(ஈ) கூற்று தவறு காரணம் சரி.

2. கூற்று 1: தீபகற்ப இந்தியாவிலிருந்து ரோம் நாட்டிற்கு எஃகு ஏற்றுமதி செய்யபட்டது என்றும் அதன் மீது அலெக்ஸாண்டிரியா துறைமுகத்தில் வரி விதிக்கப்பட்டது என்றும் பெரிப்பிளஸ் குறிப்பிடுகிறார்.

கூற்று 2: இரும்பு உருக்கப்பட்டதற்கான சான்றுகள் பையம்பள்ளியில் கிடைத்துள்ளன.

(அ) கூற்று 1 தவறானது

(ஆ) கூற்று 2 தவறானது

(இ) இரண்டு கூற்றுகளும் சரியானவை

(ஈ) இரண்டு கூற்றுகளும் தவறானவை

3. வேதகால சமூகம் தொடர்பான கீழே கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளில் எது தவறானது.

(அ) ஒரு கைம்பெண் மறுமணம் செய்து கொள்ளலாம்

(ஆ) குழந்தைத் திருமணம் பழக்கத்தில் இருந்தது.

(இ) தந்தையின் சொத்துக்களை மகன் மரபுரிமையாகப் பெற்றான்.

(ஈ) உடன்கட்டை ஏறுதல் தெரியாது.

4. கீழ்க்கண்டவற்றில் எந்த ஏறுவரிசை ரிக்வேத சமூகத்தைப் பொறுத்தமட்டில் சரியானது?

(அ) கிராமா < குலா < விஷ் < ராஸ்டிரா < ஜனா

(ஆ) குலா < கிராமா < விஷ் < ஜனா < ராஸ்டிரா

(இ) ராஸ்டிரா < ஜனா < கிராமா < குலா < விஷ்

winmeen.com

(ஈ) ஜனா < கிராம < குலா < விஷ் < ராஸ்டிரா

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. வேதப்பண்பாடு __________ இயல்பைக் கொண்டிருந்தது

2. வேதகாலத்தில் மக்களிடமிருந்து __________ என்ற வரி வசூலிக்கப்பட்டது.

3. __________ முறையானது பண்டைய கால கல்வி கற்கும் முறையாகும்.

4. ஆதிச்சநல்லூர் __________ மாவட்டத்தில் அமைந்துள்ளது.

**சரியா அல்லது தவறா எனக் குறிப்பிடுக:**

1. பல இடங்களில் கிடைத்துள்ள ரோமானியத் தொல் பொருட்கள் இந்திய–ரோமானிய வணிக உறவுகளுக்குச் சான்றுகளாய் உள்ளன.

2. நடுகல் என்பது மதிப்பு வாய்ந்த மரணத்தைத் தழுவிய ஒரு வீரனின் நினைவாக நடப்படுவதாகும்.

3. படைத்தளபதி "கிராமணி" என அழைக்கப்பட்டார்.

4. கருப்பு மற்றும் சிகப்பு மட்பாண்டங்கள் பெருங்கற்காலத்தின் சிறப்பியல்புகள் ஆகும்.

5. பையம்பள்ளியில் இரும்பு உருக்கப்பட்டதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன.

**பொருத்துக:**

அ. கீழடி – 1. பகடை

ஆ. பொருந்தல் – 2. கொழு முனைகள்

இ) கொடுமணல் – 3. சுழல் அச்சுக்கள்

ஈ) ஆதிச்சநல்லூர் – 4. தங்க ஆபரணங்கள்

அ) 4 3 2 1

ஆ) 3 4 1 2

இ) 1 3 4 2

ஈ) 1 2 3 4

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: (விடைகள்)**

1. பஞ்சாப் 2. மத்திய ஆசியா 3. உபநிடதம் 4. (1/6)

**பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றைத் தேர்வு செய்க: (விடைகள்)**

1. கூற்று தவறு, காரணம் சரி

2. இரண்டு கூற்றுகளும் சரியானவை

3. குழந்தைத் திருமணம் பழக்கத்தில் இருந்தது

4. குலா < கிராமா < விஷ் < ஜனா < ராஸ்டிரா

**கோடிட்ட இடங்களை நிரப்புக: (விடைகள்)**

winmeen.com

1. இரத்த உறவு 2. பாலி 3. குருகுல 4. தூத்துக்குடி

**சரியா அல்லது தவறா எனக் குறிப்பிடுக: (விடைகள்)**

1. சரி

2. சரி

3. தவறு

**சரியான விடை:** கிராமத்தின் தளபதி கிராமணி ஆவார்.

4. சரி

5. சரி

**பொருத்துக: (விடைகள்)**

1. கீழடி – பகடை

2. பொருந்தல் – கொழு முனைகள்

3. கொடுமணல் – சுழல் அச்சுக்கள்

4. ஆதிச்சநல்லூர் – தங்க ஆபரணங்கள்

6th Social Science Lesson 10

**10] மாபெரும் சிந்தனையாளர்களும் புதிய நம்பிக்கைகளும்**

**உங்களுக்குத் தெரியுமா?**

சமணம் (Jain) என்னும் சொல் ஜினா (Jina) என்ற சமஸ்கிருத சொல்லில் இருந்து பெறப்பட்டதாகும். அதன் பொருள் தன்னையும், வெளியுலகத்தையும் வெல்வது என்பதாகும்.

இயற்பெயர் – வர்த்தமானர்; பிறப்பு – வைசாலிக்கு அருகேயுள்ள குந்த கிராமம், பீகார்; பெற்றோர் – சித்தார்த்தர், திரிசலா; இறப்பு – பவபுரி–பீகார்.

மகாவீரரின் தலைமைச் சீடரான கௌதமசுவாமி, மகாவீரரின் போதனைகளைத் தொகுத்தார். அதன் பெயர் ஆகம சித்தாந்தம் எனப்படும்.

**கர்மா அல்லது கர்மவினை என்றால் என்ன?** இப்பிறவியில் ஒருவர் செய்யும் செயல்களே அவருடைய/அவளுடைய இப்பிறவியின் பிற்பகுதி வாழ்கையையும், அடுத்த பிறவியில் அவர் வாழப்போகும் வாழ்க்கையையும் தீர்மானிக்கிறது என்ற நம்பிக்கை ஆகும்.

மோட்சம் என்பது பிறப்பு மற்றும் இறப்பின் சுழற்சியில் இருந்து விடுதலை பெறுதல் ஆகும்.

இயற்பெயர் – சித்தார்த்தா; பிறப்பு – லும்பினி தோட்டம் நேபாளம்; பெற்றோர் – சுத்தோதனா, மாயாதேவி; இறப்பு – குசி நகரம், உ. பி.

winmeen.com

சைத்தியம் – ஒரு பௌத்தக் கோவில் அல்லது தியானக் கூடம்; விகாரைகள் – மடாலயங்கள்/துறவிகள் வாழும் இடங்கள்; ஸ்தூபி – புத்தருடைய உடல் உறுப்புகளின் எஞ்சிய பாகங்கள் மீது கட்டப்பட்டிருக்கும் கட்டடம். இவை கலைத்திறமை வாய்ந்த நினைவுச் சின்னங்கள் ஆகும்.

**சுவரோவியங்கள்:** மகாராஷ்டிர மாநிலம் ஔரங்காபாத்தில் உள்ள அஜந்தா குகைகளின் சுவர்களிலும் மேற்கூரையிலும் வரையப்பட்டுள்ள ஓவியங்கள் ஜாதக கதைகளை சித்தரிக்கின்றன.

**இடை வழி (நடுவு நிலை வழி):** உலக சுகங்களின் மீது தீவிரமான பற்றும் இல்லாமல், அதே சமயம் கடுமையான தவ வாழ்வையும் மேற்கொள்ளாமல் இருப்பதைக் குறிக்கிறது.

**பௌத்த மாநாடுகள்:** முதலாவது – இராஜகிருதம்; இரண்டாவது – வைசாலி; மூன்றாவது – பாடலிபுத்திரம்; நான்காவது – காஷ்மீர்.

**ஜாதகக் கதைகள்:** ஜாதகக் கதைகள் புகழ் பெற்றவை. புத்தர் முந்தைய பிறவிகளில் மனிதராகவும், விலங்காகவும் இருந்ததைக் குறித்த கதைகளாகும். இவை அறநெறிகளைக் கூறுவன ஆகும்.

**மரங்கொத்திப் பறவையும் சிங்கமும் (ஜாதகக் கதை):** முன்னொரு காலத்தில் ஒரு மரங்கொத்திப் பறவையும் ஒரு சிங்கமும் வாழ்ந்து வந்தன. ஒரு நாள் சிங்கம் ஒரு காட்டு எருமையை வேட்டையாடி உண்ணத் தொடங்கியது. அவ்வாறு உண்ணும்போது ஒரு பெரிய எலும்பு சிங்கத்தின் தொண்டையில் சிக்கிக் கொண்டது. சிங்கத்தால் அந்த எலும்பை எடுக்க முடியவில்லை. சிங்கத்திற்குக் கடுமையாக வலித்தது. இரக்க மனம் கொண்ட மரங்கொத்திப் பறவை சிங்கத்திற்கு எலும்பை எடுக்க உதவி செய்வதாகக் கூறியது. இருந்த போதிலும் எலும்பை எடுக்கும் போது தன்னை சிங்கம் விழுங்கிவிட மாட்டேன் என்று சத்தியம் செய்து கொடுத்தால் மட்டுமே எலும்பை எடுக்க முடியும் என்று மரங்கொத்தி கூறியது. சிங்கமும் மகிழ்ச்சியாக ஒத்துக்கொண்டு மரங்கொத்தியின் முன்னால் தனது வாயைத் திறந்தது. சிங்கத்தின் வாய்க்குள் நுழைந்த மரங்கொத்தி எளிதாக அந்த எலும்பை வெளியே எடுத்துவிட்டது.

சிங்கமும் தனது வாக்குறுதியைக் காப்பாற்றியது மரங்கொத்திப் பறவை பறந்து சென்றது. பிறிதொருநாள் அதே சிங்கம் மற்றொரு காட்டெருமையைக் கொன்றது. சிங்கத்தோடு சேர்ந்து உண்ணலாம் என்று நினைப்பில் மரங்கொத்தி தனக்கும் சிறிது மாமிசம் தருமாறு சிங்கத்தைக் கேட்டது. மரங்கொத்தி ஏமாற்றம் அடையும் வகையில் சிங்கம் தனது உணவில் மரங்கொத்திக்குப் பங்குதர அப்பட்டமாக மறுத்ததோடு, எவ்வளவு துணிச்சல் இருந்தால் என்னிடம் மறுபடியும் சகாயம் செய்யும்படி கேட்பாய்? உனக்கு நான் ஏற்கனவே நிறையச் செய்தாயிற்று என்றது. சிங்கம் எதைப்பற்றிப் பேசுகின்றது என்று மரங்கொத்திக்குப் புரியவில்லை. பின்னர் சிங்கம் தெளிவு படுத்தியது. "நீ எனது தொண்டையிலிருந்து எலும்பை எடுக்கிறபோது, உன்னை விழுங்காமல் விட்டுவிட்டேன். அதற்காக நீ எனக்கு நன்றி சொல்ல வேண்டும். இப்போது என்னிடமிருந்து எதையும் எதிர்பார்க்காதே போய்விடு" என்றது. "நன்றியில்லாத இந்த ஜென்மத்திற்கு உதவி செய்தது என்னுடைய தவறு" என மரங்கொத்தி தனக்குத்தானே சொல்லிக்கொண்டது. மேலும் இதைப்போலத் தகுதியற்ற ஒருவரின் மேல் கோபம் கொள்வதில் அல்லது வருத்தம் அடைவதில் எப்பயனுமில்லை என்று கூறிப்பறந்தது.

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. பௌத்த நூல்களின் பெயர் என்ன?

(அ) அங்கங்கள்

(ஆ) திரிபிடகங்கள்

(இ) திருக்குறள்

(ஈ) நாலடியார்

2. சமணத்தின் முதல் தீர்த்தங்கரர் யார்?

(அ) ரிஷபா

(ஆ) பார்சவ

(இ) வர்தமான

(ஈ) புத்தர்

3. சமணத்தின் எத்தனை தீர்த்தங்கரர்கள் இருந்தனர்?

(அ) 23

(ஆ) 24

(இ) 25

(ஈ) 26

4. மூன்றாம் பௌத்த சபை எங்குக் கூட்டப்பட்டது?

(அ) ராஜகிரகம்

(ஆ) வைசாலி

(இ) பாடலிபுத்திரம்

(ஈ) காஷ்மீர்

5. புத்தர் தனது முதல் போதனை உரையை எங்கு நிகழ்த்தினார்?

(அ) லும்பினி

(ஆ) சாரநாத்

(இ) தட்சசீலம்

(ஈ) புத்தகயா

<u>**பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**</u>

1. கூற்று: ஒரு சாதாரண மனிதரால் உபநிடதங்களைப் புரிந்து கொள்ள இயலாது.

காரணம்: உபநிடதங்கள் மிகவும் தத்துவம் சார்ந்தவை.

(அ) கூற்றும் அதன் காரணமும் சரியானவை

(ஆ) கூற்று தவறானது

(இ) கூற்று சரியானது; ஆனால் அதற்கான காரணம் தவறானது

winmeen.com

(ஈ) கூற்று காரணம் ஆகிய இரண்டுமே தவறு

2. கூற்று: ஜாதகங்கள் புகழ் பெற்ற கதைகளாகும்.

காரணம்: அஜந்தா குகையின் சுவர்களிலும் மேற்கூரையிலும் வரையப்பட்டுள்ள ஓவியங்கள் ஜாதகக் கதைகளைச் சித்தரிக்கின்றன.

(அ) கூற்றும் அதற்கான காரணமும் சரி

(ஆ) கூற்று தவறு

(இ) கூற்று சரி; ஆனால் அதற்கான காரணம் தவறு

(ஈ) கூற்றும் அதற்கான காரணம் ஆகிய இரண்டும் தவறு

3. சரியான விடையைக் கண்டறியவும்: விகாரைகள் எதற்காகப் பயன்படுத்தப்பட்டன?

1. கல்விக் கூடமாக 2. பௌத்தத் துறவிகளின் தங்குமிடம்

3. புனிதப் பயணிகள் தங்குவதற்காக 4. வழிபாட்டுக் கூடம்

(அ) 2 சரி

(ஆ) 1 மற்றும் 3 சரி

(இ) 1, 2, 4 ஆகியவை சரி

(ஈ) 1 மற்றும் 4 சரி

4. சமணமும் பௌத்தமும் உருவாவதற்கு கீழ்க்கண்டக் கூற்றுகளைக் காரணமாகக் கருதலாமா?

1. வேள்விச்சடங்குகள் பெருஞ்செலவு மிக்கதாக இருந்தன.

2. மூடநம்பிக்கைகளும் பழக்கவழக்கங்களும் சாதாரண மனிதர்களைக் குழப்பமுறச் செய்தன.

மேற்சொல்லப்பட்ட கூற்றில்/கூற்றுகளில், எது/எவை சரியானது/சரியானவை:

(அ) 1 மட்டும்

(ஆ) 2 மட்டும்

(இ) 1 மற்றும் 2

(இ) 1 மற்றும் 2ம் இல்லை

5. சமணம் குறித்த கீழ்க்கண்டவற்றுள் எது சரியானது?

(அ) உலகைக் கடவுள் தோற்றுவித்தவர் கடவுள் என்பதைச் சமணம் மறுக்கிறது.

(ஆ) உலகைத் தோற்றுவித்தவர் கடவுள் என்பதை சமணம் ஒத்துக் கொள்கிறது.

(இ) சமணத்தின் அடிப்படைத் தத்துவம் சிலை வழிபாடாகும்.

(ஈ) இறுதித் தீர்ப்பு எனும் நம்பிக்கையைச் சமணம் ஒத்துக் கொள்கிறது.

6. சித்தார்த்த கௌதமர் குறித்து கீழே காண்பனவற்றுள் ஒன்றைத் தவிர மற்ற அனைத்தும் சரி.

(அ) இந்து மதத்தை நிறுவியவர் அவரே

(ஆ) அவர் நேபாளத்தில் பிறந்தார்

(இ) அவர் நிர்வாணம் அடைந்தார்

(ஈ) அவர் சாக்கியமுனி என்று அறியப்பட்டார்

**பொருந்தாததை வட்டமிடு:**

பார்சவா, மகாவீரர், புத்தர், ரிஷபர்

**தவறான இணையைக் கண்டறிக:**

(அ) அகிம்சை – காயப்படுத்தாமல் இருத்தல்

(ஆ) சத்யா – உண்மைபேசுதல்

(இ) அஸ்தேய – திருடாமை

(ஈ) பிரம்மச்சரியா – திருமண நிலை

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. மகாவீரரின் கோட்பாடு __________ என்று அழைக்கப்படுகிறது.

2. ___________ என்பது துன்பங்களிலிருந்தும் மறுபிறவியிலிருந்தும் விடுதலை பெற்ற ஒரு நிலை.

3. பௌத்தத்தை நிறுவியவர் ___________ ஆவார்.

4. காஞ்சிபுரத்திலுள்ள, திருப்பருத்திக்குன்றம் என்னும் கிராமம் ஒரு காலத்தில் __________ என்று அழைக்கப்பட்டது.

5. __________ என்பது புத்தரின் உடல் எச்சங்கள் மீது கட்டப்பட்டனவாகும்.

**சரியா அல்லது தவறா எனக் குறிப்பிடுக:**

1. புத்தர் கர்மாவை நம்பினார்

2. புத்தருக்குச் சாதி முறை மேல் நம்பிக்கை இருந்தது.

3. கௌதம சுவாமி, மகாவீரரின் போதனைகளைத் தொகுத்தார்.

4. விகாரைகள் என்பன கோவில்களாகும்.

5. அசோகர் பௌத்த மதத்தைப் பின்பற்றினார்.

**பொருத்துக:**

1. அங்கங்கள் – வர்தமானா

2. மகாவீரர் – துறவிகள்

3. புத்தர் – பௌத்தக் கோவில்கள்

4. சைத்யா – சாக்கியமுனி

5. பிட்சுக்கள் – சமண நூல்

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: (விடைகள்)**

winmeen.com

1. திரிபிடகங்கள் 2. ரிஷபா 3. (24) 4. பாடலிபுத்திரம் 5. சாரநாத்

**பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றைத் தேர்வு செய்க:**

1. கூற்றும் அதன் காரணமும் சரியானவை.

2. கூற்றும் அதற்;கான காரணமும் சரி.

3. (2 சரி)

4. (1 மற்றும் 2)

5. உலகைக் கடவுள் தோற்றுவித்தார் என்பதைச் சமணம் மறுக்கிறது.

**6. பொருந்தாததை வட்டமிடு: (விடை)**

புத்தர்

**7. தவறான இணையைக் கண்டுபிடி: (விடை)**

பிரம்மச்சரியா – திருமண நிலை

8. இந்து மதத்தை நிறுவியவர் அவரே

**கோடிட்ட இடங்களை நிரப்புக: (விடைகள்)**

1. திரிரத்தினங்கள் 2. நிர்வானம் (அ) முக்தி

3. கௌதம புத்தர் 4. ஜைனக் காஞ்சி

5. ஸ்தூபி

**சரியா அல்லது தவறா எனக் குறிப்பிடுக: (விடைகள்)**

1. சரி

2. தவறு

**சரியான விடை:** புத்தருக்குச் சாதி முறை மேல் நம்பிக்கை இல்லை.

3. சரி

4. தவறு

**சரியான விடை:** விகாரைகள் என்பது கல்விக் கூடங்களாகவும்இ துரவிகள் தங்குமிடமாகவும் இருந்தது.

5. சரி

**பொருத்துக: (விடைகள்)**

1. அங்கங்கள் – சமண நூல்

2. மகாவீரர் – வர்தமானா

3. புத்தர் – சாக்கியமுனி

4. சைத்யா – பௌத்தக் கோவில்கள்

winmeen.com

5. பிட்சுக்கள் – துறவிகள்

## 6th Social Science Lesson 11

## 11] குடித்தலைமையில் இருந்து பேரரசு வரை

**உங்களுக்குத் தெரியுமா?**

"கணா" என்னும் சொல் "சரிசமமான சமூக அந்தஸ்தைக் கொண்ட மக்களை"க் குறிக்கும். "சங்கா" என்றால் "மன்றம்" என்று பொருள். கண சங்கங்கள் சிறிய நிலப்பகுதியில் மேட்டுக்குடி மக்களைக் கொண்ட குழுவால் ஆளப்பட்டது. கண சங்கங்கள் சமத்துவ மரபுகளைப் பின்பற்றின.

"முடியாட்சி" அரசு என்பது ஒரு நிலப்பகுதியை அரசனோ அல்லது அரசியோ ஆள்வதாகும். முடியாட்சி முறை அரசில் ஒரு குடும்பம் நீண்ட காலம் ஆட்சி செய்யும் போது அது அரச வம்சமாக மாறுகிறது. இந்த அரசுகள் வைதீக வேத மரபுகளைப் பின்பற்றின.

**16 மகாஜனபதங்கள்:** அங்கம், மகதம், வஜ்ஜி, காசி, மல்லம், குரு, கோசலம், அவந்தி, சேதி, வத்சம், பாஞ்சாலம், மத்சயம், சூரசேனம், அஸ்மகம், காந்தாரம் மற்றும் காம்போஜம்.

**நாளந்த–யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியச் சின்னம்:** நாளந்தா பண்டைய மகத நாட்டில் இருந்த பௌத்த மடாலயம் ஆகும். குப்தர்களின் காலத்தில் அது மிகப் புகழ் பெற்ற கல்வி மையமாகத் திகழ்ந்தது. நாளந்தா என்னும் சமஸ்கிருதச் சொல் நா+அலம்+தா என்ற மூன்று சமஸ்கிருத சொற்களின் இணைப்பில் உருவானது. இதன் பொருள் "வற்றாத அறிவை அளிப்பவர்" என்பதாகும்.

**மெகஸ்தனிஸ்:** கிரேக்க ஆட்சியாளர் செலுக்கஸ் நிகேட்டரின் தூதுவராக, சந்திரகுப்த மௌரிய அரசவையில் இருந்தவர். பதினான்கு ஆண்டுகள் இந்தியாவில் இருந்தார். அவர் எழுதிய நூலின் பெயர் இண்டிகா. மெரியப் பேரரசைப் பற்றி நாம் தெரிந்து கொள்ள இந்நூல் ஒரு முக்கியச் சான்றாகும்.

**பாடலிபுத்திரத்தின் பிரம்மாண்டம்:** மௌரியப் பேரரசின் மாபெரும் தலைநகரான பாடலிபுத்திர நகருக்கு 64 நுழைவு வாயில்களும் 570 கண்காணிப்பு கோபுரங்களும் இருந்தன.

"அசோகர் ஒரு பிரகாசமான நட்சத்திரம் போல இன்று வரை ஒளிர்கிறார்" – H. G. வெல்ஸ் (வரலாற்றறிஞர்).

**சிங்கமுகத் தூண்:** சாரநாத்திலுள்ள அசோகருடைய தூணின் சிகரப் பகுதியில் அமைந்துள்ள சிங்க உருவங்கள் இந்திய தேசிய சின்னமாகவும், வட்ட வடிவ அடிப்பகுதியில் இடம் பெற்றுள்ள சக்கரம் இந்தியாவின் தேசியக் கொடியின் மையச் சக்கரமாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

**அசோகர் கல்வெட்டுகளில் எழுத்து முறை:** சாஞ்சி – பிராமி; காந்தகார் – கிரேக்கம் மற்றும் அராமிக்; வடமேற்குப் பகுதிகள் – கரோஸ்தி.

**பேராணை:** அரசரால் அல்லது உயர் பதவியில் இருப்பவரால் வெளியிடப்பட்ட ஆணை அல்லது பிரகடனம் ஆகும்.

ருத்ரதாமனின் ஜீனாகத்/கிர்னார் கல்வெட்டு சுதர்சனா ஏரி எனும் நீர்நிலை உருவாக்கப்பட்டதைப் பதிவு செய்துள்ளது. இதற்கான பணிகள் சந்திரகுப்த மௌரியரின் காலத்தில் தொடங்கப்பட்டது. அசோகரின் காலத்தில் பணிகள் நிறைவு பெற்றன.

**முக்கிய ஏற்றுமதிப் பொருட்கள்:** நறுமணப் பொருள்கள், முத்துக்கள், வைரங்கள், பருத்தி இழை துணி, தந்தத்திலான பொருட்கள், சங்குகள், சிப்பிகள்.

**முக்கிய இறக்குமதிப் பொருட்கள்:** குதிரைகள், தங்கம், கண்ணாடிப் பொருட்கள், பட்டு (லினன்).

யக்ஷின் என்பது நீர், வளம், மரங்கள், காடுகள், காட்டுச் சூழல் ஆகியவற்றோடு தொடர்புடைய கடவுள் ஆவார். யக்ஷி என்பது யக்ஷாவின் பெண் வடிவமாகும்.

**பண்டைய பெயர் மற்றும் தற்போதைய பெயர்:** ராஜகிரகம் – ராஜ்கிர், பாடலிபுத்திரம் – பாட்னா, கலிங்கா – ஒடிசா.

**உலகம் அந்நாளில்: சீனப்பெருஞ்சுவர்:** இது பழங்காலத்தில் கட்டப்பட்ட தொடர்ச்சியான பல கோட்டைச் சுவராகும். குன்–சி–ஹங் என்னும் பேரரசர் தனது பேரரசின் வட எல்லையை பாதுகாப்பதற்காக கி. மு. (பொ. ஆ. மு) மூன்றாம் நூற்றாண்டில் இந்தச் சுவர்களை இணைத்தார்.

**ஒலிம்பியாவின் ஜியஸ் (zeus) கோயில்:** கிரிஸ்நாட்டில் உள்ள ஒலிம்பியாவில் கி. மு. (பொ. ஆ. மு) ஐந்தாம் நூற்றாண்டில் கட்டப்பட்ட கோயில் ஜியஸ் என்ற கடவுளுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. இது பண்டைய உலகின் ஏழு அதிசயங்களில் ஒன்றாகும்.

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. நான்கு மகாஜனபதங்களில் மிகவும் வலிமையான அரசு எது?

(அ) அங்கம்

(ஆ) மகதம்

(இ) கோசலம்

(ஈ) வஜ்ஜி

2. கீழ்க்கண்டவர்களில் கௌதம புத்தரின் சமகாலத்தைச் சேர்ந்தவர் யார்?

(அ) அஜாதசத்ரு

(ஆ) பிந்துசாரா

(இ) பத்மநாப நந்தா

(ஈ) பிரிகத்ரதா

3. கீழ்க்காண்பனவற்றில் எது மௌரியர் காலத்திற்கான சான்றுகளாகும்?

(அ) அர்த்த சாஸ்திரம்

(ஆ) இண்டிகா

(இ) முத்ராராட்சஷம்

(ஈ) இவை அனைத்தும்

4. சந்திர குப்த மௌரியர் அறியணையைத் துறந்து ___________ என்னும் சமணத் துறவியோடு சரவணபெலகோலாவுக்குச் சென்றார்.

winmeen.com

(அ) பத்ரபாகு

(ஆ) ஸ்துலபாகு

(இ) பார்ஸவநாதா

(ஈ) ரிஷபநாதா

5. செல்யூகஸ் நிகேட்டரின் தூதுவர் ____________

(அ) டாலமி

(ஆ) கௌடில்யர்

(இ) ஜெர்சக்ஸ்

(ஈ) மெகஸ்தனிஸ்

6. மௌரிய வம்சத்தின் கடைசி அரசர் யார்?

(அ) சந்திர குப்த மௌரியர்

(ஆ) அசோகர்

(இ) பிரிகத்ரதா

(ஈ) பிந்துசாரர்

**பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. கூற்று: அசோகர் இந்தியாவின் மாபெரும் பேரரசர் என கருதப்படுகிறார்.

காரணம்: தர்மத்தின் கொள்கையின்படி அவர் ஆட்சி புரிந்தார்.

(அ) கூற்று காரணம் ஆகிய இரண்டும் சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்

(ஆ) கூற்றும் காரணமும் உண்மையானவை, ஆனால் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல

(இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு

(ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி

2. கீழே கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளின் எது/எவை சரி:

கூற்று 1: ஒட்டுமொத்த இந்தியாவை ஒரே ஆட்சியின் கீழ் இணைந்த முதல் அரசர் சந்திரகுப்த மௌரியர் ஆவார்.

கூற்று 2: மௌரியரின் நிர்வாகம் பற்றிய செய்திகளை அர்த்த சாஸ்திரம் வழங்குகிறது.

(அ) 1 மட்டும்

(ஆ) 2 மட்டும்

(இ) 1, 2 ஆகிய இரண்டும்

(ஈ) 1ம் இல்லை 2ம் இல்லை

3. கீழே கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளைக் கவனமாக கவனி. அக்கூற்றுகளில் சரியானது எது/எவை எனக் கண்டுபிடி.

1. மகதத்தின் முதல் அரசர் சந்திரகுப்த மௌரியர்.

2. ராஜகிரிகம் மகதத்தின் தலைநகராய் இருந்தது.

(அ) 1 மட்டும்

(ஆ) 2 மட்டும்

(இ) 1 மற்றும் 2

(ஈ) 1ம் இல்லை 2ம் இல்லை

4. கீழ்க்காண்பனவற்றைக் காலக்கோட்டின்படி வரிசைப்படுத்தவும்.

(அ) நந்தா சிசுநாகா ஹரியங்கா மௌரியா

(ஆ) நந்தா சிசுநாகா மௌரியா ஹரியங்கா

(இ) ஹரியங்கா சிசுநாகா நந்தா மௌரியா

(ஈ) சிசுநாகா மௌரியா நந்தா ஹரியங்கா

5. கீழ்க்கண்டவைகளில் எது மகதப் பேரரசின் எழுச்சிக்குக் காரணமாயிற்று

1. முக்கியத்துவம் வாய்ந்த அமைவிடம்

2. அடர்ந்த காடுகள் மரங்களையும், யானைகளையும் வழங்கின

3. கடலின் மீதான ஆதிக்கம்

4. வளமான இரும்புத் தாது கிடைத்தமையால்

(அ) 1, 2 மற்றும் 3 மட்டும்

(ஆ) 3 மற்றும் 4 மட்டும்

(இ) 1, 2 மற்றும் 4 மட்டும்

(ஈ) இவையனைத்தும்

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. __________ மகதத்தின் தொடக்க காலத் தலைநகராக இருந்தது.

2. முத்ரராட்சசத்தை எழுதியவர் ___________

3. ___________ பிந்துசாரரின் மகனாவார்.

4. மௌரியப் பேரரசை தோற்றுவித்தவர் ____________

5. நாடு முழுவதிலும் தர்மத்தைப் பரப்புவதற்காக ____________ பணியமர்த்தப்பட்டனர்.

**சரியா அல்லது தவறா எனக் குறிப்பிடுக:**

1. தேவனாம்பியா எனும் பட்டம் சந்திரகுப்த மௌரியருக்கு வழங்கப்பட்டது.

winmeen.com

2. அசோகர் கலிங்கப் போரில் தோல்வியடைந்த பின்னர் போரைக் கைவிட்டார்.

3. அசோகருடைய தம்மா பௌத்தக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டவை.

4. நமது காகிதப் பணத்தில் இடம் பெற்றுள்ள சிங்கங்கள் ராம்பூர்வா தூண்களின் காளை சிகரப் பகுதியிலிருந்து பெறப்பட்டவையாகும்.

5. புத்தரின் உடல் உறுப்புகளின் எச்சங்கள் ஸ்தூபியின் மையத்தில் வைக்கப்பட்டுள்ளன.

**பொருத்துக:**

(அ) கணா – 1. அர்த்த சாஸ்திரம்

(ஆ) மெகஸ்தனிஸ் – 2. மதச் சுற்றுப்பயணம்

(இ) சாணக்கியா – 3. மக்கள்

(ஈ) தர்மயாத்திரை – 4. இண்டிகா

(அ) 3 4 1 2

(ஆ) 2 4 3 1

(இ) 3 1 2 4

(ஈ) 2 1 4 3

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: (விடைகள்)**

1. மகதம் 2. அஜாதசத்ரு 3. இவை அனைத்தும்

4. பத்ரபாகு 5. மெகஸ்தனிஸ் 6. பிரிகத்ரதா

**பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றைத் தேர்வு செய்க: (விடைகள்)**

1. கூற்று காரணம் ஆகிய இரண்டும் சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.

2. (1, 2 ஆகிய இரண்டும்)

3. (2 மட்டும்)

4. ஹரியங்கா சிசுநாகா நந்தா மௌரியா

5. (1, 2 மற்றும் 4 மட்டும்)

**கோடிட்ட இடங்களை நிரப்புக: (விடைகள்)**

1. ராஜகிருகம் 2. விசாகதத்தர் 3. அசோகர்

4. சந்திரகுப்த மௌரியர் 5. தர்ம மகா மாத்திரியர்

**சரியா அல்லது தவறா எனக் குறிப்பிடுக: (விடைகள்)**

1. தவறு

**சரியான விடை:** தேவனாம்பியா எனும் பட்டம் அசோகருக்கு வழங்கப்பட்டது.

2. தவறு

winmeen.com

**சரியான விடை:** அசோகர் கலிங்கப்போரில் வெற்றி அடைந்தார்.

3. சரி

4. தவறு

**சரியான விடை:** நமது காகிதப் பணத்தில் இடம் பெற்றுள்ள சிங்கங்கள் அசோகர் தூண்களின் காளை சிகரப் பகுதியிலிருந்து பெறப்பட்டவையாகும்.

5. சரி

**பொருத்துக: (விடைகள்)**

1. கணா – மக்கள்

2. மெகஸ்தனிஸ் – இண்டிகா

3. சாணக்கியர் – அர்த்தசாஸ்திரம்

4. தர்மயாத்திரை – மதச் சுற்றுப்பயணம்

6th Social Science Lesson 12

**12] வளங்கள்**

**உங்களுக்குத் தெரியுமா?**

ஒரு பொருளின் பயன்பாட்டினைக் கண்டறிந்த பின்பு தான் அப்பொருள் வளமாக மாறுகிறது. மனிதனின் தேவைகள் நாளுக்கு நாள் மாறுபடும் பொழுது அதை நிறைவு செய்கின்ற வளங்களும் மாறுகிறது. ஒரு பொருளை வளமாக மாற்றுவதற்கான காரணிகள் காலமும் தொழில் நுட்பமும் ஆகும். உதாரணமாக நிலக்கரியும், பெட்ரோலியமும் குறைந்து கொண்டே வரும் இக்கால கட்டத்தில், புதிய கண்டுபிடிப்பான சூரியத் தகடுகள், சூரிய ஆற்றலை மின்னாற்றலாக மாற்ற உதவுகிறது எனவே தற்போது இது ஒரு சிறந்த வளமாகவே நீடிக்கிறது.

கடல் ஈஸ்ட்டானது (Marine Yeast) நிலப்பரப்பிலுள்ள ஈஸ்டைவிட (Terrestrial Yeast) மிகுந்த ஆற்றல் உடையது. இச்சத்தை ரொட்டி தயாரித்தல், மது வடித்தல், திராட்சை ரசம் தயாரித்தல், உயிரி எத்தினால் தயாரித்தல் மற்றும் மருத்துவப்புரதம் தயாரித்தலுக்குப் பயன்படுகிறது.

வெப்ப மண்டல மழைக்காடுகள் "உலகின் பெரும் மருந்தகம்" (world's largest pharmacy) என அழைக்கப்படுகிறது. இப்பகுதியில் காணப்படும் தாவரங்களில் 25% தாவரங்கள் மருத்துவ குணம் கொண்ட தாவரங்களாகும் (எ. கா) சின்கோனா.

ஸ்பெர்ம் திமிங்கலத்தில் இருந்து பெறப்படும் ஒரு வகை திடப்பொருளே திமிங்கலப் புனுகு ஆகும். ஒரு பவுண்டு (0. 454 கி. கி) திமிங்கலப்புனுகின் விலை 63, 000 அமெரிக்க டாலர் மதிப்புடையதாகும். இது வாசனைத் திரவியங்கள் தயாரிக்கப் பயன்படுகிறது.

**பொருத்துக:**

1. இயற்கை வளம் – கனிமங்கள்

2. பன்னாட்டு வளம் – நிலையான வளர்ச்சி

3. குறைத்தல், மறு பயன்பாடு மறுசுழற்சி – காற்று

4. புதுப்பிக்க இயலாதது – உற்பத்தி செய்தல்

5. உலகளாவிய வளம் – திமிங்கலப் புனுகு

6. இரண்டாம் நிலை செயல்பாடுகள் – காடு

**<u>கோடிட்ட இடங்களை நிரப்புக:</u>**

1. கரும்பிலிருந்து __________ தயாரிக்கப்படுகிறது.

2. வளங்களை ___________ கையாளுதல் வளங்களின் பாதுகாப்பு எனப்படுகிறது.

3. குறிப்பிட்ட பகுதிகளில் காணப்படும் வளங்கள் ___________ எனப்படுகிறது.

4. தற்போது பயன்படுத்தப்படும் வளங்கள் ___________ என்று அழைக்கப்படுகிறது.

5. ___________ வளம் மிகவும் மதிப்பு மிக்க வளமாகும்.

6. இயற்கை வளங்களைச் சேகரித்தல் ____________ எனப்படுகிறது.

**<u>பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:</u>**

1. வாக்கியம்: வெப்ப மண்டலப் பகுதிகளில் அனல் மின்னாற்றலுக்குப் பதிலாக சூரிய ஒளி ஆற்றல் ஒரு சிறந்த மாற்று ஆகும்.

புரிதல் 1: நிலக்கரியும் பெட்ரோலியமும் குறைந்து கொண்டே வருகிறது.

புரிதல் 2: சூரிய ஆற்றல் என்றும் குறையாது.

சரியான விடையைத் தேர்ந்தெடு:

(அ) புரிதல் 1 மட்டும் சரி

(ஆ) புரிதல் 2 மட்டும் சரி

(இ) புரிதல் 1 மற்றும் 2 தவறு

(ஈ) புரிதல் 1 மற்றும் 2 சரி

2. வாக்கியம்: வளங்களைப் பாதுகாக்காவிடில் மனித இனம் அழிந்து விடும்.

புரிதல் 1: வளங்களைப் பாதுகாக்க வேண்டாம்.

புரிதல் 2: வளங்களைப் பாதுகாக்க வேண்டும்.

சரியான விடையைத் தேர்ந்தெடு:

(அ) புரிதல் 1 மட்டும் சரி

(ஆ) புரிதல் 2 மட்டும் சரி

(இ) புரிதல் 1 மற்றும் 2 தவறு

(ஈ) புரிதல் 1 மற்றும் 2 சரி

3. வாக்கியம்: மனிதன் விவசாயம் செய்ய தீர்மானித்தான்.

புரிதல் 1: உணவு சேகரித்து வந்த மனிதனுக்கு உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டது.

புரிதல் 2: மனிதன் சேகரித்த உணவு ஊட்டமிக்கதாக இல்லை.

சரியான விடையைத் தேர்ந்தெடு:

(அ) புரிதல் 1 மட்டும் சரி

(ஆ) புரிதல் 2 மட்டும் சரி

(இ) புரிதல் 1 மற்றும் 2 தவறு

(ஈ) புரிதல் 1 மற்றும் 2 சரி

**வளங்களைப் பாதுகாக்க மூன்று பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன. குறைத்தல், மறுபயன்பாடு மற்றும் மறுசுழற்சி என்ற சொற்களைச் சரியான இடத்தில் எழுதுக:**

1. நீ இளம் வயதில் பயன்படுத்திய மிதிவண்டியை உனது பக்கத்து வீட்டு குழந்தைக்குக் கொடுத்தல் ___________

2. கழிப்பறையில் குறைவான நீரைப் பயன்படுத்துதல் ___________

3. பயன்படுத்திய நெகிழிப் பொருள்களை உருக்கிச் சாலை அமைத்தல் ___________

**பொருத்துக: (விடைகள்)**

1. இயற்கை வளம் – காடு

2. பன்னாட்டு வளம் – திமிங்கலப் புனுகு

3. குறைத்தல், மறு பயன்பாடு, மறுசுழற்சி – நிலையான வளர்ச்சி

4. புதுப்பிக்க இயலாதது – கனிமங்கள்

5. உலகளாவிய வளம் – காற்று

6. இரண்டாம் நிலை செயல்பாடுகள் – உற்த்தி செய்தல்

**கோடிட்ட இடங்களை நிரப்புக: (விடைகள்)**

1. சர்க்கரை 2. கவனமாக 3. உள்ளூர் வளங்கள் 4. கண்டறியப்பட்ட

5. மனித 6. வளத்திட்டமிடல்

**பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றைத் தேர்வு செய்க: (விடைகள்)**

1. புரிதல் 1 மற்றும் 2 சரி

2. புரிதல் 2 மட்டும் சரி

3. புரிதல் 1 மற்றும் 2 தவறு

**வளங்களை பாதுகாப்பதற்கான மூன்று பரிந்துரைகள்: (விடைகள்)**

1. மறுசுழற்சி 2. குறைத்தல் 3. மறுபயன்பாடு

6th Social Science Lesson 13

13] தேசியச் சின்னங்கள்

**உங்களுக்குத் தெரியுமா?**

தமிழ்நாட்டில் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள விராலி மலையில் மயில்களுக்கான சரணாலயம் உள்ளது.

**தமிழகத்தின் மாநில இயற்கைச் சின்னங்கள்:** மாநில விலங்கு – வரையாடு; மாநிலப் பறவை – மரகதப் புறா; மாநில மலர் – செங்காந்தள் மலர்; மாநில மரம் – பனை மரம்.

இந்திய தேசியக் கொடியை ஆந்திராவைச் சேர்ந்த பிங்காலி வெங்கையா என்பவர் வடிவமைத்தார். விடுதலை இந்தியாவின் முதல் தேசியக் கொடி தமிழ்நாட்டில் உள்ள குடியாத்தத்தில் (வேலூர் மாவட்டம்) நெய்யப்பட்டது. இக்கொடியைப் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் (15. 08. 1947) செங்கோட்டையில் ஏற்றினார். இக்கொடி தற்போது சென்னையில் உள்ள புனித ஜார்ஜ் கோட்டை அருங்காட்சியகத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

**கொடி காத்த குமரன்:** திருப்பூர்க் குமரன் ஈரோடு மாவட்டத்தில் உள்ள சென்னி மலையில் பிறந்தார். இள வயதிலிருந்தே இந்திய விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டார். 1932இல் காந்தியடிகளைக் கைது செய்ததைக் கண்டித்து நாடெங்கிலும் போராட்டத்தில் நடைபெற்றன. காந்தியை விடுதலை செய்யக்கோரி நடந்த போராட்டத்தில் திருப்பூர்க் குமரன் கலந்து கொண்டார். காவல் துறையினரின் கடுமையான தாக்குதலுக்கு உட்பட்டு உயிர்துறந்தார். போராட்டக்களத்தில் உயிர் நீத்த போதும் மூவர்ணக் கொடியைக் கீழே விடவில்லை. இதனால் திருப்பூர்க் குமரன் "கொடி காத்த குமரன்" என அழைக்கப்படுகிறார். அவரது தியாகத்தை நினைவு கூறும் வகையில் அவரது நூற்றாண்டில் இந்திய அரசு அஞ்சல் தலை வெளியிட்டுச் சிறப்பித்தது.

அசோகர் காலத்தில் சாரநாத் தூணின் உச்சியில் அமைந்திருந்த நான்முகச் சிங்கம் தற்போது சாரநாத் அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்படுகிறது.

1911, டிசம்பர் 27ஆம் நாள் கொல்கத்தாவில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டின் போது இப்பாடல் முதன் முதலாகப் பாடப்பட்டது.

இந்தியக் குடியரசு நாளின் மூன்றாவது நாளான ஜனவரி 29, அன்று "பாசறைக்கு திரும்புதல்" என்ற விழா சிறப்பாக நடைபெறும். அந்நாளில் தரைப்படை, கடற்படை, விமானப்படையைச் சேர்ந்த இசைக்குழுவினர் நிகழ்ச்சிகளை நடத்துவர். குடியரசு தலைவர் இந்நிகழ்வின் முதன்மை விருந்தினர் ஆவார். இவ்விழாவின் ஒரு பகுதியாக மாலை 6 மணிக்கு குடியரசுத் தலைவர் மாளிகை மின் விளக்குகளால் அலங்கரிக்கப்படும்.

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. தேசியப் பாடலான வந்தே மாதரத்தை இயற்றியவர் ___________

(அ) பிங்காலி வெங்கையா

(ஆ) ரவீந்திரநாத் தாகூர்

(இ) பங்கிம் சந்திர சட்டர்ஜி

(ஈ) காந்திஜி

2. இந்தியாவின் தேசியக் கீதம் ____________

(அ) ஜன கண மன

(ஆ) வந்தே மாதரம்

(இ) அமர் சோனார் பாங்கலே

(ஈ) நீராடுங் கடலுடுத்த

3. ஆனந்த மடம் என்ற புகழ் பெற்ற நாவலை எழுதியவர் ____________

(அ) அக்பர்

(ஆ) ரவீந்திரநாத் தாகூர்

(இ) பங்கிம் சந்திர சட்டர்ஜி

(ஈ) ஜவஹர்லால் நேரு

4. __________ பிறந்த நாளைச் சர்வதேச அகிம்சை நாளாகக் கொண்டாடுகிறோம்.

(அ) மாகாத்மா காந்தி

(ஆ) சுபாஷ்சந்திர போஸ்

(இ) சர்தார் வல்ல பாய்பட்டேல்

(ஈ) ஜவஹர்லால் நேரு

5. நம் தேசியக் கொடியில் உள்ள அசோகச் சக்கரத்தின் நிறம் ____________

(அ) வெளிர் நீலம்

(ஆ) கரு நீலம்

(இ) நீலம்

(ஈ) பச்சை

6. இந்திய விடுதலை நாளில் பறக்கவிடப்பட்ட முதல் தேசியக்கொடி __________ அருங்காட்சியத்தில் உள்ளது.

(அ) சென்னை கோட்டை

(ஆ) டெல்லி

(இ) சாரநாத்

(ஈ) கொல்கத்தா

7. தேசியக் கீதத்தை இயற்றியவர் ____________

(அ) தேவேந்திரநாத் தாகூர்

(ஆ) பாரதியார்

(இ) ரவீந்திரநாத் தாகூர்

(ஈ) பாலகாங்காதர திலகர்

8. தேசியக் கீதம் பாடுவதற்கு எடுத்துக் கொள்ள வேண்டிய கால அளவு ____________

(அ) 50 வினாடிகள்

(ஆ) 52 நிமிடங்கள்

(இ) 52 வினாடிகள்

(ஈ) 20 வினாடிகள்

9. 1896 தேசிய காங்கிரஸ் மாநாட்டின் போது வந்தே மாதரம் பாடலைப் பாடியவர் ____________

(அ) பங்கிம் சந்திர சட்டர்ஜி

(ஆ) ரவீந்திரநாத் தாகூர்

(இ) மகாத்மா காந்தி

(ஈ) சரோஜினி நாயுடு

10. விடுதலை நாளின் போது டெல்லியில் கொடியேற்றுபவர் _____________

(அ) பிரதம அமைச்சர்

(ஆ) குடியரசுத்தலைவர்

(இ) துணைக்குடியரசுத் தலைவர்

(ஈ) அரசியல் தலைவர் எவரேனும்

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. இந்திய தேசிய இலச்சினை ___________ ல் உள்ள அசோகத் தூணிலிருந்து ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2. இந்தியாவின் தேசியக் கனி ___________

3. இந்தியாவின் தேசியப் பறவை ____________

4. இந்தியாவில் தேசிய மரம் __________

5. 1947 விடுதலை நாளின் போது ஏற்றப்பட்டக் கொடி ___________ என்னுமிடத்தில் நெசவு செய்யப்பட்டது.

6. இந்திய தேசியக் கொடியை வடிவமைத்தவர் ____________

7. சக ஆண்டு முறையைத் துவக்கியவர் ____________

8. இந்தியாவின் மிக நீளமான ஆறு ____________

9. இந்திய நாணயத்தின் குறியீட்டை வடிவமைத்தவர் ___________

10. தேசியக் கொடியில் உள்ள அசோகச் சக்கரம் __________ ஆரங்களைக் கொண்டது

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. நான்முகச் சிங்கம் தற்போது ___________ அருங்காட்சியகத்தில் உள்ளது. (கொல்கத்தா/சாரநாத்)

2. தேசியக் கீதம் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆண்டு __________ (1950/1947).

3. ____________ இந்தியாவின் தேசிய நுண்ணுயிரியாக அறிவிக்கப்பட்டுள்ளது. (லாக்டோ பேசில்லஸ்/ரைசோபியம்)

**நிரப்புக:**

1. காவி – தைரியம்; வெள்ளை – ____________

2. குதிரை – ஆற்றல்; காளை – ____________

3. 1947 – விடுதலை நாள்; 1950 – ___________

**பொருத்துக:**

1. ரவீந்திரநாத் தாகூர் – அ. தேசியப்பாடல்

2. பங்கிம் சந்திர சட்டர்ஜி – ஆ. தேசியக்கொடி

3. பிங்காலி வெங்கையா – இ. வான் இயற்பியலாளர்

4. மேக்னாத் சாகா – ஈ. தேசிய கீதம்

1 2 3 4

(அ) அ ஈ ஆ இ

(ஆ) ஈ அ இ ஆ

(இ) ஈ அ ஆ இ

**பொருத்தியபின் பொருந்தாதது எது?**

1. தேசிய ஊர்வன – புலி

2. தேசிய நீர்வாழ் விலங்கு – லாக்டோ பேசில்லஸ்

3. தேசிய பாரம்பரிய விலங்கு – ராஜநாகம்

4. தேசிய நுண்ணுயிரி – டால்பின்

**தவறான இணையைக் கண்டறிக:**

1. அ) தேசியக் கொடியின் நீள அகலம் 3: 2 என்ற விகிதத்தில் உள்ளது.

ஆ) அசோகச் சக்கரம் 24 ஆரங்களைக் கொண்டது.

இ) அசோகச் சக்கரம் வெளிர் நீல நிறமுடையது.

2. அ) பிங்காலி வெங்கையா தேசியக் கொடியை வடிவமைத்தார்.

ஆ) விடுதலை நாளில் ஏற்றப்பட்ட முதல் தேசியக் கொடி தற்போது கொல்கத்தா அருங்காட்சியகத்தில் உள்ளது.

இ) விடுதலை நாளில் ஏற்றப்பட்ட முதல் தேசியக்கொடி குடியாத்தத்தில் நெசவு செய்யப்பட்டது.

**சரியான சொற்றொடரைத் தேர்ந்தெடுக்கவும்**

1. ஆகஸ்டு 15 அன்று விடுதலை நாள் கொண்டாடப்படுகிறது.

2. நவம்பர் 26 அன்று குடியரசு நாள் கொண்டாடப்படுகிறது.

3. அக்டோபர் 12 அன்று காந்தி ஜெயந்தி கொண்டாடப்படுகிறது.

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: (விடைகள்)**

1. பங்கிம் சந்திர சட்டர்ஜி 2. ஜன கண மன 3. பங்கிம் சந்திர சட்டர்ஜி 4. மகாத்மா காந்தி

5. கருநீலம் 6. சென்னை கோட்டை 7. ரவீந்திரநாத் தாகூர் 8. (52 வினாடிகள்)

9. பங்கிம் சந்திர சட்டர்ஜி 10. பிரதம அமைச்சர்

**கோடிட்ட இடங்களை நிரப்புக: (விடைகள்)**

1. சாரநாத் 2. மாம்பழம் 3. மயில் 4. ஆலமரம் 5. குடியாத்தம் 6. பிங்காலி வெங்கையா

7. கனிஷ்கர் 8. கங்கை 9. டி. உதயகுமார் 10. (24)

**சரியானதைத் தேர்ந்தெடுக்கவும்: (விடைகள்)**

1. சாரநாத் 2. (1950) 3. லாக்டோ பேசில்லஸ்

**நிரப்புக: (விடைகள்)**

1. நேர்மை (தூய்மை)

2. உழைப்பு

3. குடியரசு நாள்

**பொருத்துக: (விடைகள்)**

1. ரவீந்திரநாத் தாகூர் – தேசியகீதம்

2. பங்கிம் சந்திர சட்டர்ஜி – தேசியப்பாடல்

3. பிங்காலி வெங்கையா – தேசியக்கொடி

4. மேக்னாத் சாகா – வான் இயற்பியலாளர்

**பொருந்தியபின் பொருந்தாதது எது: (விடைகள்)**

1. தேசிய ஊர்வன – ராஜநாகம்

2. தேசிய நீர்வாழ் விலங்கு – டால்பின்

3. தேசிய பாரம்பரிய விலங்கு – புலி

4. தேசிய நுண்ணுயிரி – லாக்டோ பேசில்லஸ்

**தவறான சொற்றொடரைத் தேர்ந்தெடுக்கவும்: (விடை)**

1. அசோகர் சக்கரம் வெளிர் நீல நிறமுடையது

2. விடுதலை நாளில் ஏற்றப்பட்ட முதல் தேசியக் கொடி தற்போது கொல்கத்தா அருங்காட்சியகத்தில் உள்ளது.

winmeen.com

**சரியான சொற்றொடரைத் தேர்ந்தெடுக்கவும்: (விடை)**

1. (ஆகஸ்டு 15 அன்று விடுதலை நாள் கொண்டாடப்படுகிறது.)

6th Social Science Lesson 14

**14] இந்திய அரசமைப்புச் சட்டம்**

**உங்களுக்குத் தெரியுமா?**

அண்ணல் அம்பேத்கர் "இந்திய அரசமைப்புச் சட்டத்தின் தந்தை" என அழைக்கப்படுகிறார்.

அரசமைப்புச் சட்ட வரைவுக் குழுவில் பி. ஆர். அம்பேத்கர், என். கோபாலசாமி. கே. எம். முன்ஷி, சையத் முஹம்மது சதுல்லா, பி. எல். மிட்டர், என். மாதவ ராவ், டி. டி. கே, டி. பி. கேதான் ஆகிய சட்ட வல்லுனர்கள் இடம் பெற்றிருந்தனர். அக்குழுவின் தலைவரான பி. ஆர். அம்பேத்கர் நமது அரசியல் சட்டத்தை உருவாக்கிய முதன்மை வடிவமைப்பாளராகக் கருதப்படுகிறார். நமது அரசியல் சட்டம் உருவானபோது, 395 உறுப்புகள், 22 பகுதிகள் மற்றும் 8 அட்டவணைகள் இடம் பெற்றிருந்தன. தற்போது 448 உறுப்புகள், 25 பகுதிகள் மற்றும் 12 அட்டவணைகள் இடம் பெற்றுள்ளன. அரசமைப்புச் சட்டம் 16. 09. 2016 வரை 101 முறை திருத்தப்பட்டுள்ளது.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் உண்மைப் பிரதிகள் (இந்தி, ஆங்கிலம்) நாடாளுமன்ற நூலகத்தில் ஹீலியம் வாயு நிரப்பப்பட்ட பேழையில் வைத்து பாதுகாக்கப்பட்டு வருகிறது.

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. அரசமைப்புத் தினம் கொண்டாடப்படும் நாள் ___________

(அ) ஜனவரி 26

(ஆ) ஆகஸ்டு 15

(இ) நவம்பர் 26

(ஈ) டிசம்பர் 9

2. அரசமைப்புச் சட்டத்தை ___________ ஆம் ஆண்டு அரசியல் நிர்ணயசபை ஏற்றுக்கொண்டது.

(அ) 1946

(ஆ) 1950

(இ) 1947

(ஈ) 1949

3. அரசமைப்புச் சட்டத்தில் இதுவரை ___________ சட்டத்திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

(அ) 101

(ஆ) 100

(இ) 78

(ஈ) 46

4. இஃது அடிப்படை உரிமை அன்று ____________

(அ) சுதந்திர உரிமை

(ஆ) சமத்துவ உரிமை

(இ) ஒட்டுரிமை

(ஈ) கல்வி பெறும் உரிமை

5. இந்தியக் குடிமக்களின் வாக்குரிமைக்கான வயது ____________

(அ) 14

(ஆ) 18

(இ) 16

(ஈ) 21

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. அரசியல் நிர்ணய சபையின் தலைவராக ___________ தேர்ந்தெடுக்கப்பட்டார்.

2. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் தந்தை என போற்றப்படுபவர் ____________

3. நம் அடிப்படை உரிமைகளை உறுதி செய்யவும் பாதுகாக்கவும் செய்வது __________ ஆகும்.

4. நம் அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த நாள் ____________

**பொருத்துக:**

1. சுதந்திர தினம் – அ. நவம்பர் 26

2. குடியரசு தினம் – ஆ. ஏப்ரல் 1

3. இந்திய அரசமைப்பு தினம் – இ. ஆகஸ்டு 15

4. அனைவருக்கும் கல்வி உரிமை – ஈ. ஜனவரி 26

1 2 3 4

(அ) இ அ ஈ ஆ

(ஆ) இ ஈ அ ஆ

(இ) ஈ ஆ அ இ

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: (விடைகள்)**

1. (நவம்பர் 26) 2. (1949) 3. (101) 4. ஒட்டுரிமை 5. (18)

**கோடிட்ட இடங்;களை நிரப்புக: (விடைகள்)**

1. டாக்டர். ராஜேந்திர பிரசாத் 2. அண்ணல் அம்பேத்கர் 3. இந்திய அரசியலமைப்புச் சட்டம்

4. (1950 ஜனவரி 26)

**பொருத்துக: (விடைகள்)**

1. சுதந்திர தினம் – ஆகஸ்டு 15

2. குடியரசு தினம் – ஜனவரி 26

3. இந்திய அரசமைப்பு தினம் – நவம்பர் 26

4. அனைவருக்கும் கல்வி உரிமை – ஏப்ரல் 1

6th Social Science Lesson 15

15] பொருளியல் – ஓர் அறிமுகம்

**உங்களுக்குத் தெரியுமா?**

"கிராமங்களில் வாரம் அல்லது மாதம் ஒரு முறை பொதுவான ஓர் இடத்தில் குறிப்பிட்ட நேரத்திற்கு மக்களின் தேவைக்கேற்ற குறிப்பிட்ட பொருள்களை ஒருங்கிணைத்து விற்பனை செய்யும் இடம் தான் சந்தை. "

**நுகர்வோர் பொருட்கள்:** அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்ய மக்கள் அங்காடியிலிருந்து வாங்கிப் பயன்படுத்தும் பொருட்கள் நுகர்வோர் பொருட்கள் என்று அழைக்கப்படுகின்றன. (எ. கா): அரிசி, துணிகள், மிதிவண்டிகள் போன்றவை.

சேமிப்பு என்பது கையில் கிடைக்கும் வருமானத்தில் நுகர்வுக்குச் செலவு செய்தது போக எதிர்காலத் தேவைக்காக ஒதுக்கப்படும் ஒரு தொகையாகும்.

அளவறிந்து வாழாதான் வாழ்க்கை யுளபோல

இல்லாகித் தோன்றாக் கெடும் – குறள்: 0479.

**விளக்கம்:** தன் செல்வத்தின் அளவு அறிந்து அதற்கு ஏற்ப வாழாதவனுடைய வாழ்க்கை பல வளங்களும் இருப்பது போலத் தோன்றி உண்மையில் இல்லாதவனாய்ப் பின்பு அப்பொய்த் தோற்றமும் இல்லாமல் அழியும்.

**முதல் நிலைத் தொழில்கள்:** உணவுத் தேவைக்கும் தொழில் உற்பத்திக்கும் தேவையான மூலப்பொருள்களை உற்பத்தி செய்வது முதல் நிலைத் தொழில்கள் எனப்படுகிறது. வேளாண்மை; கால்நடைகள் வளர்த்தல்; மீன் பிடித்தல்; கனிமங்கள், தாதுப்பொருட்கள் போன்ற மூலப்பொருள்கள் சேகரித்தல்; கனிகள், கொட்டைகள், தேன், மூலிகைகள், ரப்பர், பிசின் போன்றவை சேகரித்தல், மரம் வெட்டுதல்.

**இரண்டாம் நிலைத் தொழில்கள்:** முதல் நிலைத் தொழில்கள் மூலம் சேகரிக்கப்படும் மூலப்பொருள்களில் இருந்து இயந்திரங்கள் முதல் அன்றாடத் தேவைக்கான பொருட்கள் வரை பெருமளவில் உற்பத்தி செய்தல் இரண்டாம் நிலை தொழில்கள் என்றும், தொழில் துறை என்றும் அழைக்கப்படுகின்றன. உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருள்கள், மூலதனம், உடமை ஆகியவற்றின் அடிப்படையில் தொழில்கள் வகைப்படுத்தப்படுகின்றன.

**மூலப்பொருள் பயன்பாடு அடிப்படையில் தொழிற்சாலைகளை வகைப்படுத்துதல்:** வேளாண் அடிப்படைத் தொழிற்சாலைகள் – பருத்தி, சர்க்கரை, உணவுபதப்படுத்துதல்; காடு சார்ந்த தொழிற்சாலைகள் – காகிதத் தொழில், மரச்சாமான்கள், கட்டுமானப் பொருள்கள்; கனிமத் தொழிற்சாலைகள் – சிமெண்ட், இரும்பு, அலுமினியம் போன்ற தொழிற்சாலைகள்; கடல்சார் தொழிற்சாலைகள் – கடல் உணவு பதப்படுத்துதல்.

**மூன்றாம் நிலைத் தொழில்கள்:** முன்னர் கூறிய இரண்டு நிலைகளில், குறிப்பாக தொழில் துறையில், பொருட்களை உற்பத்தி செய்வதற்கும் உற்பத்திப் பொருள்களை தேவையான மக்களுக்குக் கொண்டு சேர்ப்பதற்கும் தேவையான சேவைகளை வழங்குவதால் இவை சேவைத் துறை தொழில்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. மக்களின் அன்றாடத் தேவைகளையும் சேவைத் துறை வழங்குகிறது. போக்குவரத்து – சாலை, ரயில், கடல், ஆகாயப் போக்குவரத்துகள்; தொலைத் தொடர்பு – அஞ்சல், தொலைபேசி, தகவல் தொழில்நுட்பம்; வர்த்தகம் – பொருள்களைக் கொள்முதல் செய்தல், விற்பனை செய்தல்; வங்கி – பணப்பரிமாற்றம், வங்கிச் சேவைகள்.

**<u>கோடிட்ட இடங்களை நிரப்புக:</u>**

1. தானியங்களை உற்பத்தி செய்பவர்கள் ____________

2. "தேன் சேகரித்தல்" என்பது ___________ தொழில்.

3. மூலப்பொருட்களைப் பயன்பாட்டுப் பொருட்களாக மாற்றுவது ___________ எனப்படும்.

4. காந்தியடிகளின் கூற்றுப்படி, கிராமங்கள் நம் நாட்டின் ____________

5. தமிழ்நாட்டில் ___________ சதவீத மக்கள் நகரங்களில் வாழ்கின்றனர்.

**<u>பொருத்துக:</u>**

1. கால்நடைகள் வளர்ப்பு – இரண்டாம் நிலைத் தொழில்

2. உணவு பதப்படுத்துதல் – சேவை

3. இரும்பு எஃகுத் தொழிற்சாலை – முதல் நிலைத் தொழில்

4. தொலைபேசி – வேளாண்சார் தொழிற்சாலை

5. பருத்தியாலை – மூன்றாம் நிலைத் தொழில்

**<u>தவறான இணையைக் கண்டறிக:</u>**

1. சிறிய அளவிலான தொழிற்சாலை – பண பரிவர்த்தனை

2. காடு சார்ந்த தொழிற்சாலைகள் – தகவல் தொழில் நுட்பம்

3. சேவைகள் – காகிதத் தொழிற்சாலைகள்

4. வங்கி – கால்நடைகள் வளர்ப்பு

**<u>சரியானவற்றை தேர்வு செய்க:</u>**

1. வேளாண்மை என்பது (முதன்மை/இரண்டாம்) நிலைத் தொழிலாகும்.

2. பொருளாதார நடவடிக்கைகள் (உடைமை/பயன்பாடு) அடிப்படையில் பிரிக்கப்படுகின்றன.

3. சர்க்கரை ஆலை (முதன்மை/இரண்டாம்) நிலைத் தொழிலாகும்.

4. வேளாண்மை சார் தொழிற்சாலை (பருத்தி யாலை/மரச்சாமான்கள்).

5. பால் பண்ணை ஒரு (பொது நிறுவனம்/கூட்டுறவு துறை).

**கோடிட்ட இடங்களை நிரப்புக: (விடைகள்)**

1. விவசாயி 2. முதல் நிலைத் 3. (2 ஆம் நிலை தொழில்) 4. முதுகெலும்பு 5. 47%

**பொருத்துக: (விடைகள்)**

1. கால்நடைகள் வளர்ப்பு – முதல்நிலைத் தொழில்

2. உணவு பதப்படுத்துதல் – மூன்றாம் நிலைத் தொழில்

3. இரும்பு எஃகுத் தொழிற்சாலை – இரண்டாம்நிலைத் தொழில்

4. தொலைபேசி – சேவை

5. பருத்தியாலை – வேளாண்சார் தொழிற்துரை

**பொருந்திய பின் பொருந்தாத இணையைக் கண்டறிக: (விடைகள்)**

1. சிறிய அளவிலான தொழிற்சாலை – கால்நடைகள் வளர்ப்பு

2. காடுசார்ந்த தொழிற்சாலைகள் – காகிதத் தொழிற்சாலை

3. சேவைகள் – தகவல் தொழில்நுட்பம்

4. வங்கி – பண பரிவர்த்தனை

**சரியானவற்றைத் தேர்வு செய்க: (விடைகள்)**

1. முதன்மை 2. பயன்பாடு 3. இரண்டாம் 4. பருத்தி 5. கூட்டுறவு

## 6th Social Science Lesson 16

## 16] பண்டைக்காலத் தமிழகத்தில் சமூகமும் பண்பாடும்: சங்க காலம்

**உங்களுக்குத் தெரியுமா?**

ஆறுமுக நாவலர் (யாழ்ப்பாணம்) தாமோதரம் பிள்ளை (யாழ்ப்பாணம்) உ. வே. சாமிநாத அய்யர் ஆகியோர் அரும்பாடுபட்டு பனையோலைகளில் எழுதப்பட்டிருந்த தமிழ் செவ்வியல் இலக்கியங்களையும் பண்டைக்காலத் தமிழ் நூல்களையும் மீட்டு வெளியிடுவதில் பல ஆண்டுகளைச் செலவிட்டனர்.

**தொல்காப்பியம்:** ஒரு தமிழ் இலக்கண நூலாகும். அது சங்க காலத் தமிழ் மக்களின் மொழி, பண்பாடு ஆகியவற்றின் உயர் தரத்தைச் சுட்டிக்காட்டுகிறது.

கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் தமிழ்மொழிப் பேராசிரியர் ஜார்ஜ் எல் ஹார்ட் என்பவர் தமிழ் மொழியானது இலத்தீன் மொழியின் அளவிற்குப் பழைமையானது எனும் கருத்தைக் கொண்டுள்ளார். ஏனைய மொழிகளின் செல்வாக்கிற்கு உட்படாமல் முற்றிலும் சுதந்திரமான ஒரு மரபாக அது உருபெற்று எழுந்துள்ளது என அவர் கூறுகிறார்.

**கல்லணை:** இது கற்களால் கட்டப்பட்ட தடுப்பணை ஆகும். பாசனத்திற்காகக் கழிமுகப் பகுதி வழியாக நீரைத் திருப்பிவிடுவதற்காக காவிரி ஆற்றின் குறுக்கே இவ்வணை கட்டப்பட்டது. கல்லணை கட்டப்பட்ட போது 69, 000 ஏக்கர் நிலத்திற்கு அது நீர்ப்பாசன வசதியை வழங்கியது.

**முக்கியத்துவம் மிகுந்த சேர அரசர்கள்:** உதயன் சேரலாதன், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், சேரன் செங்குட்டுவன், சேரல் இரும்பொறை.

**முக்கியத்துவம் வாய்ந்த சோழ அரசர்கள்:** இளஞ்சேட்சென்னி, கரிகால் வளவன், கோச்செங்கணான், கிள்ளிவளவன், பெருநற்கிள்ளி.

**முக்கியத்துவம் வாய்ந்த பாண்டிய அரசர்கள்:** நெடியோன், முதுகுடுமிப் பெருவழுதி, நன்மாறன், நெடுஞ்செழியன்.

**சங்க காலப் பெண்பாற்புலவர்கள்:** அவ்வையார், வெள்ளிவீதியார், காக்கைப் பாடினியார், ஆதி மந்தியார், பொன்முடியார்.

**வீரக்கல்/நடுகல்:** பண்டைக்காலத் தமிழர்கள் போர்க்களத்தில் மரணமுற்ற வீரர்கள் மேல் பெரும் மரியாதை கொண்டிருந்தனர். போரில் மரணமடைந்த வீரனின் நினைவைப் போற்றுவதற்காக நடுகற்கள் நடப்பட்டன.

**மலபார் கருமிளகு:** எகிப்து அரசன் இரண்டாம் ராம் செஸின் பதப்படுத்தப்பட்ட உடல் திறக்கப்பட்ட போது, தொல்லியல் அறிஞர்கள் அவருடைய நாசியினுள்ளும் அடிவயிற்றிலும் கருமிளகுக் கதிர் அடைக்கப்பட்டிருந்ததைக் கண்டனர். (இவ்வாறு பதப்படுத்தி உடலைப் பாதுகாப்பது பண்டைய நாட்களில் பின்பற்றப்பட்ட முறையாகும்)

இந்திய வணகர்களால் ரோமப் பேரரசுக்கு விநியோகம் செய்யப்பட்ட பட்டு மிக முக்கியமானதாகக் கருதப்பட்டது. ரோமப்பேரரசர் ஆரிலியன் அந்தபட்டு, எடைக்கு எடை தங்கம் கொடுத்துப் பெற தகுதியானது என அறிவித்தார்.

**முசிறி – முதல் பேரங்காடி:** ரோம் நாட்டைச் சேர்ந்த மூத்த பிளினி தன்னுடைய இயற்கை வரலாறு (Natural History) எனும் நூலில் முசிறியை "இந்தியாவின் முதல் பேரங்காடி" எனக் குறிப்பிட்டுள்ளார் ரோமானியரின் குடியிருப்பு இருந்த முசிறியில் அகஸ்டஸ் கடவுளுக்காகக் கோவிலொன்று கட்டப்பட்டிருந்தது. கி. மு. (பொ. ஆ. மு) இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த பாப்பிரஸ் இலையில் எழுதப்பட்ட ஒரு ஒப்பந்தப் பத்திரத்தில் (வியன்னாவிலுள்ள அருங்காட்சியகத்தில் உள்ளது) அலெக்ஸாண்டிரியாவைச் சேர்ந்த வணிகர் ஒருவருக்கும் முசிறியைச் சேர்ந்த ஒரு வணிகருக்குமிடையே மேற்கொள்ளப்பட்ட வணிக ஒப்பந்தம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. தமிழகத்தின் பத்தினி வழிபாட்டை அறிமுகம் செய்தவர் ____________

(அ) பாண்டியன் நெடுஞ்செழியன்

(ஆ) சேரன் செங்குட்டுவன்

(இ) இளங்கோ அடிகள்

(ஈ) முடத்திருமாறன்

2. கீழ்க்காணும் அரச வம்சங்களில் எது சங்க காலத்தில் ஆட்சி அதிகாரத்தில் இல்லை?

(அ) பாண்டியர்

(ஆ) சோழர்

(இ) பல்லவர்

(ஈ) சேரர்

3. பாண்டியர் ஆட்சிக்குப் பின் ஆட்சிக்கு வந்தோர் __________ ஆவர்.

(அ) சாதவாகனர்கள்

(ஆ) சோழர்கள்

(இ) களப்பிரர்கள்

(ஈ) பல்லவர்கள்

4. சங்க கால நிர்வாக முறையில் மிகச் சிறிய நிர்வாக அமைப்பு ____________

(அ) மண்டலம்

(ஆ) நாடு

(இ) ஊர்

(ஈ) பட்டினம்

5. குறிஞ்சி நிலப்பகுதியில் வாழ்ந்த மக்களின் தொழில் யாது?

(அ) கொள்ளையடித்தல்

(ஆ) ஆநிரை மேய்த்தல்

(இ) வேட்டையாடுதல் மற்றும் சேகரித்தல்

(ஈ) வேளாண்மை

<u>**பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**</u>

1. கூற்று: புலவர்களின் குழுமம் சங்கம் என அறியப்பட்டது.

காரணம்: சங்க இலக்கியங்களின் மொழி தமிழாகும்.

(அ) கூற்றும் காரணமும் சரி. காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் ஆகும்.

(ஆ) கூற்றும் காரணமும் சரி. காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.

(இ) கூற்று சரி காரணம் தவறு

(ஈ) கூற்றும் காரணமும் தவறானவை

2. கீழ்காணும் கூற்றுகளில் எவை உண்மையானவை அல்ல?

1. கரிகாலன் தலையாலங்கானம் போரில் வெற்றிபெற்றான்.

2. பதிற்றுப்பத்து சேர அரசர்கள் பற்றிய விவரங்களை வழங்குகின்றன.

winmeen.com

3. சங்க காலத்தைச் சேர்ந்த பழைமையான இலக்கியங்கள் பெரும்பாலும் உரைநடையில் எழுதப்பட்டன.

(அ) 1 மட்டும்

(ஆ) 1 மற்றும் 3 மட்டும்

(இ) 2 மட்டும்

3. பண்டைக்காலத் தமிழகத்தின் நிர்வாகப் பிரிவுகள் ஏறுவரிசையில் இவ்வாறு அமைந்திருந்தது.

(அ) ஊர் < நாடு < கூற்றம் < மண்டலம்

(ஆ) ஊர் < கூற்றம் < நாடு < மண்டலம்

(இ) ஊர் < மண்டலம் < கூற்றம் < நாடு

(ஈ) நாடு < கூற்றம் < மண்டலம் < ஊர்

4. அரசவம்சங்களையும் அரச முத்திரைகளையும் பொருத்துக:

அ. சேரர் – 1. மீன்

ஆ. சோழர் – 2. புலி

இ. பாண்டியர் – 3. வில், அம்பு

(அ) 3, 2, 1

(ஆ) 1, 2, 3

(இ) 3, 1, 2

(ஈ) 2, 1, 3

**<u>கோடிட்ட இடங்களை நிரப்புக:</u>**

1. வெண்ணி போரில் வெற்றி பெற்றது ____________

2. சங்க காலத்து மிகப்பழமையான தமிழ் இலக்கண நூல் ____________

3. காவிரியாற்றின் குறுக்கே கல்லணையை ____________ கட்டினார்.

4. படைத் தலைவர் ____________ என அழைக்கப்பட்டார்.

5. நில வரி ____________ என அழைக்கப்பட்டது.

**<u>சரியா அல்லது தவறா எனக் குறிப்பிடுக:</u>**

1. சங்க காலத்தில் பாடல்களைப் பாடுவோர் இருளர் என அழைக்கப்பட்டனர்.

2. சாதிமுறை சங்க காலத்தில் வளர்ச்சி பெற்றது.

3. கிழார் என்பவர் கிராமத்தின் தலைவர் ஆவார்.

4. புகார் என்பது நகரங்களின் பொதுவான பெயர் ஆகும்.

5. கடற்கரைப் பகுதிகள் மருதம் என அழைக்கப்பட்டன.

winmeen.com

**பொருத்துக:**

அ. தென்னர் – சேரர்

ஆ. வானவர் – சோழர்

இ. சென்னி – வேளிர்

ஈ. அதியமான் – பாண்டியர்

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: (விடைகள்)**

1. சேரன் செங்குட்டுவன் 2. பல்லவர் 3. களப்பிரர்கள் 4. ஊர்

5. வேட்டையாடுதல் மற்றும் சேகரித்தல்

**பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றைத் தேர்வு செய்க: (விடைகள்)**

1. கூற்றும் காரணமும் சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் ஆகும்.

2. '1 மற்றும் 3' மட்டும்

3. ஊர் கூற்றம் நாடு மண்டலம்

4. (3, 2, 1)

**கோடிட்ட இடங்களை நிரப்புக: (விடைகள்)**

1. கரிகாலச் சோழன் 2. தொல்காப்பியம்

3. கரிகாலச் சோழன் 4. தானைத் தலைவன்

5. இறை

**சரியா அல்லது தவறா எனக் குறிப்பிடுக: (விடைகள்)**

1. தவறு

**சரியான விடை:** சங்க காலத்தில் பாடல்களைப் பாடுவோர் புலவர் என அழைக்கப்பட்டனர்.

2. தவறு

**சரியான விடை:** சங்க காலத்தில் சாதி முறை வளர்ச்சி பெறவில்லை.

3. சரி

4. தவறு

**சரியான விடை:** புகார் என்பது துறைமுகங்களின் பொதுவான பெயர் ஆகும்.

5. தவறு

**சரியான விடை:** கடற்கரைப் பகுதிகள் நெய்தல் என அழைக்கப்பட்டன.

**பொருத்துக: (விடைகள்)**

1. தென்னவர் – பாண்டியர்



winmeen.com

2. வானவர் – சேரர்

3. சென்னி – சோழர்

4. அதியமான் – வேளிர்

6th Social Science Lesson 17

17] இந்தியா – மௌரியருக்குப் பின்னர்

**உங்களுக்குத் தெரியுமா?**

பார்குத், சாஞ்சி ஆகிய இடங்களிலுள்ள பௌத்த ஸ்தூபிகளில் காணப்படுவது போல ஸ்தூபிகளின் சுற்றுச் சுவர்களிலும் வாயில்களிலும் கற்களுக்குப் பதிலாக மரத்தைப் பயன்படுத்தும் முறை சுங்கர் காலத்தில் நடைமுறைக்கு வந்தது.

சமஸ்கிருத மொழியின் இரண்டாவது இலக்கண அறிஞரான பதஞ்சலியைப் புஷ்யமித்திரர் ஆதரித்தார்.

கலிங்க அரசர் காரவேலர் சுங்க அரசர்களின் சமகாலத்தவர் ஆவார். காரவேலர் பற்றிய செய்திகளை நாம் ஹதிகும்பா கல்வெட்டிலிருந்து பெறுகிறோம்.

உலகப் புகழ்பெற்ற புத்தரின் ஆளுயரச் சிற்பங்கள் பாமியான் பள்ளத்தாக்கிலுள்ள மலைகளில் செதுக்கப்பட்டுள்ளன. இம்மலைகள் பண்டைய இந்தியாவின் வடமேற்கு எல்லைப்புறத்தில் அமைந்திருந்தது. (தற்போது இப்பகுதி ஆப்கானிஸ்தானின் மையத்தில் உள்ளது. அண்மையில் இவற்றைத் தாலிபான்கள் உடைத்து நொறுக்கினர்). இச்சிற்பங்கள் மௌரியர் காலத்துக்கு பின்னரான காந்தாரக் கலைப்பள்ளியைச் சேர்ந்த அர்ப்பணிப்பு மிக்க கலைஞர்களால் திடமான பாறைகளில் செதுக்கப்பட்டவை ஆகும்.

**இந்தோ–கிரேக்க அரசர்கள்:** முதலாம் டெமிட்ரியஸ் – இவர் கிரேக்கோ–பாக்டீரிய அரசர் யுதி டெமஸ் என்பாரின் மகனாவார். இவர் கி. மு (பொ. ஆ. மு) 294 முதல் 288 வரை மாசிடோனியாவின் மன்னராக இருந்தார். டெமிட்ரியஸ் சதுர வடிவிலான இரு மொழி வாசகங்களைக் கொண்ட நாணயங்களை வெளியிட்டார் என்பதை நாணயச் சான்றுகள் உறுதி செய்கின்றன. நாணயத்தின் தலைப் பகுதியில் கிரேக்க மொழியும் பூப்பகுதியில் கரோஷ்தி மொழியும் இடம் பெற்றுள்ளன. டெமிட்ரியஸ் எனும் பெயரில் மூவர் இருந்துள்ளனர். எனவே, இம்மூவருள் யார் கி. மு. (பொ. ஆ. மு) இரண்டாம் நூற்றாண்டில் தொடங்கும் யவன சகாப்தத்தைத் தொடங்கி வைத்தவர் என்பதை வரலாற்று அறிஞர்களால் முடிவு செய்ய முடியவில்லை.

**மினான்டர்:** இவர் நன்கறியப்பட்ட இந்தோ–கிரேக்க அரசர்களில் ஒருவராவார். வடமேற்குப் பகுதியில் பெரியதொரு அரசை இவர் ஆண்டதாகக் கூறப்படுகிறது. இவர் வெளியிட்ட நாணயங்கள் பரந்து விரிந்த பகுதியில் கிடைக்கின்றன. காபூல் பள்ளத்தாக்கில் தொடங்கி சிந்து நதி கடந்து மேற்கு உத்தரப் பிரதேசம் வரையிலான பகுதிகளில் கிடைத்தன. மிலிந்த பன்கா எனும் நூல் ஒன்று உள்ளது. பாக்டீரிய அரசன் மிலிந்தா என்பவருக்கும் பௌத்த அறிஞர் நாகசேனாவுக்கும் இடையே நடைபெற்ற உரையாடலே அந்நூலாகும். இந்த மிலிந்தாவே மினான்டர் என அடையாளப்படுத்தப்படுகிறது. மினான்டர் பௌத்தராக மாறி பௌத்தத்தின் வளர்ச்சிக்கு பணியாற்றியதாகக் கருதப்படுகிறது.

**இந்தோ–பார்த்திய (பகலவர்) அரசர்கள்:** இந்தோ–கிரேக்கர், இந்தோ–சித்தியர் ஆகியோருக்குப் பின்னர் இந்தே–பார்த்தியர் வந்தனர். அதனைத் தொடர்ந்து இவர்கள் கி. பி. முதலாம் நூற்றாண்டின் பிற்பாதியில் குஷாணர்களால் தோற்கடிக்கப்பட்டனர். இந்தோ–பார்த்திய அரசு அல்லது கோன்டோபரித் வம்சம் கோண்டோ பெர்னஸால் நிறுவப்பட்டது. இந்தோ–பார்த்தியர் ஆட்சி செய்த பகுதி காபூல், காந்தாரா ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். கோண்டோ பெர்னெஸ் எனும் பெயர் கிறித்துவ உபதேசியார் புனித தாமஸிடன் தொடர்புடையதாகும். கிறித்துவ மரபின்படி புனித தாமஸ், கோண்டோ பெர்னெஸின் அரசவைக்கு வந்து கிறித்துவத்திற்கு அவரை மதம் மாற்றினார்.

**அரசர்களின் பங்களிப்பு:** முதலாம் கட்பிசஸ் – குஷாணர்களில் மிகவும் புகழ்பெற்ற முதல் அரசியல் மற்றும் இராணுவத் தளபதி இவரேயாவார். அவர் இந்தோ–கிரேக்க, இந்தோ–பார்த்திய அரசர்களை வெற்றிகொண்டு பாக்டீரியாவில் இறையாண்மையுடன் கூடிய அரசராக தன்னை நிலைநிறுத்தினார். தன்னுடைய ஆதிக்கத்தை முதலில் காபூல், காந்தார தேசம் தொடங்கி, பின்னர் சிந்து வரையிலும் பரப்பினார்.

**இரண்டாம் கட்பிசஸ்:** இவர் சீன, ரோமானிய அரசர்களுடன் நட்புறவை மேற்கொண்டார். அயல்நாட்டு வர்த்தகத்தை ஊக்குவித்தார். அவருடைய நாணங்கள் சிலவற்றில் சிவ பெருமானின் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அரசருடைய பட்டப்பெயர்கள் கரோஷ்தி மொழியில் பொறிக்கப்பட்டுள்ளன.

அஸ்வகோஷர் "புத்தசரிதம்" என்னும் முதல் சமஸ்கிருத நாடகத்தின் போற்றப்படும் ஆசிரியர் ஆவார்.

**உலகம் அந்நாளில்:** குஷாணப் பேரரசு ஜீலியஸ் சீசர் வாழ்ந்த ரோமனியக் குடியரசின் இறுதி நாட்களின் சமகாலத்தியதாகும். குஷாணப் பேரரசர் அகஸ்டஸ் சீசரின் அவைக்கு ஒரு பெரும் தூதுக் குழுவை அனுப்பியதாகக் கூறப்படுகிறது.

**<u>சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:</u>**

1. கடைசி மௌரிய அரசரைக் கொன்றவர் ____________

(அ) புஷ்யமித்ரர்

(ஆ) அக்னிமித்ரர்

(இ) வாசுதேவர்

(ஈ) நாராயணர்

2. சாதவாகன அரச வம்சத்தை தோற்றுவித்தவர் ____________

(அ) சிமுகா

(ஆ) சதகர்ணி

(இ) கன்கர்

(ஈ) சிவாஸ்வதி

3. குஷாணப் பேரரசர்கள் அனைவரிலும் தலை சிறந்தவர் ___________

(அ) கனிஷ்கர்

(ஆ) முதலாம் கட்சிசஸ்

(இ) இரண்டாம் கட்பிசஸ்

(ஈ) பன்–சியாங்

4. கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் ____________ பகுதியில் கண்டரா சமஸ்கிருதப்பள்ளி தழைத்தோங்கியது.

(அ) தக்காணம்

(ஆ) வடமேற்கு இந்தியா

(இ) பஞ்சாப்

(ஈ) கங்கைப் பள்ளத்தாக்கு சமவெளி

5. சாகர்கள் ____________ நகரத்தைத் தலைநகராகக் கொண்டு காந்தாரப் பகுதியை ஆட்சி செய்தனர்.

(அ) சிர்கப்

(ஆ) தட்சசீலம்

(இ) மதுரா

(ஈ) புருஷபுரம்

**<u>பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:</u>**

1. கூற்று: இந்தோ–கிரேக்கர்களின், இந்தோ–பார்த்தியர்களின் குடியேற்றங்கள் இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் நிறுவப்பட்டன.

காரணம்: குடியேறிய பாக்டீரியர்களும் பார்த்தியர்களும் படிப்படியாக உள்ளூர் மக்களுடன் திருமண உறவு கொண்டு இரண்டறக் கலந்தனர்.

(அ) கூற்றும் காரணமும் சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் ஆகும்.

(ஆ) கூற்றும் காரணமும் சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் அல்ல.

(இ) கூற்று சரி, ஆனால் காரணம் தவறு

(ஈ) கூற்று தவறு, ஆனால் காரணம் சரி

2. கூற்று 1: இந்தோ–கிரேக்க ஆட்சியாளர்கள் அச்சு முறையை அறிமுகம் செய்து சின்னங்களும், உருவங்களும், பெயர்களும் பொறிக்கப்பட்ட நாணயங்களை வெளியிட்டனர்.

கூற்று 2: இந்தோ–கிரேக்கர்களின் ஆட்சியைக் குஷாணர் முடித்து வைத்தனர்.

(அ) கூற்று 1 தவறு, ஆனால் கூற்று 2 சரி

(ஆ) கூற்று 2 தவறு, ஆனால் கூற்று 1 சரி

(இ) இரண்டு கூற்றுகளுமே சரி

(ஈ) இரண்டு கூற்றுகளுமே தவறு

3. தவறான இணையைக் கண்டறிக:

புஷ்யமித்ரர், வாசுதேவர், சிமுகா, கனிஷ்கர்.

4. ஒரு வார்த்தையில் பதில் எழுதவும்:

(i) கடைசி சுங்க அரசர் யார்?

(ii) சாகர்களில் மிக முக்கியமான, புகழ் பெற்ற அரசர் யார்?

(iii) மகதத்தில் கன்வ வம்சத்தை நிறுவியர் யார்?

(iv) கோண்டோ பெர்னஸைக் கிறித்துவ மதத்திற்கு மாற்றியவர் யார்?

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. இந்தோ–பார்த்திய அரசை நிறுவியவர் ____________

2. தெற்கே ____________ இறப்பிற்குப் பின்னர் சாதவாகனர் சுதந்திர அரசர்களாயினர்.

3. ஹாலா எழுதிய, நூலின் பெயர் ____________

4. ___________ கன்வ வம்சத்தின் கடைசி அரசராவார்.

5. குஷாணர்களின் பிந்தைய தலைநகரம் _____________ ஆகும்.

**சரியா அல்லது தவறா எனக் குறிப்பிடுக:**

1. மௌரியப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னரும் மகதம் தொடர்ந்து ஒரு பௌத்த பண்பாட்டு மையமாகத் திகழ்ந்தது.

2. காரவேலரைப் பற்றி அதிகமான செய்திகளை நாம் ஹதிகும்பா கல்வெட்டிலிருந்து பெறுகிறோம்.

3. குந்தல சதகர்ணி, சாதவாகன வம்சத்தின், பத்தாவது அரசராவார்.

4. "புத்த சரிதம்" அஸ்வகோஷரால் எழுதப்பட்டது.

**பொருத்துக:**

அ. பதஞ்சலி – 1. கலிங்கம்

ஆ. அக்னிமித்ரர் – 2. இந்தோ–கிரேக்கர்

இ. அரசர் காரவேலர் – 3. இந்தோ–பார்த்தியர்

ஈ. டெமிட்ரியஸ் – 4. இரண்டாம் சமஸ்கிருத இலக்கண ஆசிரியர்

உ. கோண்டோ பெர்னெஸ் – 5. மாளவிகாக்னிமித்ரம்

(அ) 4, 3, 2, 1, 5

(ஆ) 3, 4, 5, 1, 2

(இ) 1, 5, 3, 4, 2

(ஈ) 2, 5, 3, 1, 4

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: (விடைகள்)**

1. புஷ்யமித்ரர் 2. சிமுகா 3. கனிஷ்கர் 4. தக்காணம் 5. சிர்கப்

**பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றைத் தேர்வு செய்க: (விடைகள்)**

1. கூற்றும் காரணமும் சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் ஆகும்.

2. கூற்று '2' தவறு, ஆனால் கூற்று '1' சரி

3. கனிஷ்கர்

4. (i) தேவபூதி (ii) ருத்ரதாமன் (iii) வாசுதேவர் (iv) புனித தாமஸ்

**கோடிட்ட இடங்களை நிரப்புக: (விடைகள்)**

1. கோண்டோ பெர்னஸ் 2. அசோகர் 3. சட்டசாய்

4. சுசர்மன் 5. பெஷாவர் புருஷபுரம்

**சரியா அல்லது தவறா எனக் குறிப்பிடுக: (விடைகள்)**

1. சரி

2. சரி

3. தவறு

**சரியான விடை:** குந்தல சதகர்ணி, சாதவாகன வம்சத்தில் பத்து ஆண்டுகள் ஆட்சிபுரிந்தவர் ஆவார்.

4. சரி

**பொருத்துக: (விடைகள்)**

1. பதஞ்சலி – இந்தோ–பார்த்தியர்

2. அக்னிமித்ரர் – இரண்டாம் சமஸ்கிருத இலக்கண ஆசிரியர்

3. அரசர் காரவேலர் – மாளவிகாக்னிமித்ரம்

4. டெமிட்ரியஸ் – கலிங்கம்

5. கோண்டோ பெர்னெஸ் – இந்தோ–கிரேக்கர்

6th Social Science Lesson 18

**18] பேரரசுகளின் காலம்: குப்தர், வர்த்தனர்**

**<u>உங்களுக்குத் தெரியுமா?</u>**

லிச்சாவி பழமையான கன சங்கங்களில் ஒன்றாகும். அதனுடைய ஆட்சிப் பகுதி கங்கை நதிக்கும் நேபாள நாட்டிற்கும் இடைப்பட்டதாக இருந்தது.

**பிரசஸ்தி/மெய்க்கீர்த்தி:** பிரசஸ்தி என்பது ஒரு சமஸ்கிருதச் சொல். அதன் பொருள் ஒருவரைப் பாராட்டிப் "புகழ்வதாகும்". அவைக்களப் புலவர்கள் அரசர்களைப் புகழ்ந்து பாடி அவர் தம் சாதனைகளைப் பட்டியலிட்டனர். இவை பின்னர் மக்கள் படித்துத் தெரிந்து கொள்வதற்காகத் தூண்களில் பொறிக்கப்பட்டன.

சமுத்திரகுப்தர் ஒரு விஷ்ணு பக்தராவார். போர்களில் வெற்றி பெற்றதன் நினைவாக நடத்தப்படும் வேதகாலச் சடங்கான குதிரைகளைப் பலியிடும் வேள்வியைச் சமுத்திர குப்தர் மீண்டும் நடைமுறைப்படுத்தினார். அவர் தங்க நாணயங்களை வெளியிட்டார். அவற்றுள் ஒன்றில் அவர் வீணை

வாசிப்பது போன்ற உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. அவர் மிகச் சிறந்த படையெடுப்பாளர் மட்டுமல்ல; கவிதைப் பிரியரும் இசைப் பிரியருமாவார். அதனால் "கவிராஜா" எனும் பட்டம் பெற்றார்.

இலங்கையைச் சேர்ந்த ஸ்ரீ மேகவர்மன் எனும் பௌத்த அரசன் சமுத்திர குப்தரின் சமகாலத்தவராவார்.

**இரண்டாம் சந்திரகுப்தரின் பட்டப் பெயர்கள்:** விக்கிரமாதித்தியர், நரேந்திர சந்திரர், சிம்ம சந்திரர், நரேந்திர சிம்மர், விக்கிரம தேவராஜர், தேவ குப்தர், தேவஸ்ரீ.

**பாகியான்:** இரண்டாம் சந்திர குப்தரின் ஆட்சிக் காலத்தில், சீனாவைச் சேர்ந்த பௌத்தத் துறவி பாகியான் இந்தியாவிற்கு வந்தார். அவருடைய பயணக் குறிப்புகள் குப்தர் காலத்து மக்களின் சமூக–பொருளாதார, மத, ஒழுக்க நிலைகள் பற்றிய செய்திகளை நமக்கு வழங்குகின்றன. பாகியான் கூற்றுப்படி மகதத்து மக்கள் மகிழ்ச்சியோடும் செழிப்போடும் வாழ்ந்தனர். கடுமையான தண்டனையின்றி நீதி வழங்கப்பட்டது. மரண தண்டனை வழங்கப்படவில்லை. கயா பாழடைந்திருந்தது. கபிலவஸ்து காடாகியிருந்தது. ஆனால் பாடலிபுத்திரத்தில் மக்கள் செல்வத்தோடும் செழிப்போடும் வாழ்ந்தனர்.

**நாளந்தா பல்கலைக்கழகம்:** நாளந்தா பல்கலைக்கழகம் ஐந்தாம் மற்றும் ஆறாம் நூற்றாண்டுகளில் குப்தப் பேரரசின் ஆதரவில் தழைத்தோங்கியது. பின்னர் கன்னோசியைச் சேர்ந்த பேரரசர் ஹர்ஷரின் ஆதரவில் சிறப்புற்றது. நாளந்தாவில் பௌத்தத் தத்துவமே முக்கியப் பாடப்பிரிவாக இருந்தது. யோகா, வேத இலக்கியங்கள், மருத்துவம் ஆகியவையும் கற்பிக்கப்பட்டன. அப்பல்கலைக்கழகத்தில் யுவான்–சுவாங் பௌத்த தத்துவத்தைப் பற்றிப் படிப்பதில் பல ஆண்டுகள் செலவழித்தார். அந்த வளாகத்தில் எட்டு மகாபாடசாலைகளும் மூன்று மிகப்பெரிய நூலகங்களும் இருந்தன. நாளந்தா பல்கலைக்கழகம் பக்தியார் கில்ஜி என்பாரின் தலைமையில் வந்த மம்லுக்குகள் என அழைக்கப்பட்ட துருக்கிய இஸ்லாமிய அடிமை வீரர்களால் அழித்துத் தரைமட்டம் ஆக்கப்பட்டது. நாளந்தா யுனெஸ்கோவின் உலகப்பாரம்பரியச் சின்னமாகும்.

**ஹீணர்கள் என்போர் யாவர்?** ஹீணர்கள் என்போர் நாடோடிப் பழங்குடியினராவர். தங்கள் மாபெரும் தலைவர் அட்டில்லாவின் தலைமையில் இவர்கள் ரோமாபுரியையும் கான்ஸ்டாண்டி நோபிளையும் பேரச்சத்திற்கு உள்ளாக்கினர். இவர்களோடு தொடர்புடைய வெள்ளை ஹீணர்கள் மத்திய ஆசியா வழியாக இந்தியா வந்தனர். தங்கள் தொடர் படையெடுப்புகளின் மூலமாக எல்லையோர நாடுகளுக்குத் தொந்தரவு கொடுத்து வந்தனர். ஸ்கந்த குப்தரைத் தோற்கடித்த பின்னர் இவர்கள் மத்திய இந்தியப் பகுதிகளில் பரவினர். அவர்களின் தலைவரான தோரமானர் தனக்குத் தானே அரசராக முடி சூட்டிக் கொண்டார். அவருக்குப் பின்னர் அவரது மகன் மிகிரகுலர் ஆட்சி செய்தார். முடிவில், மத்திய இந்தியாவில் மாளவத்தை ஆட்சி செய்து வந்த யசோதர்மன் அவர்களைத் தோற்கடித்து அவர்களின் ஆட்சிக்கு முடிவு கட்டினார்.

**குப்தர்களால் பயன்படுத்தப்பட்ட உலோகங்கள்:** இரும்பு, தங்கம், தாமிரம், தகரம், ஈயம், பித்தளை, செம்பு, மணி வெண்கலம், மைக்கா, மாங்கனீசு, சிகப்புச் சுண்ணம் ஆகியவையாகும்.

குப்தர்களின் நாணய அமைப்பு முறையை அறிமுகப்படுத்தியவர் சமுத்திர குப்தர் ஆவார். குஷாணர்களின் நாணயங்கள் சமுத்திர குப்தருக்கு உந்துதலை வழங்கின. குப்தர்களின் பொற்காசுகள் தினாரா என்றழைக்கப்பட்டன. குப்தர்கள் வெளியிட்ட பொற்காசுகளை விட வெள்ளி, செப்புக் காசுகள் குறைவாகவே வெளியிடப்பட்டன. குப்தர்களுக்கு அடுத்து வந்த காலத்தில் பொற்காசுகளின் சுழற்சியில் வீழ்ச்சி ஏற்பட்டது. அது பேரரசினுடைய வளங்களின் வீழ்ச்சியைச் சுட்டிக் காட்டுவதாய் உள்ளது.

ஹர்ஷர் சீனப்பயணி யுவான் சுவாங்கை முதன்முதலாக ராஜ்மகாலுக்கு (ஜார்கண்ட்) அருகேயுள்ள கஜன்கலா என்ற இடத்தில் சந்தித்தார்.

"புனித யாத்ரீகர்களின் இளவரசன்" என்றழைக்கப்படும் யுவான் சுவாங், ஹர்ஷரின் ஆட்சியின் போது இந்தியாவுக்கு வந்தார். சி–யூ–கி எனும் அவரது பயணக் குறிப்புகள் அடங்கிய ஆவணங்களின் தொகுப்பு, ஹர்ஷர் காலத்து இந்தியாவின் சமூக பொருளாதார, மத, பண்பாட்டு நிலைகள் குறித்து விரிவான செய்திகளை வழங்குகிறது. ஹர்ஷர் ஒரு பௌத்தராக இருந்த போதும், பிரயாகையில் நடைபெற்ற மாபெரும் கும்பமேளா விழாவில் கலந்து கொள்ளச் சென்றார் என்று யுவான் சுவாங் குறிப்பிட்டுள்ளார்.

கன்னோசி பௌத்தப் பேரவையில் 20 அரசர்கள் பங்கேற்றனர். பெரும் எண்ணிக்கையில் பௌத்த, சமண, வேத அறிஞர்கள் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர். பௌத்த மடாலயம் ஒன்றில் புத்தரின் தங்கச் சிலையொன்று நிறுவப்பட்டது. புத்தரது மூன்றடி உயரம் கொண்ட வேறொரு சிலை ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. பிரயாகைப் பேரவையில் ஹர்ஷர் தனது செல்வங்களைப் பௌத்தத் துறவிகளுக்கும் வேத வித்தகர்களுக்கும் ஏழைகளுக்கும் கொடையாக விநியோகித்தார். நான்கு நாட்கள் நடைபெற்ற அந்த நிகழ்வில் அனைத்து நாட்களிலும் அவர் பௌத்தத் துறவிகளுக்கு, அளவிட முடியாத பரிசுகளை அள்ளிக் கொடுத்தார்.

**உலகம் அந்நாளில்:** முதலாம் சந்திர குப்தர், கான்ஸ்டாண்டி நோபிள் நகரை உருவாக்கிய ரோமானியப் பேரரசர் மகா கான்ஸ்டன்டைனின் சமகாலத்தவர் ஆவார். ஹர்ஷரின் காலப்பகுதி சீனாவின் தாங் அரச வம்சத்தின் தொடக்க காலப் பகுதியோடு இணைந்து செல்கிறது. சீனர்களின் தலைநகரான சியான் (Xi–an) மாபெரும் கலை மற்றும் கல்விக்கான மையமாகத் திகழ்ந்தது.

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. குப்த வம்சத்தை நிறுவியவர் ___________ ஆவார்.

(அ) முதலாம் சந்திர குப்தர்

(ஆ) ஸ்ரீ குப்தர்

(இ) விஷ்ணு கோபர்

(ஈ) விஷ்ணு குப்தர்

2. பிரயாகை மெய்கீர்த்தியை இயற்றியவர் ____________ ஆவார்.

(அ) காளிதாசர்

(ஆ) அமர சிம்மர்

(இ) ஹரிசேனர்

(ஈ) தன்வந்திரி

3. சந்திர குப்தரால் நிறுவப்பட்ட ஒற்றை இரும்புத் தூண் _____________ என்ற இடத்தில் உள்ளது.

(அ) மெக்ராலி

(ஆ) பிதாரி

(இ) கத்வா

(ஈ) மதுரா

4. அறுவைச் சிகிச்சைச் செயல்முறை குறித்து விளக்கிய முதல் இந்தியர் _____________

(அ) சரகர்

(ஆ) சுஸ்ருதர்

(இ) தன்வந்திரி

(ஈ) அக்னிவாசர்

5. வங்காளத்தின் கௌட அரசர் _____________

(அ) சசாங்கர்

(ஆ) மைத்திரகர்

(இ) ராஜவர்த்தனர்

(ஈ) இரண்டாம் புலிகேசி

**பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. கூற்று: வட இந்தியாவில் பல சிறிய நாடுகளைக் கைப்பற்றிய பின்னர், முதலாம் சந்திர குப்தர் ஒரு பெரிய நாட்டின் முடியரசராகத் தனக்குத் தானே முடி சூட்டிக் கொண்டார்.

காரணம்: முதலாம் சந்திர குப்தர் லிச்சாவி குடும்பத்தைச் சேர்ந்த குமார தேவியை மணமுடித்தார்.

(அ) காரணமும் கூற்றும் சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே

(ஆ) காரணமும் கூற்றும் சரி, ஆனால் காரணம்

(ஆ) காரணமும் கூற்றும் சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல

(இ) கூற்று சரி, ஆனால் காரணம் தவறு

(ஈ) கூற்று தவறு, ஆனால் காரணம் சரி

2. கூற்று 1: தென்னிந்திய அரசர்களோடு இரண்டாம் சந்திர குப்தர் சுமுகமான உறவைக் கொண்டிருக்கவில்லை.

கூற்று 2: குப்தர்கள் தெய்வீக உரிமைக் கோட்பாட்டினைப் பின்பற்றினர்.

(அ) முதலாம் கூற்று தவறு, ஆனால் இரண்டாம் கூற்று சரி

(ஆ) இரண்டாம் கூற்று தவறு, ஆனால் முதல் கூற்று சரி

(இ) இரண்டு கூற்றுகளும் சரி

(ஈ) இரண்டு கூற்றுகளும் தவறு

3. கீழ்க்காண்பனவற்றில் கால வரிசைப்படி அமைந்துள்ளது எது?

(அ) ஸ்ரீகுப்தர் – முதலாம் சந்திர குப்தர் – சமுத்திர குப்தர் – விக்கிரமாதித்யர்

(ஆ) முதலாம் சந்திர குப்தர் – விக்கிரமாதித்யர் – ஸ்ரீ குப்தர் – சமுத்திர குப்தர்

(இ) ஸ்ரீ குப்தர் – சமுத்திர குப்தர் – விக்கிரமாதித்யர் – முதலாம் சந்திர குப்தர்

(ஈ) விக்கிரமாதித்யர் – ஸ்ரீகுப்தர் – சமுத்திர குப்தர் – முதலாம் சந்திரகுப்தர்

4. கீழ்க்காணும் கூற்றுகளைச் சிந்திக்கவும். அவற்றில் எது/எவை சரியானது/சரியானவை என்பதைக் கண்டறியவும்.

1. அதிக வட்டிக்குப் பணத்தைக் கடன் வழங்கும் முறை பழக்கத்தில் இருந்தது.

2. மட்பாண்டம் செய்தலும் சுரங்கம் தோண்டுவதும் செழித்தோங்கிய தொழில்களாக இருந்தன.

(அ) 1 மட்டும் சரி

(ஆ) 2 மட்டும் சரி

(இ) 1 மற்றும் 2 ஆகிய இரண்டுமே சரி

(ஈ) 1 மற்றும் 2 ஆகிய இரண்டுமே தவறு

5. பொருந்தாததை வட்டமிடுக:

1. காளிதாசர், ஹரிசேனர், சமுத்திரகுப்தர், சரகர்.

2. ரத்னாவளி, ஹர்சசரிதா, நாகநந்தா, பிரியதர்சிகா.

**<u>கோடிட்ட இடங்களை நிரப்புக:</u>**

1. இலங்கை அரசர் _____________ சமுத்திர குப்தரின் சமகாலத்தவர் ஆவார்.

2. இரண்டாம் சந்திர குப்தரின் ஆட்சியின் போது சீனாவைச் சேர்ந்த பௌத்தத் துறவி _____________ இந்தியாவிற்கு வந்தார்.

3. _____________ படையெடுப்பு குப்தர்களின் வீழ்ச்சிக்கு வழிகோலியது.

4. _____________ அரசாங்கத்தின் முக்கிய வருவாயாக இருந்தது.

5. குப்தர்களின் அலுவலக மொழி _____________

6. பல்லவ அரசர் _____________ சமுத்திர குப்தரால் தோற்கடிக்கப்பட்டார்.

7. வர்த்தன அரச வம்சத்தின் புகழ்பெற்ற அரசர் _____________ ஆவார்.

8. ஹர்ஷர் தலைநகரை ____________ விருந்து கன்னோசிக்கு மாற்றினார்.

**<u>சரியா அல்லது தவறா எனக் குறிப்பிடுக:</u>**

1. தன்வந்திரி மருத்துவத்துறையில் ஒரு புகழ்பெற்ற அறிஞராக திகழ்ந்தார்.

2. குப்தர்களின் காலத்தில் கட்டப்பட்ட கட்டுமானக் கோவில்கள் இந்தோ–ஆரிய பாணியை ஒத்துள்ளன.

3. குப்தர்களின் ஆட்சிக்காலத்தில் உடன்கட்டை ஏறும் பழக்கம் இல்லை.

4. ஹர்ஷர் ஹீனயான பௌத்த பிரிவைச் சேர்ந்தவர்.

5. ஹர்ஷர் அவருடைய மத சகிப்புத் தன்மையின்மைக்காகப் பெயர் பெற்றவர்.

**<u>பொருத்துக:</u>**

அ)

அ. மிகிரகுலா – 1. வானியல்

ஆ. ஆரியபட்டர் – 2. குமாரகுப்தர்

இ. ஓவியம் – 3. ஸ்கந்தகுப்தர்

ஈ. நாளந்தா பல்கலைக்கழகம் – 4. இடம் விட்டு இடம் செல்லும் வணிகர்கள்

உ. சார்த்தவாகர்கள் – 5. பாக்

(அ) 1, 2, 4, 3, 5

(ஆ) 2, 4, 1, 3, 5

(இ) 3, 1, 5, 2, 4

(ஈ) 3, 2, 1, 4, 5

ஆ)

அ. பாணர் – 1. 10, 000 மாணவர்கள்

ஆ. ஹர்ஷர் – 2. பிரயாகை

இ. நாளந்தா பல்கலைக்கழகம் – 3. ஹர்ஷ சரிதம்

ஈ. யுவான் சுவாங் – 4. ரத்னாவளி

உ. பௌத்த சபை – 5. சி–யூ–கி

(அ) 4, 3, 2, 1, 5

(ஆ) 5, 2, 1, 3, 4

(இ) 3, 5, 1, 2, 4

(ஈ) 2, 1, 3, 4, 5

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: (விடைகள்)**

1. ஸ்ரீ குப்தர் 2. ஹரிசேனர் 3. மெக்ராலி

4. சுஸ்ருதர் 5. சசாங்கர்

**பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றைத் தேர்வு செய்க: (விடைகள்)**

1. காரணமும் கூற்றும் சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.

2. முதலாம் கூற்று தவறு, ஆனால் இரண்டாம் கூற்று சரி

3. ஸ்ரீ குப்தர் – முதலாம் சந்திரகுப்தர் – சமுத்திரகுப்தர் – விக்கிரமாதித்யர்

4. (1 மட்டும் சரி)

**5. பொருந்தாததை வட்டமிடுக: (விடைகள்)**

winmeen.com

(i) சமுத்திரகுப்தர் (ii) ஹர்சசரிதா

**கோடிட்ட இடங்களை நிரப்புக: (விடைகள்)**

1. ஸ்ரீ மேகவர்மன் 2. பாகியான் 3. ஹீனர்கள் 4. நிலவரி

5. சமஸ்கிருதம்

6. விஷ்னுகோபன் 7. ஹர்ஷவர்தன் 8. தானேஸ்வரம்

**சரியா அல்லது தவறா எனக் குறிப்பிடுக: (விடைகள்)**

1. சரி

2. தவறு

**சரியான விடை:** குப்தர்களின் காலத்தில் கட்டப்பட்ட கட்டுமானக் கோவில்கள் திராவிட பாணியை ஒத்துள்ளன.

3. தவறு

**சரியான விடை:** குப்தர்களின் ஆட்சிக்காலத்தில் உடன்கட்டை ஏறும் பழக்கம் இருந்தது.

4. தவறு

**சரியான விடை:** ஹர்ஷர் மகாயான பௌத்த பிரிவைச் சேர்ந்தவர்.

5. சரி

**பொருத்துக: (விடைகள்)**

**(அ).**

1. மிகிரகுலா – ஸ்கந்தகுப்தர்

2. ஆரியபட்டர் – வானியல்

3. ஓவியம் – பாக்

4. நாளந்தா பல்கலைக்கழகம் – குமாரகுப்தர்

5. சார்த்தவாகர்கள் – இடம் விட்டு இடம் செல்லும் வணிகர்கள்

**(ஆ).**

1. பாணர் – ஹர்ஷ சரிதம்

2. ஹர்ஷர் – ரத்னாவளி

3. நாளந்தா பல்கலைக்கழகம் – 10000 மாணவர்கள்

4. யுவான் சுவாங் – சி–யூ–கி

5. பௌத்த சபை – பிரயாகை

6th Social Science Lesson 19

19] தென்னிந்திய அரசுகள்

**உங்களுக்குத் தெரியுமா?**

**கல்வெட்டுகள்:** மண்டகப்பட்டு குகைக் கல்வெட்டு, இரண்டாம் புலிகேசியின் அய்கோல் கல்வெட்டு.

**செப்பேடுகள்:** காசக்குடிச் செப்பேடுகள்.

**இலக்கியங்கள்:** மத்த விலாசப் பிரகசனம், அவந்தி சுந்தரி கதை, கலிங்கத்துப்பரணி, பெரிய புராணம், நந்திக் கலம்பகம்.

**அயலவர் குறிப்புகள்:** யுவான் சுவாங்கின் குறிப்புகள்.

முதலாம் நரசிம்மவர்மனின் படைத்தளபதி பரஞ்சோதி, சிறுத்தொண்டர் (63 நாயன்மார்களில் ஒருவர்) எனப் பிரபலமாக அறியப்பட்டார். பரஞ்சோதி வாதாபிப் படையெடுப்பில் பல்லவர் படைக்குத் தலைமை ஏற்று நடத்தினார். அதன் வெற்றிக்குப் பின்னர் மனமாற்றம் பெற்ற அவர் சிவ பக்தராக மாறினார். – பெரிய புராணம்

**அய்கோல் கல்வெட்டு:** இக்கல்வெட்டு அய்கோலிலுள்ள (பாகல்கோட் மாவட்டம், கர்நாடகா) மேகுதி கோவிலில் உள்ளது. இது சாளுக்கிய அரசன் இரண்டாம் புலிகேசியின் அவைக்களப் புலவரான ரவிகீர்த்தி என்பவரால் சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டது. இக்கல்வெட்டு ஹர்ஷவர்த்தனர் இரண்டாம் புலிகேசியால் தோற்கடிக்கப்பட்டதைக் குறிப்பிடுகின்றது.

**பட்டடக்கல்:** யுனெஸ்கோ உலகப்பாரம்பரியச் சின்னம். பட்டடக்கல் கர்நாடக மாநிலம் பாகல்கோட் மாவட்டத்திலுள்ள ஒரு சிற்றூர் ஆகும். அங்கு 10 கோவில்கள் உள்ளன. அவற்றில் நான்கு வட இந்திய பாணியான நாகாரா பாணியிலும் மற்றுமுள்ள ஆறு தென்னிந்திய திராவிட பாணியிலும் கட்டப்பட்டுள்ளன. விருப்பாக்ஷா கோவிலும் சங்கமேஸ்வரா கோவிலும் திராவிடப் பாணியிலும் பாப்பநாதர் கோவில் நாகாரா பாணியிலும் அமைந்துள்ளன. விருப்பாக்ஷா கோவில் காஞ்சி கைலாசநாதர் கோவிலை மாதிரியாக் கொண்டு கட்டப்பட்டுள்ளது. இக்கட்டுமானப் பணியில் காஞ்சிபுரத்திலிருந்து வரவழைக்கப்பட்ட சிற்பிகள் ஈடுபடுத்தப்பட்டனர்.

**உலகம் அந்நாளில்:** மாபெரும் லேஷன் (Leshan) புத்தர் நிலை 71 மீட்டர் உயரம். சீனாவின் தாங் (Tang) அரச வம்சத்தினரால் கட்டப்பட்டது. (கி. பி (பொ. ஆ) 713–803).

**பாக்தாத்:** இஸ்லாமியப் பேரரசின் மகத்தான நகரம். 8ஆம் நூற்றாண்டிலிருந்து 10ஆம் நூற்றாண்டு வரை நீடித்தது.

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. கீழ்க்காண்பவர்களில் வைகுண்டப்பெருமாள் கோவிலைக் கட்டியது யார்?

(அ) இரண்டாம் நரசிம்மவர்மன்

(ஆ) இரண்டாம் நந்திவர்மன்

(இ) தந்திவர்மன்

(ஈ) பரமேஸ்வரவர்மன்

2. கீழ்க்காண்பனவனுற்றுள் முதலாம் மகேந்திரவர்மன் சூட்டிக் கொண்ட பட்டங்கள் யாவை?

(அ) மத்தவிலாசன்

(ஆ) விசித்திரசித்தன்

(இ) குணபாரன்

(ஈ) இவை மூன்றும்

3. கீழ்க்காண்பனவற்றில் இரண்டாம் புலிகேசியின் வெற்றிகளை விவரிக்கும் கல்வெட்டு எது?

(அ) அய்கோல்

(ஆ) சாரநாத்

(இ) சாஞ்சி

(ஈ) ஜீனாகத்

<u>**பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**</u>

1. கூற்று 1: பாறை குடைவரை கோவிலைச் செதுக்கும் முறையிலிருந்து, கற்களைக் கொண்டு கட்டுமானக் கோவில்களைக் கட்டும் மாற்றம் ஏற்பட்டதை பல்லவர் கலை உணர்த்துகிறது.

கூற்று 2: காஞ்சிபுரத்திலுள்ள கைலாசநாதர் கோவில் பல்லவர்களின் கலை மற்றும் கட்டடக் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

(அ) கூற்று 1 தவறு

(ஆ) கூற்று 2 தவறு

(இ) இரு கூற்றுகளும் சரி

(ஈ) இரு கூற்றுகளும் தவறு

2. பல்லவ அரசினைப் பற்றிய கூற்றுகளைச் சிந்திக்கவும்:

கூற்று 1: இவர்களுடைய ஆட்சியில் அப்பரால் இயற்றப்பட்ட தேவாரம் முதல் மற்ற தமிழ் இலக்கியங்களும் செழித்தோங்கின.

கூற்று 2: முதலாம் மகேந்திரவர்மன் மத்த விலாச பிரகசனம் எனும் நூலின் ஆசிரியர் ஆவார்.

(அ) கூற்று 1 மட்டும் சரி

(ஆ) கூற்று 2 மட்டும் சரி

(இ) இரு கூற்றுகளும் சரி

(ஈ) இரு கூற்றுகளும் தவறு

3. ராஷ்டிரகூட வம்சம் குறித்த கீழ்க்காணும் கூற்றுகளைச் சிந்தித்து அவற்றில் எவை சரியான கூற்றென்று கண்டறியவும்.

1. இவ்வம்சத்தை நிறுவியவர் தந்திதுர்கா.

2. அமோகவர்ஷர் கவிராஜமார்க்கத்தை எழுதினார்.

3. முதலாம் கிருஷ்ணர் எல்லோராவில் கைலாசநாதர் கோவிலைக் கட்டினார்.

(அ) 1 மட்டும் சரி

(ஆ) 2, 3 சரி

(இ) 1, 3 சரி

(ஈ) மூன்றும் சரி

4. கீழ்க்காண்பனவற்றில் எது சரியான இணையில்லை:

(அ) எல்லோரா குகைகள் – ராஷ்டிர கூடர்கள்

(ஆ) மாமல்லபுரம் – முதலாம் நரசிம்மவர்மன்

(இ) எலிபெண்டா குகைகள் – அசோகர்

(ஈ) பட்டடக்கல் – சாளுக்கியர்கள்

5. தவறான இணையைக் கண்டறிக:

அ) தந்தின் – தசகுமார சரிதம்

ஆ) வாத்ஸ்யாயர் – பாரத வெண்பா

இ) பாரவி – கிரதார்ஜீனியம்

ஈ) அமோகவர்ஷர் – கவிராஜமார்க்கம்

**<u>கோடிட்ட இடங்களை நிரப்புக:</u>**

1. _____________ ஹர்ஷவர்தனரை நர்மதை ஆற்றின் கரையில் தோற்கடித்தார்.

2. _____________ வாதாபியை அழித்து வாதாபி கொண்டான் எனப் பட்டம் சூட்டிக்கொண்டார்

3. அய்கோல் கல்வெட்டின் ஆசிரியர் _____________ ஆவார்.

4. ______________ முதலாம் நரசிம்மவர்மனின் படைத் தளபதியாவார்.

5. ______________, _____________ ஆகிய இடங்களில் உள்ள இசைக் கல்வெட்டுக்கள் பல்லவர்களின் இசையார்வத்தை உணர்த்துகின்றன.

**<u>பொருத்துக:</u>**

1. பல்லவர் – கல்யாணி

2. கீழைச் சாளுக்கியர் – மான்யகேட்டா

3. மேலைச் சாளுக்கியர் – காஞ்சி

4. ராஷ்டிரகூடர் – வெங்கி

**<u>சரியா அல்லது தவறா எனக் குறிப்பிடுக:</u>**

1. புகழ்பெற்ற இசைக் கலைஞர் ருத்ராச்சாரியார் முதலாம் மகேந்திரவர்மன் காலத்தில் வாழ்ந்தவர்.

2. ராஷ்டிரகூட வம்சத்தின் தலைசிறந்த அரசர் இரண்டாம் புலிகேசி.

3. மாமல்லபுரம் யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியச் சின்னங்களில் ஒன்றாகும்.

4. தேவாரம் ஆழ்வார்களால் இயற்றப்பட்டது.

5. விருப்பாக்ஷி கோவில் காஞ்சி கைலாச நாதர் கோவிலை மாதிரியாகக் கொண்டு கட்டப்பட்டதாகும்.

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: (விடைகள்)**

1. தந்திவர்மன் 2. இவை மூன்றும் 3. அய்கோல்

**பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றைத் தேர்வு செய்க: (விடைகள்)**

1. இரு கூற்றுகளும் சரி

2. இரு கூற்றுகளும் சரி

3. மூன்றும் சரி

**4. சரியான இணையற்றது:**

இ) எலிபெண்டா குகைகள் – அசோகர்

**5. தவறான இணை:**

அ) வாத்ஸ்யாயர் – பாரத வெண்பா

**கோடிட்ட இடங்களை நிரப்புக: (விடைகள்)**

1. இரண்டாம் புலிகேசி 2. முதலாம் நரசிம்மவர்மன் 3. ரவிகீர்த்தி 4. பரஞ்சோதி

5. திருமயம், குடுமியான்மலை

**பொருத்துக: (விடைகள்)**

1. பல்லவர் – காஞ்சி

2. கீழைச் சாளுக்கியர் – வெங்கி

3. மேலைச் சாளுக்கியர் – கல்யாணி

4. ராஷ்டிரகூடர் – மான்யகேட்டா

**சரியா அல்லது தவறா எனக் குறிப்பிடுக: (விடைகள்)**

1. சரி

2. தவறு

**சரியான விடை:** ராஷ்டிரகூட வம்சத்தின் தலைசிறந்த அரசர் அமோகவர்சர்

3. சரி

4. தவறு

**சரியான விடை:** தேவாரம் நாயன்மார்களால் இயற்றப்பட்டது.

5. சரி

6th Social Science Lesson 20

20] ஆசியா மற்றும் ஐரோப்பா

**உங்களுக்குத் தெரியுமா?**

ஆசியாவில் 12 நாடுகள் நிலத்தால் சூழப்பட்டுள்ளன. அதில் ஒன்று இரண்டு முறை நிலத்தால் சூழப்பட்டுக் காணப்படுகின்றது. அதாவது, அந்நாட்டைச் சூழ்ந்துள்ள அனைத்து நாடுகளும் நிலத்தால் சூழப்பட்டுள்ள நாடுகளாகும். அந்நாடு எது என்பதைக் கண்டறிக.

"முடிச்சு" என்பது மலைத் தொடர்கள் கூடும்/பிரியும் இடங்கள் ஆகும்.

திபெத் "உலகின் கூரை" என அழைக்கப்படுகின்றது. அங்கு நிலவும் கடுங் குளிரின் காரணமாகவும், நன்னீரின் மிகப்பெரும் இருப்பிடமாகவும், மக்கள் வாழ இயலாத சூழல் காணப்படுவதாலும் திபெத் "மூன்றாம் துருவம்" என்றும் அழைக்கப்படுகின்றது.

ஒன்றிணைக்கப்பட்ட பல தீவுகள், தீவுக்கூட்டம் என அழைக்கப்படுகின்றது. இந்தோனேசியா மிகப்பெரியத் தீவுக்கூட்டம் ஆகும்.

முப்பள்ளத்தாக்கு நீர்த் தேக்கமானது யாங்சி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது. இஃது உலகின் மிகப்பெரிய நீர்த்தேக்கமாகும். இது சீனாவின் மின்சார தேவையில் 10 சதவீதத்தைப் பூர்த்தி செய்கிறது.

**பாலைவனம்:** பாலைவனப் பிரதேசம் என்பது மிகக் குறைந்த மழைப்பொழிவைப் பெறும் பகுதியாகும். இங்குக் குறைந்த அளவிலேயே தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் காணப்படுகின்றன. ஆசியாவில் இரண்டு வகையான பாலைவனங்கள் உள்ளன. வெப்பப் பாலைவனம் மற்றும் குளிர் பாலைவனம்.

ரூப–அல்–காலி பாலைவனம் உலகின் மிகத் தொடர்ச்சியான மணற்பாங்கான பாலைவனமாகும். இது சௌதி அரேபியாவின் தென்கிழக்குப் பகுதியில் காணப்படுகின்றது.

**பனாவ் படிக்கட்டு முறை நெல் விவசாயம்:** இப்கௌஸ் என்ற பிலிப்பைன்ஸ் மக்களால் 2000 ஆண்டுகளுக்கு முன் இது உருவாக்கப்பட்டதாகும். இது கடல் மட்டத்திலிருந்து சுமார் 1524 மீ உயரத்தில் அமைந்துள்ளது.

**அங்கோர்வாட்:** இஃது உலகப் பாரம்பரிய தளமாகும். இரண்டாம் சூரியவர்மன் என்ற மன்னரால் கி. பி. (பொ. ஆ) 1100ம் ஆண்டில் கம்போடியாவில் கட்டப்பட்டது. கெமர் மொழியில் "அங்கோர்வாட்" என்றால் "கோயில்களின் நகரம்" எனப் பொருள், இதுவே உலகின் மிகப்பெரிய கோயிலாகும்.

**ஐரோப்பிய ஒன்றியம்**: ஐரோப்பிய ஒன்றியம் (European Union) என்பது 28 உறுப்பு நாடுகளின் பொருளாதார மற்றும் அரசியல் நலனுக்காக உருவாக்கப்பட்ட ஒரு குழுமமாகும். இது தனக்கென ஒரு தனி கொடியும், பொதுவான நாணய (யூரோ) (€) மதிப்பும் கொண்டது.

நெதர்லாந்து: நெதர்லாந்தில் சுமார் 25 சதவீத நிலப்பரப்பு கடல் மட்டத்திற்குக் கீழாகக் காணப்படுகின்றது. எனவே டைக் (dikes) எனப்படும் பெருஞ்சுவர்களை எழுப்பியுள்ளனர். இந்த டைக்குகளினால் கடலிலிருந்து நிலத்தை மீட்டெடுத்துள்ளனர். கடலிலிருந்து மீட்டெக்கப்பட்ட இந்நிலங்கள் "போல்டர்கள்" என அழைக்கப்படுகின்றன.

ஃபியார்ட் (fjord) (பிளவுபட்ட கடற்கரை) செங்குத்தான பாறைகளுக்கிடையே (பனியாற்றுச் செயல்பாடுகளின் காரணமாக) உள்ள குறுகிய, ஆழமான கடற்கரை பிளவுபட்ட கடற்கரை எனப்படும். பின்வரும் வழிகளில் பயன்படுகிறது. 1. இவை காற்று எத்திசையிலிருந்து வீசினாலும் அதன் வேகத்தைக் குறைக்கின்றன. 2. கடல் அலைகளின் வேகத்தையும் இவை கட்டுக்குள் வைக்கின்றன. எனவே, இப்பிளவுபட்ட கடற்கரையானது இயற்கை துறைமுகங்கள் அமைவதற்கு ஏற்றதாக உள்ளது.

**கருங்காடுகள்**: கருத்த நிறமுடைய, செழித்து வளரும் அத்தி மற்றும் பைன் மரங்கள் இப்பகுதிக்குக் கருமை நிறத்தை அளிக்கின்றன.

**மேட்டர்ஹார்ன்**: பிரமிடு வடிவத்தில் காணப்படும் மேட்டர்ஹார்ன் மலை சுவிஸ்நாட்டில் உள்ள ஆல்ப்ஸ் மலையில் அமைந்துள்ளது. இதன் உயரம் 4478மீ ஆகும். இம்மலை இதன் வடிவத்திற்குப் புகழ் பெற்றதாகும்.

**காலநிலை பிரிப்பான்**: ஆல்ப்ஸ் மலைதொடர் மத்தியத் தரைகடல் காலநிலையையம் வட ஐரோப்பாவில் காணப்படும் குளிர்ந்த கால நிலையும் பிரிக்கின்ற ஒரு அரணாக உள்ளது.

வட அட்லாண்டிக் வெப்பக்கடல் நீரோட்டம் ஐரோப்பாவின் மேற்குப் பகுதிக்கு மிதமான வெப்பத்தை அளிக்கின்றது. மேலும் மேற்கத்திய காற்று ஐரோப்பா முழுவதும் வெப்பத்தைக் கடத்துகின்றது.

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. ஆசியாவின் மேற்கு எல்லையில் இல்லாதது எது?

(அ) கருங்கடல்

(ஆ) மத்திய தரைக்கடல்

(இ) செங்கடல்

(ஈ) அரபிக்கடல்

2. எல்பர்ஸ் மற்றும் ஜாக்ரோஸ் இடையில் அமைந்துள்ள மலையிடைப்பீடபூமி

(அ) திபெத்

(ஆ) ஈரான்

(இ) தக்காணம்

(ஈ) யுனான்

3. நிலநடுக்கோட்டுக் காலநிலை என்பது

i) ஆண்டு முழுவதும் ஒரே மாதிரியாக இருக்கும்.

ii) சராசரி மழையளவு 200 மி. மீ ஆகும்.

iii) சராசரி வெப்பநிலை $10^{\circ}$ C ஆகும்.

மேற்கண்ட கூற்றுகளில்

(அ) i மட்டும் சரி

(ஆ) ii மற்றும் iii சரி

(இ) i மற்றும் iii சரி

(ஈ) i மற்றும் ii சரி

4. பட்டியல் i ஐ பட்டியல் ii உடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு.

பட்டியல் I – பட்டியல் II

A. மலேசியா – 1. அத்தி

B. தாய்லாந்து – 2. ரப்பர்

C. கொரியா – 3. தேக்கு

D. இஸ்ரேல் – 4. செர்ரி

**குறியீடுகள்:**

A B C D

(அ) 2 3 4 1

(ஆ) 4 3 2 1

(இ) 4 3 1 2

(ஈ) 2 3 1 4

5. இந்தியா __________ உற்பத்தியில் முன்னணி வகிக்கின்றது

(அ) துத்தநாகம்

(ஆ) மைக்கா

(இ) மாங்கனீசு

(ஈ) நிலக்கரி

6. ஸ்பெயின் மற்றும் பிரான்ஸ்க்கு இடையில் இயற்கையாகவே அமைந்துள்ள எல்லை

(அ) ஆஸ்ப்ஸ்

(ஆ) பைரனீஸ்

(இ) கார்பேதியன்

(ஈ) காகஸஸ்

7. "ஐரோப்பாவின் மேற்கு மற்றும் வடமேற்கு பகுதியில் மிதமான மற்றும் ஈரப்பதமான காலநிலை நிலவுகிறது" சரியான தெரிவினைத் தேர்வு செய்க

(அ) இந்தப் பகுதிகள் நிலநடுக்கோட்டிற்கு அருகில் அமைந்துள்ளது.

(ஆ) இப்பகுதிகள் வட அட்லாண்டிக் வெப்ப நீரோட்டத்தினால் பாதிக்கப்படுகின்றன.

(இ) இப்பகுதிகளைச் சுற்றி மலைகள் காணப்படுகின்றன.

(ஈ) மேற்கண்ட அனைத்தும் சரி.

8. கீழ்கண்டவற்றுள்ன் தவறான கூற்று எது?

(அ) ஐரோப்பா மின்சக்தியை அதிக அளவில் உற்பத்தி செய்கிறது.

(ஆ) ஐரோப்பாவின் அனைத்து ஆறுகளும் ஆல்ப்ஸ் மலையில் உற்பத்தியாகின்றன

(இ) ஐரோப்பாவின் பெரும்பாலான ஆறுகள் உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்திற்குப் பயன்படுகின்றன.

(ஈ) ஐரோப்பாவின் ஆறுகள் வற்றாத ஆறுகளாகும்.

**<u>9. பொருந்தாத இணையைக் கண்டறிக:</u>**

(அ) மெஸடா – ஸ்பெயின்

(ஆ) ஜீரா – பிரான்ஸ்

(இ) பென்னின்ஸ் – இத்தாலி

(ஈ) கருங்காடுகள் – ஜெர்மனி

10. ஐரோப்பாவில் மிகக் குறைவான மக்களடர்த்தியைக் கொண்ட நாடு எது?

(அ) ஐஸ்லாந்து

(ஆ) நெதர்லாந்து

(இ) போலந்து

(ஈ) சுவிட்சர்லாந்து

**<u>கோடிட்ட இடங்களை நிரப்புக:</u>**

1. தாரஸ் மற்றும் போன்டைன் மலைத்தொடர்கள் ___________ முடிச்சிலிருந்து பிரிக்கின்றது.

2. உலகின் மிக ஈரப்பதமான இடம் ___________

3. உலகிலேயே ___________ உற்பத்தியில் ஈரான் முன்னிலையில் உள்ளது.

4. ஐரோப்பாவையும், தெற்கு மற்றும் தென் கிழக்கு ஆசியாவையும் இணைக்கும் கடல்வழி ___________

5. பிலிப்பைன்ஸ் நாட்டின் தேசிய நடனம் ____________

6. ஐரோப்பாவின் இரண்டாவது உயரமான சிகரம் ______________

7. ஐரோப்பாவின் மத்திய மற்றும் கிழக்கு பகுதியில் நிலவும் காலநிலை ____________

8. வடகடலில் உள்ள முக்கிய மீன்பிடித்தளம் ___________

9. ஐரோப்பாவின் மக்களடர்த்தி ___________

10. ______________ ஆறு ஐரோப்பாவில் உள்ள ஒன்பது நாடுகளைக் கடந்து செல்கின்றது.

**<u>பொருத்துக:</u>**

1. மெசபடோமியா சமவெளி – அதிக மழை

2. மௌசின்ராம் – நார்வே

3. அரிசிக் கிண்ணம் – ஸ்பெயின்

4. ஃபியார்டு கடற்கரை – யூப்ரடீஸ் & டைக்ரிஸ்

5. எருதுச் சண்டை – தாய்லாந்து

**<u>பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:</u>**

1. கூற்று A: இத்தாலி, வறண்ட கோடை காலத்தையும், குளிர்கால மழையையும் பெற்றுள்ளது.

காரணம் R: இது மத்திய தரைக்கடல் பகுதியில் அமைந்துள்ளது

(அ) A மற்றும் R இரண்டும் சரி. மேலும் R என்பது A விற்கு சரியான விளக்கம் ஆகும்.

(ஆ) A மற்றும் R இரண்டும் சரி. மேலும் R என்பது A விற்கு சரியான விளக்கமல்ல.

(இ) A சரி. ஆனால் R தவறு.

(ஈ) A தவறு. ஆனால் R சரி

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: (விடைகள்)**

1. அரபிக்கடல் 2. ஈரான் 3. i மட்டும் சரி

**4. பொருத்துக: (விடைகள்)**

i) மலேசியா – ரப்பர்

ii) தாய்லாந்து – தேக்கு

iii) கொரியா – செர்ரி

iv) இஸ்ரேல் – அத்தி

5. மைக்கா 6. பைரனீஸ்

7. இப்பகுதிகள் வட அட்லாண்டிக் வெப்ப நீரோட்டத்தினால் பாதிக்கப்படுகின்றன.

8. ஐரோப்பாவின் ஆறுகள் வற்றாத ஆறுகளாகும்.

**9. பொருந்தாத இணை: (விடை)**

இ) பென்னின்ஸ் – இத்தாலி

10. ஐஸ்லாந்து

**கோடிட்ட இடங்களை நிரப்புக: (விடைகள்)**

1. ஆர்மீனியன் 2. மௌசின்ராம் 3. பேரிச்சம்பழம் 4. சூயஸ்கால்வாய் 5. டினிக்லிங்

6. மாண்ட் பிளாங் 7. கண்ட காலநிலை 8. டாகர் பாங்க்ஸ் 9. 26105 நபர்கள்/ச. கி. மீ

10. டேன்யூப்

**பொருத்துக: (விடைகள்)**

1. மெசபடோமியா சமவெளி – யூப்ரடீஸ் ரூ டைக்ரிஸ்

2. மௌசின்ராம் – அதிக மழை

3. அரிசிக் கிண்ணம் – தாய்லாந்து

4. ஃபியார்டு கடற்கரை – நார்வே

5. எருதுச் சண்டை – ஸ்பெயின்

**பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றைத் தேர்வு செய்க: (விடை)**

1. (A) தவறு, ஆனால் (R) சரி.

## 6th Social Science Lesson 21

## 21] புவி மாதிரி

**உங்களுக்குத் தெரியுமா?**

புவி 510. 1 மில்லியன் சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்டதாகும்.

உலகில் முதன்முதலாக புவி மாதிரியை (Globe) கி. பி. (பொ. ஆ) 150–ஆம் ஆண்டில் கிரேக்கர்கள் உருவாக்கியுள்ளனர். இந்திய வானியல் அறிஞர் முதலாம் ஆரியபட்டர் அவர்கள் எழுதிய "ஆர்யபட்ட சித்தாந்தம்" என்ற நூலில் "விண்மீன்கள் வானில் மேற்குப்புறமாக நகர்வது போன்ற தோற்றம், புவி தன்னுடைய அச்சில் தன்னைத்தானே சுற்றிக் கொள்வதால் விளைகிறது" என்று குறிப்பிட்டுள்ளார்.

கிரேக்க ரோமானிய கணித வல்லுநர், வான் ஆய்வாளர் மற்றும் புவியியல் ஆய்வாளராகிய தாலமி (Ptolemy) என்பவர் முதன் முதலில் நில வரைபடத்தில் அட்ச தீர்க்கக் கோடுகளை வரைந்தவராவார். இவருடைய 'Geographia" என்ற நூலில் புவியின் அளவும், அதன் மேற்பரப்பைக் குறித்த விவரங்களும், அட்சக்கோடுகள் மற்றும் தீர்த்தக் கோடுகளின் அடிப்படையில் அமைந்த பல்வேறு இடங்களின் பட்டியலும் இடம் பெற்றுள்ளது.

புவியின் நடுவில் வரையப்பட்டுள்ள நில நடுக்கோடு (Equator) மற்ற அட்சக் கோடுகளை விட நீளமாகக் காணப்படுகிறது. எனவே, இக்கோடு "பெருவட்டம்"(Great Circle) என்று அழைக்கப்படுகிறது.

$0^{\circ}$ அட்சக் கோட்டிலிருந்து $23\frac{1}{2}^{\circ}$ வடக்கு மற்றும் தெற்கு பகுதியில் வரையப்பட்டுள்ள அட்சக்கோடுகள் "தாழ் அட்சக்கோடுகள்" Low Latitudes எனவும். $23\frac{1}{2}^{\circ}$ வடக்கு முதல் $66\frac{1}{2}^{\circ}$ வடக்கு வரையிலும், $23\frac{1}{2}^{\circ}$ தெற்கு முதல் $66\frac{1}{2}^{\circ}$ தெற்கு வரையிலும் வரையப்பட்டுள்ள அட்சக்கோடுகள் "மத்திய அட்சக் கோடுகள்" Middle Latitudes எனவும். $66\frac{1}{2}^{\circ}$ வடக்கு முதல் $90^{\circ}$ வடக்கு வரையிலும், $66\frac{1}{2}^{\circ}$ தெற்கு முதல் $90^{\circ}$ தெற்கு வரையிலும் வரையப்பட்டுள்ள அட்சக் கோடுகள் "உயர் அட்சக் கோடுகள்" High Latitudes, எனவும் அழைக்கப்படுகின்றன.

Latitude–அகலாங்கு. Longitude–நெட்டாங்கு. Equator–நிலநடுவரை. Tropic of Cancer–கடகவரை. Tropic of Capricorn–மகரவரை எனவும் தமிழில் அழைக்கப்படுகின்றன.

தீர்க்கக்கோடுகள் புவியில் நிலநடுக்கோட்டுப் பகுதியில் 111 கி. மீ. இடைவெளியிலும், $45^{\circ}$ அட்சப்பகுதிகளில் 79 கி. மீ இடைவெளியிலும், துருவப் பகுதிகளில் இடைவெளியின்றியும் காணப்படுகின்றன.

பன்னாட்டு தேதிக்கோடு வளைந்து செல்வதற்குக் காரணம், இது நேராகச் சென்றால், ஒரே நாட்டிற்குள் இரண்டு தேதிகள் அமையும். இந்த குழப்பத்தினைத் தவிர்ப்பதற்காகவே இக்கோடு வளைத்து வரையப்பட்டுள்ளது.

புவி தன் அச்சில் ஒருமுறை தன்னைத்தானே சுற்றிக் கொள்ளும் கால அளவு ஒரு நாள்.

1 நாள் = 24 மணி நேரம்.

1 மணி நேரம் = 60 நிமிடங்கள்.

24 மணி நேரத்திற்கு = 24 x 60 = 1440 நிமிடங்கள்.

புவி கோளத்தின் சுற்றளவு = $360^{\circ}$.

$360^{\circ}$ = 360 தீர்த்தக்கோடுகள்.

$360^{\circ}$ = 1440 நிமிடங்கள்.

1 $^{\circ}$ யின் நேரம் = 1440/360 = 4 நிமிடங்கள்.

1 $^{\circ}$ யை கடக்க புவி எடுத்துக்கொள்ளும் கால அளவு = 4 நிமிடங்கள்.

60 நிமிடங்கள் / 4 நிமிடங்கள் = 60/4 = 15.

1 மணி நேரத்தில் $15^{\circ}$ தீர்க்கக் கோடுகளைப் புவி கடக்கிறது.

1. மெரிடியன் (Meridian) என்ற சொல் "மெரிடியானஸ்" (meridianus) என்ற இலத்தீன் மொழிச் சொல்லிலிருந்து வந்ததாகும். இதற்கு நண்பகல் Midday (Medius – Middle, dies = day) எனப்பொருள். எனவே Meridian என்பது சூரியன் ஓர் இடத்தின் நேர் மேலே உச்சியில் உள்ளதைக் குறிக்கிறது.

2. a. m. என்பது 'anti – meridiem' (anti = before) நண்பகலுக்கு முன்னதாக எனப் பொருள்படும்.

3. p. m. என்பது "post – Meridiem' (Post = after or later) நண்பகலுக்குப் பிறகு எனப் பொருள்படும்.

இந்தியா கிடைமட்டப்பரவலில் மேற்கில் குஜராத்தில் உள்ள கௌர்மோட்டா (Ghuar Mota) என்ற இடத்திற்கும், கிழக்கில் அருணாச்சல பிரதேசத்திலுள்ள கிபித்து (Kibithu) என்ற இடத்திற்கும் சமதூர இடைவெளியில், உத்திரப்பிரதேச மாநிலம் அலகாபாத்தில் உள்ள மிர்சாபூர் (Mirzabur) என்ற இடத்தின் வழியே 82 $\frac{1}{2}^{\circ}$ கிழக்கு தீர்க்கக்கோடு செல்கிறது.

**<u>கோடிட்ட இடங்களை நிரப்புக:</u>**

1. பெருவட்டம் என அழைக்கப்படும் அட்சக்கோடு ___________

2. புவியின் மீது கிழக்கு மேற்காக, கிடைமட்டமாக வரையப்பட்டுள்ள கோடுகள் ___________

3. புவியில் $90^{\circ}$ அட்சங்கள் __________ என அழைக்கப்படுகின்றன.

4. முதன்மை தீர்க்கக்கோடு ___________ என அழைக்கப்படுகிறது.

5. உலகின் நேர மண்டலங்களின் எண்ணிக்கை ___________

**<u>சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:</u>**

1. புவியின் வடிவம்.

(அ) சதுரம்

(ஆ) செவ்வகம்

(இ) ஜியாய்டு

(ஈ) வட்டம்

2. வடதுருவம் என்பது

(அ) $90^{\circ}$ வ அட்சக்கோடு

(ஆ) $90^{\circ}$ தெ அட்சக்கோடு

(இ) $90^{\circ}$ மே தீர்க்கக்கோடு

(ஈ) $90^{\circ}$ கி தீர்க்கக்கோடு

3. $0^{\circ}$ முதல் $180^{\circ}$ கிழக்கு தீர்க்கக்கோடு வரை காணப்படும் புவிப்பகுதி இவ்வாறு அழைக்கப்படுகிறது.

(அ) தெற்கு அரைக்கோளம்

(ஆ) மேற்கு அரைக்கோளம்

(இ) வடக்கு அரைக்கோளம்

(ஈ) கிழக்கு அரைக்கோளம்

4. $23\ \frac{1}{2}^{\circ}$ வ அட்சக்கோடு இவ்வாறு அழைக்கப்படுகிறது.

(அ) மகரரேகை

(ஆ) கடக ரேகை

(இ) ஆர்க்டிக் வட்டம்

(ஈ) அண்டார்டிக் வட்டம்

5. $180^{\circ}$ தீர்க்கக்கோடு என்பது

(அ) நிலநடுக்கோடு

(ஆ) பன்னாட்டு தேதிக்கோடு

(இ) முதன்மை தீர்க்கக்கோடு

(ஈ) வடதுருவம்

6. கீரீன்விச் முதன்மை தீர்க்கக் கோட்டிறக்கு நேர் உச்சியில் சூரியன் இருக்கும் போது அவ்விடத்தின் நேரம்.

(அ) நள்ளிரவு 12 மணி

(ஆ) நண்பகல் 12 மணி

(இ) பிற்பகல் 1 மணி

(ஈ) முற்பகல் 1 மணி

7. ஒரு நாளுக்கு எத்தனை நிமிடங்கள்?

(அ) 1240 நிமிடங்கள்

(ஆ) 1340 நிமிடங்கள்

(இ) 1440 நிமிடங்கள்

(ஈ) 1140 நிமிடங்கள்

8. கீழ்க்காணும் தீர்க்கக்கோடுகளில் இந்திய திட்ட நேர தீர்க்கக்கோடாக உள்ளது எது?

(அ) 82 ½° கிழக்கு

(ஆ) 82 ½° மேற்கு

(இ) 81 ½° கிழக்கு

(ஈ) 81 ½° மேற்கு

9. அட்சக்கோடுகளின் மொத்த எண்ணிக்கை

(அ) 171

(ஆ) 161

(இ) 181

(ஈ) 191

10. தீர்க்கக் கோடுகளின் மொத்த எண்ணிக்கை

(அ) 370

(ஆ) 380

(இ) 360

(இ) 390

**<u>பொருந்தாததை வட்டமிடுக:</u>**

1. வடதுருவம், தென்துருவம், நிலநடுக்கோடு, பன்னாட்டு தேதிக்கோடு

2. மகரரேகை, கடகரேகை, நிலநடுக்கோடு, முதன்மை தீர்த்தக்கோடு

3. வெப்பமண்டலம், நேர மண்டலம், மிதவெப்ப மண்டலம், குளிர் மண்டலம்

4. இராயல் வானியல் ஆய்வுமையம், முதன்மை தீர்க்கக்கோடு, கிரீன்விச், பன்னாட்டு தேதிக்கோடு

5. 10° வடக்கு, 20° தெற்கு, 30° வடக்கு, 40° மேற்கு

**<u>பொருத்துக:</u>**

1. 0°அட்சக்கோடு – துருவம்

2. 0° தீர்க்கக்கோடு – பன்னாட்டு தேதிக்கோடு

3. $180^{\circ}$ தீர்க்கக்கோடு – கிரீன்விச்

4. $90^{\circ}$ அட்சக்கோடு – நிலநடுக்கோடு

**பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. புவி கோள வடிவமாகக் காணப்படுகிறது.

2. புவியின் வடிவம், ஜியாய்டு என அழைக்கப்படுகிறது.

3. புவி தட்டையான வடிவத்தில் உள்ளது. மேற்கூறிய கூற்றுகளில் சரியானவற்றை, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைப் பயன்படுத்திக் கண்டறிக.

(அ) 1 மற்றும் 3 சரி

(ஆ) 2 மற்றும் 3 சரி

(இ) 1 மற்றும் 2 சரி

(ஈ) 1, 2 மற்றும் 3 சரி

1. கூற்று 1: புவியில், அட்சக்கோடுகள் ஒரு இடத்தின் அமைவிடத்தைக் கண்டறியவும், வெப்ப மண்டலங்களைக் கணக்கிடவும் பயன்படுகின்றன.

கூற்று 2: புவியில் தீர்க்கக் கோடுகள், ஒரு இடத்தின் அமைவிடத்தைக் கண்டறியவும், நேரத்தைக் கணக்கிடவும் பயன்படுகின்றன.

(அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

(ஆ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

(இ) இரண்டு கூற்றுகளும் சரி

(ஈ) இரண்டு கூற்றுகளும் தவறு

**கோடிட்ட இடங்களை நிரப்புக: (விடைகள்)**

1. நிலநடுக்கோடு 2. அட்சக்கோடுகள் 3. துருவங்கள் 4. கிரீன்விச் 5. (24)

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: (விடைகள்)**

1. ஜியாய்டு 2. $90^{\circ}$ வ அட்சக்கோடு 3. கிழக்கு அரைக்கோளம்

4. கடகரேகை 5. பன்னாட்டு தேதிக்கோடு

6. நண்பகல் 12 மணி 7. 1440 நிமிடங்கள்

8. (82 $1/2^{\circ}$ கிழக்கு) 9. (181) 10. 360

**பொருந்தாததை வட்டமிடுக: (விடைகள்)**

1. பன்னாட்டு தேதிக்கோடு

2. முதன்மைதீர்க்கக்கோடு

3. நேரமண்டலம்

4. இராயல் வானியல் ஆய்வுமையம்

5. $30^{\circ}$ வடக்கு

**பொருத்துக: (விடைகள்)**

1. $0^{\circ}$ அட்சக்கோடு – நிலநடுக்கோடு

2. $0^{\circ}$ தீர்க்கக்கோடு – கிரீன்விச்

3. $180^{\circ}$ தீர்க்கக்கோடு – பன்னாட்டு தேதிக்கோடு

4. $90^{\circ}$ அட்சக்கோடு – துருவம்

**பின்வரும் கூற்றுகளை ஆராய்ந்து சரியானவற்றைத் தேர்வு செய்க: (விடைகள்)**

1. 1 மற்றும் 2 சரி

2. இரண்டு கூற்றுகளும் சரி

## 6th Social Science Lesson 22

## 22] பேரிடரைப் புரிந்து கொள்ளுதல்

**உங்களுக்குத் தெரியுமா?**

**பேரிடர்**: இயற்கை பேரிடர், மனிதனால் உண்டாகும் பேரிடர்கள்.

**இயற்கை பேரிடர்**: நிலநடுக்கம், எரிமலை, சுனாமி, சூறாவளி, வெள்ளம், நிலச்சரிவு, பனிச்சரிவு. இடி மற்றும் மின்னல்

**மனிதனால் உண்டாகும் பேரிடர்கள்:** நெருப்பு, கட்டிடங்கள் இடிந்து போதல், தொழிற்சாலை விபத்துகள், போக்குவரத்து விபத்துகள், தீவிரவாதம், கூட்ட நெரிசல்.

**சென்னை வெள்ளம் 2015**: இந்தியாவின் பெரும் நகரங்களில் ஒன்றான சென்னை இந்தியாவின் தென்கிழக்குக் கடற்கரையில் அமைந்துள்ளது. இஃது ஒவ்வொரு ஆண்டும் வடகிழக்குப் பருவக்காற்றாலும், வெப்ப மண்டல புயலாலும் பெரும் தாக்கத்திற்கு உள்ளாகின்றது. 2015ஆம் ஆண்டு, நவம்பர் மற்றும் டிசம்பர் மாதத்தில் பெய்த பெரும் மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தில் சென்னை மற்றும் தமிழகத்தின் சில பகுதிகள் பேரழிவைச் சந்தித்தன. இதில் சுமார் 400க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர் பெருமளவில் பொருட்சேதமும் ஏற்பட்டது. மனித உயிர்களைக் காப்பாற்றவும் மக்களின் துயர் துடைக்கவும் மத்திய அரசு மற்றும் தமிழக அரசு ஏராளமான நடவடிக்கைகளை மேற்கொண்டன.

## 6th Social Science Lesson 23

## 23] மக்களாட்சி

**உங்களுக்குத் தெரியுமா?**

"மக்களால் மக்களுக்காக மக்களே நடத்தும் ஆட்சி மக்களாட்சி" – ஆப்ரகாம் லிங்கன்.

நேரடி மக்களாட்சியில் மக்களே சட்டங்களை உருவாக்குகின்றனர். அனைத்து சட்டத்திருத்தங்களையும் மக்கள்தான் அங்கீகரிப்பர். அரசியல்வாதிகள் நாடாளுமன்ற செயல்முறைகளின்படி ஆட்சி செய்வர். நேரடி மக்களாட்சியை வெற்றிகரமான செயல்படுத்தும் வரலாற்றை சுவிட்சர்லாந்து பெற்றுள்ளது.

மக்களாட்சியின் பிறப்பிடம் கிரேக்கம் ஆகும்".

**பிரதிநிதித்துவ மக்களாட்சி**: நாடாளுமன்ற மக்களாட்சி–இந்தியா, இங்கிலாந்து.

அதிபர் மக்களாட்சி–அமெரிக்க ஐக்கிய நாடுகள், கனடா.

**மக்களாட்சி:**

நேரடி மக்களாட்சி–சுவிட்சர்லாந்து. சட்டங்கள் மற்றும் விதிகள். வாக்குகள். மக்கள்.

பிரதிநிதித்துவ மக்களாட்சி–இந்தியா, இங்கிலாந்து அமெரிக்க ஐக்கிய நாடுகள். சட்டங்கள் மற்றும் விதிகள். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள். வாக்குகள்.

2007ல் ஐ. நா. சபை செப்டம்பர் 15ஆம் நாளை உலக மக்களாட்சி தினமாக அறிவித்துள்ளது.

இந்தியக் குடிமக்களின் 79% பேர் தங்களது நாட்டின் மக்களாட்சியின் மீது நம்பிக்கை கொண்டுள்ளதாகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இதன் காரணமாக உலக அளவிலான இப்பட்டியலில் இந்தியாவிற்கு முதலிடம் கிடைத்துள்ளது.

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. ஆதிமனிதன் ___________ பகுதியில் குடியேறி விவசாயம் செய்யத் தொடங்கியனான்.

(அ) சமவெளி

(ஆ) ஆற்றோரம்

(இ) மலை

(ஈ) குன்று

2. மக்களாட்சியின் பிறப்பிடம் __________

(அ) சீனா

(ஆ) அமெரிக்கா

(இ) கிரேக்கம்

(ஈ) ரோம்

3. உலக மக்களாட்சி தினம் ___________

(அ) செப்டம்பர் 15

(ஆ) அக்டோபர் 15

(இ) நவம்பர் 15

(ஈ) டிசம்பர் 15

4. நேரடி மக்களாட்சியில் வாக்களிப்பவர் ___________

(அ) ஆண்கள்

(ஆ) பெண்கள்

(இ) பிதிநிதிகள்

(ஈ) வாக்காளர்கள்

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. நேரடி மக்களாட்சியைச் செயல்படுத்தும் நாடு __________

2. மக்களாட்சிக்கான வரையறையை வகுத்தவர் __________

3. மக்கள் ___________ அளிப்பதன் மூலம் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கின்றனர்.

4. நம் நாட்டில் ___________ மக்களாட்சி செயல்படுகிறது.

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: (விடைகள்)**

1. ஆற்றோரம் 2. கிரேக்கம் 3. செப்டம்பர் 15 4. வாக்காளர்கள்

**கோடிட்ட இடங்களை நிரப்புக: (விடைகள்)**

1. சுவிட்சர்லாந்து 2. ஆபிரகாம் லிங்கன் 3. வாக்கு 4. பிரதிநிதித்துவம்

6th Social Science Lesson 24

**24] உள்ளாட்சி அமைப்பு – ஊரகமும் நகர்ப்புறமும்**

**உங்களுக்குத் தெரியுமா?**

1688ல் உருவாக்கப்பட்ட சென்னை மாநகராட்சி தான் இந்தியாவின் மிக பழமையான உள்ளாட்சி அமைப்பாகும்.

தமிழ்நாட்டில் முதன் முதலில் உருவாக்கப்பட்ட நகராட்சி வாலாஜாபேட்டை நகராட்சி ஆகும். (வேலூர் மாவட்டம்). நகராட்சிகள் அதிகமாக உள்ள மாவட்டம் காஞ்சிபுரம் மாவட்டம்.

விழுப்புரம் மாவட்டத்தில் தான் அதிகப்படியாக 22 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. நீலகிரி மற்றும் பெரம்பலூர் மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் 4 ஊராட்சி ஒன்றியங்கள் தான் உள்ளன.

சிறப்பாகச் செயல்படும் ஊராட்சி அமைப்புகளுக்கு மத்திய அரசு விருதுகளை வழங்குகிறது.

தேசிய ஊராட்சி தினம் ஏப்ரல் 24.

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. பல கிராம ஊராட்சிகள் ஒன்றிணைந்து ____________ அமைக்கப்படுகிறது.

(அ) ஊராட்சி ஒன்றியம்

(ஆ) மாவட்ட ஊராட்சி

(இ) வட்டம்

(ஈ) வருவாய் கிராமம்

2. தேசிய ஊராட்சி தினம் ___________ ஆகும்.

(அ) ஜனவரி 24

(ஆ) ஜீலை 24

(இ) நவம்பர் 24

(ஈ) ஏப்ரல் 24

3. இந்தியாவின் பழமையான உள்ளாட்சி அமைப்பாக அமைக்கப்பட்ட நகரம் ______________

(அ) டெல்லி

(ஆ) சென்னை

(இ) கொல்கத்தா

(ஈ) மும்பாய்

4. அதிகப்படியான ஊராட்சி ஒன்றியங்கள் உள்ள மாவட்டம் _____________

(அ) வேலூர்

(ஆ) திருவள்ளுர்

(இ) விழுப்புரம்

(ஈ) காஞ்சிபுரம்

5. மாநகராட்சியின் தலைவர் ___________ என அழைக்கப்படுகிறார்.

(அ) மேயர்

(ஆ) கமிஷனர்

(இ) பெருந்தலைவர்

(ஈ) தலைவர்

**<u>கோடிட்ட இடங்களை நிரப்புக:</u>**

1. இந்தியாவிலேயே பேரூராட்சி என்ற அமைப்பை அறிமுகப்படுத்திய மாநிலம் ___________ ஆகும்.

2. பஞ்சாயத்து ராஜ் சட்டம் கொண்டு வரப்பட்ட ஆண்டு __________

3. உள்ளாட்சி பிரதிநிதிகளின் பதவிக்காலம் __________ ஆண்டுகள்.

4. தமிழ்நாட்டில் முதன் முதலாக உருவாக்கப்பட்ட நகராட்சி __________ ஆகும்.

**<u>பொருத்துக:</u>**

1. கிராம சபை – செயல் அலுவலர்

2. ஊராட்சி ஒன்றியம் – மாநிலத் தேர்தல் ஆணையம்

winmeen.com

3. பேரூராட்சி – வட்டார வளர்ச்சி அலுவலர்

4. உள்ளாட்சித் தேர்தல் – நிரந்தர அமைப்பு

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: (விடைகள்)**

1. ஊராட்சி ஒன்றியம் 2. (ஏப்ரல் 24) 3. சென்னை 4. விழுப்புரம் 5. மேயர்

**கோடிட்ட இடங்களை நிரப்புக: (விடைகள்)**

1. தமிழ்நாடு 2. (1992) 3. (5) 4. வாலாஜா பேட்டை

**பொருத்துக: (விடைகள்)**

1. கிராம சபை – நிரந்தர அமைப்பு

2. ஊராட்சி ஒன்றியம் – வட்டார வளர்ச்சி அலுவலர்

3. பேரூராட்சி – செயல் அலுவலர்

4. உள்ளாட்சித் தேர்தல் – மாநிலத் தேர்தல் ஆணையம்

## 6th Social Science Lesson 25

## 25] சாலை பாதுகாப்பு

**உங்களுக்குத் தெரியுமா?**

**பாதசாரிகள் கடக்கும் இடம்:** பாதசாரிகளுக்கு என்று சாலையில் கடக்கும் பகுதி 1934ஆம் ஆண்டு பிரிட்டனில் அமைக்கப்பட்டது. சாலைகள் புள்ளிகளால் ஆன கோடுகளால் குறிக்கப்பட்டன. நுடைபாதைகளில் பெலிஷா பேக்கன் என்று அழைக்கப்பட்ட ஒளிக்கம்பங்கள் அமைக்கப்பட்டன. இது பிரிட்டனின் போக்குவரத்துத்துறை அமைச்சர் எல். ஹோரி பெலிஷா அவர்களின் பெயரில் அமைக்கப்பட்டது. ஜீப்ரா கிராசிங் எனப்படும் கருப்பு வெள்ளைகளால் ஆன பட்டைகள், கருப்பு வெள்ளைக் கோடுகளாக மாற்றமடைந்தன. இரண்டாம் உலகப் போருக்குப் பின் தான் ஜீப்ரா கிராசிங் உருவாக்கப்பட்டன.

## 7th Social Science Lesson 1

## 1] இடைக்கால இந்திய வரலாற்று ஆதாரங்கள்

**உங்களுக்குத் தெரியுமா?**

ஔரங்கசீப்பின் அவைக்கள வரலாற்று அறிஞராக இருந்த காஃபிகானின் புகழ் பெற்ற கூற்று உங்களுக்குத் தெரியுமா? "விசுவாசம் உள்ளவராக இருத்தல், லாப நோக்கம் இன்மை, ஆபத்துக்கு அஞ்சாமை, ஒரு தலை பட்சமாக இல்லாதிருத்தல், விருப்பு வெறுப்பின்றி இருத்தல், நண்பருக்கும் அந்நியருக்குமிடையே வேற்றுமை பாராமை, நேர்மையுடன் எழுதுதல் ஆகியவை வரலாற்று ஆசிரியரின் கடமைகள்" என அவர் கூறியுள்ளார்.

**சான்றுகளை வகைப்படுத்துதல்:** முதல்நிலைச்சான்றுகள், இரண்டாம் நிலைச் சான்றுகள்.

ஒரு ஜிட்டல் 3. 6 வெள்ளி குன்றிமணிகளைக் கொண்டதாகும் 48 ஜிட்டல்கள் 1 வெள்ளி டங்காவுக்குச் சமமாகும்.

தபகத்–அராபியச்சொல்–தலைமுறைகள் அல்லது நூற்றாண்டுகள் என்று பொருள். தஜீக்–பாராசீகச் சொல்–சுயசரிதை எனப்பொருள். தாரிக் அல்லது தாகுயூக்–அராபியச் சொல் – இதன் பொருள் வரலாறு என்பதாகும்.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. --------------- என்பவை பாறைகள், கற்கள், கோவில் சுவர்கள், உலோகங்கள் ஆகியவற்றின் கடினமான மேற்பரப்பின் மீது செதுக்கப்படும் வாசகங்களாகும்.

(அ) காலவரிசையிலான நிகழ்வுப்பதிவுகள்

(ஆ) பயணக்குறிப்புகள்

(இ) நாணயங்கள்

(ஈ) பொறிப்புகள்

2. கோவில்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட நிலங்கள் -------------- ஆகும்.

(அ) வேளாண்வகை

(ஆ) சாலபோகம்

(இ) பிரம்மதேயம்

(ஈ) தேவதானம்

3. -------------- களின் காலம் பக்தி இலக்கியங்களின் காலமென அறியப்படுகிறது.

(அ) சோழர்

(ஆ) பாண்டியர்

(இ) ராஜபுத்திரர்

(ஈ) விஜயநகர அரசர்கள்

4. முதல் டெல்லி சுல்தான் பற்றிய தகவல்களைக் கூறும் நூல் -------------- ஆகும்.

(அ) அயினி அக்பரி

(ஆ) தாஜ்–உல்–மா–அசிர்

(இ) தசுக்–இ–ஜாஹாங்கீரி

(ஈ) தாரிக்–இ–பெரிஷ்டா

5. அராபியாவில் பிறந்து இந்தியாவிற்கு வந்த மொராக்கோ நாட்டு அறிஞர் ---------------- ஆவார்.

(அ) மார்க்கோபோலோ

(ஆ) அல்–பரூனி

(இ) டோமிங்கோ பயஸ்

(ஈ) இபன் பதூதா

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. -------------- கல்வெட்டு ஒரு பிரம்மதேயக் கிராமத்தின் நிர்வாகம் குறித்து விவரித்துக் கூறுகிறது.

2. தன்னுடைய தங்க நாணயங்கள் மீது பெண் தெய்வமான இலட்சுமியின் உருவத்தைப் பதித்து தன்னுடைய பெயரையும் பொறித்தவர் ---------------- ஆவார்.

3. ஒரு -------------- என்பது 3. 6 வெள்ளி குன்றிமணிகளைக் கொண்டிருந்தது.

4. அடிமை வம்சத்தைச் சேர்ந்த சுல்தான் நஸ்ருதீன் மாமூதுவால் ஆதரிக்கப்பட்டவர் ---------------- ஆவார்.

5. கி. பி. 1420 இல் விஜயநகருக்கு வருகைபுரிந்த இத்தாலியப் பயணி ---------------- ஆவார்.

**III. பொருத்துக:**

அ – ஆ

1. கஜீராகோ – அ) ஒடிசா

2. கொனாரக் – ஆ) ஹம்பி

3. தில்வாரா – இ) மத்தியப்பிரதேசம்

4. விருப்பாக்சா – ஈ) ராஜஸ்தான்

**IV. சரியா அல்லது தவறா எனக் குறிப்பிடுக:**

1. பள்ளிச்சந்தம் என்பது சமண சமய நிறுவனங்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட நிலமாகும்.

2. நாணயங்களிலுள்ள உலோகங்களின் கலவை பேரரசின் அரசியல் நிலை குறித்த தகவல்களை நமக்கு வழங்குகின்றன.

3. தாமிரத்தின் விலை அதிகமாக இருந்ததால் அரசு ஆணைகளையும் அரசவை நிகழ்வுகளையும் பதிவு செய்வதற்கு குறைந்த செலவிலான பனையோலைகளும் காகிதமும் பயன்படுத்தப்பட்டன.

4. டோமிங்கோ பயஸ் எனும் போர்த்துகீசியப்பயணி கி. பி. 1522இல் சோழப்பேரரசுக்கு வருகை புரிந்தார்.

**V. பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. கூற்று: முகமது கோரி தனது தங்க நாணயங்களில் பெண் தெய்வமான இலட்சுமியின் உருவத்தைப் பதிப்பித்தார்.

காரணம்: இத்துருக்கிய படையெடுப்பாளர் மத விசயங்களில் தாராள மனப்பான்மை கொண்டவராய் இருந்தார்.

(அ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே

(ஆ) காரணம் கூற்றக்கான சரியான விளக்கம் இல்லை

(இ) கூற்று தவறு, காரணம் சரி

(ஈ) கூற்று, காரணம் இரண்டுமே தவறு

2. தவறான இணையைக் கண்டறிக:

1. மதுரா விஜயம் – கங்காதேவி

2. அபுல் பாசல் – அயினி அக்பரி

3. இபன் பதூதா – தாகுயூக்–இ–ஹிந்த்

4. அமுக்தமால்யதா – கிருஷ்ணதேவராயர்

3. பொருந்தாததை வட்டமிடுக:

பொறிப்புகள், பயணக்குறிப்புகள், நினைவுச் சின்னங்கள், நாணயங்கள்.

**விடைகள்**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. பொறிப்புகள், 2. தேவதானம், 3. சோழர், 4. தாஜ்–உல்–மா–அசிர், 5. இபன் பதூதா

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. உத்திரமேரூர், 2. முஹம்மது கோரி, 3. ஜிட்டல், 4. மின்கஜ் உஸ் சிராஜ், 5. நிக்கோலோ கோண்டி

**III. பொருத்துக:**

1. இ, 2. அ, 3. ஈ, 4. ஆ

**IV. சரியா அல்லது தவறா எனக் குறிப்பிடுக:**

1. சரி, 2. பொருளாதார நிலை, 3. சரி, 4. விஜயநகர பேரரசு

**V. பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே, 2. இபன் பதூதா– தாகுயூக்–இ ஹிந்த், 3. பயணக்குறிப்புகள்

## 7th Social Science Lesson 2

## 2] வடஇந்தியப் புதிய அரசுகளின் தோற்றம்

**உங்களுக்குத் தெரியுமா?**

மாளவத்தின் கூர்ஜரப் பிரதிகாரர்கள், தக்காணத்தைச் சேர்ந்த ராஷ்டிரகூடர்கள், வங்காளத்துப் பாலர்கள் ஆகிய மூவருள் ஒவ்வொருவரும் வளம் நிறைந்த கன்னோஜின் மீது அவர்களின் மேலாதிக்கத்தை நிறுவ முயன்றனர். இதனால் ஏற்பட்ட நீண்ட, நெடிய மும்முனைப் போட்டியில் இம்மூன்று சக்திகளும் பலவீனமடைந்தன.

பிருதிவிராஜ் சௌகானின் மறைவுக்குப் பின் சில நூற்றாண்டுகள் கழிந்த பின்பு சந்த் பார்தை எனும் கவிஞர் "பிருதிவிராஜ ராசோ" எனும் பெயரில் ஒரு நீண்ட காவியத்தை இயற்றினார். காவியம் கூறும் கதை பின்வருமாறு: கன்னோஜின் அரசனுடைய மகளுக்குத் திருமணம் செய்ய வேண்டும். அவள் தனது கணவனைத் தேர்வு செய்வதற்கெனச் சுயம்வரம் ஏற்பாடு செய்யப்பட்டது. ஏற்கெனவே பிருதிவிராஜனிடம் காதல் வயப்பட்டிருந்த இளவரசி அவரையே மணந்துகொள்ள விரும்பினாள். ஆனால் பிருதிவிராஜ் அவள்

தந்தையின் எதிரியாவார். பிருதிவிராஜை அவமானப்படுத்தும் நோக்கத்தில் கன்னோஜின் அரசர் அவருக்கு அழைப்பு அனுப்பவில்லை. மேலும் பிருதிவிராஜ் சௌகானைப் போன்று ஒரு சிலை செய்து தனது அரச சபையின் வாயிலில் வாயிற்காப்போனைப் போல நிறுத்தி வைத்தார். கூடியிருந்தோரெல்லாம் அதிர்ச்சி அடையும் வண்ணம் இளவரசி அங்கிருந்த இளவரசர்களை மறுத்து பிருதிவிராஜின் சிலைக்கு மாலையிட்டுத் தனது விருப்பத்தை வெளிப்படுத்தினாள். சற்று தொலைவில் மறைந்திருந்த பிருதிவிராஜ் இளவரசியை அழைத்துக்கொண்டு குதிரையில் தப்பினார். பின்னர் இருவரும் திருமணம் செய்து கொண்டனர்.

ரக்ஷாபந்தன் (ராக்கி) எனும் பண்பாட்டு மரபானது ராஜபுத்திரர்களுக்கு உரியதாகும். "ரக்ஷா" எனில் பாதுகாப்பு என்றும், "பந்தன்" என்பது கட்டுதல் அல்லது உறவு என்னும் பொருளாகும். இது சகோதரத்துவத்தையும், அன்பையும் கொண்டாடும் விழாவாகும். ஒரு பெண் ஒர் ஆடவனின் மணிக்கட்டில் ராக்கியைக் கட்டிவிட்டால் அப்பெண் அந்த ஆடவனை சகோதரனாகக் கருதுகிறாள் என்று பொருள். அப்படியான ஆடவர்கள் அப்பெண்களைப் பாதுகாக்கக் கடமைப்பட்டவர்கள் ஆவர். 1905ஆம் ஆண்டு வங்கப் பிரிவினையின்போது ரவீந்திரநாத் தாகூர் பெருமளவில் மக்கள் பங்கேற்ற ரக்ஷாபந்தன் விழாவைத் தொடங்கினார். அவ்விழாவில் இந்து மற்றும் முஸ்லீம் பெண்கள் அடுத்த சமூகத்தைச் சேர்ந்த ஆடவர் கைகளில் ராக்கியைக் கட்டி அவர்களைச் சகோதரர்களாக ஏற்க வைத்தார். இந்து, முஸ்லீம்களுக்கிடையே பிளவை ஏற்படுத்த ஆங்கிலேயர் மேற்கொண்ட முயற்சிகளுக்கு எதிராக இச்செயல்பாடு மேற்கொள்ளப்பட்டது.

**சிந்துவை அராபியர் கைப்பற்றியதும் அதன் தாக்கமும்:** கி. பி. (பொ. ஆ) 712ஆம் ஆண்டு உமையது அரசின் படைத்தளபதியான முகமது பின் காசிம் சிந்துவின் மீது படையெடுத்தார். சிந்துவின் அரசர் தாகீர், முகமது பின் காசிமால் தோற்கடிக்கபட்டுக் கொல்லப்பட்டார். சிந்துவின் தலைநகர் அரோர் கைப்பற்றப்பட்டது. காசிம் முல்தானையும் கைப்பற்றினார். சிந்துவில் நிர்வாக ஏற்பாடுகளைச் செய்தார். சிந்துப்பகுதிவாழ் மக்களுக்குப் "பாதுகாக்கப்பட்ட மக்கள்" எனும் தகுதி வழங்கப்பட்டது. மக்களின் வாழ்க்கையிலும் அவர்களின் மதங்களிலும் எவ்விதத் தலையீடும் செய்யப்படவில்லை. ஆனால் காசிம் வெகுவிரைவில் கலீஃபாவால் திரும்ப அழைக்கப்பட்டார். அராபிய அறிஞர்கள் சிந்துவிற்கு வந்து பல இந்திய இலக்கியங்களைக் கற்றனர். வானியல், தத்துவம், கணிதம், மருத்துவம் தொடர்பாகச் சமஸ்கிருத மொழியிலிருந்த பல நூல்களை அவர்கள் அராபிய மொழியில் மொழியாக்கம் செய்தனர். 0 முதல் 9 வரையிலான எண்களை அவர்கள் இந்தியாவிலிருந்தே கற்றுக்கொண்டனர் அதுவரையிலும் மேலை நாட்டினர் பூஜ்யத்தின் பயன்பாட்டை அறிந்திருக்கவில்லை. ஐரோப்பியர்கள் கணிதம் தொடர்பான அதிக அறிவை அராபியர் வாயிலாகப் பெற்றனர். பூஜ்யத்தின் முக்கியத்துவத்தை அவர்கள் இந்தியாவிலிருந்தே கற்றுக்கொண்டனர். மேலைநாட்டவரும் அராபியர்களும் சதுரங்க விளையாட்டை இந்தியர்களிடமிருந்தே கற்றுக்கொண்டதாக நம்பப்படுகிறது.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. "பிருதிவிராஜ ராசோ" எனும் நூலை எழுதியவர் யார்?

(அ) கல்ஹணர்

(ஆ) விசாகதத்தர்

(இ) ராஜசேகரர்

(ஈ) சந்த் பார்தை

2. பிரதிகார அரசர்களுள் முதல் தலைசிறந்த அரசர் யார்?

(அ) முதலாம் போஜா

(ஆ) முதலாம் நாகபட்டர்

(இ) ஜெயபாலர்

(ஈ) சந்திரதேவர்

3. கஜினி என்னும் ஒரு சிறிய அரசு எங்கு அமைந்திருந்தது?

(அ) மங்கோலியா

(ஆ) துருக்கி

(இ) பாரசீகம்

(ஈ) ஆப்கானிஸ்தான்

4. கஜினி மாமூதின் படையெடுப்பிற்கு முக்கியக் காரணம் யாது?

(அ) சிலை வழிபாட்டை ஒழிப்பது

(ஆ) இந்தியாவின் செல்வத்தைக் கொள்ளையடிப்பது

(இ) இந்தியாவில் இஸ்லாமைப் பரப்புவது

(ஈ) இந்தியாவில் ஒரு முஸ்லீம் அரசை நிறுவுவது

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. விக்கிரமசீலா பல்கலைக்கழகத்தைத் தோற்றுவித்தவர் ---------------- ஆவார்.

2. கி. பி. -----------இல் சிந்துவை அராபியர் கைப்பற்றினர்.

3. ஆஜ்மீர் நகரத்தை நிர்மாணித்தவர் ----------- ஆவார்.

4. காந்தர்யா கோவில் --------------ல் அமைந்துள்ளது.

**III. பொருத்துக:**

அ – ஆ

1. கஜீராகோ – அ) அபு குன்று

2. சூரியனார் கோவில் – ஆ) பந்தேல்கண்ட்

3. தில்வாரா கோவில் – இ) கொனாரக்

**IV. சரியா அல்லது தவறா எனக் குறிப்பிடுக:**

1. "ராஜபுத்ர" என்பது ஒரு லத்தீன் வார்த்தை ஆகும்.

2. அரசர் கோபாலர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

winmeen.com

3. அபுகுன்றில் அமைந்துள்ள கோவில் சிவபெருமானுக்குப் படைத்தளிக்கப்பட்டுள்ளது.

4. "ரக்ஷாபந்தன்" சகோதர உறவு தொடர்பான விழாவாகும்.

5. இந்தியர்கள் 0 முதல் 9 வரையிலான எண்களை அராபியர்களிடமிருந்து கற்றுக் கொண்டனர்.

**V. பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. கூற்று: கன்னோஜின் மீது ஆதிக்கத்தை நிறுவவே மும்முனைப் போராட்டம் நடைபெற்றது.

காரணம்: கன்னோஜ் மிகப்பெரும் நகரமாக இருந்தது.

(அ) காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமே

(ஆ) காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் அல்ல

(இ) கூற்று தவறு. காரணம் சரி

(ஈ) கூற்றும் காரணமும் தவறு

2. கூற்று I: மகிபாலரால் தனது நாட்டை வாரணாசியைக் கடந்து விரிவுபடுத்த முடியவில்லை.

கூற்று II: மகிபாலரும் முதலாம் ராஜேந்திர சோழனும் சமகாலத்தவர் ஆவார்.

(அ) I சரி

(ஆ) II சரி

(இ) I மற்றும் II சரி

(ஈ) I மற்றும் II தவறு

3. கூற்று: இந்தியாவில் இஸ்லாமியக் காலக்கட்டம் கி. பி. (பொ. ஆ) 712இல் அராபியர் சிந்துவைக் கைப்பற்றிய உடன் தொடங்கவில்லை.

காரணம்: கூர்ஜரப்பிரதிகாரர்கள் அராபியரைக் கடுமையாக எதிர்த்தனர்.

(அ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே

(ஆ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல

(இ) கூற்று சரி, காரணம் தவறு

(ஈ) கூற்று தவறு, காரணம் சரி

4. கூற்று: இரண்டாம் தரெய்ன் போரில் பிருதிவிராஜ் தோல்வியடைந்தார்.

காரணம்: ராஜபுத்திரர்களிடையே ஒற்றுமை இல்லை.

(அ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே

(ஆ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல

(இ) கூற்று சரி, காரணம் தவறு

(ஈ) கூற்று தவறு, காரணம் சரி

5. சரியானவற்றை தேர்வு செய்க:

1. "ரக்ஷாபந்தன்" மரபு ராஜபுத்திரர்களுடையது.

2. வங்கப்பிரிவினையின்போது ரவீந்திரநாத் தாகூர் பெருமளவில் மக்கள் பங்கேற்ற "ரக்ஷாபந்தன்" விழாவைத் தொடங்கினார்.

3. இந்துக்களையும் முஸ்லீம்களையும் பிரிப்பதற்காக ஆங்கிலேயர் மேற்கொண்ட முயற்சிகளுக்கு எதிரானதாக இது திட்டமிடப்பட்டது.

(அ) கூற்று 1 சரியானது

(ஆ) கூற்று 2 சரியானது

(இ) கூற்று 3 சரியானது

(ஈ) மேற்கண்ட அனைத்தும் சரியானவை

**விடைகள்**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. சந்த் பார்தை, 2. முதலாம் நாகபட்டர், 3. ஆப்கானிஸ்தான், 4. இந்தியாவின் செல்வத்தைக் கொள்ளையடிப்பது

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. தர்மபாலர், 2. 712, 3. சிம்மராஜ், 4. மத்தியபிரதேசம்

**III. பொருத்துக:**

1. இ, 2. ஆ, 3. அ

**IV. சரியா அல்லது தவறா எனக் குறிப்பிடுக:**

1. சமஸ்கிருதம், 2. சரி, 3. பந்தல்கண்ட், 4. சரி, 5. அரபியர்கள் இந்தியர்களிடமிருந்து கற்றுக்கொண்டனர்

**V. பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் அல்ல, 2. I மற்றும் II சரி, 3. காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல, 4. காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே, 5. மேற்கண்ட அனைத்தும் சரியானவை

## 7th Social Science Lesson 3

## 3] தென் இந்தியப் புதிய அரசுகள் பிற்காலச் சோழர்களும், பாண்டியர்களும்

**உங்களுக்குத் தெரியுமா?**

முதலாம் ராஜராஜனின் ஆட்சிக்காலத்தில் சோழர்களுக்கு கீழைச் சாளுக்கியர்களுக்கும் இடையிலான திருமண உறவு தொடங்கியது. அவருடைய மகளான குந்தவை சாளுக்கிய இளவரசர் விமலாதித்தனை மணந்தார். அவர்களின் மகனான ராஜராஜ நரேந்திரன் முதலாம் ராஜேந்திரனின் மகளான அம்மங்கா தேவியை மணந்தார். அவர்களின் மகனே முதலாம் குலோத்துங்கன் ஆவார்.

சைவத் துறவியான திருஞானசம்பந்தர் அரிகேசரியைச் சமண மதத்திலிருந்து சைவத்திற்கு மாற்றினார். மதம் மாறிய பின்னர் அரிகேசரி சுமார் 8000 சமணர்களைக் கழுவேற்றியதாகக் கூறப்படுகிறது. எண்ணிக்கை மிகைப்படுத்திக் கூறப்பட்டிருப்பினும், சைவத்திற்கு மாறிய பின்னர் அரிகேசரியின் சமண எதிர்ப்புப் போக்கு சந்தேகத்திற்கு இடமில்லாதது.

பாண்டிய அரசு "செல்வச் செழிப்பு மிக்க, உலகிலேயே மிக அற்புதமான பகுதியாகும்" என மார்க்கோ போலா புகழாரம் சூட்டுகிறார். இலங்கையோடு சேர்ந்து உலகத்தில் காணப்படும் பெரும்பாலான மாணிக்கக்கற்களையும் முத்துக்களையும் உற்பத்தி செய்கிறது என மேலும் கூறுகிறார். தன்னுடைய பயணக் குறிப்புகளில் "சதி" (உடன்கட்டை ஏறுதல்) நிகழ்வுகளையும் அரசர்களின் பலதார மணத்தையும் பதிவு செய்துள்ளார்.

விரிவான அளவில் இக்காலத்தில் நடைபெற்ற குதிரை வணிகம் குறித்து வாசப் என்பவர் பதிவு செய்துள்ளார். "10, 000 க்கும் மேற்பட்ட குதிரைகள் காயலிலும் ஏனைய இந்தியத் துறைமுகங்களிலும் இறக்குமதியாயின. அவற்றில் 1400 குதிரைகள் ஜமாலுதீன் பொறுப்பில் இனப்பெருக்கம் செய்து வளர்த்து வந்த குதிரைகளாகும். ஒவ்வொரு குதிரையின் சராசரி விலை சொக்கத் தங்கத்தினாலான 200 தினார்களாகும்" என அவர் எழுதுகிறார்.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. பிற்கால சோழ வம்சத்தை மீட்டெழச் செய்தவர் யார்?

(அ) விஜயாலயன்

(ஆ) முதலாம் ராஜராஜன்

(இ) முதலாம் ராஜேந்திரன்

(ஈ) அதிராஜேந்திரன்

2. கீழ்க்காணும் பாண்டிய அரசர்களுள், களப்பிரர் ஆட்சியை முடித்து வைத்தவர் என அறியப்படுபவர் யார்?

(அ) கடுங்கோன்

(ஆ) வீரபாண்டியன்

(இ) கூன்பாண்டியன்

(ஈ) வரகுணன்

3. கீழ்க்காண்பனவற்றுள் சோழர்களின் நிர்வாகத்தில் மிகச் சிறிய அலகு எது?

(அ) மண்டலம்

(ஆ) நாடு

(இ) கூற்றம்

(ஈ) ஊர்

4. விஜயாலயன் வழி வந்த சோழ வம்சத்தின் கடைசி அரசர் யார்?

(அ) வீர ராஜேந்திரன்

(ஆ) ராஜாதிராஜா

(இ) அதி ராஜேந்திரன்

(ஈ) இரண்டாம் ராஜாதிராஜா

5. சோழர்களின் கட்டடக்கலைக்கான எழுத்துக்காட்டை எங்குக் காணலாம்?

(அ) கண்ணாயிரம்

(ஆ) உறையூர்

(இ) காஞ்சிபுரம்

(ஈ) தஞ்சாவூர்

6. கீழ்க்காண்பனவற்றுள் எந்த இந்தியப் பகுதிக்கு மார்க்கோபோலோ 13ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் சென்றார்?

(அ) சோழ மண்டலம்

(ஆ) பாண்டிய நாடு

(இ) கொங்குப்பகுதி

(ஈ) மலைநாடு

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. ------------------ தஞ்சாவூரிலுள்ள புகழ்பெற்ற பிரகதீஸ்வரர் கோவிலை நிர்மாணித்தார்.

2. ---------------- வேதக் கல்லூரி ஒன்றை எண்ணாயிரத்தில் நிறுவினார்.

3. ---------------- வேள்விக்குடி செப்பேடுகளின் கொடையாளி ஆவார்.

4. பாண்டியப் பேரரசின் அரசுச் செயலகம் ---------------- என அறியப்பட்டது.

**III. பொருத்துக:**

அ – ஆ

1. மதுரை – அ) உள்நாட்டு வணிகர்

2. கங்கைகொண்ட சோழபுரம் – ஆ) கடல்சார் வணிகர்

3. அஞ்சு வண்ணத்தார் – இ) சோழர்களின் தலைநகர்

4. மணி–கிராமத்தார் – ஈ) பாண்டியர்களின் தலைநகர்

**IV. சரியா அல்லது தவறா எனக் குறிப்பிடுக:**

1. டெல்லி சுல்தானுக்குக் கட்டுப்பட்ட ஒரு முஸ்லீம் அரசு மதுரையில் உருவானது.

2. "கூடல் நகர் காவலன்" என்பது பாண்டிய அரசரின் பட்டமாகும்.

3. சோழ அரசு வைகையின் கழிமுகப்பகுதியில் அமைக்கப்பட்டிருந்தது.

4. முதலாம் குலோத்துங்கன் சாளுக்கிய – சோழ அரச வம்சத்தைச் சேர்ந்தவர்.

5. சோழ அரசரின் மூத்த மகன் யுவராஜன் என அழைக்கப்பட்டார்.

**V. பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. பிற்காலச் சோழர்கள் பற்றிய கீழ்க்காணும் கூற்றுகளில் எவை சரியானவை?

(1) அவர்கள் ஓர் உள்ளாட்சித் துறைத் தன்னாட்சி அமைப்பைக் கொண்டிருந்தனர்.

(2) அவர்கள் வலுவான கப்பற்படையைக் கொண்டிருந்தனர்.

(3) அவர்கள் பௌத்தத்தைப் பின்பற்றினர்.

(4) அவர்கள் பெரிய கோவில்களைக் கட்டினர்.

(அ) 1, 2 மற்றும் 3

(ஆ) 2, 3 மற்றும் 4

(இ) 1, 2 மற்றும் 4

(ஈ) 1, 3 மற்றும் 4

2. ராஜேந்திர சோழனைப் பற்றிய கீழ்க்காணும் கூற்றுகளில் எவை சரியானவை?

(1) அவர் கங்கைகொண்ட சோழன் எனும் பட்டத்தைச் சூட்டிக்கொண்டார்.

(2) அவர் தெற்கு சுமத்ராவைக் கைப்பற்றினார்.

(3) அவர் சோழர்களின் அதிகாரத்தை நிலைநிறுத்தினார் எனப் போற்றப்படுகிறார்.

(4) அவர் ஸ்ரீவிஜயத்தைக் கைப்பற்ற அவருடைய கப்பற்படை உதவியது.

(அ) 1 மற்றும் 2

(ஆ) 3 மற்றும் 4

(இ) 1, 2 மற்றும் 4

(ஈ) இவை அனைத்தும்

3. கூற்று: யுவராஜாக்கள் மாநிலங்களின் ஆளுநர்களாகப் பணியமர்த்தப்பட்டனர்.

காரணம்: நிர்வாகத்தில் பயிற்சி பெறுவதற்காக இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

(அ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே

(ஆ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல

(இ) கூற்று தவறு, காரணம் சரி

(ஈ) கூற்றும் காரணமும் தவறு

4. கீழ்காணும் நிர்வாகப் பிரிவுகளை இறங்கு வரிசையில் வரிசைப்படுத்தவும்

(1) நாடு (2) மண்டலம் (3) ஊர் (4) கூற்றம்

5. கீழ்காணும் நிகழ்வுகளைக் கால வரிசைப்படி எழுதவும்.

1. மாறவர்மன், வீரபாண்டியனைக் கூட்டு அரசராகப் பணியமர்த்தினார்.

2. உள்நாட்டுப் போர் தொடங்கியது.

3. மதுரையில் ஓர் இஸ்லாமிய அரசு உருவாக்கப்பட்டது.

4. மாறவர்மன் குலசேகரனுக்கு இரண்டு மகன்கள். ஒருவர் வீரபாண்டியன் மற்றொருவர் சுந்தர பாண்டியன்.

5. சுந்தரபாண்டியன் அலாவுதீன் கில்ஜியின் உதவியை நாடினார்.

6. மாலிக்கபூர் மதுரையின் மீது படையெடுத்தார்.

**விடைகள்**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. விஜயாலயன், 2. கடுங்கோன், 3. ஊர், 4. அதி ராஜேந்திரன், 5. தஞ்சாவூர், 6. பாண்டிய நாடு

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. முதலாம் ராஜராஜ சோழன், 2. முதலாம் ராஜேந்திர சோழன், 3. ஜடில பராந்தக நெடுஞ்சடையான், 4. எழுத்துமண்டபம்

**III. பொருத்துக:**

1. ஈ, 2. இ, 3. ஆ, 4. அ

**IV. சரியா அல்லது தவறா எனக் குறிப்பிடுக:**

1. சரி, 2. சரி, 3. காவிரி, 4. சரி, 5. சரி

**V. பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. 1, 2 மற்றும் 4, 2. இவை அனைத்தும், 3. காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே, 4. மண்டலம், நாடு, கூற்றம், ஊர், 5. மாறவர்மன் குலசேகரனுக்கு இரண்டு மகன்கள். ஒருவர் வீரபாண்டியன் மற்றொருவர் சுந்தர பாண்டியன், மாறவர்மன், வீரபாண்டியனைக் கூட்டு அரசராகப் பணியமர்த்தினார், உள்நாட்டுப் போர் தொடங்கியது, சுந்தரபாண்டியன் அலாவுதீன் கில்ஜியின் உதவியை நாடினார், மாலிக்கபூர் மதுரையின் மீது படையெடுத்தார், மதுரையில் ஓர் இஸ்லாமிய அரசு உருவாக்கப்பட்டது.

## 7th Social Science Lesson 4

## 4] டெல்லி சுல்தானியம்

**உங்களுக்குத் தெரியுமா?**

**சித்தூர் சூறையாடல் (1303):** சித்தூரில் ராஜபுத்திரப் படைகளை அலாவுதீனின் படைகள் திணறடித்த நிலையில் தோல்வியடைந்துவிடுவோம் என்ற சூழலில் கோட்டைக்குள் இருந்த ஆடவரும் பெண்டிரும் தங்களது பண்டைய மரபின்படி "ஜவ்ஹர்" எனப்படும் சடங்கை நடத்தினர், இதன் படி ஆடவர் கோட்டையை விட்டு வெளியேறிப் போர்க்களத்தில் மாள்வர். பெண்கள் தீப்புகுந்து தங்களை மாய்த்துக் கொள்வர்.

டெல்லியிலிருந்து தௌலதாபாத் செல்ல நாற்பது நாட்கள் நடந்தே செல்ல வேண்டும். பெரும்பாலான மக்கள் தௌலதாபாத் புறப்பட்டுச் சென்றனர். சிலர் ஒளிந்து கொண்டனர். அவர்கள் கண்டுபிடிக்கப்படுகையில் அவர்களில் ஒருவர் பார்வையற்றவராக இருந்தபோதும் மற்றொருவர் பக்கவாத நோயாளியாக இருந்தபோதும் கொடூரமான தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டனர். எட்டு அல்லது பத்து மைல் அளவு பரவியிருந்த அந்நகரைப் பற்றி ஒரு வரலாற்றறிஞர் "அனைத்தும் அழிக்கப்பட்டன. நகரத்தின் அரண்மனைகளில், கட்டடங்களில், புறநகர் பகுதிகளில் என எங்கும் ஒரு நாயோ, பூனையோ கூட விட்டுவைக்கப்படவில்லை எனும் அளவுக்கு முழுமையாகப் பாழானது" எனக் குறிப்பிட்டுள்ளார்.

**இஸ்லாமியக் கலை, கட்டடக்கலை:** உயர்வகுப்பைச் சேர்ந்த முஸ்லீம் பிரபுக்கள், அதிகாரிகள், வீரர்கள் ஆகியோர் தங்கள் குடியிருப்புக் கட்டடங்களை முதலில் நகரங்களிலும் புறநகர்ப் பகுதிகளிலும் கட்டிக் கொண்டனர். அவற்றைச் சுற்றிப் பேரரசு பாணியிலான அழகு மிக்க மசூதிகளை டெல்லி முஸ்லீம் ஆட்சியாளர்கள் கட்டினர். மசூதிகளும் மதரசாக்களும் (கல்வி நிலையங்கள்) கட்டட வடிவத்தில் வேறுபட்டிருந்தன. குரானிலுள்ள வரிகளைச் செதுக்கி நேர்த்தியாகவும் நளினமாகவும் அலங்கரிக்கப்பட்ட கதவுகளும், சுவர்களும் அக்கட்டங்களுக்குத் தனித்தன்மையான தோற்றத்தை வழங்கின. அக்கட்டடங்களின் வடிவங்கள் பாரசீகப் பாணியிலும் அலங்கார வேலைப்பாடுகள் இந்தியப் பாணியிலும் அமைந்திருந்தன. எனவே அப்பாணி இந்தோ–சாராசானிக் கலைவடிவம் என அழைக்கப்பட்டது. குதுப்மினார். ஆலெய் தர்வாசா, குவ்வத் உல் இஸ்லாம் மசூதி, மோத்தி மசூதி, இல்துமிஷ், பால்பன் ஆகியோரின் கல்லறைகள், தௌலதாபாத், பிரோஷ் ஷா பாத் ஆகிய இடங்களிலுள்ள கோட்டைகள் என அனைத்தும் அப்பாணியில் அமைக்கப்பட்டனவாகும்.

**<u>I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:</u>**

1. ----------- மம்லுக் அரச வம்சத்திற்கான அடிக்கல்லை நாட்டினார்.

(அ) முகமது கோரி

(ஆ) ஜலாலுதீன்

(இ) குத்புதீன் ஐபக்

(ஈ) இல்துமிஷ்

2. குத்புதீன் தனது தலைநகரை ------------- விருந்து டெல்லிக்கு மாற்றினார்.

(அ) லாகூர்

(ஆ) புனே

(இ) தௌலதாபாத்

(ஈ) ஆக்ரா

(ஆ) ஆண் மற்றும் பெண் உறுப்பினர்களை கொண்ட சட்டமன்றம்.

(இ) மேலவை மற்றும் கீழவையை கொண்ட சட்டமன்றம்

(ஈ) கவர்னரை தலைவராகவும் சட்ட மன்ற உறுப்பினர்களையும் கொண்ட அவை

4. கூற்று: இந்தியா கூட்டாட்சி முறை அரசாங்கத்தை கொண்டது.

காரணம்: இந்திய அரசியலமைப்பின் அதிகாரம் மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

(அ) கூற்று சரி, கூற்றிற்கான விளக்கமும் சரியானது

(ஆ) கூற்று சரி, கூற்றிற்கான விளக்கம் சரியல்ல

(இ) கூற்று சரி, விளக்கம் தவறு

(ஈ) கூற்று மற்றும் விளக்கம் தவறு

**விடைகள்**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. 25 வயது, 2. 28, 3. அ மற்றும் ஆ, 4. ஆளுநர், 5. ஆளுநர், 6. அ மற்றும் ஆ, 7. சட்டமன்றம், நிருவாகத்துறை, நீதித்துறை

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. இந்திய குடியரசு தலைவரால், 2. முதலமைச்சராக, 3. உயர்நீதிமன்றம், 4. சட்டமன்ற உறுப்பினர், 5. சட்டமன்ற உறுப்பினர், 6. எதிர்க்கட்சி உறுப்பினர்

**III. பொருத்துக:**

1. ஈ, 2. இ, 3. உ, 4. ஆ, 5. அ

**IV. பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. 25 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும், 2. சரி, சரி, மக்களுடைய பிரதிநிதிகள், 3. மேலவை மற்றும் கீழவையை கொண்ட சட்டமன்றம், 4. கூற்று சரி, கூற்றிற்கான விளக்கமும் சரியானது

winmeen.com

7th Social Science Lesson 17

17] ஊடகமும் ஜனநாயகமும்

**உங்களுக்குத் தெரியுமா?**

அச்சு இயந்திரம் ஜோஹன்னஸ் குட்டன்பெர்க் என்பவரால் 1453இல் கண்டுபிடிக்கப்பட்டது.

ஊடகத்தின் வகைப்பாடு: குறுகிய தொடர்பு ஊடகம்–கேபிள் தொலைக்காட்சி, நேரடி அஞ்சல், கருத்தரங்கு. தொலைத்தொடர்பு ஊடகம்–திரைப்படங்கள் தொலைக்காட்சி வானொலி. அச்சு ஊடகம்–செய்தித்தாள்கள், இதழ்கள், பத்திரிக்கைகள் புத்தகங்கள், சுவரொட்டிகள், அறிக்கைகள். இணைய ஊடகம்–கூகுள் இணைய தளங்கள் மற்றும் வலைப்பதிவுகள். சமூக ஊடகம்–கீச்சகம், முகநூல், புலனம்/கட்செவி அஞ்சல் மற்றும் படவரி

அகில இந்திய வானொலி: 1956ஆம் ஆண்டிலிருந்து ஆகாச வானி (வானிலிருந்து வரும் ஒலி) என்ற பெயரில் வானொலி ஒலிபரப்பை செய்து வருகிறது. இது 1936ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

மக்களாட்சியின் கோட்பாடு: மக்களாட்சி என்றால் மக்களால் ஆட்சி செய்யப்படுதல் என்பதாகும். இது இரண்டு கிரேக்க சொற்களால் ஆனது. டெமோஸ் (Demos) மக்களைக் குறிக்கிறது. க்ராடோஸ் (Kratos) அதிகாரம் அல்லது ஆட்சி என்று பொருள்.

உங்கள் பகுதியின் உள்ளூர் ஊடகங்கள் சிலவற்றின் பெயரினை குறிப்பிடுக.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. கீழ்க்கண்டவற்றில் அச்சு ஊடகத்தின் கீழ் வருவது எது?

(அ) வானொலி

(ஆ) தொலைக்காட்சி

(இ) செய்தித்தாள்

(ஈ) இணையதளம்

2. கீழ்க்கண்டவற்றில் ஒலிபரப்பு ஊடகம் என்பது

(அ) இதழ்கள்

(ஆ) அறிக்கைகள்

(இ) நாளிதழ்கள்

(ஈ) வானொலி

3. உலகினை மக்களின் அருகாமையில் கொண்டு வந்த ஊடகம்

(அ) தட்டச்சு

(ஆ) தொலைக்காட்சி

(இ) தொலைப்பேசி

(ஈ) இவற்றில் எதுவும் இல்லை.

4. வெகுஜன ஊடகம் என்பது

(அ) வானொலி

(ஆ) தொலைக்காட்சி

(இ) அ மற்றும் ஆ

(ஈ) இவற்றில் எதுவுமில்லை

5. ஊடகம் ஏன் சுதந்திரமாக செயல்பட வேண்டும்

(அ) நிறைய பணம் ஈட்ட

(ஆ) நிறுவனத்தை ஊக்கப்படுத்த

(இ) நடுநிலையான தகவலை தருவதற்கு

(ஈ) இவற்றில் எதுவுமில்லை.

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. உலகத்தினை சிறியதாகவும், மிக அருகாமையிலும் கொண்டு வந்தது -----------

2. ஒவ்வொரு தனிமனிதனும் ------------ ஆகும்.

3. அச்சு இயந்திரம் ------------- என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது

4. நமது வாழ்க்கையை தீர்மானிக்கும் மதிப்பீடகளின் தொகுப்பு ----------- ஆகும்.

5. இந்திய அரசின் வானொலி ஒலிபரப்பு நிறுவனம் -------------

**III. பொருத்துக:**

1. குறு அளவிலான ஊடகம் – அ) கூகுள் இணையம்

2. சமூக ஊடகம் – ஆ) சுவரொட்டிகள்

3. அச்சு ஊடகம் – இ) கருத்தரங்கு

4. இணைய ஊடகம் – ஈ) திரைப்படங்கள்

5. ஒலிபரப்பு ஊடகம் முகநூல்

**IV. பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. கூற்று: அச்சு ஊடகம் மக்களின் பல்கலைக்கழகம் என கருதப்படுகிறது.

காரணம்: பொதுமக்களுக்கு தகவல்களை வழங்குவதிலும், கல்வியறிவு ஊட்டுவதிலும் பெரும்பங்கு வகிக்கிறது மற்றும் பொது மக்களின் பாதுகாவலனாகவும் செயல்படுகிறது.

(அ) கூற்று சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமாகும்.

(ஆ) கூற்று சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல

(இ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி

(ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.

2. தவறான வாக்கியத்தை திருத்தி எழுதுக:

(அ) செய்தித்தாள்கள் (ஆ) நாளிதழ்கள் (இ) கீச்சகம் (ஈ) சுவரொட்டிகள்

3. பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:

(அ) ஊடகம் என்பது பொதுவாக ஒருவருக்கொருவர் தகவல்களை பகிர்ந்து கொள்ளும் சாதனம் ஆகும்.

(ஆ) ஊடகம் மிகவும் சக்திவாய்ந்த நிறுவனமாகும்.

(இ) ஊடகம் மக்களிடம் பொது கருத்தை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

(ஈ) ஊடகத்திற்கு எந்த பொறுப்பும் கிடையாது

i) அ, ஆ மற்றும் இ சரி

ii) அ, ஆ மற்றும் ஈ சரி

iii) ஆ, இ மற்றும் சரி

iv) அ, ஆ மற்றும் ஈ சரி

**விடைகள்**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. செய்தித்தாள், 2. வானொலி, 3. தொலைப்பேசி, 4. அ மற்றும் ஆ, 5. நடுநிலையான தகவலை தருவதற்கு

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. ஊடகம், 2. ஊடகத்தின் வெளிப்பாடு, 3. ஜோஷன்னஸ் குட்டன்பெர்க், 4. நெறிமுறை, 5. ஆகாசவானி

**III. பொருத்துக:**

1. 1. இ, 2. உ, 3. ஆ, 4. அ, 5. ஈ

**IV. பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. கூற்று சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமாகும், 2. கீச்சகம், 3. அ, ஆ மற்றும் இ சரி

## 7th Social Science Lesson 18

## 18] புதிய சமயக் கருத்துக்களும் இயக்கங்களும்

உங்களுக்குத் தெரியுமா?

**வைணவ அடியார்கள் (12 ஆழ்வார்கள்):** முதல் மூன்று ஆழ்வார்கள்: பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார். ஏனைய ஆழ்வார்கள்: திருமழிசையாழ்வார், பெரியாழ்வார், தொண்டரடிப்பொடி ஆழ்வார், திருமங்கை ஆழ்வார், திருப்பண் ஆழ்வார், குலசேகர ஆழ்வார், நம்மாழ்வார், மதுரகவி ஆழ்வார், ஆண்டாள்.

**சைவ அடியார்கள் (63 நாயன்மார்கள்):** மரபுவழிக் கதையின்படி நாயன்மார்கள் 63 பேராவர். அவர்களில் ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் (மும்மூர்த்திகள் என அழைக்கப்படுபவர்கள்) ஆகியோர் தென்னிந்தியக் கோவில்களில் சிலை வழிபாடு செய்யப்படுகின்றனர். நாயன்மார்களின் பாடல்கள் அனைத்தையும் நம்பி ஆண்டார் நம்பி (கி. பி. 1000) என்பார் தொகுத்ததாகக் கூறப்படுகிறது. அதுவே சைவப்புனித நூல்களான

திருமுறையின் அடிப்படையாக உள்ளது. திருமுறை 12 நூல்களைக் கொண்டுள்ளது. அவற்றில் 11 நூல்கள் நம்பி ஆண்டார் நம்பியால் தொகுக்கப்பட்டவையாகும். சேக்கிழாரின் பெரிய புராணம் 12வது நூலாகும்.

பதினேழாம் நூற்றாண்டில் மகாராஷ்டிராவில் வாழ்ந்த துக்காராம் கவிஞரும் திருத்தொண்டருமாவார். விஷ்ணுவின் அவதாரமான விதோபா குறித்து அவர் இயற்றிய ஆன்மீகப் பாடல்களுக்காகவே (அபங்கா அல்லது கீர்த்தனைகள்) அவர் நன்கு அறியப்பட்டிருந்தார். மகாராஷ்டிராவில் சோலாப்பூர் மாவட்டத்திலுள்ள பந்தர்பூர் அல்லது பண்டரிபுரத்தில் விதோபா/பாண்டு ரங்கா கோவில் உள்ளது. வங்காளத்திற்கு சைதன்ய தேவா எவ்விதமோ அதைப் போன்றே மகாராஷ்டிராவுக்கு துக்காராம் விளங்குகிறார்.

சூபியிஸம் சூபி எனும் சொல் 'சுப்' எனும் சொல்லில் இருந்து தோன்றியதாகும். அதன் பொருள் கம்பளி ஆகும். சூபிக்கள் சொர சொரப்பான முரட்டுக் கம்பளியாலான உடைகளை அணிந்ததால் சூபிக்கள் என அழைக்கப்பட்டனர். சூபியிஸம் அடிப்படையில் இஸ்லாமியத்தைச் சேர்ந்ததாக இருந்தாலும் அதன் மீது இந்து, பௌத்த (மகாயான) சமயக் கருத்துக்களின் தாக்கத்தைப் பெற்றிருந்தது. உலேமாக்களின் கடுமையான ஒழுக்க விதிகளை சூபியிஸம் மறுத்தது. மடாலய வாழ்க்கையை ஒத்த துறவு வாழ்வை மேற்கொண்ட சூபிக்கள் சமுதாயத்திற்கு வெளியே செயல்பட்டனர்.

**<u>I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:</u>**

1. கீழ்க்காண்பவருள் யார் தன்னை தாய் யசோதாவாக பாவித்துக் கொண்டு கிருஷ்ணனின் மேல் பாடல்களைப் புனைந்துள்ளார்?

(அ) பொய்கை ஆழ்வார்

(ஆ) பெரியாழ்வார்

(இ) நம்மாழ்வார்

(ஈ) ஆண்டாள்

2. அத்வைதம் எனும் தத்துவத்தை போதித்தவர் யார்?

(அ) ராமானுஜர்

(ஆ) இராமாநந்தர்

(இ) நம்மாழ்வார்

(ஈ) ஆதி சங்கரர்

3. பக்திச் சிந்தனையை ஒரு மக்கள் இயக்கமாக வட இந்தியாவில் பரவச் செய்தவர் யார்?

(அ) வல்லபாச்சாரியார்

(ஆ) இராமானுஜர்

(இ) இராமாநந்தா

(ஈ) சூர்தாஸ்

4. சிஸ்டி அமைப்பை இந்தியாவில் பிரபலமாக்கியவர் யார்?

(அ) மொய்னுதீன் சிஸ்டி

(ஆ) சுரவார்டி

(இ) அமீர் குஸ்ரு

(ஈ) நிஜாமுதின் அவுலியா

5. சீக்கியர்கள் தங்களின் முதல் குரு என யாரைக் கருதுகின்றனர்?

(அ) லேனா

(ஆ) குரு அமீர் சிங்

(இ) குரு நானக்

(ஈ) குரு கோவிந் சிங்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. பெரியாழ்வாரின் தொடக்க காலப் பெயர் ---------

2. சீக்கியர்களின் புனித நூல் -------ஆகும்.

3. மீராபாய் -------- என்பாரின் சீடராவார்

4. ------ என்பாரின் தத்துவம் விசிஷ்டாத்வைதம் என அறியப்படுகிறது

5. தர்பார் சாகிப் குருத்வாரா பாகிஸ்தானின் ----- என்ற இடத்தில் அமைந்துள்ளது.

**III. பொருத்துக:**

1. பாகல் – அ) கபீர்

2. இராமசரிதமானஸ் – ஆ) இராமானுஜர்

3. ஸ்ரீவைஷ்ணவம் – இ) அப்துல் வகித் அபுநஜிப்

4. கிரந்தவளி – ஈ) குரு கோவிந் சிங்

5. சுரவார்டி – உ) துளசிதாசர்

**IV. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. ஆண்டாள் – திருவில்லிபுத்தூர்

2. துக்காராம் – வங்காளம்

3. சைதன்யதேவா – மகாராஷ்டிரா

4. பிரம்ம சூத்திரம் – வல்லபாச்சாரியார்

5. குருத்வாராக்கள் – சீக்கியர்கள்

2. கூற்று: குரு கோவிந் சிங்கிற்குப் பின்னர் புனித நூலான குரு கிரந்த் சாகிப் குருவாகக் கருதப்பட்டது

காரணம்: குரு கிரந்த் சாகிப் நூலைத் தொகுத்தவர் குரு கோவிந் சிங்

(அ) காரணம், கூற்றின் சரியான விளக்கமல்ல

(ஆ) காரணம், கூற்றை சரியாக விளக்குகிறது

(இ) கூற்று சரி, காரணம் தவறு

(ஈ) கூற்று, காரணம் இரண்டும் தவறு

3. பொருந்தாததை வட்டமிடுக:

பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், நம்மாழ்வார்

**V. சரியா அல்லது தவறா எனக் குறிப்பிடுக:**

1. இஸ்லாமியப் பண்பாடு பரவ சூபியிஸம் காரணமாயிற்று

2. இடைக்காலத்தின் தொடக்கத்தில் நன்கறியப்பட்டிருந்த சிஸ்டி அமைப்பைச் சார்ந்த சூபி, நிஜாமுதீன் அவுலியா என்பவராவார்

3. குருநானக், சீக்கியர்களின் முதல் குருவாகக் கருதப்படுகிறார்

4. கடவுளை உய்த்துணர உணர்சிகரமான பக்தியும் தீவிர தியானமுமே சாத்தியம் என சூபிக்கள் நம்பினர்

5. அடிப்படை தமிழ் சைவப் புனித நூல்கள் 12 ஆகும்.

**விடைகள்:**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. பெரியாழ்வார், 2. ஆதி சங்கரர், 3. இராமாநந்தர், 4. மொய்னுதீன் சிஸ்டி, 5. குரு நானக்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. விஷ்ணு சித்தர், 2. குருகிரந்த்சாகிப், 3. ரவிதாஸ், 4. இராமுனுஜர், 5. கர்தார்ப்பூர்

**III. பொருத்துக:**

1. ஈ, 2. உ, 3. ஆ, 4. அ, 5. இ

**IV. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. ஆண்டாள் – திருவில்லிபுத்தூர், குருத்வாராக்கள் – சீக்கியர்கள், 2. கூற்று சரி, காரணம் தவறு, 3. ஆண்டாள்

**V. சரியா அல்லது தவறா எனக் குறிப்பிடுக:**

1. தவறு, 2. சரி, 3. சரி, 4. சரி, 5. சரி

7th Social Science Lesson 19

## 19] தமிழ்நாட்டில் கலையும் கட்டடக் கலையும்

**உங்களுக்குத் தெரியுமா?**

1984இல் கடற்கரைக் கோவில் வளாகம் உட்பட மாமல்லபுரத்திலுள்ள நினைவுச் சின்னங்களும் கோவில்களும் மொத்தமாக உலகப் பாரம்பரிய இடமென யுனெஸ்கோவால் (UNESCO) அங்கீகரிக்கப்பட்டது.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. தென்னிந்தியாவில் உள்ள மிகப்பழமையான கட்டுமானக் கோவில் எது?

(அ) கடற்கரைக் கோவில்

(ஆ) மண்டகப்பட்டு

(இ) கைலாசநாதர் கோவில்

(ஈ) வைகுந்த பெருமாள் கோவில்

2. மாமல்லபுரத்திலுள்ள நினைவுச் சின்னங்களும் கோவில்களும் யுனெஸ்கோவால் எப்போது அங்கீகரிக்கப்பட்டது?

(அ) 1964

(ஆ) 1994

(இ) 1974

(ஈ) 1984

3. முற்காலச் சோழர் கட்டடக்கலையின் சிறப்பம்சம் யாது?

(அ) புடைப்புச் சிற்பங்கள்

(ஆ) விமானங்கள்

(இ) பிரகாரங்கள்

(ஈ) கோபுரங்கள்

4. அழகிய நம்பி கோவில் எங்கமைத்துள்ளது?

(அ) திருக்குறுங்குடி

(ஆ) மதுரை

(இ) திருநெல்வேலி

(ஈ) திருவில்லிபுத்தூர்

5. வைகுண்ட பெருமாள் கோயிலைக் கட்டியவர் யார்?

(அ) மகேந்திரவர்மன்

(ஆ) நரசிம்மவர்மன்

(இ) ராஜசிம்மன்

(ஈ) இரண்டாம் ராஜராஜன்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. பல்லவ அரசர் மகேந்திரவர்மனால் முதன்முதலாய் கட்டப்பட்ட குடைவரைக் கோவில் ----- என்ற இடத்தில் உள்ளது.

2. முற்கால சோழர் கட்டடக் கலை ------ பாணியைப் பின்பற்றியது

3. மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் உள்ள மிகவும் புகழ்பெற்ற மண்டபம் --------- ஆகும்

4. பிற்கால சோழர் காலம் பொலிவுமிக்க ------ பெயர் பெற்றது.

5. விஜயநகர கால கட்டடக்கலையின் தனித்துவ அடையாளம் --------- ஆகும்.

**III. பொருத்துக:**

1. ஏழு கோவில்கள் – அ) மதுரை

2. இரதி மண்டபம் – ஆ) தாராசுரம்

3. ஐராவதீஸ்வரர்கோவில் – இ) திருக்குறுங்குடி

4. ஆதிநாதர் கோவில் – ஈ) கடற்கரைக்கோவில்

5. புதுமண்டபம் – உ) ஆழ்வார் திருநகரி

**IV. தவறான இணையைக் கண்டறிக:**

1. (1) கிருஷ்ணாபுரம் கோவில் – திருநெல்வேலி

(2) கூடலழகர் கோவில் – ஆழ்வார் திருநகரி

(3) சேதுபதிகள் – மதுரை நாயக்க அரசின் சிற்றரசர்கள்

2. கூற்று: இராமேஸ்வரம் கோவிலின் சிறப்புமிக்க பிரகாரங்கள் நம் கவனத்தை ஈர்ப்பதாய் அமைந்துள்ளன.

காரணம்: உலகிலேயே மிக நீளமான கோவில் பிரகாரங்களை இக்கோவில் கொண்டுள்ளது.

(அ) காரணம், கூற்றை விளக்கவில்லை

(ஆ) காரணம், கூற்றை விளக்குகின்றது

(இ) கூற்று சரி, காரணம் தவறு

(ஈ) கூற்று, காரணம் இரண்டும் தவறு

3. பொருந்தாததைக் இணையைக் கண்டறிக:

திருவில்லிபுத்தூர் அழகர்கோவில், ஸ்ரீரங்கம், காஞ்சிபுரம், திருவண்ணாமலை

4. பின்வரும் காலத்திற்குப் பெயரிடுக:

(அ) கி. பி. 600–850–

(ஆ) கி. பி 850–1100–

(இ) கி. பி. 1100–1350–

(ஈ) கி. பி. 1350–1600–

5. சரியான வாக்கியங்களைக் கண்டுபிடி:

1. மிகப்பெரும் கருங்கல் பாறையின் மீது புடைப்புச் சிற்பமாக அர்ச்சுனன் தவமிருக்கும் காட்சி செதுக்கப்பட்டுள்ளது.

2. பல்லவர் கால கட்டடக்கலைப் பாணியில் மதுரை மீனாட்சி அம்மன் கோவில் அமைந்துள்ளது.

3. பிள்ளையார்பட்டியிலுள்ள குகைக் கோவில் பிற்கால பாண்டியரின் பங்களிப்பாகும்.

4. மதுரை நாயக்க அரசின் சிற்றரசர்களான சேதுபதிகள் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்கு சிறந்த பங்களிப்பைச் செய்துள்ளனர்.

**V. சரியா அல்லது தவறா எனக் குறிப்பிடுக:**

1. இராஜசிம்மன் காஞ்சி கைலாசநாதர் கோயிலைக் கட்டினார்.

2. முற்கால பாண்டியர், பிற்காலச் சோழரின் சமகாலத்தவர் ஆவார்

3. பாண்டியக் கட்டக்கலையின் சிறப்பம்சமாய் திகழ்வது குடைவரை மற்றும் கட்டுமானக் கோவில்கள் ஆகும்.

4. பிரகதீஸ்வரர் கோவில் இராஜேந்திர சோழனால் கட்டப்பட்டது.

5. தாதாபுரம் கோவிலில் விஜயநகர மற்றும் நாயக்கர் கால ஓவியங்களைக் காண முடியும்.

**விடைகள்:**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. கடற்கரைக் கோவில், 2. 1984, 3. விமானங்கள், 4. திருக்குறுங்குடி, 5. இரண்டாம் நந்திவர்மன்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. மண்டகப்பட்டு, 2. செம்பியன் மகாதேவி, 3. புதுமண்டபம், 4. கோபுரங்கள், 5. மண்டபங்கள்

**III. பொருத்துக:**

1. ஈ, 2. இ, 3. ஆ, 4. உ, 5. அ

**IV. தவறான இணையைக் கண்டறிக:**

1. கூடலழகர் கோவில் – ஆழ்வார் திருநகரி, 2. காரணம், கூற்றை விளக்குகின்றது, 3. ஸ்ரீரங்கம், 4. அ) பல்லவர் காலம், ஆ) முற்கால சோழர்கள், இ) பிற்கால சோழர்கள், ஈ) விஜயநகர/ நாயக்கர்களின் காலம், 5. மிகப்பெரும் கருங்கல் பாறையின் மீது புடைப்புச் சிற்பமாக அர்ச்சுனன் தவமிருக்கும் காட்சி செதுக்கப்பட்டுள்ளது, பிள்ளையார்பட்டியிலுள்ள குகைக் கோவில் பிற்கால பாண்டியரின் பங்களிப்பாகும்.

**V. சரியா அல்லது தவறா எனக் குறிப்பிடுக:**

1. சரி, 2. சமகாலத்தவர் அல்ல, 3. சரி, 4. சரி, 5. காணமுடியாது

7th Social Science Lesson 20

20] தமிழகத்தில் சமணம், பௌத்தம், ஆசீவகத் தத்துவங்கள்

**உங்களுக்குத் தெரியுமா?**

**சமணத்தின் ஐம்பெரும் உறுதிமொழிகள்:** 1. எந்த உயிரினத்தையும், துன்புறுத்தாமலிருப்பது – அகிம்சை. 2. உண்மை – சத்யா; 3. திருடாமை – அசௌர்யா; 4. திருமணம் செய்து கொள்ளாமை – பிரம்மச்சரியா; 5. பணம், பொருள், சொத்துக்கள் மீத ஆசை கொள்ளாமை – அபரிக்கிரகா.

கல்பசூத்ராவின் ஜைனசரிதா எனும் சமண நூல் சமண தீர்த்தங்கரர்களின் வாழ்க்கை வரலாறுகளை உள்ளடக்கமாகக் கொண்டுள்ளது. குறிப்பாக சமண சமயத்தை நிறுவியவரும் முதல் தீர்த்தங்கரருமான பார்சவநாதர், கடைசியும் 24வது தீர்த்தங்கரருமான மகாவீரர் ஆகியோரின் வரலாறுகள் இதில் இடம் பெற்றுள்ளன. இந்நூலின் ஆசிரியராகக் கருதப்படும் பத்ரபாகு, சந்திரகுப்த மௌரியரோடு மைசூருக்குப் புலம்பெயர்ந்து (ஏறத்தாழ கி. மு. 296) பின் அங்கேயே குடியமர்ந்தார்.

நிர்வாண நிலையை அடைந்து அதன் பின்னர் இவ்வுலகிற்கும் அடுத்த உலகத்திற்குமிடையே பாதை அமைப்போரே தீர்த்தங்கரர்கள் ஆவர்.

2011ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் சமணர்களின் எண்ணிக்கை 83, 359 ஆகும். மொத்த மக்கள்தொகையில் இது 0. 12 விழுக்காடாகும்.

விகாரா எனும் சமஸ்கிருதச் சொல்லுக்கு 'வாழ்விடம்' அல்லது 'இல்லம்' என்று பொருள். தொடக்கத்தில் சுற்றியலைந்து திரியும் துறவிகள் இவற்றை மழைக்காலங்களின் போது தங்குமிடங்களாகப் பயன்படுத்தினர். பணம் படைத்த, சாமானிய பௌத்தர்ளால் வழங்கப்பட்ட கொடைகளின் மூலம் இவை கல்வி மையங்களாக மாற்றம் பெற்றன. அரசர்கள் அளித்த ஆதரவினால் இஸ்லாமிய ஆட்சிக்கு முந்தைய இந்தியா, பல விகாரைகளைக் கொண்ட நாடாக விளங்கியது. அவை பல்கலைக்கழகக் கல்வியை வழங்கியதோடு, புனித நூல்களின் கருவூலச் சேகரங்களாகவும் திகழ்ந்தன. நாளந்தாவைப் போன்றே பல விகாரைகள் உலகப்புகழ் பெற்றவையாகும்.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. சமணப்பேரவை முதன்முதலில் எங்கு கூடி தங்களின் சமய போதனைகளையும் ஒழுக்க விதிகளையும் தொகுக்க முற்பட்டனர்?

(அ) பாடலிபுத்திரம்

(ஆ) வல்லபி

(இ) மதுரா

(ஈ) காஞ்சிபுரம்

2. ஆகம சூத்திரங்கள் எம் மொழியில் எழுதப்பட்டன?

(அ) அர்த்த–மகதி பிராகிருதம்

(ஆ) இந்தி

(இ) சமஸ்கிருதம்

(ஈ) பாலி

3. கீழ்க்கண்டவற்றுள் எது களப்பிரர்களால் ஆதரிக்கப்பட்டது?

(அ) புத்தமதம்

(ஆ) சமணமதம்

(இ) ஆசீவகம்

(ஈ) இந்து மதம்

4. தலையணைப்பகுதி செதுக்கப்படாமல் உள்ள கற்படுக்கைகளை எங்கு காணலாம்?

(அ) வேலூர்

(ஆ) காஞ்சிபுரம்

(இ) சித்தன்னவாசல்

(ஈ) மதுரை

5. கழுகு மலை குடைவரைக் கோவில் யாரால் கட்டப்பட்டதாகக் கருதப்படுகிறது?

(அ) மகேந்திரவர்மன்

(ஆ) பராந்தக நெடுஞ்சடையான்

(இ) பராந்தக வீரநாராயண பாண்டியன்

(ஈ) இரண்டாம் ஹரிஹரர்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. தமிழ் நாட்டிலுள்ள சமணச் சிலைகளில் மிக உயரமாகக் கருதப்படும் சிலை ----------

2. புத்த சரிதத்தை எழுதியவர் ---------- ஆவார்.

3. ------------- நூற்றாண்டில் சீனப் பயணி யுவான்சுவாங் பல்லவ நாட்டிற்கு வந்திருந்தார்.

4. பௌத்தம் சரிவைச் சந்தித்துக் கொண்டிருக்கும் சமயம் என -------- எடுத்துரைக்கின்றது

5. மௌரியப் பேரரசர் அசோகரும் அவருடைய பேரன் தசரதாவும் ---------- ஆதரித்தனர்.

**III. பொருத்துக:**

1. கல்ப சூத்ரா – அ) திருத்தக்கத் தேவர்

2. சீவகசிந்தாமணி – ஆ) மதுரை

3. நேமிநாதர் – இ) நாகசேனர்

4. மிலிந்தபன்கா – ஈ) பத்ரபாகு

5. கீழக்குயில் குடி 22வது தீர்த்தங்கரர்

**IV. பொருந்தாததை வட்டமிடுக:**

1. திருப்பருத்திக் குன்றம், கீழக்குயில் குடி, கழுகுமலை, நாகப்பட்டினம், சித்தன்னவாசல்

2. பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:

கூற்று: பழைய மதங்களின் குருமார்களிடமிருந்து தான் கற்றுக்கொள்வதற்கு எதுவுமில்லை என கௌதமர் தெரிந்து கொண்டார்.

காரணம்: துறவு வாழ்க்கையை மேற்கொள்வதே முக்தி அடைவதற்கான ஒரேவழி என மதங்கள் அறிவித்தன.

(அ) கூற்று சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம்

(ஆ) கூற்று சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல

(இ) கூற்று, காரணம் இரண்டுமே தவறு

(ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி

3. i) கி. மு. ஆறாம் நூற்றாண்டில், இந்தியாவில் வெவ்வேறான 62 தத்துவ சமயப்பள்ளிகள் செழிப்புற்று இருந்தன

ii) "பள்ளி" என்பது புத்தமதத்தாரின் கல்வி மையமாகும்.

iii) அரசர்கள் அளித்த ஆதரவினால் இஸ்லாமிய ஆட்சிக்கு முந்தைய இந்தியா, பல விகாரைகளைக் கொண்ட நாடாக விளங்கியது

iv) ஆசீவகம் பதினைந்தாம் நூற்றாண்டுவரை தொடர்ந்து செயல்பட்டது

(அ) i மற்றும் iii சரி

(ஆ) i, ii மற்றும் iv சரி

(இ) i மற்றும் ii சரி

(ஈ) ii, iii மற்றும் iv சரி

4. தவறான இணையைக் கண்டறிக:

1. பார்சவநாதர் – 22வது தீர்த்தங்கரர்

2. மகாபாஷ்யா – இலங்கையைச் சேர்ந்த வரலாற்றுத் தொகுப்பு

3. விசுத்திமக்கா – புத்தகோசா

4. புத்தர் – எண்வகை வழிகள்

**V. சரியா அல்லது தவறா எனக் குறிப்பிடுக:**

1. 12வது ஆகமசூத்திரம் தொலைந்து போனதாகக் கருதப்படுகிறது

2. வரலாறு முழுவதிலும் ஆசீவகர்கள் அனைத்து இடங்களிலும் அடக்குமுறையைச் சந்திக்க நேர்ந்தது.

3. சமண நிறுவனங்களில் சமூக, சமய வேறுபாடுகளின்றி அனைவருக்கும் கல்வி கற்பிக்கப்பட்டது.

4. நாளந்தா, தட்சசீலம், விக்கிரமசீலா ஆகியன மிகச்சிறந்த புனிதத்தலங்களாயின

5. சோழர்காலம் முதலாகவே பௌத்தம் சைவ, வைணவ சமயங்களின் சவால்களை எதிர்கொண்டது

**விடைகள்:**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. பாடலிபுத்திரம், 2. அர்த்த–மகதி பிராகிருதம், 3. சமணமதம், 4. வேலூர், 5. பராந்தக நெடுஞ்சடையான்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. நேமிநாதர், 2. அஸ்வகோஷர், 3. கி. பி 7ம், 4. மத்தவிலாச பிரகாசனம், 5. ஆசீவர்களை

**III. பொருத்துக:**

1. ஈ, 2. அ, 3. உ, 4. இ, 5. ஆ

**IV. பொருந்தாததை வட்டமிடுக:**

1. நாகப்பட்டினம், 2. கூற்று சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம், 3. ) i மற்றும் iii சரி, 4. பார்சவநாதர் – 22வது தீர்த்தங்கரர்

**V. சரியா அல்லது தவறா எனக் குறிப்பிடுக:**

1. சரி, 2. சரி, 3. சரி, 4. கல்விநிலையங்கள், 5. தவறு

7th Social Science Lesson 21

**21] கண்டங்களை ஆராய்தல் – வட அமெரிக்கா மற்றும் தென் அமெரிக்கா**

**உங்களுக்குத் தெரியுமா?**

**நிலச்சந்தி:** இரண்டு மிகப் பெரிய நிலப் பகுதிகளை இணைக்கும் சிறிய துண்டு. **நீர்ச்சந்தி:** இரண்டு பெரிய நீர் பரப்புகளை இணைக்கும் சிறிய நீர் பரப்பு.

பல இயங்கும் எரிமலைகளை கொண்டுள்ளதால் கார்டில் லெராஸ், பசிபிக் நெருப்பு வளையத்தின் ஒரு பகுதியாக கருதப்படுகிறது. இப்பகுதி நில அதிர்வுகளையும் அடிக்கடி எதிர் கொள்கிறது.

**கண்டங்களும் அதன் உயரமான சிகரங்களும்:** ஆசியா–எவரெஸ்ட் சிகரம் (8848 மீ). தென் அமெரிக்கா–அகான்காகுவா (6961 மீ). வடஅமெரிக்கா–மெக்கென்லீ சிகரம் (6194 மீ). ஆப்பிரிக்கா–கிளிமஞ்சாரோ (5895 மீ). ஐரோப்பா–எல்பரஸ் சிகரம் (5642 மீ). அண்டார்டிகா–வின்சன் மாசிப் சிகரம் (4892 மீ). ஆஸ்திரேலியா–காஸ்கியூஸ்கோ சிகரம் (2228 மீ).

கிராண்ட் கேன்யான் (Grand Canyon) என்பது அமெரிக்காவின் அரிசோனா மாகாணத்தில் கொலராடோ ஆற்றினால் உருவாக்கப்பட்ட செங்குத்தான பக்கங்களைக் கொண்ட மிக ஆழமான பள்ளத்தாக்கு ஆகும்.

"பெரிய சேற்று ஆறு" என்ற புனைப் பெயருடன் மிஸிஸிப்பி ஆறு அழைக்கப்படுகிறது. இது மலைகளின் கீழே பாய்ந்து வரும் போது மண்ணையும் சேற்றையும் தன்னோடு இழுத்து வருவதால் இதற்கு இப்பெயர் வழங்கப்பட்டுள்ளது.

மேற்கத்திய காற்றுகள் அல்லது எதிர் வர்த்தக காற்றுகள் $30^{\circ}$ முதல் $60^{\circ}$ வரையிலான மத்திய அட்சகோட்டுப்பகுதியில் மேற்கிலிருந்து கிழக்காக வீசும் நிலையான காற்றுகள் ஆகும்.

**கிராண்ட் பேங்க்:** உலகின் முக்கிய பெரிய மற்றும் வளமான இயற்கை வளங்களை கொண்டது கிராண்ட் பேங்க். இங்கு மீன் மற்றும் பெட்ரோலிய படிவுகள் காணப்படுகின்றன.

எஸ்கிமோக்கள் கடும் குளிர் மற்றும் வாழ்வதற்கு கடினமான பகுதிகளில் எங்கு மீன்கள் அதிகம் கிடைக்கிதோ, அங்கு வாழ்கிறார்கள். விலங்குகளின் மென்மையான முடிகளால் ஆன உடைகளை உடுத்தி இஃலுக்களில் வாழ்கிறார்கள். சுற்றுச்சூழலை பெரிதும் மாற்றி அமைக்க இயலாத நிலையில் இவர்கள் எளிய வாழ்க்கையை வாழ்கிறார்கள். பனிக்கட்டிகளை கொண்டு இவர்கள் கட்டும் வீடுகளுக்கு இஃக்லூ என்று பெயர்.

**பனாமா கால்வாய்:** 1914ல் பனாமா நிலச்சந்தியின் குறுக்கே 80 கிலோமீட்டர் நீளத்திற்கு அட்லாண்டிக் பெருங்கடலையும் பசிபிக் பெருங்கடலையும் இணைக்கும் விதமாக பனாமா கால்வாய் வெட்டப்பட்டது. இக்கால்வாய் ஐரோப்பா மற்றும் வட தென் அமெரிக்காவின் மேற்குக் கடற்கரைக்கு இடையிலான தூரத்தை வெகுவாக குறைக்கின்றது.

மத்திய அமெரிக்காவுடன் இணைந்து தென் அமெரிக்கா, லத்தீன் அமெரிக்கா என அழைக்கப்படுகிறது. ஐரோப்பியர்கள் குறிப்பாக ஸ்பானியர்கள் மற்றும் போர்த்துகீசியர்களால் கண்டுபிடிக்கப்பட்டு அவற்றின் காலனியாக ஆட்சி செய்யப்பட்டதால் இப்பெயரை பெறுகிறது.

பூமத்திய ரேகை பகுதிகளில் வெப்பச்சலன மழை கிட்டத்தட்ட தினமும் பிற்பகலில் நிகழ்கிறது. இது பொதுவாக மாலை 4 மணிக்கு நிகழ்கிறது. அதனால்தான் இது 4 மணி "கடிகாரமழை" என்று அழைக்கப்படுகிறது.

அமேசான் தென் அமெரிக்காவின் மிகப்பெரிய நதியாகும். அதில் பாயும் நீரின் அளவு மற்றும் அதன் வடிநில பரப்பு ஆகியவற்றைக் கொண்டு உலகின் மிகப்பெரிய வடிகால் அமைப்பாக விளங்குகிறது.

**எஸ்டான்சியாஸ்:** கால்நடைகள் வளரும் பெரும் புல்வெளி பரப்புகள் எஸ்ட்டென்ஷன் என அழைக்கப்படுகின்றன. இவை சிறிய புல்வெளி தளங்களாக பிரிக்கப்படுகின்றன. இவை மேலும் பராமரிப்பு தளங்களாக பிரிக்கப்பட்டு இங்கு கால்நடைகள் தரம் பிரித்து முத்திரை இடப்படுகின்றன. "எஸ்டான்சியாரே" எனப்படும் எஸ்டான்சியா பராமரிப்பாளரின் கீழ் "கவ்சோ" எனப்படும் வேலையாட்கள் வேலை செய்கின்றனர்.

தென் அமெரிக்க நாடுகளில் பல்வேறு வகையான இசைகள் உள்ளன. பிரேசிலிலிருந்து சம்பா, அர்ஜென்டினாவைச் சேர்ந்த டேங்கோ மற்றும் உருகுவே மற்றும் கொலம்பியாவைச் சேர்ந்த கும்பியா ஆகியவை மிகவும் பிரபலமான வகைகளில் அடங்கும்.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. வட அமெரிக்காவையும் ஆசியாவையும் ------ பிரிக்கிறது.

(அ) பேரிங் நீர் சந்தி

(ஆ) பாக் நீர் சந்தி

(இ) மலாக்கா நீர் சந்தி

(ஈ) ஜிப்ரால்டர் நீர் சந்தி

2. -------- உலகின் சர்க்கரைக் கிண்ணம் என அழைக்கப்படுகிறது

(அ) மெக்ஸிகோ

(ஆ) அமெரிக்கா

(இ) கனடா

(ஈ) கியூபா

3. -------- வட அமெரிக்காவின் நீளமான ஆறுகள் ஆகும்.

(அ) மிஸிஸிப்பி மற்றும் மிஸ்சௌரி

(ஆ) மெக்கென்ஸி ஆறு

(இ) புனித லாரன்சு ஆறு

(ஈ) கொலரடோ ஆறு

4. உலகின் மிக நீண்ட மலைத்தொடர் -----------

(அ) ஆன்டிஸ்

(ஆ) ராக்கி

(இ) இமயமலை

(ஈ) ஆல்ப்ஸ்

5. பூமத்திய ரேகை பகுதியில் இருப்பதால் ------- வடிநிலப் படுகை தினந்தோரும் மழை பெறுகிறது

(அ) மெக்கென்ஸி

(ஆ) ஒரினாகோ

(இ) அமேசான்

(ஈ) பரானா

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. வட அமெரிக்காவின் தாழ்வான பகுதியான --------- கடல் மட்டத்திலிருந்து 86 மீட்டர் ஆழத்தில் உள்ளது.

2. உலகின் தலை சிறந்த மீன்பிடித் தளமாக ------- விளங்குகிறது.

3. சிலி அர்ஜென்டினா எல்லையில் அமைந்துள்ள ------- ஆண்டிஸ் மலைத் தொடரின் உயரமான சிகரமாகும்.

4. பூமத்திய ரேகைப் பகுதியில் இருக்கும் ---------- உலகின் நுரையீரல் என அழைக்கப்படுகிறது.

5. ---------ற்கு உலகின் காப்பி பானை என்ற பெயரும் உண்டு.

**III. பொருத்துக:**

1. மெக்கென்லீ சிகரம் – அ) வெப்ப மண்டல காடுகள்

2. கிராண்ட் கேன்யான் – ஆ) பறக்க இயலாத பறவை

3. எபோனி – இ) கொலரடோ ஆறு

4. நான்கு மணி கடிகார மழை – ஈ) 6194 மீ

5. ரியா –உ) பூமத்திய ரேகை பகுதி

**IV. பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. கூற்று (A): வட அமெரிக்காவின் தெற்கு மற்றும் மேற்கு மாநிலங்களில் பருத்தி நன்றாக வளருகிறது

காரணம் (R): மழையுடன் கூடிய வெப்பமான கோடைகாலம் மற்றும் வளமான மண் ஆகியவை பருத்தி விளைவதற்கான ஏற்ற சூழல்களாக உள்ளன

(அ) கூற்றும் காரணமும் சரி

(ஆ) கூற்று சரி. காரணம் தவறு

(இ) காரணம் தவறு. கூற்று சரி

(ஈ) காரணம் மற்றும் கூற்று தவறு

2. கூற்று: தென் அமெரிக்காவில் உள்ள தொழிற்சாலைகள் வேகமாக வளர்ச்சி அடைந்துள்ளன.

காரணம்: தொழில்மயமாவதற்கான அடிப்படை வசதிகள் குறிப்பாக போக்குவரத்து வளர்ச்சியில் பின்தங்கியுள்ளது

(அ) கூற்றும் காரணமும் சரி (ஆ) கூற்று சரி. காரணம் தவறு

(இ) காரணம் தவறு. கூற்று சரி (ஈ) காரணம் மற்றும் கூற்று தவறு

**விடைகள்:**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. பேரிங் நீர் சந்தி, 2. கியூபா, 3. மிஸிஸிப்பி மற்றும் மிஸ்சௌரி, 4. ஆன்டிஸ், 5. அமேசான்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. மரணப்பள்ளத்தாக்கு, 2. கிராண்ட் பேங்க், 3. அகான்காகுவா சிகரம், 4. அமேசான் காடுகள், 5. பிரேசில்

**III. பொருத்துக:**

1. ஈ, 2. இ, 3. உ, 4. அ, 5. ஆ

**IV. பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. கூற்றும் காரணமும் சரி, 2. கூற்று தவறு காரணம் சரி

7th Social Science Lesson 22

## 22] நிலவரைபடத்தை கற்றறிதல்

**உங்களுக்குத் தெரியுமா?**

ஆரம்ப காலங்களில் காகிதத்தோல் (விலங்குகளின் தோல்), பாப்பிரஸ் (Papyrus), துணிகள், ஈரநிலம் மற்றும் களிமண் பலகைகள் நிலவரைபடம் தயாரிக்க பயன்படுத்தப்பட்டன.

நிலவரைபடத்தை உருவாக்கும் அறிவியல் என்பது கார்ட்டோகிராஃபி என அழைக்கப்படுகிறது. கார்டே (Carte) என்பது நிலவரைபடம் கிராபிக் (Graphic) என்பது வரைதல். நிலவரைபடத்தை வரைந்து உருவாக்குபவர் கார்டோகிராஃபர் (Cartographer) ஆவர்.

மின்னணு வரைபடங்கள் (Digital Maps) என்பது உலகம் முழுவதும் அமைந்துள்ள புவியியல் பகுதிகள் மற்றும் தலங்களைக் குறித்து அதிகப்படியான தகவல்களை வழங்கும் வலைதள சேவைப்பகுதி ஆகும்.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. நிலவரைபடம் உருவாக்குதலின் அறிவியல் பிரிவு என அழைக்கப்படுகிறது ----------

(அ) புவியியல் (ஜியோகிராஃபி)

(ஆ) கார்டோகிராஃப்ட்

(இ) பிஸியோகிராபி

(ஈ) பௌதீக புவியியல்

2. வடக்கு, தெற்கு, கிழக்கு மற்றும் மேற்கு ஆகிய நான்கும் --------- திசைகள் ஆகும்.

(அ) முக்கியமான

(ஆ) புவியியல்

(இ) அட்சரேகை

(ஈ) கோணங்கள்

3. கலாச்சார நிலவரை படங்கள் என்பன ------------ அமைப்புகளைக் காட்டுகின்றன.

(அ) இயற்கையான

(ஆ) மனிதனால் உருவாக்கப்பட்ட

(இ) செயற்கையான

(ஈ) சுற்றுச்சூழல்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. புவியியலாளர்களின் ஒரு முக்கிய கருவியாக ------------- அமைகிறது.

2. முதன்மை திசைகளுக்கு இடையே உள்ள திசைகள் இடைநிலை ---------- எனப்படும்.

3. நிலவரைபடத்தில் உள்ள ----------- வரைபடத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள வண்ணங்கள் மற்றும் சின்னங்களை விளக்குகிறது.

4. காடாஸ்ட்ரல் நிலவரைபடங்கள் ------------ என அழைக்கப்படுகின்றன

5. சிறிய அளவை நிலவரைபடங்கள் ---------- மற்றும் ---------- போன்ற அதிக பரப்பளவு இடங்களைக் காட்ட உதவுகின்றன.

**III. பொருந்தாததை வட்டமிடுக:**

1. வடகிழக்கு, அளவை, வடமேற்கு மற்றும் கிழக்கு

2. வெண்மை, பனி, உயர்நிலம் மற்றும் சமவெளி

3. நில அமைப்பு நிலவரைபடம், மண் நிலவரைபடம், இயற்கை அமைப்பு நிலவரைபடம் மற்றும் நிலவரைபட நூல்.

4. வானிலை முன்னறிவிப்பு, காலநிலை, மழைவீழ்ச்சி மற்றும் வெப்பநிலை

**IV. பொருத்துக:**

1. மேல் வலது மூலை – அ) அடர்த்தி மற்றும் வளர்ச்சி

2. குறிப்பு – ஆ) மாவட்டம் அல்லது நகரம்

3. பெரிய அளவை நிலவரைபடம் – இ) இயற்கை நில அமைப்பு

4. இயற்கை அமைப்பு வரைபடம் – ஈ) வண்ணங்கள் மற்றும் சின்னங்கள்

5. மக்கள் தொகை வரைபடம் – உ) "N" எழுத்து

**V. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. i. நிலவரைபட நூல் என்பது பல வகைப்பட்ட நிலவரைபடங்கள் கட்டமைக்கப்பட்ட தொகுதி ஆகும்.

ii. நிலவரை பட நூலின் வரைபடங்கள் சிறிய அளவையில் வரையப்படுகின்றன.

Iii. முக்கியமற்ற விவரங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன.

(அ) i மற்றும் iii சரி

(ஆ) ii மற்றும் iii சரி

(இ) i மற்றும் ii சரி

(ஈ) i, ii மற்றும் iii சரி

2. கூற்று 1: உலக உருண்டை என்பது புவியின் முப்பரிமாண மாதிரி

கூற்று 2: இதனை இது கையாள்வதற்கும், எடுத்துச் செல்வதற்கும் எளிது. சுருட்டியோ அல்லது மடித்தோ கையில் எடுத்துச் செல்வதற்கும் எளிது.

(அ) கூற்று 1 சரி, 2 தவறு

(ஆ) கூற்று 1 தவறு, 2 சரி

(இ) இரண்டும் சரி

(ஈ) இரண்டும் தவறு

**விடைகள்:**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. கார்டோகிராஃப்ட், 2. முக்கியமான, 3. மனிதனால் உருவாக்கப்பட்ட

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. நிலவரைபடங்கள், 2. திசைகள், 3. குறியீடுகள், 4. கிராம மற்றும் நகரங்களின் வரைபடங்கள், 5. கண்டங்கள் மற்றும் நாடுகள்

**III. பொருந்தாததை வட்டமிடுக:**

1. அளவை, 2. சமவெளி, 3. நிலவரைபட நூல், 4. காலநிலை

**IV. பொருத்துக:**

1. உ, 2. ஈ, 3. ஆ, 4. இ, 5. அ

**V. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1.) i, ii மற்றும் iii சரி, 2. கூற்று 1 சரி, 2 தவறு

7th Social Science Lesson 23

**23] இயற்கை இடர்கள் – பேரிடர் மேலாண்மை நடவடிக்கைகளை புரிந்து கொள்ளல்**

**உங்களுக்குத் தெரியுமா?**

சுனாமி என்ற சொல் ஜப்பானிய சொல்லிலிருந்து பெறப்பட்டது ஆகும். சு (Tsu) என்பது துறைமுகம் என்றும் னாமி (name) என்பது அலைகள் எனவும் பொருள்படும்.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. பொருட்சேதம், உயிரிழப்பு மற்றும் சுற்றுச்சூழலில் பெரிய மாற்றத்தை நிகழ்த்தும் ஒரு இயற்கைக் காரணி ----

(அ) இடர்

(ஆ) பேரிடர்

(இ) மீட்பு

(ஈ) மட்டுப்படுத்தல்

2. பேரிடரின் விளைவைக் குறைக்கும் செயல்பாடுகள்

(அ) தயார்நிலை

(ஆ) பதில்

(இ) மட்டுப்படுத்தல்

(ஈ) மீட்பு நிலை

3. ஒரு திடீர் நகர்வு அல்லது புவி மேலோட்டின் திடீர் நடுக்கம் -------- என அழைக்கப்படுகிறது.

(அ) சுனாமி

(ஆ) புவி அதிர்ச்சி

(இ) நெருப்பு

(ஈ) சூறாவளி

4. கன மழையினால் திடீரென அதிக நீர் வெளியேறுதல் -------- என அழைக்கப்படுகிறது.

(அ) வெள்ளம்

(ஆ) சூறாவளி

(இ) வறட்சி

(ஈ) பருவ காலங்கள்

5. ------------------ வைத்துள்ளோரை வாகனம் ஓட்ட அனுமதித்தால் சாலை விபத்தினைத் தவிர்க்கலாம்.

(அ) ரேஷன் அட்டை

(ஆ) ஓட்டுநர் உரிமம்

(இ) அனுமதி

(ஈ) ஆவணங்கள்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. மனிதனுக்கும், அவனுடைய உடமைகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய நிகழ்வு ------------

2. பேரிடரின் போது எடுக்கப்படும் நடவடிக்கைகள் ----------- என அழைக்கப்படுகிறது.

3. மிகப்பெரிய அழிவு ஏற்படுத்தும் அலைகளை ஏற்படுத்தும் நீரின் இடப்பெயர்வு ---------- எனப்படும்.

4. தீ விபத்து ஏற்பட்டால் அழைக்க வேண்டிய எண் --------------

6. இயற்கை மற்றும் மனிதனால் உருவாக்கக்கூடிய பேரிடரின் போது மனித வாழ்க்கை மற்றும் உடைமைகளை --------- பேரிடர் மேலாண்மை எனப்படுகிறது.

**III. பொருத்துக:**

1. புவி அதிர்ச்சி – அ) இராட்சத அலைகள்

2. சூறாவளி – ஆ) பிளவு

3. சுனாமி – இ) சமமற்ற மழை

4. தொழிற்சாலை விபத்து – ஈ) புயலின் கண்

5. வறட்சி – உ) கவனமின்மை

**IV. பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. கூற்று (A): நவீன உலகத்தில் அனுதினமும் மகிழ்ச்சியாக வாழ முடியாது

காரணம் (R): மாசடைதல் மற்றும் சுற்றுச்சூழல் சீரழிவின் காரணமாக இயற்கை இடைம ற்றும் பேரிடரை சந்தித்துக் கொண்டிருக்கிறோம்.

(அ) கூற்று மற்றும் காரணம் சரி; கூற்று காரணத்தை விளக்குகிறது.

(ஆ) கூற்று மற்றும் காரணம் சரி; கூற்று காரணாத்தை விளக்கவில்லை

(இ) கூற்று தவறு; காரணம் சரி

(ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு

2. கூற்று (A): திடீர் நுகர்வு அல்லது பூமியின் மேலேட்டில் ஏற்படும் நடுக்கம் புவி அதிர்ச்சி ஆகும்.

காரணம் (R): டெக்டானிக் தட்டுகளின் நகர்வு, ஜனநெருக்கடி, பிளவு போன்றவை புவி அதிர்ச்சிக்கு வித்திடுகின்றன

(அ) கூற்று மற்றும் காரணம் சரி மற்றும் கூற்று காரணத்தை விளக்குகிறது

(ஆ) கூற்று மற்றும் காரணம் சரி; கூற்று காரணத்தை விளக்கவில்லை

(இ) கூற்று தவறு; காரணம் சரி

(ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு

**விடைகள்:**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. இடர் மற்றும் பேரிடர், 2. மட்டுப்படுத்தல், 3. புவி அதிர்ச்சி, 4. வெள்ளம், 5. ஒட்டுநர் உரிமம்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. இடர், 2. பேரிடர் மேலாண்மை, 3. சுனாமி, 4. 101, 5. பாதுகாப்பு

**III. பொருத்துக:**

1. ஆ, 2. ஈ, 3. அ, 4. உ, 5. இ

**IV. பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. கூற்று மற்றும் காரணம் சரி; கூற்று காரணாத்தை விளக்கவில்லை, 2. கூற்று மற்றும் காரணம் சரி; கூற்று காரணாத்தை விளக்கவில்லை

## 7th Social Science Lesson 24

## 24] பெண்கள் மேம்பாடு

**உங்களுக்குத் தெரியுமா?**

**மேம்பாட்டிற்கான முக்கிய காரணிகள்:** 1. கல்வி: ஒருவருக்கு அறிவுபூர்வமாகச் சிந்திக்கும் திறன் மற்றும் தனித்தன்மை வாய்ந்த முடிவுகளை எடுக்க உதவுகிறது. 2. பாலினப்பாகுபாடு: பாலினப்பாகுபாடு பார்க்கும்

சமூகம் எக்காலத்திலும் முன்னேறுவதற்கான வாய்ப்பு அரிது. 3. சாதி, இன, சமய பாகுபாடுகளை அடிப்டையாகக் கொண்ட சமூகம், முன்னேற்றம் அடையாது.

நமது எதிர்காலம் பெண்களை உதாசீனப்படுத்துவோர் கையிலில்லை. அது நமது மகன்களைப் போல் பள்ளிக்குக் கல்வி கற்கச் செல்லும் நமது மகள்களின் கனவுகளில் உள்ளது. அவர்களே, இவ்வுலகத்தில் தாங்கி நிற்கும் வல்லமைக் கொண்டவர் என முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா ஐக்கிய நாடுகளின் பொது சபையில், 2012ஆம் ஆண்டு உரையாற்றும் போது கூறினார்.

சாவித்ரிபாய் புலே, பாரம்பரியத்தை உடைத்த முதல் பெண்கள் பள்ளியின் முதல் பெண் ஆசிரியர் ஆவார். பெண்கள் கல்வியை பற்றி பேசும் போதெல்லாம் நினைவில் வருபவர், இந்தியாவில் பெண் கல்வியை செயல்வடிவமாக்கிய ஜோதிராவ்புலே, சாவித்ரிபாயின் கணவர் ஆவார். இவர்கள் இருவரும் பெண்களுக்கான முதல் பள்ளியை 1848ஆம் ஆண்டு தொடங்கினர்.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. பின்வருவனவற்றில் எது பாலின சமத்துவமின்மை அல்ல?

(அ) மோசமான பேறுகால ஆரோக்கியம்

(ஆ) ஆண்களுக்கு அதிக பாதுகாப்பற்ற தன்மை

(இ) எச். ஐ. வி எய்ட்ஸ் பரவுதல்

(ஈ) பெண்களின் குறைந்த எழுத்தறிவு விகிதம்

2. பாலின சமத்துவம் என்பது எது தொடர்புடைய பிரச்சனை

(அ) பெண் குழந்தைகள்; பெண்களின் பிரச்சனை

(ஆ) அனைத்து சமூகத்திலும் பெண்களும் ஆண்களும் சமம்

(இ) மூன்றாம் உலக நாடுகள் மட்டும்

(ஈ) வளர்ந்த நாடுகள் மட்டும்

3. பெண்கள் சமூக மற்றும் பொருளாதார ரீதியாக மேம்பட பின்வரும் எந்த உத்திகள் உதவுகின்றது?

(அ) பாகுபாடுகளுக்கு எதிரான சவால்களுக்கு பெண்கள் இணைந்து பணியாற்றுகின்றனர்.

(ஆ) பெண்களுக்கான அதிகமான வருமான ஆதாரங்கள்

(இ) மேம்பட்ட கல்விக்கான அணுகுமுறை

(ஈ) மேலே உள்ள அனைத்தும்

4. வளரும் நாடுகளில் சிறுவர்களைவிட பெண்குழந்தைகள் இடைநிலைக் கல்வியை தவற விடுவது ஏன்?

(அ) பள்ளிக் கல்வி கட்டணம் உயர்வு காரணமாக, சிறுவர்கள் மட்டும் பள்ளிக்கு அனுப்பப்படுகிறார்கள்

(ஆ) பெண் குழந்தைகள் வீட்டு வேலை செய்ய எதிர்பார்க்கப்படுகிறது.

(இ) குழந்தைத் திருமணம் அவர்களின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துகிறது.

(ஈ) மேலே உள்ள அனைத்தும்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. இந்தியாவில் பெண்கள் கல்வியை செயல் வடிவாக்கிய ஜோதிராவ் புலே நினைவில் வைக்கப்படுகிறார் அவர், தனது மனைவியுடன் ------------ 1848இல் சிறுமிகளுக்கான முதல் பள்ளியைத் தொடங்கினார்.

2. மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் பதவி வகித்த முதல் பெண் ------

3. முதல் பெண் காவல் துறை இயக்குநர் (DGP) ---------- ஆவார்.

4. புக்கர் பரிசை வென்ற முதல் இந்திய பெண் --------

**III. பொருத்துக:**

1. சிரிமாவோ பண்டாரநாயக – அ) இங்கிலாந்து

2. வாலென்டினா தெரோஷ்கோவா – ஆ) ஜப்பான்

3. ஜன்கோ தபே – இ) இலங்கை

4. சார்லோட் கூப்பர் – ஈ) சோவியத் ஒன்றியம்

**IV. பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

கூற்று (கூ): இப்போது அனைத்து மனிதாபிமான நடவடிக்கைகள் அனைத்திலும் பெண்கள் ஒருங்கிணைகிறார்கள்.

காரணம் (கா): சமூகத்தின் அனைத்து மோதல்களிலும் பெண்கள் அதிகம் பாதிக்கப்படுகின்றார்கள்

(அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி ஆனால், காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் ஆகும்

(ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி ஆனால், காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் அல்ல

(இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு

(ஈ) கூற்று தவறானது ஆனால் காரணம் சரி

2. கூற்று (கூ): பெண்களுக்கு எதிரான வன்முறை சாதி, மதம், வர்க்கம், வயது மற்றும் கல்வியை கடந்து நடைபெறுகிறது.

காரணம் (கா): வீட்டு வன்முறைகள், கருக்கலைப்பு, பெண் சிசுக் கொலை, வரதட்சணை கொலை, திருமணம் மூலம் கொடுமை, சிறுவருக்கு நிகழும் கொடுமைகள் என வெளிப்படுகிறது.

(அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி ஆனால், காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் ஆகும்

(ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி ஆனால், காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் அல்ல

(இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு

(ஈ) கூற்று தவறானது ஆனால் காரணம் சரி

**விடைகள்:**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. ஆண்களுக்கு அதிக பாதுகாப்பற்ற தன்மை, 2. அனைத்து சமூகத்திலும் பெண்களும் ஆண்களும் சமம், 3. மேலே உள்ள அனைத்தும், 4. பெண் குழந்தைகள் வீட்டு வேலை செய்ய எதிர்பார்க்கப்படுகிறது

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. சாவித்திரிப்பாய் பூலே, 2. சுஷ்மா ஸ்வராஜ், 3. காஞ்சன் சௌத்ரி பட்டாச்சரியா, 4. அருந்ததி ராய்

**III. பொருத்துக:**

1. இ, 2. ஈ, 3. ஆ, 4. அ

**IV. பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி ஆனால், காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் ஆகும், 2. கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி ஆனால், காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் அல்ல

7th Social Science Lesson 25

25] சந்தை மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு

**உங்களுக்குத் தெரியுமா?**

விற்பனை செய்யப்பட்ட பொருள் திரும்பப் பெறபட மாட்டாது (அல்லது) "பொருட்களை மாற்ற இயலாது" (அல்லது) "எந்தச் சூழலிலும் பணம் திருப்பித்தரப்படமாட்டாது" இது முறையற்ற வணிக நடவடிக்கை மற்றும் சட்ட ரீதியான நடவடிக்கைக்கு ஏற்றதல்ல.

**எட்டு அடிப்படையான நுகர்வோர் உரிமைகள்:** 1. அடிப்படைத் தேவைகளுக்கான உரிமை. 2. பாதுகாப்புக்கான உரிமை. 3. தகவல் அறியும் உரிமை. 4. தேர்ந்தெடுக்கும் உரிமை. 5. பிரதிநிதித்துவ உரிமை. 6. குறை தீர்க்கும் உரிமை. 7. நுகர்வோர் கல்வி மற்றும் உரிமை. 8. தூய்மையான சுற்றுப்புறச் சூழலைப் பெறுவதற்கான உரிமை.

முக்கியமான சட்டங்கள்: நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், 1986. சட்ட அளவீட்டு சட்டம், 2009. இந்திய தர நிர்ணய பணியகம், 1986. அத்தியாவசிய பொருட்கள் சட்டம், 1955. கறுப்பு சந்தைப்படுத்துதல் தடுப்பு மற்றும் அத்தியாவசிய பொருட்களின் பராமரிப்பு பொருட்களின் சட்டம், 1980.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. எந்தவொரு சந்தர்பத்தில் ஒரு நுகர்வோர் குறைபாடுள்ள தயாரிப்புக்காக உற்பத்தியாளருக்கு எதிராக புகார் செய்ய முடியாது?

(அ) காலாவதியாகும் தரவு குறிப்பிடப்படாதது

(ஆ) பொருட்களின் விலை

(இ) பொருட்களின் தொகுதி எண்

(ஈ) உற்பத்தியாளரின் முகவரி

2. உற்பத்தியாளரின் முடிவில் இருந்து நுகர்வோர் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்கின்றனர்?

(அ) நியாயமற்ற வர்த்தக நடைமுறைகள்

(ஆ) பரந்த அளவிலான பொருட்கள்

(இ) நிலையான தரமான பொருட்கள்

(ஈ) உற்பத்தியின் அளவு

3. நுகர்வோருக்கு ஒரு பொருட்கள் தயாரிப்பு பற்றிய போதுமான தகவல்கள் வழங்கப்பட வேண்டும்

(அ) உற்பத்தியின் முதலீடு

(ஆ) பொருட்கள் விற்பனையில் முடிவு

(இ) கடனில் பொருட்கள் வாங்குதல்

(ஈ) பொருட்கள் வாங்குவதில் முடிவு

4. தேசிய, மாநில மற்றும் மாவட்டங்களில் உள்ள நுகர்வோர் நீதிமன்றங்களின் அமைப்பு, வணிகர்களின் நியாயமானதை வர்த்தக நடைமுறைகளுக்கு எதிரான நுகர்வோர் குறைகளை ஆராய்வது என அழைக்கப்படுகிறது.

(அ) மூன்று அடுக்கு அமைப்பு

(ஆ) ஒரு அடுக்கு அமைப்பு

(இ) இரு அடுக்கு அமைப்பு

(ஈ) நான்கு அடுக்கு அமைப்பு

5. தரம் குறைவான பிற வெளிப்புற பொருள்களை ஒரு உயர்ந்த தரமான பொருளுடன் கலப்பது எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(அ) தூய்மையாக்கல்

(ஆ) கலப்படம்

(இ) சுத்திகரிப்பு

(ஈ) மாற்றம்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட --------- பொருட்கள் சேவைகள் மற்றும் தகவல்களின் ஈடுபடும் ஒரு சந்தை என்று அழைக்கப்படுகிறது.

2. ஒழுங்குப்படுத்தப்பட்ட சந்தைகளில், பொருத்தமான ------ அதிகாரிகளால் சில மேற்பார்வை உள்ளது.

3. ------- என்பது ஒரு சந்தை கட்டமைப்பைக் குறிக்கிறது. அதில் முழு உற்பத்தியிலும் ஒரு கட்டுப்பாட்டைக் கொண்ட ஒரு ஒற்றை தயாரிப்பு அல்லது விற்பனையாளராக இருக்கிறார்.

4. ---- நியாயமற்ற வர்த்தக நடைமுறைகளை சரிபார்க்க நுகர்வோர் பாதுகாப்பு துறையின் மகா சாசனம் என்று கருதப்படுகிறது.

**III. பொருத்துக:**

1. நுகர்வோர் உற்பத்தி சட்டம் – அ) 1955

2. சட்ட பூர்வமான அளவீட்டு சட்டம் – ஆ) 1986

3. இந்திய தர நிர்ணய பணியகம் – இ) 2009

4. அத்தியாவசிய பொருட்கள் – ஈ) 1986

**IV. பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. கூற்று: உள்ளூர் சந்தைகளில் வாங்குபவர்களும் விற்பவர்களும் உள்ளூர் பகுதி பகுதியை சேர்ந்தோர் அல்லது மட்டுமே

காரணம்: ஒரு சந்தை இயற்கை இடம் அல்லது புவியியல் இருப்பிடத்திற்கு கட்டுப்படுத்தப்படவில்லை.

(அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி ஆனால், காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் ஆகும்.

(ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி ஆனால், காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் அல்ல.

(இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு

(ஈ) கூற்று தவறானது ஆனால் காரணம் சரி

**விடைகள்:**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. பொருட்களின் தொகுதி எண், 2. நியாயமற்ற வர்த்தக நடைமுறைகள், 3. பொருட்கள் வாங்குவதில் முடிவு, 4. மூன்று அடுக்கு அமைப்பு, 5. கலப்படம்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

அமைப்புகள், 2. அரசாங்க, 3. முற்றுரிமை, 4. நுகர்வோர் பாதுகாப்பு சட்டம்

**III. பொருத்துக:**

1. ஆ, 2. இ, 3. ஈ, 4. அ

**IV. பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி ஆனால், காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் அல்ல.

## 7th Social Science Lesson 26

## 26] சாலைப்பாதுகாப்பு

**உங்களுக்குத் தெரியுமா?**

கார்பூலிங் ஒவ்வொருவரும் ஒரு இடத்திற்கு வழக்கமாக மகிழுந்தில் செல்லும் போது அந்த இடத்திற்கு அதிகமான மகிழுந்து செலுத்தப்படுகிறது. இதை தவிர்க்க மகிழுந்தில் பணயப்பகிர்வு மேற்கொண்டு ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு அதிக மகிழுந்து செல்வதை தடுத்தல். ஒரே பகுதியிலிருந்தோ அல்லது ஒரே வழித்தடத்தில் தினந்தோறும் மகிழுந்து அல்லது இரு சக்கதர வாகனத்தில் செல்பவர்கள் அதே இடத்திற்கோ அல்லது அதே தடத்தில் செல்பவர்களை உடன் அழைத்துச் செல்வதே கார்பூலிங் ஆகும்.

ரக்ஷா பாதுகாப்பான வாகன இயக்கம். ரக்ஷா ஒரு தானியங்கி கருவி. இது வாகனத்தில் பொருத்தப்பட்டு வாகனம் தற்போது எங்கு உள்ளது என்பதையும், வாகனத்தின் இயந்திரத்தின் செயல்பாட்டினை கண்காணிக்கவும், வாகனத்தின் பதட்ட நிலையையும் உடனடியாக வெளிப்படுத்துகிறது.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. சாலைப்பாதுகாப்பு என்பது இவர்களுக்கானது

(அ) வழிப்போக்கர்கள்

(ஆ) ஓட்டுநர்கள்

(இ) பொதுமக்கள்

(ஈ) சாலையைப் பயன்படுத்துவோர் அனைவருக்கும்

2. சாலை விபத்துகள் ஒரு நாட்டின் ------ பாதிக்கின்றன

(அ) முன்னேற்றத்தை

(ஆ) வாழ்வை

(இ) பொருளாதாரத்தை

(ஆ) மேற்கூறிய அனைத்தையும்

3. அனுமதி என்பது

(அ) இயக்குவதற்கு அனுமதி

(ஆ) பொருள்களை எடுத்துச் செல்ல அனுமதி

(இ) ஓட்டுநருக்கு சான்றிதழ்

(ஈ) வாகனத்தை பதிவு செய்த சான்றிதழ்

4. ரக்ஷா பாதுகாப்பு

(அ) பாதசாரிகள்

(ஆ) மோட்டார் வாகன ஓட்டிகள்

(இ) கார் இயக்குபவர்கள்

(ஈ) பயணிகள்

5. இந்தியாவில் சாலைப்பாதுகாப்பு வாரம் முதன்முதலாகக் கொண்டாடப்பட்ட வருடம்

(அ) 1947

(ஆ) 1990

(இ) 1989

(ஈ) 2019

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. போக்குவரத்தில் மனிதனின் மிக பயனள்ள கண்டுபிடிப்பு ---------- ஆகும்.

2. நமது வாழ்க்கைப் பயணத்தில் -----------யைப் பயன்படுத்துவது தவிர்க்க முடியாததாகும்.

3. சாலைகளில் அதிகமான வாகங்களால் ------------ மற்றும் -------------- மாசுபாடும் ஏற்படுகின்றன.

4. ------------குடும்பத்திற்கு வருமானம் ஈட்டித் தருபவர் ஆவார்.

5. மருத்துவ உதவியின் அவசர தேவைக்கு ---------- எண்ணை அழைக்கலாம்.

**III. பொருத்துக:**

1. தகவல் குறியீடுகள் – அ) போக்குவரத்து விளக்குகள்

2. வரிக்குதிரை கடப்பு – ஆ) குறுகிய வளைவு குறியீடு

3. கட்டாயக் குறியீடுகள் – இ) பெட்ரோல் பங்க் குறியீடு

4. எச்சரிக்கைக் குறியீடுகள் – ஈ) ஓட்டுநர் உரிமம்

5. வாகனம் ஓட்டும் உரிமை –உ) பாதசாரிகள்

**IV. பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. கூற்று: கார் பூலிங் என்பது ஒரே தடத்திலிருந்து பலர் ஒன்று கூடி ஒரே வாகனத்தைப் பயன்படுத்துவது.

காரணம்: அது எரிபொருள், நேரம் மற்றும் பணத்தை மிச்சப்படுத்துகிறது.

(அ) கூற்று சரி, காரணம் தவறு

(ஆ) கூற்று சரி, காரணமும் சரி

(இ) கூற்று தவறு, காரணம் சரி

(ஈ) இரண்டுமே தவறு

**V. பொருந்தாத இணையைக் கண்டறிக:**

(அ) கார் (ஆ) டிரக் (இ) டெம்போ (ஈ) ஏரோப்ளேன்

**VI. பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

(அ) பள்ளிப் பாடத்திட்டத்தில், சாலைப் பாதுகாப்புக் கல்வியை இணைப்பது மாணவர்களுக்கு மேலும் சுமையை அதிகரிப்பதே ஆகும்.

(ஆ) சாலைகளில் மண் குவிப்பதைத் தடை செய்ய வேண்டும்.

(இ) குழந்தைப் பருவத்திலிந்தே சாலைப் பாதுகாப்பு விதிகளைக் கடைப்பிடித்தல், பிற்காலத்தில் அவர்களது பழக்க வழக்கமாகிவிடும்

**விடைகள்:**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. சாலையைப் பயன்படுத்துவோர் அனைவருக்கும், 2. மேற்கூறிய அனைத்தையும், 3. இயக்குவதற்கு அனுமதி, 4. கார் இயக்குபவர்கள், 5. 1989

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. சக்கரம், 2. வாகனங்களை, 3. போக்குவரத்து நெரிசல் மற்றும் காற்று, 4. குடும்பத்தலைவன், 5. 108

**III. பொருத்துக:**

1. இ, 2. உ, 3. அ, 4. ஆ, 5. ஈ

**IV. பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. கூற்று சரி, காரணமும் சரி

**V. பொருந்தாத இணையைக் கண்டறிக:**

ஏரோப்ளேன்

**VI. பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

குழந்தைப் பருவத்திலிருந்தே சாலைப் பாதுகாப்பு விதிகளைக் கடைப்பிடித்தல், பிற்காலத்தில் அவர்களது பழக்க வழக்கமாகிவிடும்

7th Social Science Lesson 27

**27] வரி மற்றும் அதன் முக்கியத்துவம்**

**உங்களுக்குத் தெரியுமா?**

**ஆடம் ஸ்மித்தின் நால்வகையான வரிவிதிப்புக் கோட்பாடுகள்:** 1. சமத்துவ விதி. 2. உறுதிப்பாட்டு விதி. 3. வசதி விதி. 4. சிக்கன விதி.

மத்திய வருமானச் சட்டம் 1963இன் கீழ் "நேர்முக வரிகளுக்கான மத்திய வருவாய் வாரியம்" என்னும் பெயரில் தனி வாரியம் (CBDT) ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

**சரக்கு மற்றும் சேவை வரி –** ஓர் அறிமுகம்: முந்தைய மறைமுக வரி கட்டமைப்பு மற்றும் அதன் சிரமங்கள் இந்திய வரிவிதிப்பு வரலாறு பண்டைய காலத்திற்குச் செல்கிறது. கௌடில்யர் எழுதிய அர்த்த சாஸ்திரத்தின் கூற்றுப்படி, பண்டைய காலங்களில் வரி விதிக்கப்பட்டு ரொக்கமாகவும், வேறு வகையாகவும் சேகரிக்கப்பட்டது. மறைமுக வரிகளின் நவீன வரலாறு 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்து உப்பு, சர்க்கரை, வாகன எரிபொருள் போன்றவற்றுக்கும் மத்திய கலால் வரி விதிக்கப்பட்டதிலிருந்து தொடங்குகிறது. படிப்படியாகக் கலால் வரிகளின் அடிப்படை விரிவுபடுத்தப்பட்டது. சுதந்திரம் பெற்ற நேரத்தில், தேசிய அளவில் மத்திய கலால் வரி மற்றும் மாநில அளவில் விற்பனை வரி ஆகியவை நடைமுறையில் இருந்தன நீண்ட கால முயற்சிகள் மற்றும் திருத்தங்களுக்கு பிறகு, 2003ஆம் ஆண்டில் இந்திய மாநிலமான ஹரியானாவில் முதன்முதலில் மதிப்பு கூட்டு வரி (VAT) அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் பிறகு பஞ்சாப், சண்டிகர், இமாச்சலப் பிரதேசம், ஜம்மு மற்றும் காஷ்மீர் மற்றும் டெல்லி உள்ளிட்ட 24 மாநிலங்கள்/ யூனியன் பிரதேசங்களில் 2005இல் மதிப்பு கூட்டு வரி (VAT) அறிமுகப்படுத்தப்பட்டது.

மதிப்புச் கூட்டு வரி முன்பு இருந்த விற்பனை வரியை விடப் பெரிய வளர்ச்சியாக இருந்திருந்தாலும், சரக்கு மற்றும் சேவை வரி உண்மையில் குறிப்பிடத்தக்க ஒரு முன்னேற்றமாகும். மேலும், நாட்டின் வரி விதிப்பு அமைப்பில் முழுமையை உணர்ந்து கொள்வதற்கான தர்க்க அடிப்படையிலான படியாகும் ஆரம்பத்தில் ஒரு

முனை மற்றும் தேசிய அளவிலான சரக்கு மற்றும் சேவை வரி (GST) இருக்கும் என்று முன்மொழியப்பட்டது. இருப்பினும் சரக்கு மற்றும் சேவை வரி விதி (GST) இறுதியாக 2017 ஜீலை 1 முதல் இந்தியா முழுவதும் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதனால் நாட்டின் ஒரு பொருளாதார அமைப்பு ஒரு வரி, ஒரு சந்தை மற்றும் ஒரு தேசத்துடன் உள்ளது. சரக்கு மற்றும் சேவை வரி (GST) என்பது நாம் வாங்கும் அனைத்துப் பொருள்கள் மற்றும் சேவைகளுக்கான வரி. இது மத்திய சரக்கு மற்றும் சேவை வரி (CGST) மற்றும் மாநில சரக்கு மற்றும் சேவை வரி (SGST) என இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது. இது ஒரு வெளிப்படையான வரி. நீங்கள் வாங்கும் பொருள்களுக்கான ரசீது கிடைத்தால், பின்வரும் தகவல்களை காண்பீர்கள்:

தயாரிப்பு மதிப்பு = ரூ. 100 SGST 9% ரூ9.

CGST 9% = ரூ9 மொத்தம் ரூ. 118.

மசோதாவில் GST 18% அது சமமாகப் பிரிக்கப்ட்டுள்ளது மத்திய மற்றும் மாநிலத்திற்கும் தனித்தனியாக ரூ. 9க்கு 9% எனவே ரூ. 9 மாநில அரசுக்கும், மேலும் ரூ. 9. மத்திய அரசுக்கும் செல்லும். தமிழ்நாட்டில் ஒரு விற்பனையாளர் ஒரு பொருளை வெறுமாநிலத்தில் வாங்குபவருக்கு விற்றால் (எடுத்துக்காட்டாக கர்நாடகா), அது மாநிலங்களுக்கு இடையேயான வர்த்தகம் என்று அழைக்கப்படுகிறது. மாநிலங்களுக்கு இடையிலான வர்த்தகத்தை பொருத்தவரை. மசோதா கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

உற்பத்தியின் மதிப்பு = ரூ. 100.

IGST 18% = ரூ. 18.

மொத்தம் = ரூ. 118.

ரூ. 18 மத்திய அரசுக்குச் செல்லும். மத்திய அரசு ரூ. 9 எடுத்து கர்நாடக அரசுக்கு மேலும் ரூ. 9 அனுப்பும் வரி 0 சதவீதம், 5 சதவீதம், 12 சதவீதம், 18 சதவீதம் மற்றும் 28 சதவீதம் என ஐந்து அடுக்குகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. GST மத்திய அரசால் வசூலிக்கப்பட்டாலும், பெட்ரோலியப் பொருள்கள், ஆல்கஹால், மின்சாரம் ஆகியவற்றின் மீதான வரி தனித்தனியாக மாநில அரசால் வசூலிக்கப்படுகிறது மற்றும் காய்கறிகள் மற்றும் உணவு தானியங்கள் போன்ற வாழ்க்கையின் அனைத்து அத்தியாவசிய பண்டங்களுக்கும் இந்த வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகின்றன.

**சுங்க வரியும் சாலை வரியும்:** அரசால் மேம்படுத்தப்பட்ட உள்கட்டமைப்பு வசதிகளை நாம் அடிக்கடி பயன்படுத்துகிறோம். அதற்காக விதிக்கப்படும் வரி, சுங்கம் மற்றும் சாலை வரிகளாகும். எடுத்துக்காட்டாக, நாம் பயன்படுத்தும் சாலைகள் மற்றும் பாலங்கள் போன்றவற்றைக் கூறலாம். சாலை/பாலம் வசதிகளின் பராமரிப்புப் பணிக்காகவும் குறிப்பிட்ட திட்டங்களைச் செயல்படுத்துவதற்காகவும் இவ்வரிகள் பொதுமக்களிடமிருந்து வசூலிக்கப்படுகின்றன.

**தூய்மை பாரத வரி:** இந்திய அரசால் இவ்வரி விதிக்கப்படுகிறது. தூய்மை பாரதத்தின் பெயரால் வசூலிக்கப்படும் இவ்வரி, 2015ஆம் ஆண்டு, நவம்பர் மாதம் 15ஆம் நாள் தொடங்கப்பட்டது. இஃது அனைத்து வகையான வரிச் சேவைகளுக்கும் பொருந்தும். இதன் வரி விகிதம் 0. 5% ஆகும். தற்போது, 14%க்கும் மேற்பட்ட சேவை வரி நடைமுறையில் உள்ளது.

**நேர்முக வரி:** வரி செலுத்துவோர், தமக்கு விதிக்கப்பட்ட வரிச்சுமையைப் பிறருக்கு மாற்ற இயலாது. தனியாள் மற்றும் நிறுவனங்கள் பெறும் வருமானங்கள் மீது வரி விதிக்கப்படுகிறது. பணவீக்க அழுத்தம் இல்லை. வரித் தாக்கமும் வரி நிகழ்வும் சமமாக உள்ளன. நெகிழ்வுத் தன்மை குறைவு.

**மறைமுக வரி:** ஒருவர், தமக்கு விதிக்கப்பட்ட வரிச்சுமையை மிக எளிதாக வேறொருவருக்கும் மாற்ற இயலும். பல்வேறு பொருள் மற்றும் சேவைகளின் மீது வரி விதிக்கப்படுகிறது. பணவீக்கம் அழுத்தம் உண்டு. வரித் தாக்கமும் வரி நிகழ்வும் வெவ்வேறாக உள்ளன. நெகிழ்வுத்தன்மை அதிகம்.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. வரிகள் என்பவை --------- செலுத்தப்பட வேண்டும்

(அ) விருப்பத்துடன்

(ஆ) கட்டாயமாக

(இ) அ மற்றும் ஆ

(ஈ) இவற்றில் எதுவுமில்லை

2. வசூலிக்கப்படும் வரியிலிருந்து குறைந்த அளவிலேயே தொகை செலவழிக்கப்படுவது ----------

(அ) சமத்துவ விதி

(ஆ) உறுதிப்பாட்டு விதி

(இ) சிக்கன விதி

(ஈ) வசதி விதி

3. வளர்வீத வரிக்கு எதிராக அமைந்துள்ள வரி ----------

(அ) விகிதச்சாரா வரி

(ஆ) தேய்வு வீத வரி

(இ) அ மற்றும் ஆ

(ஈ) இவற்றில் எதுவுமில்லை

4. வருமான வரி என்பது ----------

(அ) நேர்முக வரி

(ஆ) மறைமுக வரி

(இ) அ மற்றும் ஆ

(ஈ) இவற்றில் எதுவுமில்லை

5. சேவை வழங்குவதன் அடிப்படையில் விதிக்கப்படுவது ---------

(அ) செல்வ வரி

(ஆ) நிறுவன வரி

(இ) விற்பனை வரி

(ஈ) சேவை வரி

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. வழக்கமாக, அரசால் விதிக்கப்படும் வரியையே ----------- என்னும் சொல்லால் குறிக்கிறோம்.

2. வருமான அளவைப் பொருட்படுத்தாமல் ஒரே மாதிரியாக வரி விதிப்பது ---------

3. ----------- வரி என்பது, அன்பளிப்பின் மதிப்பைப் பொருத்து, அன்பளிப்பு பெறுபவர் அரசுக்குச் செலுத்துவதாகும்.

4. ----- வரிச்சுமையை வரி செலுத்துவோர் மாற்ற முடியாது.

5. மறைமுக வரி என்பது ------- நெகிழ்ச்சி உடையது.

**III. பொருத்துக:**

1. வரி விதிப்புக் கொள்கை – அ) நேர்முக வரி

2. சொத்து வரி – ஆ) சரக்கு மற்றும் சேவை வரி

3. சுங்கவரி – இ) ஆடம்ஸ்மித்

4. 01. 07. 2017 – ஈ) குறைந்த நெகிழ்ச்சி உடையது

5. நேர்முக வரி மறைமுக வரி

**IV. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்**

1. பின்வருவனவற்றில் எது மறைமுக வரி அல்ல?

(அ) சேவை வரி

(ஆ) மதிப்பு கூட்டப்பட்ட வரி (VAT)

(இ) சொத்துவரி

(ஈ) சுங்கவரி

**V. சரியான ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்**

1. பின்வரும் வரியில் எது நேர்முக வரி?

(அ) சேவை வரி

(ஆ) செல்வ வரி

(இ) விற்பனை வரி

(ஈ) வளர் விகித வரி

**விடைகள்:**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. கட்டாயமாக, 2. சிக்கன விதி, 3. தேய்வு வீத வரி, 4. நேர்முக வரி, 5. சேவை வரி

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. வரிவிதிப்பு, 2. விகிதாச்சார விதி, 3. அன்பளிப்பு, 4. நேரடி, 5. அதிக

**III. பொருத்துக:**

winmeen.com

1. இ, 2. ஆ, 3. உ, 4. ஆ, 5. ஈ

**IV. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்**

1, சொத்துவரி

**V. சரியான ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்**

1. செல்வ வரி

8th Social Science Lesson 1

**1] ஐரோப்பியர்களின் வருகை**

**உங்களுக்குத் தெரியுமா?**

ஜார்ஜ் வில்லியம் பாரஸ்ட் என்பவர் இந்திய தேசிய ஆவணக்காப்பகத்தின் தந்தை என அழைக்கப்படுகிறார்.

1690இல் புனித டேவிட் கோட்டை ஆங்கிலேயரால் கடலூரில் கட்டப்பட்டது.

தரங்கம்பாடியை டேனியர்கள் டானஸ்பெர்க் என அழைத்தனர். சீகன்பால்கு என்பவரை டென்மார்க்கின் அரசர் இந்தியாவிற்கு அனுப்பினார். அவர் தரங்கம்பாடியில் ஒரு அச்சுக் கூடத்தை நிறுவினார்.

தூரக்கிழக்கு நாடுகளுடன் வணிகம் செய்யும் நோக்கில் 1731இல் ஜோதன்பர்க் என்பவர் சுவீடன் கிழக்கிந்திய கம்பெனியை நிறுவினார். டச்சு கிழக்கிந்திய கம்பெனி மற்றும் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் வெற்றி சுவீடன் கிழக்கிந்திய கம்பெனியின் தோற்றத்திற்கு ஊக்குவிப்பாக இருந்தது.

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. இந்தியாவில் போர்ச்சுக்கீசிய ஆதிகத்திற்கு அடித்தளம் அமைத்தவர் யார்?

(அ) வாஸ்கோடகாமா

(ஆ) பார்த்தலோமியோ டயஸ்

(இ) அல்போன்சோ–டி–அல்புகர்க்

(ஈ) அல்மெய்டா

2. பின்வரும் ஐரோப்பிய நாடுகளுள் இந்தியாவுக்கு கடல்வழியைக் கண்டுபிடிப்பதில் முதன்மையாக இருந்த நாடு எது?

(அ) நெதர்லாந்து (டச்சு)

(ஆ) போர்ச்சுகல்

(இ) பிரான்ஸ்

(ஈ) பிரிட்டன்

3. 1453ஆம் ஆண்டு கான்ஸ்டாண்டிநோபிள் யாரால் கைப்பற்றப்பட்டது?

(அ) பிரான்ஸ்

(ஆ) துருக்கி

(இ) நெதர்லாந்து (டச்சு)

(ஈ) பிரிட்டன்

4. சர் வில்லியம் ஹாக்கின்ஸ் ___________ நாட்டைச் சேர்ந்தவர்.

(அ) போர்ச்சுக்கல்

(ஆ) ஸ்பெயின்

(இ) இங்கிலாந்து

(ஈ) பிரான்ஸ்

5. இந்தியாவில் ஆங்கிலேயர்கள் கட்டிய முதல் கோட்டை

(அ) வில்லியம் கோட்டை

(ஆ) செயின்ட் ஜார்ஜ் கோட்டை

(இ) ஆக்ரா கோட்டை

(ஈ) டேவிட் கோட்டை

காற்றின் அழுத்தம் குறைவதனால் காற்றில் சுவாசிப்பதற்கான ஆக்ஸிஜனின் அளவும் குறைகிறது. மிக உயரமான இடங்களில் காற்றில் ஆக்ஸிஜனின் அளவும் காற்றின் அழுத்தமும் மிகவும் குறைவாக உள்ளது (அதனால் மனிதர்கள் அங்கு இறக்கக் கூடும்). மலையேறுபவர்கள் உயர்ந்த சிகரங்களில் ஏறும்பொழுது ஆக்ஸிஜனை உருளையில் அடைத்து எடுத்துச் செல்கின்றனர். அவர்கள் சிறிது கால அவகாசம் எடுத்துக் கொண்டு அதிக உயரங்களுக்குத் தம்மை பழக்கப் படுத்திக் கொள்கின்றனர். ஏனெனில் அழுத்தம் அதிகமான இடங்களிலிருந்து செல்லும் பொழுது மூச்சுத் திணறல் ஏற்படும். விமானங்களில் செயற்கை அழுத்தத்தை உருவாக்கி பயணிகளை வசதியாக சுவாசிக்கும் படி அமைத்துள்ளனர்.

பிரேசிலின் பெரும் பகுதியில் காற்றின் வேகம் குறைவாக உள்ளது. ஆப்பிரிக்காவின் காபான், காங்கோ மற்றும் DR காங்கோ, சுமத்ரா, இந்தோனேசியா மலேசியா ஆகியவை பூமியில் குறைந்த காற்று வீசும் பகுதியாகும்.

**<u>சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:</u>**

1. புவியின் வளிமண்டலம் ____________ நைட்ரஜன் மற்றும் ____________ ஆக்சிஜன் அளவைக் கொண்டுள்ளது.

(அ) 78% மற்றும் 21%

(ஆ) 22% மற்றும் 1%

(இ) 21% மற்றும் 0. 97%

(ஈ) 10% மற்றும் 20%₹

2. ___________ ஒரு பகுதியின் சராசரி வானிலையைக் குறிப்பதாகும்.

(அ) புவி

(ஆ) வளிமண்டலம்

(இ) காலநிலை

(ஈ) சூரியன்

3. புவி பெறும் ஆற்றல் ____________

(அ) நீரோட்டம்

(ஆ) மின்காந்த அலைகள்

(இ) அலைகள்

(ஈ) வெப்பம்

4. கீழ்க்கண்டவற்றில் எவை சம அளவு மழை உள்ள இடங்களை இணைக்கும் கோடு ஆகும்.

(அ) சமவெப்பக் கோடு

(ஆ) சம சூரிய வெளிச்சக் கோடு

(இ) சம காற்றழுத்தக் கோடு

(ஈ) சம மழையளவுக்கோடு

5. ___________ என்ற கருவி ஈரப்பதத்தை அளக்கப் பயன்படுகிறது.

(அ) காற்றுமானி

(ஆ) அழுத்த மானி

(இ) ஈரநிலை மானி

(ஈ) வெப்ப மானி

**<u>கோடிட்ட இடங்களை நிரப்புக:</u>**

1. ______________ என்பது குறுகிய காலத்தில் வளிமண்டலத்தில் ஏற்படும் மாற்றங்களைக் கூறுவது ஆகும்.

2. வானிலையைப் பற்றிய அறிவியல் ஆய்வு ______________

3. புவியில் அதிக பட்ச வெப்பம் பதிவான இடம் ______________

4. காற்றில் உள்ள அதிக பட்ச நீராவிக் கொள்ளளவுக்கும் உண்மையான நீராவி அளவிற்கும் உள்ள விகிதாச்சாரம் _______________

5. அனிமா மீட்டர் மற்றும் காற்றுமானி மூலம் _____________ மற்றும் ______________ ஆகியவை அளக்கப்படுகின்றன.

6. சம அளவுள்ள வெப்ப நிலையை இணைக்கும் கற்பனைக் கோடு _____________

**<u>பொருத்துக:</u>**

1. காலநிலை – புயலின் அமைவிடத்தையும் அது நகரும் திசையையும் அறிந்து கொள்வது

2. ஐசோநிப் – சூறாவளி

3. ஈரநிலைமானி – சம அளவுள்ள பனிபொழிவு

4. ரேடார் – நீண்ட நாளைய மாற்றங்கள்

5. குறைந்த அழுத்தம் (தாழ்வு அழுத்த மண்டலம்) – ஈரப்பதம்

**<u>சரியா அல்லது தவறா எனக் குறிப்பிடுக:</u>**

1. புவியைச் சுற்றியுள்ள வளிமண்டலம் பல்வேறு வாயுக்களால் ஆன கலவையாகும்.

2. வானிலை பற்றிய அறிவியல் பிரிவிற்கு காலநிலை என்று பெயர்.

3. சமமான சூரிய வெளிச்சம் உள்ள பகுதிகளை இணைக்கும் கோட்டிற்கு சம சூரிய வெளிச்சம் கோடு என்று பெயர்.

4. ஈரப்பதத்தை கணக்கிடும் கருவி அரனிராய்டு அழுத்த மானி.

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: (விடைகள்)**

1. (21% மற்றும் 78%) 2. காலநிலை 3. வெப்பம் 4. சம மழையளவுக் கோடு 5. ஈரநிலை மானி

**கோடிட்ட இடங்களை நிரப்புக: (விடைகள்)**

1. வானிலை 2. வானியியல் 3. கிரீன்லாந்து 4. ஒப்பு ஈரப்பதம்

5. காற்றின் வேகம், காற்றின் திசை 6. சமவெப்பக்கோடு

**பொருத்துக: (விடைகள்)**

1. காலநிலை – நீண்ட நாளைய மாற்றங்கள்

2. ஐசோநிப் – சம அளவுள்ள பனிபொழிவு

3. ஈரநிலைமானி – ஈரப்பதம்

4. ரேடார் – புயலின் அமைவிடத்தையும் அது நகரும் திசையையும் அறிந்து கொள்வது

5. குறைந்த அழுத்தம்– சூறாவளி

**சரியா தவறா எனக் குறிப்பிடுக: (விடைகள்)**

**1. சரி**

**2. தவறு**

**சரியான விடை:** வானிலை பற்றிய அறிவியல் பிரிவிற்கு வானியியல் என்று பெயர்.

**3. சரி**

**4. தவறு**

**சரியான விடை:** ஈரப்பதத்தை கணக்கிடும் கருவி ஹைக்ரோமீட்டர் ஆகும்

8th Social Science Lesson 11

**11] நீரியல் சுழற்சி**

**உங்களுக்குத் தெரியுமா?**

**ஆவியாதல் விகிதம் அதிகரித்தலானது:** 1. காற்றின் வேகம் அதிகரிக்கும் பொழுது, 2. வெப்பநிலை அதிகரிக்கும் பொழுது, 3. ஈரப்பதம் குறையும் பொழுது, 4. பூமியில் நீர் நிலைகள் அதிகரிக்கும் பொழுது.

நீர் சுருங்குதல் என்பது நீராவி காற்றில் செறிந்து பூரித நிலையை அடைவது. வெப்பக்காற்று குளிர்ந்த காற்றை விட அதிக நீராவியைத் தக்க வைத்துக் கொள்ளும். வெப்ப நிலை குறையும் பொழுது காற்று பூரித நிலையை அடைகிறது.

**நீரியலை அளக்க உதவும் அலகுகள்:** ஆவியாதல்–அங்குலம் அல்லது செ. மீ. மழைநீர் ஊடுருவல்–அங்குலம் அல்லது செ. மீ/மணி. மழை பொழிவு–அங்குலம்/மி. மி. /செ. மீ. புவி மேற்பரப்பில் நீர் ஓடலின் கனஅளவு–கன அடி/விநாடி. மழை வழிவின் கனஅளவு–கன அடி. மழை நீரின் கொள்ளளவு–கன அடி/ஏக்கர் அடி.

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. நீர் கடலிலிருந்து, வளிமண்டலத்திற்கும், வளிமண்டலத்திலிருந்து நிலத்திற்கும், மீண்டும் நிலத்திலிருந்து கடலுக்குச் செல்லும் முறைக்கு ___________ என்று பெயர்.

(அ) ஆற்றின் சுழற்சி

(ஆ) நீரின் சுழற்சி

(இ) பாறைச் சுழற்சி

(ஈ) வாழ்க்கைச் சுழற்சி

2. புவியின் உள்ள நன்னீரின் சதவிகிதம் _____________

(அ) 71%

(ஆ) 97%

(இ) 2. 8%

(ஈ) 0. 6%

3. நீர், நீராவியிலிருந்து நீராக மாறும் முறைக்கு ___________ என்று பெயர்.

(அ) ஆவி சுருங்குதல்

(ஆ) ஆவியாதல்

(இ) பதங்கமாதல்

(ஈ) மழை

4. நீர், மண்ணின் இரண்டாவது அடுக்கிலிருந்து அல்லது புவியின் மேற்பரப்பு வழியாக ஆறுகளிலும், ஓடைகளிலும், ஏரிகளிலும், பெருங்கடலுக்குச் செல்லும் முறைக்கு _______________

(அ) ஆவி சுருங்குதல்

(ஆ) ஆவியாதல்

(இ) நீர் உட்கசிந்து வெளியிடுதல்

(ஈ) நீர் வழிந்தோடல்

5. நீர் தாவரங்களின் இலைகளிலிருந்து நீராவியாக மாறுவதற்கு ____________ என்று அழைக்கின்றனர்.

(அ) நீர் உட்கசிந்து வெளியிடுதல்

(ஆ) நீர் சுருங்குதல்

(இ) நீராவி சுருங்குதல்

(ஈ) பொழிவு

6. குடிப்பதற்கு உகந்த நீரை _____________ என்று அழைப்பர்.

(அ) நிலத்தடி நீர்

(ஆ) மேற்பரப்பு நீர்

(இ) நன்னீர்

(ஈ) ஆர்ட்டீசியன் நீர்

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. வளிமண்டலத்தில் உள்ள நீராவியின் அளவு ______________ என்று அழைக்கப்படுகிறது.

2. நீர்ச்சுழற்சியில் ____________ நிலைகள் உள்ளன.

3. வளிமண்டலத்திற்கு புவியை நோக்கி விழும் எல்லா வகையான நீருக்கும் ______________ என்று பெயர்.

4. மழைத்துளியின் அளவு 0. 5 மீ குறைவாக இருந்தால், அம்மழை பொழிவின் பெயர் ____________

5. மூடுபனி ______________ ஐ விட அதிக அடர்த்தி கொண்டது.

**பொருத்துக:**

1. தாவரங்கள் – மேகங்கள்

2. நீர் சுருங்குதல் – கல்மழை

3. பனித்துளி மற்றும் மழைத்துளி – புவியின் மேற்பரப்பு

4. நீர் ஊடுருவுதல் – நீர் உட்கசிந்து வெளியிடுதல்

**பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. நீராவியாதல் என்பது

(i) நீராவி நீராக மாறும் செயலாக்கம்

(ii) நீர் நீராவியாக மாறும் செயலாக்கம்

(iii) நீர் 100°C வெப்ப நிலையில் கொதிக்கிறது. ஆனால் 0°C வெப்ப நிலையில் ஆவியாக ஆரம்பிக்கிறது.

(iv) ஆவியாதல் மேகங்கள் உருவாக காரணமாக அமைகிறது.

(அ) i, iv சரி

(ஆ) ii சரி

(இ) ii, iii சரி

(ஈ) அனைத்தும் சரி

**சரியா அல்லது தவறா எனக் குறிப்பிடுக:**

1. 212°F வெப்ப நிலையில் நீர் கொதிக்கிறது. ஆனால் 32°F வெப்ப நிலையில் ஆவியாக ஆரம்பிக்கிறது.

2. மூடுபனி எனப்படுவது காற்றில் தொங்கு நிலையில் மிதக்கும் நுண்ணிய நீர் துளிகளைப் பெற்றிருப்பதில்லை.

3. அடிப்பரப்பு நீர் வழிந்தோடல் பொதுவாக இடைநீர் ஓட்டம் எனக் குறிப்பிடப்படுகிறது.

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: (விடைகள்)**

1. நீரின் சுழற்சி 2. (2. 8%) 3. ஆவி சுருங்குதல் 4. நீர் வழிந்தோடல்

5. நீர் உட்கசிந்து வெளியிடுதல் 6. நன்னீர்

**கோடிட்ட இடங்களை நிரப்புக: (விடைகள்)**

1. ஈரப்பதம் 2. மூன்று 3. மழை 4. தூறல் 5. அடர் மூடு பனி

**பொருத்துக: (விடைகள்)**

1. தாவரங்கள் – நீர் உட்கசிந்து வெளியிடுதல்

2. நீர் சுருங்குதல் – மேகங்கள்

3. பனித்துளி மற்றும் மழைத்துளி – கல்மழை

4. நீர் ஊடுருவுதல் – புவியின் மேற்பரப்பு

**சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்: (விடை)**

1. ii iii சரி

**சரியா / தவறா எனக் குறிப்பிடுக:**

**1. சரி**

**2. தவறு**

**சரியான விடை:** மூடுபனி எனப்படுவது காற்றில் தொங்கு நிலையில் மிதக்கும் நுண்ணிய நீர்த் துளிகளைப் பெற்றிருக்கின்றன.

**3. சரி**

8th Social Science Lesson 12

**12] இடம் பெயர்தல் மற்றும் நகரமயமாதல்**

**உங்களுக்குத் தெரியுமா?**

2017ஆம் ஆண்டில் சர்வதேச புலம்பெயர்வில் இந்தியா மிகப் பெரிய நாடாகவும் (17 மில்லியன்) இதைத் தொடர்ந்து மெக்சிகோவும் (13 மில்லியன்) உள்ளன.

ஐரோப்பா, வட அமெரிக்கா, ஆஸ்திரேலியா, லத்தீன் அமெரிக்கா, கரீபியன் போன்ற நாடுகளில் புலம் பெயர்ந்தோரில் ஆண்களை விட பெண்களே அதிகம். ஆனால் ஆப்பிரிக்கா மற்றும் ஆசியா குறிப்பாக மேற்கு ஆசியாவில் பெண்களைவிட ஆண்கள் அதிகமாக புலம் பெயர்கிறார்கள்.

சமீப காலங்களில் சர்வதேச அளவில் புலம்பெயர்வோர் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருகிறது. 2000இல் 173 மில்லியன்களாக இருந்த புலம்பெயர்ந்தோரின் எண்ணிக்கை 2010இல் 220 மில்லியன்களாகவும் 2017இல் 258 மில்லியன்களாகவும் அதிகரித்துள்ளது.

2007ஆம் ஆண்டு வரலாற்றில் முதல் முறையாக உலகளாவிய நகர்ப்புற மக்கள் தொகை ஊரக மக்கள் தொகையை விட அதிகமானது. அதன் பிறகு நகர்புற மக்களின் சதவீதம் தொடர்ந்து அதிகரித்த வண்ணம் உள்ளது.

இந்தியா, சீனா மற்றும் நைஜீரியா நாடுகளில் 2018–2050ஆம் ஆண்டுகளுக்கிடையிலான காலத்தில் உலக நகர்ப்புற மக்கள் தொகை வளர்ச்சியில் 35 சதவீதத்தைப் பெற்றிருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இக்காலத்தில் இந்தியா 416 மில்லியன் நகர்ப்புற மக்கள் தொகையையும், சீனா 255 மில்லியன் மக்கள் தொகையையும், நைஜீரியா 159 மில்லியன் மக்கள் தொகையையும் நகர்ப்புறவாசிகளாக அதிகரிக்கும் என கணக்கிடப்படுகிறது.

1950இல் உலகின் மக்கள் தொகையில் 30 சதவீதம் நகர மக்கள் தொகையாகும். 2050இல் இவை 68 சதவீதமாக உயரும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

| **உலக நகரமயமாக்கல்** | | |
|---|---|---|
| **வ. எண்** | **கண்டங்கள்** | **நகர மக்கள் தொகை (%)** |

| | | |
|---|---|---|
| 1 | வட அமெரிக்கா | 82 |
| 2 | இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் தீவுகள் | 81 |
| 3 | ஐரோப்பா | 74 |
| 4 | ஓசியானியா | 68 |
| 5 | ஆசியா | 50 |
| 6 | ஆப்பிரிக்கா | 43 |
| உலக சராசரி | | 55 |

| அதிக மக்கள் தொகை கொண்ட உலகின் முதல் ஐந்து மாநகரங்கள் | |
|---|---|
| மாநகரத்தின் பெயர் | மக்கள் தொகை (மில்லியனில்) |
| 1. டோக்கியோ (ஜப்பான்) | 37 |
| 2. புது தில்லி (இந்தியா) | 29 |
| 3. சாங்காய் (சீனா) | 26 |
| 4. மெக்சிகோ நகரம் (மெக்சிகோ) | 22 |
| 5. சா பாலோ (பிரேசில்) | 22 |

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. மக்கள் ______________ லிருந்து ___________ க்கு நல்ல வேலை வாய்ப்பினைத் தேடி குடிபெயர்கின்றனர்.

(அ) கிராமப்புறத்திலிருந்து நகர்புறத்திற்கு

(ஆ) நகர் புறத்திலிருந்து கிராமப்புறத்திற்கு

(இ) மலையிலிருந்து சமவெளிக்கு

(ஈ) சமவெளியிலிருந்து மலைப்பகுதிக்கு

2. ஒரு நபர் சொந்த நாட்டில் இருந்து மற்றொரு நாட்டிற்கு இடம் பெயர்தல் _____________ எனப்படுகிறது.

(அ) குடிபுகுபவர்

(ஆ) அகதி

(இ) குடியேறுபவர்

(ஈ) புகலிடம் தேடுபவர்

3. வளம் மிகுந்த வேளாண்மை நிலம் தேடி இடம் பெயர்தல் நடைபெறுவது ______________

(அ) கிராமத்தில் இருந்து கிராமத்திற்கு

(ஆ) கிராமத்தில் இருந்து நகரத்திற்கு

(இ) நகரத்தில் இருந்து கிராமத்திற்கு

(ஈ) நகரத்தில் இருந்து நகரத்திற்கு

4. போரின் காரணமாக நடைபெறும் குடிபெயர்வு ___________ ஐ சார்ந்தது.

(அ) மக்களியல்

(ஆ) சமூக மற்றும் கலாச்சாரம்

(இ) அரசியல்

(ஈ) பொருளாதாரம்

5. வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் நகரமயமாக்கலுக்கு முக்கிய காரணம் _____________

(அ) மிகையான உணவு தானிய உற்பத்தி

(ஆ) கால்நடை வளர்ப்பு

(இ) மீன் பிடித்தல்

(ஈ) வேட்டையாடுதல்

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. நகரமயமாதல் ___________ எண்ணிக்கையிலான காரணிகளால் தீர்மானிக்கப்படுகின்றன.

2. ____________ என்பது கிராமப்புற பகுதிகளில் செயல்படும் முக்கிய உந்துக் காரணியாகும்.

3. இந்தியாவின் _____________ மாநகரம் உலகிலேயே இரண்டாவது அதிக நகர மக்கள் தொகையைக் கொண்டது.

4. ஒரு நபர் தன்னார்வத்துடனும் விருப்பத்துடனும் நல்ல வசிப்பிடம் தேடி இடம் பெயர்தல் ____________ இடம்பெயர்வு எனப்படும்.

5. நவீன காலத்தில் நகர்ப்புற வளர்ச்சி ____________ வளர்ச்சியால் அதிகரிக்கிறது.

**பொருத்துக:**

1. குடிபெயர்தல் – குடிபுகுபவர்

2. குடியேற்றம் – வெளியேறுதல்

3. இழுக்காரணி – வேலை வாய்ப்பின்மை

4. உந்து காரணி – சமூக மற்றும் பண்பாட்டு இடம் பெயர்வு

5. திருமணம் – வேலைவாய்ப்புகள்

**சரியா அல்லது தவறா எனக் குறிப்பிடுக:**

1. குடிசைப்பகுதிகள் பொதுவாக பெரு நகரங்களில் காணப்படுகிறது.

2. நவீன காலத்தில், ஒரே சமயத்தில் அதிக மக்களின் இடம்பெயர்வு நடைபெறுவதில்லை.

3. நகரமயமாக்கம் குறுகியக் கால வரலாறுடையது.

4. பெருநகரங்கள் மற்றும் நகரங்கள் சுற்றுச்சூழல் சீர்கேட்டிற்கு அதிக அளவு காரணமாக உள்ளன.

5. மேய்ச்சலுக்காக கால்நடைகளை இடமாற்றம் செய்வது, பருவகால இடம் பெயர்வு எனவும் அமைக்கப்படுகிறது.

**பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

winmeen.com

1. கூற்று: நகரமயமாதல் முக்கியமாக கிராமப்புற மக்கள் நகர்புறத்திற்கு இடம் பெயர்வதால் ஏற்படுவதாகும்.

காரணம்: கிராமத்தில் இருந்து நகரத்திற்கு இடம் பெயர்தல் முதன்மையான ஒன்றல்ல.

(அ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு (ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு

(இ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி (ஈ) கூற்று தவறு மற்றும் காரணம் சரி

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: (விடைகள்)**

1. கிராமப்புறத்திலிருந்து நகர்புறத்திற்கு 2. குடியேறுபவர்

3. கிராமத்தில் இருந்து கிராமத்திற்கு 4. அரசியல் 5. மிகையான உணவு தானிய உற்பத்தி

**கோடிட்ட இடங்களை நிரப்புக: (விடைகள்)**

1. மூன்று 2. வேலையின்மை 3. புது தில்லி 4. தன்னார்வ

5. தொலைத்தொடர்பு, போக்குவரத்து மற்றும் தொழிற்துறை

**பொருத்துக: (விடைகள்)**

1. குடிபெயர்தல் – வெளியேறுதல்

2. குடியேற்றம் – குடிபுகுபவர்

3. இழுக்காரணி – வேலைவாய்ப்புகள்

4. உந்து காரணி – வேலை வாய்ப்பின்மை

5. திருமணம் – சமூக மற்றும் பண்பாட்டு இடம் பெயர்வு

**சரியான / தவறா எனக் குறிப்பிடுக:**

**1. சரி**

**2. சரி**

**3. தவறு**

**சரியான விடை:** நகரமயமாக்கம் நீண்ட கால வரலாறுடையது.

**4. சரி**

**5. சரி**

**பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியான ஒன்றைத் தேர்வு செய்க:**

1. கூற்று சரி ஆனால் காரணம் தவறு

8th Social Science Lesson 13

13] இடர்கள்

<u>உங்களுக்குத் தெரியுமா?</u>

மனித உயிர்கள் மற்றும் உடைமைகளுக்கு அச்சுறுத்தலை உருவாக்கும் இயற்கையான நிகழ்வுகள் இயற்கை இடர்கள் எனப்படும். பேரிடர்களின் எண்ணிக்கை மற்றும் தீவிரம் மனித செயல்களால் அதிகரிக்கிறது. இயற்கையான செயல்பாடுகள் அல்லது நிகழ்வுகள் மட்டுமே இயற்கை இடருக்கான காரணங்கள் அல்ல. மனிதர்கள் இயற்கையைக் கையாளும் தன்மையைப் பொருத்தும் அமைகிறது.

மனித உயிர்கள் மற்றும் உடைமைகளுக்கு அச்சுறுத்தலை உருவாக்கும் இயற்கையான நிகழ்வுகள் இயற்கை இடர்கள் எனப்படும். பேரிடர்களின் எண்ணிக்கை மற்றும் தீவிரம் மனித செயல்களால் அதிகரிக்கிறது. இயற்கையான செயல்பாடுகள் அல்லது நிகழ்வுகள் மட்டுமே இயற்கை இடருக்கான காரணங்கள் அல்ல. மனிதர்கள் இயற்கையைக் கையாளும் தன்மையைப் பொருத்தும் அமைகிறது. பேரிடர் என்பது வரையறுக்கப்பட்ட பகுதியில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் நிகழும் ஒரு அபாயகரமான நிகழ்வாகும். இவை உயிர், மற்றும் உடைமைகளுக்கு பெரும் அழிவை விளைவிப்பதுடன் மற்றவர்களின் உதவியை நாட வேண்டிய தேவை ஏற்படுகிறது. பேரழிவு என்பது மிகப்பெரிய இழப்பினையும் அதிக செலவினத்தையும் உண்டாக்குவதோடு அவற்றிலிருந்து மீள்வதற்கு நீண்ட காலமும் தேவைப்படுகிறது.

**தகவல் பேழை:** நாட்டின் மூன்றில் ஒரு பங்கு பகுதிகள் வறட்சியினால் பாதிக்கப்படுகின்றன. இது சுமார் 16% நிலப்பரப்பையும் 12% மக்கள் தொகையையும் கடுமையாக பாதிக்கிறது. ஆண்டு மழைப்பொழிவு 60 சென்டி மீட்டருக்கும் குறைவான மழை பெறும் பகுதிகள் இந்தியாவில் வறட்சிக்கு உள்ளாகும் பகுதிகளாகும்.

சுனாமி என்ற வார்த்தை ஜப்பானிய சொல்லான (சு–துறைமுகம்) (நாமி–அலை) என்பதிலிருந்து பெறப்பட்டது. அதாவது (துறைமுக அலை).

**இந்திய பெருங்கடல் சுனாமி (2004):** 2004இல் இந்தியப் பெருங்கடலில் ஏற்பட்ட சுனாமி டிசம்பர் 26, 2004ஆம் ஆண்டு உள்ளூர் நேரம் காலை 7. 59 மணிக்கு ரிக்டர் அளவுகோலில் 9. 1 ஆற்றல் கொண்ட நிலநடுக்கம் இந்தோனேஷியாவின் சுமத்ரா கடற்கரையைத் தாக்கியது. இதனால் ஏற்பட்ட சுனாமி 12 நாடுகளைத் தாக்கி 2, 25, 000 உயிர்களைப் பலிவாங்கியதுடன் இந்தோனேஷியா, இலங்கை, இந்தியா, தாய்லாந்து, சோமாலியா, மாலத்தீவுகள் போன்ற நாடுகளில் பெருத்த பொருட்சேதத்தையும் விளைவித்தது.

செர்னோபில் அணு பேரழிவு இடம் (பிரிப்யாட் அருகில்) அதிகாரபூர்வமான சுற்றுலா தலமாகும்.

**முன்னர்:** செர்னோபில் (அப்போதைய சோவியத் யூனியன்) அணு உலை விபத்து ஏப்ரல் 26, 1986 அன்று நிகழ்ந்தது. 1945இல் ஹிரோஷிமா (ஜப்பான்) மீது வீசப்பட்ட அணுகுண்டை விட 400 மடங்கு அதிகமான கதிர்வீச்சு இதிலிருந்து வெளிப்பட்டது. இந்த விபத்து உலக வரலாற்றில் மிகப் பெரிய அணு விபத்தாக பதிவாகியுள்ளது. இப்பகுதியிலிருந்து 3 லட்சத்து 50 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர். நிரந்தர மனித குடியேற்றத்திற்கு கடுமையான கட்டுப்பாடுகள் இன்றும் அந்த இடத்தில் பின்பற்றப்படுகிறது.

**தற்பொழுது:** தற்போது உக்ரைன் மற்றும் பெலாரசைக் கொண்ட இப்பகுதியில் விபத்து நடந்து 33 ஆண்டுகளுக்கு பிறகு ஏராளமான விலங்குகள் மற்றும் இருநூற்றுக்கும் அதிகமான பறவை இனங்கள் வசிக்கின்றன. 2016ஆம் ஆண்டு உக்ரைன் நாடு "கதிர் இயக்கவியல் சார் மற்றும் சுற்றுச்சூழல் உயிர்கோளப்பெட்டகம்" என அந்நாட்டு அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

**பேரழிவை உருவாக்கக் கூடிய புதிய ஆயுதமாக இயற்கை வளர்ந்து வருகிறது. நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா?** பெரும் சுற்றுச்சூழல் பேரழிவு காரணமாக இந்தியாவில் 2017ஆம் ஆண்டு வரையிலான 10 ஆண்டுகளில் சுமார் 22, 000 பேர் இறந்துள்ளனர். கடந்த 20 ஆண்டுகளில் (1998–2017) உலகில் சுமார் 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் மோசமான வானிலை நிகழ்வுகளால் இறந்துள்ளனர். இது ஜெர்மன்–வாட்ச் என்ற தனியார் அமைப்பு வெளியிட்டுள்ள உலகளாவிய காலநிலை இடர் குறியீட்டு அறிக்கையில் இவை கூறப்பட்டுள்ளது.

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. காற்றில் உள்ள நைட்ரஜன் சதவீதம் ___________

(அ) 78. 09%

(ஆ) 74. 08%

(இ) 80. 07%

(ஈ) 76. 63%

2. இந்தியப் பெருங்கடலில் சுனாமி ____________ ஆம் ஆண்டில் ஏற்பட்டது.

(அ) 1990

(ஆ) 2004

(இ) 2005

(ஈ) 2008

3. சுனாமி என்ற சொல் ____________ மொழியிலிருந்து பெறப்பட்டது.

(அ) ஹிந்தி

(ஆ) பிரெஞ்சு

(இ) ஜப்பானிய

(ஈ) ஜெர்மன்

4. புவி மேற்பரப்பு நீருக்கு ____________ எடுத்துக்காட்டாகும்.

(அ) ஆர்டீசியன் கிணறு

(ஆ) நிலத்தடி நீர்

(இ) அடி பரப்பு நீர்

(ஈ) ஏரிகள்

5. பருவமழை பொய்ப்பின் காரணமாக ____________ ஏற்படுகிறது.

(அ) ஆவி சுருங்குதல்

(ஆ) வறட்சி

(இ) ஆவியாதல்

(ஈ) மழைப்பொழிவு

**<u>கோடிட்ட இடங்களை நிரப்புக:</u>**

1. இடர்கள் _____________ க்கு வழிவகுக்கிறது.

2. நிலச்சரிவு ______________ இடருக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

3. இடர்கள் தோன்றுவதன் அடிப்படையில் இடர்களை ____________ வகைகளாகப் பிரிக்கலாம்.

4. தீவிரவாதம் ______________ இடருக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

5. நைட்ரஜன் ஆக்சைடுகள் மனிதர்களைப் பாதிக்கும் ____________ மாசுபடுத்திகளாகும்.

6. செர்னோபில் அணு விபத்து ______________ ஆண்டில் நடைபெற்றது.

**<u>பொருத்துக:</u>**

**பட்டியல் 1 – பட்டியல் 2**

1. முதல்நிலை மாசுபடுத்திகள் – தீவிரவாதம்

2. அபாயகர கழிவுகள் – சுனாமி

3. நில அதிர்வு – காலாவதியான மருந்துகள்

4. வானிலையியல் வறட்சி – சல்பர் ஆக்சைடுகள்

5. மனிதனால் தூண்டப்பட்ட இடர் – மழைப்பொழிவு குறைதல்

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: (விடைகள்)**

1. (78. 09 %) 2. (2004) 3. ஜப்பானிய 4. ஏரிகள் 5. வறட்சி

**கோடிட்ட இடங்களை நிரப்புக: (விடைகள்)**

1. அழிவிற்கு 2. இயற்கை 3. எட்டு 4. முதன்மை 5. ஏப்ரல் 26, 1986

**பொருத்துக: (விடைகள்)**

1. முதல்நிலை மாசுபடுத்திகள் – சல்பர் ஆக்சைடுகள்

2. அபாயகர கழிவுகள் – காலாவதியான மருந்துகள்

3. நில அதிர்வு – சுனாமி

4. வானிலையியல் வறட்சி – மழைப்பொழிவு குறைதல்

5. மனிதனால் தூண்டப்பட்ட இடர் – தீவிரவாதம்

8th Social Science Lesson 14

**14] தொழிலகங்கள்**

**உங்களுக்குத் தெரியுமா?**

சேவைத்துறை இந்தியாவின் மிகப்பெரிய துறைகளில் ஒன்றாகும். தற்போது இந்தத் துறையானது இந்திய பொருளாதாரத்தின் முதுகெலும்பாக உள்ளது. இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 53 சதவீதம் பங்களிப்பினை அளிக்கிறது.

**இந்தியாவின் டெட்ராய்ட்:** அமெரிக்க ஐக்கிய நாட்டில் மிச்சிகன் மாநிலத்தில் உள்ள டெட்ராய்ட் நகரம் உலக பாரம்பரிய வாகன தொழில் மையமாக அறியப்படுகிறது. அதே போல் இந்தியாவில் உள்ள சென்னை மாநகரம் இந்தியாவின் டெட்ராய்ட் என்று அழைக்கப்படுகிறது. ஏனெனில் உலகப் புகழ் பெற்ற வாகன தொழிலகங்களான ஜி. எம், போர்டு, மஹேந்திரா, ஹீண்டாய் போன்ற தொழிலகங்கள் இங்கு அமைந்துள்ளன. இவற்றைத் தவிர இந்நகரம் நாட்டின் வாகன தொழில் ஏற்றுமதியில் 60% பங்கினைக் கொண்டுள்ளது.

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. பட்டு நெசவு மற்றும் வீட்டு உபயோகப் பொருட்கள் சார்ந்த தொழிலகங்கள் ___________ பிரிவுகளின் கீழ் வருகின்றன.

(அ) சிறிய அளவிலான தொழிலகம்

(ஆ) பெரிய அளவிலான தொழிலகம்

(இ) கடல்வளம் சார்ந்த தொழிலகம்

(ஈ) மூலதனம் சார்ந்த தொழிலகம்

2. உடைமையாளர்கள் அடிப்படையிலான தொழிலகங்கள் -------- வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

(அ) 2

(ஆ) 3

(இ) 4

(ஈ) 5

3. ஆனந்த பால் பண்ணைத் தொழிலகம் (அமுல்) ___________ துறைக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

(அ) தனியார் துறை

(ஆ) பொதுத்துறை

(இ) கூட்டுறவுத்துறை

(ஈ) கூட்டுத்துறை

4. இரும்பு எஃகு மற்றும் சிமெண்ட் தொழிலகங்கள் ___________ தொழிலகங்களுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

(அ) வேளாண் சார்ந்த

(ஆ) கனிம வளம் சார்ந்த

(இ) வனப்பொருட்கள் சார்ந்த

(ஈ) கடல் வளம் சார்ந்த

5. சார்புத் துறை ___________ வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

(அ) 4

(ஆ) 3

(இ) 2

(ஈ) 5

**<u>கோடிட்ட இடங்களை நிரப்புக:</u>**

1. வங்கித் துறை என்பது _____________ பொருளாதார நடவடிக்கையாகும்.

2. மூன்றாம் நிலை தொழில்கள் __________ மற்றும் ____________ ஆக வகைப்படுத்தப்படுகிறது.

3. அரசாங்க முடிவு எடுக்கும் செயல்முறைகள் ___________ துறையின் கீழ்வரும் மூன்றாம் நிலை செயல்பாடாகும்.

4. மூலப்பொருட்கள் அடிப்படையில் பருத்தி நெசவாலை ஒரு ____________ தொழிலாகும்.

5. பெரிய அளவிலான தொழிற்சாலையை நிறுவுவதற்கு தேவையான மூலதனம் ____________ ஆகும்.

**<u>பொருத்துக:</u>**

1. நீதித்துறை – தனியார்துறை

2. தொலைக்காட்சி ஒளிபரப்பு – புவியியல் அல்லாத காரணிகள்

3. புவியியல் காரணிகள் – நான்காம் நிலை செயல்பாடு

4. மூலதனம் – மூலப்பொருட்கள்

5. பஜாஜ் ஆட்டோ – ஐந்தாம் நிலை செயல்பாடுகள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: (விடைகள்)**

1. சிறிய அளவிலான தொழிலகம் 2. (4) 3. கூட்டுறவுத்துறை

5. கனிம வளம் சார்ந்த 5. (2)

**கோடிட்ட இடங்களை நிரப்புக: (விடைகள்)**

1. சார்பு நிலை 2. நான்காம் நிலை, ஐந்தாம் நிலை 3. ஐந்தாம் நிலை

4. ஈரப்பத காலநிலை 5. ஒரு கோடி

**பொருத்துக: (விடைகள்)**

1. நீதித்துறை – ஐந்தாம் நிலை செயல்பாடுகள்

2. தொலைக்காட்சி ஒளிபரப்பு – நான்காம்; நிலை செயல்பாடு

3. புவியில் காரணிகள் – மூலப்பொருட்கள்

4. மூலதனம் – புவியில் அல்லாத காரணிகள்

5. பஜாஜ் ஆட்டோ – தனியார் துறை

## 8th Social Science Lesson 15

## 15] கண்டங்களை ஆராய்தல் – ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் அண்டார்டிகா

**உங்களுக்குத் தெரியுமா?**

ஆப்பிரிக்க கண்டத்தின் உட்பகுதிகள் குறித்து பெரும்பாலானோர் குறித்து பெரும்பாலானோர் அறிந்திருக்கவில்லை. எனவே ஆப்பிரிக்கா ஒரு "இருண்ட கண்டம்" என்று அழைக்கப்படுகிறது. ஐரோப்பியக் கடற்பயண ஆய்வாளர் ஹென்றி எம். ஸ்டான்லி என்பவர் இருண்ட கண்டம் (1878) என்ற வார்த்தையை முதன் முதலில் பயன்படுத்தினார்.

வட மேற்கு ஆப்பிரிக்க நாடுகளான மொராக்கோ, அல்ஜீரியா, லிபியா, மோரிடானியா மற்றும் துனிசியா ஆகிய நாடுகளின் குழு "மேக் ரெப்" (Maghreb) என்று அழைக்கப்படுகிறது. அரபு மொழியில் இதன் பொருள் "மேற்கு" என்பதாகும்.

கிளிமஞ்சாரோவின் மலை உச்சியிலுள்ள பனிப்படிவுகள் இருபதாம் நூற்றாண்டிலிருந்து மறைந்து வருகின்றன. இந்நிலை தொடர்ந்தால் 2025ஆம் ஆண்டிற்குள் இப்பகுதியில் பனிப்படிவுகள் இல்லாத நிலை உருவாகும்.

தென் ஆப்பிரிக்காவின் அரை வறண்ட பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் செம்மறி ஆடு வளர்ப்பு "காரூஸ்" என்று அழைக்கப்படுகிறது.

நைல் நதி எகிப்தின் வாழ்வாதாரமாக விளங்குவதால் இந்நதி "எகிப்தின் நன்கொடை" என அழைக்கப்படுகிறது. நைல் நதி எகிப்தில் இல்லையெனில் இந்நாடு பாலைவனமாக இருந்திருக்கும்.

வெப்பப் பாலைவனங்கள் கண்டங்களின் மேற்கு விளிம்புகளில் புவி நடுக்கோட்டின் வடக்கு மற்றும் தென் பகுதிகளில் ($20^\circ$ முதல் $30^\circ$) அட்சங்கள் வரை அமைந்துள்ளன. இப்பாலைவனங்கள் வியாபாரக் காற்று வீசும் மண்டலத்தில் அமைந்துள்ளன. இவ்வியாபாரக் காற்றுகள் வட கோளத்தில் வடகிழக்கில் இருந்தும் தென் கோளத்தில் தென்கிழக்கிலிருந்தும் வீசுகின்றன. இக்காற்றானது பொதுவாக கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வீசுகிறது. இக்காற்று கண்டங்களின் கிழக்கு விளிம்புங்களில் அதிக மழைப்பொழிவை ஏற்படுத்தி மேற்கு பகுதியை அடையும் பொழுது ஈரப்பதத்தை இழந்து வறண்ட காற்றாகவும் வீசுகின்றது. எனவே கண்டங்களின் மேற்கு பகுதிகள் பாலைவனங்களாக உள்ளன.

சகாரா பாலைவனத்தில் இருந்து கினியா கடற்கரையை நோக்கி வீசும் வறண்ட வெப்ப புழுதி தலக்காற்று "ஹார்மாட்டான்" என்று அழைக்கப்படுகிறது. சகாரா பாலைவனத்திலிருந்து மத்திய தரைக்கடல் நோக்கி

வீசும் வெப்ப தலக்காற்று "சிராக்கோ" என்று அழைக்கப்படுகிறது. வெப்ப மண்டல மழைக்காடுகள் புவியின் அணிகலன் என்றும் உலகின் பெரும் மருந்தகம் என்றும் அழைக்கப்படுகிறது.

உலகில் காணப்படும் முக்கிய பழங்குடி இன மக்கள் அப்பிரதேசத்தின் பூர்வீக குடிமக்கள் ஆவார்கள். பூர்வீக குடிமக்கள் தங்களின் பூர்வீக நிலம், மொழிகள் மற்றும் கலாச்சாரங்களுடன் தனித்துவமான அடையாளத்தைக் கொண்டுள்ளனர். அபர், பாட்வா, புஷ்மன், டிங்கா, மசாய், பிக்மீஸ், ஜீலு, சுவான் மற்றும் எஃபி ஆகியோர் ஆப்பிரிக்காவின் முக்கிய பழங்குடி இனங்களாகும்.

ஆஸ்திரேலியா கண்டத்தை 1770இல் கேப்டன் ஜேம்ஸ் குக் என்ற ஆங்கில மாலுமி கண்டுபிடித்தார்.

ஆஸ்திரேலியாவின் மத்திய தாழ் நிலங்களில் அமைந்துள்ள பௌர்க்கி (Bourke) என்னும் இடத்தில் இக்கண்டத்தின் அதிகபட்சமாக 53° செல்சியஸ் வெப்ப நிலை பதிவாகியுள்ளது. ஆஸ்திரேலியாவின் தலைநகரான கான்பெராவில் குறைந்த பட்ச வெப்பநிலையாக –22° செல்சியஸ் பதிவாகியுள்ளது.

ஆஸ்திரேலியாவில் உள்ள செம்மறி ஆட்டு பண்ணைகளில் பணிபுரியும் மக்களை "ஜாகருஸ்" என்று அழைக்கப்படுகிறார்கள். ஆஸ்திரேலியாவின் பூர்வ குடிமக்கள் அபாரிஜின்கள் ஆவர்.

ஆடு வளர்ப்புத் தொழில் ஆஸ்திரேலியாவில் நன்கு வளர்ச்சியடைந்துள்ளது. ஆட்டு உரோமம் "ஆஸ்திரேலியாவின் பணப்பயிர்" என அழைக்கப்படுகிறது.

ஆஸ்திரேலியாவில் உள்ள மித வெப்ப மண்டல புல்வெளிகள் "டவுன்ஸ்" என்று அழைக்கப்படுகிறது.

உலகின் எந்த ஒரு நாட்டின் அறிவியல் ஆராய்ச்சியாளர்களும் அண்டார்டிகாவில் ஆய்வுகள் மேற்கொள்ளவும், தரவுகள் சேகரிக்கவும் அனுமதிக்கப்படுகிறார்கள். எனவே இக்கண்டம் "அறிவியல் கண்டம்" என அழைக்கப்படுகிறது.

அண்டார்டிகா, புவியின் மேற்பரப்பில் காணப்படும் மிகப்பெரிய பனித் தொகுப்பு ஆகும். புவியில் காணப்படும் நன்னீரில் 70% இக்கண்டத்தில் பனிக் குமிழ்களாக உள்ளது.

அண்டார்டிகாவிலுள்ள உயரமான சிகரம் வின்சன் மாஸிப் (5140 மீ) இது இக்கண்டத்தின் சென்டினல் மலைத்தொடரின் தென்பகுதியில் அமைந்துள்ளது. இக்கண்டத்திலுள்ள லாம்பர்ட் பனியாறு உலகின் மிகப்பெரிய பனியாறாகும்.

அண்டார்டிகாவில் உள்ள மிகப் பெரிய ஆராய்ச்சி நிலையமான மெக்முர்டோ ஆகும். இது அமெரிக்க ஐக்கிய நாடுகளால் அமைக்கப்பட்டுள்ளது. அண்டார்டிகாவில் அமைக்கப்பெற்ற முதல் இந்திய அறிவியல் ஆராய்ச்சி நிலையம் தட்சின் கங்கோத்ரி ஆகும்.

**<u>சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:</u>**

1. ஆப்பிரிக்காவின் தென்கோடி முனை ____________

(அ) கேப்பிளாங்கா

(ஆ) அகுல்காஸ் முனை

(இ) நன்னம்பிக்கை முனை

(ஈ) கேப்டவுன்

2. எகிப்திற்கும் சினாய் தீபகற்பத்திற்கும் இடையில் ஒரு நிலச்சந்தி வழியாக உருவாக்கப்பட்ட செயற்கை கால்வாய் ___________

(அ) பனாமா கால்வாய்

(ஆ) அஸ்வான் கால்வாய்

(இ) சூயஸ் கால்வாய்

(ஈ) ஆல்பர்ட் கால்வாய்

3. மத்திய தரைக்கடல் காலநிலையோடு தொடர்புடைய பின்வரும் கூற்றுகளைக் கருத்தில் கொண்டு சரியான விடையைத் தேர்வு செய்க.

(i) சராசரி மழையளவு 15 சென்டி மீட்டர்.

(ii) கோடைகாலம் வெப்பமாகவும் வறண்டதாகவும் குளிர்காலம் மழையுடனும் இருக்கும்.

(iii) குளிர்காலம் குளிர்ச்சியாகவும், வறண்டும், கோடை வெப்பமாகவும், ஈரப்பதத்துடனும் இருக்கும்.

(iv) சிட்ரஸ் வகை பழங்கள் வளர்க்கபடுகின்றன.

(அ) i சரியானது

(ஆ) ii மற்றும் iv சரியானவை

(இ) iii மற்றும் iv சரியானவை

(ஈ) அனைத்தும் சரியானவை

4. ஆஸ்திரேலியாவின் மேற்கு மற்றும் கிழக்கு நோக்கி பாயும் ஆறுகளை பிரிக்கும் மலைத்தொடர் _____________

(அ) பெரிய பிரிப்பு மலைத்தொடர்

(ஆ) இமய மலைத்தொடர்

(இ) பிளிண்டர்கள் மலைத்தொடர்

(ஈ) மெக்டோனெல் மலைத்தொடர்

5. கல்கூர்லி சுரங்கம் _____________ கனிமத்திற்குப் புகழ்பெற்றது.

(அ) வைரம்

(ஆ) பிளாட்டினம்

(இ) வெள்ளி

(ஈ) தங்கம்

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. அட்லஸ் மலை _____________ கண்டத்தில் அமைந்துள்ளது.

2. ஆப்பிரிக்காவின் மிக உயரமான சிகரம் _____________ ஆகும்.

3. ஆஸ்திரேலியாவில் அதிகம் காணப்படும் மரம் ____________

4. ஆஸ்திரேலியாவில் உள்ள மிதவெப்ப மண்டல புல்வெளிகள் ____________ என அழைக்கப்படுகின்றன.

5. அண்டார்டிகாவில் நிறுவப்பட்ட முதல் இந்திய ஆய்வு நிலையம் _____________

**பொருத்துக:**

1. பின்னாக்கள் – புவியிடைக் கோட்டுக்காடுகள்

2. கிரில் – உப்பு ஏரி

3. நெருப்புக்கோழி – சிறிய செம்மீன்

4. ஐரி ஏரி – பறக்க இயலாத பறவை

5. புவியின் அணிகலன் – சுண்ணாம்பு பாறை தூண்கள்

**IV. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்:**

1. கூற்று: அரோரா என்பது வானத்தில் தோன்றும் வண்ண ஒளிகள் ஆகும்,

காரணம்: அவை வளிமண்டலத்ரன் மேலடுக்குக் காந்த புயலால் ஏற்படுகின்றன.

அ) கூற்று மற்றும் காரணம் உண்மைஇ கூற்று காரணத்திற்கான சரியான விளக்கம்.

ஆ) கூற்று மற்றும் காரணம் உண்மை கூற்று காரணத்திற்கான சரியான விளக்கம் அல்ல.

இ) கூற்று உண்மை ஆனால் காரணம் தவறு.

ஈ) காரணம் உண்மை ஆனால் கூற்று தவறு

2. கூற்று: ஆப்பிரிக்காவின் நிலவியல் தோற்றங்களில் ஒரு முக்கிய அம்சம் பெரிய பிளவுப் பள்ளத்தாக்கு ஆகும்.

காரணம்: புவியின் உள்விசை காரணமாக புவியின் மேற்பரப்பில் உண்டான பிளவு.

அ) கூற்று மற்றும் காரணம் சரி கூற்றுகான காரணம் சரியான விளக்கம்.

ஆ) கூற்று காரணம் இரண்டும் சரி ஆனால் கூற்றுக்கான காரணம் சரியான விளக்கம் அல்ல.

இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.

ஈ) காரணம் சரி ஆனால் கூற்று தவறு.

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: (விடைகள்)**

1. அகுல்காஸ் முனை 2. சூயஸ் கால்வாய் 3. ii மற்றும் iv சரியானவை

4. பெரிய பிரிப்பு மலைத்தொடர் 5. தங்கம்

**கோடிட்ட இடங்களை நிரப்புக: (விடைகள்)**

1. வடமேற்கு ஆப்பிரிக்கா 2. கிளிமஞ்சாரோ 3. யூக்கலிப்டஸ் 4. டவுன்ஸ்

5. தட்சின் கங்கோத்ரி

**பொருத்துக: (விடைகள்)**

1. பின்னாக்கள் – சுண்ணாம்பு பாறை தூண்கள்

2. கிரில் – சிறிய செம்மீன்

3. நெருப்புக்கோழி – பறக்க இயலாத பறவை

4. ஐரி ஏரி – உப்பு ஏரி

5. புவியின் அணிகலன் – புவியிடைக் கோட்டுக்காடுகள்

**சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்: (விடைகள்)**

1. கூற்று மற்றும் காரணம் உண்மை, கூற்று காரணத்திற்கான சரியான விளக்கம்.

2. கூற்று மற்றும் காரணம் உண்மை, கூற்று காரணத்திற்கான சரியான விளக்கம்.

8th Social Science Lesson 16

16] புவிப்படங்களைக் கற்றறிதல்

**உங்களுக்குத் தெரியுமா?**

புவிப்படங்களைக் கற்றறிதல் மற்றும் புவிப்பட உருவாக்க நுணுக்கங்கள் பற்றி விளக்கும் பாடப் பிரிவு புவிப்படவியல் எனப்படும். இது புவிப்பட உருவாக்குதலின் அறிவியல் சார்ந்த ஒரு கலை நுட்பமாகும்.

"கெடஸ்ட்ரல" எனும் வார்த்தை ஃப்ரெஞ்ச் மொழியிலுள்ள "கெடஸ்டர்" எனும் சொல்லிலிருந்து பெறப்பட்டது. இதன் பொருள் "பிராந்திய சொத்துகளின் பதிவேடு" என்பதாகும்.

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. புவிப்பட தயாரிப்பு முறை குறித்து கையாளும் பாடப்பிரிவு ____________ ஆகும்.

(அ) மக்களியல்

(ஆ) புவிப்படவியல்

(இ) இயற்கையமைப்பு

(ஈ) இடவியல்

2. ஒரு பகுதியின் இயற்கையம்சங்களைக் காட்டும் புவிப் படம் _____________

(அ) நிலக்கானி படங்கள்

(ஆ) நிலத்தோற்ற புவிப்படம்

(இ) கால நிலையியல் புவிப்படம்

(ஈ) மூலாதார புவிப்படம்

3. ஆழம் குறைந்த நீர்ப் பகுதிகள் _____________ வண்ணம் மூலம் குறிப்பிடப்படுகிறது.

(அ) மஞ்சள்

(ஆ) பழுப்பு

(இ) வெளிர் நீலம்

(ஈ) அடர் நீலம்

4. பிளான்கள் என்று அழைக்கப்படும் புவிப்படங்கள் _____________ ஆகும்.

(அ) நிலக்கானி புவிப்படங்கள்

(ஆ) தலப்படங்கள்

(இ) சம அளவுக்கோட்டுப் படங்கள்

(ஈ) போக்குவரத்துப் படங்கள்

5. மக்கட்தொகை பரவலை ____________ மூலம் காண்பிக்கலாம்.

(அ) கோடுகள்

(ஆ) வண்ணங்கள்

(இ) புள்ளிகள்

(ஈ) சம அளவுக்கோடுகள்

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. புவிக்கோள மாதிரி என்பது ___________ ன் உண்மையான உருவ மாதிரியாக்கமாகும்.

2. புவியின் கோள வடிவத்தை ஒரு சமதளப்பரப்பில் வரையப்படும் முறை ___________ எனப்படும்.

3. சம அளவு உயரமுள்ள இடங்களை இணைக்கும் கோடு ____________

4. காணிப்படங்கள் பொதுவாக __________ ஆல் பராமரிக்கப்படுகின்றன.

5. ____________ புவிப்படங்கள் ஒரு குறிப்பிட்ட கருப்பொருளுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றன.

**பொருத்துக:**

i. புவிப்பட விளக்கம் – 1. 45°

ii. வடகிழக்கு – 2. பழுப்பு நிறம்

iii. சம உயரக்கோடு – 3. கருத்துப்படங்கள்

iv. காணிப்படங்கள் – 4. புவிப்படத்தின் திறவுகோல்

v. நிழற்பட்டைப் படம் – 5. வரி விதிப்பு

(அ) 3 5 1 4 2

(ஆ) 4 1 2 5 3

(இ) 2 5 1 3 4

(ஈ) 5 2 4 1 3

**பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. கூற்று: சிறிய அளவைப் புவிப்படங்களில் பிரதான தோற்றங்களை மட்டுமே காண்பிக்கப்படுகின்றன.

காரணம்: குறைந்த அளவு இடமே உள்ளதால், பெரிய பரப்பிலான கண்டங்கள் மற்றும் நாடுகள் போன்றவற்றை மட்டுமே காண்பிக்க இயலும்.

(அ) கூற்று சரி, ஆனால் காரணம் தவறு

(ஆ) கூற்று தவறு, காரணம் சரி

(இ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி

(ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு

2. கூற்று: மரபுக் குறியீடுகளும், சின்னங்களும் வரைபடத்தின் திறவுகோல் ஆகும்.

காரணம்: இவை குறைந்த அளவிலான படத்தில் அதிக விவரங்களைத் தருகின்றன.

(அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி

(ஆ) கூற்று தவறு, ஆனால் காரணம் சரி

(இ) கூற்று சரி, காரணம் தவறு

(ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: (விடைகள்)**

1. புவிப்படவியல் 2. நிலத்தோற்ற புவிப்படம் 3. வெளிர் நீலம்

4. நிலக்கனிய புவிப்படங்கள் 5. வண்ணங்கள்

**கோடிட்ட இடங்களை நிரப்புக: (விடைகள்)**

1. புவியின் 2. வரைபட கோட்டுச் சட்டம் 3. சம அளவுக் கோடு 4. அரசாங்கம்

5. கருத்துப்

**பொருத்துக: (விடைகள்)**

1. புவிப்பட விளக்கம் – வரி விதிப்பு

2. வடகிழக்கு – 450

3. சம உயரக்கோடு – பழுப்பு நிறம்

4. காணிப்படங்கள் – வரி விதிப்பு

5. நிழற்பட்டைப் படம் – கருத்துப்படங்கள்

**சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்: (விடைகள்)**

1. கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி

2. கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி

8th Social Science Lesson 17

**17] மாநில அரசு எவ்வாறு செயல்படுகிறது**

**உங்களுக்குத் தெரியுமா?**

குடியரசுத் தலைவர் மாநில ஆளுநரை நியமிக்கும் போது மத்திய அமைச்சரவையின் ஆலோசனையின்படி செயல்படுகிறார். மேலும் தொடர்புடைய மாநில அரசையும் கலந்தாலோசிக்கிறார். பொதுவாக ஒருவர் ஆளுநராக அவரது சொந்த மாநிலத்தில் நியமிக்கப்படுவது இல்லை.

இந்தியாவில் தற்போது ஆறு மாநிலங்களில் மட்டும் சட்ட மன்ற மேலவை நடைமுறையில் உள்ளது. அவை பீகார், உத்திரப்பிரதேசம், மகாராஷ்டிரம், கர்நாடகம், ஆந்திரப் பிரதேசம் மற்றும் தெலுங்கானா ஆகும்.

மாநில சட்ட மன்றமும் சாதாரண அல்லது பண மசோதாக்களை நிறைவேற்றுவதில் பாராளுமன்றம் பின்பற்றும் நடைமுறைகளையே பின்பற்றுகிறது. சட்டமன்ற பேரவை சட்ட மன்ற மேலவையைக் காட்டிலும் அதிக அதிகாரம் கொண்டதாகும்.

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. ஒரு மாநிலத்தின் ஆளுநர் யாரால் நியமிக்கப்படுகிறார்?

(அ) குடியரசுத் தலைவர்

(ஆ) துணைக் குடியரசுத் தலைவர்

(இ) பிரதம மந்திரி

(ஈ) முதலமைச்சர்

2. மாநில அமைச்சரவைக் குழுவின் தலைவர்

(அ) ஆளுநர்

(ஆ) முதலமைச்சர்

(இ) சபாநாயகர்

(ஈ) உள்துறை அமைச்சர்

3. மாநில சட்டமன்ற கூட்டத்தைக் கூட்டவும், ஒத்தி வைக்கவும் அதிகாரம் பெற்றவர்.

(அ) உள்துறை அமைச்சர்

(ஆ) குடியரசுத் தலைவர்

(இ) சபாநாயகர்

(ஈ) ஆளுநர்

4. உயர் நீதி மன்ற நீதிபதிகளை நியமிப்பதில் பங்கு பெறாதவர் யார்?

(அ) ஆளுநர்

(ஆ) முதலமைச்சர்

(இ) உயர் நீதி மன்ற தலைமை நீதிபதி

(ஈ) குடியரசுத் தலைவர்

5. உயர் நீதிமன்ற நீதிபதிகள் ஓய்வு பெறும் வயது

(அ) 62

(ஆ) 64

(இ) 65

(ஈ) 58

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. இந்தியாவில் உள்ள மொத்த மாநிலங்களின் எண்ணிக்கை ____________ ஆகும்.

2. ஆளுநரின் பதவிக்காலம் ____________ ஆண்டுகள் ஆகும்.

3. மாவட்ட நீதிபதிகள் ___________ ஆல் நியமிக்கப்படுகின்றனர்.

4. ஆளுநர் ஒரு மாநிலத்தின் ____________ ஆவார்.

5. ஒருவர் சட்டப்பேரவை உறுப்பினராக _____________ வயது நிறைவடைந்திருக்க வேண்டும்.

**பொருத்துக:**

1. ஆளுநர் – கீழவை

2. முதலமைச்சர் – பெயரளவுத் தலைவர்

3. சட்டமன்ற பேரவை – மேலவை

4. சட்டமன்ற மேலவை – உண்மையான தலைவர்

**சரியா அல்லது தவறா எனக் குறிப்பிடுக:**

1. முதலமைச்சர் மாநிலத்தின் தலைமை நிர்வாகி ஆவார்.

2. ஆளுநர் சட்ட மன்றத்திற்கு இரண்டு ஆங்கிலோ இந்திய உறுப்பினர்களை நியமிக்கிறார்.

3. உயர் நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை நிலையாகவும் ஒரே மாதிரியாகவும் இருப்பதில்லை.

**பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. மாநில சட்டமன்ற உறுப்பினர்கள் கீழ்கண்டவர்களுள் யாரைத் தேர்ந்தெடுப்பதில் பங்கு பெறுகின்றனர்.

i. குடியரசுத் தலைவர்

ii. துணை குடியரசுத் தலைவர்

iii. ராஜ்ய சபை உறுப்பினர்கள்

iv. சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள்

(அ) i, ii & iii சரி

(ஆ) i மற்றும் iii சரி

(இ) i, iii மற்றும் iv சரி

(ஈ) i, ii, iii மற்றும் iv சரி

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: (விடைகள்)**

1. குடியரசுத் தலைவர் 2. முதலமைச்சர் 3. ஆளுநர் 4. முதலமைச்சர் 5. (62)

**கோடிட்ட இடங்களை நிரப்புக: (விடைகள்)**

1. (29) 2. ஐந்து 3. ஆளுநரால் 4. நிர்வாகத் தலைவர் 5. (25)

**பொருத்துக: (விடைகள்)**

1. ஆளுநர் – பெயரளவுத் தலைவர்

2. முதலமைச்சர் – உண்மையான தலைவர்

3. சட்டமன்ற பேரவை – கீழவை

4. சட்டமன்ற மேலவை – மேலவை

**சரியா / தவறா எனக் குறிப்பிடுக:**

**1. சரி**

**2. தவறு**

**சரியான விடை:** ஆளுநர் சட்டமன்றத்திற்கு ஒரு ஆங்கிலோ இந்திய உறுப்பினர்களை நியமிக்கிறார்.

**3. சரி**

**பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றைத் தேர்வு செய்க:**

1. i iii மற்றம் iv சரி

8th Social Science Lesson 18

18] குடிமக்களும் குடியுரிமையும்

<u>உங்களுக்குத் தெரியுமா?</u>

இந்தியக் குடியுரிமைச் சட்டம், 1955 இந்தியக் குடிமகன் தன்னுடைய குடியுரிமையை பெறுதலையும், இழத்தலையும் பற்றிய விதிகளை இச்சட்டம் கூறுகிறது.

முன்னுரிமை வரிசைப்படி குடியரசு தலைவர் நாட்டின் முதல் குடிமகன் ஆவார்.

**நாட்டுரிமை மற்றும் குடியுரிமை:** பூர்வீகம், பிறப்பு மற்றும் இனம் ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட நாட்டினர் இயல்பாக பெறும் நிலை நாட்டுரிமை எனப்படும். சட்ட நடைமுறைகளுக்கு உட்பட்டு ஒரு நாட்டின் அரசாங்கத்தால் தனி ஒருவருக்கு வழங்கப்படுவது குடியுரிமை எனப்படும். ஒருவர் தனது நாட்டுரிமையை மாற்ற முடியாது. ஆனால் தனது குடியுரிமையை மாற்ற முடியும்.

ஒரு நாட்டின் குடிமக்கள் அல்லாதவர்களை இரண்டு வகையினராக நாம் அழைக்கின்றோம் அவை:

1. அந்நியர் (Alien): ஒரு நாட்டில் வசிக்கும் குடிமகனாக அல்லாத அனைவரும் அந்நியர் எனப்படுவர். உதாரணம்: வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள், வெளிநாட்டு மாணவர்கள்.

2. குடியேறியவர் (Immigrant): ஒரு நாட்டில் எவ்வித தடையும் இன்றி நிரந்தரமாக வசிப்பதற்கும், பணி புரிவதற்கும் உரிமை பெறும் அந்நியர் குடியேறியவர் எனப்படுகிறார்

**வெளிநாடு வாழ் இந்தியர் தினம் (பிரவாசி பாரதிய தினம்):** இந்திய அரசின் வெளியுறவுத் துறை அமைச்சகத்தால் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பிரவாசி பாரதிய தினம் கொண்டாடப்படுகிறது. இந்த தினம் இந்தியாவின் வளர்ச்சிக்காக வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர்களின் பங்களிப்பினை பெறும் வகையில் கொண்டாடப்படுகிறது. இது மகாத்மா காந்தி தென் ஆப்பிரிக்காவிலிருந்து இந்தியாவிற்கு வருகை புரிந்த தினமான ஜனவரி 9ஆம் நாள் கொண்டாடப்படுகிறது.

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. கீழ்க்கண்டவைகளில் எந்த ஒன்று இந்திய குடியுரிமை பெறும் வழிமுறை அல்ல?

(அ) பிறப்பின் மூலம்

(ஆ) சொத்துரிமை பெறுவதன் மூலம்

(இ) வம்சாவழியின் மூலம்

(ஈ) இயல்பு குடியுரிமை மூலம்

2. அரசியலமைப்புச் சட்டத்தின் எந்தப் பகுதி மற்றும் பிரிவுகள் குடியுரிமையைப் பற்றிக் குறிப்பிடுகின்றன?

(அ) பகுதி II

(ஆ) பகுதி II பிரிவு 5-11

(இ) பகுதி II பிரிவு 5-6

(ஈ) பகுதி I பிரிவு 5-11

3. இந்தியாவின் முதல் குடிமகன் யார்?

(அ) பிரதமர்

(ஆ) குடியரசுத் தலைவர்

(இ) முதலமைச்சர்

(ஈ) இந்திய தலைமை நீதிபதி

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. ஒரு நாட்டின் ____________ அந்நாடு வழங்கும் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளைப் பெறத் தகுதியுடையவர் ஆவார்.

2. இந்திய அரசியலமைப்புச் சட்டம் ____________ குடியுரிமையை மட்டும் வழங்குகிறது.

3. இந்தியக் கடவுச் சீட்டினைப்பெற்று (Passport) வெளிநாட்டில் வாழும் இந்தியக் குடிமகன் ____________ என அழைக்கப்படுகிறார்.

4. மக்கள் அனைவரும் உரிமைகள் மற்றும் ____________ யும் இயற்கையாக பெற்றிருக்கின்றனர்.

5. ___________ என்பது இளைஞர்களை நவீன சமுதாயத்தை வடிவமைப்பதில் பங்கேற்க செய்யும் ஒரு யோசனை ஆகும்.

**சரியா அல்லது தவறா எனக் குறிப்பிடுக:**

1. அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஒற்றைக் குடியுரிமையை வழங்குகிறது.

2. வெளிநாட்டுக் குடியுரிமையை கொண்டு இந்தியாவில் வசிப்பதற்கான அட்டை வைத்திருப்பவருக்கு வாக்குரிமை உண்டு.

3. அடிப்படை உரிமைகளை இந்தியக் குடிமகன் அனுபவிக்க நமது அரசிலமைப்புச் சட்டம் உத்திரவாதம் அளிக்கிறது.

4. நாட்டுரிமையை மாற்ற இயலும். ஆனால் குடியுரிமையை மாற்ற இயலாது.

**பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. ஒரு இந்தியக் குடிமகனின் குடியுரிமை கீழ்க்கண்ட எதனால் முடிவுக்கு வருகிறது.

i) ஒருவர் வேறு நாட்டுக் குடியுரிமையை பெறும்போது

ii) பதிவு செய்வதன் மூலம்

iii) தவறான மோசடி வழிகளில் ஒருவர் குடியுரிமை பெற்றார் என்று அரசு கருதும் போது

iv) போரின் போது எதிரி நாட்டிடம் இந்திய குடிமகன் வணிகம் செய்யும் போது

(அ) i மற்றும் ii சரி

(ஆ) i மற்றும் iii சரி

(இ) i, ii, iv சரி

(ஈ) i, ii, iii சரி

2. கூற்று: 1962ஆம் ஆண்டு பாண்டிச்சேரி இந்திய யூனியனுடன் இணைந்தது. அங்கு வாழ்ந்த மக்கள் இந்திய குடிமக்களாயினர்.

காரணம்: 1955 இந்தியக் குடியுரிமைச் சட்டத்தின் படி பிரதேசங்களை இணைத்தல் என்பதன் அடிப்படையில் அவர்கள் இந்திய குடிமக்களாகினர்.

(அ) காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம்

(ஆ) காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல

(இ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி

(ஈ) காரணம், கூற்று இரண்டும் தவறு

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: (விடைகள்)**

1. சொத்துரிமை பெறுவதன் மூலம் 2. பகுதி ii பிரிவு 5 – 11 3. குடியரசுத் தலைவர்

**கோடிட்ட இடங்களை நிரப்புக: (விடைகள்)**

1. குடிமகன் 2. ஒற்றை 3. NRI வெளிநாட்டுவாழ் இந்தியர் 4. கடமைகள்

5. உலகளாவிய குடியுரிமை

**சரியா / தவறா எனக் குறிப்பிடுக: (விடைகள்)**

**1. தவறு**

**2. தவறு**

3. சரி

**4. தவறு**

**பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றைத் தேர்வு செய்க: (விடைகள்)**

1. i மற்றும் iii சரி

2. காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம்.

8th Social Science Lesson 19

**19] சமயச்சார்பின்மையைப் புரிந்து கொள்ளுதல்**

**<u>உங்களுக்குத் தெரியுமா?</u>**

சமயச்சார்பின்மை என்ற சொல் லத்தீன் வார்த்தையான செகுலம் (saeculum) என்பதிலிருந்து பெறப்பட்டது. இதன் பொருள் காலம் (an age) அல்லது உள்ளுணர்வு காலம் (the spirit of an age) ஆகும். ஆங்கிலேய பத்திரிக்கை எழுத்தாளரான ஜார்ஜ் ஜேக்கப் ஹோல்யோக் என்பவர் secularism என்ற பதத்தை உருவாக்கினார்.

**அசோகரின் 12வது பாறை அரசாணை:** அரசானது எந்த ஒரு மதத்தைச் சார்ந்த பிரிவினருக்கும் எதிராக குற்றம் சாட்டாது என்று கி. மு (பொ. ஆ. மு) மூன்றாம் நூற்றாண்டிலேயே அறிவித்த முதல் பேரரசர் அசோகர் ஆவார். தனது 12வது பாறை அரசாணையில் அனைத்து மதப்பிரிவினருடன் சகிப்பு தன்மையோடு மட்டுமல்லாமல் அவர்கள் மீது மிகுந்த மரியாதைக்குரிய மனநிலையை வளர்த்துக் கொள்ளவும் தம் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

**நாத்திகம்:** கடவுள் அல்லது கடவுள்கள் மீது நம்பிக்கையற்றிருத்தல்.

**சமயச்சார்பின்மை:** அரசோ, சமயமோ ஒன்று மற்றொன்றின் விவகாரங்களில் தலையிடாதிருத்தல்.

முகலாய பேரரசர் அக்பர் மதசகிப்புத் தன்மை கொள்கையைப் பின்பற்றினார். அவருடைய தீன்–இலாஹி (தெய்வீக நம்பிக்கை) மற்றும் சுல்–இ–குல் (அனைத்து சமயத்தினரிடையே அமைதி மற்றும் நல்லிணக்கம்) ஆகியவை அவரின் சமய சகிப்புத் தன்மையை எடுத்தியம்புகிறது.

கஜீராஹோவில் காணப்படும் 19ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இந்து கோவிலில், வழக்கமான சிகரத்திற்குப் பதிலாக இந்து பாணியிலான கோபுரம், சமண விதானம், புத்த ஸ்தூபி மற்றும் இஸ்லாமிய பாணியிலான குவிமாடம் ஆகியவற்றைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

சமயச்சார்பற்ற இந்திய நாடானது அனைத்துச் சமய விழாக்களுக்கும் பொது விடுமுறை அறிவிக்கிறது.

**அக்பரின் கல்லறை, சிக்கந்தரா (ஆக்ரா அருகில்–இந்தியா):** இஸ்லாம், இந்து சமயம் உள்ளிட்ட பல்வேறு சமயங்களைச் சார்ந்த கூறுகள் அவரது கல்லறையில் இடம் பெற வேண்டுமென அக்பர் வலியுறுத்தினார்.

**<u>சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:</u>**

1. சமயச்சார்பின்மை என்பது

(அ) அரசு அனைத்து சமயத்திற்கும் எதிரானது

(ஆ) அரசு ஒரே ஒரு சமயத்தை மட்டும் ஏற்றுக் கொள்கிறது

(இ) எந்த சமயத்தைச் சார்ந்த குடிமகனும் சகிப்புத் தன்மையுடன் அமைதியாக இணக்கமாக வாழ்தல்

(ஈ) இவற்றுள் எதுவுமில்லை

2. இந்தியா ஒரு ___________ கொண்ட நாடாகும்.

(அ) பல்வேறு சமய நம்பிக்கை

(ஆ) பல்வேறு பண்பாட்டு நம்பிக்கை

(இ) (அ) மற்றும் (ஆ) இரண்டும்

(ஈ) இவற்றுள் எதுவுமில்லை

3. இந்திய அரசியலமைப்பின் முகவுரை திருத்தப்பட்ட ஆண்டு

(அ) 1951

(ஆ) 1976

(இ) 1974

(ஈ) 1967

4. பின்வருவனவற்றுள் எது இந்தியாவை சமயச்சார்பற்ற நாடாக விவரிக்கிறது?

(அ) அடிப்படை உரிமைகள்

(ஆ) அடிப்படை கடமைகள்

(இ) அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கைகள்

(ஈ) அரசியலமைப்பின் முகவுரை

5. சமயச் சுதந்திர உரிமை எதனுடன் தொடர்புடையது

(அ) நீதித்துறை

(ஆ) பாராளுமன்றம்

(இ) அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கை

(ஈ) அடிப்படை உரிமைகள்

6. அரசியலமைப்பின் பிரிவு 28 எந்த வகையான கல்வியை அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்களில் தடை செய்துள்ளது?

(அ) சமய போதனைகள்

(ஆ) நீதி நெறிக்கல்வி

(இ) உடற்கல்வி

(ஈ) இவற்றுள் எதுவுமில்லை

7. ஒரு நாடு சமயச்சார்பற்ற நாடாக எப்போது கருதப்படும் எனில் அது

(அ) ஒரு குறிப்பிட்ட சமயத்திற்கு முக்கியத்துவம் அளித்தால்

(ஆ) அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் சமய போதனைகளைத் தடை செய்தால்

(இ) ஒரு குறிப்பிட்ட சமயத்திற்கு முக்கியத்துவம் அளிக்காமல் இருந்தால்

(ஈ) எந்த சமய நம்பிக்கைகளையும் பரப்ப தடை விதித்தால்

**<u>கோடிட்ட இடங்களை நிரப்புக:</u>**

1. சமயம் நமக்கு ____________ போதிக்கவில்லை

2. சமயச்சார்பின்மை ஜனநாயகத்தின் ஒரு பகுதி அது ____________ அளிக்கிறது.

3. ____________ என்பது கடவுள் மற்றும் கடவுள்கள் மீது நம்பிக்கையற்றிருப்பதாகும்.

4. நமது அரசியலமைப்பின் அடிப்படை நோக்கம் _____________ மற்றும் ___________ ஊக்குவிப்பதாகும்.

5. பிரிவு 15 சமயம், சாதி, பாலினம் அல்லது பிறப்பிடம் ஆகியவற்றின் அடிப்படையில் ____________ காட்டுவதைத் தடை செய்கிறது.

**பொருத்துக:**

1. நாத்திகம் – Secularism என்ற பதத்தை உருவாக்கியவர்

2. குழந்தைகள் – சமூகச் சீர்திருத்தவாதி

3. தீன்–இலாஹி – கடவுள் நம்பிக்கையற்றிருப்பது

4. அரசியலமைப்பு – வருங்கால குடிமக்கள்

5. ஹோல்யோக் – தெய்வீக நம்பிக்கை

6. இராஜாராம் மோகன்ராய் – 1950

**சரியா அல்லது தவறா எனக் குறிப்பிடுக:**

1. இந்திய நாட்டிற்கென ஒரு சமயம் உள்ளது.

2. சமயச்சார்பின்மை என்ற சொல் கிரேக்க மொழியிலிருந்து பெறப்பட்டுள்ளது.

3. மொகலாய பேரரசர் அக்பர் சமயச் சகிப்புத் தன்மைக் கொள்கையைப் பின்பற்றினார்.

4. சமண சமயம் சீனாவில் தோன்றியது.

5. இந்திய அரசாங்கம் அனைத்துச் சமய விழாக்களுக்கும் விடுமுறையை அறிவிக்கிறது.

**பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. (i) இந்தியா போன்ற சமயப் பன்முகத்தன்மை கொண்ட சமூகத்திற்குச் சமயச்சார்பின்மை விலைமதிப்பற்ற ஒன்றாகும்.

(ii) சமயச்சார்பற்ற என்ற சொல்லானது 1950ஆம் ஆண்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட நமது அரசியலமைப்பில் குறிப்பிடப்படவில்லை.

(iii) அரசியலமைப்பு பிரிவு 26 ஒரு குறிப்பிட்ட சமயத்திற்காக வரி செலுத்துவதற்கு ஊக்கமளிக்கிறது.

(iv) அக்பரின் கல்லறை ஆக்ராவிற்கு அருகிலுள்ள சிக்கந்தராவில் உள்ளது.

(அ) i, ii மட்டும்

(ஆ) ii, iii மட்டும்

(இ) iv மட்டும்

(ஈ) i, ii, iv மட்டும்

2. கூற்று: ஒரு வெளிநாட்டவர் இந்தியாவில் தனது சமயத்தைப் பின்பற்றலாம்.

காரணம்: அரசியலமைப்பில் உறுதியளிக்கப்பட்டுள்ள சமய சுதந்திரம் இந்தியர்களுக்கு மட்டுமல்லாமல் வெளிநாட்டவருக்கும் உண்டு.

(i) கூற்று சரி காரணம் தவறு

(ii) கூற்று, காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது

(iii) கூற்று தவறு, காரணம் சரி

(iv) கூற்று, காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றை விளக்கவில்லை

3. கூற்று: இந்தியாவில் சமயச்சார்பின்மை என்ற கொள்கை மிக்க மதிப்புள்ளதாகும்.

காரணம்: இந்தியா பல்வேறு சமயம் மற்றும் பன்முக கலாச்சாரம் கொண்ட நாடாகும்.

(i) கூற்று சரி காரணம் கூற்றை விளக்குகிறது

(ii) கூற்று சரி, காரணம் கூற்றை விளக்கவில்லை

(iii) கூற்று தவறு, காரணம் சரி

(iv) இரண்டும் தவறு

4. தவறான இணையைக் கண்டறிக:

(i) தீன் இலாகி – ஒரு புத்தகம்

(ii) கஜீராஹோ – இந்து கோவில்

(iii) அசோகர் – பாறைக் கல்வெட்டு

(iv) இக்பால் – கவிஞர்

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: (விடைகள்)**

1. எந்த சமயத்தைத் சார்ந்த குடிமகனும் சகிப்புத்தன்மையுடன் அமைதியாக இணக்கமாக வாழ்தல்

2. அ மற்றும் ஆ இரண்டும் 3. 1976 4. அரசியலமைப்பின் முகவுரை

5. அடிப்படை உரிமைகள் 6. சமய போதனைகள்

7. ஒரு குறிப்பிட்ட சமயத்திற்கு முக்கியத்துவம் அளிக்காமல் இருந்தால்.

**கோடிட்ட இடங்களை நிரப்புக: (விடைகள்)**

1. பகைமை 2. ஒற்றுமையை 3. நாத்திகம்

4. தேசிய ஒற்றுமையும், ஒருமைப்பாட்டையும் 5. பாகுபாடு

**பொருத்துக: (விடைகள்)**

1. நாத்திகம் – கடவுள் நம்பிக்கையற்றிருப்பது

2. குழந்தைகள் – வருங்கால குடிமக்கள்

3. தீன் – இலாஹி – தெய்வீக நம்பிக்கை

4. ஹோல்யோக் – சமயச்சார்பின்மை என்ற பதத்தை ஒருவாக்கியவர்.

5. இராஜாராம் மோகன்ராய் – சமூக சீர்திருத்தவாதி

**சரியா தவறா எனக் குறிப்பிடுக: (விடைகள்)**

**1. தவறு**

**சரியான விடை:** இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடு

**2. தவறு**

**சரியான விடை:** சமயச்சார்பின்மை என்ற சொல் லத்தீன் மொழிலியிலிருந்து பெறப்பட்டது.

**3. சரி**

**4. தவறு**

**சரியான விடை:** சமண சமயம் இந்தியாவில் தோன்றியது.

**5. சரி**

**பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றைத் தேர்வு செய்க: (விடைகள்)**

1. i, ii, iv மட்டும்

2. கூற்றுஇ காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது.

3. கூற்று சரி, காரணம் கூற்றை விளக்குகிறது.

4. தீன் இலாகி – ஒரு புத்தகம்.

8th Social Science Lesson 20

20] மனித உரிமைகளும் ஐக்கிய நாடுகள் சபையும்

**உங்களுக்குத் தெரியுமா?**

**சைரஸ் சிலிண்டர் கி. மு. (பொ. ஆ. மு) 539:** பண்டைய பாரசீகத்தின் முதல் மன்னரான மகா சைரஸ், அடிமைகளை விடுவித்து மக்கள் அனைவரும் தங்கள் சொந்த மதத்தைத் தேர்ந்தெடுக்கும் உரிமை உண்டு என்று அறிவித்தார். இன சமத்துவத்தை நிலைநாட்டினார். மேற்கூறியவைகளும், மற்ற ஆணைகளும் கியூனிபார்ஃம் எழுத்துக்களில் அக்காடியன் மொழியில் சிலிண்டர் வடிவிலான சுட்ட களிமண்ணில் பதிவு செய்யப்பட்டன. இது ஐக்கிய நாடுகள் சபையின் ஆறு அலுவல் மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இவை உலக மனித உரிமைகள் பிரகடனத்தின் முதல் நான்கு விதிகளுக்கு இணையாக உள்ளன.

மனித உரிமைகளுக்கான உலகளாவிய அறிவிப்பு – முகவுரை: மனிதர்கள் அனைவரும் சுதந்திரமாகவே பிறக்கின்றனர். அவர்கள் மதிப்பிலும், உரிமைகளிலும் சமமானவர்கள். அவர்கள் அறிவாற்றலையும் மனசாட்சியையும் இயற்பண்பாகக் கொண்டவர்களாகவும் எல்லா மக்களிடையேயும் பொதுவான சகோதரத்துவத்தின் உணர்வை வளர்க்க கடமைப்பட்டவர்களும் ஆவர்.

ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 10ஆம் நாள் உலக மனித உரிமைகள் தினமாகக் கொண்டாடப்படுகிறது. மனித உரிமைகளை உலக அளவில் அறிவித்த பெருமை ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையையே சாரும்.

**இந்திய அரசியலமைப்பு சட்டப் பிரிவுகள்:** பிரிவு 24 – குழந்தைத் தொழிலாளர் முறையைத் தடை செய்கிறது. பிரிவு 39 (f) – ஆரோக்கியமாக குழந்தைகள் வளர வழிவகைச் செய்கிறது. பிரிவு 45 – 6 வயது வரை அனைத்துக் குழந்தைகளுக்கும் ஆரம்ப கால குழந்தை பராமரிப்பு மற்றும் கல்வியை வழங்க அரசு முயல்கிறது.

**1098 குழந்தைகளுக்கான உதவி மைய எண்:** இது இந்தியாவில் முதன் முதலாக அறிமுகப்படுத்தப்பட்ட 24 மணிநேர கட்டணமில்லா அவசரத் தொலைத் தொடர்பு சேவையாகும். குழந்தைத் தொழிலாளர்கள், குழந்தைத் திருமணம் மற்றும் ஏதேனும் வன்கொடுமை ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்குச் சிறப்பு கவனம் செலுத்தப்படுகிறது.

1978 – சர்வதேச பெண்கள் ஆண்டு. 1979 – சர்வதேச குழந்தைகள் ஆண்டு என ஐ. நா. சபை அறிவித்துள்ளது.

winmeen.com

**பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்களின் பராமரிப்பு மற்றும் நலவாழ்வுச் சட்டம், 2007:** இந்தச் சட்டம் மூத்த குடிமக்களுக்கும் பெற்றோர்களுக்கும் பராமரிப்பை வழங்குவதற்கும் அவர்களின் குழந்தைகள் மற்றும் வாரிசுதாரர்களின் சட்டப்பூர்வமான கடமையாகிறது. முதுமை காலத்தில் பாதுகாப்பும் ஆதரவும் மனித உரிமைகளாக கருதப்படுகின்றன.

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் ___________ மனித உரிமைகளைப் பாதுகாக்க பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

(அ) ஐ. நா. சபை

(ஆ) உச்ச நீதிமன்றம்

(இ) சர்வதேச நீதிமன்றம்

(ஈ) இவைகளில் எதுவுமில்லை

2. 1995ஆம் ஆண்டில் உலகம் முழுவதிலும் இருந்து பெண்கள் _____________ இல் கூடினர்.

(அ) பெய்ஜிங்

(ஆ) நியூயார்க்

(இ) டெல்லி

(ஈ) எதுவுமில்லை

3. தேசிய மனித உரிமைகள் ஆணையம் நிறுவப்பட்ட ஆண்டு

(அ) 1990

(ஆ) 1993

(இ) 1978

(ஈ) 1979

4. ஐ. நா. சபை 1979ஆம் ஆண்டை ____________ சர்வதேச ஆண்டாக அறிவித்தது.

(அ) பெண் குழந்தைகள்

(ஆ) குழந்தைகள்

(இ) பெண்கள்

(ஈ) இவற்றுள் எதுவுமில்லை

5. உலக மனித உரிமைகள் தினமாக அனுசரிக்கப்படும் நாள் எது?

(அ) டிசம்பர் 9

(ஆ) டிசம்பர் 10

(இ) டிசம்பர் 11

(ஈ) டிசம்பர் 12

6. மனித உரிமைகளின் நவீன சர்வதேச மகாசாசனம் என அழைக்கப்படுவது எது?

(அ) மனித உரிமைகளுக்கான உலகளாவிய அறிவிப்பு (UDHRC)

(ஆ) தேசிய மனித உரிமைகள் ஆணையம் (NHRC)

(இ) மாநில மனித உரிமைகள் ஆணையம் (SHRC)

(ஈ) சர்வதேசப் பெண்கள் ஆண்டு

7. தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவராக நியமிக்கப்படுபவர் யார்?

(அ) ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி

(ஆ) ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி

(இ) குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படும் ஏதேனும் ஒருவர்

(ஈ) ஏதேனும் ஒரு நீதிமன்றத்தில் ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி

8. உலக மனித உரிமைகள் அறிவிப்பில் உள்ள சட்டப்பிரிவுகளின் எண்ணிக்கை யாவை?

(அ) 20

(ஆ) 30

(இ) 40

(ஈ) 50

9. தேசிய மனித உரிமைகள் ஆணையத் தலைவரின் பதவிக் காலம் என்ன?

(அ) 5 ஆண்டுகள் அல்லது 62 வயது வரை

(ஆ) 5 ஆண்டுகள் அல்லது 65 வயது வரை

(இ) 6 ஆண்டுகள் அல்லது 65 வயது வரை

(ஈ) 5 ஆண்டுகள் அல்லது 70 வயது வரை

10. தேசிய மனித உரிமைகள் ஆணைய தலைமையகம் அமைந்துள்ள இடம் எது?

(அ) புது டெல்லி

(ஆ) மும்பை

(இ) அகமதாபாத்

(ஈ) கொல்கத்தா

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. ஒவ்வொரு தனிமனிதனும் கண்ணியமான வாழ்க்கை வாழ ____________ உண்டு.

2. மனித உரிமைகள் என்பது ____________ உரிமைகள்.

3. மாநில மனித உரிமைகள் ஆணையம் அமைக்கப்பட்ட ஆண்டு ____________

4. இந்திய அரசியலமைப்பின் 24வது சட்டப்பிரிவு ____________ ஐ தடை செய்கிறது.

5. ஐக்கிய நாடுகள் சபை நிறுவப்பட்ட ஆண்டு ____________

**பொருத்துக:**

1. எலினார் ரூஸ்வெல்ட் – உலகின் முதல் மனித உரிமைகள் சாசனம்

2. சைரஸ் சிலிண்டர் – 1997

3. பெண்களை கேலி செய்வதற்கு

ஏதிரான சட்டம் – அடிமைத் தனத்திலிருந்து விடுதலை

4. குழந்தை உதவி மைய எண் – மனித உரிமைகளுக்கான ஆணையம்

5. வாழ்வியல் உரிமைகள் – வாக்களிக்கும் உரிமை

6. அரசியல் உரிமை – 1098

**சரியா அல்லது தவறா எனக் குறிப்பிடுக:**

1. மனித உரிமைகள் மற்றும் வாழ்வியல் உரிமைகள் ஒரே மாதிரியானவை.

2. மனித மற்றும் குடிமகனின் உரிமைகள் அறிவிப்பு இந்தியாவில் அறிவிக்கப்பட்டது.

3. 1993ஆம் ஆண்டு மனித உரிமைச் சட்டம் தேசிய மனித உரிமைகள் ஆணையம் உருவாக் வழிவகுத்தது.

4. பாதிக்கப்பட்டவர்களுக்குத் தண்டனை வழங்க தேசிய மனித உரிமைகள் ஆணையம் அதிகாரம் பெற்றுள்ளது.

5. மனித உரிமைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக தேசிய, மாநில அளவிலான மனித உரிமைகள் ஆணையம் நிறுவப்பட்டுள்ளது.

**பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. தவறான இணையைக் கண்டறிக:

அ) தேசிய மனித உரிமைகள் ஆணையம் ஒரு சட்ட ரீதியான அமைப்பாகும்.

ஆ) தேசிய மனித உரிமைகள் ஆணையம் ஓர் அரசியலமைப்பு சார்ந்த அமைப்பாகும்.

இ) தேசிய மனித உரிமைகள் ஆணையம் ஒரு சுதந்திரமான அமைப்பாகும்.

ஈ) தேசிய மனித உரிமைகள் ஆணையம் ஒரு பலதரப்பு நிறுவனங்களைக் கொண்டதாகும்.

2. தேசிய மனித உரிமைகள் ஆணையம் குறித்து பின்வரும் எந்த கூற்று சரியானது அல்ல.

(அ) இது 1993இல் நிறுவப்பட்டது.

(ஆ) மனித உரிமை மீறல் வழக்குகளில் குற்றவாளியைத் தண்டிக்க ஆணையத்திற்கு எந்த உரிமையும் இல்லை.

(இ) இந்த ஆணையத்தின் தலைவரும் உறுப்பினர்களும் இந்திய உச்ச நீதிமன்றத்தால் நியமிக்கப்படுகிறார்கள்.

(ஈ) இந்த ஆணையம் தனது ஆண்டு அறிக்கையை மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளுக்கு அனுப்புகிறது.

3. கூற்று: டிசம்பர் 10ஆம் நாள் மனித உரிமைகள் தினமாக அனுசரிக்கப்படுகிறது.

காரணம்: இது எலினார் ரூஸ்வெல்டின் பிறந்த நாளை நினைவு கூர்கிறது.

(அ) கூற்று சரி ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

(ஆ) கூற்று சரி காரணம் கூற்றை விளக்குகிறது

(இ) கூற்று காரணம் இரண்டும் சரி

(ஈ) கூற்று காரணம் இரண்டும் தவறு

4. பின்வரும் கூற்றை ஆராய்க:

1. மாநில மனித உரிமைகள் ஆணையம் பல உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பு ஆகும்.

2. மாநில மனித உரிமைகள் ஆணையம் ஒரு தலைவர் மற்றும் மூன்று உறுப்பினர்களைக் கொண்டதாகும்.

மேற்கூறிய கூற்றுகளில் எது/எவை சரியானது/சரியானவை?

(அ) 1 மட்டும்

(ஆ) 2 மட்டும்

(இ) 1, 2

(ஈ) எதுவுமில்லை

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: (விடைகள்)**

1. ஐ. நா. சபை 2. பெய்ஜிங் 3. (1993) 4. குழந்தைகள் 5. டிசம்பர் 10

6. மனித உரிமைகளுக்கான உலகளாவிய அறிவிப்பு

7. ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி 8. (30)

9. (5 ஆண்டுகள் அல்லது 70 வயது வரை) 10. புதுடெல்லி

**கோடிட்ட இடங்களை நிரப்புக: (விடைகள்)**

1. உரிமை 2. அடிப்படை 3. (17, ஏப்ரல் 1997) 4. குழந்தை தொழிலாளர் முறையை

5. (24, அக்டோபர் 1945)

**பொருத்துக: (விடைகள்)**

1. எலினார் ரூஸ்வெல்ட் – மனித உரிமைகளுக்கான ஆணையம்

2. சைரஸ் சிலிண்டர் – உலகின் முதல் மனித உரிமைகள் சாசனம்

3. பெண்களை கேலி செய்வதற்கு எதிரான சட்டம் – 1997

4. குழந்தை உதவி மைய எண் – 1098

5. வாழ்வியல் உரிமைகள் – அடிமைத் தனத்திலிருந்து விடுதலை

6. அரசியல் உரிமை – வாக்களிக்கும் உரிமை

**சரியா / தவறா எனக் குறிப்பிடுக: (விடைகள்)**

**1. தவறு**

**சரியான விடை:** மனித உரிமைகள் மற்றும் வாழ்வியல் உரிமைகள் வெவ்வேறானவை.

**2. தவறு**

**சரியான விடை:** மனித மற்றும் குடிமகனின் உரிமைகள் ஐரோப்பிய மற்றும் அமெரிக்க நாடுகளில் வேரூன்றியிருந்தது.

**3. சரி**

**4. தவறு**

**சரியான விடை:** 1948 மனித உரிமைகளுக்கான உலகளாவிய அறிவிப்பு தேசிய மனித உரிமைகள் ஆணையம் உருவாக வழிவகுத்தது.

**5. சரி**

**பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றைத் தேர்வு செய்க:**

1. தேசிய மனித உரிமைகள் ஆணையம் ஓர் அரசியலமைப்புச் சார்ந்த அமைப்பாகும்.

2. இந்த ஆணையத்தின் தலைவரும் உறுப்பினர்களும் இந்திய உச்ச நீதிமன்றத்தால் நியமிக்கப்படுகிறார்கள்.

3. கூற்று சரி ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

4. 1 மட்டும்

8th Social Science Lesson 21

**21] சாலை பாதுகாப்பு விதிகள் மற்றும் நெறிமுறைகள்**

**உங்களுக்குத் தெரியுமா?**

**இரவில் விளக்குகள்:** இரவில் போக்குவரத்து நெரிசல் குறைந்திருக்கும் போது பல குறுக்கு சந்திப்புகளில் உள்ள சைகை விளக்குகளை காவலர்கள் அணைத்து விடலாம். ஆனால் அப்பகுதிகளைக் கடக்கும் போது மிகவும் எச்சரிக்கையுடன் தொடரலாம். வாகனங்களை நிறுத்தத் தேவையில்லை.

**இந்திய தண்டனைச் சட்டம் 304 A பிரிவு:** கண்மூடித்தனமாக ஓட்டுவதாலும் ஓட்டுநரின் அலட்சியம் காரணமாகவும் ஏற்படும் இறப்பு தொடர்பான குற்றங்களுக்கு ஓட்டுநர் மீது காவல் துறை மேற்கூறிய பிரிவின் கீழ் கிரிமினல் குற்ற வழக்குப் பதிவு செய்ய நேரிடும்.

**சேது பாரதம்:** தேசிய நெடுஞ்சாலைகளில் பாதுகாப்பாக மற்றும் தடையற்ற பயணம் செய்ய பாலங்களைக் கட்டுவதற்கான திட்டம் 2016இல் தொடங்கப்பட்டது. அது 2019ஆம் ஆண்டிற்குள் அனைத்து தேசிய நெடுஞ்சாலைகளையும், இருப்புப்பாதை குறுக்கீடு இல்லாமல் உருவாக்குவதை நோக்கமாக கொண்டுள்ளது.

**வாழ்வைக் காப்பாற்று நிறுவனம் (Save LIFE Foundation):** இது ஒரு சுதந்திரமான, இலாப நோக்கில்லாத, அரசு சாரா, பொதுத் தொண்டு அறக்கட்டளையாகும். இது இந்தியா முழுவதும் சாலை பாதுகாப்பு மற்றும் அவசர மருத்துவ வசதியினை மேம்படுத்துவதற்காக பணியாற்றி வருகின்றது.

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. சிவப்பு விளக்கு ஒளிரும் போது

(அ) பாதை தெளிவாக இருக்கும் போது நீங்கள் தொடர்ந்து செல்லலாம்

(ஆ) நீங்கள் வாகனத்தை நிறுத்தி பச்சை விளக்கு ஒளிரும் வரை காத்திருக்க வேண்டும்

(இ) உன் நண்பனின் குறுந்தகவலுக்கு விரைவாக பதில் அனுப்பலாம்

(ஈ) செல்லிடப் பேசியில் உரையாடலாம்

2. பாதசாரிகள் சாலையைக் கடக்குமிடம்

(அ) எங்கு வேண்டுமானாலும்

(ஆ) சமிக்ஞைகளுக்கு அருகில்

(இ) வரிகோட்டு பாதையில்

(ஈ) இவற்றில் எதுவுமில்லை

3. சாலை பாதுகாப்பு வாரம் ஒவ்வொரு வருடமும் கொண்டாடப்படும் மாதம்

(அ) டிசம்பர்

(ஆ) ஜனவரி

(இ) மார்ச்

(ஈ) மே

4. அவசர காலத்தில், அவசர சிகிச்சை ஊர்தி சேவைக்காக அழைக்க வேண்டிய எண்

(அ) 108

(ஆ) 100

(இ) 106

(ஈ) 101

5. சாலை விபத்துக்களுக்கான காரணங்கள் யாவை?

(அ) அதிவேகம்

(ஆ) குடிபோதையில் ஓட்டுதல்

(இ) ஓட்டுநர்கள் கவனச்சிதறல்

(ஈ) இவை அனைத்தும்

6. போக்குவரத்துக் குறியீடுகளின் முதல் வகை

(அ) கட்டாய குறியீடுகள்

(ஆ) எச்சரிக்கை குறியீடுகள்

(இ) தகவல் குறியீடுகள்

(ஈ) இவற்றில் எதுவுமில்லை

7. சேது பாரதம் திட்டம் துவங்கப்பட்ட ஆண்டு

(அ) 2014

(ஆ) 2015

(இ) 2016

(ஈ) 2017

8. ABS என்பதனை விரிவாக்கம் செய்க:

(அ) எதிர் நிறுத்தி ஆரம்பம் (Anti Brake Start)

(ஆ) வருடாந்திர அடிப்படை அமைப்பு (Annual Bare System)

(இ) பூட்டுதலில்லா நிறுத்தும் அமைப்பு (Anti–lock Braking System)

(ஈ) இவற்றுள் எதுவுமில்லை

9. வளைவில் முந்துவது

(அ) அனுமதிக்கப்படுகிறது

(ஆ) அனுமதியில்லை

(இ) கவனத்துடன் அனுமதிக்கப்படுகிறது

(ஈ) நமது விருப்பம்

10. அவசர சிகிச்சை ஊர்தி வரும்பொழுது

(அ) முன்பக்கம் வாகனம் இல்லாத போது கடந்து செல்ல அனுமதிக்க வேண்டும்

(ஆ) முன்னுரிமை எதுவும் அளிக்கத் தேவையில்லை

(இ) நம் வாகனத்தினைச் சாலை ஓரமாக செலுத்தி தடையில்லாமல் கடக்க அனுமதிக்க வேண்டும்

(ஈ) அவசர சிகிச்சை ஊர்தியின் பின்புறம் மிகுந்த வேகத்துடன் பின் தொடர வேண்டும்

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. வாகனம் ஓட்டும் பொழுது எப்போதும் ____________ புறம் செல்லவும்.

2. கட்டாய குறியீடுகள் ____________ வடிவில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

3. ___________ வாகனத்தின் வேகத்தைக் கட்டுப்படுத்துகின்றது.

4. அதிக வேகம்: __________ ஆபத்து.

5. நான்கு சக்கர வாகனத்தில் _____________ அணிவதும் இரு சக்கர வாகனத்தில் __________ அணிவதும் கட்டாயம் எனச்சட்டம் உள்ளது.

**பொருத்துக:**

1. மாசுக் கட்டுப்பாட்டுச் சான்றிதழ் – வரிக்கோட்டு பாதை

2. புதிய சிற்றுந்துகளுக்கான ஒரு முறை வரி – சாலைப்பாதுகாப்புக் குறித்த சித்திர புத்தகம்

3. பாதசாரி – ஆறு மாதங்கள்

4. பிரேசிலியா பிரகடனம் – 15 வருடங்கள்

5. சுவச்ச சேஃபர் – பன்னாட்டு மாநாடு

**சரியா அல்லது தவறா எனக் குறிப்பிடுக:**

1. சாலை விபத்துக்கள் தொடர்பான பிரச்சனை சாலையில் மட்டுமே உள்ளது.

2. பாதை தடத்தை மாற்றும் முன்பு கண்ணாடியினைப் பார்க்க வேண்டும்.

3. ஒளிரும் மஞ்சள் விளக்கு, வேகத்தினை குறைத்தும் எச்சரிக்கையுடனும் செல்ல வேண்டும் என்பதைக் குறிக்கின்றது.

4. இரு சக்கர வண்டியில் ஒருவர் மட்டுமே பின் இருக்கையில் அமர அனுமதிக்கப்படுகிறார்கள்.

5. சாலைகள் மனிதனின் மிக மோசமான கண்டுபிடிப்புகளில் ஒன்று.

**பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. பின்வரும் கூற்று(களில்) சரியல்லாதது எது?

(i) முன்புற வாகனத்திலிருந்து சரியான இடைவெளியில் தொடரவும்.

(ii) வேக கட்டுப்பாட்டு அளவினைக் கடைபிடிக்க வேண்டும். ஒரு போதும் வேகத்திற்கான எல்லையினைத் தாண்டக்கூடாது.

(iii) வாகனம் ஓட்டும் பொழுது இருக்கை வார்பட்டை அணியத் தேவையில்லை.

(iv) வளைவுகளிலும் திருப்பங்களிலும் வேகத்தினைக் குறைக்க வேண்டாம்.

(அ) i, iii மட்டும்

(ஆ) ii, iv மட்டும்

(இ) i, ii மட்டும்

(ஈ) iii, iv மட்டும்

2. கூற்று: மது அருந்தி விட்டு வாகனம் ஓட்டுவது விபத்துக்களை ஏற்படுத்துகின்றது.

காரணம்: மயக்கம் காரணமாக பார்வை பாதிக்கப்படுகின்றது.

(அ) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் ஆகும்

(ஆ) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் அல்ல

(இ) கூற்று சரி காரணம் தவறு

(ஈ) கூற்று, காரணம் இரண்டும் தவறு

3. கூற்று: சாலை குறியீடுகள் எளிதில் புரிந்துகொள்ள கூடிய ஒன்று.

காரணம்: அவைகள் பெரும்பாலும் படங்களாக இருக்கின்றன.

(அ) கூற்று சரி, காரணம் தவறு

(ஆ) கூற்று மற்றும் காரணம் சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் ஆகும்

(இ) கூற்று தவறு, காரணம் சரி

(ஈ) கூற்று மற்றும் காரணம் சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல

4. பொருந்தாத ஒன்றைக் கண்டுபிடி (சாலை பாதுகாப்பு விதிகள்).

(அ) வளைவுகளில் மெதுவாக செல்

(ஆ) வேக கட்டுப்பாட்டு அளவினைக் கடைபிடி

(இ) வாகனம் ஓட்டும் பொழுது செல்லிடப் பேசியைப் பயன்படுத்து

(ஈ) சாலைகளில் நடப்பதைத் தவிர்க்கவும்

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: (விடைகள்)**

1. நீங்கள் வாகனத்தை நிறுத்தி பச்சை விளக்கு ஒளிரும் வரை காத்திருக்க வேண்டும்.

2. வரிகோட்டு பாதையில் 3. ஜனவரி 4. (108) 5. இவை அனைத்தும்

6. கட்டாய குறியீடுகள் 7. (2016) 8. பூட்டுதலில்லா நிறுத்தம் அமைப்பு 9. அனுமதியில்லை

10. நம் வாகனத்தினைச் சாலை ஓரமாக செலுத்தி தடையில்லாமல் கடக்க அனுமதிக்க வேண்டும்.

**கோடிட்ட இடங்களை நிரப்புக: (விடைகள்)**

1. இடது 2. வட்ட 3. வேக கட்டுப்பாட்டுக் கருவி 4. அதிக

5. இருக்கை பட்டை, தலைக்கவசம்

**பொருத்துக: (விடைகள்)**

1. மாசுக் கட்டுப்பாட்டுச் சான்றிதழ் – ஆறு மாதங்கள்

2. புதிய சிற்றுந்துகளுக்கான ஒரு முறை வரி – 15 வருடங்கள்

3. பாதசாரி – வரிக்கோட்டு பாதை

4. பிரேசிலியா பிரகடனம் – பன்னாட்டு மாநாடு

5. சுவச்ச சேஃபர் – சாலைப்பாதுகாப்பு குறித்த சித்திர புத்தகம்

**சரியா / தவறா எனக் குறிப்பிடுக: (விடைகள்)**

**1. தவறு**

**2. சரி**

**3. சரி**

**4. சரி**

**5. தவறு**

**பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றைத் தேர்வு செய்க:**

1. iii, iv மட்டும்

2. கூற்று சரி மற்றும் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் ஆகும்.

3. கூற்று மற்றும் காரணம் சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் ஆகும்.

4. வாகனம் ஓட்டும் பொழுது செல்லிடப் பேசியைப் பயன்படுத்து

8th Social Science Lesson 22

**22] பாதுகாப்பு மற்றும் வெளியுறவுக் கொள்கை**

**உங்களுக்குத் தெரியுமா?**

இந்திய ஆயுதப் படைகளைக் கௌரவிப்பதற்காக இந்திய அரசால் தேசியப் போர் நினைவுச் சின்னம் (National War Memorial) கட்டப்பட்டுள்ளது. இந்நினைவுச் சின்னம் புது டெல்லியில் உள்ள இந்தியா கேட் அருகில் 40 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளது. போரின் போது நாட்டிற்காக உயிர் தியாகம் செய்த இந்திய இராணுவ வீரர்களின் பெயர்கள் நினைவுச் சின்னத்தின் சுவர்களின் கல்வெட்டில் பொறிக்கபட்டுள்ளன.

**பீல்டு மார்ஷல் (Field Marshal):** இது ஐந்து நட்சத்திர அந்தஸ்து கொண்ட பொது அதிகாரி பதவி. இது இந்திய இராணுவத்தின் உயர்ந்த பதவி ஆகும். சாம் மானகூஷா என்பவர் இந்தியாவின் முதல் பீல்டு மார்ஷல் ஆவார். கே. எம். கரியப்பா இரண்டாவது பீல்டு மார்ஷல் ஆவார். இந்திய விமானப்படையில் ஐந்து நட்சத்திர அந்தஸ்து கொண்ட மார்ஷல் பதவிக்கு உயர்வு பெற்ற முதல் மற்றும் ஒரே அதிகாரி அர்ஜீன் சிங் ஆவார்.

1758ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட "மெட்ராஸ் ரெஜிமென்ட்" (The Madras Regiment) இந்திய இராணுவத்தின் மிகப்பழமையான காலாட்படை பிரிவுகளில் ஒன்றாகும். இந்த "ரெஜிமென்ட்" தமிழ்நாட்டின் உதகமண்டலத்தில் உள்ள வெல்லிங்டன் எனுமிடத்தில் அமைந்துள்ளது. 1962இல் நடந்த சீன – இந்திய போரானது இராணுவ அதிகாரிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டியதின் அவசியத்தை உணர்த்தியது. இந்திய இராணுவத்தின் அவசர ஆணையத்திற்கான அதிகாரிகளுக்குப் பயிற்சியளிக்க பூனா மற்றும் சென்னை ஆகிய இடங்களில் "அதிகாரிகள் பயிற்சிப் பள்ளிகள்" (Officers Training Schools – OTS) நிறுவப்பட்டது. 1998 ஜனவரி 1 முதல் அதிகாரிகள் பயிற்சிப் பள்ளியானது "அதிகாரிகள் பயிற்சி அகாடமி" (Officers Training Academy – OTA) என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

கி. பி. (பொ. ஆ) 1025இல் தமிழ்நாட்டில் இருந்து சோழ மன்னர் முதலாம் இராஜேந்திரன் தென் கிழக்கு ஆசியாவின் கடல் சார் பகுதியான ஸ்ரீ விஜயம் மீது தன் கடற்படையெடுப்பைத் தொடங்கினார். மேலும் தற்போது கெடா என்றழைக்கப்படும் கடாரம் பகுதியை வென்றார். முதலாம் இராஜேந்திர சோழனின்

ஸ்ரீவிஜயத்துக்கு எதிரான இந்த கடல் கடந்த படையெடுப்பு இந்திய வரலாற்றில் சிறப்பான நிகழ்வாக கருதப்படுகிறது.

**தேசிய மாணவர் படை (National Cadet Corps – NCC):** தேசிய மாணவர் படை என்பது இராணுவப்படை, கடற்படை மற்றும் விமானப்படை ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு முத்தரப்பு சேவை அமைப்பாகும். இந்த அமைப்பு நாட்டின் இளைஞர்களை ஒழுக்கமான மற்றும் தேசபக்தி மிக்க குடிமக்களாக உருவாக்குவதில் ஈடுபட்டுள்ளது. தேசிய மாணவர் படை என்பது ஒரு தன்னார்வ அமைப்பாகும். இது இந்தியா முழுவதும் உள்ள உயர் நிலைப்பள்ளிகள், கல்லூரிகள், மற்றும் பல்கலைக்கழகங்களிலிருந்து மாணவர்களைத் தேர்ந்தெடுக்கிறது மேலும் மாணவர்களுக்குச் சிறிய ஆயுதங்கள் மற்றும் அணிவகுப்புகளில் அடிப்படை இராணுவப் பயிற்சியும் அளிக்கிறது.

ஜனவரி 15 – இராணுவ தினம்; பிப்ரவரி 1 – கடலோரக் காவல்படை தினம்; மார்ச் 10 – மத்திய தொழிலக பாதுகாப்புப் படை தினம்; அக்டோபர் 7 – விரைவு அதிரடிப்படை தினம்; அக்டோபர் 8 – விமானப்படை தினம்; டிசம்பர் 4 – கடற்படை தினம்; டிசம்பர் 7 – ஆயுதப்படைகள் கொடி தினம்.

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், நேபாளம், சீனா, பூடான், வங்காளதேசம் மற்றும் மியான்மர் ஆகிய நாடுகளுடன் இந்தியா பொதுவான நில எல்லைகளைப் பகிர்ந்து கொள்கிறது. மேலும் இலங்கையுடன் பொதுவான கடல் எல்லையையும் பகிர்ந்து கொள்கிறது.

**நெல்சன் மண்டேலா:** இவர் ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸின் (தென் ஆப்பிரிக்கா) தலைவராக செயல்பட்டார். இவர் இனவெறிக்கு எதிரான ஓர் உறுதியான போராளி ஆவார். நிறவெறிக் கொள்கை என்பது இனப்பாகுபாட்டின் ஒரு மோசமான வடிவம் ஆகும். இது மனிதாபிமானத்திற்கும், மக்களாட்சிக்கும் எதிரானது. இனவெறிக் கொள்கை மற்றும் அனைத்து வகையான இனப்பாகுபாட்டிற்கும் எதிராக இந்தியா போராடியது. 1990ஆம் ஆண்டு தென் ஆப்பிரிக்காவில் இனவெறிக் கொள்கையை முடிவுக்கு கொண்டு வந்தது. இந்திய வெளியுறவுக் கொள்கையின் மிகச்சிறந்த வெற்றியாகும்.

**<u>சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:</u>**

1. இந்திய ஆயுதப் படைகளின் தலைமைத் தளபதி ______________

(அ) குடியரசுத் தலைவர்

(ஆ) பிரதம அமைச்சர்

(இ) ஆளுநர்

(ஈ) முதலமைச்சர்

2. இந்திய ராணுவப் படையின் முதன்மை நோக்கமானது

(அ) தேசிய பாதுகாப்பு

(ஆ) தேசிய ஒற்றுமை

(இ) அந்நிய ஆக்கிரமிப்பிலிருந்து நாட்டைக் காத்தல்

(ஈ) மேற்கூறிய அனைத்தும்

3. இராணுவ தினம் அனுசரிக்கப்படும் நாள்

(அ) ஜனவரி 15

(ஆ) பிப்ரவரி 1

(இ) மார்ச் 10

(ஈ) அக்டோபர் 7

4. அஸ்ஸாம் ரைபிள்ஸ் எதன் கீழ் செயல்படுகிறது?

(அ) பாதுகாப்பு அமைச்சகம்

(ஆ) தேசிய பாதுகாப்பு ஆலோசகர்

(இ) திட்ட மேலாண்மை நிறுவனம்

(ஈ) உள்துறை அமைச்சகம்

5. இந்தியக் கடலோரக் காவல்படை நிறுவப்பட்ட ஆண்டு

(அ) 1976

(ஆ) 1977

(இ) 1978

(ஈ) 1979

6. இந்திய வெளியுறவுக் கொள்கையானது பல்வேறு கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டது. அவைகளுள் ஒன்று

(அ) சத்தியமேவ ஜெயதே

(ஆ) பஞ்சசீலம்

(இ) மேற்கூறிய இரண்டும்

(ஈ) மேற்கூறிய எவையுமில்லை

7. பின்வருவனவற்றுள் எந்த தீவுகள் இந்தியாவிற்கு சொந்தமானவை?

(அ) அந்தமான் மற்றும் மாலத்தீவு

(ஆ) அந்தமான் மற்றும் லட்சத்தீவுகள்

(இ) இலங்கை மற்றும் மாலத்தீவு

(ஈ) மாலத்தீவு மற்றும் லட்சத்தீவுகள்

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. மெட்ராஸ் ரெஜிமெண்ட் பிரிவின் மையம் அமைந்துள்ள இடம் ______________

2. இந்திய கடற்படையின் தலைமை தளபதி ______________ ஆவார்.

3. இந்திய விமானப்படையிலிருந்து ஐந்து நட்சத்திர அந்தஸ்து கொண்ட மார்ஷல் பதவிக்கு உயர்வு பெற்ற முதல் மற்றும் ஒரே அதிகாரி _____________ ஆவார்.

4. இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையினை வடிவமைத்த முதன்மைச் சிற்பி _____________

5. அணிசேராமை என்ற சொல்லை உருவாக்கியவர் _______________

**பொருத்துக:**

1. நெல்சன் மண்டேலா – 8 உறுப்பினர்கள்

2. தேசிய போர் நினைவுச்சின்னம் – பீல்டு மார்ஷல்

3. மானக்ஷா – எரிசக்தி மேம்பாடு

4. சார்க் – இனவெறிக் கொள்கை

5. பி. சி. ஐ. எம். – புது டெல்லி

**சரியா அல்லது தவறா எனக் குறிப்பிடுக:**

1. மத்திய ஆயுதக் காவல் படைகள் (CAPF) பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.

2. மெட்ராஸ் ரெஜிமென்ட் பழமையான காலாட்படைப் பிரிவுகளில் ஒன்று.

3. விரைவு அதிரடிப் படையானது, மத்திய ரிசர்வ் காவல் படையின் (CRPF) ஒரு சிறப்பு பிரிவு ஆகும்.

4. NCC மாணவர்களுக்கு அடிப்படை இராணுவப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

5. வங்காள தேசம் இந்தியாவின் ஒரு பகுதி ஆகும்.

6. இந்தியாவிற்கும், ASEAN என்ற கூட்டமைப்பில் உள்ள நாடுகளுக்கும் மியான்மர் ஒரு நிலப்பாலமாக செயல்படுகிறது.

**பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. ஆயுதப்படைகள் தொடர்பான பின்வரும் கூற்றினை ஆராய்க.

I. இந்திய இராணுவப் படை ஆயுதப் படைகளின் நில அடிப்படையிலான பிரிவு ஆகும்.

II. இந்திய இராணுவப் படையின் நோக்கம் தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதோடு மட்டுமல்லாமல் மனித மீட்பு நடவடிக்கைகளிலும் ஈடுபடுகிறது.

(அ) I மட்டும் சரி

(ஆ) II மட்டும் சரி

(இ) I மட்டும் II சரி

(ஈ) I மட்டும் II தவறு

2. கூற்று: குடியரசுத் தலைவர் இந்திய ஆயுதப் படைகளின் தலைமை தளபதி ஆவார்.

காரணம்: குடியரசுத் தலைவர் நாட்டின் தலைவராகவும் மிக உயர்ந்த பதவி நிலையையும் வகிக்கிறார்.

(அ) கூற்று சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமாகும்

(ஆ) கூற்று சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல

(இ) கூற்று சரி, காரணம் தவறு

(ஈ) கூற்று, காரணம் இரண்டும் தவறு

3. கூற்று: பன்னாட்டு கூட்டுறவை இந்தியா ஆதரிக்கிறது.

காரணம்: நட்பு–கூட்டுறவு மூலம் நாடுகளுக்கிடையே உள்ள அனைத்து பிரச்சனைகளையும் தீர்க்க முடியும் என்று இந்தியா நம்புகிறது.

(அ) கூற்று சரி, காரணம் தவறு

(ஆ) கூற்று, காரணம் இரண்டும் தவறு

(இ) கூற்று சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமாகும்

(ஈ) கூற்று சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல

4. இனவெறிக்கொள்கை பற்றி பின்வரும் எந்த கூற்று சரியானவை அல்ல.

I. நிறவெறிக் கொள்கை என்பது இனப்பாகுபாட்டின் ஒரு மோசமான வடிவம்.

winmeen.com

II. இது மனிதாபிமானத்திற்கு எதிரானது.

III. இனப்பாகுபாட்டுக் கொள்கை இந்தியாவில் நடைமுறையில் உள்ளது.

(அ) I மற்றும் II

(ஆ) II மற்றும் III

(இ) II மட்டும்

(ஈ) III மட்டும்

5. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடு.

(அ) மாலத்தீவு

(ஆ) இலங்கை

(இ) மியான்மர்

(ஈ) லட்சத்தீவுகள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: (விடைகள்)**

1. குடியரசுத் தலைவர் 2. மேற்கூறிய அனைத்தும் 3. ஜனவரி 15

4. உள்துறை அமைச்சகம் 5. 1978 6. பஞ்சசீலம்

7. அந்தமான் மற்றும் லட்சத்தீவுகள்

**கோடிட்ட இடங்களை நிரப்புக: (விடைகள்)**

1. தமிழ்நாட்டின் உதகமண்டலத்தில் உள்ள வெல்லிங்டன் 2. அட்மிரல் 3. அர்ஜீன் சிங்

4. ஜவகர்லால் நேரு 5. வி. கே. கிருஷ்ணமேனன்

**பொருத்துக: (விடைகள்)**

1. நெல்சன் மண்டேலா – இனவெறிக் கொள்கை

2. தேசிய போர் நினைவுச்சின்னம் – புது டெல்லி

3. மானகூஷா – பீல்டு மார்ஷல்

4. சார்க் – 8 உறுப்பினர்கள்

5. பி. சி. ஐ. எம் – எரிசக்தி மேம்பாடு

**சரியா / தவறா எனக் குறிப்பிடுக:**

1. தவறு

2. சரி

3. சரி

4. தவறு

5. சரி

**பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றைத் தேர்வு செய்க:**

1. i மற்றும் ii சரி

2. கூற்று சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமாகும்.

3. கூற்று சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமாகும்.

4. iii மட்டும்

5. மியான்மர்

8th Social Science Lesson 23

23] நீதித்துறை

**உங்களுக்குத் தெரியுமா?**

**ஸ்மிருதி இலக்கியங்கள்:** பண்டைய இந்தியாவில் ஸ்மிருதிகள் தனிமனிதனின் சமூகக் கடமைகளை வரையறுத்தன. அவை மனுஸ்மிருதி, நாரதஸ்மிருதி, யக்ஞவல்கிய ஸ்மிருதி போன்றவையாகும்.

கல்கத்தா உயர் நீதிமன்றம் நாட்டின் மிகப்பழமையான உயர்நீதிமன்றமாகும். இது 1862ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. அதே சமயம் அலகாபாத் உயர் நீதிமன்றம் நாட்டின் மிகப் பெரிய நீதிமன்றமாகும்.

ஒரு சுதந்திரமான நீதித்துறை என்ற கருத்தை முன்மொழிந்த முதல் அரசியல் தத்துவஞானி மாண்டெஸ்கியூ ஆவார். இவர் புகழ்பெற்ற பிரெஞ்சு தத்துவ ஞானி ஆவார். சட்டமன்றம், நிர்வாகம் மற்றும் நீதித்துறை ஆகிய மூன்று பிரிவுகளாக அரசாங்கம் செயல்பட வேண்டும் என்ற அதிகாரப்பகிர்வு கோட்பாட்டில் அவர் நம்பிக்கை கொண்டிருந்தார்.

**தேசிய சட்ட சேவைகள் அதிகாரம் (NALSA):** இது 1987ஆம் ஆண்டு சட்ட சேவைகள் அதிகார சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது. இது சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்கு இலவச சட்ட உதவிகள் வழங்குவதோடு பிரச்சனைகளுக்கு இணக்கமான தீர்வு காண லோக் அதாலத்தை ஏற்பாடு செய்கிறது.

**பொது நலவழக்கு (Public Interest Litigation):** இது பொதுநலனைப் பாதுகாப்பதற்காக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும் வழக்கு ஆகும். உச்ச நீதிமன்றம் இந்த முறையை அறிமுகப்படுத்தியது. இது ஒரு நபர் தனது வழக்கு தொடர்பான நீதிமன்றத்தை அணுக அனுமதிக்கிறது. அடிப்படை மனித உரிமைகள் மீறல், சமய உரிமைகள், மாசுபாடு, மற்றும் சாலைப்பாதுகாப்பு ஆகியவற்றிற்காக பொது நல வழக்கை எவரும் தாக்கல் செய்யலாம். இது தொடர்பான எழுதப்பட்ட புகார் கடிதம் மூலம் இவ்வழக்கினைப் பதியலாம். பொது நல வழக்கு என்ற கருத்து இந்திய நீதித்துறைக்குப் புதிதான ஒன்றாகும்.

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. இந்தியாவின் மிக உயர்ந்த மற்றும் இறுதியான நீதித்துறை _________

(அ) குடியரசுத் தலைவர்

(ஆ) நாடாளுமன்றம்

(இ) உச்ச நீதிமன்றம்

(ஈ) பிரதம அமைச்சர்

2. ______________ க்கு இடையே பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்கான ஒரு செயல்முறையை நீதிமன்ற அமைப்பு வழங்குகிறது.

(அ) குடிமக்கள்

(ஆ) குடிமக்கள் மற்றும் அரசாங்கம்

(இ) இரண்டு மாநில அரசாங்கங்கள்

(ஈ) மேற்கண்ட அனைத்தும்

3. கீழ்க்கண்ட எந்த அதிகார வரம்பின் மூலம் இரு மாநிலங்களுக்கிடையேயான பிரச்சனைகளை உச்ச நீதிமன்றம் தீர்க்க வழிவகை செய்கிறது?

(அ) முதன்மை அதிகார வரம்பு

(ஆ) மேல்முறையீட்டு அதிகார வரம்பு

(இ) ஆலோசனை அதிகார வரம்பு

(ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

4. பின்வரும் எந்த மாநிலம்/யூனியன் பிரதேசம் ஒரு பொதுவான உயர்நீதிமன்றத்தைக் கொண்டுள்ளது?

(அ) பஞ்சாப் மற்றும் ஜம்மு காஷ்மீர்

(ஆ) அஸ்ஸாம் மற்றும் வங்காளம்

(இ) பஞ்சாப், ஹரியானா மற்றும் சண்டிகர்

(ஈ) உத்தரபிரதேசம் மற்றும் பீகார்

5. பொதுநல வழக்கு முறை இந்தியாவில் ___________ ஆல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

(அ) உச்ச நீதிமன்றம்

(ஆ) நாடாளுமன்றம்

(இ) அரசியல் கட்சிகள்

(ஈ) அரசியலமைப்பு சட்ட திருத்தங்கள்

6. இந்தியாவில் உச்ச நிலையில் உள்ள நீதிமன்றங்கள் எத்தனை?

(அ) ஒன்று

(ஆ) இரண்டு

(இ) மூன்று

(ஈ) நான்கு

7. உச்ச நீதிமன்றம் அமைந்துள்ள இடம்

(அ) சண்டிகர்

(ஆ) பம்பாய்

(இ) கல்கத்தா

(ஈ) புதுதில்லி

8. FIR என்பது

(அ) முதல் தகவல் அறிக்கை

(ஆ) முதல் தகவல் முடிவு

(இ) முதல் நிகழ்வு அறிக்கை

(ஈ) மேற்கூறிய எவையுமில்லை

9. குற்றவியல் வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றம் ____________ என அழைக்கப்படுகின்றன.

(அ) மாவட்ட நீதிமன்றங்கள்

winmeen.com

(ஆ) அமர்வு நீதிமன்றம்

(இ) குடும்ப நீதிமன்றங்கள்

(ஈ) வருவாய் நீதிமன்றங்கள்

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. ____________ நீதிமன்றம் இந்தியாவின் பழமையான நீதிமன்றம் ஆகும்.

2. அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்கள் ____________ மற்றும் ____________ உடன் இந்திய நீதித்துறையை நிறுவினர்.

3. புகழ்பெற்ற பிரெஞ்சு தத்துவஞானியான _____________ "ஒரு சுதந்திரமான நீதித்துறை" என்ற கருத்தை முன்மொழிந்தார்.

4. ____________ பணம், சொத்து, சமூகம் தொடர்பான பிரச்சனைகளைக் கையாளுகிறது.

5. பழங்காலத்தில் பெரும்பாலான அரசர்களின் நீதிமன்றங்கள் ____________ ன்படி நீதியை வழங்கின.

**பொருத்துக:**

1. உச்ச நீதிமன்றம் – சமூக கடமைகள்

2. உயர் நீதிமன்றம் – விரைவான நீதி

3. லோக் அதாலத் – இறுதி மேல் முறையீட்டு நீதிமன்றம்

4. சர் எலிஜா இம்ஃபே – மாநிலத்தின் உயர்ந்த நீதிமன்றம்

5. ஸ்மிருதி – முதல் தலைமை நீதபதி

**சரியா அல்லது தவறா எனக் குறிப்பிடுக:**

1. 1951ஆம் ஆண்டு ஜனவரி 28ஆம் நாள் இந்திய உச்ச நீதிமன்றம் தொடங்கப்பட்டது.

2. துக்ளக் ஆட்சிக்காலத்தில் சட்ட நடைமுறைகள் அரபு மொழியில் எழுதப்பட்டன.

3. 1773ஆம் ஆண்டு ஒழுங்கு முறைச்சட்டம் உச்ச நீதிமன்றம் அமைப்பதற்கு வழிவகுத்தது.

4. சதர் திவானி அதாலத் ஒரு குற்றவியல் நீதிமன்றமாகும்.

5. இந்தியாவில் மிகப்பெரிய நீதிமன்றம் அலகாபாத் நீதிமன்றம் ஆகும்.

6. இந்திய அரசியலமைப்புச் சட்டம் அனைத்துக் குடிமக்களுக்கான நீதியைப் பாதுகாக்கிறது.

**பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. பின்வரும் கூற்றை ஆராய்க:

i) மெக்காலே பிரபுவால் ஒரு சட்ட ஆணையம் அமைக்கப்பட்டது.

ii) இது இந்தியச் சட்டங்களை நெறிமுறைப்படுத்தியது.

மேலே கொடுக்கப்பட்ட எந்த கூற்று/கூற்றுகள் சரியானவை.

(அ) i மட்டும்

(ஆ) ii மட்டும்

(இ) i மற்றும் ii

(ஈ) இரண்டும் இல்லை

winmeen.com

2. பின்வரும் கூற்றை ஆராய்க:

i) இந்திய தண்டனைச் சட்டம் 1860இல் உருவாக்கப்பட்டது.

ii) கல்கத்தா உயர்நீதிமன்றம் 1862இல் நிறுவப்பட்டது.

iii) 1935ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம் கூட்டாட்சி நீதிமன்றத்தை உருவாக்கியது.

மேலே கொடுக்கப்பட்ட எந்த கூற்று/கூற்றுகள் சரியானவை

(அ) i மட்டும்

(ஆ) ii மற்றும் iii மட்டும்

(இ) i, iii மட்டும்

(ஈ) அனைத்தும்

3. இந்திய உச்ச நீதிமன்றம் பற்றிய பின்வரும் எந்த கூற்றுச் சரியானது அல்ல.

i) இந்தியாவின் உச்ச நீதிமன்றம் நாட்டின் மிக உயர்ந்த நீதிமன்றம் ஆகும்.

ii) இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் IVவது அத்தியாயத்தின் கீழ் பகுதி V–இன்படி நிறுவப்பட்டது.

iii) ஒரு உயர்நீதிமன்றத்திலிருந்து மற்றொரு நீதிமன்றத்திற்கு வழக்குகளை உச்ச நீதிமன்றத்தால் மாற்ற முடியாது.

iv) இதன் முடிவுகள் அனைத்து நீதிமன்றங்களையும் கட்டுப்படுத்துகிறது.

(அ) i

(ஆ) ii

(இ) iii

(ஈ) iv

4. கூற்று: உச்ச நீதிமன்றம் ஒரு ஆவண நீதிமன்றமாகும்.

காரணம்: இது நீதிமன்ற நடவடிக்கைகளின் பதிவுகளைப் பராமரிக்கிறது மற்றும் அதன் முடிவுகள் கீழ் நீதிமன்றங்களை கட்டுப்படுத்தும்.

(அ) கூற்று சரி, காரணம் தவறு

(ஆ) கூற்று காரணம் இரண்டும் தவறு

(இ) கூற்று சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்

(ஈ) கூற்று சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல

**5. ஆம் இல்லை எனக் கூறுக.**

1. ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் உச்ச நீதிமன்றத்தை அணுகலாம்.

2. பணக்காரர் மற்றும் சக்தி படைத்த மக்கள் நீதித்துறை அமைப்பை கட்டுப்படுத்துகின்றனர்

3. ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் நீதிமன்றங்களின் மூலம் நீதியைப் பெற உரிமை உடையவராவர்.

4. அரசியல்வாதிகள் நீதிபதிகளைக் கட்டுப்படுத்த முடியாது.

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: (விடைகள்)**

1. உச்சநீதிமன்றம் 2. மேற்கண்ட அனைத்தும் 3. முதன்மை அதிகார வரம்பு

4. பஞ்சாப், ஹரியானா மற்றும் சண்டிகர் 5. உச்சநீதிமன்றம் 6. ஒன்று 7. புதுதில்லி

8. முதல் தகவல் அறிக்கை 9. அமர்வு நீதிமன்றம்

**கோடிட்ட இடங்களை நிரப்புக: (விடைகள்)**

1. கல்கத்தா 2. சுதந்திரம் மற்றும் நடுநிலைமைத் தன்மை 3. மாண்டெஸ்கியூ

4. உரிமையியல் சட்டம் 5. தர்மத்தி

**பொருத்துக: (விடைகள்)**

1. உச்ச நீதிமன்றம் – இறுதி மேல் முறையீட்டு நீதிமன்றம்

2. உயர் நீதிமன்றம் – மாநிலத்தின் உயர்ந்த நீதிமன்றம்

3. லோக் அதாலத் – விரைவான நீதி

4. சர் எலிஜா இம்ஃபே – முதல் தலைமை நீதிபதி

5. ஸ்மிருதி – சமூக கடமைகள்

**சரியா / தவறா எனக் குறிப்பிடுக: (விடைகள்)**

1. தவறு

2. சரி

3. சரி

4. தவறு

5. சரி

**6.** சரி

**பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றைத் தேர்வு செய்க:**

1. i மற்றும் ii

2. அனைத்தும்

3. iii

4. கூற்று சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.

**5. ஆம் இல்லை எனக் கூறுக.**

அ) ஆம்

ஆ) இல்லை

இ) ஆம்

ஈ) ஆம்

winmeen.com

8th Social Science Lesson 24

24] பணம், சேமிப்பு மற்றும் முதலீடுகள்

**உங்களுக்குத் தெரியுமா?**

**உலோக பணத்தின் வரலாறு:** தங்கம், வெள்ளி, வெண்கலம் போன்ற விலை மதிப்பற்ற உலோகங்கள் உலோக பணமாக பயன்படுத்தப்பட்டன. உலோகத்தின் நிலையான எடை மற்றும் துல்லியம் குறிப்பாக தங்கம், வெள்ளி ஆகியவை முத்திரையுடன் பரிமாற்ற கருவியாக செயல்பட்டது. அவைகள் வெவ்வேறு பிரிவுகளாக, எளிதாக பிரிப்பதற்கும், எடுத்து செல்வதற்கும், செலுத்துவதற்கும் வசதியாக இருந்தன. பண்டைய வரலாற்று ஆசிரியரான ஹெரோடோடஸ் கி. மு, (பொ. ஆ. மு) 8ஆம் நூற்றாண்டில் லிடியாவின் பேரரசர் மிடாஸ் உலோக நாணயத்தை கண்டு பிடித்தார். ஆனால் லிடியாவை விட பல நூற்றாண்டுகளாக இந்தியாவில் தங்க நாணயங்கள் பயன்படுத்தப்பட்டன. உலக நாணயங்கள் வெளியீட்டார்களில் சீனா மற்றும் மத்திய கிழக்கு லிடியாவுடன் பண்டைய இந்தியாவும் உள்ளன. இந்தியாவில் கி. மு. 6ஆம் நூற்றாண்டில் முதன் முறையாக மஹாஜனபதங்கள் ஆட்சியில் பூரணாஸ், கர்ஷபணம், பனாஸ் போன்ற நாணயங்கள் அச்சடிக்கப்பட்டன. தங்கம், வெள்ளி, தாமிரம் அல்லது ஈயம் போன்ற நாணயங்களை மௌரியர்கள் துளையிட்டு வெளியிட்டனர். இந்திய கிரேக்க குஷாண அரசர்கள் கிரேக்க மரபுப்படி சித்திரங்கள் பொறிக்கப்பட்ட நாணயங்களை அறிமுகப்படுத்தினர். 12வது நூற்றாண்டில் டெல்லி துருக்கி சுல்தான்கள் தங்கள் நாணயங்களில் இந்திய அரசர்களின் உருவத்தை நீக்கி இஸ்லாமிய எழுத்துக்களை பொறித்து வெளியிட்டனர். தங்கம், வெள்ளி மற்றும் தாமிரத்தால் ஆன நாணயங்களை டாங்கா என்றும், மதிப்பு குறைந்த நாணயங்களை ஜிட்டால் என்றும் அழைத்தனர். 1526யில் இருந்த முகலாய சாம்ரஜ்யம் முழு சாம்ராஜ்யத்திற்கான பணவியல் முறையை ஒருங்கிணைத்தும், இந்த சகாப்த பரிணாம பண வளர்ச்சியில் செர்ஷா சூரி, ஹீமாயூனை தோற்கடித்து ஆட்சியில் இருந்த போது 178 கிராம் எடையுள்ள வெள்ளி நாணயத்தை வெளியிட்டார். அது "ரூபியா" என அழைக்கப்பட்டது மற்றும் 40 தாமிர துண்டுகள் அல்லது பைசா போன்றவற்றை பயன்படுத்தினர். முகலாய காலம் முழுவதும் வெள்ளி நாணயம் பயன்பாட்டில் இருந்தது. ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி 1600ஆம் ஆண்டில் முகலாய நாணயத்தை பிரபலப்படுத்தியது. ஆனால் 1717இல் முகலாய பேரரசர் பாருக்ஷாயர், ஆங்கிலேயர்களுக்கு முகலாய பண நாணயத்தை பம்பாய் அச்சகத்தில் அச்சடிக்க அனுமதி அளித்தனர். ஆங்கில தங்க நாணயங்கள் கரோலினா என்றும், வெள்ளி நாணயங்களை ஏஞ்ஜேலினா என்றும், செம்பு நாணயங்களை கப்ரூன் என்றும் மற்றும் வெண்கல நாணயத்தை டின்னி எனவும் அழைத்தனர்.

**பணத்தின் (ரூபாய்) குறியீடு:** இந்திய ரூபாய் குறியீடு தமிழ்நாட்டில் உள்ள விழுப்புரம் மாவட்டத்தை சேர்ந்த திரு. உதயகுமார் என்பவரால் வடிவமைக்கப்பட்டது. இது ஜீலை 15, 2010 அன்று இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டது.

**பணவீக்கம் மற்றும் பணவாட்டம்:** பணவீக்கம் என்பது விலைகள் உயர்ந்து, பணத்தின் மதிப்பு வீழ்ச்சியடைவதையும் குறிக்கும். பணவாட்டம் என்பது விலைகள் குறைந்து பணத்தின் மதிப்பு உயர்வதைக் குறிக்கும்.

**பணம் மதிப்பிழப்பு:** 2016 நவம்பர் 8ஆம் தேதி இந்தியாவில் இந்திய அரசாங்கம் கருப்பு பணத்திற்கு எதிராக அனைத்து ரூ. 500 மற்றும் ரூ. 1000 நோட்டுக்களை பண மதிப்பிழப்பு செய்வதாக அறிவித்தது.

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. உலோக பணத்திற்காக எந்த உலோகம் பயன்படுத்தப்பட்டன?

(அ) தங்கம்

(ஆ) வெள்ளி

(இ) வெண்கலம்

(ஈ) மேற்கூறிய அனைத்தும்

2. இந்திய ரூபாய் குறியீட்டினை (₹) வடிவமைத்தவர் யார்?

(அ) உதயகுமார்

(ஆ) அமர்த்தியா சென்

(இ) அபிஜித் பானர்ஜி

(ஈ) இவற்றில் எவரும் இல்லை

3. பணத்தின் மதிப்பு

(அ) அக பணமதிப்பு

(ஆ) புற பண மதிப்பு

(இ) அ மற்றும் ஆ

(ஈ) எதுவுமில்லை

4. வங்கி பணம் என்பது எது?

(அ) காசோலை

(ஆ) வரைவு

(இ) கடன் மற்றும் பற்று அட்டைகள்

(ஈ) மேற்கூறிய அனைத்தும்

5. தவறான ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும். முதலீட்டுக் கருவி போன்றவைகள்

(அ) பங்கு வர்த்தகம்

(ஆ) பத்திரங்கள்

(இ) பரஸ்பர நிதி

(ஈ) வரி செலுத்துவது

6. பின்வருவனவற்றில் கருப்புப் பணம் குவிப்பதற்கு காரணமானவர்கள்

(அ) வரி ஏய்ப்பவர்கள்

(ஆ) பதுக்குபவர்கள்

(இ) கடத்தல்காரர்கள்

(ஈ) மேற்கண்ட அனைத்தும்

**<u>கோடிட்ட இடங்களை நிரப்புக:</u>**

1. நிகழ்நிலை வங்கியை _____________ என்று அழைக்கலாம்.

2. பணம் எதையெல்லாம் செய்யவல்லதோ அதுவே _____________

3. மின்னணு வங்கியை _____________ என்றும் அழைக்கலாம்.

4. கடன் அட்டைகள் மற்றும் பற்று அட்டைகள் _____________ பணமாகும்.

5. இந்திய ரிசர்வ் வங்கி தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு _____________

**<u>பொருத்துக:</u>**

winmeen.com

1. பண்டமாற்று முறை வரி ஏமாற்றுபவர்கள்

2. இந்திய ரிசர்வ் வங்கி சட்டம் மின்னணு பணம்

3. மின்–பணம் நுகர்வு தவிர்த்த வருமானம்

4. சேமிப்பு பண்டங்களுக்கு பண்டங்கள் பரிமாற்றம்

5. கருப்பு பணம் 1935

**சரியான கூற்றை தேர்ந்தெடுக்கவும்:**

1. பண்டமாற்று முறையில் பல குறைபாடுகளாவன:

I. இருமுகத்தேவை பொருத்தமின்மை

II. செல்வத்தை சேமிக்க சிரமமில்லை.

III. பொதுவான மதிப்பின் அளவுகோல்

IV. பொருட்களின் பகுபடாமை

அ) I மற்றும் II சரி

(ஆ) I மற்றும் IV சரி

(இ) I, III மற்றும் IV சரி

(ஈ)மேற்கூறிய அனைத்தும்

**தவறான இணையைக் கண்டறிக:**

1. பரிமாற்றத்திற்கு பணத்தின் சமீபத்திய வடிவங்கள்

(அ) பற்று அட்டை

(ஆ) பண்டமாற்று முறை

(இ) கடன் அட்டை

(ஈ) நிகழ் நிலை வங்கி

2. பொருளாதாரத்தில் இருப்புப் பணத்தின் விளைவுகள்

(அ) இரட்டை பொருளாதாரம்

(ஆ) சமத்துவம் வலுவிழத்தல்

(இ) உற்பத்தியில் விளைவுகள் இல்லை

(ஈ) ஆடம்பர நுகர்வுச் செலவு

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: (விடைகள்)**

1. மேற்கூறிய அனைத்தும் 2. உதயகுமார் 3. அ மற்றும் ஆ 4. காசோலை

5. வரி செலுத்துவது 6. மேற்கண்ட அனைத்தும்

**கோடிட்ட இடங்களை நிரப்புக: (விடைகள்)**

1. இணைய வங்கி 2. பணம் 3. தேசிய மன்னணு நிதி 4. நெகிழிப் 5. (1935)

**பொருத்துக: (விடைகள்)**

1. பண்டமாற்று முறை – பண்டங்களுக்கு பண்டங்கள் பரிமாற்றம்

2. இந்திய ரிசர்வ் வங்கி சட்டம் – 1935

3. மின் – பணம் – மின்னணு பணம்

4. சேமிப்பு – நுகர்வு தவிர்த்த வருமானம்

5. கருப்பு பணம் – வரி ஏமாற்றுபவர்கள்

**சரியான கூற்றை தேர்ந்தெடுக்கவும்:**

1. i iii மற்றும் iv சரி

**தவறான ஒன்றினை கண்டுபிடிக்க**

1. பண்டமாற்று முறை

2. உற்பத்தியில் விளைவுகள் இல்லை

8th Social Science Lesson 25

**25] பொது மற்றும் தனியார் துறைகள்**

**உங்களுக்குத் தெரியுமா?**

கலப்புப் பொருளாதாரம் என்பது முதலாளித்துவம் மற்றும் பொதுவுடமையின் கலவையாகும்.

**பொதுத்துறை நிறுவனங்கள்:** இரண்டு வகையான பொதுத்துறை நிறுவனங்கள் உள்ளன. அதாவது அரசாங்கத்தின் வசூல் வரி, கடமைகள், கட்டணங்கள் போன்றவற்றால் அவர்கள் திரட்டும் வருவாயின் மூலம் அரசாங்கம் அவர்களுக்கு முழுமையாக நிதியளிக்கிறது. நிறுவனத்தின் மொத்த பங்கு மூலதனத்தில் 51%க்கும் அதிகமாக உள்ளது. இது பல்வேறு அமைச்சகங்களின் கீழ் செயல்பட்டு வருகிறது. நிறுவனங்கள் சேவை நோக்கத்துடன் நிறுவப்பட்டுள்ளன. இது மிகப்பெரிய துறையாகும், இது மக்களுக்கு பின்வரும் சேவைகளை வழங்குவதன் மூலம் மக்களின் மேம்பாட்டிற்காக செயல்படுகிறது. அஞ்சல் சேவைகள், இரயில்வே சேவைகள், பாதுகாப்பு கல்வி மற்றும் சுகாதார வசதிகளை குறைந்த செலவில் வழங்குதல், மற்றும் வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் போன்றவை.

**பொதுத் துறையின் உறுப்புகள்:**

**1. அரசுத் துறைகளால் நிர்வாகம் செய்யப்படும் நிறுவனங்கள்:** ஒரு அரசாங்க துறையின் நிர்வாகம் என்பது பெரும்பாலும் அனைத்து நாடுகளிலும் பொதுவானதாகும். **எடுத்துக்காட்டு:** தபால் மற்றும் தந்தி, இரயில்வே, துறைமுக அறக்கட்டளை, இந்தியாவிலுள்ள நீர்ப்பாசனத் திட்டங்கள் போன்றவை.

**2. கூட்டுத் துறை நிறுவனங்கள்:** இது ஒரு நிறுவன சட்டத்தால் நிர்வகிக்கப்படுகிறது மற்றும் அரசாங்கம் ஒரு பிரதான பங்குதாரராக இருந்து கட்டுப்படுத்தப்படுகிறது. **எடுத்துக்காட்டு:** இந்தியன் ஆயில் பெட்ரோனாஸ் தனியார் நிறுவனம், இந்தியன் ஆயில் ஸ்கை டேங்கில் நிறுவனம், ரத்னகிரி கேஸ் அண்ட் பவர் தனியார் நிறுவனம், இந்தியன் செயற்கை ரப்பர் நிறுவனம்.

**3. பொதுக்கழகம்:** பொதுக் கழக அமைப்பானது பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் சட்டத்தினால் பொதுக் கழகத்தினை நிறுவுவதே ஆகும். **எடுத்துக்காட்டு:** ஆயுள் காப்பீட்டு நிறுவனம் (LIC), ஏர் இந்தியா, இந்திய ரிசர்வ் வங்கி, மின்சார வாரியம்.

**நிதி ஆயோக்:** நிதி ஆயோக் என்பது 65 ஆண்டுகள் பழமையான திட்டக் குழுவுக்கு மாற்றாக அமைக்கப்பட்ட குழுவாகும். அமைச்சகங்களுக்கும், மாநிலங்களுக்கும் நிதி ஒதுக்க திட்டக் குழுவிற்கு அதிகாரம் உள்ளது. ஆனால் இந்த அதிகாரம் தற்போது நிதி அமைச்சகத்தின் கீழ் உள்ளது. நிதி ஆயோக் 2015 ஜனவரி 1ஆம் தேதியிலிருந்து நிதி ஆயோக் செயல்பட துவங்கியுள்ளது.

இந்திய இரயில்வேயானது அதிக அளவில் பணியாளர்களைக் கொண்ட பொதுத்துறை நிறுவனமாகும்.

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. இந்தியாவில் பொதுத்துறைகளின் தோற்றத்திற்குக் காரணமான இந்திய அரசின் தொழில் கொள்கையின் தீர்மானம் _____________ ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது.

(அ) 1957

(ஆ) 1958

(இ) 1966

(ஈ) 1956

2. கலப்புப் பொருளாதார நன்மைகளின் கலவை என்பது.

(அ) முதலாளித்துவம்

(ஆ) சமதர்மம்

(இ) அ மற்றும் ஆ சரி

(ஈ) அ மற்றும் ஆ தவறு

3. _____________ நிறுவனச் சட்டம் மற்றும் அரசாங்கத்தால் கட்டுப்படுத்தப்படும் முதன்மையான முக்கிய பங்குதாரர்.

(அ) தனியார் துறை

(ஆ) கூட்டு துறை

(இ) பொதுத்துறை

(ஈ) இவற்றில் எதுவுமில்லை

4. பொதுத்துறை ____________ உடையது.

(அ) இலாப நோக்கம்

(ஆ) சேவை நோக்கம்

(இ) ஊக வணிக நோக்கம்

(ஈ) இவற்றில் எதுவுமில்லை

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. ___________ மற்றும் ___________ ஆகியவை சமூகத்தின் அனைத்துப் பிரிவினரின் பொருளாதார நலனை மேம்படுத்துவதில் அந்தந்த பணிகளை மேற்கொள்வதில் அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

2. தனியார் துறை __________ நோக்கத்தில் செயல்படுகிறது.

3. ___________ என்பது ஒரு சமூகத்தின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியின் செயல்முறையாகும்.

4. தனியார் துறையின் முக்கிய செயல்பாடுகளைத் தோற்றுவிப்பது _____________ மற்றும் _____________ ஆகும்.

5. குடிமக்கள் மத்தியில் _____________ மற்றும் ஒத்துழைப்பை வலுப்படுத்த அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது.

**பொருத்துக:**

1. மதியுரையகக் குழு – முதன்மை துறை

2. வேளாண்மை – மொத்த உள்நாட்டு உற்பத்தி

3. தொழில்கள் – நிதி ஆயோக்

4. GDP – இரண்டாம் துறை

**தவறான இணையைக் கண்டறிக:**

1. சமூகப் பொருளாதார முன்னேற்றத்தை அளவிட பின்வருவனவற்றில் எந்த குறியீடு பயன்படுத்தப்படுவதில்லை.

(அ) கருப்புப் பணம்

(ஆ) ஆயுட்காலம்

(இ) மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP)

(ஈ) வேலைவாய்ப்பு

**சரியா அல்லது தவறா எனக் குறிப்பிடுக:**

1. i) அரசுக்கு மட்டுமே சொந்தமான தொழில்கள் அட்டவணை – A என குறிப்பிடப்படுகின்றன.

ii) தனியார் துறையானது மாநில துறையின் முயற்சிகளுக்குத் துணை புரியக் கூடிய தொழில்கள் புதிய அலகுகளைத் தொடங்குவதற்கான முழு பொறுப்பையும் அரசு ஏற்றுக்கொள்வது அட்டவணை – B என குறிப்பிடப்படுகின்றன.

iii) தனியார் துறையில் இருந்த மீதமுள்ள தொழில்கள் அட்டவணையில் குறிப்பிடப்படவில்லை.

(அ) அனைத்தும் சரி

(ஆ) i மற்றும் iii சரி

(இ) i மற்றும் ii சரி

(ஈ) இவற்றில் எதுவுமில்லை

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: (விடைகள்)**

1. (1956) 2. அ மற்றும் ஆ சரி 3. கூட்டு துறை 4. சேவை நோக்கம்

**கோடிட்ட இடங்களை நிரப்புக: (விடைகள்)**

1. பொதுத்துறை, தனியார்துறை 2. இலாப 3. சமூக பொருளாதார மேம்பாடு

4. புதுமை மற்றும் நவீனமானது 5. புரிதல்

**பொருத்துக: (விடைகள்)**

1. மதியுரையகக் குழு – நிதி ஆயோக்

2. வேளாண்மை – முதன்மை துறை

3. தொழில்கள் – இரண்டாம் துறை

4. பனி – மொத்த உள்நாட்டு உற்பத்தி

**தவறான இணையைக் கண்டறிக:**

1. கருப்புப் பணம்

**பின்வருவனவற்றுள் எது சரியான விடை:**

1. i மற்றும் ii சரி

9th Social Science Lesson 1

**1] மனிதப் பரிணாம வளர்ச்சியும் சமூகமும்: வரலாற்றுக்கு முந்தைய காலம்**

**உங்களுக்குத் தெரியுமா?**

சிம்பன்சி இனத்தின் மரபணுவை (டி. என். ஏ) எடுத்து ஆய்வு செய்ததில் அதன் பண்புகள் மனித இனத்துடன் 98% ஒத்து உள்ளதாம்!

சிம்பன்சி மற்றும் பிக்மி சிம்பன்சி (போனோபோ) வகை இனங்கள் நமக்கு நெருக்கமான, தற்போதும் உயிர்வாழும் உயிரினங்களாகும்.

கோதுமை, பார்லி, பட்டாணி ஆகியவை 10000 ஆண்டுகளுக்கும் முன்பே பயிரிடத் தொடங்கப்பட்டுவிட்டன. காய்–கனி மற்றும் கொட்டை தரும் மரங்கள் கி. மு. (பொ. ஆ. மு) 4000 ஆண்டுகளிலேயே விளைச்சலுக்காகப் பயிரிடப்பட்டுள்ளன. அத்தி, ஆலிவ், பேரீச்சை, மாதுளை, திராட்சை அவற்றில் அடங்கும்.

புதிய கற்கால மனிதர்கள்தான் முதலில் மட்பாண்டங்களைச் செய்திருக்க வேண்டும். மட்பாண்டங்களை அவர்கள் கையாலோ அல்லது மெதுவாகச் சுற்றும் சக்கரத்தைக் கொண்டோ வனைந்தார்கள். மட்பாண்டங்களைச் சுடுவதற்கு முன்னால் அவற்றைக் கூழாங்கற்கள் கொண்டு மெருகேற்றினார்கள். இதனைத் தேய்த்து மெருகிடுதல் (burnishing) என்பர்.

**லெமூரியாவும் தமிழர்களும்:** சில ஆய்வாளர்கள், மூழ்கிய லெமூரியா கண்டத்தில் தமிழர்கள் தோன்றியதாகக் கருதுகின்றனர். லெமூரியா கண்டம் குறித்த இந்தக் கருத்து 19ஆம் நூற்றாண்டில் முன் வைக்கப்பட்டது. புவித்தட்டு நகர்வியல் கோட்பாட்டில் (plate tectonics) ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களின் காரணமாக இப்போது இந்தக் கருத்து குறித்துப் பல்வேறு பார்வைகளை அறிஞர்கள் முன் வைக்கின்றனர். தமிழ் இலக்கியக் குறிப்புகள் கடல் கொண்டதைப் பற்றிக் கூறுகின்றன. இவை கன்னியாகுமரியைச் சுற்றியுள்ள சில பகுதிகள் கடலுக்கடியில் மூழ்கடிக்கப்பட்டதாகச் சொல்கின்றன. கி. மு. (பொ. ஆ. மு) 5000க்கு முன் இலங்கையின் சில பகுதிகளும் தமிழ்நாடும் நிலத்தால் இணைக்கப்பட்டிருந்தன. எனவே கடல் மட்ட உயர்வின் காரணமாகக் கன்னியாகுமரிக்கருகே சில நிலப்பகுதிகளும், இலங்கை இந்திய இணைப்பும் கடலுக்கடியில் சென்றிருக்கலாம். இப்பகுதியில் கூடுதல் ஆழ்கடல் ஆய்வுகள் தேவைப்படுகின்றன. தமிழகம் உள்ளிட்ட தென்னிந்தியப் பகுதிகளில் இடைக் கற்காலம் முதல் புதிய கற்காலம் வரை மனித இனம் குறிப்பிட்ட எண்ணிக்கையில் தொடர்ந்து வாழ்ந்திருப்பதற்கான சான்றுகளை அகழ்வாய்வுகள் வெளிப்படுத்துகின்றன.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. மனிதர்களுடன் மரபணுவியல் நோக்கில் மிகவும் நெருக்கமாக இருப்பது

(அ) கொரில்லா

(ஆ) சிம்பன்ஸி

(இ) உராங்உட்டான்

(ஈ) பெருங்குரங்கு

2. வேளாண்மை மற்றும் விலங்குகளைப் பழக்கப்படுத்துதல் தொடங்கிய கால கட்டம்

(அ) பழைய கற்காலம்

ஆ) இடைக்கற்காலம்

(இ) புதிய கற்காலம்

(ஈ) பெருங்கற்காலம்

3. பரிணாம வளர்ச்சி வரிசையில் நவீன மனிதனின் நேரடி முன்னோர் ----------ஆவர்.

(அ) ஹோமோ ஹேபிலிஸ்

(ஆ) ஹோமோ எரக்டஸ்

(இ) ஹோமோ சேபியன்ஸ்

(ஈ) நியாண்டர்தால் மனிதன்

4. எகிப்து, இஸ்ரேல்–பாலஸ்தீனம் மற்றும் ஈராக் ஆகியவை அடங்கிய பகுதி ------------ எனப்படுகிறது.

(அ) கிரேட் ரிஃப்ட் பள்ளத்தாக்கு

(ஆ) பிறைநிலப் பகுதி

(இ) ஸோலோ ஆறு

(ஈ) நியாண்டர் பள்ளத்தாக்கு

5. சர் இராபர்ட் புரூஸ் ஃபூட் என்ற இங்கிலாந்து நிலவியலாளர் சென்னைக்கு அருகில் உள்ள பல்லாவரத்தில் ---------------- கருவிகளை முதன் முறையாக கண்டுபிடித்தார்.

(அ) நுண்கற்காலம்

(ஆ) பழங்கற்காலம்

(இ) இடைக்கற்காலம்

(ஈ) புதிய கற்காலம்

6. i) எழுத்து தோன்றுவதற்கு முந்தைய காலம் வரலாற்றுக்கு முந்தையதாகும்.

ii) வரலாற்றுக்கு முந்தைய கால மக்கள் மொழியை வளர்த்தெடுத்தார்கள்; அழகான ஓவியங்களையும் கலைப்பொருட்களையும் உருவாக்கினார்கள்.

iii) வரலாற்றுக்கு முந்தைய காலச் சமூகங்கள் படிப்பறிவு பெற்றிருந்ததாகக் கருதப்படுகின்றன.

iv) வரலாற்றுக்கு முந்தைய காலகட்டம் பழங்காலம் என்று அழைக்கப்படுகிறது.

(அ) i சரி

(ஆ) i மற்றும் ii சரி

(இ) i மற்றும் iv சரி

(ஈ) ii மற்றும் iii சரி

7. i) செல்ட் எனப்பட்ட மெருகேற்றப்பட்ட கற்கோடரிகளைப் புதிய கற்கால மக்கள் பயன்படுத்தினார்கள்.

ii) புதிய கற்காலக் கிராமம் குறித்த சான்று சென்னை மாவட்டத்தில் உள்ள பையம்பள்ளியில் காணப்படுகிறது

iii) புதிய கற்காலத்தைத் தொடர்ந்து வந்த பண்பாட்டுக்காலம் பழங்கற் காலம் எனப்படுகிறது.

iv) விலங்குகளை வளர்த்தல், பயிர் செய்தல் ஆகியவை நடந்த காலகட்டம் இடைக்கற்காலம் எனப்படுகிறது.

(அ) i சரி

(ஆ) ii சரி

(இ) ii மற்றும் iii சரி

(ஈ) iv சரி

8. கூற்று: தமிழகத்தின் ஆறுகள், குளங்கள் அருகே இடைக்கற்கால வாழ்விடங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

காரணம்: நீர்ப்பாசன மேலாண்மை இடைக்கற்காலத்தில் வளர்ச்சியடைந்து இருந்தது.

(அ) கூற்றும் காரணமும் சரி; கூற்றைக் காரணம் சரியாக விளக்குகிறது.

(ஆ) கூற்றும் காரணமும் சரி; ஆனால் கூற்றைக் காரணம் சரியாக விளக்கவில்லை.

(இ) கூற்று சரி; காரணம் தவறு.

(ஈ) கூற்றும் காரணமும் தவறானவை.

**II. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. கை கோடரிகளும் வெட்டுக் கருவிகளும் ------------------ பண்பாட்டைச் சேர்ந்த முக்கியமான கருவி வகைகளாகும்.

2. கற்கருவிகளை உருவாக்குவதற்குத் தேவையான வழிமுறைகளும் நுட்பமும் ---------------- தொழில்நுட்பம் என அழைக்கப்படுகின்றன.

3. பழங்கற்காலத்திற்கும் புதிய கற்காலத்திற்கும் இடைப்பட்ட காலம் ------------- எனப்படும்.

**III. சரியான கூற்றைத் தேர்வு செய்க:**

1. அ) மனிதர்களின் தோற்றத்தை அறிவியல் நோக்கில் புரிந்து கொள்ள "தகுதியுள்ளது தப்பிப் பிழைக்கும்" என்ற கருத்து உதவுகிறது.

ஆ) "உயிர்களின் தோற்றம் குறித்து" என்ற நூலை ஹெர்பர்ட் ஸ்பென்சர் பதிப்பித்தார்.

இ) உயிரியல் பரிணாம வளர்ச்சி குறித்த டார்வின் கோட்பாடு இயற்கைத் தேர்வு என்ற வழிமுறையுடன் தொடர்பு உடையது.

ஈ) கல் தொழில்நுட்பம் குறித்து ஆராய்வது நிலவியல் ஆகும்.

2. அ) குரங்கினங்களில் உராங் உட்டான் மனித மரபுக்கு மிக நெருக்கமான குரங்கினமாகும்.

ஆ) மனிதர்களின் முன்னோர்களை ஹோமினின் என்கிறோம், அவர்களின் தோற்றம் குறித்த சான்றுகள் ஆப்பிரிக்காவில் காணப்படுகின்றன.

இ) செதிலை கருவிகள் செய்ய பயன்படுத்த முடியாது.

ஈ) சிறு செதில்கள் தயாரிக்கப் பயன்படும் மூலக்கல் அச்சூலியன் எனப்படும்.

**IV. பொருத்துக:**

1. பழங்கால மானுடவியல் – அ] தேரி

2. கோடரிக்கருவிகள் – ஆ] வீனஸ்

3. கல்லிலும் எலும்பிலும் காணப்பட்ட உருவங்கள் – இ] அச்சூலியன்

4. செம்மணல் மேடுகள் – ஈ] நுண்கற்காலம்

5. சிறு அளவிலான கல்லால் ஆன செய்பொருள்கள் –உ] மனித இன முன்னோர்கள் குறித்த ஆய்வு

**விடைகள்:**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. சிம்பன்ஸி, 2. புதிய கற்காலம், 3. ஹோமோ சேபியன்ஸ், 4. பிறைநிலப் பகுதி, 5. பழங்கற்காலம், 6. i மற்றும் iv சரி, 7. i சரி, 8. கூற்றும் காரணமும் தவறானவை

**II. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. கீழ் பழங்கற்காலம், 2. கற்கருவி, 3. இடைக்கற்காலம்

**III. சரியான கூற்றைத் தேர்வு செய்க:**

1. மனிதர்களின் தோற்றத்தை அறிவியல் நோக்கில் புரிந்து கொள்ள "தகுதியுள்ளது தப்பிப் பிழைக்கும்" என்ற கருத்து உதவுகிறது, 2. மனிதர்களின் முன்னோர்களை ஹோமினின் என்கிறோம், அவர்களின் தோற்றம் குறித்த சான்றுகள் ஆப்பிரிக்காவில் காணப்படுகின்றன.

**IV. பொருத்துக:**

1. உ, 2. இ, 3. ஆ, 4. அ, 5. ஈ

9th Social Science Lesson 2

**2] பண்டைய நாகரிகங்கள்**

**உங்களுக்குத் தெரியுமா?**

**எகிப்திய மம்மிகள்:** பதப்படுத்தப்பட்ட இறந்த உடல் மம்மி எனப்படும். இறந்தவர்களின் உடல்களை சோடியம் கார்பனேட், சோடியம் கார்பனேட் ஆகியவற்றின் கலவையான நாட்ரன் உப்பு என்ற ஒரு வகை உப்பை வைத்துப் பாதுகாக்கும் வழக்கம் எகிப்தியரிடையே இருந்தது. நாற்பது நாட்களுக்குப் பிறகு, உப்பு உடலின் ஈரப்பதம் அனைத்தையும் உறிஞ்சிய பிறகு, உடலை மரத்தூளால் நிரப்பி, லினன் துண்டுகளால் சுற்றி, துணியால் மூடி வைத்துவிடுவார்கள். உடலை சார்க்கோபேகஸ் எனப்படும் கல்லாலான சவப்பெட்டியில் பாதுகாப்பார்கள்.

பேப்பர் என்ற சொல் "பாப்பிரஸ்" (Papyrus) என்ற தாவரத்தின் பெயரிலிருந்து வந்தது. எகிப்தியர்கள் காகித நாணல் (பாப்பிரஸ்) என்ற தாவர தண்டிலிருந்து தாள்களைத் தயாரித்தனர். இத்தாவரம் நைல் பள்ளத்தாக்கில் அதிகமாக வளர்ந்தது.

அக்காட் நகரம் தான் பின்னர் பாபிலோன் என்று அழைக்கப்பட்டது. இது மேற்கு ஆசியாவின் வணிக, பண்பாட்டு மையமாக திகழ்ந்தது.

அஸிரியப் பேரரசு உலகின் முதல் இராணுவ அரசு எனக் கருதப்படுகின்றது. அவர்கள் ஒரு வலிமையான இராணுவ சக்தியாக உருவாவதற்கான காரணம், இரும்புத் தொழில் நுட்பத்தை நன்கு பயன்படுத்தியமைதான்.

**எழுத்து மற்றும் எழுத்து முறை உருவாக்கம்:** எழுத்து உருவாக்கப்பட்டது மனித குல வரலாற்றில் ஒரு முக்கியமான மைல் கல்லாகும். கி. மு. (பொ. ஆ. மு) 4000 ஆண்டின் பிற்பகுதியில். சுமேரியாவில் எழுத்து முறை உருவானது. ஹைரோகிளிபிக் எனப்படும் சித்திர எழுத்து முறை என்ற எகிப்திய எழுத்து முறை கி. பி. (பொ. ஆ. மு) மூன்றாம் ஆயிரமாண்டின் துவக்கதில் உருவானது. இதே காலகட்டத்தில் ஹரப்பா மக்களும் ஒரு வித எழுத்து முறையை பின்பற்றினார்கள். எனினும் சிந்துவெளி எழுத்துகள் இன்னமும் வாசித்துப் புரிந்துகொள்ளப் படவில்லை. சீன நாகரிகமும் ஆரம்ப காலத்திலிருந்தே தனக்கென்று ஒரு எழுத்து முறையை உருவாக்கியது.

ஹரப்பா தான் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட இடம் என்பதால், சிந்துவெளி நாகரிகம் ஹரப்பா நாகரிகம் என்றும் அழைக்கப்படுகிறது. இந்த நாகரிகம் சிந்து நதிக்கு அப்பாலும் பரவியுள்ளதால் சிந்து சமவெளி நாகரிகம் என்று முன்னர் அழைக்கப்பட்டதற்கு மாறாக ஹரப்பா நாகரிகம் என்று அழைக்கப்படுகிறது.

**சிந்துவெளி எழுத்துகள் – ஆய்வு:** ஹரப்பா மக்கள் எழுதும் கலையை அறிந்திருந்தனர். இந்த எழுத்துகள் இலச்சினைகள், சுடுமண் முத்திரைகள், மட்பாண்டங்கள் ஆகியவற்றில் காணப்படுகின்றன. பொறிப்புகள் மிகவும் குறுகியவை. தொடர்கள் சராசரியாக ஐந்துக்கும் குறைவான குறியீடுகளையே கொண்டுள்ளன. ரோசட்டா கல்லில் காணப்பட்டது போல மும்மொழிகள் பயன்படுத்தப்படவில்லை. எழுத்துகள் வலப்பக்கதிலிருந்து இடப்பக்கமாக எழுதப்பட்டுள்ளன. கணினி மூலம் பகுப்பாய்வு செய்த இஷ்ய அறிஞர் யூரி நோரோசோவ் சிந்துவெளி எழுத்துகள் திராவிட மொழிக் குடும்பம் போன்ற வார்த்தை வரிசையைப் பெற்றுள்ளன என்கிறார். சிந்துவெளி நாகரிகம் குறித்து விரிவான ஆய்வு செய்துள்ள அறிஞரான ஐராவதம் மகாதேவன் "ஹரப்பா மொழியின் மூல வேர்கள் தென்னிந்திய திராவிட மொழிகளை ஒத்திருப்பதை நாம் காணலாம்" என்கிறார். மயிலாடுதுறையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள கற்கோடரியில் உள்ள குறியீடுகள் சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்டவையில் உள்ள குறியீடுகளை ஒத்திருக்கின்றன என்று கூறுகிறார் ஐராவதம் மகாதேவன். மே 2007ஆம் ஆண்டு தமிழ்நாடு தொல்லியல் துறையால் பூம்புகாருக்கு அருகில் மேலபெரும்பள்ளம் என்னும் இடத்தில் கண்டெடுக்கப்பட்ட பானைகளில் உள்ள அம்பு போன்ற குறியீடுகள் மொகஞ்சதாரோவில் கண்டெடுக்கப்பட்ட இலச்சினைகளைப் போன்று உள்ளன.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. சொற்களைப் படங்கள் மூலம் உணர்த்தும் குறியீட்டு முறையை ------------- என்கிறோம்.

(அ) அழகெழுத்து

(ஆ) சித்திர எழுத்து

(இ) கருத்து எழுத்து

(ஈ) மண்ணடுக்காய்வு

2. எகிப்தியர்கள் இறந்த உடல்களைப் பதப்படுத்தி பாதுகாத்த முறை ------------

(அ) சர்கோபகஸ்

(ஆ) ஹைக்சோஸ்

(இ) மம்மியாக்கம்

(ஈ) பல கடவுளர்களை வணங்குதல்

3. சுமேரியரின் எழுத்து முறை ---------- ஆகும்.

(அ) பிக்டோகிராபி

(ஆ) ஹைரோகிளிபிக்

(இ) சோனோகிராம்

(ஈ) க்யூனிபார்ம்

4. ஹரப்பா மக்கள் ------------ பற்றி அறிந்திருக்கவில்லை.

(அ) தங்கம் மற்றும் யானை

(ஆ) குதிரை மற்றும் இரும்பு

(இ) ஆடு மற்றும் வெள்ளி

(ஈ) எருது மற்றும் பிளாட்டினம்

5. சிந்துவெளி மக்கள் "இழந்த மெழுகு செயல்முறை" முறையை அறிந்திருந்தார்கள் என்பதைத் தெரிவிக்கும் வெண்கலச்சிலை ---------------- ஆகும்.

(அ) ஜாடி

(ஆ) மதகுரு அல்லது அரசன்

(இ) பறவை

(ஈ) நடனமாடும் பெண்

6. i) மெசபடோமியாவின் மிகப் பழமையான நாகரிகம் அக்காடியர்களுடைய நாகரிகம் ஆகும்.

ii) சீனர்கள் ஹைரோகிளிபிக் முறையை வளர்த்தெடுத்தார்கள்.

iii) யூப்ரடிஸ், டைகிரிஸ் ஆகிய ஆறுகள் மன்னார் வளைகுடாவில் கலக்கின்றன.

iv) பாபிலோனிய அரசரான ஹமுராபி பெரும் சட்ட வல்லுனர் ஆவார்.

(அ) i சரி

(ஆ) i மற்றும் ii சரி

(இ) iii சரி

(ஈ) iv சரி

7. i) யாங்ட்சி ஆறு சீனாவின் துயரம் என்று அழைக்கப்படுகிறது.

ii) வு–டி சீனப்பெருஞ்சுவரைக் கட்டினார்.

iii) சீனர்கள் வெடிமருந்தைக் கண்டுபிடித்தனர்

iv) தாவோயிசத்தை நிறுவியவர் மென்சியஸ் என்று சீன மரபு கூறுகிறது.

(அ) i சரி

(ஆ) ii சரி

(இ) iii சரி

(ஈ) iii மற்றும் iv சரி

8. பின்வருவனவற்றுள் மெசபடோமியாவைச் சேர்ந்த நான்கு நாகரிகங்களின் சரியான கால வரிசை எது?

(அ) சுமேரியர்கள்–அஸிரியர்கள்–அக்காடியர்கள்–பாபிலோனியர்கள்

(ஆ) பாபிலோனியர்கள்–சுமேரியர்கள்–அஸிரியர்கள்–அக்காடியர்கள்

(இ) சுமேரியர்கள்–அக்காடியர்கள்–பாபலிலோனியர்கள்–அஸிரியர்கள்

(ஈ) பாபிலோனியர்கள்–அஸிரியர்கள்–அக்காடியர்கள்–சுமேரியர்கள்

9. கூற்று: மெசபடோமிய நாகரிகத்தின் அஸிரியர்கள் சிந்துவெளி நாகரிகத்தின் சமகாலத்தவர் ஆவர்.

காரணம்: அஸிரிய ஆட்சியாளரின் ஆவணம் ஒன்று மெலுஹாவிலிருந்து வந்த கப்பல்கள் பற்றி கூறுகின்றது.

(அ) கூற்றும் காரணமும் சரி; கூற்றைக் காரணம் சரியாக விளக்குகிறது.

(ஆ) கூற்றும் காரணமும் சரி; ஆனால் கூற்றைக் காரணம் சரியாக விளக்கவில்லை.

(இ) கூற்று சரி; காரணம் தவறு.

(ஈ) கூற்றும் காரணமும் தவறானவை.

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. ------------------ என்பது மனிதத் தலையும் சிங்க உடலும் கொண்ட, கல்லால் ஆன மிகப் பெரிய உருவம் ஆகும்.

2. எகிப்தியர்கள் தொடக்க காலத்தில் பயன்படுத்திய உருவ எழுத்துகள் சார்ந்த முறை ---------------- ஆகும்.

3. ---------------- என்பது பல்வேறு குற்றங்களுக்கான சட்டங்களை விளக்கிக்கூறும் பண்டைய பாபிலோனியாவின் ஒரு முக்கியமான ஆவணம் ஆகும்.

4. சௌ அரசின் தலைமை ஆவணக்காப்பாளர் ------------------ ஆவார்.

5. ஹரப்பா நாகரிகம் நிலவிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட பானைகளின் மீதுள்ள ---------------- உருவங்களும் ஓவியங்களும் அவர்களின் கலைத்திறனை உணர்த்துகின்றன.

winmeen.com

**III. பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. அ) ஹரப்பாவில் உள்ள பெருங்குளம் அருகில் சில அறைகள் நன்கு கட்டப்பட்டிருந்தது.

ஆ) க்யூனிபார்ம் குறிப்புகள் கில்காமெஷ் காவியத்துடன் தொடர்புடையவை.

இ) சுடுமண்ணால் செய்யப்பட்ட உருவங்களும், செம்பில் செய்யப்பட்ட நடனமாடும் பெண் உருவமும் எகிப்தியர்களின் கலைத்திறனை உணர்த்துகின்றன.

ஈ) மெசபடோமியர்கள் சூரிய நாள்காட்டி முறையை வகுத்தார்கள்.

2. அ) அமோன் ஓர் எகிப்திய கடவுள்.

ஆ) அரண்களால் சூழ்ந்த ஹரப்பா நகரத்தில் கோயில்கள் இருந்தன.

இ) பெரிய ஸ்பிங்ஸ் என்பது பழங்கால மெசபடோமியாவில் உள்ள பிரமிடு வடிவ நினைவுச்சின்னமாகும்.

ஈ) பானை வனைவதற்கான சக்கரத்தைக் கண்டுபிடித்த பெருமை எகிப்தியர்களைச் சாரும்.

**IV. பொருத்துக:**

1. பாரோ – அ] ஒரு வகைப்புல்

2. பாப்பிரஸ் – ஆ] பூமியின் மிகப் பழமையான எழுத்துக் காவியம்

3. பெரும் சட்ட வல்லுனர் – இ] மொகஞ்சதாரோ

4. கில்காமெஷ் – ஈ] ஹமுராபி

5. பெருங்குளம் – உ] எகிப்திய அரசர்

**விடைகள்:**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. சித்திர எழுத்து, 2. மம்மியாக்கம், 3. க்யூனிபார்ம், 4. குதிரை மற்றும் இரும்பு, 5. நடனமாடும் பெண், 6. iv சரி, 7. ii சரி, 8. சுமேரியர்கள்–அக்காடியர்கள்–பாபலிலோனியர்கள்–அஸிரியர்கள், 9. கூற்றும் காரணமும் சரி; ஆனால் கூற்றைக் காரணம் சரியாக விளக்கவில்லை

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. ஸ்பிங்க்ஸின், 2. சித்திர எழுத்து(ஹைரோகிளிபிக்), 3. ஹமுராபியின் சட்டத்தொகுப்பு, 4. லாவோட்சு, 5. சுடுமண்

**III. பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. க்யூனிபார்ம் குறிப்புகள் கில்காமெஷ் காவியத்துடன் தொடர்புடையவை, 2. அமோன் ஓர் எகிப்திய கடவுள்.

**IV. பொருத்துக:**

1. உ, 2. அ, 3. ஈ, 4. ஆ, 5. இ

9th Social Science Lesson 3

3] தொடக்ககாலத் தமிழ்ச் சமூகமும் பண்பாடும்

**உங்களுக்குத் தெரியுமா?**

**புலிமான் கோம்பை நடுகற்கள்:** தேனி மாவட்டத்தின் வைகை ஆற்றுப் பள்ளத்தாக்கில் உள்ள ஊர் புலிமான் கோம்பை (புள்ளிமான் கோம்பை) ஆகும். 2006ஆம் ஆண்டில் இந்த ஊரிலிருந்து தமிழ் பிராமி கல்வெட்டுகளுடன் கூடிய அரிய நடுகற்கள் கண்டெடுக்கப்பட்டன. புலிமான் கோம்பையில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுகளில் ஒன்றில் கீழ்க்கண்ட செய்தி காணப்படுகிறது. "கூடல் ஊர் ஆகோள் பெடு தீயன் அந்தவன் கல்". இதன் **பொருள்:** "கூடலூரில் ஆநிரை கவர்ந்த போது நடந்த பூசலில் கொல்லப்பட்ட தீயன் அந்தவனின் கல்".

**நகர்மையம்:** திட்டமிட்ட வடிவமைப்பும், செங்கல் கட்டுமானங்களும் கொண்ட மக்கள் வசிப்பிடமே நகரம் ஆகும். வேளாண்மை, கால்நடை வளர்ப்பு அல்லாத ஏனைய தொழில்களில் ஈடுபடுகின்ற மக்கள் அவ்விடங்களில் பெருமளவில் வாழ்வார்கள். நகரங்களில் பற்பல உற்பத்திப் பணிகள் நடைபெறும்.

**கொடுமணல்:** கொடுமணல், தமிழ்நாட்டில் ஈரோடுக்கு அருகில் உள்ளது. சங்க இலக்கியமான பதிற்றுப்பத்தில் குறிப்பிடப்படும் கொடுமணல் தான் இவ்வூர் எனக்கருதப்படுகிறது. பெருங்கற்கால முதுமக்கள் தாழிகளும் இரும்பு, மணிக்கற்கள், சங்கு வேலைப்பாடுகள் குறித்த சான்றுகளும் இங்கே கிடைத்துள்ளன. தமிழ் பிராமி எழுத்துகள் கொண்ட 300க்கும் மேற்பட்ட மட்கலப் பொறிப்புகள் இந்த ஊரில் கிடைத்துள்ளன.

**மதுரைக்கு அருகே உள்ள கீழடி:** மதுரையிலிருந்து இராமேஸ்வரம் செல்லும் நெடுஞ்சாலையில் சிலைமான் என்ற ஊருக்கு அருகில் கீழடி உள்ளது. இங்கே பள்ளிச் சந்தைத்திடல் என்று அழைக்கப்படும் பரந்த தென்னந்தோப்பில் இந்தியத் தொல்லியல் ஆய்வுத் துறையினர் மற்றும் தமிழ்நாடு தொல்லியல் ஆய்வுத்துறையினர் மேற்கொண்ட அகழாய்வுகளின் மூலம் சங்க காலத்து நகரம் புதையுண்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. செங்கற் கட்டுமானங்கள், கழிவுநீர் வழிகள், தமிழ் பிராமி எழுத்துகள் கொண்ட மட்கல ஓடுகள், செம்மணிக்கற்களாலான அணிகள், முத்து, இரும்பு பொருள்கள், விளையாட்டுப்பொருள்கள், கண்ணுக்கு மை தீட்டும் செப்புக் கம்பி போன்றவை கண்டறியப்பட்டுள்ளன. இன்னும் அகழாய்வுகளை மேற்கொண்டால், கைத்தொழில் முறைகள் மற்றும் பண்பாட்டு நடவடிக்கைகள் குறித்தும் பல தகவல்கள் வெளிவரும்.

**பட்டணம், கேரளா:** கேரளத்தின் எர்ணாகுளம் மாவட்டத்தில் உள்ள வடக்குப் பரவூர் என்ற ஊரை ஒட்டிய வடக்கேகரா என்ற சிற்றூரின் அருகே பட்டணம் அமைந்துள்ளது. மேலை நாடுகளோடும் கீழை நாடுகளோடும் வணிகத் தொடர்பு கொண்டிருந்த பழங்காலத் துறைமுகம் தான் பட்டணம்.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. சங்க காலத்தில் பயன்படுத்தப்பட்ட எழுத்து முறை யாது?

(அ) ஆங்கிலம்

(ஆ) தேவநாகரி

(இ) தமிழ்–பிராமி

(ஈ) கிரந்தம்

2. தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்குச் சென்ற வியாபாரிகளையும் குதிரை வணிகர்களையும் பற்றிக் குறிப்பிடுகின்ற, இலங்கையின் பாலி மொழி வரலாற்று நூல் எது?

(அ) தீபவம்சம்

(ஆ) அர்த்தசாஸ்திரம்

(இ) மகாவம்சம்

(ஈ) இண்டிகா

3. காடாக இருந்த இடங்களை வேளாண் நிலங்களாக மாற்றுதல், நீர்ப்பாசன வசதிகளை மேம்படுத்துதல் ஆகிய பெருமைகளுக்கு உரிய சோழ அரசன் யார்?

(அ) கரிகாலன்

(ஆ) முதலாம் இராஜராஜன்

(இ) குலோத்துங்கன்

(ஈ) முதலாம் இராஜேந்திரன்

4. சேரர்களை பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டு எது?

(அ) புகளூர்

(ஆ) கிர்நார்

(இ) புலிமான் கோம்பை

(ஈ) மதுரை

5. (i) பொருள் பரிமாற்றத்துக்கான ஊடகமாக நாணயங்கள் இடைக்கற்காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டன

(ii) மௌரியர் காலத்தில் வட இந்தியாவில் இருந்த சாதாரண மக்கள் பிராகிருத மொழி பேசினார்கள்.

(iii) ரோமானிய ஆவணமான வியன்னா பாப்பிரஸ், முசிறி உடனான வணிகத்தைக் குறிப்பிடுகிறது.

(iv) தமிழ் இலக்கண நூலான பத்துப்பாட்டில் திணைக் குறித்த கருத்து இடம் பெற்றுள்ளது.

(அ) i சரி

(ஆ) ii சரி

(இ) ii மற்றும் iii சரி

(ஈ) iii மற்றும் iv சரி

6. (i) பதிற்றுப்பத்து பாண்டிய அரசர்களையும் அவர்களின் ஆட்சிப் பகுதிகளையும் குறித்துச் சொல்கிறது.

(ii) காவிரிப்பூம்பட்டினத்தில் நடந்த வணிக நடவடிக்கைகளை அகநானூறு விவரிக்கிறது.

(iii) சோழர்களின் சின்னம் புலி ஆகும்; அவர்கள் புலி உருவம் பொறித்த, சதுர வடிவிலான செம்பு நாணயங்களை வெளியிட்டார்கள்.

winmeen.com

(iv) நெய்தல் என்பது மணற்பாங்கான பாலைவனப் பகுதி ஆகும்.

(அ) i சரி

(ஆ) ii மற்றும் iii சரி

(இ) iii சரி

(ஈ) iv சரி

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. கற்கள், செப்பேடுகள், நாணயங்கள், மோதிரங்கள் ஆகியவற்றின் மீது பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் ––––––––––––––– ஆகும்.

2. கடந்த காலச் சமூகங்கள் குறித்து அறிந்து கொள்வதற்கான சான்றுகளாக உள்ள சில பொருட்களை மீட்டெடுப்பதற்கு ஓரிடத்தை முறைப்படி தோண்டுதல் ––––––––––––––––– ஆகும்.

3. மௌரியர் காலத்தில் ஆட்சிக்கலை மற்றும் பொருளாதாரம் குறித்து கௌடில்யர் எழுதிய நூல் ––––––––––––– ஆகும்.

4. ––––––––––––––– என்பது பிரிவு அல்லது வகை என்ற பொருளில் செய்யுள்களில் பயன்படுத்தப்பட்ட கருப்பொருள்; மேலும், இது ஒரு வாழ்விடத்தை அதன் தனித்தன்மை வாய்ந்த இயற்கைக்கூறுகளுடன் குறிப்பதாகவும் உள்ளது.

5. கிரேக்கர்கள், ரோமானியர்கள், மேற்கு ஆசியர்கள் ஆகியோரை உள்ளடக்கிய மேற்கத்தியர்களை ––––––––––––––– என்னும் சொல் குறிக்கிறது.

**III. பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. அ) இரும்பை உருக்கியதற்கான சான்றுகள் கொடுமணல், குட்டூர் ஆகிய இடங்களில் காணப்படுகின்றன.

ஆ) எரித்ரியன் கடலின் பெரிப்ளூஸ் இந்தியா உடனான மிளகு வணிகம் குறித்துக் கூறுகிறது.

இ) இந்தியாவில் தொடக்க காலத்தில் பயன்படுத்தப்பட்ட நாணயங்களில் உருவங்கள் பொறிக்கப்பட்டிருந்தன; நாணயங்கள் பெரும்பாலும் தங்கத்தால் செய்யப்பட்டிருந்தன.

ஈ) சங்க காலம் வெண்கலக் காலத்தில் வேரூன்றத் தொடங்கியது.

2. அ) சேரர்கள் காவிரிப்பகுதியை ஆட்சி செய்தனர். அவர்களின் தலைநகர் உறையூர் ஆகும்.

ஆ) மாங்குளம் தமிழ்–பிராமி கல்வெட்டுக் குறிப்புகள் அரசன் கரிகாலனைக் குறிப்பிடுகின்றன.

இ) தமிழ்–பிராமி கல்வெட்டுக் குறிப்புகளில் காணப்படும் வணிகன், நிகமா ஆகிய சொற்கள் வணிகர்களில் வெவ்வேறு வகையினரைக் குறிப்பிடுவதாகும்.

ஈ) உப்பு விற்றவர்கள் வணிகர்கள் என்று அழைக்கப்பட்டனர்; அவர்கள் வணிகத்துக்காக மாட்டு வண்டியில் தங்கள் குடும்பத்தினருடன் பயணம் செய்தார்கள்.

**IV. பொருத்துக:**

1. கல்வெட்டியல் – அ] முக்கியமான வரலாற்று நிகழ்வுகளின் தொகுப்பு

2. காலவரிசைக் குறிப்புகள் – ஆ] சங்க காலத் துறைமுகம்

3. மேய்ச்சல் வாழ்க்கை – இ] விலையுயர்ந்த கல்லில் செய்யப்பட்ட ஆபரணம்

4. புடைப்பு மணிகள் (cameo) – ஈ] கல்வெட்டுக் குறிப்புகளை ஆராய்வது

5. அரிக்கமேடு –உ] கால்நடைகளை வளர்த்துப் பிழைக்கும் நாடோடி மக்கள்

**விடைகள்:**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. தமிழ்–பிராமி, 2. மகாவம்சம், 3. கரிகாலன், 4. புகளூர், 5. i மற்றும் ii சரி, 6. iii சரி

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. கல்வெட்டியல், 2. தொல்லியல், 3. அர்த்தசாஸ்திரம், 4. திணை, 5. யவனர்

**III. பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. இரும்பை உருக்கியதற்கான சான்றுகள் கொடுமணல், குட்டூர் ஆகிய இடங்களில் காணப்படுகின்றன, 2. தமிழ்–பிராமி கல்வெட்டுக் குறிப்புகளில் காணப்படும் வணிகன், நிகமா ஆகிய சொற்கள் வணிகர்களில் வெவ்வேறு வகையினரைக் குறிப்பிடுவதாகும்.

**IV. பொருத்துக:**

1. ஈ, 2. அ, 3. உ, 4. இ, 5. ஆ

9th Social Science Lesson 4

**4] அறிவு மலர்ச்சியும், சமூக–அரசியல் மாற்றங்களும்**

**உங்களுக்குத் தெரியுமா?**

கர்நாடகாவில் உள்ள சிரவண–பெலகொலாவில் உள்ள பாகுபலியின் சிலைதான் (இவர் கோமதீஸ்வரர் என்றும் அழைக்கப்படுகிறார்) இந்தியாவில் செதுக்கப்பட்ட மிக உயரமான (57 அடி) சமணச் சிலை இதுவே ஆகும்.

**சமணக் காஞ்சி:** கி. பி. (பொ. ஆ) ஏழாம் நூற்றாண்டில் தமிழகத்தில் இருந்த முக்கியமான சமயங்களில் சமணமும் ஒன்று. பல்லவ மன்னரான மகேந்திர வர்மன் சமண சமயத்தைச் சார்ந்தவர். அப்பர் என்று அழைக்கப்பட்ட திருநாவுக்கரசரின் தாக்கத்தால் அவர் சைவ சமயத்துக்கு மாறினார். தற்போதைய காஞ்சி நகரத்துக்கு அருகில் சமணக் காஞ்சி அமைந்திருக்கிறது. அங்கே சமணக் கோயில்களை நீங்கள் காணலாம். அவற்றுள் முக்கியமானது திருப்பருத்திக்குன்றம் சமணக் கோயிலாகும். இக்கோயிலின் கூரையில் மகாவீரரின் வாழ்க்கைக் கதை ஓவியமாக வரையப்பட்டுள்ளது.

புத்தரின் நெருக்கமான சீடராக இருந்தவர் ஆனந்தன். அவர் ஒருமுறை புத்தரிடம், "பெண்கள் துறவியாக முடியுமா?" எனக் கேட்டார். அதற்குப் புத்தர், "பெண்கள் உலக இன்பங்களையும் ஆடம்பரங்களையும் துறந்தால், அவர்களும் ஆண்களைப் போல துறவியாக முடியும்; மெய்யறிவையும் அடைய முடியும்" என்றார்.

வட இந்தியா, வடக்கே காபூல் பள்ளத்தாக்கிலிருந்து தெற்கே கோதாவரி வரை பரவியிருந்தது. இங்கு காசி, கோசலம், அங்கம், மகதம், வஜ்ஜி, மல்லா, சேதி, வட்சா, குரு, பாஞ்சாலம், மத்சயம், சூரசேனம், ஆசாகம், அவந்தி, காந்தாரம், காம்போஜம் என்று பதினாறு மஹாஜனபதங்கள் தோன்றின.

ஈரானில் அசிரியப் பேரரசும் இந்தியாவில் மகதப் பேரரசும் உருவாக இரும்புக் கலப்பை சார்ந்த விவசாயம் வழிவகுத்தது.

மொத்தம் உள்ள 33 கல்வெட்டுகளில் 14 முக்கியமான பாறைக் கல்வெட்டுகள், 7 தூண் பிரகடனங்கள், 2 கலிங்கக் கல்வெட்டுகள். இவை போக, சிறு பாறைக் கல்வெட்டுகளும், தூண் பிரகடனங்களும் உண்டு. மௌரியப் பேரரசு பற்றி, குறிப்பாக அசோகரின் தம்ம ஆட்சியைப் பற்றி அறிய இவை மிகவும் நம்பகமான ஆதாரங்களாகத் திகழ்கின்றன.

நான்கு சிங்கங்களைக் கொண்ட நமது தேசியச் சின்னம் சாரநாத்தில் உள்ள அசோகர் தூணை பிரதிபலிக்கும் விதமாகவே தேர்வு செய்யப்பட்டுள்ளது.

சந்திரகுப்தரின் அமைச்சரான சாணக்கியர் அர்த்த சாஸ்திரம் என்ற நூலை எழுதினார். இது மௌரிய ஆட்சி நிர்வாகம் பற்றி விரிவாக எடுத்துரைக்கிறது.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. ஒரு தத்துவப் பிரிவை நிறுவிய --------------- எளிமைக்கும் தன்னல மறுப்பிற்கும் உதாரணமாக விளங்கினார்.

(அ) புத்தர்

(ஆ) லாவோட்சே

(இ) கன்ஃபூசியஸ்

(ஈ) ஜொராஸ்டர்

2. மகாவீரரின் போதனைகளால் ஈர்க்கப்பட்ட மகத அரசர் ---------------

(அ) தனநந்தர்

(ஆ) சந்திர குப்தர்

(இ) பிம்பிசாரர்

(ஈ) சிசுநாகர்

3. வடக்கில் காபூல் பள்ளத்தாக்கிலிருந்து தெற்கில் கோதாவரி வரை பரவியிருந்த வட இந்தியாவின் ---------- எனப்பட்ட பதினாறு மாநிலங்களின் அரசுகளின் எழுச்சி ஏற்பட்டது.

(அ) மஹாஜனபதங்கள்

(ஆ) கனசங்கங்கள்

(இ) திராவிடம்

(ஈ) தட்சிணபதா

4. மும்மணிகள் (திரி ரத்னா) என்ற மூன்று கொள்கைகளை போதித்தவர் ----------

(அ) புத்தர்

(ஆ) மகாவீரர்

(இ) லாவோட்சே

(ஈ) கன்ஃபூசியஸ்

5. மௌரிய ஆட்சி அமைப்பு மற்றும் சமூகம் குறித்த செய்திகளைத் தன் குறிப்புகளால் அளித்தவர்.

(அ) மார்க்கோ போலோ

(ஆ) ஃபாஹியான்

(இ) மெகஸ்தனிஸ்

(ஈ) செல்யூகஸ்

6. (i) மகத அரசர்களின் கீழ் இருந்து மகாமாத்ரேயர்கள் அமைச்சர்களுக்குச் செயலாளர்களாகச் செயல்பட்டார்கள்.

(ii) மெகஸ்தனிஸ் எழுதிய "இண்டிகா" என்னும் வரலாற்றுக் குறிப்பு மௌரிய ஆட்சி அமைப்பு மற்றும் சமூகம் குறித்த ஆவணமாக விளங்குகிறது.

(iii) ஒரு பேரரசைக் கட்டமைக்க நந்தர் செய்த முயற்சியை, மௌரிய அரசை உருவாக்கிய அசோகர் தடுத்து நிறுத்தினார்.

(iv) மரபுகளின்படி, சந்திரகுப்தர் அவரது வாழ்வின் இறுதியில் புத்த சமயத்தின் தீவிரமான ஆதரவாளராக இருந்தார்.

(அ) i சரி

(ஆ) ii சரி

(இ) i மற்றும் ii சரி

(ஈ) iii மற்றும் iv சரி

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. வெவ்வேறு காலகட்டங்களைச் சேர்ந்த, பிரார்த்தனைகளும் மரபுவழிக் கதைகளும் அடங்கிய புனித இலக்கியத் தொகுப்பு ------------ ஆகும்.

2. கங்கைச் சமவெளியில் ----------------- வேளாண்மைக்கு மாடுகளின் தேவை அவசியமானது.

3. ---------------- தீர்த்தங்கரர்களின் நீண்ட மரபில் வந்தவர் என்றும் 24வது மற்றும் கடைசி தீர்த்தங்கரர் என்றும் சமணர்கள் நம்புகிறார்கள்.

4. புத்தருக்கு ஞானோதயம் ஏற்பட்ட இடத்தில் கட்டப்பட்டுள்ள மஹாபோதி கோயில் இன்றும் ------------இல் உள்ளது.

5. மௌரியப் பேரரசைப் பற்றியும் குறிப்பாக அசோகரின் தர்மம் சார்ந்த ஆட்சியைப் பற்றியும் அறிந்து கொள்ள ------------------ பாறைக் குறிப்புகள் பெரிதும் உதவுகின்றன.

**III. பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. அ) வெண்கலக் கருவிகளின் வரவால் கங்கை ஆற்றங்கரையில் இருந்த அடர்த்தியான காடுகளை அகற்றுவது எளிதானது.

ஆ) அசிவிகம் மேற்கு இந்தியாவில் சிறு அளவில் பரவியிருந்தது.

இ) குறிப்பிட்ட இனக்குழுக்கள் ஆதிக்கம் செலுத்திய நிலத்தொகுதிகள் மௌரியர்களும் முற்பட்ட அரசுகள் எனப்பட்டன.

ஈ) இலக்கியங்களில் குறிப்பிடப்படும் அரசுகளில் காசி, கோசலம், மகதம் ஆகியவை வலிமை படைத்தவையாக இருந்தன.

2. அ) மகதத்தின் முதல் முக்கியமான அரசன் அஜாதசத்ரு.

ஆ) நிர்வாகத்துக்கான ஒரு விரிவான கட்டமைப்பை உருவாக்குவதில் பிம்பிசாரர் வெற்றிகரமாகச் செயல்பட்டார்.

இ) வட இந்தியாவில் ஆட்சி செய்த சத்ரியர் அல்லாத அரச வம்சங்களில் முதலாமவர்கள் மௌரியர்களாகும்.

ஈ) ஒரு பேரரசுக்கான கட்டமைப்பை உருவாக்க நந்தர் மேற்கொண்ட முயற்சியை அசோகர் தடுத்து நிறுத்தினார்.

**IV. பொருத்துக:**

1. எண் வழிப்பாதை – அ] மிக உயரமான சமணச்சிலை

2. பாகுபலி – ஆ] அரசியல் அறநெறிகளின் சட்டத்தொகுப்பு

3. வசந்த மற்றும் இலையுதிர் கால வரலாற்றுப் பதிவேடு – இ] சட்டங்களும்புராணக்கதைகளும் அடங்கிய புனிதஇலக்கியம்

4. ஜெண்ட் அவெஸ்தா – ஈ] முதல் தீர்த்தங்கரர்

5. ரிஷபா – உ] தூய மனநிலையை அடைவதற்கான பாதை

**விடைகள்:**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. புத்தர், 2. பிம்பிசாரர், 3. மஹாஜனபதங்கள், 4. மகாவீரர், 5. மெகஸ்தனிஸ், 6. ) ii சரி

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. ஜெண்ட் அவெஸ்தா, 2. இரும்பு–கலப்பை, 3. மகாவீரர், 4. புத்தகயா, 5. அசோகரின்

**III. பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. இலக்கியங்களில் குறிப்பிடப்படும் அரசுகளில் காசி, கோசலம், மகதம் ஆகியவை வலிமை படைத்தவையாக இருந்தன, 2. நிர்வாகத்துக்கான ஒரு விரிவான கட்டமைப்பை உருவாக்குவதில் பிம்பிசாரர் வெற்றிகரமாகச் செயல்பட்டார்.

**IV. பொருத்துக:**

1. உ, 2. அ, 3. ஆ, 4. இ, 5. ஈ

9th Social Science Lesson 5

5] செவ்வியல் உலகம்

**உங்களுக்குத் தெரியுமா?**

பண்டைய கிரீஸ் மற்றும் ரோமை உள்ளடக்கியதே செவ்வியல் உலகமென்றும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்த பண்டைய கிரேக்க, ரோமானிய நாகரிகங்களை உள்ளடக்கிய காலமே செவ்வியல் காலமென்றும், கிரேக்கோ–ரோமானிய கால உலகமென்றும் அறியப்படுகின்றது.

கிரேக்கத்தில் ஆளும் வர்க்கம் நிலங்களைக் கட்டுப்படுத்தியது. அடிமைகள் நிலங்களில் பாடுபட்டனர். அடிமைகளைக் கொண்டிருப்பது என்பது ஒரு நாகரிக வாழ்வின் அவசியம் என கிரேக்க எழுத்தாளர்களும் தத்துவ ஞானிகளும் கருதினர். ஆண்டானுக்கும் அடிமைக்குமான உறவை அரிஸ்டாட்டில் கணவனுக்கும் மனைவிக்குமான, தந்தைக்கும் பிள்ளைகளுக்குமான உறவுகளோடு ஒப்பிடுகின்றார்.

பெரிகிளிஸீக்குப் பின்னர் வந்த அரசாங்கம் உண்மையைக் கண்டறிய, சாக்ரடீஸ் முன்வைத்த வழிமுறைகளை விரும்பவில்லை. அரசால் அங்கீகரிக்கப்பட்ட கடவுள்களை சாக்ரடீஸ் ஏற்றுக் கொள்ள மறுத்தார் என்றும் இளைஞர்களைத் தவறான சிந்தனைக்கு இட்டுச் சென்றார் என்றும் குற்றம் சாட்டப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டார். நீதிமன்றக் குழு நடுவர் சாக்ரடீஸை குற்றவாளி எனத் தீர்மானித்து அவரை விஷம் (hemlock) அருந்தி உயிர்விடும்படி தீர்ப்பு வழங்கியது.

மக்களாட்சி என்னும் சொல்லின் நேர் பொருள் "மக்களே ஆட்சி புரிவது" என்பதாகும். ஆனால் நடைமுறையில் மெடிக்ஸ் (metics) என்று அழைக்கப்பட்ட அடிமைகள், பெண்கள், நகரில் தங்கியராதவர்கள் (வணிகர்கள், கைவினைஞர்கள்) ஆகியோர் விலக்கியே வைக்கப்பட்டிருந்தனர்.

அலெக்ஸாண்டரின் இறப்பிற்குப் பின்னர் பண்பாடு மிக விரைவாக வளர்ந்தது. வரலாற்று அறிஞர்கள் இதனை (கி. மு. (பொ. ஆ. மு) 323) ஹெலனிஸ்டிக் நாகரிகம் என அழைக்கின்றனர்.

**அடிமைகளின் கிளர்ச்சிகள்:** கிரேக்கத்தைக் காட்டிலும் ரோமில் தான் அடிமைகளின் கிளர்ச்சிகள் அதிகம் நடந்தன. ஸ்பார்டகஸின் கிளர்ச்சியே அவற்றுள் புகழ் பெற்றதாகும். 70, 000 அடிமைகள் பங்கேற்ற அக்கிளர்ச்சி கி. மு. (பொ. ஆ. மு) 73இல் தொடங்கியது. இப்புரட்சி ரோமின் அதிகாரத்தை அச்சங்கொள்ள வைத்தது. ஆனாலும் இறுதியில் ஸ்பார்டகஸ் கொல்லப்பட்டு புரட்சி ஒடுக்கப்பட்டது. ஸ்பார்ட்டகஸை பின்பற்றிய 6000 புரட்சியாளர்களும் கொல்லப்பட்டனர்.

ரோம் அரசுக்கு அதிக வருவாயை அள்ளிக் கொடுத்தது அடிமை வியாபாரமாகும். டெலாஸ் தீவு மிகப்பெரிய அடிமைச் சந்தையாக மாறியது.

**பீயூனிக் போர்களும் ஏகாதிபத்திய ரோமப் பேரரசின் தோற்றமும்:** இத்தாலியில் ரோம் வளர்ச்சி பெற்ற போது வட ஆப்பிரிக்காவில் கார்த்தேஜ் வலிமையான சக்தியாக வளர்ந்தது. கார்த்தேஜ் மக்கள் கடற்பயணங்களிலும் வணிகத்திலும் சிறந்து விளங்கிய பீனிசியர்களின் சந்ததிகள் ஆவர். ரோமும் கார்த்தேஜீம் கிரேக்கர்களை வெளியேற்ற ஒன்றிணைந்தனர். அதன் பின்னர் கார்த்தேஜ் சிசிலியைக் கைப்பற்றியது ரோம அரசுக்கே ஆபத்தாய் மாறியது. இவ்விரு சக்திகளிடையே நடைபெற்ற மூன்று போர்களே பியூனிக் போர்கள் என அழைக்கப்படுகின்றன. கார்த்தேஜ், ஹன்னிபால் என்ற தளபதியை அனுப்பி வைத்தது. ரோமின் படையைத் தோற்கடித்த அவர் இத்தாலியின் பெரும்பகுதியை பாலைவனமாக்கினார். ரோம் படைக்கு தலைமையேற்றிருந்த பாபியஸ் மனம் தளரவில்லை. இரண்டாம்

பியூனிக் போரில் ஹன்னிபாலை எதிர்கொண்ட பாபியஸ், ஜாமா போர்க்களத்தில் அவரைத் தோற்கடித்தார். ரோமானியப் படைகளால் பின் தொடரப்பட்ட ஹன்னிபால் விஷமருந்தி மாண்டார். கார்த்தேஜின் மீது மூன்றாவது பியூனிக் போரை ரோம் அறிவித்தது. இப்போரில் கார்த்தேஜ் வெற்றி கொள்ளப்பட்டு அழிக்கப்பட்டது. இதன் பின்னர் மேலை உலகில் நிகரற்ற சக்தியாக ரோம் மாறியது.

**பட்டு வழித்தடம் அல்லது பட்டுப்பாதை:** சீனாவிலிருந்து ஆசியா மைனர் மற்றும் இந்தியா வரையிலான வணிக வழித்தடம், பட்டுப்பாதை/பட்டுச் சாலை/பட்டு வழித்தடம் என்று அறியப்படுகிறது. இது சீனாவை மேலை நாடுகளோடு இணைக்கின்றது. இப்பாதை வழியாக இரு பெரும் நாகரிகங்களான சீனா மற்றும் ரோம் ஆகியவற்றுக்கிடையே பண்டங்களும், கருத்துக்களும் பரிமாறிக்கொள்ளப்பட்டன. பட்டு மேற்கு நோக்கிச் செல்ல, கம்பளி, தங்கம், வெள்ளி ஆகியன கிழக்கு நோக்கிச் சென்றன. சீனா பௌத்தத்தை இந்தியாவிலிருந்து இவ்வழியின் மூலமே பெற்றது.

**புனித சோபியா ஆலயம்:** புனித சோபியா ஆலயம் கி. பி. ஆறாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் கட்டப்பட்டதாகும். அக்கால ஐரோப்பாவின் மிக நேர்த்தியான கட்டடமான இத்தேவாலயம் அதன் புதுமையான கட்டடக்கலை நுணுக்கங்களுக்கு பெயர் பெற்றதாகும். கான்ஸ்டாண்டி நோபிள் நகரை உதுமானிய துருக்கியர் கைப்பற்றிய போது இத்தேவாலயம் ஒரு மசூதியாக மாற்றப்பட்டது.

**செவ்வியல் காலத்தில் இந்தியா:** குஷாணர்கள் காலம் ரோமனியப் பேரரசின் இறுதி காலகட்டமான ஜீலியஸ் சீசரின் ஆட்சி காலத்தின் சமகாலமாகும். ஜீலியஸ் சீசரின் காலத்துக்குப் பின் ஆட்சிக்கு வந்த அகஸ்டஸ் சீசர் அவைக்கு குஷாணர்கள் ஒரு தூதுக்குழுவை அனுப்பியதாகக் கூறப்படுகிறது.

செவ்வியல் காலத்தின் சமகாலமான சங்ககாலத்தில் (கி. மு. (பொ. ஆ. மு)–3ம் நூற்றாண்டு முதல் கி. பி. (பொ. ஆ)–3ம் நூற்றாண்டில்) பதினெண் மேல் கணக்கு என்றழைக்கப்படும் சங்க இலங்கியங்களான பத்துப்பாட்டும் எட்டுத் தொகையும் தொகுக்கப்பட்டன. சங்க இலக்கியம் இந்தியாவின் முதல் சமயச் சார்பற்ற இலக்கியம் என போற்றப்படுகிறது.

செவ்வியல் காலத்தின் இறுதிக் காலத்துடன் (நான்கு மற்றும் ஐந்தாம் நூற்றாண்டுகள்) பொருந்திய களப்பிரர் காலத்தில் பாபிலோனியா, எகிப்து, கிரேக்கம் மற்றும் ரோம் ஆகியவற்றோடு மலபார் கடற்கரை வழி நடந்த வணிகம் மேலும் செழிப்படைந்தது. தேக்கு, மிளகு, மணிகள் மற்றும் தந்தம் போன்றவை ஏற்றுமதியாயின.

<u>**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**</u>

1. -------------- என்ற கிரேக்க நகர அரசு, பாரசீகர்களை இறுதிவரை எதிர்த்து நின்றது.

(அ) அக்ரோபொலிஸ்

(ஆ) ஸ்பார்ட்டா

(இ) ஏதென்ஸ்

(ஈ) ரோம்

2. கிரேக்கர்களின் மற்றொரு பெயர் -------------- ஆகும்.

(அ) ஹெலனிஸ்டுகள்

(ஆ) ஹெலனியர்கள்

(இ) பீனிசியர்கள்

(ஈ) ஸ்பார்ட்டன்கள்

3. ஹன் அரச வம்சத்தை தோற்றுவித்தவர் --------- ஆவார்.

(அ) வு–தை

(ஆ) ஹங் சோவ்

(இ) லீயு–பங்

(ஈ) மங்கு கான்

4. இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்படுவதற்குக் காரணமாக இருந்த ரோமானிய ஆளுநர் --------- ஆவார்.

(அ) முதலாம் இன்னசென்ட்

(ஆ) ஹில்ட்பிராண்டு

(இ) முதலாம் லியோ

(ஈ) போன்டியஸ் பிலாத்து

5. பெலப்பொனேஷியப் போர் ------------- மற்றும் -------------- ஆகியோர்களுக்கிடையே நடைபெற்றது.

(அ) கிரேக்கர்கள் மற்றும் பாரசீகர்கள்

(ஆ) பிளேபியன்கள் மற்றும் பெட்ரீசியன்கள்

(இ) ஸ்பார்ட்டா மற்றும் ஏதென்ஸ் நகர வாசிகள்

(ஈ) கிரேக்கர்கள் மற்றும் ரோமானியர்கள்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. கிரேக்கர்கள் ---------------- என்ற இடத்தில் பாரசீகர்களைத் தோற்கடித்தனர்.

2. ரோமானியக் குடியரசில் ஏழை விவசாயிகளுக்கு ஆதரவாக இருந்தவர் ------------

3. ------------ வம்சத்தினரின் ஆட்சியின் போது தான் பௌத்தம் இந்தியாவிலிருந்து சீனாவிற்கு வருகை தந்தது.

4. ---------- ஐரோப்பியாவின் மிக நேர்த்தியான கட்டடம்.

5. ---------------- மற்றும் --------------- ரோம நீதிபதிகள் ஆவார்கள்.

**III. பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. (i) கிரீஸின் மீதான முதல் பாரசீகத் தாக்குதல் தோல்வியடைந்தது.

(ii) ரோமப் பேரரசின் வீழ்ச்சிக்கு ஜீலியஸ் சீஸர் ஒரு காரணமாயிருந்தார்.

(iii) ரோமின் மீத படையெடுத்த கூட்டத்தினர் பண்பாட்டில் மேம்பட்டவர்களாகக் கருதப்படுகின்றனர்.

(iv) பௌத்தமும் ரோமப் பேரரசை வலுவிழக்கச் செய்தது.

(அ) i சரி

(ஆ) ii சரி

(இ) ii மற்றும் iii சரி

(ஈ) iv சரி

2. (i) யூகிளிட் கோள்கள் மற்றும் நட்சத்திரங்கள் எவ்வாறு நகர்கின்றன என்பது குறித்து ஒரு மாதிரியை உருவாக்கினார்.

(ii) எட்ருஸ்கர்களை முறியடித்து, ரோமானியர்கள் ஒரு குடியரசை நிறுவினர்.

(iii) அக்ரோபொலிஸ் புகழ்பெற்ற அடிமைச் சந்தை ஆனது.

(iv) ரோமும் கார்த்தேஜும் கிரேக்கர்களைத் துரத்துவதற்கு ஒன்றிணைந்தன.

(அ) i சரி

(ஆ) ii சரி

(இ) ii மற்றும் iv சரி

(ஈ) iv சரி

3. (i) பட்டு வழித்தடம் ஹன் வம்ச ஆட்சியின் போது மூடப்பட்டது.

(ii) வேளாண் குடிமக்களின் எழுச்சி, ஏதேனிய குடியரசுக்கு அச்சத்தைக் கொடுத்தது.

(iii) விர்ஜில் எழுதிய "ஆனெய்ட்" ரோம ஏகாதிபத்தியத்தைப் புகழ்வதாய் அமைந்தது.

(iv) ஸ்பார்ட்டகஸ், ஜீலியஸ் சீஸரைக் கொன்றார்.

(அ) i சரி

(ஆ) ii சரி

(இ) ii மற்றும் iv சரி

(ஈ) iii சரி

4. (i) ரோமப் பேரரசர் மார்க்கஸ் அரிலியஸ் ஒரு கொடுங்கோலன்.

(ii) ரோமுலஸ் அரிலிஸ், ரோமானிய வரலாற்றில் மிகவும் மெச்சத்தக்க அரசர்.

(iii) பேபியஸ் ஒரு புகழ்பெற்ற ஒரு கார்த்தேஜியப் படைத்தலைவர் ஆவார்.

(iv) வரலாற்றாளராக, லிவியை விட, டாசிடஸ் மதிக்கத்தக்கவர்.

(அ) i சரி

(ஆ) ii சரி

(இ) ii மற்றும் iii சரி

(ஈ) iv சரி

5. (i) பௌத்த மதம் ஜப்பானில் இருந்து சீனாவிற்கு பரவியது.

(ii) இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட பின்னர், புனித தோமையர் கிறித்தவக் கொள்கைகளைப் பரப்பினார்.

(iii) ஐரோப்பாவில் புனித சோபியா ஆலயம் மிக நேர்த்தியான கட்டடம் ஆகும்.

(iv) டிராஜன், ரோமனின் மோசமான சர்வாதிகாரிகளில் ஒருவராவார்.

(அ) i சரி

(ஆ) ii சரி

(இ) iii சரி

(ஈ) iv சரி

**IV. பொருத்துக:**

1. அக்ரோபொலிஸ் – அ] கான்சல்

2. பிளாட்டோ – ஆ] ஏதென்ஸ்

3. மாரியஸ் – இ] தத்துவ ஞானி

4. ஜீயஸ் – ஈ] பொருள் முதல் வாதி

5. எபிகியுரஸ் – உ] பாதுகாக்கப்பட்ட நகரம்

**விடைகள்:**

**1. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. ஏதென்ஸ், 2. ஹெலனியர்கள், 3. லீயு–பங், 4. போன்டியஸ் பிலாத்து, 5. ஸ்பார்ட்டா மற்றும் ஏதென்ஸ் நகர வாசிகள்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. மராத்தான், 2. டைப்பிரியஸ் கிராக்கஸ், காரியஸ் டோ கிராக்கஸ், 3. ஹன், 4. புனித சோபியா, 5. பிளினி தியங்கர், புளுட்டாக்

**III. பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. i சரி, 2. ii மற்றும் iv சரி, 3. iii சரி, 4. iv சரி, 5. iii சரி

**IV. பொருத்துக:**

1. உ, 2. இ, 3. அ, 4. ஆ, 5. ஈ

9th Social Science Lesson 6

## 6] இடைக்காலம்

**உங்களுக்குத் தெரியுமா?**

**சீனப் பெருஞ்சுவர்:** கி. மு. (பொ. ஆ. மு) 8 மற்றும் 7ஆம் நூற்றாண்டுகளின் இடைப்பட்ட காலப் பகுதியில் தங்களுக்குள்ளே போரிட்டுக் கொண்டிருந்த சீன அரசுகள், வடக்கேயிருந்து வரும் எதிரிகளிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு சுவர்களை எழுப்பிக் கொண்டன. சின் அரசவம்சத்தின் காலத்தில் தனித்தனியாக இருந்த பல சுவர்கள் இணைக்கப்பட்டன. இதன் விளைவாக கிழக்கிலிருந்து மேற்காக சுமார் 5000 கிலோ மீட்டர் நீளமுடைய பெருஞ்சுவர் உருவானது. இச்சுவர் உலக அதிசயங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. நாடோடிப் பழங்குடியினர் உள்ளே நுழைய முடியாதவாறு இச்சுவர் தடுத்தது. பின்னர் ஆட்சி புரிந்த பல அரச வம்சத்தினர் காலத்தில் இச்சுவர் விரிவு செய்யப்பட்டு வலுவூட்டப்பட்டது. தற்போது சீனப்பெருஞ்சுவரின் மொத்த நீளம் 6700 கிலோ மீட்டர் ஆகும்.

கி. பி. (பொ. ஆ) 1078இல் சீனா உற்பத்தி செய்த இரும்பு 114, 000 டன்னைத் தாண்டியது (1788இல் இங்கிலாந்து 68, 000 டன்னே உற்பத்தி செய்தது), சீனா, செராமிக் (Ceramics) ஓடுகள் மற்றும் பீங்கான் பொருட்கள் செய்வதிலும் தனித்திறன் பெற்று விளங்கியது. இத்தொழில் நுட்பத்தை அடுத்து வந்த 700 ஆண்டுகள் வரை ஐரோப்பா அறிந்திருக்கவில்லை. வெடிமருந்து 1044லேயே பயன்பாட்டில் இருந்தது. ஐரோப்பாவைக் காட்டிலும் 500 ஆண்டுகளுக்கு முன்பாகவே சீனா அச்சடிக்கப்பட்ட புத்தகங்களைக் கொண்டிருந்தது. (Chris Harman, A People's History of the World, p. 111)

**சன்னி, ஷியா பிரிவுகளின் தோற்றம்:** அராபியத் தலைவர்களுக்குள் ஏற்பட்ட சச்சரவுகளே இஸ்லாமின் இருபிரிவுகள் தோன்றக் காரணமாயிற்று. அப்பிரிவுகள் சன்னி மற்றும் ஷியா என்றழைக்கப்பட்டன. சன்னி பிரிவைச் சேர்ந்த இஸ்லாமியர்கள், இஸ்லாமிய நாடுகளின் தலைமையும், நபிகளுக்குப்பின் அப்பொறுப்புக்கு வருவோரும் இஸ்லாமியத்தில் நம்பிக்கையுடைய மக்களின் பிரதிநிதிகளால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்ற நிலைப்பாட்டைக் கொண்டிருந்தனர். மாறாக ஷியா பிரிவைச் சேர்ந்தோர் இவ்வரசியல், மத தலைமைப் பொறுப்புகளை ஏற்போர் நபிகள் நாயகத்துடன் ரத்த உறவு கொண்டவர்களாகவும் அல்லது மண உறவு கொண்டவர்களாகவும் இருத்தல் வேண்டும். மற்றவர்களை அனுமதிக்க முடியாது என்ற நிலைபாட்டைக் கொண்டிருந்தனர்.

**பாக்தாத்:** "அரேபிய இரவுகளின் நகரம்" என அறியப்பட்ட நகரமாகும். இது அரண்மனைகள், பொதுக்கட்டடங்கள், பள்ளிகள், கல்லூரிகள், பெரிய கடைகள், பூங்காக்கள் மற்றும் தோட்டங்களைக் கொண்ட விரிந்து பரந்த நகரமாகும். வணிகர்கள் கிழக்கோடும் மேற்கோடும் பெரும் வணிகத்தைச் செய்தனர். உலகத்தின் பல பகுதிகளிலிருந்து பார்வையாளர்கள் குறிப்பாக படித்த அறிஞர்கள், மாணவர்கள், கலைஞர்கள் பாக்தாத்திற்கு வந்தார்கள்". – நேரு, உலக சரித்திரம் (Glimpses of World History).

**மங்கோலியர்கள் மற்றும் செங்கிஸ்தான்:** மங்கோலியர்கள் நாடோடிகள். போர்த்திறன் கொண்ட அவர்கள் செங்கிஸ்கான் எனும் மகத்தான தலைவனை உருவாக்கினார்கள். செங்கிஸ்தான் சிறப்பு மிக்க இராணுவ ஆற்றல் கொண்டவர். மங்கோலியர்கள் ரஷ்யாவை 300 ஆண்டு காலம் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். இதன் காரணமாக இடைக்காலத்தின் இறுதிவரை ஏனைய ஐரோப்பிய நாடுகளைக் காட்டிலும் தொழில்நுட்பங்களில் ரஷ்யா வளர்ச்சியடையாது பின் தங்கியிருந்தது.

திருச்சபை விலக்கம் என்பது ஒரு மனிதன் கிறித்தவனாக இருப்பதால் என்ன உரிமைகளுக்குத் தகுதியானவரோ அவ்வுரிமைகள் அவருக்கு மறுக்கப்படுவதாகும். அவர் திருச்சபைக்குள் புனிதச் சடங்குகளைச் செய்ய முடியாது. இறந்த பின்னர் அவருடைய உடலைத் திருச்சபைக்குச் சொந்தமான கல்லறைத் தோட்டத்தில் புதைக்க முடியாது. மதவிலக்கம் என்பது ஒரு அரசனுடைய குடிமகனுக்கு அவர் பெறத் தகுதியுள்ள சமயம் சார்ந்த பயன்களை மறுப்பதன் மூலம் அந்நபரை அரசனுக்கு எதிராக வெறுப்பு கொள்ளத் தூண்டுவது.

ஃபிப் (fief) என்பது ஒருவருக்கு அவரைவிட மேல் நிலையில் இருக்கும் கோமகனால் வழங்கப்படும் நிலம். நிலத்தைப் பெற்றவர் நிலம் கொடுத்தவருக்கு கைமாறாக சில சேவைகளைச் செய்ய வேண்டும். அது அவருடைய கடமையாகும்.

**ஹூன்:** ரோமானியப் பேரரசின் சரிவுக்கு பிறகு, ஐரோப்பா சிறிய சிறிய ஜெர்மானிய அரசுகளாக சிதறுண்டிருந்த சமயம், ஹூன் இனத்தவர்களும் கடுமையான போர்குணமுள்ள மத்திய ஆசிய மக்களும் வடகிழக்கு இந்தியா மீது படையெடுத்தனர். ஸ்கந்த குப்தரால் அவர்கள் முறியடிக்கப்பட்டாலும், அவருடைய மறைவிற்கு பின், இந்தியாவினுள் நுழைந்து, மத்திய இந்தியா முழுதும் குடியேறினர். தோரமானர் மற்றும் மிஹிரகுலர் இருவரும் நன்கு அறியப்பட்ட ஹூன் அரசர்கள் ஆவர்கள். இவ்வரசர்கள் புத்த மதத்தவர்களை தண்டித்தனர். புத்த மடாலயங்களை எரித்தனர். ஏறத்தாழ கி. பி. (பொ. ஆ) 528ஆம் ஆண்டு மாளவத்தைச் சார்ந்த யசோதர்மன் மூலமாக ஹூன் இனத்தவர்களது ஆட்சி இந்தியாவில் முடிவுக்கு வந்தது.

**பாரசீகத்துடனான சாளுக்கியர்களின் (பாதாமி மற்றும் வாதாபியை உட்கொண்ட) உறவுமுறை:** சாளுக்கியா (Chalukya): பாரசீகத்தில் அமையப் பெற்ற சசானித் வம்சமும் சாளுக்கிய அரசும் சமகால அரசுகளாகும். சீன வம்சத்தில் டாங் என்ற அரசருடன், சசானித் வம்சத்தின் கடைசி அரசரான இரண்டாம் குசரவ் நல்ல உறவு முறையைக் கொண்டிருந்தார். மேலும் சாளுக்கிய அரசர் இரண்டாம் புலிகேசியின் தூதுவர்களையும் பகிர்ந்து கொண்டார். மாகாராஷ்டிரத்தை உள்ளடக்கிய சாளுக்கிய அரசின் தலைநகர் பாதாமியாகும். யுவான் சுவாங் சாளுக்கியர்களின் வீரத்தைப் புகழ்ந்து கூறும்பொழுது "அவர்கள் நன்றி உணர்வு மிக்கவர்களாகவும், போரில் ஈடுபடுவதை பெருமையாகவும், குற்றங்களுக்கு கடுமையான தண்டனை வழங்குபவர்களாகவும் திகழ்ந்தார்கள்" என்கிறார்.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. ---------------- ஜப்பானின் பூர்வீக மதம் ஆகும்.

(அ) ஷின்டோ

(ஆ) கன்பியூசியானிசம்

(இ) தாவோயிசம்

(ஈ) அனிமிசம்

2. ----------- என்பதன் பொருள் பெரும் பெயர் என்பதாகும்.

(அ) டய்ம்யாஸ்

(ஆ) சோகன்

(இ) பியுஜிவாரா

(ஈ) தொகுகவா

3. ஸ்பெயினைக் கைப்பற்றிய அராபிய தளபதி -------------

(அ) தாரிக்

(ஆ) அலாரிக்

(இ) சலாடின்

(ஈ) முகமது என்னும் வெற்றியாளர்

4. ஹருன்–அல் ரஷித் என்பவர் ---------------ன் திறமையான அரசர்.

(அ) அப்பாசித்து வம்சம்

(ஆ) உமையது வம்சம்

(இ) சசானிய வம்சம்

(ஈ) மங்கோலிய வம்சம்

5. நிலப்பிரப்புத்துவம் ---------------- மையமாகக் கொண்டது.

(அ) அண்டியிருத்தலை

(ஆ) அடிமைத்தனத்தை

(இ) வேளாண் கொத்தடிமையை

(ஈ) நிலத்தை

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. ---------------- என்பவர்கள் ஜப்பானின் பூர்வ குடிகள் ஆவர்.

2. -------------- என்பது ஜப்பானின் முந்தையப் பெயர் ஆகும்.

3. --------------- என்பது மெதினாவின் முந்தையப் பெயர் ஆகும்.

4. வடக்குப் பகுதியில் இருந்த சீனர்களுக்கு பண்பாட்டில் பின் தங்கிய --------------- மக்கள் அச்சுறுத்தலைக் கொடுத்தனர்.

5. உதுமானியர் மேலாண்மையை பால்கன் பகுதியில் நிறுவியவர் ---------------- ஆவார்.

**III. பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. (i) செங்கிஸ்கான் ஒரு மத சகிப்புத்தன்மை இல்லாதவர்.

(ii) மங்கோலியர் ஜெருசலேமை அழித்தனர்.

(iii) உதுமானியப் பேரரசை, சிலுவைப் போர்கள் வலுவிழக்கச் செய்தன.

(iv) போப்பாண்டவர் கிரிகோரி, நான்காம் ஹென்றியை, மதவிலக்கம் என்னும் ஆயுதத்தைப் பயன்படுத்தி, பதவி விலகச் செய்தார்.

(அ) i சரி

(ஆ) ii சரி

(இ) ii மற்றும் iii சரியானவை

(ஈ) iv சரி

2. (i) மங்குகான் என்பவர் சீனாவின் ஆளுநர்.

(ii) சீனாவில் இருந்த மங்கோலிய அரச சபை மார்க்கோபோலோவின் நன்மதிப்பைப் பெற்றது.

(iii) "சிகப்புத் தலைப்பாகை" என்ற அமைப்பின் தலைவராக இருந்தவர் ஹங் சாவோ.

(iv) மங்கோலியர்கள் சீனாவில் தங்களது ஆட்சியை யுவான் வம்சம் என்ற பெயரில் நிறுவினர்.

(அ) i சரி

(ஆ) ii சரி

(இ) ii மற்றும் iv சரியானவை

(ஈ) iv சரி

3. (i) போயங் மற்றும் சங்–ஆன் ஆகியவை சுங் வம்சத்தால் கட்டப்பட்டது.

(ii) விவசாயிகளின் எழுச்சி, சாங் வம்சம் அழிய வழிகோலியது.

(iii) செல்ஜீக் துருக்கியர் என்பவர் தார்த்தாரியர் என்னும் பழங்குடியினர் ஆவார்.

(iv) மங்கோலியர்கள், ஜப்பானில் தங்களது ஆட்சியை யுவான் வம்சம் என்ற பெயரில் நிறுவினர்.

(அ) i சரி

(ஆ) ii சரி

(இ) iii சரி

(ஈ) iv சரி

4. கூற்று (கூ): பௌத்த மதம் இந்தியாவில் இருந்து சீனாவிற்குச் சென்றது.

காரணம் (கா): சீனாவில் தொடக்காலத்தில் குடியேறிய இந்தியர்கள் பௌத்த மதத்தை பின்பற்றியவர்கள்.

(அ) கூற்று சரி; காரணம் தவறு

(ஆ) கூற்றும் காரணமும் தவறு

(இ) கூற்றும் காரணமும் சரியானவை

(ஈ) கூற்று தவறு; காரணம் கூற்றுக்கு தொடர்பற்றது.

5. கூற்று (கூ): ஜெருசலேமை துருக்கியர் கைப்பற்றிக் கொண்டது சிலுவைப் போருக்குக் காரணமானது.

காரணம் (கா): ஜெருசலேமிற்கு புனிதப் பயணம் மேற்கொள்ள ஐரோப்பிய கிறித்தவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

(அ) கூற்று சரி; காரணம் கூற்றுக்கான விளக்கம் அல்ல.

(ஆ) கூற்றும் காரணமும் சரி

winmeen.com

(இ) கூற்றும் காரணமும் தவறு

(ஈ) கூற்று சரி; காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம்.

**IV. பொருத்துக:**

1. சிகப்பு தலைப்பாகைகள் – அ] காமகுரா

2. செல்ஜீக் துருக்கியர்கள் – ஆ] இரண்டாம் முகமது

3. முதல் சோகுனேட் – இ] அரேபிய இரவுகளின் நகரம்

4. பாக்தாத் – ஈ] சூ யுவான் சங்

5. கான்ஸ்டாண்டிநோபிள் கைப்பற்றப்படல் – உ] மத்திய ஆசியா

**விடைகள்:**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. ஷின்டோ, 2. டய்ம்யாஸ், 3. தாரிக், 4. அப்பாசித்து வம்சம், 5. அண்டியிருத்தலை

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. அய்னஸ், 2. யமட்டோ, 3. எத்ரிப், 4. மங்கோலியர்கள், 5. இரண்டாம் முஹமது

**III. பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. iv சரி, 2. ii மற்றும் iv சரியானவை, 3. அனைத்தும் தவறானவை, 4. கூற்று சரி; காரணம் தவறு, 5. கூற்றும் காரணமும் சரி

**IV. பொருத்துக:**

1. ஈ, 2. உ, 3. அ, 4. இ, 5. ஆ

9th Social Science Lesson 7

## 7] இடைக்கால இந்தியாவில் அரசும் சமூகமும்

**உங்களுக்குத் தெரியுமா?**

**அரசு:** ஒரு அரசரால் அல்லது அரசியால் ஆளப்படும் ஒரு நாடு. பேரரசு: ஒரு அரசரால் அல்லது அரசியால் ஆளப்படும் பல நாடுகளை கொண்ட பெரும் நிலப்பரப்பு,

**இதே காலத்தில் ஐரேப்பாவில்:** புனித ரோமானியப் பேரரசும் பேரரசர் சார்லெமக்னே: ஐரோப்பிய கண்டத்தில் கி. பி. (பொ. ஆ) 9வது நூற்றாண்டுகளின் தொடக்கத்தில் புனித ரோமானியப் பேரரசு தோன்றியது. கி. பி. (பொ. ஆ) 476ஆம் ஆண்டுக்கு பிறகு பழைய ரோமானியப் பேரரசு புதிய ரோமானியப் பேரரசுடன் எந்த தொடர்பும் இல்லாமல் இருந்ததால் முடிவுக்கு வந்தது. புதிதாக தோன்றிய ரோமானியப் பேரரசு கிறித்துவத்தையும், கிறித்துவ உலகத்தையும் பிரதிநிதித்துவம் செய்ததால் புனித என்ற அடைமொழி பெற்றது. இப்பேரரசர் போப்பாண்டவரைப் போலவே பூமியில் வாழும் கடவுளின் பிரதிநிதியாகக் கருதப்பட்டார். இப்பேரரசர் அரசியல் நடைமுறையிலும், போப்பாண்டவர் என்பவர் சமயம் சார்ந்த பொறுப்பாளராகவும் விளங்க எல்லை வகுக்கப்பட்டிருந்தது. பேரரசர் உலகில் மிக உயர்ந்தவராக

கருதப்பட்டாலும் போப்பாண்டவருக்கு அடுத்த நிலையிலேயே வைக்கப்பட்டிருந்தார். பிராங்க் நாட்டின் சார்லெமக்னே அரசர், புனித ரோமானிய பேரரசர் என்ற பட்டத்தை (கி. பி. பொ. ஆ. 800) பெற்ற முதல் பேரரசர் ஆவார். இப்பேரரசர் சார்லெமக்னேனும் பல்லவ அரசர் இரண்டாம் நந்திவர்மன் மற்றும் பிரதிகாரா அரசர் முதலாம் நாகபட்டரும் சமக்காலத்தவர் ஆவர்.

**அரசர் ஜான் மற்றும் மகாசாசனமும்:** கி. பி. (பொ. ஆ) 1215ஆம் ஆண்டு இங்கிலாந்தைச் சார்ந்த பிரபுக்கள் அரசர் இரண்டாம் ஜான் என்பவரை "சுதந்திர தனியுரிமை பட்டயத்தில்" கையெழுத்திடக் கட்டாயப்படுத்தினார். இங்கிலாந்தின் பிரபுக்கள் மற்றும் மக்களின் சில சுதந்திரங்களை மதிக்க வேண்டும் என்ற கருத்தை அப்பட்டயம் உறுதிபடுத்தியிருந்தது. புனித ரோமானியப் பேரரசில் நிலவிய ஆட்சியாளரின் மேலாதிக்கக் கோட்பாட்டை இங்கிலாந்து ஏற்றுக்கொள்ளவில்லை. இங்கிலாந்து அரசர் ஜான் மற்றும் இந்தியாவை ஆண்ட சுல்தான் இல்டுமிஷ், இருவரும் சமகாலத்தில் வாழ்ந்தவர்கள். எனவேதான் ஆரம்பக்காலத்திலேயே மன்னரின் அதிகாரம் சோதிக்கப்பட்டதாக அறிகிறோம்.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. விரிவடைந்துவரும் அலாவுதின் கில்ஜியின் இரண்டாவது வலிமை வாய்ந்த இடம் ---------------

(அ) தௌலதாபாத்

(ஆ) டெல்லி

(இ) மதுரை

(ஈ) பிடார்

2. தக்காண சுல்தானியங்கள் ---------------ஆல் கைப்பற்றப்பட்டன.

(அ) அலாவுதீன் கில்ஜி

(ஆ) அலாவுதீன் பாமன் ஷா

(இ) ஔரங்கசீப்

(ஈ) மாலிக்காபூர்

3. --------------- பேரரசு நிறுவப்பட்டது தென்னிந்தியாவின் நிர்வாக நிறுவனக் கட்டமைப்புகளை மாற்றியது.

(அ) பாமினி

(ஆ) விஜயநகர்

(இ) மொகலாயர்

(ஈ) நாயக்கர்

4. கிருஷ்ணதேவராயர் --------------ன் சமகாலத்தவர்.

(அ) பாபர்

(ஆ) ஹீமாயுன்

(இ) அக்பர்

(இ) ஷெர்ஷா

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. இந்தியாவின் மேற்குக் கடற்கரைக்கு வந்த ஐரோப்பியர் --------------

2. கி. பி. (பொ. ஆ) 1565ஆம் ஆண்டு தக்காண சுல்தான்களின் கூட்டுப்படைகள் விஜயநகரை ------------- போரில் தோற்கடித்தது.

3. விஜயநகரம் ஓர் ----------------- அரசாக உருவானது.

4. நகரமயமாதலின் போக்கு ------------- காலத்தில் அதிகரித்தது.

5. -------------- காலம் தமிழக வரலாற்றின் உன்னத ஒளி பொருந்தியக் காலம்.

**III. பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. அ) விஜயநகர அரசு நிறுவப்பட்டது, தென்னிந்திய வரலாற்றில் மிக முக்கிய நிகழ்வாகும்.

ஆ) சாளுவ அரச வம்சம் நீண்டகாலம் ஆட்சி செய்தது.

இ) விஜயநகர அரசர்கள் பாமினி சுல்தானியத்துடன் சுமுகமான உறவுகளைக் கொண்டிருந்தனர்.

ஈ) ரஜபுத்திர அரசுகள் பாரசீகத்திலிருந்தும் அராபியாவிலிருந்தும் குடிபெயர்பவர்களை ஈர்த்தன.

2. அ) செஞ்சியில் நாயக்க அரசு உருவானது.

ஆ) தெலுங்கு நாயக்கர்கள் பணியமர்த்தப்பட்டதன் விளைவாக தெலுங்கு பேசும் மக்கள் மதுரையிலிருந்து குடிபெயர்ந்தனர்.

இ) ஜஹாங்கீரின் காலத்திலிருந்தே மொகலாயப் பேரரசு சரியத் துவங்கியது.

ஈ) ஐரோப்பியர்கள் அடிமைகளைத் தேடி இந்தியாவிற்கு வந்தனர்.

3. அ) புராணக்கதைகளைக் கொண்ட கற்பனையான வம்சாவளிகள் மெக்கன்சியால் சேகரிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டன.

ஆ) அவுரி என்பது இந்தியாவில் மிக முக்கியமான பானப்பயிராகும்.

இ) மகமுத் கவான் அலாவுதின் கில்ஜியின் அமைச்சர் ஆவார்.

ஈ) போர்ச்சுகீசியர்கள் தங்கள் முதல் கோட்டையை கோவாவில் கட்டினர்.

4. கூற்று (கூ): கிழக்கே சீனா முதல் மேற்கே ஆப்பிரிக்கா வரை நீண்டிருந்த கடல் வணிகத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக இந்தியா இருந்தது.

காரணம் (கா): இந்தியாவின் நிலவியல் அமைப்பு இந்தியப் பெருங்கடலின் மையத்தில் அமைந்துள்ளது.

(அ) கூற்று சரி; காரணம் கூற்றை விளக்குகிறது.

(ஆ) கூற்று தவறு; காரணம் சரி

(இ) கூற்றும் காரணமும் தவறானவை.

(ஈ) கூற்று சரி; காரணம் கூற்றை விளக்கவில்லை.

5. (i) பேரழகும் கலைத்திறனும் மிக்க தங்கச் சிலைகளைச் சோழர்கள் வடித்தனர்.

(ii) சோழர்களின் கட்டடக் கலைக்கு சிறந்து எடுத்துக்காட்டு. சிவனின் மறுவடிவான நடராஜரின் பிரபஞ்ச நடனம்.

(அ) i சரி ii தவறு

(ஆ) i, ii ஆகிய இரண்டும் சரி

(இ) i, ii ஆகிய இரண்டும் தவறு

(ஈ) i தவறு ii சரி

**IV. பொருத்துக:**

1. போர்ச்சுகீசியர்கள் – அ] வங்காளம்

2. தான்சேன் – ஆ] கோட்டம்

3. பட்டு வளர்ப்பு – இ] அக்பரின் அரச சபை

4. அங்கோர்வாட் – ஈ] கோவா

5. மாவட்டம் – உ] கம்போடியா

**விடைகள்:**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. தௌலதாபாத், 2. ஔரங்கசீப், 3. விஜயநகர், 4. பாபர்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. போச்சுக்கீசியர்கள், 2. தலைக்கோட்டை, 3. ராணுவ தன்மை கொண்ட, 4. விஜயநகர அரசு, 5. சோழர்

**III. பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. விஜயநகர அரசு நிறுவப்பட்டது, தென்னிந்திய வரலாற்றில் மிக முக்கிய நிகழ்வாகும், 2. செஞ்சியில் நாயக்க அரசு உருவானது, தெலுங்கு நாயக்கர்கள் பணியமர்த்தப்பட்டதன் விளைவாக தெலுங்கு பேசும் மக்கள் மதுரையிலிருந்து குடிபெயர்ந்தனர், 3. புராணக்கதைகளைக் கொண்ட கற்பனையான வம்சாவளிகள் மெக்கன்சியால் சேகரிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டன, 4. கூற்று சரி; காரணம் கூற்றை விளக்குகிறது, 5. i தவறு ii சரி

**IV. பொருத்துக:**

1. ஈ, 2. இ, 3. அ, 4. உ, 5. ஆ

9th Social Science Lesson 8

## 8] நவீன யுகத்தின் தொடக்கம்

**உங்களுக்குத் தெரியுமா?**

**மனிதாபிமானம்:** மனிதாபிமானம் என்னும் கருத்து மறுமலர்ச்சியின் மையக்கூறாகும். இது மனித கண்ணியத்தையும் இயல்பையும் வலியுறுத்தியது. இடைக்காலத்தில், மனிதர்கள் கடவுளின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காகவே படைக்கப்பட்ட முகவர்கள் என்ற கருத்து நிலவியது. மறுமலர்ச்சி கால மனிதாபிமானம் பல்வேறு குண நலன்களைப் பெற்றுள்ள மனிதர்கள் அவற்றைப் பயன்படுத்தி உன்னத நிலையை அடைய வேண்டும் என்னும் கருத்தை வலியுறுத்தியது. மேலுலகம் நோக்கிய அவர்களின் பார்வையை இவ்வுலகம் நோக்கித் திருப்பியது. ஆன்மீக உலகிலிருந்து பொருள் உலகை நோக்கித் திருப்பியது. மரணத்திற்குப் பின்னரான வாழ்வின் மீதான அவர்களின் கவனத்தை இவ்வுலக வாழ்க்கையை நோக்கித் திருப்பியது.

**கத்தோலிக்க மத ஒறுப்பு நீதிமன்றம் (இன்குஷிசன்):** கத்தோலிக்க மத நீதிமன்றம் மதநம்பிக்கைக்கு எதிரான கருத்துக்களைக் கொண்டிருப்பவர்களைக் கையாள்வதற்காக கத்தோலிக்கத் திருச்சபையால் உருவாக்கப்பட்ட அமைப்பே மத நீதிமன்றமாகும். குற்றமிழைத்ததாக கண்டறியப்பட்டவர்கள் தங்கள் கருத்தைக் கைவிட்டுத் திருந்தினால் அவர்களுக்கு எளிய தண்டனைகளும் சிறைத்தண்டனையும் வழங்கப்பட்டன. தங்களைத் திருத்திக் கொள்ள மறுப்பவர்கள் கட்டி வைக்கப்பட்டு கொளுத்தப்பட்டனர். மத நீதிமன்றங்களிலேயே மிகவும் பழிக்கப்பட்டது ஸ்பானிய மத நீதிமன்றமாகும்.

**புனித இக்னேஷியஸ் லயோலாவும், இயேசு சபையும்:** கிறித்துவ மதத்தைப் பரப்புரை செய்வதற்காக இயேசு சபையை புனித இக்னேஷியஸ் லயோலா நிறுவினார். அதனுடைய முக்கியத்துவமிக்க பணி என்பது, ஆதரவற்றோருக்குக் கல்விச் சேவையை வழங்குவதுதான். ஆதரவற்றவர்களுக்கான அது உறைவிடங்கள், அனாதை இல்லங்கள், கல்வி நிலையங்கள் போன்ற எண்ணற்ற அமைப்புகளை இயேசு சபை தொடங்கியது. வெகுவிரைவில் அவர்களுடைய இறைப்பணியாளர்கள் உலகின் எல்லாப் பாகங்களிலும் கத்தோலிக்க மதத்தைப் பரப்பும் பணிகளில் ஈடுபட்டிருப்பதைக் காண முடிந்தது.

அமெரிக்க நாடுகளுக்கும் ஐரோப்பாவுக்குமிடையே அல்லது புதிய உலகத்திற்கும் பழைய உலகத்திற்குமிடையே, தாவரங்கள், விலங்குகள், தொழிலநுட்பம் பண்பாடு மற்றும் விநோதமான நோய்கள் ஆகியவற்றின் இடப்பெயர்வுக்கு ஐரோப்பிய காலனியாதிக்க சக்திகள் அமெரிக்காவை வெற்றி கொண்டதே காரணமாகும். இது கொலம்பியப் பறிமாற்றம் (Columbian Exchange) என்று அறியப்படுகிறது.

**ஐரோப்பிய நவீன கால விடியலின் போது இந்தியாவில்:** கி. பி. (பொ. ஆ) 1526ஆம் ஆண்டு மொகலாய அரசு தோற்றுவிக்கப்பட்டது. கி. பி. (பொ. ஆ) 1336ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட விஜய நகர அரசு கிருஷ்ணதேவராயர் (கி. பி. (பொ. ஆ) 1509–29) ஆட்சியில் உச்ச நிலையை அடைந்தது. போர்த்துக்கீசியர்கள் தங்களது பேரரசைக் கீழ் திசையில் (இந்தியா, மலாக்கா, இலங்கை) நிறுவி, கோவாவைத் தலைநகராகக் கொண்டு கடல் பகுதியையும் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். தமிழ்நாட்டில் மதுரை நாயக்கர்கள் பாண்டிய அரசை 72 பாளையங்களாகப் பிரித்து ஆட்சி நடத்தினார்கள். ஜெசூட் மிஷனரிகளின் வருகையும், இயேசு சங்கத்தின் உறுப்பினரான புனித பிரான்சிஸ் சேவியர் பணிகளும் தூத்துக்குடியில் மீனவச் சமூகத்தைச் சார்ந்தவர்களைக் கத்தோலிக்க கிறித்துவச் சமயத்தைத் தழுவுவதற்குக் காரணமாக அமைந்தன.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. கீழ்க்கண்டவர்களின் யார் மனித நேயத்தின் தந்தை என்று அழைக்கப்படுகிறார்?

(அ) லியானார்டோ டாவின்சி

(ஆ) பெட்ரார்க்

(இ) ஏராஸ்மஸ்

(ஈ) தாமஸ் மூர்

2. 'ஸ்கூல் ஆஃப் ஏதென்ஸ்' என்ற ஓவியத்தை வரைந்தவர்.

(அ) ரஃபேல்

(ஆ) மைக்கேல் ஆஞ்சலோ

(இ) அல்புருட் டியுரர்

(ஈ) லியானார்டோ டாவின்சி

3. வில்லியம் ஹார்வி ------------- கண்டுபிடித்தார்.

(அ) சூரியனே பிரபஞ்சத்தின் மையம்

(ஆ) பூமியே பிரபஞ்சத்தின் மையம்

(இ) புவியீர்ப்பு விசை

(ஈ) இரத்தத்தின் சுழற்சி

4. "தாண்ணூற்றைந்து கொள்கைகள்"களை எழுதியவர் யார்?

(அ) மார்ட்டின் லூதர்

(ஆ) ஸ்விங்லி

(இ) ஜான் கால்வின்

(ஈ) தாமஸ்மூர்

5. "கிறிஸ்தவ மதத்தின் நிறுவனங்கள்" என்ற நூலை எழுதியவர் -------------

(அ) மார்ட்டின் லூதர்

(ஆ) ஸ்விங்லி

(இ) ஜான் கால்வின்

(ஈ) செர்வாண்டிஸ்

6. பூமத்திய ரேகையை கடந்த முதல் மாலுமி யார்?

(அ) மாலுமி ஹென்றி

(ஆ) லோபோ கோன்ஸால்வ்ஸ்

(இ) பார்த்தலோமியோ டயஸ்

(ஈ) கொலம்பஸ்

7. பசிபிக் பெருங்கடல் எனப் பெயரிட்டவர்------------------

(அ) கொலம்பஸ்

(ஆ) அமெரிகோ வெஸ்புகி

(இ) ஃபெர்டினான்ட் மெகெல்லன்

(ஈ) வாஸ்கோடகாமா

8. அமெரிக்க கண்டம் --------------- என்பவரின் பெயரால் பெயரிடப்பட்டுள்ளது.

(அ) அமெரிகோ வெஸ்புகி

(ஆ) கொலம்பஸ்

(இ) வாஸ்கோடகாமா

(ஈ) ஹெர்நாண்டோ கார்டஸ்

9. கிழக்கு இந்தியாவில் போர்ச்சுகீசியர்களின் வசமிருந்த பகுதிகளுக்குத் தலைமையகமாக ------------- இருந்தது.

(அ) மணிலா

(ஆ) பம்பாய்

(இ) பாண்டிச்சேரி

(ஈ) கோவா

10. கீழ்க்கண்ட தாவரங்களுள் எது அமெரிக்காவிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது?

(அ) கரும்பு

(ஆ) சர்க்கரைவள்ளிக்கிழங்கு

(இ) அரிசி

(ஈ) கோதுமை

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. கி. பி. 1453இல் கான்ஸ்டாண்டிநோபிளை ---------------- கைப்பற்றினர்.

2. ------------- என்பவர் மனிதநேயவாதிகளிடையே ஒரு இளவரசர் என்று அறியப்படுகிறார்.

3. -------------- சிஸ்டைன் திருச்சபை மேற்கூரைகளில் வரையப்பட்ட தன்னுடைய ஓவியங்களுக்காக புகழ்பெற்றவராவார்.

4. கத்தோலிக்க திருச்சபை நிறுவனத்துக்கு உள்ளேயே மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தம் -------------- ஆகும்.

5. வணிகப்புரட்சியின் தலையாய அம்சங்கள் ----------------, ------------------ மற்றும் ----------------- ஆகும்.

**III. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. அ) மார்ட்டின் லூதர், கத்தோலிக்க திருச்சபையால் பாகுபாட்டுடன் நடத்தப்பட்டதால் அவர், அதனுடனான உறவைத் துண்டித்துக் கொண்டார்.

ஆ) ஜெனிவாவில் இருந்து ஜான் கால்வினின் அரசாங்கம் தாராளமயமானதாகவும் வேடிக்கை நிரம்பியதாகவும் இருந்தது.

இ) எட்டாம் ஹென்றி கத்தோலிக்க திருச்சபையுடன் ஆழமான இறையியல் வேறுபாடுகளைக் கொண்டிருந்தார்.

ஈ) தேவாலயத்துக் கூட்டு வழிபாட்டின் முக்கியத்துவத்தையும், விழாக்களின் முக்கியத்துவத்தையும் ட்டென்ட் கவுன்சில் மீண்டும் வலியுறுத்தி அழுத்தம் தந்தது.

2. அ) புதிய தரை மற்றும் கடல்வழி கண்டுபிடிப்புகளால் பொருளாதார மையங்கள் இத்தாலிய நகர அரசுகளிலிருந்து ஸ்பெயின் மற்றும் போர்ச்சுகலுக்கு மாற்றப்பட்டன.

ஆ) குதிரைகள் அமெரிக்காவை பிறப்பிடமாகக் கொண்டவை.

இ) நவீன யுகத்தின் தொடக்க காலத்தில், பொருளாதார நடவடிக்கைகளில் அரசு தலையிடவில்லை.

ஈ) போர்ச்சுகீசியர்கள் அரேபியர்களுடன் இணைந்து இந்தியாவில் வாணிக நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

**IV. பொருத்துக:**

1. நிலபிரபுத்துவம் – அ] ஏகபோக வர்த்தகம்

2. மனிதாபிமானம் – ஆ] மதத்திற்குப் புறம்பானவர் மீது விசாரணை

3. நீதி விசாரணை – இ] ஐரோப்பாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையேயான வர்த்தகப் பரிமாற்றம்

4. மெர்க்கண்டலிசம் – ஈ] சமூக பொருளாதார அமைப்பின் படிநிலை

5. கொலம்பிய பரிமாற்றம் – உ] மனித கௌரவம்

**விடைகள்:**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. பெட்ரார்க், 2. ரஃபேல், 3. இரத்தத்தின் சுழற்சி, 4. மார்ட்டின் லூதர், 5. ஜான் கால்வின், 6. லோபோ கோன்ஸால்வ்ஸ், 7. ஃபெர்டினான்ட் மெகெல்லன், 8. அமெரிகோ வெஸ்புகி, 9. கோவா, 10. சர்க்கரைவள்ளிக்கிழங்கு

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. துருக்கியர், 2. எராஸ்மஸ், 3. மைக்கேல் ஆஞ்சலேயா, 4. எதிர்மத சீர்திருத்தம், 5. வங்கிகள் கூட்டுப்பங்கு, நிறுவனங்களின் தோற்றம், வர்த்தகத்தின் வளர்ச்சி

**III. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. தேவாலயத்துக் கூட்டு வழிபாட்டின் முக்கியத்துவத்தையும், விழாக்களின் முக்கியத்துவத்தையும் ட்டென்ட் கவுன்சில் மீண்டும் வலியுறுத்தி அழுத்தம் தந்தது, 2. புதிய தரை மற்றும் கடல்வழி கண்டுபிடிப்புகளால் பொருளாதார மையங்கள் இத்தாலிய நகர அரசுகளிலிருந்து ஸ்பெயின் மற்றும் போர்ச்சுகலுக்கு மாற்றப்பட்டன.

IV. பொருத்துக:

1. ஈ, 2. உ, 3. ஆ, 4. அ, 5. இ

9th Social Science Lesson 9

9] புரட்சிகளின் காலம்

உங்களுக்குத் தெரியுமா?

இங்கிலாந்து திருச்சபையைச் சீர்திருத்த வேண்டும் என்னும் நோக்கத்தில் செயல்பட்ட மதச் சீர்திருத்த இயக்கத்திற்குத் தலைமையேற்ற சீர்திருத்தவாதிகள், ரோமானியக் கத்தோலிக்கத் திருச்சபையின் போதனைகளையும் நடைமுறைகளையும் ஏற்க மறுத்தனர். இவர்களே பியூரிட்டானியர் (தூய நெறியாளர் எனப் பொருள்) என அறியப்பட்டனர். இங்கிலாந்து திருச்சபையைச் சீர்திருத்த இவர்கள் மேற்கொண்ட முயற்சிகளை முதலாம் ஜேம்ஸ், முதலாம் சார்லஸ் ஆகிய ஸ்டுவர்ட் வம்ச அரசர்களால் சகித்துக்கொள்ள முடியவில்லை. இவ்வரசர்கள் மேற்கொண்ட அடக்குமுறை நடவடிக்கைகளால் பெருவாரியான பியூட்டானியர் இங்கிலாந்திலிருந்து புலம் பெயர்ந்து வேறு பகுதிகளில் குடியேறினர். தாங்கள் உருவாக்கிய குடியேற்றங்களில் இவர்கள் பியூரிட்டானியர் வாழ்க்கை முறையை மேற்கொண்டனர்.

குவேக்கர்கள் இங்கிலாந்தில் ஜார்ஜ் பாக்ஸ் என்பவரால் நிறுவப்பட்ட நண்பர்கள் குழாம் என்னும் கிறித்துவ மதக் குழுவின் உறுப்பினர் ஆவர். புனித ஆவிக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்த இவர்கள் சடங்குச் சம்பிரதாயங்களையும், சமயக் குருமார் அமைப்பையும் எதிர்த்தனர். இவர்கள் போருக்கு எதிராகவும் அமைதிக்கு ஆதரவாகவும் மேற்கொண்ட பணிகளுக்காக நற்பெயர் பெற்றவர்களாவர்.

ஐரோப்பியர் அமெரிக்காவில் குடியேறுவதற்கு முன்பாகவே அம்மண்ணின் மைந்தர்களாக அமெரிக்காவைச் சொந்த நாடாகக் கொண்ட பூர்வ குடிகள் பொதுவாகச் செவ்விந்தியர் என அழைக்கப்பட்டவர்கள் (தற்போது அச்சொல் இழிவானதெனக் கருதப்படுவதால் வரலாற்று அறிஞர்கள் அச்சொல்லைப் பயன்படுத்துவதில்லை) அமெரிக்கா முழுவதும் பரவலாக வாழந்துவந்தனர். பல இனக்குழுக்களாகப் பிரிந்திருந்த அவர்கள் தங்களுக்குள்ளே போரிட்டுக்கொண்டிருந்தனர். மேலும் அடிமைச் சூழலில் வேலை செய்யவும் அவர்கள் மறுத்தனர். அரசியல் தந்திரம், வன்முறை ஆகிய இரண்டின் மூலமாக ஐரோப்பியர் அவ்வினக்குழுக்களைத் தோற்கடித்து அவர்களது இடங்களைக் கைப்பற்றினர். எண்ணிக்கையில் மிகக் குறைந்துவிட்ட அவர்கள் இன்றைய தினம் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட பகுதிகளில் வாழ்கின்றனர்.

**காரன்வாலிஸ்:** பிரபுக்கள் குடும்பத்தில் பிறந்த இவர் ஈட்டனிலும், கேம்பிரிட்ஜிலும் கல்வி கற்றார். 1757இல் இராணுவத்தில் சேர்ந்தார். 1762இல் தந்தையார் இறந்தபோது இவர் கோமான் காரன்வாலிஸ் ஆன பின்னர் இங்கிலந்து நாடாளுமன்றத்தின் மேலவையான பிரபுக்கள் அவையில் இடம் பெற்றார். அமெரிக்க விடுதலைப் போரின் போது இவர் மேற்கொண்ட போர் நடவடிக்கைகள் பாராட்டுக்குரியவையாக இருந்தன.

சில இடங்களில் அமெரிக்கப் படைகளைத் தோற்கடித்த இவர் இறுதியில் யார்க்டவுனில் தனது படைகளுடன் சரணடைந்தார். இத்தோல்விக்குப் பின்னும் அடுத்தடுத்து வந்த இங்கிலாந்து அரசாங்கங்களின் நம்பிக்கைக்கு உரியவராக இருந்து, தொடர்ந்து முக்கியப் பணிகளில் பணியமர்த்தப்பட்டார். 1786இல் நைட் (knight) பட்டம் சூட்டப்பட்ட அவர் அதே ஆண்டில் இந்தியாவில் ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியின் கவர்னர் ஜெனரலாகவும், இராணுவத்தின் தலைமைத் தளபதியாகவும் பணியமர்த்தப்பட்டார்.

**மனிதன் மற்றும் குடிமகனின் உரிமைகள் பிரகடனம்:** இப்பிரகடனம் லஃபாயட், தாமஸ் ஜெபர்சன், மிரபு ஆகியோர்களால் எழுதப்பட்டது. மனிதர்கள் மனிதர்களாய் இருப்பதினாலேயே இயல்பாகவே சில உரிமைகளைப் பெற்றுள்ளார்கள் என்பதை உறுதிப்படுத்தும் இயற்கை விதியை இது அடிப்படையாகக் கொண்டது. அவ்வுரிமைகள் உலகம் தழுவியவை அனைத்து இடங்களிலும் அனைத்துக் காலங்களிலும் செல்லத்தக்கவை. அறிவொளிக் காலத்துத் தத்துவஞானிகளால் ஈர்க்கப்பட்டு எழுதப்பட்ட இப்பிரகடனம் பிரெஞ்சுப் புரட்சியினுடைய லட்சியங்களின் சாரத்தை விளக்குவதாய் அமைந்தது. உலகளாவிய அளவில் சுதந்திரமும் ஜனநாயகமும் தழைத்தோங்குவதில் பெரும் தாக்கத்தை இப்பிரகடனம் ஏற்படுத்தியது.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. அமெரிக்காவில் ஏற்படுத்தப்பட்ட முதல் ஆங்கிலேய காலனி ---------------- ஆகும்.

(அ) நியூயார்க்

(ஆ) பிலடெல்பியா

(இ) ஜேம்ஸ்டவுன்

(ஈ) ஆம்ஸ்டெர்டாம்

2. பிரெஞ்சுப் புரட்சியின் முன்னோடியாக, வாஷிங்டனுடன் கூட்டுச் சேர்ந்து ஆங்கிலேருக்கு எதிராக போராடியவர் -----------------

(அ) மிரபு

(ஆ) லஃபாயெட்

(இ) நெப்போலியன்

(ஈ) டான்டன்

3. லஃபாயாட், தாமஸ் ஜெபர்சன், மிரபு ஆகியோர் --------------- எழுதினர்.

(அ) சுதந்திர பிரகடனம்

(ஆ) பில்னிட்ஸ் பிரகடனம்

(இ) மனிதன் மற்றும் குடிமகன் உரிமைகள் பற்றிய பிரகடனம்

(ஈ) மனித உரிமை சாசனம்

4. ---------------இல் ஆங்கிலேயரின் தோல்வி பிரான்சிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான நட்புக்கு வழிவகுத்தது.

(அ) டிரென்டன்

(ஆ) சாரடோகா

(இ) பென்சில் வேனியா

(ஈ) நியூயார்க்

5. பிரான்சில் அரச சர்வாதிகாரத்தின் சின்னமாக ----------- இருந்தது.

(அ) வெர்செயில்ஸ்

(ஆ) பாஸ்டைல் சிறைச்சாலை

(இ) பாரிஸ் கம்யூன்

(ஈ) ஸ்டேட்ஸ் ஜெனரல்

6. ஆஸ்திரியா மற்றும் பிரஷ்யாவின் படைகள், பிரெஞ்சுப் புரட்சியாளர் படைகளால் ------------- போர்க்களத்தில் தோற்கடிக்கப்பட்டன.

(அ) வெர்ணா

(ஆ) வெர்செயில்ஸ்

(இ) பில்னிட்ஸ்

(ஈ) வால்மி

7. "கான்டீட்" என்ற நூல் --------------ஆல் எழுதப்பட்டது.

(அ) வால்டேர்

(ஆ) ரூசோ

(இ) மாண்டெஸ்கியூ

(ஈ) டாண்டன்

8. பதினாறாம் லூயியின் கீழ்க் குறைந்தபட்ச அதிகாரங்களைக் கொண்ட முடியாட்சியைத் தக்க வைத்துக்கொள்ள விரும்பிய மிதவாத தாராளவாதிகள் ------------------

(அ) ஜெரோண்டியர்

(ஆ) ஜேக்கோபியர்

(இ) குடியேறிகள்

(ஈ) அரச விசுவாசிகள்

9. -----------ஆம் ஆண்டில் பாரிஸ் உடன்படிக்கையின்படி அமெரிக்க சுதந்திர அமைதி போர் முடிவுக்கு வந்தது.

(அ) 1776

(ஆ) 1779

(இ) 1781

(ஈ) 1783

10. தாமஸ் பெயின் எழுதிய புகழ்வாய்ந்த நூல் ------------- ஆகும்.

(அ) இயல்பறிவு

(ஆ) மனித உரிமைகள்

(இ) உரிமைகள் மசோதா

(ஈ) அடிமைத்தனத்தை ஒழித்தல்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. இரண்டாம் கண்டங்கள் மாநாட்டால் அஞ்சல்துறை தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டவர் ------------

2. பங்கர் குன்றுப் போர் நடைபெற்ற ஆண்டு -------------

3. ------------- சட்டம் கடனைத் தங்கமாகவும் வெள்ளியாகவும் திரும்பச் செலுத்த வற்புறுத்தியது.

4. பிரான்சின் தேசியச் சட்டமன்றத்தின் தலைவர் -------------- ஆவார்

5. சுதந்திரத்திற்கும் பகுத்தறிவிற்கும் பெரும் விழா நடத்தியதால் --------------- கில்லட்டினால் கொல்லப்பட்டார்.

6. பதினாறாம் லூயி பிரான்சை விட்டு தப்பியோட முயன்றபோது ---------------- நகரில் அவர் தனது குடும்பத்துடன் கைது செய்யப்பட்டார்.

**III. பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. (i) கடலாய்வுப் பயணங்களை மேற்கொண்டதில் போர்த்துகீசியர் முன்னோடியாவர்.

(ii) பென் என்ற குவேக்கரால் புதிய பிளைமவுத் பெயரிடப்பட்டது.

(iii) குவேக்கர்கள் போருக்கு ஆதரவாக இருந்தமைக்கு நற்பெயர் பெற்றனர்.

(iv) ஆங்கிலேயர்கள் நியூ ஆம்ஸ்டர்டாமை நியூயார்க் என பெயர் மாற்றம் செய்தனர்.

(அ) i மற்றும் ii சரியானவை

(ஆ) iii சரி

(இ) iv சரி

(ஈ) i மற்றும் iv சரியானவை.

2. i) அமெரிக்க விடுதலைப் போர் இங்கிலாந்துடன் செய்யப்பட்ட போராக மட்டுமல்லாது உள்நாட்டுப் போராகவும் அமைந்தது.

ii) ஆங்கிலேயப் படைகள் யார்க்டவுனில் வெற்றிபெற்றன.

iii) வளர்ந்துவரும் நடுத்தர வர்க்கத்தினரைப் பிரெஞ்சு பிரபுக்கள் ஆதரித்தனர்.

iv) ஆங்கிலேய நாடாளுமன்றம் காகிதத்தின் மீதான வரி நீங்கலாக ஏனைய பொருட்களின் மீதான டவுன்ஷெண்ட் சட்டங்களை ரத்து செய்தது.

(அ) i மற்றும் ii சரியானவை

(ஆ) iii சரி

(இ) iv சரி

(ஈ) i மற்றும் iv சரியானவை

3. கூற்று (கூ): ஆங்கிலேயப் பொருட்களைப் பாஸ்டன் வணிகர்கள் புறக்கணித்தனர்.

காரணம் (கா): ஆங்கிலேய நிதி அமைச்சர், அமெரிக்க காலனிகளில் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மீது புதிய வரி அறிமுகப்படுத்தினார்.

அ) கூற்று சரி, காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல

ஆ) கூற்று தவறு, காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல

இ) கூற்று சரி, காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்

ஈ) கூற்றும் காரணமும் தவறானவை

4. கூற்று (கூ): கட்டாய இராணுவச் சேவைக்கு எதிராக வெண்டி என்னுமிடத்தில் விவசாயிகள் ஒரு பெரும்புரட்சி செய்தனர்.

காரணம் (கா): அரசரின் ஆதரவாளர்கள் விவசாயிகள் அவருக்கெதிராகப் போரிட விரும்பவில்லை.

(அ) கூற்றும் காரணமும் தவறானவை

(ஆ) கூற்றும் காரணமும் சரியானவை

(இ) கூற்று சரி, காரணம் தவறு

(ஈ) கூற்று தவறு, காரணம் சரி

**IV. பொருத்துக:**

1. ஜான் வின்திராப் – அ] பிரான்சின் நிதி அமைச்சர்

2. டர்காட் – ஆ] ஜீலை 4

3. சட்டத்தின் சாரம் – இ] இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ்

4. மேரி அண்டாய்னெட் – ஈ] மாசாசூசட்ஸ் குடியேற்றம்

5. ஏழாண்டுப்போர் – உ] பதினாறாம் லூயி

6. அமெரிக்கச் சுதந்திர தினம் – ஊ] மான்டெஸ்கியூ

**விடைகள்:**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. ஜேம்ஸ்டவுன், 2. லஃபாயெட், 3. மனிதன் மற்றும் குடிமகன் உரிமைகள் பற்றிய பிரகடனம், 4. சாரடோகா, 5. வெர்செயில்ஸ், 6. வால்மி, 7. வால்டேர், 8. ஜெரோண்டியர், 9. 1783, 10. இயல்பறிவு

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. பெஞ்சமின் பிராங்கிளின், 2. 1775, ஜூன் 17, 3. செலவாணிச், 4. மிரபு, 5. ஹெர்பர்ட், 6. வெர்னே

**III. பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. i மற்றும் iv சரியானவை, 2. i மற்றும் ii சரியானவை, 3. கூற்று சரி, காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும், 4. கூற்று சரி, காரணம் தவறு

**IV. பொருத்துக:**

1. ஈ, 2. அ, 3. ஊ, 4. உ, 5. இ, 6. ஆ

9th Social Science Lesson 10

10] தொழிற்புரட்சி

**உங்களுக்குத் தெரியுமா?**

இங்கிலாந்தில் 1750இல் 4. 7 மில்லியன் டன்களாக இருந்த நிலக்கரி உற்பத்தி 1900இல் 250 மில்லியன் டன்களாக அதிகரித்தது.

1806இல் பிரான்சில் வேளாண்மை உற்பத்தியில் ஈடுபட்ட மக்கள் தொகை 65. 1 விழுக்காடாக இருந்தது. 1896இல் இது 42. 5 விழுக்காடாகக் குறைந்தது. அதே காலகட்டத்தில் தொழில் துறையில் வேலைவாய்ப்புகளின் பங்கு 20. 4 விழுக்காட்டில் இருந்து 31. 4 விழுக்காடாக அதிகரித்தது.

நீராவி இயந்திரப் பயன்பாட்டால் 1837இல் 419 ஆக இருந்த பிரஷ்ய தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 1849இல் 1, 444 ஆக உயர்ந்தது. 1820இல் பத்து இலட்சம் டன்களாக இருந்த நிலக்கரி உற்பத்தி, அடுத்த 30 ஆண்டுகளில் அறுபது இலட்சம் டன்களுக்கும் அதிகமாக உயர்ந்தது. 1810இல் 46, 000 டன்களாக இருந்த இரும்பு உற்பத்தி, 1850 வாக்கில் 5, 29, 000 டன்களாக அதிகரித்தது. 1850இல் 3, 638 மைல் நீளமாக இருந்த ரயில்பாதை 1870இல் 11, 600 மைல் நீளமாக அதிகரித்தது.

போட்டிகளைக் கட்டுப்படுத்தவும் விலை உயர்வைத் தக்க வைக்கவும் உற்பத்தியாளர்கள் அல்லது விநியோகிப்பாளர்கள் ஏற்படுத்திக் கொள்ளும் கூட்டமைப்பே கார்டெல் ஆகும்.

1846இல் எலியாஸ் ஹோவே என்ற அமெரிக்கர் துணி தைக்கும் "தையல் இயந்திரத்தை"க் கண்டுபிடித்தார். துணிகளை வெண்மையாக்குவது, சாயமிடுவது, அச்சிடுவது போன்ற புதிய முறைகளின் கண்டுபிடிப்புகளால் 19ஆம் நூற்றாண்டின் முதல் பாதியில் பல்வேறு நிறங்களில் துணிகளைத் தயாரிக்க முடிந்தது.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. நீராவி படகுப் போக்குவரத்துச் சேவையை நிறுவியவர் யார்?

(அ) ஆர்க்ரைட்

(ஆ) சாமுவேல் கிராம்ப்டன்

(இ) ராபர்ட் ஃபுல்டன்

(ஈ) ஜேம்ஸ் வாட்

2. மான்செஸ்டர் நகரம் ஏன் ஜவுளி உற்பத்திக்கு உகந்த இடமாக கருதப்பட்டது?

(அ) நிலம் கிடைக்கப்பெற்றமை

(ஆ) மிகுந்த மனித வளம்

(இ) நல்ல வாழ்க்கைச் சூழல்

(ஈ) குளிர்ச்சியாக தட்பவெப்ப நிலை

3. தையல் இயந்திரத்தைக் கண்டுபிடித்தவர் யார்?

(அ) எலியாஸ் ஹோவே

(ஆ) எலி–விட்னி

(இ) சாமுவேல் கிராம்டன்

(ஈ) ஹம்ப்ரி டேவி

4. நீராவி இயந்திரத்தை பிரான்சில் அறிமுகம் செய்த குடும்பம் எது?

(அ) டி வெண்டெல்

(ஆ) டி ஹிண்டல்

(இ) டி ஆர்மன்

(ஈ) டி ரினால்ட்

5. சிலேட்டரை அமெரிக்கத் தொழில் புரட்சியின் தந்தை என அழைத்தவர் யார்?

(அ) எப். டி. ரூஸ்வெல்ட்

(ஆ) ஆண்ட்ரூ ஜேக்சன்

(இ) வின்ஸ்டன் சர்ச்சில்

(ஈ) உட்ரோ வில்சன்

6. கீழ்க் காண்பனவற்றில் எது ஹே மார்க்கெட் நிகழ்ச்சியின் நினைவு நாளாகக் கடைபிடிக்கப்படுகிறது?

(அ) சுதந்திர தினம்

(ஆ) உழவர் தினம்

(இ) உழைப்பாளர் தினம்

(ஈ) தியாகிகள் தினம்

7. எங்கு ஜோல் வெரெய்ன் சுங்க ஒன்றியம் உருவாக்கப்பட்டது?

(அ) இங்கிலாந்து

(ஆ) ஜெர்மனி

(இ) பிரான்ஸ்

(ஈ) அமெரிக்கா

8. பிரான்சில் முதல் மோட்டார் வாகனங்களை உற்பத்தி செய்தவர் யார்?

(அ) லூயி ரெனால்ட்

(ஆ) அர்மான் பியூகாட்

(இ) தாமஸ் ஆல்வா எடிசன்

(ஈ) மெக் ஆடம்

9. எக்கண்டுபிடிப்பு பருத்தியிலிருந்து கொட்டைகளைப் பிரித்தது?

(அ) உருட்டாலைகள்

(ஆ) பஞ்சுக் கடைசல் இயந்திரம்

(இ) ஸ்பின்னிங் மியூல்

(ஈ) இயந்திர நூற்புக்கருவி

10. கீழ்க்காண்பனவற்றில் எது இரும்பை உருக்குவதற்காக முற்காலத்தில் பயன்படுத்தப்பட்டது?

(அ) கற்கரி

(ஆ) கரி

(இ) விறகு

(ஈ) காகிதம்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. ------------------ இங்கிலாந்தில் ஆடவர்க்கு வாக்குரிமை கோரியது.

2. ----------------- உலகம் முழுவதும் சாலைகள் அமைக்கப்படும் முறையை மாற்றியமைத்தது.

3. விரைவாகவும் குறைந்த செலவிலும் எஃகை உற்பத்தி செய்யும் முறையை ------------- கண்டுபிடித்தார்.

4. விஞ்ஞான சோசலிஸத்தை முன்வைத்தவர் --------------- ஆவார்.

5. ஜெர்மனியில் முதல் இருப்புப்பாதை ---------------- ஆண்டில் இயக்கப்பட்டது.

**III. பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. i) இங்கிலாந்துச் சுரங்க முதலாளிகள் சுரங்கங்களுக்குள் நீர்க்கசிவு ஏற்படும் பிரச்சனையை எதிர்கொண்டனர்.

ii) இவ்வேலையில் மனித உழைப்பை ஈடுபடுத்துவது குறைவான செலவுடையதாக இருக்கும்.

iii) சுரங்கங்களிலிருந்து நீரை வெளியேற்றும் நீராவி இயந்திரத்தை நியூட்டன் கண்டுபிடித்தார்.

iv) சுரங்கங்களிலிருந்து நிலக்கரியைப் பெற வேண்டுமானால் நீரை வெளியேற்றியாக வேண்டும்.

(அ) i சரி

(ஆ) ii மற்றும் iii சரி

(இ) i மற்றும் iv சரி

(ஈ) iii சரி

2. i) தங்கள் உரிமைகளைப் பெறுவதற்காகத் தொழிலாளர்கள் தொழிற்சங்கங்களை உருவாக்கிக் கொண்டனர்.

ii) ஜெர்மனியின் அரசியல் முறை தொழிற்புரட்சிக்குக் குறிப்பிடத்தக்க முக்கியச் சவாலாக அமைந்திருந்தது.

iii) முதலாளிகளைப் பாதுகாப்பதற்காகக் கார்ல் மார்க்ஸ் சோசலிஸத்தை முன்வைத்தார்.

iv) ஜெர்மனியில் இயற்கை வளங்கள் ஏதுமில்லை

(அ) i சரி

(ஆ) ii மற்றும் iii சரி

(இ) i மற்றும் iv சரி

(ஈ) iii சரி

3. கூற்று: விடுமுறை பெறுவதற்குத் தொழிலாளர் உரிமை பெற்றிருந்தனர்.

காரணம்: பணியாளர்களைப் பாதுகாக்கச் சட்டங்கள் இருந்தன.

(அ) கூற்று சரி காரணம் தவறு

(ஆ) கூற்று, காரணம் இரண்டுமே தவறு

(இ) கூற்று, காரணம் இரண்டுமே சரி

(ஈ) கூற்று சரி காரணம் கூற்றுக்குச் சரியான விளக்கமல்ல.

4. கூற்று: சிலேட்டர் அமெரிக்கத் தொழிற்புரட்சியின் தந்தை என அழைக்கப்படுகிறார்.

காரணம்: அவருடைய நூற்பாலையின் நகலாகப் பல நூற்பாலைகள் உருவாயின. அவருடைய தொழில் நுட்பம் பிரபலமானது.

(அ) கூற்று சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம்.

(ஆ) கூற்று தவறு, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம்.

(இ) கூற்று, காரணம் இரண்டுமே தவறு

(ஈ) கூற்று, காரணம் இரண்டுமே சரி.

**<u>IV. பொருத்துக:</u>**

1. பென்ஸ் – அ] அமெரிக்கா

2. பாதுகாப்பு விளக்கு – ஆ] லூயி ரொனால்ட்

3. நான்கு சக்கரவாகனம் – இ] ஹம்பரி டேவி

4. மாபெரும் ரயில்வே ஊழியர் போராட்டம் – ஈ] லங்காஷையர்

winmeen.com

5. நிலக்கரி வயல் – உ] ஜெர்மனி

**விடைகள்:**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. ராபர்ட் ஃபுல்டன், 2. குளிர்ச்சியாக தட்பவெப்ப நிலை, 3. எலியாஸ் ஹோவே, 4. டி வெண்டெல், 5. ஆண்ட்ரூ ஜேக்சன், 6. உழைப்பாளர் தினம், 7. ஜெர்மனி, 8. அர்மான் பியூகாட், 9. பஞ்சுக் கடைசல் இயந்திரம், 10. கற்கரி

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. சாசன இயக்கம், 2. சாலை அமைக்கும் முறை, 3. ஹென்றி பெஸ்ஸிமர், 4. கார்ல் மார்க்ஸ், 5. 1835

**III. பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. i மற்றும் iv சரி, 2. i மற்றும் ii சரி, 3. கூற்று, காரணம் இரண்டுமே தவறு, 4. கூற்று சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம்

**IV. பொருத்துக:**

1. உ, 2. இ, 3. ஆ, 4. அ, 5. ஈ

## 9th Social Science Lesson 11

## 11] ஆசிய ஆப்பிரிக்க நாடுகளில் காலனியாதிக்கம்

**உங்களுக்குத் தெரியுமா?**

1884–85இல் நடைபெற்ற பெர்லின் மாநாடு, காங்கோ மாநாடு அல்லது மேற்கு ஆப்பிரிக்க மாநாடு எனவும் அறியப்படுகிறது. மத்திய ஆப்பிரிக்காவில் உள்ள காங்கோ நதி வடிநிலத்துடன் தொடர்புடைய அனைத்துப் பிரச்சனைகளையும் தீர்ப்பதற்காகவே இம்மாநாடு கூடியது. காங்கோ நதியின் வடிநிலத்தைக் கட்டுப்படுத்த தனக்குள்ள உரிமை குறித்து விவாதிப்பதற்காகப் போர்த்துகலின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. பெர்லின் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட பொதுச் சட்டம் காங்கோ நதியின் வடிநிலம் பொதுவானதெனவும் அங்கு வணிக கப்பல்களைச் செலுத்துவதற்கான உரிமை அனைத்து நாடுகளுக்கு உண்டு எனவும் பிரகடனப்படுத்தியது.

**கர்னல் பென்னிகுயிக்:** பென்னிகுயிக் ஓர் இராணுவப் பொறியாளரும், குடிமைப்பணியாளரும், சென்னை மாகாணச் சட்டமன்ற மேலவை உறுப்பினரும் ஆவார். மேற்கு நோக்கி ஓடும் பெரியார் ஆற்றின் நீரை ஓர் அணையைக் கட்டி கிழக்கு நோக்கித் திருப்பினால் வைகை ஆற்றைச் சார்ந்திருக்கும் இலட்சக்கணக்கான புன்செய் நிலங்களைப் பாசன வசதி கொண்டவையாக மாற்ற முடியும் என அவர் முடிவு செய்தார். பென்னிகுயிக்கும் ஏனைய ஆங்கிலேயப் பொறியாளர்களும் இயற்கையின் சீற்றத்தையும் வனவிலங்குகள், விஷ உயிரினங்கள் ஆகியவற்றின் ஆபத்துக்களையும் எதிர்கொண்டு அணையின் கட்டுமானப் பணிகளை மேற்கொண்ட போது இடைவிடாத மழையால் இடையூறுகள் ஏற்பட்டன. ஆங்கிலேய அரசிடமிருந்து போதுமான அளவுக்கு நிதியைப் பெறமுடியாத நிலையில் பென்னிகுயிக் இங்கிலாந்து சென்று தனது குடும்பச் சொத்துக்களை விற்று, அப்பணத்தைக் கொண்டு அணையைக் கட்டி முடித்தார். அணைகட்டும்

பணிகள் 1895இல் முடிவுற்றன. முல்லைப் பெரியார் அணை, தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்ட வேளாண் நிலங்களுக்குத் தொடர்ந்து பாசன வசதி அளித்து வருகிறது.

ஒப்பந்தக் கூலிமுறை என்பது தண்டனைக்குரிய ஓர் ஒப்பந்த முறையாகும். இவ்வொப்பந்தத்தின்படி ஒப்பந்தக் கூலியான ஒருவர் வேலை செய்ய மறுத்தாலோ, வேலைக்கு வராமல் போனாலோ, அவருடைய முதலாளியின் ஆணைகளுக்குப் பணிய மறுத்தாலோ பணியிடத்தில் காணப்படாவிட்டாலோ அவர் ஊதியம் மறுக்கப்படுதல் அல்லது சிறைத் தண்டனைகளுக்கு உள்ளாவார். 1842–1870 ஆகிய ஆண்டுகளுக்கிடையே மொத்தம் 5, 25, 482 இந்தியர்கள் இங்கிலாந்து, பிரான்சு ஆகியவற்றுக்குச் சொந்தமான காலனிகளில் குடியேறினர். அவர்களில் 3, 51, 401 பேர் மொரீசியசுக்கும், 76, 691 பேர் டிமெராராவுக்கும், 42, 519 பேர் டிரினிடாடுவுக்கும், 15, 169 பேர் ஜமைக்காவுக்கும், 6, 448 பேர் நேட்டாலுக்கும், 15, 005 பேர் ரீயூனியனுக்கும் சென்றனர். ஏனைய பிரெஞ்சு காலனிகளுக்கு 16, 341 பேர் சென்றனர். ஏற்கெனவே மொரீசியஸ் சென்ற 30, 000 நபர்களையும் இலங்கை, மலேசியா ஆகிய இடங்களுக்கு சட்டத்திற்குப் புறம்பாகப் பிரெஞ்சுக் காலனிகளுக்கும் அனுப்பப்பட்டவர்களையும் மேற்சொன்ன புள்ளிவிவரக் கணக்கில் சேர்க்கவில்லை. இவ்வாறாக 1870களில் ஒப்பந்தக் கூலிமுறை, இந்தியத் தொழிலாளர்களைக் கடல் கடந்த காலனிகளுக்கு அனுப்புவது, சட்ட ரீதியாக ஐரோப்பியக் காலனிகளிலுள்ள பெரும் பண்ணைகளுக்கு அடிமை உழைப்பை வழங்கியது.

**பிரிட்டிஷ் இந்தியாவில் பஞ்சங்கள்:** 1770ஆம் ஆண்டு வங்காளப் பஞ்சம் மிகப் பெருமளவில் ஒரு கோடி மக்களின் அல்லது ஏறத்தாழ வங்காள மக்கட் தொகையில் மூன்றில் ஒரு பகுதியினரின் உயிரைக் குடித்தது. இவ்வாறு தான் ஆங்கிலேயரது ஆட்சி இந்தியாவில் தொடங்கியது. இதைப் போலவே ஆங்கிலேயரது ஆட்சி முடியும் தருவாயில் 1943இல் வங்காளத்தில் ஏற்பட்ட பஞ்சம் முப்பது இலட்சம் மக்களைப் பலி கொண்டது. 1998இல் நோபல் பரிசு பெற்ற அமர்த்தியா சென் ஒரு சிறுவனாகக் கொல்கத்தாவின் வீதிகளில் பஞ்சத்தால் மனிதர்கள் செத்து மடிந்ததைப் பார்த்தார். அது குறித்து அவர் வழக்கமான ஆய்வுப்பாதையிலிருந்து விலகிப் புதிய பரிமாணத்தில் ஆய்வு செய்துள்ளார்.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. பிரான்ஸிஸ் லைட் -------------- பற்றி ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

(அ) நறுமணத் தீவுகள்

(ஆ) ஜாவா தீவு

(இ) பினாங்குத் தீவு

(ஈ) மலாக்கா

2. 1896இல் -------------- நாடுகள் ஒருங்கிணைக்கப்பட்டு மலாய் ஐக்கிய நாடுகள் உருவாக்கப்பட்டது.

(அ) நான்கு

(ஆ) ஐந்து

(இ) மூன்று

(ஈ) ஆறு

3. இந்தோ–சீனாவில் ––––––––––––––––– மட்டுமே பிரான்சின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருந்த பகுதியாகும்.

(அ) ஆனம்

(ஆ) டோங்கிங்

(இ) கம்போடியா

(ஈ) கொச்சின்–சீனா

4. ––––––––––––––– பகுதியில் தங்கம் கண்டுபிடிக்கப்பட்டதானது பெருமளவிலான ஆங்கிலேய சுரங்கத் தொழில் செய்வோர் ஜோகன்னஸ்பர்க்கிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் குடியேற வழி வகுத்தது.

(அ) டிரான்ஸ்வால்

(ஆ) ஆரஞ்சு சுதந்திர நாடு

(இ) கேப் காலனி

(ஈ) ரொடீஷியா

5. இந்தியாவுடன் வணிக உறவை நிறுவிக் கொண்ட முதல் ஐரோப்பிய நாட்டினர் ––––––––––––––––

(அ) போர்த்துகீசியர்

(ஆ) பிரெஞ்சுக்காரர்

(இ) டேனிஷார்

(ஈ) டச்சுக்காரர்

6. ஒப்பந்தக் கூலி முறையானது ஒரு வகை ––––––––––––––––––

(அ) ஒப்பந்தத் தொழிலாளர் முறை

(ஆ) அடிமைத்தனம்

(இ) கடனுக்கான அடிமை ஒப்பந்தம்

(ஈ) கொத்தடிமை

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. –––––––––––––––––– மாநாடு ஆப்பிரிக்காவை ஐரோப்பிய நாடுகளின் செல்வாக்கு மண்டலங்களாகப் பிரித்துக்கொள்வது எனத் தீர்மானித்தது.

2. வங்காளம், பீகார், ஒரிசா ஆகிய பகுதிகளின் ஜமீன்தார்களோடு மேற்கொள்ளப்பட்ட தீர்வு ––––––––––––––– என்றழைக்கப்படுகிறது.

3. ஆங்கிலேயரின் முக்கிய வருவாயாக திகழ்ந்தது –––––––––––––––––– ஆகும்.

4. தமிழ் மொழி பேசப்பட்ட பகுதிகளில் –––––––––––––––– வட்டிக்கு கடன் கொடுக்கும் தொழிலில் இருந்தனர்.

**III. பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. (i) 19ஆம் நூற்றாண்டின் கடைசிக் காலாண்டுப் பகுதிவரை சகாராவுக்குத் தெற்கேயிருந்த ஆப்பிரிக்கா வெளியுலகுக்கு தெரியாமல் இருந்தது.

(ii) 1864ஆம் ஆண்டில் கோல்டு கோஸ்டில் அமைந்துள்ள கடற்கரைப் பகுதி நாடுகள் இங்கிலாந்தின் காலனிகளாயின.

(iii) 500 ஆண்டு காலத்திற்கும் மேலாக ஸ்பெயின் பிலிப்பைன்ஸை ஆட்சி செய்தது.

(iv) ஒடிசா பஞ்சம் 78–1876இல் நடைபெற்றது.

(அ) i சரி

(ஆ) ii சரி

(இ) ii மற்றும் iii சரி

(ஈ) iv சரி

2. (i) 1640இல் பிரெஞ்சுக்காரர்கள் ஜாவாவையும் சுமத்ராவையும் கைப்பற்றினர்.

(ii) மலாக்காவைக் கைப்பற்றியதின் மூலம் ஆங்கிலக் குடியேற்றங்களைக் கைப்பற்றும் பணியை டச்சுக்காரர் தொடங்கினர்.

(iii) காங்கோ ஆற்றின் வடிநிலத் தீரத்தோடு தொடர்புடைய அனைத்துப் பிரச்சனைகளையும் பேசித் தீர்ப்பதற்காகவே பெர்லின் மாநாடு கூடியது.

(iv) சுல்தான் ஜான்ஜிபாரின் பகுதிகள் பிரான்சு மற்றும் ஜெர்மனியின் செல்வாக்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டன.

(அ) i சரி

(ஆ) i மற்றும் ii சரி

(இ) iii சரி

(ஈ) iv சரி

3. கூற்று: சென்னை மகாணத்தில் 1876–1878 ஆண்டுகளில் நிலவிய பஞ்சத்திற்கு முன்னர் பெரும் வறட்சி நிலவியது.

காரணம்: காலனியரசு உணவுதானிய வணிகத்தில் தலையிடாக் கொள்கையைப் பின்பற்றியது.

(அ) கூற்று சரி, காரணம் தவறு

(ஆ) கூற்று, காரணம் இரண்டுமே தவறு

(இ) கூற்று சரி, காரணம் கூற்றுக்குச் சரியான விளக்கமல்ல

(ஈ) கூற்று சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம்

4. கூற்று: பெர்லின் மாநாடு இரண்டாம் லியோபோல்டை சுதந்திர காங்கோ நாட்டில் ஆட்சி செய்ய அனுமதி வழங்கியது.

காரணம்: பெல்ஜியம் அரசர் இரண்டாம் லியோபோல்டு காங்கோவின் மீது அக்கறை கொண்டிருந்தார்.

(அ) கூற்றும் காரணமும் சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்

(ஆ) கூற்றும் காரணமும் சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல

(இ) கூற்று சரி, காரணம் கூற்றுக்குச் சரியான விளக்கமல்ல

(ஈ) கூற்று தவறு, காரணம் சரி

**IV. பொருத்துக:**

1. லியோபோல்டு – அ] எத்தியோப்பியா

2. மெனிலிக் – ஆ] வியட்நாம்

3. சிசல் ரோடெஸ் – இ] பெல்ஜியம்

4. வங்காளப் பஞ்சம் – ஈ] கேப் காலனி

5. போ தெய் – உ] 1770

**விடைகள்:**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. பினாங்குத் தீவு, 2. நான்கு, 3. கொச்சின்–சீனா, 4. டிரான்ஸ்வால், 5. போர்த்துகீசியர், 6. கடனுக்கான அடிமை ஒப்பந்தம்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. பெர்லின் குடியேற்ற'நாட்டு, 2. நிலையான நிலவரித் திட்டம், 3. நிலவரி, 4. நாட்டு கோட்டைச் செட்டியார்

**III. பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. i சரி, 2. iii சரி, 3. கூற்று சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம், 4. கூற்றும் காரணமும் சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.

**IV. பொருத்துக:**

1. இ, 2. அ, 3. ஈ, 4. உ, 5. ஆ

## 9th Social Science Lesson 12

## 12] நிலக்கோளம் – I புவி அகச்செயல்பாடுகள்

**உங்களுக்குத் தெரியுமா?**

புவியானது பாறையினால் ஆன பந்து போன்ற அமைப்புடையது. இதனை நிலக்கோளம் (Lithosphere) எனவும் நீரினால் சூழப்பட்ட பகுதியை நீர்க்கோளம் (hydrosphere) எனவும், காற்றால் சூழப்பட்ட பகுதி வளிக்கோளம் (Atmosphere) எனவும் அழைக்கப்படுகின்றன. இம்மூன்றும் கோளங்களும் சந்திக்கும் இடத்தில் உயிரினங்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழ்நிலை உள்ளதால் இப்பகுதி உயிர்க்கோளம் (Biosphere) எனப்படுகிறது.

winmeen.com

புவியின் திடமான மேற்பரப்பு நிலக்கோளம் ஆகும். புவியைச் சூழ்ந்துள்ள வாயுக்களால் ஆன மெல்லிய அடுக்கு வாயுக்கோளம் ஆகும். புவியின் மேற்பரப்பிலுள்ள பெருங்கடல்கள், ஆறுகள், ஏரிகள் மற்றும் துருவப்பணி பாலங்களால் ஆன நீர்ப்பகுதி நீர்க் கோளம் ஆகும். இம்மூன்று கோளங்களும் ஒன்று சேர்வதால் உயிர் உருவாகும் என்பதால் உயிர் கோளம். இதன் படி பூமி, உயிர் கோளமாகும். உயிரினங்கள் வாழும் அடுக்கு உயிர்க்கோளம் ஆகும்.

"நிலக்கோளம்" மற்றும் "புவிமேலோடு" ஆகிய இரண்டும் வெவ்வேறானவை ஆகும். புவி மேலோட்டினையும், கவசத்தின் மேற்பகுதியையும் உள்ளடக்கியதே பறைக் கோளமாகும். புவிநிகர் கோள்கள் (Terrestial Planets) அனைத்தும் பாறைக்கோளத்தைக் கொண்டுள்ளன. புதன், வெள்ளி மற்றும் செவ்வாய்க் கோள்களின் நிலக்கோளம், புவியின் பாறைக் கோளத்தை விட தடிமனாகவும், கடினமாகவும் உள்ளது.

ஜோர்டானில் உள்ள மிகப்பழமையான நகரமான "பெட்ரா" நகரம் முழுவதும் பாறைகளைக் குடைந்து முழுவதும் பாறைகளைக் குடைந்து உருவாக்கப்பட்டதாகும். பாறைகளைக் குடைந்து உருவாக்கப்பட்ட கட்டிடக் கலைச்சான்றுகள் இந்தியாவில் ஏராளமாக உள்ளன. மகாராஷ்டிராவில் உள்ள அஜந்தா மற்றும் எல்லோரா குகைகள், கர்நாடகாவில் உள்ள ஐஹோல், பதாமி கோவில்கள், ஒடிசாவில் உள்ள கோனார்க் கோவில், தமிழ்நாட்டில் உள்ள மாமல்லபுரம் கோவில் இதற்குச் சான்றுகளாகும்.

2011 வரை உலகிலேயே மிக ஆழமான பகுதி இரஷ்யாவின் மார்மான்ஸ்க் (Murmansk) இல் உள்ள கோலா சூப்பர் ஹோல் (Kola Super Hole) (12, 262 மீ ஆழம்) ஆகும். 2012ல் Z – 44 சாவ்யோ கிணறு (இரஷ்யா) (12, 376 மீ ஆழம்) மிக ஆழமான பகுதி என்ற அந்தஸ்தை பெற்றிருக்கிறது. இது துபாயில் உள்ள புரூஸ் காலிஃபாவை விட 15 மடங்குப் பெரியது. புவியின் உட்புறத்தை பற்றிய ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன.

C. F. ரிக்டர் என்பவர் புவி அதிர்வு அளவையைக் கண்டுபிடித்தார். இந்த அளவை புவி மேல் மையத்திலிருந்து வெளிப்படும் சக்தியையும், புவி அதிர்வின் தீவிரத்தையும் அறிந்து கொள்ள உதவுகிறது. இந்த அளவைக்கு எல்லை வரையறை இல்லை. சிலி நாட்டில் 1960 ஆம் ஆண்டு பயோ–பயோ என்ற இடத்தில் ரிக்டர் அலகில் 9. 5 ஆகப் பதிவான புவி அதிர்ச்சியே மிக உயர்ந்த பதிவாக கருதப்படுகிறது.

புவி அதிர்வுகளை பதிவு செய்யும் கருவிக்கு 'நில அதிர்வு அளவைப் படம்' (Seismometer) அல்லது 'நில அதிர்வுமானி' என்று பெயர். நில அதிர்வு பற்றிய படிப்பிற்கு 'நில அதிர்வியல்' (Seismology) என்று பெயர்.

'வல்கனோ' (Volcano) என்ற சொல் இலத்தீன் மொழியிலுள்ள 'வல்கேன்' (Vulcan) என்ற சொல்லாகும். இது 'ரோமானிய நெருப்புக் கடவுளின்' பெயராகும்.

2004, டிசம்பர் 26–ல் இந்தியப் பெருங்கடலில் ஆழிப்பேரலை உண்டானது. இந்தோ–ஆஸ்திரேலியத் தட்டு யுரேசியத்தட்டின் கீழே அமிழ்ந்ததே இதற்குக் காரணமாகும். இது ரிக்டர் அளவையில் 9–ஆகப் பதிவானது. இந்தப் புவி அதிர்வால் கடல் தரைத்தளம் உயர்த்தப்பட்டு கடல் நீர் மட்டத்தை உயர்த்தியது.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. புவியின் திடமான தன்மைக்கொண்ட மேல்புற அடுக்கை -------------- என்று அழைக்கின்றோம்.

(அ) கருவம்

(ஆ) கவசம்

(இ) புவிமேலோடு

(ஈ) உட்கரு

2. புவியினுள் உருகிய இரும்பைக் கொண்ட அடுக்கை ---------- என்று அழைக்கின்றோம்.

(அ) கருவம்

(ஆ) வெளிக்கரு

(இ) கவசம்

(ஈ) மேலோடு

3. பாறைக்குழம்பு காணப்படும் அடுக்கு ----------------

(அ) புவிமேலோடு

(ஆ) கவசம்

(இ) கருவம்

(ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

4. டையஸ்ட்ரோபிசம்---------------- உடன் தொடர்புடையது

(அ) எரிமலைகள்

(ஆ) புவி அதிர்ச்சி

(இ) புவி தட்டு நகர்வு

(ஈ) மடிப்புகள் மற்றும் பிளவுகள்

5. புவித்தட்டுகளின் நகர்வு ------------------ ஆற்றலை வெளிப்படுத்துகிறது.

(அ) நீர் ஆற்றல்

(ஆ) வெப்ப ஆற்றல்

(இ) அலையாற்றல்

(ஆ) ஓத ஆற்றல்

6. ஆதியில் கோண்டுவானா நிலப்பகுதி -------------- நோக்கி நகர்ந்தது.

(அ) வடக்கு

(ஆ) தெற்கு

(இ) கிழக்கு

(ஈ) மேற்கு

7. பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன், இந்தியா -------------- கண்டத்தின் ஒரு பகுதியாக இருந்தது.

(அ) கோண்டுவானா

(ஆ) லொரேசியா

(இ) பாந்தலாசா

(ஈ) பாஞ்சியா

8. பவித்தட்டுகள் நகர்வதால் ஏற்படும் அழுத்தம் மற்றும் இறுக்கத்தின் காரணமாக ஏற்படும் விரிசல் ----------- எனப்படும்.

(அ) மடிப்பு

(ஆ) பிளவு

(இ) மலை

(ஈ) புவி அதிர்வு

9. எரிமலை மேல்பகுதியில் கிண்ணம் போன்ற பள்ளமான அமைப்பினை ----------------- என்று அழைக்கின்றோம்.

(அ) எரிமலை வாய்

(ஆ) துவாரம்

(இ) பாறைக்குழம்புத் தேக்கம்

(ஈ) எரிமலைக்கூம்பு

10. புவி அதிர்வு உருவாகும் புள்ளி ------------------ என்று அழைக்கப்படுகிறது.

(அ) மேல்மையம்

(ஆ) கீழ்மையம்

(இ) புவி அதிர்வு அலைகள்

(ஈ) புவி அதிர்வின் தீவிரம்

**II. பொருத்துக:**

அ) உட்புறச்செயல்கள் – அ] நில அதிர்வு அளவைப்படம்

ஆ) கவசம் – ஆ] புவித்தட்டு அமிழ்தல்

இ) இணையும் எல்லை – இ] எரிமலை வெடிப்பு

ஈ) புவிஅதிர்ச்சி – ஈ] பசிபிக் பெருங்கடல்

உ) கூட்டு எரிமலை – உ] சிமா

**III. பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. (i) ஃபியூஜி மலை ஒரு உறங்கும் எரிமலையாகும்

(ii) கிளிமஞ்சாரோ மலை ஒரு உறங்கும் எரிமலையாகும்

(iii) தான்சானியா ஒரு உறங்கும் எரிமலையாகும்

(அ) (i) உண்மையானது

(ஆ) (ii) உண்மையானது

(இ)(iii) உண்மையானது

(ஈ) (i), (ii) மற்றும் (iii) உண்மையானது

2. கூற்று: பாறைக்குழம்பு துவாரம் வழியாக வெளியேறும்.

காரணம்: புவியின் உட்பகுதி அழுத்தப்பட்ட பாறைக் குழம்பினைக் கொண்டிருக்கும்.

(அ) கூற்று, காரணம் இரண்டும் சரி

(ஆ) கூற்று சரி, காரணம் தவறு

(இ) கூற்று தவறு, காரணம் சரி

(ஈ) கூற்று, காரணம் இரண்டும் தவறு

3. கூற்று I: புவித்தட்டுகள் ஒன்றோடொன்று மோதுவதால் மலைத் தொடர்கள் தோற்றுவிக்கப்படுகின்றன.

கூற்று II: கவசத்தின் வெப்பத்தின் காரணமாக புவித்தட்டுகள் நகருகின்றன.

(அ) கூற்று I தவறு II சரி

(ஆ) கூற்று I மற்றும் II தவறு

(இ) கூற்று I சரி II தவறு

(ஈ) கூற்று I மற்றும் II சரி

**விடைகள்:**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. புவிமேலோடு, 2. வெளிக்கரு, 3. கவசம், 4. மடிப்புகள் மற்றும் பிளவுகள் 5. வெப்ப ஆற்றல், 6. வடக்கு, 7. கோண்டுவானா, 8. பிளவு, 9. எரிமலை வாய், 10. கீழ்மையம்

**II. பொருத்துக:**

1. இ, 2. உ, 3. ஆ, 4. அ, 5. ஈ

**III. பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. (i) உண்மையானது, 2. கூற்று, காரணம் இரண்டும் சரி, 3. கூற்று I மற்றும் II சரி

## 9th Social Science Lesson 13

## 13] நிலக்கோளம் – II புவிப் புறச்செயல்பாடுகள்

**உங்களுக்குத் தெரியுமா?**

உடைந்த பாறைகள் வானிலைச் சிதைவுக்கு உட்பட்டு மண்ணாக மாறுகிறது. சிதைவடைந்த நுண்ணிய பாறைத் துகள்கள் மற்றும் சிதைந்த உயிரினங்களின் (Humus) கலவையே மண்ணாகும்.

உலகிலேயே மிக அதிக உயரமான நீர்வீழ்ச்சி ஏஞ்சல் நீர்வீழ்ச்சி (வெனிசுலா). இதன் உயரம் 979 மீட்டர்.

**துணை ஆறு (Tributary):** முதன்மை ஆற்றுடன் இணையும் அனைத்து சிற்றாறுகளும் துணை ஆறுகள் ஆகும். (உம்.) பவானி ஆறு.

**கிளை ஆறு (Distributary):** முதன்மை ஆற்றிலிருந்து பிரிந்து செல்லும் ஆறுகள். (உ. ம்) கொள்ளிடம் ஆறு.

கங்கை, பிரம்மபுத்திரா ஆறுகளினால் உருவாக்கப்பட்ட டெல்டா சுந்தரவன டெல்டா ஆகும். இது உலகிலேயே மிகப்பெரிய டெல்டாப் பகுதி ஆகும்.

அமெரிக்காவில் உள்ள வியாமிங்கின் எல்லோ ஸ்டோன் தேசிய பூங்காவில் காணப்படும் (Yellow stone national park) ஓல்டு பெய்த்புல் (Old faithful) வெப்ப நீருற்று உலகின் மிகவும் அறியப்பட்ட வெப்ப நீருற்றாகும்.

பிஹாரிலுள்ள கன்வர் ஏரி. ஆசியாவில் உள்ள மிகப்பெரிய நன்னீர் குருட்டு ஆறு ஆகும். அமெரிக்காவில் அர்க்கன்சாஸ் பகுதியில் உள்ள சிக்காட் ஏரி உலகிலேயே பெரிய குருட்டு ஆறு ஆகும்.

இந்தியாவில் உள்ள சுண்ணாம்பு பிரதேச நிலத்தோற்றங்கள்: மேற்கு பீஹார் – குப்ததாம் குகைகள். உத்தரகாண்ட் – ராபர்ட் குகை மற்றும் தப்கேஷ்வர் கோவில். மத்தியப்பிரதேசம் – பச்மாரி மலைகள் பாண்டவர் குகைகள். சத்தீஸ்கர் (பஸ்தர்) – குடும்சர் குகைகள். ஆந்திர பிரதேசம் (விசாகப்பட்டினம்) – போரா குகைகள்.

உலகின் மிக ஆழமான உறிஞ்சு துளை, சீனாவின் 2172 அடி ஆழத்தில் காணப்படும் சைனோசை ஜியான்காங் (Xianozhai tienkang) ஆகும். அமெரிக்காவில் உள்ள இலினாய்ஸில் 15000ற்கும் மேற்பட்ட உறிஞ்சு துளைகள் உள்ளன.

குகைகளின் காணப்படும் பூச்சி இனங்கள் பார்வை திறனை இழந்து விடுவதால் அதன் நீளமான உணர் கொம்புகள் பார்வைத் திறனை ஈடு செய்கின்றன.

சீனாவில் உள்ள காற்றடி வண்டல் பீடபூமி தான் மிக கனமான காற்றடி வண்டல் படிவாகும். இதன் உயரம் சுமார் 335 மீட்டர் ஆகும்.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. பாறைகளின் சிதைவுறுதல் அழிதலும் --------------- என்று அழைக்கப்படுகிறது.

(அ) வானிலைச் சிதைவு

(ஆ) அரித்தல்

(இ) கடத்துதல்

(ஈ) படியவைத்தல்

2. இயற்கைக் காரணிகளால் நிலம் சமப்படுத்தப்படுதலை -------------- என்று அழைக்கின்றோம்.

(அ) படிவுகளால் நிரப்படுதல்

(ஆ) அரிப்பினால் சமப்படுத்துதல்

(இ) நிலத்தோற்ற வாட்டம் அமைத்தல்

(ஈ) ஏதுமில்லை

3. ----------------- ஆற்றின் மூப்பு நிலையில் உருவாகும் நிலத்தோற்றம் ஆகும்.

(அ) துள்ளல்

(ஆ) வண்டல் விசிறி

(இ) டெல்டா

(ஈ) மலை இடுக்கு

4. சுண்ணாம்புப் பாறை நிலத்தோற்றங்கள் உருவாவதற்கு காரணம் ------------------

(அ) பனியாறு

(ஆ) காற்று

(இ) கடல் அலைகள்

(ஈ) நிலத்தடி நீர்

5. கீழே கொடுக்கப்பட்டுள்ள நிலத்தோற்றங்களில் எது பனியாறுகளின் படியவைத்தலால் உருவாக்கப்படவில்லை.

(அ) சர்க்

(ஆ) மொரைன்

(இ) டிரம்லின்

(ஈ) எஸ்கர்

6. காற்றின் படியவைத்தலால் உருவாக்கப்படும் மென்படிவுகளைக் கொண்ட நிலத்தோற்றம் -----------ஆகும்.

(அ) காற்றடி வண்டல்

(ஆ) பர்கான்

(இ) ஹமாடா

(ஈ) மணல் சிற்றலைகள்

7. கடல் தூண்கள் உருவாவதற்குக் காரணம் ---------------

(அ) கடல் அலை அரித்தல்

(ஆ) ஆற்று நீர் அரித்தல்

(இ) பனியாறு அரித்தல்

(ஈ) காற்றின் படியவைத்தல்

8. -----------ன் அரித்தல் செய்கையினால் சர்க்குகள் உருவாக்கப்படுகின்றன.

(அ) காற்று

(ஆ) பனியாறு

(இ) ஆறு

(ஈ) நிலத்தடி நீர்

9. கீழ்க்கண்டவற்றுள் எது இரண்டாம் நிலை நிலத்தோற்றம்?

(அ) ஆசியா

(ஆ) தக்காண பீடபூமி

(இ) குலு பள்ளத்தாக்கு

(ஈ) மெரினா கடற்கரை

**II. பொருத்துக:**

1. கிளையாறு – அ] பனியாற்றின் செயல்பாடு

2. காளான் பாறை – ஆ] கடல் அலைச்செயல்

3. எஸ்கர் – இ] ஆற்றின் மூப்பு நிலை

4. கல் விழுது – ஈ] ஏயோலியன்

5. ஓங்கல் – உ] சுண்ணாம்புப் பாறை

**III. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. (i) "I" வடிவ பள்ளத்தாக்கு ஆறுகளின் அரித்தல் செயலால் உருவாகிறது.

(ii) "U" வடிவ பள்ளத்தாக்கு பனியாறுகளின் அரித்தல் செயலால் உருவாகிறது.

(iii) "V" வடிவ பள்ளத்தாக்கு பனியாறுகளின் அரித்தல் செயலால் உருவாகிறது.

(அ) 1, 2 மற்றும் 3ம் சரி

(ஆ) 1, 2 சரி

(இ) 1 மற்றும் 3ம் சரி

(ஈ) 2 மட்டும் சரி

2. கூற்று I: ஆறுகள் சமன்படுத்தலின் முக்கிய காரணியாகும்.

கூற்று II: ஆறுகள் ஓடும் சரிவுகளை பொருத்து அதன் செயல்பாடு இருக்கும்.

(அ) வாக்கியம் I தவறு II சரி

(ஆ) வாக்கியம் I மற்றும் II தவறு

(இ) வாக்கியம் I சரி வாக்கியம் II தவறு

(ஈ) வாக்கியம் I மற்றும் II சரி

3. கூற்று: சுண்ணாம்பு பாறை பகுதிகளில் நிலத்தடி நீர் குறைவாக இருக்கும்.

காரணம்: நீர் சுண்ணாம்பு பாறையில் உட்புகாது.

winmeen.com

(அ) கூற்று சரி, காரணம் தவறு

(ஆ) கூற்று தவறு. காரணம் சரி

(இ) கூற்று மற்றும் காரணம் தவறு

(ஈ) கூற்று மற்றும் காரணம் சரி

**விடைகள்:**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. வானிலைச் சிதைவு, 2. நிலத்தோற்ற வாட்டம் அமைத்தல், 3. டெல்டா, 4. நிலத்தடி நீர், 5. சர்க், 6. காற்றடி வண்டல், 7. கடல் அலை அரித்தல், 8. பனியாறு, 9. தக்காண பீடபூமி

**II. பொருத்துக:**

1. இ, 2. ஈ, 3. அ, 4. உ, 5. ஆ

**III. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. 1, 2 சரி, 2. வாக்கியம் I மற்றும் II சரி, 3. கூற்று சரி, காரணம் தவறு

## 9th Social Science Lesson 14

## 14] வளிமண்டலம்

**உங்களுக்குத் தெரியுமா?**

டேனியல் ருதர்ஃபோர்டு பொ. ஆ 1772ஆம் ஆண்டு வளிமண்டலத்தில் நைட்ரஜன் வாயு உள்ளதென்பதையும் பொ. ஆ. 1774ஆம் ஆண்டு ஜோசப் பிரிஸ்ட்லி ஆக்சிஜன் வளிமண்டலத்தில் உள்ளதென்பதையும் கண்டறிந்தார்.

வெளியடுக்கிற்கு அப்பால் அமைந்துள்ள அடுக்கு காந்தக்கோளமாகும். இது புவியின் காந்த மண்டலமாகும். இம்மண்டலம் சூரியனிடமிருந்து வெளிப்படும் புரோட்டான்கள் மற்றும் எலக்ட்ரான்களை தக்க வைத்துக் கொள்கிறது. புவியின் மேல்பரப்பிலிருந்து சுமார் 64, 000 கி. மீட்டர் வரை இக்காந்த வயல் பரவியுள்ளது.

சூரியனின் மேற்பரப்பில் உருவாகும் காந்தப்புயலின் காரணமாக வெளியேற்றப்படும் மின்னணுக்களால் துருவப் பகுதிகளில், நள்ளிரவு வானத்தில் வானவேடிக்கையின் போது உருவாகும் பல வண்ண ஒளிச்சிதறல் போன்றக் காட்சி தோன்றுகின்றது. இதுவே "அரோராஸ்" எனப்படுகின்றது.

பகல் வேளைகளில், கடலை விட நிலப்பகுதி விரைவாக வெப்பமடைந்து காற்று மேல்நோக்கிச் செல்கிறது. இதன் காரணமாக கடலை ஒட்டியுள்ள பகுதிகளில் குறைந்த காற்றழுத்தம் உருவாகிறது. இதனால் கடலிலிருந்து காற்று மதிய வேலைகளில் நிலத்தை நோக்கி வீசுகின்றது. இது "கடற்காற்று" (Sea breeze) என்று அழைக்கப்படுகிறது. இக்கடற்காற்றுகள் கோடைக் காலங்களில் நிலப்பகுதிகளில் வெப்பம் குறைவதற்கு காரணமாக உள்ளது. இரவு வேளைகளில் கடலை விட நிலம் விரைவாக குளிர்ந்து விடுகிறது. இக்குளிர்ந்த காற்று கீழ்நோக்கி இறங்கி அதிக அழுத்தத்தை உருவாக்குகிறது. இதனால் நிலத்திலிருந்து காற்று கடல் பகுதியை நோக்கி வீசுகிறது. இதுவே "நிலக்காற்று" (Land breeze) என அழைக்கப்படுகிறது.

winmeen.com

வீசும் காற்றின் எதிர் திசையிலுள்ள மலைப் பகுதியை, "காற்று மோதும் பக்கம்" (Windward side) என்று அழைக்கின்றோம். இங்கு அதிக மழைப்பொழிவு கிடைக்கின்றது காற்று வீசும் திசைக்கு மறைவாக உள்ள பகுதியை "காற்று மோதாபக்கம்" (Leeward side) என்று அழைக்கின்றோம். இங்கு மிகவும் குறைவான மழை கிடைக்கிறது.

புவியின் சுழற்சி காரணமாக காற்று தான் வீசும் பாதையிலிருந்து விலகி வீசும். இவ்வாறு காற்று தன் பாதையிலிருந்து விலகி வீசுவதை "கெரியாலிஸ் விளைவு" என்கிறோம். காற்று வட அரைக்கோளத்தில் G. G. கொரியாலிஸ் வலப்புறமாகவும் தென் அரைக்கோளத்தில் இடப்புறமாகவும் விலகி விசுகின்றன. இதுவே 'ஃபெரல்ஸ் விதி' எனப்படுகிறது. ஃபெரல்ஸ் விதியை முன்மொழிந்தவர் வில்லியம் பெரல் ஆவார். வில்லியம் பெரல் G. G. கொரியாலிசின், கொரியாலிஸ் விசையை பயன்படுத்தி பெரல்ஸ் விதியை நிரூபித்தார்.

**சூப்பர் சைக்ளோன் (Super Cyclone):** 1999ம் வருடம் அக்டோபர் 29ம் நாள் வெள்ளிக்கிழமை அன்று இந்தியாவின் ஒடிஷா மாநிலத்தின் கடற்கரையோர பகுதிகளை பெரும் சூறாவளி தாக்கியது. இது இந்திய வரலாற்றிலேயே அதிக வலுவுடன் வீசி மிகப் பெரிய பேரழிவை ஏற்படுத்திய சூறாவளி ஆகும். காற்று 260 கி. மீ வேகத்தில் வீசியது. கடலலை 7 மீட்டர் உயரத்திற்கு எழும்பி கடற்கரையிலிருந்து 20 கி. மீ தூரம் வரை உள்ளப் பகுதிகளில் சேதத்தை ஏற்படுத்தியது. மேலும் இச்சூறாவளியால் ஒடிஷாவின் 12 கடலோர மாவட்டங்களில் வாழ்ந்த 10 மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டார்கள். சுமார் 10, 000 பேர் உயிரிழந்தனர்.

இந்தியப் பெருங்கடலில் உருவாகும் சூறாவளிகளுக்கு பெயர் சூட்டுவது தொடர்பாக வங்கதேசம், இந்தியா, மாலத்தீவுகள், மியான்மர், ஓமன், பாகிஸ்தான், இலங்கை மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகள் பங்கேற்று பொ. ஆ. 2000 ஆண்டு ஆலோசனை கூட்டம் நடத்தின. பின்னர் 2004ஆம் ஆண்ட ஒவ்வொரு நாடும் சூறாவளிக்கு பெயர்ப்பட்டியலை கொடுத்தன. இதனடிப்படையில், ஒவ்வொரு முறை சூறாவளி உருவாகும் போதும் இப்பட்டியலில் உள்ள பெயர்களை வரிசைக் கிரமமாக பயன்படுத்தி வருகிறோம்.

வளிமண்டலக் கீழ் அடுக்கில் (Troposhere) மட்டும் தான் அனைத்து வகையான மேகங்களும் காணப்படும்.

சூரிய மறைவின் பொழுது கீற்று மேகங்கள் பல வண்ணத்தில் காட்சியளிப்பதால் "பெண்குதிரை வால்கள்" (Mare's Tails) என்றும் அழைக்கப்படுகிறது.

இடியுடன் கூடிய கல்மாரி மழை கல்மாரி புயல் என அழைக்கப்படுகிறது. இது வானிலை நிகழ்வுகளில் மிகவும் அஞ்சத்ததக்கதாகும். கல்மாரி மழை தாவரங்கள், மரங்கள் வேளாண் பயிர்கள், விலங்குகள் மற்றும் மனித உயிர்களை பறிக்கும் ஒரு பலத்த இயற்கை சீற்றமாகும்.

இந்தியாவில் அதிக மழையைப் பெறும் இடம் மௌசின்ராம். இது பூர்வாச்சல் மலையின் காற்று மோதும் பக்கம் அமைந்துள்ளது. ஆனால் இம்மலையின் காற்று மோதா பக்கம் அமைந்துள்ள "ஷில்லாங்" மிக குறைந்த அளவே மழையைப் பெறுகிறது. இதைப் போன்றே மும்பையும், பூனாவும் அமைந்துள்ளன.

காற்றின் ஒப்ப ஈரப்பதம் நூறு சதவிகிதமாக இருக்கும்போது காற்று பூரித நிலையை அடைகிறது. இந்நிலையில் காற்று நீராவியை உறிஞ்சாது. இந்தப் பூரித நிலையை "பனிவிழுநிலை" (Dew point) எனப்படுகிறது. ஈரப்பதத்தை அளப்பதற்கு ஈரப்பதமானி (Hygrometer) அல்லது ஈர உலர்க்குமிழ் வெப்பமானி (Wet and dry bulb) பயன்படுத்தப்படுகிறது.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. ------------ உயிர் வாழ இன்றியமையாத வாயுவாகும்.

(அ) ஹீலியம்

(ஆ) கார்பன்–டை–ஆக்சைடு

(இ) ஆக்சிஜன்

(ஈ) மீத்தேன்

2. வளிமண்டலத்தில் கீழாக உள்ள அடுக்கு -------------- ஆகும்.

(அ) கீழடுக்கு

(ஆ) மீள் அடுக்கு

(இ) வெளியடுக்கு

(ஈ) இடையடுக்கு

3. ------------- வானொலி அலைகளை பிரதிபலிக்கிறது.

(அ) வெளியடுக்கு

(ஆ) அயன அடுக்கு

(இ) இடையடுக்கு

(ஈ) மீள் அடுக்கு

4. புவியின் மேற்பரப்பில் காணப்படும் வெப்பத்தின் சராசரி அளவு-------------

(அ) 12°

(ஆ) 13°

(இ) 14°

(ஈ) 15°

5. வாயு நிலையிலிருந்து திரவ நிலைக்கு நீரானது மாறுகின்ற செயல்பாட்டினை -------------- என்று அழைக்கிறோம்.

(அ) பொழிவு

(ஆ) ஆவியாதல்

(இ) நீராவிப்போக்கு

(ஈ) சுருங்குதல்

6. --------------- புவியின் முக்கிய ஆற்றல் மூலமாகும்.

(அ) சூரியன்

(ஆ) சந்திரன்

(இ) நட்சத்திரங்கள்

(ஈ) மேகங்கள்

7. அனைத்து வகை மேகங்களும் ---------------ல் காணப்படுகிறது.

(அ) கீழடுக்கு

(ஆ) அயன அடுக்கு

(ஈ) இடையடுக்கு

(ஈ) மேலடுக்கு

8. ------------ செம்மறி ஆட்டு மேகங்கள் என்று அழைக்கப்படுகிறது.

(அ) இடைப்பட்ட திரள் மேகங்கள்

(ஆ) இடைப்பட்ட படை மேகங்கள்

(இ) கார்படை மேகங்கள்

(ஈ) கீற்றுப்படை மேகங்கள்

9. பருவக்காற்று என்பது -------------

(அ) நிலவும் காற்று

(ஆ) காலமுறைக் காற்றுகள்

(இ) தலக்காற்று

(ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

10. பனித்துளி பனிப்படிகமாக இருந்தால் ----------- என்று அழைக்கின்றோம்.

(அ) உறைபனி

(ஆ) மூடுபனி

(இ) பனி

(ஈ) ஆலங்கட்டி

11. ------------ புயலின் கண் என்று அழைக்கப்படுகிறது.

(அ) அழுத்தம்

(ஆ) காற்று

(இ) சூறாவளி

(ஈ) பனி

12. காற்றின் செங்குத்து அசைவினை --------------- என்று அழைக்கின்றோம்.

(அ) காற்று

(ஆ) புயல்

(இ) காற்றோட்டம்

winmeen.com

(ஈ) நகர்வு

**II. பொருத்துக:**

1. வானிலையியல் – அ] காற்றின் வேகம்

2. காலநிலையியல் – ஆ] காற்றின் திசை

3. காற்று வேகமானி – இ] கீற்று மேகம்

4. காற்று திசைமானி – ஈ] காலநிலை பற்றிய படிப்பு

5. பெண் குதிரை வால் – உ] வானிலை பற்றிய படிப்பு

6. காற்று மோதாப்பக்கம் – ஊ] ஆஸ்திரேலியா

7. வில்லி வில்லி – எ] மழை மறைவுப்பகுதி

**விடைகள்:**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. ஆக்சிஜன், 2. கீழடுக்கு, 3. இடையடுக்கு, 4. 13°, 5. சுருங்குதல், 6. சூரியன், 7. கீழடுக்கு, 8. இடைப்பட்ட திரள் மேகங்கள், 9. காலமுறைக் காற்றுகள், 10. பனி, 11. சூறாவளி, 12. காற்றோட்டம்

**II. பொருத்துக:**

1. உ, 2. ஈ, 3. அ, 4. ஆ, 5. இ, 6. எ, 7. ஊ

9th Social Science Lesson 15

**15] நீர்க்கோளம்**

**உங்களுக்குத் தெரியுமா?**

சில்வியா ஏர்ல் என்பவர் அமெரிக்காவின் புகழ்பெற்ற கடல் ஆராய்ச்சி நிபுணர் ஆவார். கடல்வாழ் உயிரினங்களின் பாதுகாப்பிற்காக இவர் மேற்கொண்ட முயற்சிகளைப் பாராட்டி "தி டைம் இதழ்" இவருக்கு "கோளத்தின் கதாநாயகன்" என்ற பட்டத்தை முதன்முதலில் வழங்கிச் சிறப்பித்துள்ளது. பிரான்ஸ் நாட்டின் புகழ்பெற்ற கடல் ஆராய்ச்சியாளரான ஜாக்குவெல் யுவெஸ் காஸ்டோவ் (1910–1997), ஆழ்கடலினைப் பற்றி மிக விரிவான ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வந்துள்ளார். இவர் பிரான்ஸ் நாட்டின் கடற்படையில் தகவல் சேவை பிரிவில் பணியாற்றிய காலத்தில் ஷாங்காய், ஜப்பான் மற்றும் சோவியத் ரஷ்யா போன்ற நாடுகளுக்குப் பல்வேறு பணிகளுக்காக அனுப்பப்பட்டார். 1945ல் "போரின் சிலுவை" என்ற விருதும் 1985ல் அமெரிக்க அதிபரின் சுதந்திரத்தின் பதக்கமும் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

நிலத்தின் அடிப்பகுதியில் உள்ள நீரின் மேல்மட்ட நிலையே நிலத்தடி நீர்மட்டம் என்கிறோம் (Water table). நீர், நீர்க்கொள்பாறைகளின் வழியாக ஊடுருவிச் சென்று, நீர் உட்புகாப் பாறையின் மேல்பகுதியில் தேங்கி நிற்கும் பகுதி நீர்க்கொள்படுகை (Aquifers) என்கிறோம்.

**புவித்தொடர்பு:** ஒ. என். ஜி. சி எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு நிறுவனம் இந்தியாவின் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு குறித்த ஆய்வுகளையும் உற்பத்தியையும் மேற்கொண்டு வரும் மிகப் பெரிய

நிறுவனமாகும். "மும்பை ஹை" பகுதியில் 20 மில்லியன் டன் எண்ணெய் மற்றும் எரிவாயு இருப்பதாக சமீபத்திய மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

உயர விளக்கப்படம் (hypsometric curve) என்பது நிலப் பகுதியிலோ அல்லது நீர்ப் பகுதியிலோ காணப்படும் நிலத்தோற்றங்களின் உயரத்தை வரைந்து காட்டும் கோட்டுப்படமாகும். 'Hypso', என்ற கிரேக்கச் சொல்லின் பொருள் "உயரம்" என்பதாகும்.

"பாத்தோம்கள்" (Fathoms) → கடலின் ஆழத்தை அளவிடக் கூடிய ஓர் அலகு. சம ஆழக்கோடு (Isobath) → ஒரே அளவிலான ஆழம் கொண்ட இடங்களை வரைபடத்தில் இணைக்கும் கற்பனைக் கோடு. சம உவர்ப்புக்கோடு (Isohaline) → ஒரே அளவிலான உப்புத்தன்மை கொண்ட பகுதிகளை வரைபடத்தில் இணைக்கும் கற்பனைக் கோடு.

அட்லாண்டிக் மற்றும் இந்தியப் பெருங்கடலில் காணப்படும் கடலடிச் சமவெளிகள் பசிபிக் பெருக்கடலில் காணப்படும் சமவெளிகளைவிட மிகவும் பரந்து காணப்படுகின்றன. ஏனெனில் மிகப்பெரிய ஆறுகளுள் பல இக்கடல்களில் கலப்பதனால் கடலடிச் சமவெளிகள் பரந்து காணப்படுகின்றன. (எ. கா): அமேசான், கங்கை மற்றும் பிரம்மபுத்திரா.

உலகின் மிக ஆழமான கடலடி "உறிஞ்சித் துளைக்கு டிராகன் துளை" என்று பெயர். அப்பகுதியில் வாழும் மீனவர்கள் இதனை "தென் சீனக்கடலின் கண்" என அழைக்கின்றனர்.

இந்தியாவில் காம்பே வளைகுடா, கட்ச் வளைகுடா மற்றும் சுந்தரவன சதுப்பு நிலப் பகுதிகள் ஓதசக்தி உற்பத்தி செய்ய சாத்தியக் கூறுகள் நிறைந்த மண்டலங்களாக அறியப்பட்டுள்ளன.

அலை நீர் விழும் போது ஏற்படும் ஆற்றலை விசைப்பொறி உருளை (hydro turbines) கொண்டு மின்சக்தி உற்பத்தி செய்யப்படுகின்றது. இந்தியாவில் கேரளக் கடற்கரையில் உள்ள விழிஞ்சியம் மற்றும் அந்தமான நிக்கோபார் தீவுகளில் அலையாற்றல் மின் உற்பத்தி நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

**கடல் எல்லைகள்:** பெரும்பாலான நாடுகளின் கடல் எல்லை என்பது அவற்றின் கடற்கரையில் இருந்து 12 கடல் மைல்கள் (National miles) என கணக்கிடப்படுகிறது. 2013–ல் கடல் சட்டத்தின் மீதான மாநாடு நடைபெற்ற போது ஒவ்வொரு நாட்டிற்குமான கடல் மைல்களை ஐ. நா சபை நிர்ணயம் செய்தது. அதன்படி ஜோர்டான் மற்றும் பாலவ் நாடுகளுக்கு 3 கடல் மைல்களும், பெனின், காங்கோ குடியரசு எல்சால்வடார் பெரு மற்றும் சோமாலியா நாடுகளுக்கு 200 கடல் மைல்களும் நிர்ணயம் செய்தது.

தேசிய கடல் சார் நிறுவனம் (National Institute of Oceanography – NIO) 01. 01. 1996–ல் நிறுவப்பட்டது. இதன் தலைமையகம் கோவாவில் உள்ள "டோனா பௌலா" ஆகும். கடல்சார் அம்சங்கள், பெருங்கடல் பொறியியல், கடல் அகழாய்வு போன்றவற்றைப் பற்றி அறிந்து கொள்ள ஆராய்ச்சி மற்றும் ஆய்வுகளை இந்நிறுவனம் மேற்கொள்கிறது.

**பவளப்பாறைத் திட்டு:** உலகின் மிக நீளமான பவளப்பாறைத் திட்டு "தி கிரேட் பேரியர் ரீப்" (The Great Barrier Reef) ஆகும். இப்பவளப்பாறை 2, 900 தனித்த பவளத்திட்டுகளையும் 900 தீவுகளையும் உள்ளடக்கி 2, 000 கி. மீ நீண்டு காணப்படுகிறது. இது 3, 50, 000 சதுர கி. மீ பரந்து காணப்படுகிறது. ஆஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து மாகாணத்தின் அருகேயுள்ள பவளக்கடலில் இதன் அமைவிடம் உள்ளது. விண்வெளியிலிருந்தும் இப்பவளத்திட்டைக் காணலாம். புவியின் உயிரினப்பன்மை நிறைந்த இடங்களில் ஒன்றாக இப்பரந்த பவளப்பாறைத்திட்டுகள் உள்ளன. பல பில்லியன் நுண்ணிய உயிரியான

பவள மொட்டுக்களால் இப்பவளப்பாறைகள் உருவாக்கப்படுகின்றன. உலகின் 7 இயற்கை அதிசயங்களில் ஒன்றாக CNN இதனை அடையாளங்கண்டுள்ளது.

கங்கை வாழ் ஓங்கில் (டால்பின்), இந்தியாவின் தேசிய கடல்வாழ் உயிரினமாக 2010–ல் அறிவிக்கப்பட்டது. இஃது ஓர் அழிந்து வரும் உயிரினமாகும். ஓங்கில்கள் உண்மையிலேயே அழிந்து வரும் உயிரினமா? ஆம், என்றால் காரணங்களைப் பட்யலிடுக.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. சுந்தா அகழி காணப்படும் பெருங்கடல் -------------

(அ) அட்லாண்டிக் பெருங்கடல்

(ஆ) பசிபிக் பெருங்கடல்

(இ) இந்தியப் பெருங்கடல்

(ஈ) அண்டார்டிக் பெருங்கடல்

2. பெருங்கடலின் வெப்பநிலை ஆழத்தை நோக்கிச் செல்லச்செல்ல -------------

(அ) அதிகரிக்கும்

(ஆ) குறையும்

(இ) ஒரே அளவாக இருக்கும்

(ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

3. கடல் நீரோட்டங்கள் உருவாகக் காரணம்

(அ) புவியின் சுழற்சி

(ஆ) வெப்ப நிலை வேறுபாடு

(இ) உவர்ப்பிய வேறுபாடு

(ஈ) மேற்கண்ட அனைத்தும்

4. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆராய்க:

1. மீன்பிடித்தளங்கள் பெரும்பாலும் அகலமான கண்டத்திட்டு பகுதிகளில் காணப்படுகின்றன.

2. மிதவெப்ப மண்டலப்பகுதிகளில் மீன் பிடித்தொழில் நன்கு வளர்ச்சியடைந்துள்ளது.

3. மீனின் முதன்மை உணவான தாவர ஊட்டச்சத்து வளர்வதற்கு வெப்ப நீரோட்டமும் குளிர் நீரோட்டமும் இணைவதே காரணமாகும்.

4. இந்தியாவின் உள்நாட்டு மீன் பிடித்தொழில் குறிப்பிடத்தக்கது ஆகும்.

(அ) 1 மற்றும் 2 சரி

(ஆ) 1 மற்றும் 3 சரி

(இ) 2, 3 மற்றும் 4 சரி

(ஈ) 1, 2 மற்றும் 3 சரி

5. கடலடி மலைத்தொடர் உருவாக காரணம்

(அ) புவித்தட்டுகள் இணைதல்

(ஆ) புவித்தட்டுகள் விலகுதல்

(இ) புவித்தட்டுகளின் பக்கவாட்டு இயக்கம்

(ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

6. கடல் மட்டத்தின் கீழுள்ள நிலத்தோற்றங்கள் வரிசைக்கரமாக உள்ளவை எவை?

(அ) கண்டத்திட்டு, கண்டச்சரிவு, கடலடி சமவெளி, கடல் அகழி

(ஆ) கண்டச்சரிவு, கண்டத்திட்டு, கடலடிச்சமவெளி, கடல் அகழி

(இ) கடலடி சமவெளி, கண்டச்சரிவு, கண்டத்திட்டு, கடல் அகழி

(ஈ) கண்டச்சரிவு, கடலடிச்சமவெளி, கண்டத்திட்டு, கடல் அகழி

7. பின்வருவனவற்றுள் சரியாகப் பொருந்துவது எது?

அ) வளைகுடா நீரோட்டம் – பசிபிக் பெருங்கடல்

ஆ) லாப்ரடார் கடல் நீரோட்டம் – வடஅட்லாண்டிக் பெருங்கடல்

இ) கேனரி கடல் நீரோட்டம் – மத்திய தரைக்கடல்

ஈ) மொசாம்பிக் கடல் நீரோட்டம் – இந்தியப் பெருங்கடல்

8. கடலில் காணப்படும் பிளாங்கடனின் அளவை தீர்மானிக்கும் காரணி

1. நீரின் ஆழம்

2. கடல் நீரோட்டம்

3. வெப்பநிலை மற்றும் உவர்ப்பியம்

4. பகல் மற்றும் இரவின் நீளம்

(அ) 1 மற்றும் 2 சரி

(ஆ) 1, 2 மற்றும் 3 சரி

(இ) 1, 3 மற்றும் 4 சரி

(ஈ) அனைத்தும் சரி

**<u>II. பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:</u>**

(அ) A மற்றும் R இரண்டும் சரி, R, A விற்கான சரியான விளக்கம்.

(ஆ) A மற்றும் R சரி ஆனால் R, A விற்கான சரியான விளக்கம் இல்லை.

(இ) A சரி ஆனால் R தவறு

(ஈ) A தவறு ஆனால் R சரி

1. கூற்று (A): வரைபடங்களில் கடல்கள் எப்பொழுதும் நீல நிறத்தில் கொடுக்கப்படும்.

காரணம் (R): இது கடல்களின் இயற்கையான நிறத்தைக் காட்டுகிறது.

2. கூற்று (A): ஆழ்கடல் மட்டக்குன்றுகள், கயாட் என்று அழைக்கப்படுகின்றன.

காரணம் (R): அனைத்து கயாட்டுகளும் எரிமலை செயல்பாடுகளால் உருவானவை.

3. கூற்று (A): கடலடித்தளத்தில் காணப்படும் ஆழமான குறுகிய பகுதி கடலடிப் பள்ளத்தாக்குகள் ஆகும்.

காரணம் (R): இவைகள் கண்டத்திட்டு, சரிவு மற்றும் உயர்ச்சிகளினால் கட்டுப்படுத்தப்படுகின்றன.

4. கூற்று (A): வட்டப் பவளத்திட்டு (Atolls), அட்லாண்டிக் பெருங்கடலில் பரவலாகக் காணப்படுகின்றன.

காரணம் (R): ஆழமான பகுதிகளில் கடல் வாழ் உயிரினங்கள் குறைவாக உள்ளன.

5. கூற்று (A): நிலத்தால் சூழப்பட்ட பகுதிகளில் உவர்ப்பியம் அதிகமாக உள்ளது.

காரணம் (R): நிலத்தால் சூழப்பட்ட கடலில் விரிந்த நன்னீர் சிறிதளவே கலக்கின்றது.

**III. பொருத்துக:**

1. மரியானா அகழி – அ] கடலில் உவர்ப்பியம் குறைவு

2. கிரேட் பேரியர் ரீப் – ஆ] ஜப்பான் கடற்கரையோரம்

3. உயர்ஓதம் – இ] பசிபிக் பெருங்கடலின் ஆழமானப்பகுதி

4. அதிக மழை – ஈ] ஆஸ்திரேலியா

5. குரோசியோ நீரோட்டம் – உ] இரண்டாம் நிலை நிலத்தோற்றம்

6. கண்டச்சரிவு – ஊ] அமாவாசை மற்றும் முழு நிலவு நாள்

**விடைகள்:**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. இந்தியப் பெருங்கடல், 2. குறையும், 3. மேற்கண்ட அனைத்தும், 4. 1, 2 மற்றும் 3 சரி, 5. புவித்தட்டுகள் விலகுதல், 6. கண்டத்திட்டு, கண்டச்சரிவு, கடலடி சமவெளி, கடல் அகழி, 7. வளைகுடா நீரோட்டம்– பசிபிக் பெருங்கடல், கேனரி கடல் நீரோட்டம் – மத்திய தரைக்கடல், 8. 1, 2 மற்றும் 3 சரி

**II. பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. A மற்றும் R இரண்டும் சரி, R, A விற்கான சரியான விளக்கம், 2. A சரி ஆனால் R தவறு, 3. A மற்றும் R சரி ஆனால் R, A விற்கான சரியான விளக்கம் இல்லை, 4. A மற்றும் R இரண்டும் சரி, R, A விற்கான சரியான விளக்கம், 5. A மற்றும் R இரண்டும் சரி, R, A விற்கான சரியான விளக்கம்.

**III. பொருத்துக:**

1. இ, 2. ஈ, 3. ஊ, 4. எ, 5. அ, 6. ஆ, 7. உ

winmeen.com

9th Social Science Lesson 16

16] உயிர்க்கோளம்

**உங்களுக்குத் தெரியுமா?**

சூழ்நிலை மண்டலத்தைப் பற்றி படிக்கும் அறிவியல் பிரிவு சூழலியல் (Ecology) எனப்படுகிறது. சூழலியல் பற்றிப் படிப்பவர் சூழலியலாளர் (Ecologist) எனப்படுகிறார்.

ஒரு சூழலியல் பிரதேசத்தில் 70%ற்கும் மேலாக ஓரினம் சுயமான வாழ்விடத்தை இழந்து விடுமேயானால் அவ்விடம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய வளமையங்களாகக் (Hotspot) கருதப்படுகிறது. இந்தியாவின் இமயமலைகள், மேற்கு தொடர்ச்சி மலைகள், இந்தோ பர்மா பிரதேசம், சுந்தா நிலப்பகுதி போன்றவை வளமையங்களாகும். உலகில் 34 இடங்கள் உயிரினப்பன்மை தகுதி வளமையங்களாகக் (Hotspot) கருதப்படுகிறது.

புற்றுநோயைக் குணப்படுத்தப் பயன்படுத்தப்படும் தாவரங்களில் சுமார் 70% தாவரங்கள் மழைக் காடுகளில் காணப்படுவதாக அமெரிக்க ஐக்கிய நாடுகளின் புற்றுநோய் நிறுவனம் அடையாளம் கண்டுள்ளது. (எ. கா): லப்போச்சா.

சவானா புல்வெளிகளின் பெரும்பாலான பகுதிகள் விவசாய நிலங்களாக மாற்றப்பட்டு வருகின்றன. இதனால் இங்குக் காணப்படும் பல்வேறு விதமான விலங்கினங்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன. (எ. கா): சிறுத்தை, சிங்கம் போன்ற விலங்கினங்களின் எண்ணிக்கை மிக வேகமாகக் குறைந்து வருகின்றன.

பாலைவனச் சோலை என்பது பாலைவனங்கள் மற்றும் அரை வறண்டப் பாலைவனப் பிரதேசங்களில் காணப்படும் வளமான நன்னீர்ப் பகுதியாகும். பாலைவனச் சோலைகள் நீரூற்றிலிருந்து நீரைப் பெறுகின்றன. பேரீச்சை, அத்தி, சிட்ரஸ் பழங்கள் மக்காச்சோளம் போன்றவை பாலைவனச் சோலைக்கு அருகில் விளைவிக்கப்படுகின்றன.

மிதவெப்ப மண்டலப் புல்வெளியானது, உலகின் பல்வேறு பகுதிகளில் வெவ்வேறு பெயர்களில் அழைக்கப்படுகின்றது. ப்ரெய்ரி – வடஅமெரிக்கா. ஸ்டெப்பி – யுரோஷியா. பாம்பாஸ் – அர்ஜென்டினா மற்றும் உருகுவே. வெல்ட் – தென் ஆப்பிரிக்கா. டௌன்ஸ் – ஆஸ்திரேலியா. கேன்டர்பர்க் – நியூசிலாந்து. மஞ்சூரியன் – சைனா.

உயிர்க்கோள காப்பகங்கள் (Biosphere Reserve) என்பவை ஒரு சிறப்பு சுற்றுச்சூழ்நிலை மண்டலம் அல்லது தாவரங்கள் மற்றும் விலங்குகளை உள்ளடக்கிய தனித்துவமான பாதுகாக்கப்பட்ட ஒரு பகுதியாகும். இந்தியாவில் பதினெட்டு முக்கியமான உயிர்க்கோளக் காப்பகங்கள் உள்ளன.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. புவியின் குளிர்ச்சியான பல்லுயிர்த் தொகுதி

(அ) தூந்திரா

(ஆ) டைகா

(இ) பாலைவனம்

(ஈ) பெருங்கடல்கள்

2. உயிர்க் கோளத்தின் மிகச் சிறிய அலகு

(அ) சூழ்நிலை மண்டலம்

(ஆ) பல்லுயிர்த் தொகுதி

(இ) சுற்றுச்சூழல்

(ஈ) இவற்றில் எதுவும் இல்லை

3. வளிமண்டலத்தில் உள்ள நுண்ணுயிரிகளைக் கொண்டு, ஊட்டச்சத்துக்களை மறுசுழற்சி செய்வோர்

(அ) உற்பத்தியாளர்கள்

(ஆ) சிதைப்போர்கள்

(இ) நுகர்வேர்கள்

(ஈ) இவர்களில் யாரும் இல்லை

4. பாலைவனத்தாவரங்கள் வளரும் சூழல்

(அ) உவர்ப்பியமுள்ள மணற்பகுதி

(ஆ) குறைந்த அளவு ஈரப்பசை

(இ) குளிர் வெப்ப நிலை

(ஈ) ஈரப்பதம்

5. மழைக்காடுகள் பல்லுயிர்த் தொகுதி அதிகளவு விவசாயத்திற்குப் பயன்படுத்த இயலாததற்குக் காரணம்

(அ) மிக அதிகப்படியான ஈரப்பதம்

(ஆ) மிக அதிகமான வெப்பநிலை

(இ) மிக மெல்லிய மண்ணடுக்கு

(ஈ) வளமற்ற மண்

**II. பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

(அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது.

(ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றை விளக்கவில்லை.

(இ) கூற்று சரி, காரணம் தவறு

(ஈ) கூற்றும் மற்றும் காரணம் இரண்டும் தவறு.

1. கூற்று: பிறச்சார்பு ஊட்ட உயிரிகள் தங்கள் உணவை தாங்களே தயாரித்துக் கொள்ளாது.

காரணம்: ஊட்டச்சத்திற்காக இவை உற்பத்தியாளர்களைச் சார்ந்து இருக்கும்.

2. கூற்று: குறிப்பிட்ட பகுதிகளில் மட்டும் காணப்படக்கூடியதும் எளிதில் பாதிக்கப்படும் சூழலில் வாழும் பலவகையான தாவரங்களும் விலங்குகளும் கொண்ட பகுதியே வளமையம் ஆகும்.

காரணம்: இப்பகுதி சிறப்பான கவனம் கொண்டு பாதுகாக்கப்பட வேண்டும், ஆராய்ச்சியாளர்கள் இதனை அடையாளங்காண்பர்.

3. கூற்று: கடந்த இருபது ஆண்டுகளில் 60 சதவீத ஆப்ரிக்க கொரில்லாக்கள் எண்ணிக்கையில் குறைந்துள்ளன.

காரணம்: காடுகளில் மனிதன் குறுக்கீடு இல்லை

**III. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. விலங்குகள், தாவரங்கள் மற்றும் நுண்ணுயிரிகள் ஒன்றோடொன்று இடைவினைப் புரிந்து கொண்டு வாழுமிடம் ---------------- எனப்படும்.

2. பிறச்சார்பு ஊட்ட உயிர்கள் (Hetrotrophs) என அழைக்கப்படுபவை ----------------

3. ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட சிக்கலான உணவுச் சங்கிலி அமைப்பினை ------------------ என அழைக்கின்றோம்.

4. மிகப்பரந்த புவிச்சூழ்நிலை மண்டலத்தை ------------------ என்கிறோம்.

5. பாலைவனப் பல்லுயிர்த் தொகுதிகளில் வளரும் தாவரங்கள் --------------- எனப்படும்.

6. --------------- நீர்வாழ் பல்லுயிர்த் தொகுதி நன்னீர் மற்றும் கடல் நீர் கலக்கும் இடத்தில் காணப்படும்.

**IV. கீழ்க்கண்டவற்றின் தினங்களைக் கண்டுபிடி:**

1. உலக வனவிலங்குகள் தினம்: ----------------

2. பன்னாட்டு காடுகள் தினம்: -----------------

3. உலக நீர் தினம்: ----------------

4. புவி தினம்: ----------------

5. உலக சுற்றுச் சூழல் தினம்: -------------------

6. உலக பேராழியியல் தினம்: ------------------

**விடைகள்:**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. தூந்திரா, 2. சூழ்நிலை மண்டலம், 3. சிதைப்போர்கள், 4. உவர்ப்பியமுள்ள மணற்பகுதி, 5. மிக அதிகப்படியான ஈரப்பதம்

**II. பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது, 2. கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது, 3. கூற்று சரி, காரணம் தவறு

**III. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. சூழ்நிலைமண்டலம், 2. நுகர்வோர்கள், 3. உணவு வலை, 4. பல்லுயிர் தொகுதி, 5. பாலை வகை தாவரங்கள், 6. கடல்

**IV. கீழ்க்கண்டவற்றின் தினங்களைக் கண்டுபிடி:**

1. அக்டோபர் 4, 2. மார்ச் 21, 3. மார்ச் 22, 4. ஏப்ரல் 22, 5. ஜூன் 5, 6. டிசம்பர் 26

9th Social Science Lesson 17

**17] மனிதனும் சுற்றுச் சூழலும்**

**உங்களுக்குத் தெரியுமா?**

கி. பி. (பொ. ஆ) 1972–ஆம் ஆண்டு ஸ்டாக்ஹோம் மாநாட்டில் மனிதன் "சுற்றுச் சூழலை உருவாக்கி வடிவமைக்கிறான்" என அறிவிக்கப்பட்டது. ரியோடி ஜெனிரோ நகரில் 1992–ஆம் ஆண்டு நடைபெற்ற புவி உச்சி மாநாடு, ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் மற்றும் வளர்ச்சி மாநாடு என்று அழைக்கப்பட்டது. (UNCED – United Nations Conference on Environment and Development)

மக்கள் தொகையியல் (Demography) என்றால் என்ன? பழங்காலத்தில் கிரேக்க மொழியில் "Demos" என்றால் மக்கள் என்றும் "Graphis" என்றால் கணக்கிடுதல் என்றும் பொருளாகும். எனவே மக்கள் தொகையியல் என்பது புள்ளியியல் முறையில், மக்கள் தொகையைக் கணக்கிடுவதாகும்.

உலக மக்கள்தொகை தினம் ஒவ்வொரு ஆண்டும் ஜீலை 11ஆம் நாள் கொண்டாடப்படுகிறது. இதன் மூலம் உலக மக்கள் தொகை பிரச்சனைகள் பற்றிய ஒரு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. ஐக்கிய நாடுகளின் வளர்ச்சி திட்ட அமைப்பு இதை 1989ஆம் ஆண்டு முதல் கொண்டாடி வருகிறது.

14ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் "பிளேக்" என்ற கொள்கை நோயினால் 30–60 சதவீதம் மக்கள் இறந்தனர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

அதிக மக்கள் தொகை மற்றும் குறைந்த மக்கள் தொகை: அதிக மக்கள்தொகை என்பது, ஒரு நாட்டில் மக்களின் எண்ணிக்கையை விட வளங்களின் அளவு குறைவாக இருப்பதாகும். மாறாக, குறைந்த எண்ணிக்கையிலான மக்கள் தொகையும் அதிக அளவிலான வளமும் இருந்தால் அதனைக் குறைந்த மக்கள் தொகை என்கிறோம்

கி. பி. (பொ. ஆ) 1952இல் இந்திய அரசின் அதிகார பூர்வமான மக்கள்தொகை கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டது. இது போன்றதொரு கொள்கையை முதன் முதலில் அறிவித்த நாடு இந்தியா ஆகும். பல்வேறு வகையான குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்தியதன் மூலம் மக்கள்தொகை வளர்ச்சி கட்டுப்படுத்தப்படுகிறது.

டமாஸ்கஸ் உலகின் மிகப் பழமையான, மக்கள் தொடர்ந்து வாழ்ந்து வரும், ஒரு நகரமாகும். இங்கு 11, 000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மக்கள் வாழ்ந்து வருகின்றனர். டோக்கியோ உலகிலேயே மிகப் பெரிய நகரமாகும். இது 38 மில்லியன் மக்கள் தொகையைக் கொண்டது. கி. பி. (பொ. ஆ) 2016ஆம் ஆண்டின் யுனஸ்கோவின் (UNESCO) மெர்சர் (Mercer) தகவலின்படி மக்கள் சிறந்த வாழ்க்கைத் தரத்தைப் பெற்று வாழ்ந்து வருவதில் வியன்னா முதலிடமும் சூரிச் இரண்டாம் இடமும் பெற்றுள்ளன.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. வாழும் உயிரினங்களின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தைப் பாதிக்கக் கூடிய காரணிகள் மற்றும் அனைத்து வெளிப்புறச் செல்வாக்குகளை -------------------- என்கிறோம்.

(அ) சுற்றுச்சூழல்

(ஆ) சூழலமைப்பு

(இ) உயிர்க் காரணிகள்

(ஈ) உயிரற்றக் காரணிகள்

2. ஒவ்வோர் ஆண்டும் உலக மக்கள் தொகை தினம் ---------------ஆம் நாள் கடைபிடிக்கப்படுகிறது.

(அ) ஆகஸ்டு 11

(ஆ) செப்டம்பர்11

(இ) ஜீலை 11

(ஈ) ஜனவரி 11

3. மக்கள்தொகை பற்றி புள்ளியியல் விவரக் கல்வி ---------------- ஆகும்.

(அ) மக்கள்தொகையியல்

(ஆ) புற வடிவமைப்பியல்

(இ) சொல் பிறப்பியல்

(ஈ) நிலநடுக்கவரைவியல்

4. விலை மதிப்பு மிக்க கனிமங்கள் மற்றும் பிற புவி அமைப்பியல் கனிமங்களைச் சுரங்கங்களிலிருந்து வெட்டி எடுப்பது ----------------- ஆகும்.

(அ) மீன் பிடித்தல்

(ஆ) மரம் வெட்டுதல்

(இ) சுரங்கவியல்

(ஈ) விவசாயம்

5. பொருளாதார நடவடிக்கையில் இரண்டாம் நிலைத் தொழிலில் மூலப்பொருள்களிலிருந்து உற்பத்தி செய்யப்படுவன -----------------

(அ) பாதி முடிக்கப்பட்ட பொருள்கள்

(ஆ) முடிக்கப்பட்ட பொருள்கள்

(இ) பொருளாதார பொருள்கள்

(ஈ) மூலப்பொருள்கள்

**<u>II. பொருத்துக:</u>**

1. ஒலிபெருக்கி – அ] ஒலி மாசுறுதல்

2. ரியோடி ஜெனிரோ பிரேசில் – ஆ] T வடிவ குடியிருப்பு

3. சிலுவை வடிவக் குடியிருப்புகள் – இ] புவி உச்சி மாநாடு

4. இயற்கை பேரிடர் – ஈ] வடிவ குடியிருப்பு

5. சிறந்து வாழும் சூழல் – உ] புவி உச்சி மாநாடு

**III. பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. கூற்று (A): படுக்கை அடுக்கில் உள்ள ஓசோன் படலத்தை பாதுகாப்பு கேடயம் என்கிறோம்.

காரணம் (R): புற ஊதாக்கதிர் வீச்சு புவியை அடையாமல் தடுக்கிறது.

(அ) Aவும் Rம் சரி மற்றும் R என்பது Aன் சரியான விளக்கம்

(ஆ) A மற்றும் R இரண்டும் சரி. ஆனால், Aவானது Rன் சரியான விளக்கமல்ல

(இ) A தவறு ஆனால் R சரி

(ஈ) A மற்றும் R இரண்டும் தவறு

2. கூற்று (A): மூன்றாம் நிலைத் தொழிலில், பொருள்கள் நேரடியாக உற்பத்தி செய்யப்படாமல் உற்பத்தி செய்வதற்கான செயல்முறைகளில் உறுதுணையாக உள்ளது.

காரணம் (R): மூன்றாம் நிலைத் தொழிலில் ஈடுபடும் மக்கள் முழுமையாக சுற்றுச் சூழலுக்குச் சாதகமாகச் செயல்படுகிறார்கள்.

(அ) A மற்றும் R இரண்டும் தவறு

(ஆ) A மற்றும் R இரண்டும் சரி. ஆனால் Aவானது Rக்கு விளக்கம் தரவில்லை

(இ) A சரி ஆனால் R தவறு

(ஈ) A மற்றும் R இரண்டும் சரி. Aவானது Rக்கு சரியான விளக்கம் தருகிறது

**விடைகள்:**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. சுற்றுச்சூழல், 2. ஜீலை 11, 3. மக்கள்தொகையியல், 4. சுரங்கவியல், 5. முடிக்கப்பட்ட பொருள்கள்

**II. பொருத்துக:**

1. இ, 2. உ, 3. ஈ, 4. அ, 5. ஆ

**III. பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. Aவும் Rம் சரி மற்றும் R என்பது Aன் சரியான விளக்கம், 2. A சரி ஆனால் R தவறு

9th Social Science Lesson 18

18] நிலவரைபடத் திறன்கள்

**உங்களுக்குத் தெரியுமா?**

நிலவரைபடவியலாளர் என்பவர் புவியியல் தகவல்களைச் சேகரித்து, ஆய்வு செய்து, விவரணம் செய்து, அரசியல், கலாச்சார மற்றும் கல்வி நோக்கங்களுக்காக நிலவரைபடங்கள் மற்றும் விளக்கப்படங்களை உருவாக்குபவர் ஆவார்.

1 செ. மீ = 2 கி. மீ என்றால் அளவையைப் பின்னமுறையில் மாற்று.

இந்தியாவில் முதன்மை நிலப்பரப்பின் அட்ச, தீர்க்கப்பரவல்: 8° 4₹ வ முதல் 37° 6₹ வ அட்சம் வரை, 68° 7₹ கி முதல் 97° 25₹ கி தீர்க்கம் வரை உள்ளது. இங்கு (°) என்பது கோணம் (₹) என்பது நிமிடம் ஆகும்.

புவியின் உண்மையான வடிவம் ஜியாய்டு எனப்படுகிறது. இது ஒரு நீள்வட்டக் கோளம் ஆகும். ஐக்கிய நாடுகள் சபையின் கொடியில் "சமதள துருவ கோட்டுச் சட்டம் சித்தரிக்கப்பட்டுள்ளது. 1945ஆம் ஆண்டு முதன்முதலாக வரையப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் கொடியில் இதில் 90° மேற்கு தீர்க்கக்கோடு மேல்நோக்கி இருந்தது. அதனால் வடஅமெரிக்கா முதன்மையாகத் தெரிந்தது. அடுத்த ஆண்டு நடுநிலை வகிக்கும் வகையில் சர்வதேச தேதிக் கோடு 180° கிழக்கு, பசிஃபிக் பேராழியின் மத்தியில் மேல்நோக்கித் தெரியும் வகையில் உருமாற்றம் செய்யப்பட்டது. மேலும் நிலவரைபடம் 60° தெற்கு அட்சக் கோட்டில் நிறுத்தப்பட்டிருப்பதால், அண்டார்டிகா தென்படவில்லை.

நமது உடலில் மூன்று தொலை உணர்வு உறுப்புகள் காணப்படுகின்றன. கண்கள் – கண்களின் பார்வை. மூக்கு – வாசனையின் உணர்வு. காது – கேட்கும் உணர்வு.

பெலிக்ஸ் நடார், ஒரு பிரெஞ்சு புகைப்படக்காரர். மேலும் பத்திரிக்கையாளர், நாவலாசிரியர் மற்றும் பலூன் உருவாக்குபவர். இவர் கி. பி. 1858ஆம் ஆண்டில் முதன்முதலாக வான்வழி புகைப்படங்களை எடுத்த முதல் நபர் ஆவார். பாரிஸ் சுரங்கக் கல்லறையில் வேலை பார்த்து வந்த அவர், 1853ஆம் ஆண்டில் தனது முதல் புகைப்படங்களை எடுத்ததுடன், புகைப்படம் எடுப்பதில் செயற்கை ஒளியை பயன்படுத்துவதில் முன்னோடியாகவும் திகழ்ந்தார். கி. பி. 1863ஆம் ஆண்டில், நடார் ஒரு பெரிய (6000 மீ$^{3}$) "லீ ஜெண்ட்" (தி ஜெயண்ட்) என்று பெயரிடப்பட்ட பலூனை உருவாக்கினார்.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. 20ம் நூற்றாண்டில் தலப்பரப்பு அளவிடுதலின் புதிய நிலை

(அ) தலப்படங்கள்

(ஆ) வானவியல் புகைப்படங்கள்

(இ) நிலவரப்படங்கள்

(ஈ) செயற்கைகோள் பதிமங்கள்

2. ஒரு நிலவரைபடத்தின் கருத்து (அல்லது) நோக்கத்தைக் குறிப்பிடுவது.

(அ) தலைப்பு

(ஆ) அளவை

(இ) திசைகள்

(ஈ) நிலவரைப்படக் குறிப்பு

3. நிலவரைபடத்தில் உறுதியான கருத்தை வெளிப்படுத்துவதற்குப் பயன்படும் நிரந்தர குறியீடுகள்

(அ) முறைக்குறியீடுகள்

(ஆ) இணைப்பாய புள்ளிகள்

(இ) வலைப்பின்னல் அமைப்பு

(ஈ) திசைகள்

4. மிகப்பரந்த நிலப்பரப்பில் குறைந்த விவரத்தை தரக்கூடிய நிலவரைபடம்

(அ) பெரிய அளவை நிலவரைபடம்

(ஆ) கருத்துசார் வரைபடம்

(இ) இயற்கை வரைபடம்

(ஈ) சிறிய அளவை நிலவரைபடம்

5. உலக அமைவிடத்தை கண்டறியும் தொகுதியில் (GPS) பயன்படுத்தப்படும் செயற்கைக்கோள்கள்

(அ) 7

(ஆ) 24

(இ) 32

(ஈ) 64

**<u>II. பொருத்துக:</u>**

1. நிலவரைபடங்களை உருவாக்கும் அறிவியல் கலை – அ] அமெரிக்க ஐக்கிய நாடுகள்

2. கருத்துசார் வரைபடம்– – ஆ] ஜியாய்டு

3. புவியின் வடிவம – இ] இன்மார்சாட்

4. செயற்கைகோள் – ஈ] அரசியல் வரைபடம்

5. நவ்ஸ்டார் – உ] நிலவரைபடக் கலையியல்

**<u>III. பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:</u>**

1. கூற்று (A): செங்குத்துக் கோடுகளும் இடைமட்டக் கோடுகளும் ஒரு புள்ளியில் சந்திப்பதன் மூலம் உருவாக்கும் வலை அமைப்பிற்கு இணைப்பாயங்களின் அமைப்பு.

காரணம் (R): கிடைமட்டமாகவும், செங்குத்தாகவும் செல்லும் கோடுகள் முறையே வடக்கைக்கோடுகள், கிழக்கைக்கோடுகள் என்று அழைக்கப்படுகின்றன.

(அ) A மற்றும் R இரண்டும் சரி Rஆனது Aவிற்கு சரியான விளக்கம்

(ஆ) A மற்றும் R இரண்டும் சரி ஆனால் Rஆனது Aவிற்கு சரியான விளக்கமல்ல

(இ) A சரி R தவறு

(ஈ) A தவறு R சரி

2. கூற்று (A): ஒரு நிலவரைபடத்தில் உள்ள வரைபடக் குறிப்புகள் வரைபடத்தில் உள்ள செய்திகளைப் புரிந்து கொள்ளப் பயன்படாது.

காரணம் (R): இது பொதுவாக நிலவரை படத்தின் அடிப்பகுதியில் இடது அல்லது வலது புற ஓரத்தில் காணப்படும்.

(அ) A தவறு R சரி

(ஆ) A மற்றும் R இரண்டும் சரி ஆனால் R ஆனது Aவிற்கு சரியான விளக்கமல்ல

(இ) A சரி ஆனால் R தவறு

(ஈ) A மற்றும் R இரண்டும் சரி, Rஆனது Aவிற்கு சரியான விளக்கம்

**விடைகள்:**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. செயற்கைகோள் பதிமங்கள், 2. தலைப்பு, 3. முறைக்குறியீடுகள், 4. சிறிய அளவை நிலவரைபடம், 5. 24

**II. பொருத்துக:**

1. உ, 2. ஈ, 3. ஆ, 4. இ, 5. அ

**III. பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. A மற்றும் R இரண்டும் சரி ஆனால் Rஆனது Aவிற்கு சரியான விளக்கமல்ல, 2. A தவறு R சரி

## 9th Social Science Lesson 19

## 19] பேரிடர் மேலாண்மை – பேரிடரை எதிர்கொள்ளுதல்

**உங்களுக்குத் தெரியுமா?**

ஜப்பான் முழுவதும் நிலநடுக்க பகுதியில் அமைந்துள்ளது. இது உலகிலேயே மிக அதிக அடர்த்தியான நிலநடுக்க பகுதிகளைக் கொண்டுள்ளது. எந்த நாடு உண்மையிலேயே அதிக நிலநடுக்கங்களைக் கொண்டுள்ளது? இந்தோனேசியா அதிக நிலநடுக்கப் பகுதிகளைக் கொண்டுள்ளது. ஜப்பானை விட அதிக பரப்பளவைக் கொண்டுள்ளதால் இந்தோனேசியாவில் தான் உலகிலேயே அதிக நிலநடுக்கங்கள் ஏற்படுகின்றன. ஒரு சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் அதிக நிலநடுக்கங்களைக் கொண்டுள்ள நாடுகள் டோங்கா, பிஜி மற்றும் இந்தோனேசியா ஆகும். ஏனெனில் அவை உலகின் மிக தீவிர நில அதிர்வுப் பகுதிகளில் அமைந்துள்ளன.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. கீழ்க்காண்பனவற்றில் ஒன்று பேரிடரைப் பொருத்தமட்டில் முதன்மை மீட்பு குழு இல்லை.

(அ) காவலர்கள்

(ஆ) தீயணைப்புப் படையினர்

(இ) காப்பீட்டு முகவர்கள்

(ஈ) அவசர மருத்துவக் குழு

2. "விழு! மூடிக்கொள்! பிடித்துகொள்!" என்பது எதற்கான ஒத்திகை?

(அ) தீ

(ஆ) நிலநடுக்கம்

(இ) சுனாமி

(ஈ) கலவரம்

3. தீவிபத்து ஏற்படும் போது நீங்கள் அழைக்கும் எண்.

(அ) 114

(ஆ) 112

(இ) 115

(ஈ) 118

4. கீழ்க்காணும் சொற்றொடர்களில் எது தவறு?

(அ) தீ விபத்திலிருந்து தப்பிக்க "நில்! விழு! உருள்!"

(ஆ) "விழு! மூடிக்கொள்! பிடித்துக்கொள்!" என்பது நிலநடுக்க தயார் நிலை

(இ) "கடல் நீர் பின்வாங்கிச் சென்றால் நீங்கள் உயரமான பகுதிகளை நோக்கி ஓடுங்கள்" என்பது வெள்ளப் பெருக்குக்கான தயார்நிலை

(ஈ) துப்பாக்கி சுடும் சத்தம் கேட்டால் தரையில் கிடைமட்டமாகப் படுத்துக்கொண்டு தலையையும் கழுத்தையும் மூடிக்கொள்ளவும்

5. கீழ்க்காணும் சொற்றொடர்களில் எது நிலநடுக்கத்தை எதிர் கொள்வதோடு தொடர்புடையது?

(அ) காவல் துறை மற்றும் பாதுகாப்புப் படையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருக்கும் பகுதிகளுக்குச் செல்ல வேண்டாம்.

(ஆ) கடல் மட்டத்திலிருந்து உங்கள் தெரு எவ்வளவு உயரத்தில் உள்ளது மற்றும் கடலோரத்திலிருந்து எவ்வளவு தூரத்தில் அமைந்துள்ளது எனத் தெரிந்து கொள்ளவும்.

(இ) கண்ணாடிச் சன்னல், வெளிக்கதவுகள், சுவர் மற்றும் எளிதில் விழக்கூடிய தொங்கும் மின்விளக்குகள் மற்றும் மரச்சாமான்கள் போன்றவற்றிலிருந்து விலகியிருக்கவும்.

(ஈ) கதவைத் திறப்பதற்கு முன்பு புறங்கையால் கதவைத் தொட்டு வெப்பமாக உணர்ந்தால் கதவைத் திறக்க வேண்டாம்.

**விடைகள்:**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. காப்பீட்டு முகவர்கள், 2. நிலநடுக்கம், 3. 112, 4. "கடல் நீர் பின்வாங்கிச் சென்றால் நீங்கள் உயரமான பகுதிகளை நோக்கி ஓடுங்கள்" என்பது வெள்ளப் பெருக்குக்கான தயார்நிலை, 5. கண்ணாடிச் சன்னல், வெளிக்கதவுகள், சுவர் மற்றும் எளிதில் விழக்கூடிய தொங்கும் மின்விளக்குகள் மற்றும் மரச்சாமான்கள் போன்றவற்றிலிருந்து விலகியிருக்கவும்

9th Social Science Lesson 20

**20] அரசாங்க அமைப்புகள் மற்றும் மக்களாட்சி**

**உங்களுக்குத் தெரியுமா?**

பொ. ஆ. மு. 500ம் ஆண்டு ரோம் நாட்டில் முதன் முதலில் "குடியரசு" (Republic) எனும் சொல் வடிவமைக்கப்பட்டது. இச்சொல் "res publics" எனும் லத்தீன் மொழிச் சொல்லிலிருந்து பெறப்பட்டது. இதன் பொருள் "பொது விவகாரம்" (public matter) என்பதாகும்.

இந்திய அரசியலமைப்பு நவம்பர் 26. 1949ல் ஏற்றுக் கொள்ளப்பட்டு, ஜனவரி 26, 1950ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்தது. எனவே, ஜனவரி மாதம் 26ஆம் நாள், 1950ஆம் ஆண்டு இந்தியா குடியரசு நாடாக மலர்ந்தது.

மக்காளட்சி (Democracy) எனும் சொல் 'DEMOS' மற்றும் 'CRATIA' எனும் இரு கிரேக்க சொற்களிலிருந்து பெறப்பட்டதாகும். டெமாஸ் என்றால் "மக்கள் கிரஸி என்றால் அதிகாரம்" (power of the people) என்று பொருள்படும்.

**நாடாளுமன்றத்தின் இரு அவைகள்:** ராஜ்ய சபா/மேல் அவை/மாநிலங்களவை. லோக் சபா/கீழ் அவை/மக்களவை.

1912–13ஆம் ஆண்டு புது தில்லியில் உள்ள இந்தியாவின் நாடாளுமன்றக் கட்டிடத்தை எட்வின் லுட்டியன்ஸ் மற்றும் ஹெர்பர்ட் பேக்கர் எனும் பிரிட்டிஷ் கட்டிடக் கலைஞர்கள் வடிவமைத்தனர். இக்கட்டிடத்தை 1921ஆம் ஆண்டு கட்டத் தொடங்கி, 1927–ல் முடித்தனர்.

பொது தேர்தல்கள் – 1920: இம்பீரியல் கவுன்சில் எனும் மத்திய சட்டசபைக்கும் மாகாண சட்ட சபைக்கும் தேவையான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க 1920ம் ஆண்டு பிரிட்டிஷ் இந்தியாவில் முதல் பொதுத் தேர்தல் நடைபெற்றது. இதுவே இந்திய வரலாற்றின் முதல் பொதுத் தேர்தல் ஆகும்.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. ஒரு நபரோ, அரசரோ அல்லது அரசியோ ஆட்சி செய்யும் முறை

(அ) தனி நபராட்சி

(ஆ) முடியாட்சி

(இ) மக்களாட்சி

(ஈ) குடியரசு

2. முழு அதிகாரத்துடன் கொண்ட ஒரு அரசாங்க முறை

(அ) சிறுகுழு ஆட்சி

(ஆ) மதகுருமார்களின் ஆட்சி

(இ) மக்களாட்சி

(ஈ) தனிநபராட்சி

3. முன்னாள் சோவியத் யூனியன் --------------க்கு எடுத்துக்காட்டு.

(அ) உயர் குடியாட்சி

(ஆ) மதகுருமார்களின் ஆட்சி

(இ) சிறுகுழு ஆட்சி

(ஈ) குடியரசு

4. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்

(அ) இந்தியா

(ஆ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

(இ) பிரான்ஸ்

(ஈ) வாட்டிகன்

5. ஆபிரகாம் லிங்கன் --------------- நாட்டின் ஜனாதிபதியாக இருந்தார்.

(அ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

(ஆ) இங்கிலாந்து

(இ) சோவியத் ரஷ்யா

(ஈ) இந்தியா

6. குடவோலை முறையை பின்பற்றியவர்கள்

(அ) சேரர்கள்

(ஆ) பாண்டியர்கள்

(இ) சோழர்கள்

(ஈ) களப்பிரர்கள்

7. பழங்காலத்தில் நேரடி மக்களாட்சி முறை பின்பற்றப்பட்டப் பகுதி

(அ) பண்டைய இந்தியாவின் குடியரசுகள்

(ஆ) அமெரிக்கா

(இ) பண்டைய ஏதன்ஸ் நகர அரசுகள்

(ஈ) பிரிட்டன்

8. எந்த மொழியிலிருந்து "டெமாகிராஸி" என்ற வார்த்தைப் பெறப்பட்டது?

(அ) கிரேக்கம்

(ஆ) லத்தீன்

(இ) பாரசீகம்

(ஈ) அரபு

9. மக்களாட்சியில் இறுதி அதிகாரம் பெற்றவர்கள்

(அ) நாடாளுமன்றம்

(ஆ) மக்கள்

(இ) அமைச்சர் அவை

(ஈ) குடியரசு தலைவர்

10. கீழ்க்கண்ட எந்த ஒரு நாடானது அதிபர் அரசாங்க முறையினைக் கொண்டுள்ளது?

(அ) இந்தியா

(ஆ) பிரிட்டன்

(இ) கனடா

(ஈ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

11. உலகிலேயே மிகப் பெரிய மக்களாட்சி நாடு

(அ) கனடா

(ஆ) இந்தியா

(இ) அமெரிக்க ஐக்கிய

(ஈ) சீனா நாடுகள்

12. கூற்று (A): நேரடி மக்களாட்சி சுவிட்சர்லாந்தில் நடைமுறையில் உள்ளது.

காரணம் (R): மக்கள் நேரடியாக முடிவெடுப்பதில் பங்கு பெறுகிறார்கள்.

(அ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது மற்றும் (R), (A)வை விளக்குகிறது.

(ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது (R), (A)வை விளக்கவில்லை.

(இ) (A) சரியானது மற்றும் (R) தவறானது

(ஈ) (A) தவறானது மற்றும் (R) சரியானது

13. கூற்று (A): இந்தியாவில் நாடாளுமன்ற அரசாங்க முறை பின்பற்றப்படுகிறது.

காரணம் (R): இந்திய நாடாளுமன்றம் இரு சபைகளை உள்ளடக்கியது.

(அ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது மற்றும் (R), (A)வை விளக்குகிறது.

(ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது (R), (A)வை விளக்கவில்லை.

winmeen.com

(இ) (A) சரியானது மற்றும் (R) தவறானது

(ஈ) (A) தவறானது மற்றும் (R) சரியானது.

14. வாக்குரிமையின் பொருள்

(அ) தேர்ந்தெடுப்பதற்கான உரிமை

(ஆ) ஏழைகளுக்கு வாக்களிக்கும் உரிமை

(இ) வாக்களிக்கும் உரிமை

(ஈ) பணக்காரர்களுக்கு வாக்களிக்க உரிமை

15. அனைவருக்கும் வாக்குரிமை வழங்குவது

(அ) சமூகச் சமத்துவம்

(ஆ) பொருளாதார சமத்துவம்

(இ) அரசியல் சமத்துவம்

(ஈ) சட்ட சமத்துவம்

16. பிரதமரை நியமிப்பவர்/நியமிப்பது

(அ) மக்களவை

(ஆ) மாநிலங்களவை

(இ) சபாநாயகர்

(ஈ) குடியரசுத் தலைவர்

17. குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுபவர்கள்

(அ) லோக் சபைக்கு 12 உறுப்பினர்கள்

(ஆ) ராஜ்ய சபைக்கு 2 உறுப்பினர்கள்

(இ) ராஜ்ய சபைக்கு 12 உறுப்பினர்கள்

(ஈ) ராஜ்ய சபைக்கு 14 உறுப்பினர்கள்

18. இந்தியாவில் சுதந்திரத்திற்குப் பிறகு முதல் பொதுத் தேர்தல் நடைபெற்ற ஆண்டு

(அ) 1948–49

(ஆ) 1951–52

(இ) 1957–58

(ஈ) 1947–48

**<u>II. கோடிட்ட இடங்களை நிரப்புக:</u>**

1. இந்திய அரசியலமைப்பு இறுதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆண்டு ----------------

2. இரண்டு வகையான மக்களாட்சி ---------------- மற்றும் --------------- ஆகும்.

3. நேரடி மக்களாட்சிக்கு ஒரு எடுத்துக்காட்டு ----------------

4. இந்தியா -------------- மக்களாட்சி முறையினைக் கொண்டுள்ள நாடாகும்.

5. சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர் --------------- ஆவார்.

6. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் முதல் பொதுத் தேர்தல் நடத்தப்பட்ட ஆண்டு ----------------

7. இந்தியாவில் நாடாளுமன்ற கட்டிடத்தை வடிவமைத்தவர்கள் ------------- மற்றும் -------------- ஆவர்.

**III. பொருத்துக:**

1. தனிநபராட்சி – அ] 18

2. வாக்குரிமை – ஆ] அர்த்த சாஸ்திரம்

3. சாணக்கியர் – இ] வாடிகன்

4. மதகுருமார்கள் ஆட்சி – ஈ] வடகொரியா

**விடைகள்:**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. முடியாட்சி, 2. தனிநபராட்சி, 3. சிறுகுழு ஆட்சி, 4. வாட்டிகன், 5. அமெரிக்க ஐக்கிய நாடுகள், 6. சோழர்கள், 7. பண்டைய ஏதன்ஸ் நகர அரசுகள், 8. கிரேக்கம், 9. மக்கள், 10. அமெரிக்க ஐக்கிய நாடுகள், 11. இந்தியா, 12. (A) மற்றும் (R) இரண்டும் சரியானது மற்றும் (R), (A)வை விளக்குகிறது, 13. (A) மற்றும் (R) இரண்டும் சரியானது மற்றும் (R), (A)வை விளக்குகிறது, 14. வாக்களிக்கும் உரிமை, 15. சமூகச் சமத்துவம், 16. குடியரசுத் தலைவர், 17. ராஜ்ய சபைக்கு 12 உறுப்பினர்கள், 18. 1951–52

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. 1. 1949, 2. மறைமுக, 3. ஸ்விட்சர்லாந்து, 4. மறைமுக, 5. ஜவஹர்லால் நேரு, 6. 1920, 7. ஹெர்மாட் பேக்கர், எட்வின் லூட்டியன்ஸ்

**III. பொருத்துக:**

1. ஈ, 2. அ, 3. ஆ, 4. இ

9th Social Science Lesson 21

**21] தேர்தல், அரசியல் கட்சிகள் மற்றும் அழுத்தக் குழுக்கள்**

**உங்களுக்குத் தெரியுமா?**

தமிழ்நாட்டில் சோழர்கள் காலத்தில் குடவோலை என்னும் வழக்கப்படி கிராமச் சபை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இந்தியாவில் ஜனவரி 25ஆம் நாளினை தேசிய வாக்காளர் தினமாக கொண்டாடுகிறோம்.

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளரின் பெயருக்கு எதிரில் உள்ள பொத்தானை அழுத்தி வாக்குச் செலுத்தப்படுகிறது. ஒருவர் தாம் செலுத்திய வாக்குச் சரியான படி பதிவாகி உள்ளதா என்று தெரிந்து கொள்ளும் வாய்ப்பை 2014ம் ஆண்டு பொதுத் தேர்தலில் தேர்தல் ஆணையம் அறிமுகப்படுத்தியது. இதை ஆங்கிலத்தில் சுருக்கமாக VVPAT (Voters Verified Paper Audit Trial) என்று குறிப்பிடுகிறார்கள்.

2014ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் முதல் முறையாக NOTA அறிமுகப்படுத்தப்பட்டது. உலகில் NOTA–வை அறிமுகப்படுத்திய 14வது நாடு இந்தியா ஆகும்.

இந்திய குடியரசுத் தலைவர் எப்படி தேர்ந்தெடுக்கப்படுகிறார்? இந்திய குடியரசுத் தலைவர் பின்வரும் உறுப்பினர்கள் கொண்ட தேர்தல் குழாம் (Electrical College) மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அவை. (1) பாராளுமன்றத்தின் இரு அவையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள். (2) இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட மன்ற உறுப்பினர்கள். குறிப்பு: பாராளுமன்ற இரு அவைகள் மற்றும் மாநில சட்ட மன்றங்களில் நியமிக்கப்படும் நியமன உறுப்பினர்கள் இக்குழுவில் அங்கம் இடம் பெறமாட்டார்கள்.

அழுத்தக் குழுக்களுக்கான எடுத்துக்காட்டுகள்: (1) இந்திய வணிகம் மற்றும் தொழிற்துறை சம்மேளத்தின் கூட்டமைப்பு (FICCI). (2) அகில இந்தியத் தொழிற்சங்க காங்கிரஸ் (AITUC). (3) அகில இந்திய விவசாயிகள் சங்கம் (AIKS). (4) இந்திய மருத்துவச் சங்கம் (IMA). (5) அகில இந்திய மாணவர் சம்மேளனம் (AISF). (6) ஆகில இந்திய சீக்கிய மாணவர் பேரவை. (7) இளம் பதாகா சங்கம் (YBA). (8) தமிழ்ச் சங்கம். (9) தமிழ்நாடு விவசாயிகள் சங்கம். (10) நர்மதா பச்சாவோ அந்தோலன்.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. கீழ்க்கண்ட நாட்டின் தேர்தல் முறையினை இந்தியா ஏற்றுக் கொண்டுள்ளது.

(அ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

(ஆ) இங்கிலாந்து

(இ) கனடா

(ஈ) ரஷ்யா

2. இந்திய தேர்தல் ஆணையம் ஒரு

(அ) சுதந்திரமான அமைப்பு

(ஆ) சட்டபூர்வ அமைப்பு

(இ) தனியார் அமைப்பு

(ஈ) பொது நிறுவனம்

3. இந்திய தேர்தல் ஆணையம் அமைக்க வழிவகை செய்யும் அரசியலமைப்பு பிரிவு

(அ) பிரிவு 280

(ஆ) பிரிவு 315

(இ) பிரிவு 324

(ஈ) பிரிவு 325

4. இந்திய அரசியலமைப்பின் எந்த பகுதி தேர்தல் ஆணையத்தைப் பற்றி கூறுகிறது?

(அ) பகுதி III

(ஆ) பகுதி XV

(இ) பகுதி XX

(ஈ) பகுதி XXII

5. பல்வேறு அரசியல் கட்சிகளைத் தேசியக் கட்சியாகவோ அல்லது மாநிலக் கட்சியாகவோ அங்கீகரிப்பவர்/அங்கீகரிப்பது.

(அ) குடியரசுத் தலைவர்

(ஆ) தேர்தல் ஆணையம்

(இ) நாடாளுமன்றம்

(ஈ) தேர்தல் ஆணையத்தின் ஆலோசனையின் பேரில் குடியரசுத் தலைவர்

5. கூற்று (A): இந்திய அரசியலமைப்புச் சுதந்திரமாக செயல்படும் தேர்தல் ஆணையத்திற்கு வழிவகைச் செய்கிறது.

காரணம் (R): இது நாட்டின் சுதந்திரமான நியாயமான தேர்தலை நடத்த உறுதி செய்கிறது.

(அ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது மற்றும் (R), (A)வை விளக்குகிறது.

(ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது (R), (A)வை விளக்கவில்லை.

(இ) (A) சரியானது மற்றும் (R) தவறானது

(ஈ) (A) தவறானது மற்றும் (R) சரியானது

6. கூற்று (A): இந்தியாவில் அதிக எண்ணிக்கையிலான அழுத்தக்குழுக்கள் காணப்படுகின்றன.

காரணம் (R): அமெரிக்க ஐக்கிய நாட்டில் இருப்பதை போல இந்தியாவில் அழுத்தக் குழுக்கள் வளர்ச்சியடையவில்லை.

(அ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது மற்றும் (R), (A)வை விளக்குகிறது.

(ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது (R), (A)வை விளக்கவில்லை.

(இ) (A) சரியானது மற்றும் (R) தவறானது.

(ஈ) (A) தவறானது மற்றும் (R) சரியானது.

7. நோட்டா (NOTA) முறை அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு

(அ) 2012

(ஆ) 2013

(இ) 2014

(ஈ) 2015

winmeen.com

8. அழுத்தக் குழுக்கள் எனும் சொல்லினை உருவாக்கிய நாடு

(அ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

(ஆ) இங்கிலாந்து

(இ) முன்னாள் சோவியத் யூனியன்

(ஈ) இந்தியா

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. இந்திய தேர்தல் ஆணையம் ---------------- உறுப்பினர்களை உள்ளடக்கியுள்ளது.

2. தேசிய வாக்காளர்கள் தினம் அனுசரிக்கப்படும் நாள் -----------------

3. இந்தியாவில் -------------- கட்சி முறை பின்பற்றப்படுகிறது.

4. 2017ல் அங்கீகரிக்கப்பட்ட தேசியக் கட்சிகளின் எண்ணிக்கை -----------------

5. நர்மதா பச்சோவோ அந்தோலன் என்பது ஒரு -----------------

**III. பொருத்துக:**

1. தேசியக் கட்சி – அ] வணிகக் குழுக்கள்

2. ஒரு கட்சி ஆட்சி முறை – ஆ] அமெரிக்க ஐக்கிய நாடுகள்

3. இரு கட்சி ஆட்சி முறை – இ] சீனா

4. அழுத்தக் குழுக்கள் – ஈ] ஏழு

**விடைகள்:**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. இங்கிலாந்து, 2. சுதந்திரமான அமைப்பு, 3. பிரிவு 324, 4. பகுதி XV, 5. தேர்தல் ஆணையம், 6. (A) மற்றும் (R) இரண்டும் சரியானது மற்றும் (R), (A)வை விளக்குகிறது, 7. 2014, 8. அமெரிக்க ஐக்கிய நாடுகள்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. 3, 2. ஜனவரி 25, 3. பல, 4. 7, 5. அழுத்தக்குழு

**III. பொருத்துக:**

1. ஈ, 2. இ, 3. ஆ, 4, அ

9th Social Science Lesson 22

22] மனித உரிமைகள்

**உங்களுக்குத் தெரியுமா?**

ஐ. நா. சபை நாள் அக்டோபர் 24.

**இறுதிக்கு வந்த இன ஒதுக்கல் கொள்கை:** இன ஒதுக்கல் (Apartheid) தென்னாப்பிரிக்காவில் காணப்பட்ட இனப்பாகுபாடு ஆகும். வசிப்பிடங்களும் இனத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டன. குறைந்த எண்ணிக்கையிலான வெள்ளை இனத்தவர் அதிக எண்ணிக்கையிலான கறுப்பினத்தவரின் மீது ஆதிக்கம் செலுத்திய இந்த இன ஒதுக்கல் கொள்கைக்கு எதிராக தென்னாப்பிரிக்க மக்கள் போராடினர். நெல்சன் மண்டேலா இன ஒதுக்கல் எனப்படும் கொள்கைக்கு எதிராக தொடர்ச்சியாகப் போராடினார். அரசுக்கு எதிராக போராட்டங்கள் நடத்தியபோது, சிறையில் தள்ளப்பட்டார். உள்நாட்டிலும், உலக நாடுகளிடமிருந்தும் அவரது போராட்டத்திற்கு ஆதரவு பெருகியபோது, இன ரீதியான உள்நாட்டு போர் ஏற்படுமோ என்ற அச்சத்தினால், தென்னாப்பிரிக்க தலைவர் F. W. டி கிளார்க் 1990ல் அவரை விடுதலை செய்தார். மண்டேலா மற்றும் டி கிளார்க் ஆகியோரது கடும் முயற்சியினால் இன ஒதுக்கல் கொள்கை ஒரு முடிவிற்கு வந்தது. 1994ல் பல்லினப் பொதுத் தேர்தல் நடைபெற்றபொழுது, மண்டேலாவின் தலைமையிலான ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் வெற்றி பெற்று, அந்நாட்டின் தலைவரானார்.

மனித உரிமை நாள் ஒவ்வொரு வருடமும் டிசம்பர் 10ஆம் நாள் கொண்டாடப்படுகிறது.

மூத்த குடிமக்கள் மற்றும் பெற்றோர் நலன்கள் பராமரிப்புச் சட்டம் 2007–ஆம் ஆண்டில் சட்டமாக இயற்றப்பட்டது. இந்தச் சட்டம் பிள்ளைகளுக்கும் வாரிசுகளுக்கும் தங்கள் பெற்றோரை அல்லது மூத்த குடிமக்களைப் பாதுகாக்குமாறு கேட்டுக்கொள்ளும் சட்டப்பூர்வ வேண்டுகோள் ஆகும்.

**மலாலா –** நோபல் பரிசு வென்றவர் கூறுகிறார்: "நான் பள்ளியை நேசித்தேன். ஆனால் அடிப்படைவாதிகள் என் வசிப்பிடமாகிய ஸ்வாட் பள்ளத்தாக்கினை ஆக்கிரமித்த பொழுது அனைத்தும் மாறியது. பெண்கள் பள்ளிக்குச் செல்ல முடியவில்லை. மற்ற பெண்களுக்காகவும், எங்களது கல்வி கற்கும் உரிமைக்காகவும் நான் குரல் கொடுத்தேன். 2012 அக்டோபரில், பள்ளியிலிருந்து வீடு திரும்பும் பொழுது, துப்பாக்கி ஏந்திய ஒருவர் எங்கள் பேருந்தில் ஏறி இதில் மலாலா யார்? என்று கேட்டு, என் தலையின் இடது பக்கத்தில் சுட்டான். பத்து நாட்கள் கழிந்து இங்கிலாந்தில் உள்ள பர்மிங்ஹாம் என்னுமிடத்தில் உள்ள மருத்துவமனையில் கண் விழித்தேன். பல மாதங்கள் அறுவை சிகச்சைகளிலும், மறுவாழ்வு சிகிச்சையிலும் கழிந்தது. இங்கிலாந்திலுள்ள எனது புது வீட்டில் என் குடும்பத்தினரோடு மீண்டும் சேர்ந்த நான், ஒவ்வொரு பெண் குழந்தையும் பள்ளி செல்லும் வரை என் போராட்டத்தைத் தொடர்வேன் என உறுதி பூண்டேன். அனைத்து பெண்களும் 12 வருட இலவச, பாதுகாப்பான மற்றும் தரமான கல்வி பயில வேண்டும் என்பதை உறுதி செய்ய நான் ஒவ்வொரு நாளும் போராடுகிறேன். 130 மில்லியன் பெண்கள் பள்ளியில் பயிலாத இன்றைய சூழலில், நான் செய்ய வேண்டிய வேலைகள் அதிகம் உள்ளன. கல்வி மற்றும் சமத்துவத்திற்காக என்னோடு சேர்ந்து போராடுவீர்கள் என நம்புகிறேன். நாம் இணைந்து, பெண்கள் கல்வி பயின்று, வழிநடத்தும் ஓர் உலகை உருவாக்குவோம்".

இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் (Right of Children to free and compulsory education) 2009, ஒவ்வொரு குழந்தையும் தொடக்கக் கல்வி பயில உரிமை உள்ளது என்பதை வலியுறுத்துகின்றது. இவ்வுரிமை, குழந்தைகள் தொடக்கக் கல்வி முடியும் வரை அருகாமையில் உள்ள பள்ளியில் இலவச மற்றும் கட்டாயக் கல்வி அளிக்க வழிவகை செய்கிறது. கல்வி பயிலும் குழந்தை எந்த வகையான கட்டணமும் செலுத்த வேண்டிய அவசியமில்லை

**POCSO சட்டம்** – பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம். பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம் (The Protection of children from sexual offence Act, 2012) ஒவ்வொரு நிலையிலும் குழந்தைகளின் நலனை மையமாகக் கொண்டு செயல்படுகின்றது.

**POCSO சட்டத்தின் சிறப்பு அம்சங்கள்:** இச்சட்டம் 18 வயது வரை உள்ளவர்களை குழந்தைகள் என வரையறுக்கிறது; அக்குழந்தைகளின் உடல், மன, அறிவு சார் மற்றும் சமூக வளர்ச்சியினை உறுதி செய்கிறது. பாலியல் வன் கொடுமையில் அதிகாரத்தில் இருப்பவரோ, குடும்ப உறுப்பினரோ, அண்டை வீட்டாரோ அல்லது அறிமுகமானவரோ ஈடுபட்டால் அவர்களுக்குத் தகுந்த தண்டனை வழங்கப்படும். குழந்தை என்ன வாக்குமூலம் கூறுகிறதோ, அதை அவ்வாறே பதிவு செய்ய வேண்டும். பாதிக்கப்பட்ட குழந்தையை அடிக்கடி சாட்சி சொல்ல அழைக்கக் கூடாது. பனிரெண்டு பயதிற்குட்பட்ட பெண் குழந்தைகள் பாலியல் வன்கொடுமைச் செய்யப்படும் போது, வன்கொடுமை செய்தவருக்கு மரண தண்டனை வழங்குவதோடு கடுமையான தண்டனைகள் விதிக்க வகை செய்யும் சட்டம் 2018 ஏப்ரல் மாதம் கொண்டு வரப்பட்டது. குற்றவியல் சட்ட திருத்தச் சட்டம் 2018. இது இந்திய குற்றவியல் சட்டத்தில் கடுமையான திருத்தங்களைக் கொண்டு வந்தது. இதன் சிறப்பம்சம் என்னவென்றால் விதிக்கப்படும் அபராதத் தொகையானது பாதிக்கப்பட்டவரின் மருத்துவச் செலவை ஈடுகட்டும் வகையில் இருக்க வேண்டும் என்பதாகும்.

ஆபத்து காலத்தில் உதவிட காவலன் SOS செயலி தமிழ்நாடு அரசினால் பொது மக்களின் பயன்பாட்டிற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பெண்கள் மட்டுமின்றி, சிக்கலான அல்லது நெருக்கடியான சூழலில் இருக்கும் அனைவரும் மாநில காவல் கட்டுப்பாட்டு அறையினை இச்செயலியின் உதவியோடு எளிதாகவும், நேரடியாகவும், தொடர்பு கொள்ள இயலும்.

**1098 –** உதவி தேவைப்படும் குழந்தைகளுக்கான உதவி மைய எண் (Child line) இந்தியாவின் முதல் 24 மணிநேர கட்டணமில்லா அவசர தொலைதொடர்பு சேவை ஆகும். குழந்தைத் தொழிலாளர், குழந்தைத் திருமணம் மற்றும் ஏதேனும் வன்கொடுமைக்கு ஆளாகும் குழந்தைகளுக்கு சிறப்புக் கவனம் செலுத்தப்படும்.

குழந்தைகள் தேசத்தின் அடித்தளமாக விளங்குகின்றனர். சிறு வயதிலேயே பெண் குழந்தைகளுக்குத் திருமணம் செய்து வைக்கப்படும் போது குழந்தைப் பருவத்தின் மகிழ்ச்சிகள், கல்வியறிவு, ஆரோக்கியமான வாழ்வு போன்ற பல சலுகைகளை அவர்கள் இழந்து விடுகின்றனர். இதனால் குழந்தைத் திருமணங்கள் சமூகத்தைப் பெருமளவில் பாதிக்கின்றன. எனவே குழந்தைத் திருமணங்கள் அனைத்து விதத்திலும் தடுக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

பச்பன் பச்சாவ் அந்தோலன் (இளமையைக் காப்பாற்று இயக்கம்) போன்ற பல குழந்தைகள் உரிமை அமைப்புகளின் நிறுவனர் கைலாஷ் சத்யார்த்தி. அவர் குழந்தை உழைப்பு, கொத்தடிமை, கடத்தல் போன்ற பல குழந்தைகளுக்கு எதிரான நடவடிக்கைகளிலிருந்து சுமார் 86, 000த்திற்கும் அதிகமான இந்தியக் குழந்தைகள் இவராலும், இவரது குழு உறுப்பினர்களாலும் மீட்கப்பட்டுள்ளனர். 1998ல் உலக மக்களின் கவனத்தை குழந்தை உழைப்பு முறை மீது திசை திருப்ப, 80, 000 கி. மீ. நீள "குழந்தை உழைப்புக்கு எதிரான உலகளாவிய அணிவகுப்பை (Global March against child labour) முன்னின்று நடத்தினார்.

பெண்களுக்கு மூதாதையர் சொத்துரிமை: தமிழ்நாடு இந்து வாரிசு உரிமை (தமிழ்நாடு திருத்தச்) சட்டம், 1989ஐ நிறைவேற்றி மூதாதையரின் சொத்துகளில் பெண்களுக்கும் சம உரிமை வழங்கியுள்ளது. மத்திய அரசு இந்து வாரிசுரிமைச் சட்டம் 2005–இல் திருத்தங்களை மேற்கொண்டது. இதில் மூதாதையரின் பிரிக்கப்படாத சொத்தில் வாரிசு அடிப்படையில் பெண்களுக்கு சம உரிமையினை அளித்தது.

**இந்திய அரசியலமைப்பில் குழந்தைகள் உரிமை:** பிரிவு 24: பதினான்கு வயதுக்குட்பட்ட எந்த குழந்தையும் ஆபத்தான வேலைகளில் ஈடுபடுத்தக்கூடாது. பிரிவு 45: பதினான்கு வயது நிறைவடையும் வரை இலவச மற்றும் கட்டாயக் கல்வி அனைத்து குழந்தைகளுக்கும் அளிக்கப்பட வேண்டும்.

**பெண் தொழிலாளர் நலனும் – டாக்டர் பி. ஆர். அம்பேத்கரும்:** சுரங்கத் தொழிலாளர் பேறுகால நன்மைச் சட்டம், பெண் தொழிலாளர் நல நிதி, பெண்கள் மற்றும் குழந்தைத் தொழிலாளர் பாதுகாப்புச் சட்டம், பெண் தொழிலாளர்களுக்கான பேறுகால நன்மைகள், நிலச்சரிச் சுரங்கங்களில் சுரங்கப் பணிகளில் பெண்களை ஈடுபடுத்தப்படுவதற்கான தடையை மீட்டெடுத்தல் போன்ற சட்டங்கள் டாக்டர். பி. ஆர். அம்பேத்கர் அவர்களால் பெண் தொழிலாளர்களுக்காக இந்தியாவில் இயற்றப்பட்டது.

பத்து ஆண்டுகளாக கேரளாவில் உள்ள கடைகள் மற்றும் வணிக வளாகங்களில் வேலை செய்யும் பெண்கள் ஒரு நாளில் ஏறக்குறைய 12–14 மணிநேரமும் நின்றுகொண்டே வேலை செய்து கொண்டிருந்தனர். கடைகளிலிலும், வணிக வளாகங்களிலிலும் வேலை செய்யும் பெண் பணியாளர் அமர்ந்தோ, சுவரில் சாய்ந்தபடியே பணியாற்ற அனுமதிக்கப்படவில்லை. ஒரு நாளைக்கு, இருமுறை 5 நிமிடங்கள் மட்டுமே ஓய்வு எடுக்க அனுமதிக்கப்பட்டனர். பெண்களுக்கு இழைக்கப்படும் இந்த மனித தன்மையற்ற செயலுக்காக நீண்ட நாள்களாக பெருத்த கண்டனக் குரல்கள் ஒலித்து வந்தன. இப்பிரச்சனையைப் பரிசீலித்து குறைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு கேரள அரசு வணிக நிறுவன சட்டத்தில், 2018 ஜீலை மாதத்தில் சட்ட திருத்தம் கொண்டு வந்தது. இதன் மூலம் பெண்கள் இத்துயர் நீங்கி வெற்றி கண்டுள்ளனர்.

தொழிலாளர் நலனில் டாக்டர். பி. ஆர். அம்பேத்கரின் பங்களிப்புகள்: தொழிற்சாலையில் வேலை நேரம் குறைப்பு. தொழிற்சங்கங்களின் கட்டாய அங்கீகாரம். இந்தியாவில் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் அமைத்தல். தொழிலாளர் காப்பீட்டுக்கழகம் (ESI). தொழிலாளர்களுக்கான குறைந்த பட்ச ஊதியம். நிலக்கரி மற்றும் மைகா சுரங்கத்தின் வருங்கால வைப்பு நிதி.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. இன ஒதுக்கல் (Apartheid) என்னும் கொள்கையைப் பின்பற்றிய நாடு ------------------

(அ) தென் சூடான்

(ஆ) தென் ஆப்பிரிக்கா

(இ) நைஜீரியா

(ஈ) எகிப்த்

2. ஒரு அரசாங்கத்தின் உருவாக்கம் மற்றும் நிர்வாகத்தில் பங்கு பெறுவது ---------------

(அ) சமூகம்

(ஆ) பொருளாதாரம்

(இ) அரசியல்

(ஈ) பண்பாடு

3. ஒரு 10 வயது பையன் கடையில் வேலைப்பார்த்துக் கொண்டிருக்கிறான் – எந்த உரிமையைப் பயன்படுத்தி அவனை மீட்பாய்?

(அ) சமத்துவ உரிமை

(ஆ) சுதந்திர உரிமை

(இ) குழந்தை உழைப்பு மற்றும் சுரண்டலுக்கு எதிரான உரிமை

(ஈ) சமய சுதந்திர உரிமை

4. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி தகவலைப் பெறுவதற்கான கால வரம்பு ---------------

(அ) 20 நாட்கள்

(ஆ) 25 நாட்கள்

(இ) 30 நாட்கள்

(ஈ) 35 நாட்கள்

5. பின்வரும் கூற்றுகளில் எவை சரியானவை?

(i) மாநில மனித உரிமை ஆணையம் 1993ல் நிறுவப்பட்டது.

(ii) இது ஓர் உரிமையியல் நீதிமன்றத்திற்கு உள்ள அதிகாரங்களைப் பெற்றுள்ளது.

(iii) இதன் அதிகாரம் மாநில எல்லையைக் கடந்தும் செயல்படும்.

(iv) இது பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்க பரிந்துரைக்கலாம்.

(அ) i மற்றும் ii சரி (ஆ) i மற்றும் iii சரி (இ) i, ii மற்றும் iii சரி (ஈ) ii, iii மற்றும் iv சரி

6. கூற்று (A): உரிமைகளும் கடமைகளும் ஓர் நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை.

காரணம் (R): நாம் விரும்பும் மதத்தை பின்பற்றுவதற்கான உரிமை உண்டு. பிற மதத்தினர் இடையே இணக்கமான உறவை ஏற்படுத்துவதுடன் அவர்களின் உணர்வையும் மதிக்க வேண்டும்.

(அ) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A)விற்கு சரியான விளக்கம்.

(ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A)விற்கு சரியான விளக்கமல்ல.

(இ) (A) சரி ஆனால் (R) தவறு

(ஈ) (A) தவறு ஆனால் (R) சரி

7. ஐ. நா. சபையின்படி ------------- வயது நிறைவு பெறாதோர் குழந்தை ஆவார்.

(அ) 12

(ஆ) 14

(இ) 16

(ஈ) 18

8. ---------------- கான நோபல் பரிசு கைலாஷ் சத்தியார்த்தி மற்றும் மலாலாவிற்கு கொடுக்கப்பட்டது.

(அ) இலக்கியம்

(ஆ) அமைதி

(இ) இயற்பியல்

(ஈ) பொருளாதாரம்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. உலகளாவிய மனித உரிமை பிரகடனம் ------------- பிரிவுகளைக் கொண்டுள்ளது.

2. அடிப்படைக் கடமைகள் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ---------------- சட்ட திருத்தத்தின்படி சேர்க்கப்பட்டது.

3. தேசிய மனித உரிமை ஆணையம் ---------------ஆண்டு அமைக்கப்பட்டது.

4. பெண்களுக்கான மூதாதையர் சொத்துரிமை சட்டத்தை 1989இல் நடைமுறைப்படுத்திய இந்திய மாநிலம் ------------

**III. பொருத்துக:**

1. வாக்களிக்கும் உரிமை – அ] பண்பாட்டு உரிமை

2. சங்கம் அமைக்கும் உரிமை – ஆ] சுரண்டலுக்கெதிரான உரிமை

3. பாரம்பரியத்தை பாதுகாக்கும் உரிமை – இ] அரசியல் உரிமை

4. இந்து வாரிசுரிமைச் சட்டம் – ஈ] சுதந்திர உரிமை

5. குழந்தை தொழிலாளர் – உ] 2005

**விடைகள்:**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. தென் ஆப்பிரிக்கா, 2. சமூகம், 3. குழந்தை உழைப்பு மற்றும் சுரண்டலுக்கு எதிரான உரிமை, 4. 30 நாட்கள், 5. i, ii மற்றும் ivசரி, 6. (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A)விற்கு சரியான விளக்கம், 7. 18, 8. அமைதி

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. 30, 2. 42 வது, 3. 1993, 4. தமிழ்நாடு

**III. பொருத்துக:**

1. இ, 2. ஈ, 3. அ, 4. உ, 5. ஆ

9th Social Science Lesson 23

**23] அரசாங்கங்களின் வகைகள்**

**உங்களுக்குத் தெரியுமா?**

மிகவும் பழமையான அரசாங்கம்: ஐக்கிய பேரரசு காணப்பட்ட முடியாட்சி அமைப்பே மிகவும் பழமையான அரசாங்கம் ஆகும். முடியாட்சியில் அரசரோ அல்லது மகாராணியே அரசாங்கத்தின் தலைவராவார். ஆங்கில

winmeen.com

முடியாட்சி என்பது அரசியலமைப்புக்கு உட்பட்ட முடியாட்சி ஆகும். அதாவது அரசின் தலைமையாகவே இருந்தாலும் சட்டமியற்றும் வல்லமை தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்றத்திடமே உள்ளது.

**இந்திய மத்திய, மாநில அரசுகளுக்கு இடையே உள்ள உறவு:** இந்திய நாடு, இந்திய அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வழி முறைகளுக்கு உட்பட்டு மத்திய, மாநில அரசுகளுக்கிடையே அதிகாரங்களை பகிர்ந்து கொள்ளும் மாநிலங்களின் கூட்டமைப்பு ஆகும். மத்திய மாநில அரசுகளுக்கு இடையே அதிகாரங்கள் பகிர்ந்து கொள்ளப்பட்டாலும் அனைத்து விவகாரங்களிலும் முடிவெடுப்பது மத்திய அரசே ஆகும். மத்திய மாநில அரசுகளுக்கு இடையேயான உறவு என்பது: (1) சட்ட மன்ற உறவுகள் (பிரிவுகள் 245 முதல் 255 வரை). (2) நிர்வாக உறவுகள் (பிரிவுகள் 256 முதல் 263 வரை). (3) நிதி உறவுகள் (பிரிவுகள் 268 முதல் 294 வரை).

மத்திய மாநில அரசுகள் சட்டங்கள் இயற்றும் அதிகாரம் படைத்தவை. ஆனாலும் அதிகாரங்கள் வேறுபடுகின்றன. சில குறிப்பிட்ட துறைகளுக்கு சட்டமியற்றும் அதிகாரம் மத்திய அரசாங்கத்திடம் உள்ளது. இத்துறைகள் மத்தியப் பட்டியலில் இடம் பெற்றுள்ளன. சில துறைகளுக்கு சட்டமியற்றும் அதிகாரம் மாநில அரசாங்கத்திற்கு உள்ளது. அத்துறைகளுக்கான சட்டங்களை அந்தந்த மாநில அரசுகளே இயற்றிக் கொள்ளும். இவை மாநிலப்பட்டியல் எனப்படுகிறது. சில துறைகளுக்கு மத்திய அரசும் மாநில அரசும் சட்டம் இயற்றும் அதிகாரம் பெற்றுள்ளன. இவை பொதுப்பட்டியல் எனப்படுகிறது.

**மத்திய பட்டியல்:** மத்தியப் பட்டியலில் 100 துறைகள் உள்ளடங்கியுள்ளது. வெளியுறவுத் துறைகள், பாதுகாப்பு, ஆயுதப்படைகள், தொலைதொடர்பு, தபால் மற்றும் தந்தி, மாநிலங்களுக்கிடையிலான வியாபாரம் மற்றும் வணிகம்.

**மாநில பட்டியல்:** மாநிலப் பட்டியல் 61 துறைகளைக் கொண்டுள்ளது. மாநிலத்தின் பொது ஒழுங்கு, காவல் துறை, நீதித்துறை நிர்வாகம், சிறைத்துறை, உள்ளாட்சி அமைப்புகள், விவசாயம் போன்றவை.

**பொதுப்பட்டியல்:** பொதுப்பட்டியல் 52 துறைகளாக உள்ளன. குற்றவியல் மற்றும் சிவில் நடைமுறைகள், திருமணம் மற்றும் விவாகரத்து, பொருளாதாரம் மற்றும் சிறப்புத் திட்டமிடல், செய்தித்தாள், புத்தகங்கள் மற்றும் அச்சகங்கள், மக்கள் தொகை கட்டுப்பாடு ஆகியன.

**மொத்த தேசிய மகிழ்ச்சி (Gross National Happiness GNH):** மொத்த தேசிய மகிழ்ச்சி என்பது தற்போது வளர்ந்து வரும் ஓர் தத்துவமாகும். இது ஒரு குறிப்பிட்ட நாட்டில் உள்ள மொத்த மகிழ்ச்சியைக் குறிக்கும் ஒரு குறியீடு ஆகும். பூட்டான் அரசின் அரசமைப்பில் இடம் பெற்றுள்ள இக்கருத்து ஜீலை 18, 2008ல் நடைமுறைப்படுத்தப்பட்டது. மொத்த தேசிய மகிழ்ச்சி என்னும் பதத்தைப் பூட்டானின் நான்காம் அரசரான ஜிக்மே சிங்கியே வான்சுக் அவர்களால் 1970இல் உருவாக்கப்பட்டது. மொத்த தேசிய மகிழ்ச்சி நிலையான மற்றும் சமமான சமூக பொருளாதார வளர்ச்சி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, மற்றும் ஊக்குவிப்பு, பண்பாடு மற்றும் நல்ல ஆட்சி ஆகியவற்றை மையக் கருத்தாகக் கொண்டுள்ளது. இயற்கை மற்றும் பாரம்பரிய மதிப்புகளுக்கிடையே இசைவை வலியுறுத்தும் வகையில் மக்களிடையே கூட்டு மகிழ்ச்சியை ஏற்படுத்துவது அரசின் இலக்காக இருக்க வேண்டும்.

**I. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. ---------------, ------------------ ஆகியவை ஒற்றை ஆட்சி முறைக்கான உதாரணங்களாகும்.

2. பாராளுமன்ற ஆட்சி முறை ------------------ என்றும் அழைக்கப்படுகின்றது.

3. பாராளுமன்ற ஆட்சிமுறையில் பெரும்பான்மை பெற்ற கட்சியின் தலைவர் --------------- ஆவர்.

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

நாடுகள் நாடாளுமன்றத்தின் பெயர்

1. அமெரிக்க ஐக்கிய நாடுகள் -----------------

2. நார்வே ----------------

3. ------------------- ஃபோக்டிங்

**விடைகள்:**

**I. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. இங்கிலாந்து, பிரான்ஸ், ஜப்பான், இலங்கை, 2. பொறுப்பு அரசாங்கம்/வெஸ்ட் மினிஸ்டர், 3. பிரதம மந்திரி

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. காங்கிரஸ், 2. ஸ்டார்டிங், 3. டென்மார்க்

## 9th Social Science Lesson 24

## 24] உள்ளாட்சி அமைப்புகள்

**உங்களுக்குத் தெரியுமா?**

**ரிப்பன் பிரபு:** 1882ஆம் ஆண்டு உள்ளாட்சி அமைப்புகளை அறிமுகம் செய்ததன் மூலம் இந்தியர்களுக்கு சுதந்திரத்தின் சுவையை அறிமுகப்படுத்தியவர் ரிப்பன் பிரபு ஆவார். இந்தியாவில் நிர்வாகத்தை தாராளமயம் ஆக்கும் சில நடவடிக்கைகளை ரிப்பன் மேற்கொண்டார். நிர்வாகத்தை பரவலாக்க வேண்டும் என்பதற்காகவே உள்ளாட்சி அமைப்புகளை அவர் முறைப்படுத்தினார்.

உள்ளாட்சி அமைப்புகளை நடைமுறைப்படுத்துவதில் இருந்த சில தடைகளை 1882ஆம் ஆண்டு அவர் இயற்றிய தீர்மானத்தின் மூலம் அகற்ற முயன்றார். கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள அமைப்புகளுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுக்கும் அதிக அதிகாரங்களையுடைய உள்ளாட்சி நிர்வாக உரிமைகளை வழங்கும் விதமாக ரிப்பன் தொடர்ச்சியான பல சட்டங்களை ஏற்படுத்தினார்.

தமிழ்நாட்டில் உள்ளாட்சி அமைப்புகளில் வரலாற்றுத் தொடக்கம் மற்றும் வளர்ச்சி: காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள உத்திரமேரூர் கல்வெட்டுகளில் காணப்படுகின்ற ஆதாரங்களின்படி, உள்ளாட்சி அமைப்புகளில் தமிழ்நாடு ஒரு நீண்ட வரலாற்றினைக் கொண்டதாக அறியப்படுகின்றது. அக்காலத்தில் தமிழ்நாடு பல கிராம குடியாட்சியைக் கொண்ட நிலமாக விளங்கியது. பல சமூகக் குழுக்கள் தங்களது பகுதி மேம்பாட்டிற்காக பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். பத்து மற்றும் பதினோறாம் நூற்றாண்டுகளில் நடைபெற்ற சோழர்களது ஆட்சிக் காலத்தில், இந்த முறை உச்ச நிலையை அடைந்தது. கிராம சபைகள் வரி விதித்தன; சமூக வாழ்வினை மேம்படுத்தின; தங்களது குறிப்பிட்ட பகுதியில் நீதியையும் நிலைநாட்டின. இந்தக் கிராம சபைகள் சோழ அரசர்களுடன் வலிமையான உறவுகளைக் கொண்டிருந்தனர். கிராம சபையின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க "குடவோலை முறை" என்ற இரகசிய தேர்தல் முறை புழக்கத்தில் இருந்தது. சோழர்களின் வீழ்ச்சிக்குப் பிறகு, கிராம தன்னாட்சி சரியவும், நிலப்பிரபுக்களின்

மையப்படுத்தப்பட்ட நிர்வாக முறை மேலோங்கவும் தொடங்கியது. இம்முறை, ஆங்கிலேய காலனி ஆதிக்க ஆட்சி உள்ளாட்சி அமைப்புகளை அவர்களுக்கு ஏதுவாக இருக்கும் விதமாக அறிமுகம் செய்யும் வரை தொடர்ந்தது. சுதந்திர இந்தியாவில், ஜனநாயக பரவலாக்கத்தின் முதல் சட்டமாக, 1950இல் மதராஸ் கிராம பஞ்சாயத்து சட்டம் இயற்றப்பட்டது. 1957, உள்ளூர் நிர்வாக சீர்திருத்தங்கள் தொடர்பாக வெளியான விவரங்களின் தொடர்ச்சியாக, 1958ல் மதராஸ் பஞ்சாயத்து சட்டமும், மதராஸ் மாவட்ட வளர்ச்சி கவுன்சில் சட்டமும் இயற்றப்பட்டன,

**காந்தியின் கிராம சுயராஜ்யம்:** காந்தியடிகள் கிராமப்புறங்களின் பிரதிநிதிகளைக் மக்களாகக் கொண்ட கிராம சுயராஜ்ஜியத்தை விரும்பினார். இந்தியாவின் ஆன்மா கிராமங்களில் வாழ்கிறது என்பதை உணர்ந்தார் காந்தியடிகள். சுதந்திர இந்தியாவில் கிராம குடியரசு எனும் பஞ்சாயத்துக்களை கனவு கண்டார். காந்தியடிகள் பஞ்சாயத்து ராஜ் ஒரு அதிகார பகிர்வு கொண்ட அரசாக இருக்க அறிவுறுத்தினார். இந்திய அரசியலமைப்பின் அடிப்படையாக திகழும் கிராமங்கள் தங்களின் தேவைகளுக்கு தாங்களே பொறுப்பாவர். எளிமையான சொற்களில் சொல்வதென்றால் காந்தியின் சுயராஜ்ய கிராமம், அடிப்படையில் சுயசார்புடையதாக இருக்க வேண்டும். வாழ்க்கைக்குத் தேவையான உணவு, தூய்மையான நீர், சுகாதாரம், வீட்டு வசதி, கல்வி மற்றும் பிற தேவைகளுக்கு என அனைத்து தேவைகளையும் ஏற்கும் அரசாங்கம் மற்றும் சுய பாதுகாப்பு உள்ளிட்ட அனைத்தையும் வழங்க வேண்டும்.

தமிழ்நாட்டில் 15 மாநகராட்சிகள் உள்ளன. அவை சென்னை, கோவை, மதுரை, திருச்சி, திருநெல்வேலி, சேலம், ஈரோடு, வேலூர், தூத்துக்குடி, திருப்பூர், தஞ்சாவூர், திண்டுக்கல், ஆவடி, ஒசூர் மற்றும் நாகர்கோவில்.

நகராட்சி தலைவராக பெரியார்: பெரியார் ஈ. வே. இராமசாமி அவர்கள் 1917ஆம் ஆண்டில் இருந்து பல ஆண்டுகள் ஈரோடு நகராட்சியின் பெருந்தலைவராக பதவி வகித்தார். அவரது பதவிக் காலத்தில் ஈரோடு நகராட்சி மக்களுக்கான முறையான குடிநீர் வசதி மற்றும் சுகாதார வசதிகளை ஏற்படுத்தி தருவதில் முனைப்பு காட்டினார். 1919இல் குழாய் மூலம் குடிநீர் விநியோகம் முறையினை பெரியார் செயல்படுத்தினார். இந்திய நகராட்சி நிர்வாகங்களின் வரலாற்றில் இத்திட்டத்தினை முதன்முதலில் செயல்படுத்தியவர் பெரியார் என அறியப்படுகிறது.

**<u>I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:</u>**

1. 1985ஆம் ஆண்டு திட்டக் குழுவினால் நிறுவப்பட்ட குழு எது?

(அ) பல்வந்தராய் மேத்தா குழு

(ஆ) அசோக் மேத்தா குழு

(இ) GVK ராவ் மேத்தா குழு

(ஈ) LM சிங்வி மேத்தா குடு

2. --------- காலத்தில் இருந்த உள்ளாட்சி அமைப்புப் பற்றி உத்திர மேரூர் கல்வெட்டு தெரிவிக்கிறது.

(அ) சோழர்

(ஆ) சேரர்

(இ) பாண்டியர்

(ஈ) பல்லவர்

3. 73 மற்றும் 74வது அரசமைப்புத் திருத்தச் சட்டங்கள் இவ்வாண்டில் நடைமுறைக்கு வந்தன.

(அ) 1992

(ஆ) 1955

(இ) 1997

(ஈ) 1990

4. ஊராட்சிகளின் ஆய்வாளராகச் செயல்படுகின்றவர் --------------- ஆவார்.

(அ) ஆணையர் (ஆ) மாவட்ட ஆட்சியர் (இ) பகுதி உறுப்பினர் (ஈ) மாநகரத் தலைவர்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. "உள்ளாட்சி அமைப்புகளின்" தந்தை என அழைக்கப்படுபவர் -----------------

2. நமது விடுதலைப் போராட்டத்தின் போது மறுசீரமைப்பு என்பது -----------------ஆக விளங்கியது.

3. சோழர் காலத்தின் போது கிராம சபை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்த இரகசிய தேர்தல் முறை ------------- என்றழைக்கப்பட்டது.

4. கிராமங்களில் செயல்படும் உள்ளாட்சி அமைப்பு ---------------- ஆகும்.

5. பேரூராட்சிகளின் நிர்வாகத்தினைக் கண்காணிப்பவர் ----------------- ஆவார்.

**III. பொருத்துக:**

1. மாவட்ட ஊராட்சி – அ] கிராமங்கள்

2. கிராம சபைகள் – ஆ] மாநகரத் தலைவர்

3. பகுதி குழுக்கள் – இ] பெருந்தலைவர்

4. ஊராட்சி ஒன்றியம் – ஈ] மாவட்ட ஆட்சியர்

5. மாநகராட்சி –உ] நகராட்சிகள்

**IV. சரியா அல்லது தவறா எனக் குறிப்பிடுக:**

1. ஊராட்சி ஒன்றியம் பல மாவட்டங்கள் ஒன்றிணைவதால் உருவாகின்றது.

2. ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு மாவட்ட ஊராட்சி ஒன்றியம் அமைந்துள்ளது.

3. நகராட்சி ஆணையர் ஓர் இந்திய அரசுப் பணிகள் அலுவலர் ஆவார்.

4. ஊராட்சிகளில், ஊராட்சித் தலைவர் மற்றும் பகுதி உறுப்பினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

**விடைகள்:**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. GVK ராவ் மேத்தா குழு, 2. சோழர், 3. 1992, 4. ) மாவட்ட ஆட்சியர்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. ரிப்பன் பிரபு, 2. மக்களுக்கு நம்பிக்கை ஊட்டியது, 3. குடவோலை முறை, 4. கிராம ஊராட்சி, 5. செயல் அலுவலர்

**III. பொருத்துக:**

1. ஈ, 2. அ, 3. உ, 4. இ, 5. ஆ

**IV. சரியா அல்லது தவறா எனக் குறிப்பிடுக:**

1. கிராமங்கள், 2. கிராம, 3. சரி, 4. சரி

## 9th Social Science Lesson 25

## 25] சாலை பாதுகாப்பு

**உங்களுக்குத் தெரியுமா?**

ஆண்டுக்கு 1, 30, 000க்கும் மேற்பட்ட உயிரிழப்புடன் இந்தியா உலகின் மிக மோசமான சாலை விபத்துகளைக் கொண்ட நாடாக உள்ளது.

உலகில் ஒவ்வொரு மூன்று நிமிடத்திற்கும் ஒரு குழந்தை விபத்தில் இறக்கிறது. சாலை விபத்தில் ஏற்படும் மரணங்களுக்கு முக்கிய காரணங்கள்: (1) குடித்து விட்டு வாகனம் ஓட்டுவது (40%), அதிகம் (24%) வாகன எண்ணிக்கை அதிகரிப்பு (16%) சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் மெத்தனம் (15%) மற்றும் தலைக்கவசம் மற்றும் இருக்கைப் பட்டையை குறைவாகப் பயன்படுத்துவது (5%). (2) ஓட்டுநருக்கு ஏற்படும் கவனச்சிதைவு. (3) சிவப்பு விளக்கு எரியும் போது சாலையைக் கடப்பது. (4) தவறான முறையில் பிற வாகனங்களை முந்திச் செல்வது.

இருக்கைப் பட்டை பயன்படுத்துவதன் மூலம் சாலை விபத்தினால் ஏற்படும் இறப்பை 51% தடுக்கலாம்.

## 9th Social Science Lesson 26

## 26] மேம்பாட்டை அறிவோம்: தொலைநோக்கு, அளவீடு மற்றும் நிலைத் தன்மை

**உங்களுக்குத் தெரியுமா?**

தலா வருமானம்: உலக வங்கியின் அறிக்கையின்படி, நாடுகளின் வருமான அளவீடுகள் கீழ்க்கண்டவாறு புதியதாக வகைப்படுத்தப்பட்டுள்ளது (2017–18).

நாடுகளின் வகைகள் தலா வருமானம் (அமெரிக்க டாலரில்)

1. குறைந்த வருவாய் < 1005

2. குறைந்த நடுத்தர வருவாய் 1006–3955

3. உயர் நடுத்தர வருவாய் 3956–12, 235

4. உயர்ந்த வருவாய் >12, 235

ஓர் ஆண்டில் நாட்டின் புவியியல் எல்லைக்குள் குறிப்பிட்ட காலத்திற்குள் உற்பத்திச் செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகளின் மொத்த பண மதிப்பே, மொத்த உள்நாட்டு உற்பத்தி ஆகும்.

இந்தியாவில் மனித வளங்களின் வளர்ச்சிக்கு மனித வள மேம்பாட்டு அமைச்சகம் பொறுப்பாகும். இதன் தலைமையகம் புதுடெல்லியில் சாஸ்திரி பவனில் அமைந்துள்ளது.

தமிழ்நாட்டின் கல்வியறிவு வீதம் தென்மாநிலங்களில் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. தமிழ்நாட்டின் கல்வியறிவு வீதம் தேசியச் சராசரியை விட அதிகமாக உள்ளது. தமிழ்நாட்டில் உயர்கல்விக்கானச் சேர்க்கையானது இந்தியாவின் மிக உயர்ந்ததாகும்.

**தமிழ்நாட்டின் வளர்ச்சி**: தமிழ்நாடு குறைந்த காலகட்டத்துக்குள் மிக விரைவான வளர்ச்சியை எட்டிய சில மாநிலங்களுள் ஒன்று ஆகும். வறுமை, அடிப்படை வசதி, சமத்துவமின்மை போன்ற மிக மோசமான நிலையிலிருந்து மிக வேகமாகத் தமிழ்நாடு வளர்ச்சி பெற்றிருக்கிறது. தற்காலத்தில் தமிழ்நாடு துணிச்சலான சமூக நலத் திட்டங்களை முன்னெடுத்தது. அனைத்துப் பள்ளிகளிலும் மதிய உணவு வழங்கும் திட்டம், சுகாதார மையங்கள், சாலை வசதிகள், பொதுப்போக்குவரத்து, குடிநீர் வசதி, மின் இணைப்பு வழங்கல் போன்றப் பல திட்டங்களைக் குறிப்பிடலாம்.

பிற மாநிலங்களைவிட தமிழ்நாட்டில் இன்று சிறப்பான பொதுச் சேவைகள் உள்ளது. அந்தச் சேவைகளில் பெரும்பாலானவை பாகுபாடின்றி அனைவருக்கும் கிடைக்கிறது என்று உறுதியாக சொல்லலாம். வளர்ச்சிப் பாதையை பொறுத்தவரை தமிழ்நாடு உள்பட சில மாநிலங்களிடையே பொதுவான ஒற்றுமைகள் காணப்படுகின்றன. இறுதியாக ஒரு முக்கியமான ஒன்று: மனிதத் திறன்களைப் பயன்படுத்தாமல் இந்த விரைவான பொருளாதார வளர்ச்சியை எட்ட முயன்ற பெரும்பாலான இந்திய மாநிலங்களைவிட மனிதத் திறன்களை பயன்படுத்திய தமிழ்நாட்டில் தனி நபர் வருமானம் அதிகமாகும் வறுமை நிலையும் பெரும்பாலான மாநிலங்களை விட ஒப்பீட்டளவில் குறைவாகும் பொருளாதார வளர்ச்சியானது சமூக நலத் திட்டங்களை சாத்தியப்படுத்திப் பொருளாதார வளர்ச்சியும் மக்கள் ஆதரவும் ஒன்றுக்கொன்று இணக்கமாக செயல்படுவதே முக்கியமான காரணம் ஆகும்.

**I. பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. கூற்று (A): மேம்பாடு வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகிறது.

காரணம் (R): மக்கள் அதிக வருவாய், சிறந்த கல்வி, உடல்நலம் மற்றும் ஊட்டச்சத்து, குறைந்த வறுமை பெறுவார்கள்.

(அ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது மற்றும் (R), (A)வை விளக்குகிறது.

(ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது (R), (A)வை விளக்கவில்லை.

(இ) (A) சரியானது மற்றும் (R) தவறானது.

(ஈ) (A) தவறானது மற்றும் (R) சரியானது.

2. மனித வளம் எனும் சொல் குறிப்பிடுவது.

(அ) ஏழை மக்கள் மீதான முதலீடு

(ஆ) வேளாண்மை மீதான செலவு

(இ) சொத்துக்கள் மீதான முதலீடு

(ஈ) ஒட்டு மொத்த மக்களின் திறமை

3. நாடுகளுக்கு இடையேயான மேம்பாட்டை ஒப்பிட அவர்களின் மிக முக்கிய பண்புகளில் ஒன்றாக கருதப்படுவது.

(அ) வளர்ச்சி

(ஆ) வருமானம்

(இ) செலவீனம்

(ஈ) சேமிப்புகள்

4. தேசிய வருமானத்தின் உண்மை மதிப்பீடாக இவை கருதப்படுகிறது.

(அ) மொத்த நிகர உற்பத்தி

(ஆ) மொத்த உள்நாட்டு உற்பத்தி

(இ) நிகர தேசிய உற்பத்தி

(ஈ) நிகர உள்நாட்டு உற்பத்தி

5. --------------- வருவாயை தலா வருமானம் என்றும் அழைக்கிறோம்.

(அ) சராசரி

(ஆ) மொத்த

(இ) மக்கள்

(ஈ) மாத

6. ஜி–8 நாடுகளின் கூட்டமைப்பின் உறுப்பு நாடுகளில் இல்லாத ஒன்று.

(அ) ஜப்பான்

(ஆ) கனடா

(இ) ரஷ்யா

(ஈ) இந்தியா

7. சார்க் கூட்டமைப்பின் உறுப்பு நாடுகளில் இல்லாத ஒன்று

(இ) இந்தியா

(ஆ) பாகிஸ்தான்

(இ) சீனா

(ஈ) பூடான்

8. கூற்று (A): நிகர தேசிய உற்பத்தி என்பது தேசிய உற்பத்தி அளவின் உண்மை மதிப்பீடாக கருதப்படுகிறது.

காரணம் (R): இது தேசிய வருமானம் என்று அழைக்கப்படுகிறது.

(அ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது மற்றும் (R), (A)வை விளக்குகிறது.

(ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது (R), (A)வை விளக்கவில்லை.

(இ) (A) சரியானது மற்றும் (R) தவறானது.

(ஈ) (A) தவறானது மற்றும் (R) சரியானது.

9. கூற்று (A): எந்த ஒரு நாட்டின் மேம்பாட்டிற்கும் மனித வளம் அத்தியாவசியமாக இருக்கிறது.

காரணம் (R): கல்வி மற்றும் மக்கள் நலத்தில் முதலீடு செய்வதன் விளைவாக அவர்களின் எதிர்காலத்தில் அதிக அளவு பலன் கிடைக்கும்.

(அ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது மற்றும் (R), (A)வை விளக்குகிறது.

(ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது (R), (A)வை விளக்கவில்லை.

(இ) (A) சரியானது மற்றும் (R) தவறானது.

(ஈ) (A) தவறானது மற்றும் (R) சரியானது.

10. மனிதவள மேம்பாட்டு குறியீடு (HDI) கணக்கில் பின்வரும் எந்தப் பரிமாணத்தை எடுத்துக் கொள்ளவில்லை?

(அ) பாலினம்

(ஆ) உடல்நலம்

(இ) கல்வி

(ஈ) வருமானம்

11. பின்வரும் எம்மாநிலத்தின் கல்வியறிவு தேசிய கல்வியறிவு விகிதத்தை காட்டிலும் அதிகமாக உள்ளது?

(அ) ஆந்திரபிரதேசம்

(ஆ) உத்திரபிரதேசம்

(இ) தமிழ்நாடு

(ஈ) இவற்றில் எதுவுமில்லை

12. பாலின விகிதம் என்பது

(அ) வயதான ஆண் மற்றும் வயதான பெண் விகிதம்

(ஆ) ஆண்கள் மற்றும் பெண்கள் விகிதம்

(இ) ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே நிலவும் சமூக தொடர்பு

(ஈ) ஆயிரம் ஆண்களுக்கு எத்தனை பெண்கள் என்ற விகிதம்

13. பரம்பரை ரீதியான சமத்துவம் எந்த நடைமுறையில் உறுதி செய்யப்படுகிறது?

(அ) தொழிற்சாலை

(ஆ) பொருளாதார மேம்பாடு

(இ) நிலையான மேம்பாடு

(ஈ) பொருளாதார வளர்ச்சி

14. பொருந்தாத ஒன்றை கண்டறி:

(அ) சூரிய ஆற்றல்

(ஆ) காற்று ஆற்றல்

(இ) காகிதம்

(ஈ) இயற்கை வாயு

15. இந்தியாவில் அதிகபட்ச சூரிய ஆற்றல் உற்பத்தியைச் செய்யும் மாநிலம்

(அ) தமிழ்நாடு

(ஆ) மேற்கு வங்காளம்

(இ) கேரளா

(ஈ) ஆந்திரப் பிரதேசம்

16. பல ஆண்டுகளின் உபயோகத்திற்குப் பிறகு தீர்ந்து போகும் வளம்

(அ) இயற்கை

(ஆ) புதுப்பிக்க இயலும் வளம்

(இ) புதுப்பிக்க இயலாத வளம்

(ஈ) புதியவை

17. அனல் மின் நிலையம் அதிக அளவிலான ------------- வெளியிடுவதால் சுற்றுச்சூழல் மாசுபடுகிறது.

(அ) ஆக்சிஜன்

(ஆ) நைட்ரஜன்

(இ) கார்பன்

(ஈ) கார்பன்–டை–ஆக்சைடு

**<u>II. கோடிட்ட இடங்களை நிரப்புக:</u>**

1. எந்த ஒரு நாட்டின் பொருளாதார மேம்பாடு ------------- என்று அறியப்படும்.

2. மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் தலைமையகம் ----------------

3. இந்தியாவில் அதிக கல்வியறிவு பெற்றுள்ள மாநிலம் --------------

4. உலகளவில் மனிதவள மேம்பாட்டு அறிக்கையைத் தயாரித்து வெளியிடுகின்ற நிறுவனம் --------------

5. நிலத்தடி நீர் என்பது -------------- வளங்களின் ஓர் எடுத்துக்காட்டாகும்.

6. An Uncertain Glory என்ற புத்தகத்தை எழுதியவர் ------------------

**<u>III. பொருத்துக:</u>**

1. மேம்பாடு – அ] வனவிலங்குகள் பாதுகாப்புச் சட்டம்

2. மனித வளம் – ஆ] புதுப்பிக்க தக்க வளங்கள்

3. சூரிய சக்தி – இ] தினசரி வாழ்க்கையின் ஒரு பகுதி

4. 1972 – ஈ] கல்வி

**விடைகள்:**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. (A) மற்றும் (R) இரண்டும் சரியானது மற்றும் (R), (A)வை விளக்குகிறது, 2. ஒட்டு மொத்த மக்களின் திறமை, 3. வருமானம், 4. நிகர தேசிய உற்பத்தி, 5. சராசரி, 6. இந்தியா, 7. சீனா, 8. (A) மற்றும் (R) இரண்டும் சரியானது மற்றும் (R), (A)வை விளக்குகிறது, 9. (A) மற்றும் (R) இரண்டும் சரியானது மற்றும் (R), (A)வை விளக்குகிறது, 10. பாலினம், 11. தமிழ்நாடு, 12. ஆயிரம் ஆண்களுக்கு எத்தனை பெண்கள் என்ற விகிதம், 13. நிலையான மேம்பாடு, 14. இயற்கை வாயு, 15. தமிழ்நாடு, 16. புதுப்பிக்க இயலாத வளம், 17. கார்பன்–டை–ஆக்சைடு

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. பொருளாதார மேம்பாடு, 2. புதுடெல்லி, 3. கேரளா, 4. வளர்ச்சித்திட்டம், 5. புதுப்பிக்கத்தகுந்த, 6. அமர்தியாசென்

**III. பொருத்துக:**

1. 1. இ, 2. ஈ, 3. ஆ, 4. அ

## 9th Social Science Lesson 27

## 27] இந்தியா மற்றும் தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பு

**உங்களுக்குத் தெரியுமா?**

இடைக்கால வரலாற்றுக் காலத்தில் இந்தியாவின் டெல்லி சுல்தான் பெரோஸ் ஷா துக்ளக், வேலைவாய்ப்பின்மைச் சிக்கலைத் தீர்ப்பதற்காக "வேலைவாய்ப்பு அலுவலகத்தை" அமைத்தார்.

**இரு வேல்பட்டுவில் வேலைவாய்ப்பு:** ஒரு கள ஆய்வு. வேலைவாய்ப்பு நிலவரங்களில் ஏற்படும் மாற்றத்தைத் தேசிய அல்லது மாநில அளவில் மட்டும் தான் புரிந்து கொள்ள முடியும் என்றில்லை; கிராமத்தை ஆய்வு செய்வதிலிருந்தும் புரிந்து கொள்ளலாம். இருவேல்பட்டு என்பது தமிழ்நாட்டில், விழுப்புரம் மாவட்டத்திலுள்ள ஒரு கிராமமாகும். இந்தக் கிராமம் 100 ஆண்டுகளுக்கும் அதிகமாக அறிஞர்கள் பலராலும் ஆய்வு செய்யப்பட்டு வந்துள்ளது. இந்த கிராமம் ஸ்லேட்டர் கிராமம் என்றும் கூறப்படும்; ஏனெனில், சென்னைப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றி வந்த கில்பர்ட் ஸ்லேட்டர் என்பவர் முதன் முதலில் தனது மாணவர்களுடன் கள ஆய்வு செய்வதற்காக இந்த கிராமத்திற்கு 1916ஆம் ஆண்டு சென்றார். காலப் போக்கில் பல ஆய்வாளர்கள் கிராமத்தவர்களின் வேலை குறித்து கணக்காய்வு செய்து, கிராமத்திலுள்ள ஒவ்வொருவர் குறித்தும் மேலும் பல விவரங்களைச் சேகரித்துள்ளனர். இந்தக் கிராம வளர்ச்சியின் காரணம் கிராம மக்களிடையே ஆரம்ப சுகாதார நலம், பள்ளிகள் அமைத்தது. பொது விநியோக அமைப்பு

ஆகியவற்றின் மீது சமூகப் பாதுகாப்பு விழிப்புணர்வு அரசாங்கம் அவர்களுக்கு ஏற்படுத்தியது காரணமாகும். இந்தக் கிராமம் பல மாறுதல்களுக்கு உட்பட்டுள்ள போதிலும் இன்னமும் அவர்களின் வேலைவாய்ப்புக்கு முக்கியமாக விவசாயத்தையே சார்ந்துள்ளது. பின்வரும் அட்டவணையைப் பாருங்கள். 1981ஆம் ஆண்டில் 100 குடும்பங்களில் 24 குடும்பங்கள் விவசாயமல்லாத வேலைகளில் ஈடுபட்டிருந்ததைக் காணலாம். 2008ஆம் ஆண்டில் விவசாயமல்லாத வேலைகளில் இருந்த குடும்பங்களின் எண்ணிக்கை 41ஆக உயர்ந்துள்ளது. 1981–2008 காலத்தில் விவசாயத்தில் 34% லிருந்து 26% ஆக விவசாயக் கூலிகளாகவும், பயிரிடுவோராகவும் ஈடுபட்டிருந்த குடும்பங்களின் விகிதம் குறைந்துள்ளது.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. பணியிடத்தைக் கணக்கிடுவதற்கு -------------- வயது வரையிலான வயதை கணக்கிடலாம்.

(அ) 12–60

(ஆ) 15–60

(இ) 21–65

(ஈ) 5–14

2. இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பல்வேறு துறைகளில் எந்த இறங்கு வரிசை சரியானது?

(அ) முதன்மை துறை, இரண்டாம் துறை, சார்புத் துறை

(ஆ) முதன்மைத் துறை, சார்புத் துறை, இரண்டாம் துறை

(இ) சார்புத் துறை, இரண்டாம் துறை, முதன்மைத் துறை

(ஈ) இரண்டாம் துறை, சார்புத் துறை, முதன்மைத் துறை

3. பின்வரும் துறைகளில் இந்தியாவில் மிகப்பெரிய வேலைவாய்ப்புத் துறை எது?

(அ) முதன்மைத்துறை

(ஆ) இரண்டாம் துறை

(இ) சார்புத் துறை

(ஈ) பொதுத்துறை

4. பின்வருவனவற்றுள் எது முதன்மைத் துறை சார்ந்ததல்ல?

(அ) வேளாண்மை

(ஆ) உற்பத்தி

(இ) சுரங்கத் தொழில்

(ஈ) மீன்பிடித் தொழில்

5. பின்வருவனவற்றுள் எது இரண்டாம் துறையை சார்ந்ததல்ல?

(அ) கட்டுமானம்

(ஆ) உற்பத்தி

(இ) சிறுதொழில்

(ஈ) காடுகள்

6. மூன்றாம் துறையில் அடங்குவது

(அ) போக்குவரத்து

(ஆ) காப்பீடு

(இ) வங்கியல்

(ஈ) அனைத்தும்

7. எந்த துறையில் தொழிலமைப்பு முறை சேர்க்கப்படவில்லை?

(அ) முதன்மைத் துறை

(ஈ) இரண்டாம் துறை

(இ) சார்புத் துறை

(ஈ) தனியார் துறை

8. பொருத்துக:

பட்டியல் – I பட்டியல் – II

1. வேளாண்மை, காடுகள் மீன்பிடிப்பு மற்றும் சுரங்கம் – ஒழுங்கமைக்கப்படாத துறை

2. உற்பத்தி, மின்உற்பத்தி எரிவாயு மற்றும் குடிநீர் விநியோகம் – சார்புத் துறை

3. வாணிபம், போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு – இரண்டாம் துறை

4. குழுமப் பதிவற்ற நிறுவனங்கள் மற்றும் வீட்டுத் தொழில்கள் – முதன்மைத் துறை

அ ஆ இ ஈ

(அ) 1 2 3 4

(ஆ) 4 3 2 1

(இ) 2 3 1 4

(ஈ) 3 2 4 1

9. எந்த டெல்லி சுல்தான் வேலையின்மை பிரச்சனையை தீர்க்க "வேலை வாய்ப்பு அலுவலகத்தை" அமைத்தார்?

(அ) முகமது பின் துக்ளக்

(ஆ) அலாவுதீன் கில்ஜி

(இ) ஃபெரோஷ் ஷா துக்ளக்

(ஈ) பால்பன்

10. ------------ துறை பதிவு செய்யப்பட்டு மற்றும் அரசு விதிகளை பின்பற்றுகிறது.

(அ) வேளாண்மை

(ஆ) ஒழுங்கமைக்கப்பட்ட

(இ) ஒழுங்கமைக்கப்படாத

(ஈ) தனியார்

11. ---------------- துறை வேலை பாதுகாப்பு மற்றும் அதிக ஊதியம் வழங்குகிறது.

(அ) பொதுத் துறை

(ஆ) ஒழுங்கமைக்கப்பட்டத் துறை

(இ) ஒழுங்கமைக்கப்படாத துறை

(ஈ) தனியார் துறை

12. பொருந்தாத ஒன்றைக் கண்டறிக:

(அ) வங்கியியல்

(ஆ) ரயில்வே

(இ) காப்பீடு

(ஈ) சிறுதொழில்

13. பொதுத்துறை மற்றும் தனியார் துறை என்று எதன் அடிப்படையில் வகைப்படுத்தபடுகிறது?

(அ) பணியாளர்களின் எண்ணிக்கை

(ஆ) இயற்கை வளங்கள்/பொருளாதார செயல்முறை

(இ) நிறுவனங்களின் உரிமை

(ஈ) வேலைவாய்ப்பின் நிலை

14. கூற்று (A): ஒழுங்குபடுத்தப்படாத துறையின் பொருளாதார பண்பு என்பது வீட்டினுள் உற்பத்தி நடவடிக்கை மற்றும் சிறுதொழில் செய்வதாகும்.

காரணம் (R): இங்கு குறைவான ஊதியமும் மற்றும் வேலைகள் முறையாக வழங்கப்படுவதில்லை.

(அ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது மற்றும் (R), (A)வை விளக்குகிறது.

(ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது (R), (A)வை விளக்கவில்லை.

(இ) (A) சரியானது மற்றும் (R) தவறானது.

(ஈ) (A) தவறானது மற்றும் (R) சரியானது.

15. தொழிலாளர்களைப் பணியமர்த்துபவர்களாகவும், அவர்கள் பணிக்கான வெகுமதிகளைச் செலுத்தும் நபர்களாகவும் உள்ளவர்கள்.

(அ) ஊழியர்

(ஆ) முதலாளி

(இ) உழைப்பாளி

(ஈ) பாதுகாவலர்

16. தமிழ் நாட்டில் -------------- துறையில் அதிக நபர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

(அ) வேளாண்மை

(ஆ) உற்பத்தி

(இ) வங்கியல்

(ஈ) சிறுதொழில்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. ---------------- துறையில் வேலைவாய்ப்புகள் நிலையான மற்றும் முறையானவை அல்ல.

2. பொருளாதார நடவடிக்கைகள் --------------- மற்றும் -------------- துறைகளாக வகைப்படுத்தப்படுகின்றன.

3. ---------------- எப்போதும் இந்தியாவின் வளர்ச்சிக் கொள்கையில் ஒரு முக்கிய உறுப்பாக இடம் பெற்றுள்ளது.

4. வேலைவாய்ப்பு முறை மாற்றத்திற்கான காரணம் ----------------

5. இந்தியாவில் வேலைவாய்ப்பின் தன்மை -----------------

6. -----------------ன் பொருளாதாரம் என்பது நாட்டு மக்களின் எண்ணிக்கை, உழைக்கும் மற்றும் உழைக்கும் திறன் பெற்றவர்களைக் குறிக்கும்.

7. பொதுத்துறை என்பது ----------------

**III. பொருத்துக:**

1. பொதுத்துறை – அ] வங்கியல்

2. தனியார் துறை – ஆ] கோழி வளர்ப்பு

3. முதன்மைத் துறை – இ] இலாப நோக்கம்

4. சார்புத் துறை – ஈ] சேவை நோக்கம்

**விடைகள்:**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. 15–60, 2. சார்புத் துறை, இரண்டாம் துறை, முதன்மைத் துறை, 3. முதன்மைத்துறை, 4. உற்பத்தி, 5. காடுகள், 6. அனைத்தும், 7. தனியார் துறை, 8. 4, 3, 2, 1, 9. ஃபெரோஷ் ஷா துக்ளக், 10. ஒழுங்கமைக்கப்பட்ட, 11. ஒழுங்கமைக்கப்பட்டத் துறை, 12. சிறுதொழில், 13. நிறுவனங்களின் உரிமை, 14. (A) மற்றும் (R) இரண்டும் சரியானது (R), (A)வை விளக்கவில்லை, 15. முதலாளி, 16. வேளாண்மை

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. ஒழுங்கமைக்கப்படாத, 2. பொது, தனியார், 3. வேலைவாய்ப்பு, 4. மக்களின்'வாழ்க்கைமுறை, 5. பல பரிணாமங்களை கொண்டது, 6. உழைப்பாளர் குழுவின், 7. அரசு நிர்வாகம் செய்யும் நிறுவனம்

**III. பொருத்துக:**

1. ஈ, 2. இ, 3. ஆ, 4. அ

9th Social Science Lesson 28

**28] பணம் மற்றும் கடன்**

**உங்களுக்குத் தெரியுமா?**

தனது அரசாட்சியில், ஷெர்ஷா சூரி (1540–1546) குடிமக்களுக்கும், இராணுவத்திற்குமான ஒரு புதிய நிர்வாக முறையை அமைத்தார். அவர் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட 178 கிராம் எடை கொண்ட வெள்ளி நாணம் "ருபியா" என்றழைக்கப்பட்டது. அந்நாணயம் முகலாயர், மராத்தியர் மற்றும் ஆங்கிலேயர் காலம் வரை புழக்கத்தில் இருந்தது.

டாக்டர் பி. ஆர். அம்பேத்கரின் "பணத்தின் சிக்கலும் அதன் தீர்வும்" (The Problem of the rupee and its Solution) என்ற ஆராய்ச்சிக் கட்டுரையின் அடிப்படையில் தான் இந்திய ரிசர்வ் வங்கியின் அடிப்படைச் சட்டம் 1934–ல் உருவாக்கப்பட்டுள்ளது.

**இந்தியாவில் பணம் எவ்வாறு அச்சிடப்படுகிறது?** இந்தியாவில் 1917–ல்தான் முதன் முதலில் ஒரு ரூபாய் மற்றும் இரண்டு ரூபாய் நோட்டுகள் தயாரித்து வெளியிடப்பட்டன. 1935–ல் பணப் பொறுப்பு அனைத்தும் இந்திய ரிசர்வ் வங்கி கைக்கு வந்தது. அதன் பிறகு 500 ரூபாய் நோட்டு பணத்தை அறிமுகப்படுத்தியது. 1940–ல் மீண்டும் இந்தியாவில் 1917–ல் தான் முதன் முதலில் ஒரு ரூபாய் மற்றும் இரண்டு ரூபாய் நோட்டுகள் தயாரித்து வெளியிடப்பட்டன. 1935–ல் பணப் பொறுப்பு அனைத்தும் இந்திய ரிசர்வ் வங்கி கைக்கு வந்தது. அதன் பிறகு 500 ரூபாய் நோட்டு பணத்தை அறிமுகப்படுத்தியது. 1940–ல் மீண்டும் ஒரு ரூபாய் நோட்டுகளை வெளியிட்டது. 1947–ம் ஆண்டு வரை ஆறாம் ஜார்ஜின் உருவம் பொறித்த பணமே புழக்கத்தில் இருந்தது. சுதந்திரத்திற்குப் பிறகு இந்திய அரசால் நோட்டுகள் வெளியிடப்பட்டன. இந்தியாவில் 1917–ல் தான் முதன் முதலில் ஒரு ரூபாய் மற்றும் இரண்டு ரூபாய் நோட்டுகள் தயாரித்து வெளியிடப்பட்டன. 1935–ல் பணப் பொறுப்பு அனைத்தும் இந்திய ரிசர்வ் வங்கி கைக்கு வந்தது. அதன் பிறகு 500 ரூபாய் நோட்டு பணத்தை அறிமுகப்படுத்தியது. 1940–ல் மீண்டும் இந்தியாவில் 1917–ல் தான் முதன் முதலில் ஒரு ரூபாய் மற்றும் இரண்டு ரூபாய் நோட்டுகள் தயாரித்து வெளியிடப்பட்டன. 1935–ல் பணப் பொறுப்பு அனைத்தும் இந்திய ரிசர்வ் வங்கி கைக்கு வந்தது. அதன் பிறகு 500 ரூபாய் நோட்டு பணத்தை அறிமுகப்படுத்தியது. 1940–ல் மீண்டும் ஒரு ரூபாய் நோட்டுகளை வெளியிட்டது. 1947–ம் ஆண்டு வரை ஆறாம் ஜார்ஜின் உருவம் பொறித்த பணமே புழக்கத்தில் இருந்தது. சுதந்திரத்திற்குப் பிறகு இந்திய அரசால் நோட்டுகள் வெளியிடப்பட்டன. ஆங்கிலேய அரசு, 1925ல் மகாராஷ்டிர மாநிலத்தில் உள்ள நாசிக்கில் ஒரு அச்சகத்தை அமைத்து மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு ரூபாய் நோட்டுகளை அச்சடிக்க தொடங்கியது. மத்தியப் பிரதேசத்திலுள்ள தேவாஸில் 1974–ல் ஓர் அச்சகம் தொடங்கப்பட்டது. இந்த இரு அச்சகங்களைத் (Security Printing and Minting Corporation of India Ltd. ) தவிர, 1990களில் கர்நாடக மாநிலத்திலுள்ள மைசூரிலும், மேற்கு வங்காளத்திலுள்ள சல்பானியிலும் ரூபாய் மற்றும் வங்கிகள் சம்பந்தப்பட்ட ஆவணங்களை அச்சடிக்க மேலும் இரு அச்சகங்களை இந்திய ரிசர்வ் வங்கி தொடங்கியது.

எவ்வளவு பணம் அச்சடிக்க வேண்டும் என்தையும், எப்படிப் பாதுகாப்பாக உரிய இடங்களுக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்பதையும் இந்திய ரிசர்வ் வங்கியே முடிவு செய்கிறது. பத்தாயிரம் ரூபாய் மதிப்புடைய நோட்டுகள் அச்சடிக்க இந்திய ரிசர்வ் வங்கிக்கு அதிகாரம் இருந்தாலும், தற்போது அதிகபட்சம் இரண்டாயிரம் ரூபாய் மதிப்பு வரையிலான பணத்தை மட்டுமே அச்சடிக்கிறது.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. பண்டைய காலத்தில் பண்டமாற்றத்திற்கு பதிலாக பொது மதிப்பீடாக பயன்படுத்தப்பட்ட உலோகம் ---------------- (தங்கம்/இரும்பு).

2. இந்திய ரிசர்வ் வங்கியின் தலைமையிடம் இருக்கும் இடம் -------------------- (சென்னை/மும்பை).

3. சர்வதேச வணிகத்தில் பயன்படுத்தப்படும் நாணய முறை --------------- (அமெரிக்க டாலர்/பவுண்டு).

4. ஜப்பான் நாட்டின் பணம் ------------------ என்று அழைக்கப்படுகிறது. (யென்/யுவான்).

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. ---------------------- வணிகத்தின் முதல் வடிவம்.

2. பண விநியோகம் ---------------- பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

3. இந்திய ரிசர்வ் வங்கியின் முதல் அச்சகம் தொடங்கப்பட்ட இடம் --------------------

4. பணப்பரிமாற்றத்தை முறைப்படுத்துகின்ற பொறுப்பு ----------------க்கு உள்ளது.

5. டாக்டர். பி. ஆர். அம்பேத்கர் அவர்களின் பணம் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரை ---------------

**III. பொருத்துக:**

1. அமெரிக்க டாலர் – அ] தானியங்கி இயந்திரம்

2. நாணய சுழற்சி – ஆ] பணத்தின் மாற்று

3. ஏ. டி. எம். – இ] சர்வதேச அங்கீகாரம் பெற்ற பணம்

4. உப்பு – ஈ] சவுதி அரேபியா

5. ரியால் – உ] 85%

**IV. பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

அ) 1. நாகரிகம் வளர்ச்சியடைந்த இடங்களில் பண்டமாற்றுமுறை செழித்தோங்கியது.

2. இதுவே வணிகத்தின் முதல் வடிவம்.

(அ) 1 சரி, 2 தவறு

(ஆ) இரண்டும் சரி

(இ) இரண்டும் தவறு

(ஈ) 1 தவறு, 2 சரி

ஆ) 1. உலக நாடுகளில் பெரும்பான்மையான பணப்பரிமாற்றங்கள் அமெரிக்க டாலர் மதிப்பிலேயே நடைபெறுகிறது.

2. உலக வணிகத்தை அமெரிக்கா மட்டுமே நடத்துகிறது.

(அ) இரண்டு கூற்றுகளும் சரி

(ஆ) இரண்டு கூற்றுகளும் தவறு

(இ) 1 சரி, 2 தவறு

(ஈ) 1 தவறு, 2 சரி

**விடைகள்:**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. தங்கம், 2. மும்பை, 3. அமெரிக்க டாலர், 4. யென்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. பண்டமாற்று செய்யப்பட்ட பொருள்கள், 2. நாசிக், 3. RBI, 4. பணத்தின் சிக்கலும் அதன் தீர்வும்

**III. பொருத்துக:**

1. இ, 2. உ, 3. அ, 4. ஆ, 5. ஈ

**IV. பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. இரண்டும் சரி, 2. 1 சரி, 2 தவறு

## 9th Social Science Lesson 29

## 29] தமிழகத்தில் வேளாண்மை

**உங்களுக்குத் தெரியுமா?**

பயிர் செய்யப்படும் மொத்த பரப்பளவில் பாசன வசதி பெற்ற பரப்பளவு 57 விழுக்காடு ஆகும்.

**மறைநீர்:** மறைநீர் எனும் பதம் 1990ஆம் ஆண்டு டோனி ஆலன் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது விவசாயம் அல்லது தொழிற்சாலை உற்பத்தியின் போது நுகரப்படும் நீர் மறைநீர் என அழைக்கப்படுகிறது. மறைநீர் என்பது உணவு அல்லது மற்ற உற்பத்தி பொருட்கள் ஒரு நாட்டில் இருந்து மற்றொரு நாட்டிற்கு வாணிகம் செய்யப்படும் போது அவற்றோடு மறைமுகமாக அவற்றிற்காக செலவிடப்படும் நீரும் செல்கிறது. இதுவே மறைநீர் ஆகும். உதாரணமாக ஒரு மெட்ரிக் டன் கோதுமை உற்பத்தி செய்வதற்கு உலக அளவிலான சராசரியாக 1, 340 கியூபிக் மீட்டர் நீர் தேவைப்படுகிறது. அப்படியெனில் ஒரு மெட்ரிக் டன் கோதுமை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படும் போது அதை விளைவிக்கப் பயன்படுத்தப்பட்ட 1, 340 கியூபிக் மீட்டர் நீரும் அதனுடன் செல்கிறது என்பது பொருள். உலக அளவில் இந்தியா மிக அதிகமான நன்னீர் பயன்பாட்டாளராக உள்ளது. இது மிகவும் அதிகமான எச்சரிக்கக் கூடிய அளவாகும். உலகின் ஐந்தாவது மிகப்பெரிய மறைநீர் ஏற்றுமதியாளராக இந்தியா விளங்குகிறது.

winmeen.com

தென் இந்தியாவின் மூன்றாவது பெரிய ஆறு காவிரி ஆகும். இது 765 கிலோ மீட்டர் நீளம் கொண்டது. காவிரி ஆற்றின் குறுக்கே தமிழ்நாட்டில் மேட்டூர் அணை மற்றும் கல்லணை கட்டப்பட்டுள்ளன.

**நுண்ணீர் பாசனத் தொழில்நுட்பம்:** நுண்ணீர் பாசனத் தொழில் நுட்பம் பாசன நீர் பற்றாக்குறைக்கு நல்ல தீர்வாக விளங்குகிறது. இத்தொழில் நுட்பம் பாரம்பரிய நீர்பாசன முறைகளை விட பயிர்களில் அதிக மகசூல் கிடைக்க வழி செய்கிறது. சீரான கால இடைவெளியில் அளவாக நீர் பாய்ச்சப்படுவதால் உற்பத்தித் திறன் மற்றும் நீர் பயன்பாட்டுத்திறன் அதிகரிப்பதுடன் பணி ஆட்களின் செலவைக் கணிசமாக குறைத்து, களை வளர்ச்சியினைக் கட்டுப்படுத்துகிறது. நுண்ணீர் பாசனத்தின் மூலம் நீர் வழி உரமிடுவதால் உரப்பயன்பாட்டுத் திறன் அதிகரிப்பதோடு தரமான விளைபொருளும் கிடைக்கிறது. தமிழகம் ஒரு தண்ணீர் பற்றாக்குறை மாநிலமாக இருப்பதால் நுண்ணீர் பாசனத் திட்டத்தினை, அதிக தண்ணீர் தேவைப்படும் விவசாய பயிர்களின் தீவிரமாக செயல்படுவதில் அரசு கவனம் செலுத்துகிறது.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. பயிர் செய்யப்படும் பரப்பளவில் பாசன வசதி பெற்ற நிலத்தின் பரப்பளவு

(அ) 27%

(ஆ) 57%

(இ) 28%

(ஈ) 49%

2. இவற்றுள் உணவல்லாத பயிர் எது?

(அ) கம்பு

(ஆ) கேழ்வரகு

(இ) சோளம்

(ஈ) தென்னை

3. 2014–15ஆம் ஆண்டில் நெல் உற்பத்தித் திறன்

(அ) 3, 039 கி. கி

(ஆ) 4, 429 கி. கி

(இ) 2, 775 கி. கி

(ஈ) 3, 519 கி. கி

4. தமிழகத்தின் வேளாண் உற்பத்தித் திறன் மற்றும் உணவு உற்பத்தி ஆகிய இரண்டுமே

(அ) குறைந்துள்ளது

(ஆ) எதிர்மறையாக உள்ளது

(இ) நிலையாக உள்ளது

(ஈ) அதிகரித்துள்ளது

5. தமிழகத்தில் வடகிழக்குப் பருவ மழை பொழியும் மாதங்கள்

(அ) ஆகஸ்டு–அக்டோபர்

(ஆ) செப்டம்பர்–நவம்பர்

(இ) அக்டோபர்–டிசம்பர்

(ஈ) நவம்பர்–ஜனவரி

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. தமிழக மக்களில் பெரும்பான்மையினர் ------------------- தொழிலையே சார்ந்திருக்கின்றனர்.

2. தமிழகத்திற்குப் பெரும் நீர் ஆதாரமாக இருப்பது ----------------- பருவ மழையாகும்.

3. தமிழகத்தின் மொத்தப் புவியியல் பரப்பு ---------------- ஹெக்டேர்கள் ஆகும்.

**III. பொருத்துக:**

1. உணவல்லாத பயிர்கள் – அ] 79, 38, 000

2. பருப்பு வகைகள் – ஆ] ஒரு ஹெக்டேருக்கும் குறைவான பரப்பில் சாகுபடி செய்வோர்

3. வடகிழக்குப் பருவமழை – இ] அக்டோபர்–டிசம்பர்

4. குறு விவசாயிகள் – ஈ ] உளுந்து, துவரை, பாசிப்பயிறு

5. 2015இல் விவசாயிகளின்

எண்ணிக்கை – உ] தேங்காய், கொண்டை கடலை (Channa)

**விடைகள்:**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. 57%, 2. தென்னை, 3. 4, 429 கி. கி, 4. அதிகரித்துள்ளது, 5. அக்டோபர்–டிசம்பர்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. வேளாண், 2. வட கிழக்கு, 3. 1, 30, 33, 000

**III. பொருத்துக:**

1. உ, 2. ஈ, 3. இ, 4. ஆ, 5. அ

9th Social Science Lesson 30

## 30] இடம்பெயர்தல்

**உங்களுக்குத் தெரியுமா?**

உலகிலேயே மெக்ஸிகோ–அமெரிக்க ஐக்கிய நாடு இடையேயான இடப்பெயர்வு பாதையே 2010ஆம் ஆண்டின் மிகப் பெரிய இடப்பெயர்வுப் பாதையாகும். உலகிலேயே நீண்ட தூரம் இடம்பெயரும் பறவை "ஆர்டிக் டெர்ன்" (Artic tern) பறவையாகும்.

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. 2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி இந்தியாவின் மக்கள் தொகை.

(அ) 121 கோடி

(ஆ) 221 கோடி

(இ) 102 கோடி

(ஈ) 100 கோடி

2. வெளிகுடியேற்றப் பதிவில் முன்னிலை வகிக்கும் மாவட்டம்

(அ) இராமநாதபுரம்

(ஆ) கோயம்புத்தூர்

(இ) சென்னை

(ஈ) வேலூர்

3. 2015ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிலிருந்து இடம்பெயர்ந்தவர்களில் கல்வியறிவற்றோரின் சதவீதம்

(அ) 7%

(ஆ) 75%

(இ) 23%

(ஈ) 9%

4. ஏழை மக்கள் இடப்பெயர்வை மேற்கொள்வது

(அ) வாழ்வாதாரத்திற்காக

(ஆ) வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக் கொள்ள

(இ) சேவைக்காக

(ஈ) அனுபவத்தைப் பெறுவதற்காக

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. ------------ மற்றும் ----------- அடிப்படையில் இடப்பெயர்வு கணக்கிடப்படுகிறது.

2. மக்களின் நகர்வு, நகர்ப்புறங்களை விட கிராமப்புறங்களில் ----------------- காணப்படுகின்றன.

3. 2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி கிராமப்புற இந்தியாவில் ------------- சதவீத மக்கள் இடம் பெயர்ந்தவர்களாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

4. பெண்கள் அதிக அளவில் இடம் பெயர்வதற்கான காரணம் ----------------

5. இடம்பெயர்வு நகர்வு என்பது -------------- உள்நகர்வுகளைக் கொண்டதாகும்.

**III. பொருத்துக:**

1. இடம்பெயர்வு கொள்கை – அ] வேலை

2. பெண் இடம்பெயர்வாளர் – ஆ] வெளி குடியேற்றம் குறைவு

3. சென்னை – இ] வெளி குடியேற்றம் அதிகம்

4. வசதி, வாய்ப்புடைய இடம்பெயர்வாளர் – ஈ] திருமணம்

5. சேலம் – உ] இடம் பெயர்தலின் அளவைக் குறைப்பது

6. ஆண் இடம் பெயர்வாளர் – ஊ] வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக்கொள்ள

**விடைகள்:**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. 121 கோடி, 2. சென்னை, 3. 7%, 4. வாழ்வாதாரத்திற்காக

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. பிறப்பிடம், வாழ்விடம், 2. அதிகமாக, 3. 37, 4. திருமணம், 5. பல்வேறுபட்ட

**III. பொருத்துக:**

1. உ, 2. ஈ, 3. இ, 4. ஊ, 5. ஆ, 6. அ

10th Social Science Lesson 1

**1] முதல் உலகப்போரின் வெடிப்பும் அதன் பின்விளைவுகளும்**

**உங்களுக்குத் தெரியுமா?**

கூட்டு நிறுவனம் என்பது பொருள்களை உற்பத்தி செய்து விநியோகத்தில் ஈடுபட்டிருக்கும் ஒரு தொழில்சார் நிறுவனமாகும். தனக்கு நன்மை பயக்கும் விதத்தில் பொருள்களின் விநியோகம், விலை ஆகியவற்றின் மீது அந்நிறுவனம் அதிகக் கட்டுப்பாட்டினைக் கொண்டிருக்கும்.

**பதுங்குக் குழிப்போர்:** போர் வீரர்களால் தோண்டப்படும் பதுங்குக் குழிகள் எதிரிகளின் சுடுதலின் இருந்து தங்களைக் காத்துக்கொண்டு பாதுகாப்பாக நிற்க உதவின. பிரதானப் பதுங்குக் குழிகள் ஒன்றோடொன்றும் பின்புறமுள்ள குழிகளோடும் இணைக்கப்பட்டிருக்கும். அவற்றின் வழியாக உணவு, ஆயுதங்கள், கடிதங்கள், ஆணைகள் ஆகியவை வந்து சேரும். புதிய வீரர்களும் வந்து சேர்வர்.

அமெரிக்க குடியரசுத் தலைவர் உட்ரோ வில்சன் தனது பதினான்கு அம்சத் திட்டத்தை நேசநாடுகள் பின்பற்றுவதற்காக முன்வைத்தார். அவற்றில் மிக முக்கியமானதாக அவர் கோடிட்டுக் காட்டியது "மிகப்பெரும் நாடுகள் சிறிய நாடுகள் எனும் பேதமில்லாமல் அனைத்து நாடுகளின் அரசியல் சுதந்திரத்திற்கும் அந்நாடுகளின் நிலப்பரப்பின் ஒருமைப்பாட்டிற்கும் எல்லைகளின் உறுதிப்பாட்டிற்கும் பரஸ்பரம் உத்தரவாதம் அளிக்கக்கூடிய நாடுகளைக் கொண்ட பொது அமைப்பை உருவாக்க வேண்டும்" என்பதாகும்.

**ரஷ்யப் புரட்சி நடந்து சார் மன்னன் வீழ்ச்சியுற்றபோது நம் தேசியக் கவி பாரதியார் எழுதிய உணர்ச்சிமிக்க கவிதை:**

புதிய ரஷ்யா மாகாளி பராசக்தி உருசியநாட்

டீனர்கடைக்கண் வைத்தா ளங்கோ

ஆகாவென் றெழுந்ததுபார் யுகப்புரட்சி;

கொடுங்கோலன் அலறி வீழ்ந்தான்;

வாகான தோள்புடைத்தார் வானமரர்;

பேய்களெலாம் வருந்திக் கண்ணீர்

போகாமற் கண்புகைந்து மடிந்தனவாம்;

வையகத்தீர், புதமை காணீர்;

1870இல் மத்திய வோல்கா பகுதி அருகே கற்றறிந்த பெற்றோர்க்கு லெனின் பிறந்தார். கார்ல்மார்க்ஸின் சிந்தனைகளால் கவரப்பட்ட அவர், விடுதலைக்கான வழி, பெருந்திரளான மக்களின் போராட்டமே என நம்பினார். பெரும்பாலானோரின் (போல்ஷின்ஸ்ட்வோ) ஆதரவைப் பெற்ற லெனினும் அவரது ஆதரவாளர்களும் போல்ஷ்விக் கட்சி என்று அறியப்பட்டனர். இவருக்கு எதிரான சிறுபான்மையினர் (மென்ஷின்ஸ்ட்வோ) மென்ஷ்விக்குகள் என்றும் அழைக்கப்பட்டனர்.

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. முதல் உலகப்போரின் இறுதியில் நிலைகுலைந்து போன மூன்று பெரும் பேரரசுகளும் யாவை?

(அ) ஜெர்மனி, ஆஸ்திரிய–ஹங்கேரி, உதுமானியர்

(ஆ) ஜெர்மனி, ஆஸ்திரிய–ஹங்கேரி, ரஷ்யா

(இ) ஸ்பெயின், போர்ச்சுகல், இத்தாலி

(ஈ) ஜெர்மனி, ஆஸ்திரிய–ஹங்கேரி, இத்தாலி

2. பத்தொன்பதாம் நூற்றாண்டு முடிவடையுந்தருவாயில் கிழக்கு ஆசியாவில் உதயமான வலிமை வாய்ந்த நாடு எது?

(அ) சீனா

(ஆ) ஜப்பான்

(இ) கொரியா

(ஈ) மங்கோலியா

3. "ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்" எனக் கூறியவர் யார்?

(அ) லெனின்

(ஆ) மார்க்ஸ்

(இ) சன்யாட் சென்

(ஈ) மா சே துங்

4. மார்ன் போர் எதற்காக நினைவு கூறப்படுகிறது?

(அ) ஆகாயப் போர்முறை

(ஆ) பதுங்குக் குழிப்போர்முறை

(இ) நீர் மூழ்கிக் கப்பல் போர்முறை

(ஈ) கடற்படைப் போர்முறை

5. பன்னாட்டுச் சங்கத்தின் முதல் பொதுச்செயலாளர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

(அ) பிரிட்டன்

(ஆ) பிரான்ஸ்

(இ) டச்சு

(ஈ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

6. பின்லாந்தைத் தாக்கியதற்காக பன்னாட்டுச் சங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்ட நாடு எது?

(அ) ஜெர்மனி

(ஆ) ரஷ்யா

(இ) இத்தாலி

(ஈ) பிரான்ஸ்

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. ___________ஆம் ஆண்டில் ஜப்பான் சீனாவுடன் வலுக்கட்டாயமாகப் போரிட்டது.

2. 1913ஆம் ஆண்டு மே மாதம் கையெழுத்திடப்பட்ட ____________ உடன்படிக்கையின் படி அல்பேனியா எனும் புதிய நாடு உருவாக்கப்பட்டது.

3. ____________ ஆண்டில் ஜப்பான் இங்கிலாந்துடன் நட்பினை ஒப்பந்தம் செய்து கொண்டது.

4. பால்கனில் ___________ நாடு பல்வகை இனமக்களைக் கொண்டிருந்தது.

5. டானென்பர்க் போரில் ___________ பேரிழப்புகளுக்கு உள்ளானது.

6. பாரிஸ் அமைதி மாநாட்டில் பிரதிநிதியாகப் பங்கேற்ற பிரான்ஸின் பிரதமர் ____________ ஆவார்.

7. ____________ ஆம் ஆண்டில் லொக்கர்னோ உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது.

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. i) துருக்கியப் பேரரசு, பால்கனில் துருக்கியரல்லாத பல இனமக்களைக் கொண்டிருந்தது.

ii) துருக்கி மையநாடுகள் பக்கம் நின்று போரிட்டது.

iii) பிரிட்டன் துருக்கியைத் தாக்கி கான்ஸ்டாண்டி நோபிளைக் கைப்பற்றியது.

iv) சூயஸ் கால்வாயைத் தாக்க துருக்கி மேற்கொண்ட முயற்சி முறியடிக்கப்பட்டது.

(அ) i, ii ஆகியன சரி

(ஆ) i, iii ஆகியன சரி

(இ) iv சரி

(ஈ) i, ii, iv ஆகியன சரி

2. கூற்று: ஜெர்மனியும் அமெரிக்காவும் மலிவான தொழிற்சாலைப் பொருள்களை உற்பத்தி செய்து இங்கிலாந்தின் சந்தையைக் கைப்பற்றின.

காரணம்: இருநாடுகளும் தங்கள் தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப்பொருள்களை உற்பத்தி செய்தன.

(அ) கூற்று, காரணம் ஆகிய இரண்டும் சரி.

(ஆ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான விளக்கம் அல்ல.

(இ) கூற்று, காரணம் ஆகிய இரண்டும் தவறு

(ஈ) காரணம் சரி, ஆனால் கூற்று தவறு

3. கூற்று: ஆப்பிரிக்காவில் குடியேற்றங்களை ஏற்படுத்துவதற்காக ஐரோப்பிய நாடுகள் மேற்கொண்ட முதற்கட்ட முயற்சிகள் ரத்தக்களரியான போர்களில் முடிந்தன.

காரணம்: சொந்தநாட்டு மக்களிடமிருந்து கடுமையான எதிர்ப்பு இருந்தது.

(அ) காரணம், கூற்று ஆகிய இரண்டும் சரி

(ஆ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான விளக்கம் அல்ல.

(இ) கூற்று, காரணம் இரண்டுமே தவறு

(ஈ) காரணம் சரி ஆனால் கூற்று தவறு

**<u>பொருத்துக:</u>**

1. பிரெஸ்ட் – லிடோவஸ்க் உடன்படிக்கை – வெர்செய்ல்ஸ்

2. ஜிங்கோயிசம் – துருக்கி

3. கமால் பாட்சா – ரஷ்யாவும் ஜெர்மனியும்

4. எம்டன் – இங்கிலாந்து

5. கண்ணாடி மாளிகை – சென்னை

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: (விடைகள்)**

1. ஜெர்மனி, ஆஸ்திரிய–ஹங்கேரி, உதுமானியர் 2. ஜப்பான் 3. லெனின்

4. பதுங்குக் குழிப்போர்முறை 5. பிரிட்டன் 6. ரஷ்யா

**கோடிட்ட இடங்களை நிரப்புக: (விடைகள்)**

1. (1894) 2. லண்டன் 3. (1902) 4. மாசிடோனியா 5. ரஷ்யா 6. கிளமென்சோ

7. (1925)

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: (விடைகள்)**

1. i, ii, iv ஆகியன சரி 2. கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான விளக்கம் அல்ல

3. காரணம், கூற்று இரண்டும் சரி

**பொருத்துக: (விடைகள்)**

1. பிரெஸ்ட் – லிடோவஸ்க் உடன்படிக்கை – ரஷ்யாவும் ஜெர்மனியும்

2. ஜிங்கோயிசம் – இங்கிலாந்து

3. கமால் பாட்சா – துருக்கி

4. எம்டன் – சென்னை

5. கண்ணாடி மாளிகை – வெர்செய்லஸ்

10th Social Science Lesson 2

**2] இரு உலகப்போர்களுக்கு இடையில் உலகம்**

**உங்களுக்குத் தெரியுமா?**

தங்க மதிப்பீட்டு அளவு என்பது ஒரு நாணயமுறை. இதில் ஒரு நாட்டினுடைய நாணயம் அல்லது காகிதப்பணம் தங்கத்தோடு நேரடித் தொடர்புடைய ஒரு மதிப்பினைப் பெற்றிருக்கும்.

பாசிஸம் என்பது தீவிர ஆதிக்க மனப்பான்மை கொண்ட அதிதீவிர தேசியவாதத்தின் ஓர் வடிவமாகும். சர்வாதிகார வல்லமையும் எதிர்ப்பை வன்முறை கொண்டு அடக்குவதும் சமூகத்தையும், பொருளாதாரத்தையும் வலுவான மத்திய அதிகாரத்தின் கீழ் வைத்திருப்பதும் இதன் பண்புகளாகும். இது இருபதாம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதியில் ஐரோப்பாவில் முக்கியத்துவம் பெற்றது.

சமூக ஜனநாயகக் கட்சியானது ஜெர்மன் பொதுத் தொழிலாளர் கழகம் என்ற பெயரில் 1863 மே 23இல் லிப்சிக் நகரத்தில் நிறுவப்பட்டது. அதனை நிறுவியவர் பெர்டினன்ட் லாஸ்ஸல்லி என்பவராவார். 19ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியைச் சேர்ந்த ஜெர்மானிய மேட்டுக் குடியினர் ஒரு சோசலிசக் கட்சியின் இருப்பையே புதிதாக ஒன்றிணைக்கப்பட்ட ரெய்க்கின் (குடியரசு) பாதுகாப்புக்கும் உறுதிப்பாட்டிற்கும் ஒரு அச்சுறுத்தலாகக் கருதினர். எனவே பிஸ்மார்க் 1878 முதல் 1890 வரை இக்கட்சியைத் தடை செய்திருந்தார். 1945இல் ஹிட்லரின் மூன்றாவது ரெய்க்கின் (குடியரசின்) வீழ்ச்சியைத் தொடர்ந்து இக்கட்சி புத்தெழுச்சி பெற்றது. ஹிட்லரை எதிர்த்த கட்சி என்ற பெயருடன் வெய்மர் காலத்திலிருந்து செயல்படும் ஒரே கட்சி இதுவேயாகும்.

காலனிய நீக்கம் என்பது காலனியாதிக்க சக்திகள் காலனிகள் மீது கொண்டுள்ள நிறுவனம் மற்றும் சட்டம் சார்ந்த கட்டுப்பாடுகளைச் சொந்த தேசிய அரசுகளிடம் வழங்குவதாகும்.

ஹோ சி மின் 1890இல் டோங்கிங்கில் பிறந்தார். தனது 21ஆவது வயதில் அவர் ஐரோப்பா சென்றார். லண்டன் உணவு விடுதியொன்றில் சமையல் கலைஞராய்ப் பணியாற்றிய பின் அவர் பாரிஸ் சென்றார். பாரிஸ் அமைதி மாநாட்டில் வியட்நாமின் சுதந்திரத்திற்காக ஆதரவு திரட்டினார். தினசரிகளில் அவர் எழுதிய கட்டுரைகளும் குறிப்பாக "விசாரணையில் பிரெஞ்சு காலனியாதிக்கம்" எனும் சிற்றேடு அவரை நன்கறியப்பட்ட வியட்நாமிய தேசியவாதி ஆக்கியது. 1921இல் ஹோ சி மின் பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்கியவர்களில் ஒருவராக இருந்தார். இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் அவர் மாஸ்கோ சென்று புரட்சியின் நுட்பங்களைக் கற்றார். 1925இல் "புரட்சிகர இளைஞர் இயக்கம்" எனும் அமைப்பை நிறுவினார்.

தென்னாப்பிரிக்காவில் இனஒதுக்கல்: இன ஒதுக்கல் என்பதன் பொருள் தனிமைப்படுத்துதல் அல்லது ஒதுக்கி வைத்தல் என்பதாகும். இது 1947இல் தேசிய வாதக் கட்சியின் கொள்கையாயிற்று. 1950 முதல் வரிசையாகப் பல சட்டங்கள் நடைமுறைக்கு வந்தன. ஒட்டுமொத்த நாடும் பல்வேறு இடங்களுக்கான தனித்தனிப் பகுதிகளாக பிரிக்கப்பட்டன. வெள்ளை இனத்தவருக்கும் வெள்ளையரல்லாத இனத்தவருக்கும் இடையில் திருமணங்கள் தடைசெய்யப்பட்டன. ஏறத்தாழ அனைத்துப் பள்ளிகளும் அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டன. இதன் மூலம் வெள்ளையருக்கு வழங்கப்படும் கல்வியில் இருந்து மாறுபட்ட கல்வியை ஏனைய ஆப்பிரிக்கர்களுக்கும் நடைமுறைப்படுத்தப்பட்டது. பல்கலைக்கழகம் கல்வியும் பிரித்து வைக்கப்பட்டது. தென்னாப்பிரிக்காவில் வெள்ளை கறுப்பின மக்களுக்கிடையிலான அரசியல் சமத்துவம் என்பது மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்காக இருக்கும் கறுப்பின மக்களின் ஆட்சியைக் குறிக்கும் உண்மையின் அடிப்படையிலேயே இன ஒதுக்கல் உருவானது. நெல்சன் மண்டேலா அரசியல் வானில் பிரகாசிக்கத் தொடங்கிப் பொது மக்களின் பேராதரவைப் பெற்ற போது ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சித் தடை செய்யப்பட்டு நெல்சன் மண்டேலா சிறை வைக்கப்பட்டார். உலக அளவிலான எதிர்ப்பலைகள் தென் ஆப்பிரிக்காவில் இனவாத ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வர உதவியது. 1990இல் ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் மீதான தடை விலக்கிக் கொள்ளப்பட்டு மண்டேலா 27 ஆண்டுகளுக்குப் பின் விடுதலை செய்யப்பட்டார். இதனைத் தொடர்ந்து நடைபெற்ற தேர்தலில் ஆப்பிரிக்க மக்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது. தேர்தலில் ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் வெற்றி பெற்று மண்டேலா தென்னாப்பிரிக்காவின் முதல் கறுப்பினக் குடியரசுத் தலைவரானார். இன ஒதுக்கல் கொள்கை ஒரு முடிவுக்கு வந்தாலும் ஆப்பிரிக்காவின் பொருளாதார மண்டல முழு ஆதிக்கமும் வெள்ளை இனத்தவரிடமே உள்ளது.

தென்னாப்பிரிக்காவில் குடியேறிய டச்சுக் குடியேறிகளின் வம்சாவளியினரே ஆப்பிரிக்கநேர்கள் என்றும் அழைக்கப்பட்ட போயர்கள் ஆவர். இவர்களது மொழி ஆப்பிரிக்கான்ஸ்.

**டாலர் ஏகாதிபத்தியம்:** இச்சொல் தொலை தூர நாடுகளுக்குப் பொருளாதார உதவி செய்வதன் மூலம் அவற்றின் மீது ஆதிக்கம் செலுத்தவும், தக்க வைத்துக் கொள்ளவும், அமெரிக்கா பின்பற்றியக் கொள்கையை விளக்குவதற்குப் பயன்படுத்தப்படுவதாகும்.

**<u>சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:</u>**

1. இத்தாலி யாருடன் லேட்டரன் உடன்படிக்கையைச் செய்து கொண்டது?

(அ) ஜெர்மனி

(ஆ) ரஷ்யா

(இ) போப்

(ஈ) ஸ்பெயின்

2. யாருடைய ஆக்கிரமிப்போ மெக்சிகோ நாகரிகம் நிலைகுலைந்து போயிற்று?

(அ) ஹெர்மன் கோர்ட்ஸ்

(ஆ) பிரான்சிஸ்கோ பிசாரோ

(இ) தௌசெயின்ட் லாவெர்ட்யூர்

(ஈ) முதலாம் பெட்ரோ

3. பெரு நாட்டை யார் தங்களுடைய பகுதிகளில் ஒன்றாக ஆக்கிக் கொண்டனர்?

(அ) ஆங்கிலேயர்

(ஆ) ஸ்பானியர்

(இ) ரஷ்யர்

(ஈ) பிரெஞ்சுக்காரர்

4. லத்தீன் அமெரிக்காவுடன் "அண்டை நாட்டுடன் நட்புறவு" எனும் கொள்கையைக் கடைப்பிடித்த அமெரிக்கக் குடியரசுத்தலைவர் யார்?

(அ) ரூஸ்வெல்ட்

(ஆ) ட்ரூமன்

(இ) உட்ரோவில்சன்

(ஈ) ஐசனோவர்

5. உலகத்தின் எந்தப்பகுதி டாலர் அரசியல் ஏகாதிபத்தியத்தை விரும்பவில்லை?

(அ) ஐரோப்பா

(ஆ) லத்தீன் அமெரிக்கா

(இ) இந்தியா

(ஈ) சீனா

**<u>கோடிட்ட இடங்களை நிரப்புக:</u>**

1. சமூக ஜனநாயகக் கட்சியை நிறுவியவர் _____________

2. நாசிச கட்சியின் பிரச்சாரங்களுக்குத் தலைமையேற்றவர் ______________

3. வியட்நாம் தேசியவாதிகள் கட்சி ______________ இல் நிறுவப்பட்டது.

4. நாசிச ஜெர்மனியின் ரகசியக் காவல்படை ______________ என அழைக்கப்பட்டது.

5. தென்னாப்பிரிக்க ஒன்றியம் _____________ ஆம் ஆண்டு மே மாதம் உருவானது.

6. ஆப்பிரிக்க தேசியக் காங்கிரஸ் தலைவரான நெல்சன் மண்டேலா ______________ ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

7. போயர்கள் _____________ என்றும் அழைக்கப்பட்டனர்.

**<u>பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:</u>**

1. i) முதல் உலகப்போரின் போது ஆஸ்திரியாவை தெற்கு முனைப் போரில் தொடர்ந்து முனைப்புடன் ஈடுபட வைப்பதே இத்தாலியின் முக்கியக் கடமையாக இருந்தது.

ii) இத்தாலியைக் காட்டிலும் நீண்ட காலங்கழித்தே ஜெர்மனி பாசிசத்தைக் கைக்கொண்டது.

iii) அமெரிக்காவில் மிகப்பெரும் பங்குச் சந்தை வீழ்ச்சி 1929ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24ஆம் நாளில் ஏற்பட்டது.

iv) ஆப்பிரிக்க தேசிய காங்கிரசின் மீதானத் தடை 1966இல் விலக்கிக் கொள்ளப்பட்டது.

(அ) i, ii ஆகியவை சரி

(ஆ) iii சரி

(இ) iii, iv ஆகியவை சரி

(ஈ) i, ii, iii ஆகியவை சரி

3. கூற்று: தற்காப்புப் பொருளாதாரக் கொள்கையை முன்னிறுத்தியப் பொருளாதார தேசியம் எனும் புதிய அலையால் உலக வணிகம் பாதிக்கப்பட்டது.

காரணம்: அமெரிக்கா, கடன்பட்ட நாடுகளுக்குப் பொருளாதார உதவி செய்ய விருப்பமில்லாமல் இருந்ததனால் இந்நிலை உண்டானது.

(அ) கூற்று, காரணம் இரண்டுமே சரி

(ஆ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல

(இ) கூற்று, காரணம் ஆகிய இரண்டுமே தவறு

(ஈ) காரணம் சரி ஆனால் கூற்றுக்குப் பொருந்தவில்லை.

3. கூற்று: 1884–85இல் நடைபெற்ற பெர்லின் காலனிய மாநாடு காலனியாதிக்க சக்திகள் ஆப்பிரிக்காவைத் தங்களின் செல்வாக்கு மண்டலங்களாகப் பிரித்துக் கொள்ளலாம் எனத் தீர்மானித்தது.

காரணம்: ஆங்கிலேயருக்கும், போயர்களுக்கும் தென்னாப்பிரிக்காவில் நடைபெற்ற போர் இத்தீர்மானத்திற்கு எதிர்ப்பானதாகும்.

(அ) கூற்று, காரணம் இரண்டுமே சரி

(ஆ) கூற்று சரி ஆனால் காரணம் சரியான விளக்கமல்ல

(இ) கூற்று காரணம் ஆகிய இரண்டுமே தவறு

(ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் கூற்றுடன் பொருந்தவில்லை.

**பொருத்துக:**

1. டிரான்ஸ்வால் – ஜெர்மனி

2. டோங்கில் – ஹிட்லர்

3. ஹின்டன்பர்க் – இத்தாலி

4. மூன்றாம் ரெய்க் – தங்கம்

5. மாட்டியோட்டி – கொரில்லா நடவடிக்கைகள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: (விடைகள்)**

1. போப் 2. ஹெர்மன் கோர்ட்ஸ் 3. ஸ்பானியர் 4. ரூஸ்வெல்ட்

5. லத்தீன் அமெரிக்கா

**கோடிட்ட இடங்களை நிரப்புக: (விடைகள்)**

1. பெர்டினனண்ட் லாஸ்ஸல்லி 2. ஜோசப் கோயபெல்ஸ் 3. (கி. பி. 1927) 4. கெஸ்டபோ

5. (27) 6. ஆப்பிரிக்க நேர்கள்

**பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றைத் தேர்வு செய்க: (விடைகள்)**

1. i, ii, iii ஆகியவை சரி

2. கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல

3. கூற்று, காரணம் இரண்டுமே சரி

**பொருத்துக: (விடைகள்)**

1. டிரான்ஸ்வால் – தங்கம்

2. டோங்கிங் – கொரில்லா நடவடிக்கைகள்

3. ஹின்டன்பர்க் – ஜெர்மனி

4. மூன்றாம் ரெய்க் – ஹில்டன்

5. மாட்டியோட்டி – இத்தாலி

10th Social Science Lesson 3

**3] இரண்டாம் உலகப்போர்**

**உங்களுக்குத் தெரியுமா?**

இரண்டாவது உலகப் போரின்போது ஜெர்மானியர்களால் ஆறு மில்லியன் யூத மக்கள் கொல்லப்பட்ட இன அழிப்பை விளக்குவதற்கு பேரழிவுப்படுகொலை (Holocaust) என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. ஹிட்லர் மற்றும் நாசிகளுடைய அரசியல் நிகழ்ச்சி நிரலின் முக்கிய அம்சங்களின் ஒன்று யூதர்களை அழிப்பதாகும். ஜெர்மனியில் சாதாரணமாகவும் சொல்லப்போனால் ஐரோப்பா முழுவதும் ஏற்கனவே நிலவி வந்த யூத எதிர்ப்பு உணர்வுகளை ஹிட்லர் பயன்படுத்திக் கொண்டார். யூதர்கள் ஐரோப்பா முழுவதிலும் சிதறிக்கிடந்தனர். அவர்களில் பலர் வணிகத்துறையிலும் கலைகளிலும் தொழிற்துறைகளிலும் புகழ்பெற்று விளங்கினார். வட்டித் தொழில் யூதர்களிடையே முக்கிய வணிக நடவடிக்கையாக இருந்தது. இது அவர்களுக்கு எதிரான வெறுப்பை மேலும் வலுவடையச் செய்தது. ஷேக்ஸ்பியரின் வெனிஸ் நகர வணிகர் (Merchant of Venice) எனும் நாடகம் மக்களிடையே யூதர்களின் மீதிருந்த வெறுப்பையும் அவநம்பிக்கையையும் படம் பிடித்துக் காட்டியது.

"ஐக்கிய நாடுகள் சபையின் மக்களாகிய நாங்கள் எதிர்கால சந்ததியினரை போரின் துயரங்களிலிருந்துக் காப்போம் என உறுதி கூறுகிறோம். அது நம்முடைய வாழ்நாளில் இருமுறை மனித குலத்திற்குச் சொல்ல முடியாத துயரங்களைக் கொண்டு வந்துள்ளது. மேலும் அடிப்படை மனித உரிமைகள், மனிதப் பண்புகளைப் பெற்றுள்ள தனிநபர்களின் கண்ணியம், மதிப்பு ஆணுக்கும் பெண்ணுக்கும், சிறிய

நாட்டிற்கும் பெரிய நாட்டிற்கும் சம உரிமை ஆகியவற்றின் மீதான நம்பிக்கையை மீண்டும் உறுதி செய்வோம்" – ஐக்கிய நாடுகள் சபையின் முகவுரையிலிருந்து.

**பன்னாட்டு நிதியமைப்பின் (IMF) நோக்கங்கள்:** உலக அளவில் நிதி சார்ந்த ஒத்துழைப்பைப் பேணுவது, நிதி நிலையை உறுதியானதாக வைத்திருத்தல், பன்னாட்டு வணிகத்திற்கு வசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பது, வேலை வாய்ப்பினைப் பெருக்குவது, நீடித்தப் பொருளாதார வளர்ச்சி, உலகம் முழுவதிலும் வறுமையை ஒழிப்பது என்பனவாகும்.

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. ஜப்பான் சரணடைவதாக எப்போது முறைப்படி கையெழுத்திட்டது?

(அ) செப்டம்பர் 2, 1945

(ஆ) அக்டோபர் 2, 1945

(இ) ஆகஸ்டு 15, 1945

(ஈ) அக்டோபர் 12, 1945

2. பன்னாட்டு சங்கம் உருவாக்கப்படுவதில் முன்முயற்சி எடுத்தவர் யார்?

(அ) ரூஸ்வெல்ட்

(ஆ) சேம்பெர்லின்

(இ) உட்ரோ வில்சன்

(ஈ) பால்டுவின்

3. ஜப்பானியக் கப்பற்படை அமெரிக்க கப்பற்படையால் எங்கே தோற்கடிக்கப்பட்டது?

(அ) க்வாடல்கெனால் போர்

(ஆ) மிட்வே போர்

(இ) லெனின் கிரேடு போர்

(ஈ) எல் அலாமெய்ன் போர்

4. அமெரிக்கா தனது முதல் அணுகுண்டை எங்கே வீசியது?

(அ) கவாசாகி

(ஆ) இன்னோசிமா

(இ) ஹிரோஷிமா

(ஈ) நாகசாகி

5. ஹிட்லர் எவரை மிகவும் கொடுமைப்படுத்தினார்?

(அ) ரஷ்யர்கள்

(ஆ) அரேபியர்கள்

(இ) துருக்கியர்கள்

(ஆ) யூதர்கள்

6. ஜெர்மனியோடு மியூனிச் உடன்படிக்கையில் கையெழுத்திட்ட பிரிட்டன் பிரதமர் யார்?

(அ) சேம்பரிலின்

(ஆ) வின்ஸ்டன் சர்ச்சில்

(இ) லாயிட் ஜார்ஜ்

(ஈ) ஸ்டேன்லி பால்டுவின்

7. எப்போது ஐக்கிய நாடுகள் சபையின் பட்டய சாசனம் கையெழுத்தானது?

(அ) ஜீன் 26, 1942

(ஆ) ஜீன் 26, 1945

(இ) ஜனவரி 1, 1942

(ஈ) ஜனவரி 1, 1945

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. இராணுவ நீக்கம் செய்யப்பட்ட ____________ பகுதியை ஹிட்லர் தாக்கினார்.

2. இத்தாலி, ஜெர்மனி, ஜப்பான் ஆகியவற்றிக்கிடையேயான ஒப்பந்தம் ____________ என அழைக்கப்பட்டது.

3. __________ கடன் குத்தகைத் திட்டத்தைத் தொடக்கி வைத்தார்

4. 1940இல் ராஜினாமா செய்த பிரிட்டன் பிரதமர் ____________ ஆவார்.

5. ______________ என்பது தொலைவிலிருந்தே எதிரிகளின் போர் விமானங்களைக் கண்டுபிடிப்பதற்கான ஒரு கருவி.

**பொருத்துக:**

1. பிளிட்ஸ்கிரிக் – ரூஸ்வெல்ட்

2. ராயல் கப்பற்படை – ஸ்டாலின் கிரேடு

3. கடன் குத்தகை – சாலமோன் தீவு

4. வோல்கா – பிரிட்டன்

5. க்வாடல்கெனால் – மின்னல் வேகத்தாக்குதல்

**பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. கூற்று: குடியரசுத்தலைவர் ரூஸ்வெல்ட் அமெரிக்கா தனது தனித்திருக்கும் கொள்கையை மாற்றியமைக்க வேண்டும் என்பதை உணர்ந்தார்.

காரணம்: அவர் 1941இல் கடன் குத்தகைத் திட்டத்தை தொடங்கினார்.

(அ) கூற்றும் காரணமும் சரி

(ஆ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு

(இ) காரணம் கூற்று ஆகிய இரண்டுமே தவறானவை

(ஈ) காரணம் சரி ஆனால் அது கூற்றுடன் பொருந்தவில்லை

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: (விடைகள்)**

1. (செப்டம்பர் 2, 1945) 2. உட்ரோ வில்சன் 3. மிட்வே போர் 4. ஹிரோஷிமா

5. யூதர்கள் 6. சேம்பர்லின் 7. (ஜீன் 26, 1945)

**கோடிட்ட இடங்களை நிரப்புக: (விடைகள்)**

1. ரைன்லாந்து 2. ரோம் பெர்லின் டோக்கியோ ஒப்பந்தம் 3. ரூஸ்வெல்ட்

4. சேம்பர்பின் 5. ரேடார்

**பொருத்துக: (விடைகள்)**

1. பிளிட்ஸ்கிரிக் – மின்னல்வேகத் தாக்குதல்

2. ராயல் கப்பற்படை – பிரிட்டன்/இங்கிலாந்து

3. கடன் குத்தகை – ரூஸ்வெல்ட்

4. வோல்கா – ஸ்டாலின் கிரேடு

5. க்வாடல்கெனால் – சாலமோன் தீவு

**பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றைத் தேர்வு செய்க: (விடை)**

1. கூற்றும், காரணமும் சரி

10th Social Science Lesson 4

**4] இரண்டாம் உலகப்போருக்குப் பிந்தைய உலகம்**

**உங்களுக்குத் தெரியுமா?**

**டாக்டர் சன் யாட் சென் (1866–1925):** ஒரு ஏழ்மையான குடும்பத்தில் காண்டன் நகரத்தின் அருகே பிறந்த டாக்டர் சன்யாட் சென், நவீன சீனாவின் தந்தை, ஒரு கிறித்தவப் பள்ளியில் கல்வி பெற்றதோடு கிறித்தவராகவும் மாறினார். ஹாங்காங் நகரில் மருத்துவப் பயிற்சி பெற்றார். அரசியலில் ஆர்வம் கொண்டிருந்த அவர் 1895இல் மஞ்சுக்களுக்கு எதிரான கிளர்ச்சியில் ஈடுபட்டார். அவர் 1905ஆம் ஆண்டு டோக்கியோவில் ஒரு அரசியல் கட்சியைத் துவக்கினார். அதுவே 1912இல் கோமிங்டாங் என்றும் தேசிய மக்கள் கட்சி என்றும் உருவெடுத்தது. தேசியம், ஜனநாயகம், மக்களின் வாழ்க்கை முறை ஆகிய மூன்று கூறுகளைக் கொண்ட அவர் தம் கொள்கை சோஷியலிஸைச் சிந்தனையையே உச்சமாகக் கருத்தில் கொண்டது.

**மா சே–துங் (1893–1976):** தென்கிழக்குச் சீனாவில் உள்ள ஹீனான் நகரில் மா சே–துங் பிறந்தார். அவரது தந்தையார் செல்வச் செழிப்பான விவசாயிகளில் ஒருவர் என்பதோடு மஞ்சுக்களின் ஆட்சியை ஆதரித்தவராவார். வாசிப்பதில் மிகுந்த ஆர்வங்கொண்ட மா சே–துங் தன் திறமையால் சாங்ஸியாவிலிருந்த இளையோர் கல்லூரியில் இடம் பிடித்தார். அதே ஆண்டு (1911) சீனாவில் புரட்சி வெடித்தது. புரட்சிப்படை ஒன்றை உருவாக்கிய போதும் விரைவில் அதிலிருந்து விலகி சாங்ஸியாவிலிருந்து ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்தார் பின்னர் ஹீனான் நகரை மையமாகக் கொண்டு தனது அரசியல் வாழ்க்கையைத் துவங்கிய அவர் ஒரு முழு பொதுவுடைமைவாதியாக மாறினார்.

**பனிப்போர்:** இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கும் சோவியத் நாட்டிற்கும் இந்நாடுகளின் நட்பு நாடுகளுக்குமிடையே மூண்ட விரோதம், பரபரப்பையே பனிப்போர் என்கின்றனர். அவை நேரடியாக ஆயுதங்களைக் கொண்டு தாக்குதல் நடத்தவில்லை மாறாக அவர்கள் அரசியல் பொருளாதார சிந்தனைத் தளங்களைத் தேர்வு செய்துகொண்டனர்.

இரண்டாம் உலகப் போருக்கு பிறகு ஏற்பட்ட வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், இடம் பெயர்வு போன்ற பிரச்சனைகளே மேற்கு ஐரோப்பாவிற்குள் பொதுவுடைமைக் கருத்து வளரக் காரணமாய் அமையும் என்று அமெரிக்க ஐக்கிய நாடு கருதியது. அமெரிக்க ஐக்கிய நாட்டின் செயலர் ஜார்ஜ் சி. மார்ஷல் ஐரோப்பாவின் சுய முன்னேற்ற முயற்சிக்குத் தம் நாடு பண உதவி செய்யுமென்று அறிவித்தார். பதினாறு நாடுகள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்தன. நிர்வாக மற்றும் தொழில் நுட்ப உதவிகளும் அமெரிக்க ஐக்கியப் பொருளாதார ஒத்துழைப்பு நிர்வாகத்தின் கீழ் வழங்கப்பட்டன. நிதியுதவி வழங்கும் மார்ஷலின் திட்டமானது 1951இல் முடிவுக்கு வந்தது.

**சீயோனிய இயக்கம்:** யூதர்களின் பூர்வீகப் பகுதியான பாலஸ்தீனத்தில் 1900இல் ஆயிரம் யூதர்களே குடியிருந்தனர். இவ்வினத்தின் பதினைந்து மில்லியன் மக்கள் ஐரோப்பாவிலும் வடக்கு அமெரிக்காவிலும் பரவிக்கிடந்தனர் (இதுவே "புலம்பெயர்" சமூகம் என்று குறிக்கப்படுகிறது). வியன்னாவில் பத்திரிகையாளராக இருந்த தோடோர் ஹெர்சல் யூத நாடு என்ற பெயரில் 1896ஆம் ஆண்டு ஒரு துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டார். அதற்கு அடுத்த ஆண்டு (1897) உலக சீயோனிய அமைப்பு உருவாக்கப்பட்டது.

**பாலஸ்தீனிய விடுதலை அமைப்பு:** இஸ்ரேல் என்ற தேசம் 1948இல் உருவாவதற்கு முன் பாலஸ்தீனில் வாழ்ந்த அரேபியர்களுக்கும் அவர்கள் வம்சாவளியினருக்குமாக உருவாக்கப்பட்ட ஒரு பரந்த அமைப்பு இதுவாகும். இரகசியமாக செயல்பட்டு வந்த எதிர்ப்பு இயக்கங்கள் தங்களை ஒருங்கிணைக்க 1964இல் உருவாக்கப்பட்ட அமைப்பாகும். இவ்வமைப்பின் முக்கிய தலைவர் யாசர் அராபத் ஆவார்.

**யாசர் அராபத் (1924–2004):** யாசர் அராபத் பாலஸ்தீன விடுதலை அமைப்பின் செயற்குழுவிற்கு 1969இல் தலைமையேற்று 2004இல் அவர் இறக்கும் வரை அப்பொறுப்பில் வீற்றிருந்தார். செப்டம்பர் 1970இல் அவர் அனைத்துப் பாலஸ்தீன அரபு கொரில்லாப்படைகளுக்கும் முதன்மைத் தளபதியாகவும் நியமிக்கப்பட்டிருந்தார். ஒரு தலைப்பாகையுடனும் மறைவாக அவர் வைத்திருந்த துப்பாக்கியும் ஆலிவ் மரக்கிளையின் பகுதியும் அவர் தம் இராணுவச் சீருடையும் காண்போர் மனதில் பாலஸ்தீனப் பிரச்சனையின் தீவிரத்தை நினைவூட்டுவதாக அமைந்தது. அவர் 2 ஏப்ரல் 1989 அன்று பாலஸ்தீன விடுதலை அமைப்பின் நடுவண்குழுவால் பாலஸ்தீன தேசத்தின் முதல் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மேற்கு ஜெர்மனியின் வேந்தராக (Chancellor) 1982 முதல் 1990 வரை பொறுப்பு வகித்த ஹெல்மட் கோல் கிழக்கு ஜெர்மனியையும், மேற்கு ஜெர்மனியையும் 1990இல் இணைக்கப் பெரும் பங்காற்றினார். அதன் மூலம் நாற்பத்தைந்து ஆண்டுகளுக்குப் பின் ஒன்றுபட்ட ஜெர்மனியின் வேந்தரானார். அவர் பிரெஞ்சு

குடியரசுத் தலைவரான மிட்டரண்டோடு இணைந்து மாஸ்ட்ரிக்ட் ஒப்பந்தத்தை உருவாக்கி அதன் மூலமாக ஒருங்கிணைந்த ஐரோப்பாவிற்கும் (European Union), யூரோ பண உருவாக்கத்திற்கும் வித்திட்டார்

பெரிஸ்ட்ரோய்கா (மறுகட்டமைப்பு) என்பது மிக்கேல் கோர்பசேவால் சோவியத் நாட்டின் பொருளாதாரத்தையும், அரசியல் அமைப்பையும் மறுசீரமைப்பிற்கு உட்படுத்த 1980களின் கடைசியில் அறிமுகப்படுத்தப்பட்ட ஒன்றாகும். வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளின் முன்னேற்றத்திற்கு சோவியத்தின் பொருளாதாரம் ஈடு கொடுக்கும் படி அதற்குப் புத்துணர்வு ஊட்ட வெளிப்படைத் தன்மை (Glasnost) கொள்கையோடு அறிமுகப்படுத்தபட்டதே பெரிஸ்ட்ரோய்கா ஆகும். வெளிப்படைத்தன்மை என்ற கொள்கை மிக்கேல் கோர்பசேவால் பெரிஸ்ட்ரோய்காவோடு அறிமுகப்படுத்தப்பட்ட வெளிப்படையான ஒரு கருத்தியல் கொள்கையாகும். வெளிப்படைத்தன்மை எழுத்தாளர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளைத் தளர்த்தி அரசையும், அரசியலையும் விமர்சிக்க உரிமை வழங்கியது.

எல்சின் ஆரம்ப காலத்தில் கோர்பசேவின் நண்பராகவே இருந்தார். மாஸ்கோ நகரின் மேயராக இருந்த அவர் அரசியல் மற்றும் பொருளாதாரச் சுதந்திரத்தை ஆதரித்ததின் மூலமாகப் பெரும்புகழ் பெற்றார். சோவியத் பாராளுமன்றத்திற்கு 1989இல் ஜனநாயக முறைப்படி கோர்பசேவ் நடத்திய தேர்தலில் மாஸ்கோ தொகுதியில் போட்டியிட்ட அவர் பெரும் வெற்றி பெற்று அதிகாரத்திற்குத் திரும்பினார். அதற்கு அடுத்த ஆண்டு கோர்பசேவின் எதிர்ப்பையும் மீறி அவர் ரஷ்யாவின் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ரஷ்யக் குடியரசின் தன்னாட்சியை வலியுறுத்திய அவர், பாராளுமன்றத்திற்கு கட்டுப்படாத முழு நிர்வாகப் பொறுப்பை கைகொள்ளும் அதிபர் முறையை முன்வைத்தார்.

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. எந்த அமெரிக்கக் குடியரசுத் தலைவர் பொதுவுடைமைக் கொள்கையைக் கட்டுக்குள் அடக்க ஒரு கொள்கை வரைவை முன்வைத்தார்?

(அ) உட்ரோ வில்சன்

(ஆ) ட்ருமென்

(இ) தியோடர் ரூஸ்வெல்ட்

(ஈ) பிராங்க்ளின் ரூஸ்வெல்ட்

2. சீனாவில் மக்கள் அரசியல் கலந்தாய்வு மாநாடு எப்போது நடைபெற்றது?

(அ) செப்டம்பர் 1959

(ஆ) செப்டம்பர் 1949

(இ) செப்டம்பர் 1954

(ஈ) செப்டம்பர் 1944

3. அமெரிக்க ஐக்கிய நாடும் அதன் ஐரோப்பிய நேச நாடுகளும் சேர்ந்து சோவியத் நாட்டின் ஆக்கிரமிப்பைத் தவிர்க்க ஏற்படுத்திய அமைப்பின் பெயர் __________ ஆகும்.

(அ) சீட்டோ

(ஆ) நேட்டோ

(இ) சென்டோ

(ஈ) வார்சா ஒப்பந்தம்

4. பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் செயற்குழுவிற்கு 1969இல் தலைவராகப் பதவியேற்றவர் யார்?

(அ) ஹபீஸ் அல்–ஆஸாத்

(ஆ) யாசர் அராபத்

(இ) நாசர்

(ஈ) சதாம் உசேன்

5. வடக்கு மற்றும் தெற்கு வியட்நாம் எந்த ஆண்டு ஒன்று சேர்க்கப்பட்டது?

(அ) 1975

(ஆ) 1976

(இ) 1973

(ஈ) 1974

6. எந்த ஆண்டு வார்சா ஒப்பந்தம் கலைக்கப்பட்டது?

(அ) 1979

(ஆ) 1989

(இ) 1990

(ஈ) 1991

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. நவீன சீனாவின் தந்தை என்று அழைக்கப்படுபவர் ____________ ஆவார்.

2. 1918இல் ____________ பல்கலைகழகத்தில் மார்க்ஸியக் கோட்பாட்டை அறியும் அமைப்பு நிறுவப்பட்டது.

3. டாக்டர் சன் யாட் சென்னின் மறைவுக்குப் பின்னர் கோமிங்டாங் கட்சியின் தலைவராக இருந்தவர் ____________ ஆவார்.

4. அமைதியையும் பாதுகாப்பையும் விரும்பிய அரபு நாடுகளுக்கு திறந்தே இருந்த ஒப்பந்தம் ____________ ஆகும்.

5. துருக்கிய அரபுப் பேரரசை ஏற்படுத்தும் நோக்கைக் கொண்டிருந்த ஒப்பந்தம் ____________ ஆகும்.

6. ஜெர்மனி நேட்டோவில் ____________ ஆம் ஆண்டு இணைந்தது.

7. ஐரோப்பியக் குழுமத்தின் தலைமையகம் ____________ நகரில் அமைந்துள்ளது.

8. ஐரோப்பிய இணைவை உறுதி செய்ய 7 பிப்ரவரி 1992இல் கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தம் ____________ ஆகும்.

**பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

winmeen.com

1. i) கற்றறிந்த சிறுபன்மையினரின் தாக்கத்தில் சீனாவில் (1898) இளம் பேரரசர் துவக்கிய சீர்திருத்தங்கள் நூறு நாள் சீர்திருத்தம் என்று அறியப்படுகிறது.

ii) கோமிங்டாங் கட்சி தொழிலாளர்களையும் விவசாயிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தியது.

iii) மஞ்சூரியா மீதும் ஷாண்டுங் மீதும் ஜப்பான் பொருளாதாரக் கட்டுப்பாட்டை விதிக்க யுவான் ஷி–கே உடன்பட்டதால் தேசியவாதிகள் பார்வையில் அவர் செல்வாக்கு இழந்தார்.

iv) சோவியத் நாடு இருபது ஆண்டு காலத்திற்கும் மேலாக சீன மக்கள் குடியரசை அங்கீகரிக்க மறுத்தது.

(அ) i மற்றும் ii சரி

(ஆ) ii மற்றும் iii சரி

(இ) i மற்றும் iii சரி

10th Social Science Lesson 14

14] இந்தியா – வளங்கள் மற்றும் தொழிலகங்கள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

**இந்தியாவில் உள்ள கனிமங்கள் மற்றும் அதனோடு தொடர்புடைய அமைப்புகள்:** (1) இந்திய நிலவியல் களஆய்வு நிறுவனத்தின் தலைமையிடம் – கொல்கத்தா. (2) இந்திய சுரங்கப் பணியகம் – நாக்பூர். (3) இரும்பு சாரா தொழில் நுட்ப மேம்பாட்டு மையம் – ஹைதராபாத். (4) இந்தியாவில் உள்ள சுரங்கங்கள் மற்றும் கனிமங்களின் நிர்வாகத்திற்கான பொறுப்பு சுரங்கப்பணி அமைச்சகத்திடம் உள்ளது. (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறைச் சட்டம் 1957)

**இந்திய இரும்பு எஃகு ஆணையம்** (SAIL): இந்தியாவில் இரும்பு எஃகு தொழிற்சாலைகள் திட்டமிடல் மற்றும் வளர்ச்சிக்கு இது முக்கிய பங்காற்றுகிறது.

**பொதுவாக இரும்புத்தாது கீழ்க்கண்ட வடிவங்களின் காணப்படுகிறது:**

| இரும்புத் தாது படிவு | இரும்பின் அளவு |
|---|---|
| மேக்னடைட் | 72. 4% |
| ஹேமடைட் | 69. 9% |
| கோதைட் | 62. 9% |
| லைமனைட் | 55% |
| சிடரைட் | 48. 2% |

நாக்பூரை தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வரும் இந்திய மாங்கனீசு தாது நிறுவனம் (Maganese ore India Ltd) 50 சதவிகித மாங்கனீசை உற்பத்திச் செய்து, உலகச் சந்தை மதிப்பீட்டில் முதன்மையானதாக திகழ்கிறது.

பாக்சைட் என்பது அலுமினியத்தின் ஒருவகையான ஆக்சைடு ஆகும். இது பிரெஞ்சு வார்த்தையான லீ பாக்ஸ் என்ற வார்த்தையில் இருந்து பெறப்பட்டது.

இந்துஸ்தான் தாமிர நிறுவனம் இந்திய அரசால் நிர்வகிக்கப்படும் இந்திய சுரங்கத் துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கக்கூடிய பொதுத்துறை நிறுவனமாகும்.

NALCO என்று அழைக்கப்படும் தேசிய அலுமினிய நிறுவனம் 1981இல் தொடங்கப்பட்டது. இதன் மையங்கள் ஒடிசா மாநிலத்தில் அஞ்சல், டாமன், சோடி போன்ற இடங்களில் உள்ளன. இது இந்திய சுரங்கத்துறை அமைச்சகத்தின் கீழ் 1981ஆம் ஆண்டு பொதுத்துறை நிறுவனமாக உருவாக்கப்பட்டது.

இந்திய அரசால் நிர்வகிகப்படும் இந்திய நிலக்கரி நிறுவனம் மேற்கு வங்காளத்திலுள்ள கொல்கத்தாவை தலைமையிடமாகக் கொண்டு செயல்படுகிறது. இது உலக அளவில் அதிக நிலக்கரி உற்பத்தி செய்யும் நிறுவனம் ஆகும்.

**பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம்** (MPOP & NG): இது இந்திய அரசாங்கத்தின் கீழ் இயங்கும் ஒரு அமைச்சகமாகும். இவ்வமைச்சகம் ஆய்வு செய்தல், உற்பத்தி, சுத்திகரித்தல், விநியோகம், ஏற்றுமதி, இறக்குமதி, எண்ணெய் பாதுகாப்பு, இயற்கை எரிவாயு மற்றும் பெட்ரோலிய உற்பத்திப் பொருள் போன்றவற்றிற்கு பொறுப்பு ஏற்கிறது.

| மேற்கு கடற்கரைக்கு அருகில் உள்ள எண்ணெய் வயல்கள் | கிழக்கு கடற்கரைக்கு அருகில் உள்ள எண்ணெய் வயல்கள் |
|---|---|
| 1. மும்பை ஹை எண்ணெய் வயல் (65% மிகப்பெரியது) | பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கு, (திப்ருகார், சில்சாகர், மாவட்டங்கள் அசாம்) |
| 2. குஜராத் கடற்கரை (2வது பெரியது) | திக்பாய் எண்ணெய் வயல் (நாட்டின் மிகப் பழமையான எண்ணெய் வயல்) |
| 3. பேஸ்ஸைம் எண்ணெய் வயல் மும்பை ஹையின் தென்பகுதி. | நாகர்காட்டியா எண்ணெய் வயல் (திக்பாய்க்கு தென்மேற்கு பகுதி) |
| 4. அலியாபெத் – எண்ணெய் வயல் (பவ் நகரின் தென்பகுதி) | மோரான் ஹக்ரிஜன் – எண்ணெய் வயல் (நாகர்காட்டியாவின் தென்மேற்கு பகுதி) |
| 5. அங்கலேஸ்வர் | ருத்ரசாகர் – லாவா எண்ணெய் வயல்கள் (அசாம் மாநிலத்தில் சிப்சாகர் மாவட்டம்) |
| 6. காம்பே – லூனி பகுதிகள் | சர்மா பள்ளத்தாக்கு – (பதர்பூர், மாசிம்பூர், பதாரியா) |
| 7. அகமதாபாத் – கலோல் பகுதி | அந்தமான் நிகோபாரின் உட்பகுதிகள், மன்னார் வளைகுடா, பலேஷ்வர் கடற்கரை, ஹரியானா, பஞ்சாப் மற்றும் உத்தரப்பிரதேசம் |

**கெயில் நிறுவனம் (GAIL):** இந்திய இயற்கை எரிவாயு நிறுவனமானது மாநில அரசாங்கத்தால் நிர்வகிக்கப்படும் ஒரு நிறவனமாகும். இது இயற்கை எரிவாயு உற்பத்தி மற்றும் விநியோகம் செய்யும் நிறுவனங்களுள் ஒரு மிகப்பெரிய நிறுவனமாகும். இதன் தலைமையகம் புதுடெல்லியில் உள்ளது.

அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு (CNG) (அதிக அழுத்தத்துடன் அடைக்கப்பட்ட மீத்தேன்) என்பது பெட்ரோல், டீசல் மற்றும் திரவ பெட்ரோலிய எரிவாயு ஆகியவற்றிற்கு பதிலாக பயன்படுத்தக்கூடிய ஒரு எரிபொருளாகும். இது காற்றை விட இலகுவானதாகவும், அதிக வேகமாக பரவும் தன்மைக் கொண்டதால் விரைவில் மறைந்து விடுகிறது. இதனால் மற்ற எரிபொருள்களை விட ஆபத்து குறைவானதாகும். விவசாயக் கழிவுகளிலிருந்து எடுக்கப்படும் உயிரிவாயு, புதுடெல்லி, அகமதாபாத், மும்பை, பூனா, கொல்கத்தா, லக்னோ, கான்பூர், வாராணாசி போன்ற நகரங்களில் வாகனங்களுக்கு பயன்படுத்தப்படுவது அதிகரித்து வருகிறது.

இந்திய அணு மின்சக்தி நிறுவனம் (NPCIL) இந்தியாவின் ஒரு பொதுத்துறை நிறுவனமாகும். இது மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள மும்பையைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் அரசு நிறுவனமாகும். இந்நிறுவனம் அணு மின்சக்தி உற்பத்திக்கான பொறுப்பை வகிக்கிறது.

இந்தியாவின் முதல் நீர்மின் நிலையம் 1897ஆம் ஆண்டு டார்ஜிலிங்கில் நிறுவப்பட்டது. இந்திய தேசிய நீர் மின்சக்தி நிறுவனம் ஃபரிதாபாத்தில் அமைந்துள்ளது.

இந்தியாவிலேயே அதிக அளவு காற்றாலைகளைக் கொண்டுள்ள மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள முப்பந்தல் – பெருங்குடிப்பகுதி உலகிலேயே அதிக காற்றாலைகளைக் கொண்ட பெரிய காற்றாலை பண்ணை ஆகும்.

இந்தியாவின் சூரிய சக்தி நிறுவனம் புதுடெல்லியை தலைமை இடமாக கொண்டு உள்ளது.

இந்தியாவின் முதல் பருத்தி நெசவாலை 1818ஆம் ஆண்டு, கொல்கத்தாவிற்கு அருகில் உள்ள போர்ட் க்ளாஸ்டர் என்னும் இடத்தில் தொடங்கப்பட்டது.

**தேசிய காற்றாற்றல் நிறுவனம்** (NIEW): சென்னையிலுள்ள இந்நிறுவனம் 1998இல் ஒரு தன்னாட்சி நிறுவனமாக புதிய மற்றும் புதுப்பிக்கக் கூடிய ஆற்றல் வளங்கள் அமைச்சக நிர்வாகத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்டது. இதன் பணிகளானது காற்று வள மதிப்பீடு ஆய்வு மற்றும் சான்றளித்தல் ஆகும்.

பருத்தி இழையிலிருந்து, விதைகளை பிரித்தெடுக்கும் முறைக்கு ஜின்னிங் என்று பெயர்.

தேசிய மணல் வாரியத்தின் தலைமையகம் கொல்கத்தாவில் அமைந்துள்ளது.

**மத்திய பட்டு ஆராய்ச்சி தொழில் நுட்ப நிறுவனம்** (CSTRI): பட்டு வளர்ப்பு மற்றும் தொழில் நுட்பம் சார்ந்த ஆராய்ச்சிக்கென நிறுவப்பட்ட ஒரு நிறுவனமாகும். இந்நிறுவனம் பெங்களூருவைத் தலைமையிடமாகக் கொண்டு இந்திய அரசாங்கத்தின் மத்திய பட்டு வளர்ப்பு வாரியத்தால் 1983ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

இந்திய வர்த்தகத் துறை அமைச்சகத்தின் கீழ் நவம்பர் 20, 1975இல் தொடங்கப்பட்ட கைத்தறி வளர்ச்சி ஆணையர் அலுவலகம் தற்போது இந்திய ஜவுளி துறை அமைச்சகத்தின் கீழ் புதுதில்லியில் உள்ள உத்யோக் பவனை தலைமையிடமாக கொண்டு செயல்பட்டு வருகிறது.

இந்தியாவின் முதல் காகிதத் தொழிற்சாலை 1812ஆம் ஆண்டு மேற்கு வங்கத்தில் உள்ள செராம்பூர் என்னுமிடத்தில் தொடங்கப்பட்டது.

தேசிய செய்திகள் மற்றும் காகித ஆலைகள் (NEPA) மத்தியப் பிரதேச மாநில பர்கான்பூர் மாவட்டத்தில் உள்ள நேபா நகர் என்னும் இடத்தில் அமைந்துள்ளது.

இரும்பு மற்றும் எஃகு உற்பத்தி தொழிற்சாலை முதன் முதலில் 1830இல் தமிழ்நாட்டில் போர்டோ நாவோவில் அமைக்கப்பட்டது.

பிரதான வாகனத் தொழிற்சாலைகளும் அதனை சார்ந்த தொழிற்சாலைகளும் சென்னையை சுற்றியுள்ள பகுதிகளில் இருப்பதால் சென்னை ஆசியாவின் டெட்ராய்ட் என்று அழைக்கப்படுகிறது.

இந்தியாவில் உற்பத்தி செய்யும் திட்டம் (Make in India programme) இதன் முக்கிய நோக்கம் உலக வரைப்படத்தில் இந்தியாவை ஒரு சிறந்த தொழிலக உற்பத்தி மையமாக காண்பிப்பதாகும்.

**<u>சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:</u>**

1. மாங்கனீசு இவற்றில் பயன்படுத்தப்படுகிறது.

(அ) சேமிப்பு மின்கலன்கள்

(ஆ) எஃகு தயாரிப்பு

(இ) செம்பு உருக்குதல்

(ஈ) பெட்ரோலிய சுத்திகரிப்பு

2. ஆந்த்ரசைட் நிலக்கரி __________ கார்பன் அளவை கொண்டுள்ளது.

(அ) 80% – 95%

(ஆ) 70% க்கு மேல்

(இ) 60% – 70%

(ஈ) 50% க்கும் குறைவு

3. பெட்ரோலியத்தில் உள்ள முக்கிய கனிமங்கள் ஹைட்ரஜன் மற்றும் __________

(அ) ஆக்ஸிஜன்

(ஆ) நீர்

(இ) கார்பன்

(ஈ) நைட்ரஜன்

4. தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படும் நகரம்.

(அ) சேலம்

(ஆ) சென்னை

(இ) மதுரை

(ஈ) கோயம்புத்தூர்

5. இந்தியாவில் முதன் அணுமின் நிலையம் நிறுவப்பட்ட மாநிலம்

(அ) குஜராத்

(ஆ) இராஜஸ்தான்

(இ) மகாராஷ்டிரம்

(ஈ) தமிழ்நாடு

6. மிக அதிகமாக கிடைக்கக்கூடிய ஆற்றல் வளம்.

(அ) உயிரி சக்தி

(ஆ) சூரியன்

(இ) நிலக்கரி

(ஈ) எண்ணெய்

7. புகழ் பெற்ற சிந்திரி உரத் தொழிலகம் அமைந்துள்ள மாநிலம்

(அ) ஜார்க்கண்ட

(ஆ) பீகார்

(இ) இராஜஸ்தான்

(ஈ) அசாம்

8. சோட்டா நாகபுரி பீடபூமி பகுதியின் பொருளாதார வளர்ச்சிக்கு கருவாக இருப்பது.

(அ) போக்குவரத்து

winmeen.com

(ஆ) கனிமப்படிவுகள்

(இ) பெரும் தேவை

(ஈ) மின்சக்தி சக்தி கிடைப்பது

**பொருத்துக:**

(அ) பாக்சைட் – சிமெண்ட்

(ஆ) ஜிப்சம் – வானூர்தி

(இ) கருப்பு தங்கம் – மின்சாதனப் பொருள்கள்

(ஈ) இரும்பு தாது – நிலக்கரி

(உ) மைக்கா – மேக்னடைட்

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: (விடைகள்)**

1. எஃகு தயாரிப்பு 2. 80% – 95% 3. கார்பன் 4. கோயம்புத்தூர் 5. மகாராஷ்டிரம்

6. சூரியன் 7. ஜார்கண்ட் 8. கனிமப் படிவுகள்

**பொருத்துக: (விடைகள்)**

1. பாக்சைட் – வானூர்தி

2. ஜிப்சம் – சிமெண்ட்

3. கருப்பு தங்கம் – நிலக்கரி

4. இரும்பு தாது – மேக்னடைட்

5. மைக்கா – மின்சாதனப் பொருட்கள்

10th Social Science Lesson 15

**15] இந்தியா – மக்கள் தொகை, போக்குவரத்து, தகவல் தொடர்பு மற்றும் வணிகம்**

**உங்களுக்குத் தெரியுமா?**

இந்தியாவின் முதல் மக்கள் தொகை கணக்கெடுப்பு 1872ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. முழுமையான முதல் மக்கள் தொகை கணக்கெடுப்பு 1881ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. நாட்டின் 15வது மக்கள் தொகை கணக்கெடுப்பு 2011ஆம் ஆண்டு நடைபெற்றது.

ஷெர்சா சூர் தன்னுடைய பேரரசை பலப்படுத்தவும் ஒருங்கிணைக்கவும் சாஹி (ராயல்) சாலையை சிந்து பள்ளத்தாக்கிலிருந்து மேற்கு வங்காளத்தில் உள்ள சோனார் பள்ளத்தாக்கு வரை அமைத்தார். கொல்கத்தாவிலிருந்து பெஷாவர் வரை உள்ள இச்சாலை ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் கிராண்ட் ட்ரங்க் சாலை என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. தற்போது இச்சாலை அமிர்தரசிலிருந்து கொல்கத்தா வரை நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவின் முதல் புறநகர் இரயில் போக்குவரத்து மும்பையில் 1925இல் தொடங்கப்பட்டது. காத்திமன் (GATHIMAN) அதிவிரைவு வண்டி இந்தியாவின் மிக அதிக வேக இரயில் வண்டி ஆகும். இந்த இரயில் வண்டி புதுடெல்லியையும் ஆக்ராவையும் இணைக்கிறது.

மேகலாயா மாநிலத்தில் இரயில் போக்குவரத்து இல்லை.

இந்தியாவின் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (NHAI) 1995இல் நிறுவப்பட்டது. இது தரைவழி போக்குவரத்து அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தன்னாட்சி பெற்ற அமைப்பாகும்.

**<u>சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:</u>**

1. மக்கள் தொகையின் பல்வேறு அம்சங்கள் பற்றிய அறிவியல் பூர்வமான படிப்பு ______________

(அ) வரைபடவியல்

(ஈ) மக்களியல்

(ஈ) மானுடவியல்

(ஈ) கல்வெட்டியல்

2. ___________ போக்குவரத்து நேரடியாக உற்பத்தியாளரையும் நுகர்வோரையும் இணைக்கிறது.

(அ) இரயில்வே

(ஆ) சாலை

(இ) வான்வழி

(ஈ) நீர்வழி

3. இந்தியாவில் தங்க நாற்கரச் சாலையின் நீளம்

(அ) 5846 கி. மீ

(ஆ) 5942 கி. மீ

(இ) 5630 கி. மீ

(ஈ) 5800 கி. மீ

4. தேசிய தொலையுணர்வு மையம் அமைந்துள்ள இடம் ______________

(அ) பெங்களுரு

(ஆ) சென்னை

(இ) புது டெல்லி

(ஈ) ஹைதராபாத்

5. எளிதில் செல்ல முடியாத பகுதிகளுக்கு பயன்படும் போக்குவரத்து

(அ) சாலைப்போக்குவரத்து

(ஆ) இரயில் போக்குவரத்து

winmeen.com

(இ) வான்வழிப் போக்குவரத்து

(ஈ) நீர்வழிப் போக்குவரத்து

6. கீழ்க்கண்டவற்றில் எவை வானுலங்கு ஊர்தியுடன் (ஹெலிகாப்டர்) தொடர்புடையது?

(அ) ஏர் இந்திய

(ஆ) இந்தியன் ஏர்லைன்ஸ்

(இ) வாயுதூத்

(ஈ) பவன்ஹான்ஸ்

7. இந்தியாவின் முக்கிய இறக்குமதி பொருள்

(அ) சிமெண்ட்

(ஆ) ஆபரணங்கள்

(இ) தேயிலை

(ஈ) பெட்ரோலியம்

**<u>பொருத்துக:</u>**

1. எல்லைபுறச் சாலை – செயற்கைக்கோள் தகவல் தொடர்பு

2. INSAT (இன்சாட்) – நகரமயமாக்கலின் தாக்கம்

3. மேசகான் கப்பல் கட்டும் தளம் – 1990

4. புறநகரப் பரவல் – மும்பை

5. கொங்கண் இரயில்வே – 1960 ஹைதராபாத்

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: (விடைகள்)**

1. மக்களியல் 2. சாலை 3. (5846 கி. மீ) 4. ஹைதராபாத்

5. வான்வழிப் போக்குவரத்து 6. பவன்ஹான்ஸ் 7. பெட்ரோலியம்

**பொருத்துக: (விடைகள்)**

1. எல்லைபுறச் சாலை – 1960 ஹைதராபாத்

2. INSAT (இன்சாட்) – செயற்கைகோள் தகவல் தொடர்பு

3. மேசகான் கப்பல்கட்டும் தளம் – மும்பை

4. கொங்கண இரயில்வே – 1990

10th Social Science Lesson 16

16] தமிழ்நாடு – இயற்கைப் பிரிவுகள்

**உங்களுக்குத் தெரியுமா?**

1956ஆம் ஆண்டு மாநில மறுசீரமைப்புச் சட்டத்தின் படி, மொழியியல் அடிப்படையில் மாநிலங்கள் மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளன.

சென்னை, நீலகிரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களைத் தவிர மற்ற மாவட்டங்கள் பல்வேறு காலகட்டங்களில் பிரித்தமைக்கப்பட்டன.

**தமிழ்நாட்டில் அமைந்துள்ள முக்கிய மலைகள்:** கோயம்புத்தூர் – மருதமலை, வெள்ளியங்கிரி மற்றும் ஆனைமலை. தர்மபுரி – தீர்த்த மலை, சித்தேரி மற்றும் வத்தல் மலை. திண்டுக்கல் – பழனிமலை மற்றும் கொடைக்கானல். ஈரோடு – சென்னிமலை மற்றும் சிவன் மலை. வேலூர் – ஜவ்வாது, ஏலகிரி மற்றும் இரத்தினமலை. நாமக்கல் – கொல்லிமலை. சேலம் – சேர்வராயன், கஞ்சமலை மற்றும் சுண்ணாம்புக் குன்றுகள். குள்ளக்குறிச்சி – கல்வராயன். விழுப்புரம் – செஞ்சிமலை. பெரம்பலூர் – பச்சை மலை. கன்னியாகுமரி – மருதுவாழ் மலை. திருநெல்வேலி – மகேந்திரகிரி மற்றும் அகத்திய மலை. நீலகிரி – நீலகிரி மலை.

பாம்பன், முயல் தீவு, குருசடை, நல்ல தண்ணி தீவு, புள்ளி வாசல், ஸ்ரீரங்கம், உப்பு தண்ணித் தீவு, தீவுத்திடல், காட்டுப்பள்ளித் தீவு, குவிப்பில் தீவு மற்றும் விவேகானந்தர் நினைவுப் பாறை ஆகியன தமிழ்நாட்டில் உள்ள முக்கிய தீவுகள் ஆகும்.

| **தமிழ்நாட்டின் பருவக்காலங்கள்** | |
|---|---|
| **பருவக்காலம்** | **காலம்** |
| குளிர்காலம் ₹ | ஜனவரி முதல் பிப்ரவரி |
| கோடைக்காலம் | மார்ச் முதல் மே |
| தென்மேற்கு பருவக்காற்று காலம் | ஜீன் முதல் செப்டம்பர் |
| வடகிழக்கு பருவக்காற்று காலம் | அக்டோபர் முதல் டிசம்பர் |

வால்பாறைக்கு அருகிலுள்ள சின்னக்கல்லார் தமிழ்நாட்டின் மிக அதிக மழை பெறும் பகுதியாகவும், இந்தியாவின் மூன்றாவது அதிக மழை பெறும் பகுதியாகவும் உள்ளது.

பிச்சாவரம் சதுப்பு நிலக்காடு கடலூர் மாவட்டத்தில் சிதம்பரத்திற்கு அருகே அமைந்துள்ளது. இது 1, 100 ஹெக்டேர் பரப்பளவுடன் (11 சதுர கிலோமீட்டர்) உலகின் இரண்டாவது மிகப் பெரிய சதுப்பு நிலக்காடாக உள்ளது. வங்க கடலிலிருந்து மணல் திட்டுகளால் இக்காடுகள் பிரிக்கப்பட்டுள்ளன. இது அவிசீனியா மற்றும் ரைசோபோரா போன்ற தாவர இனங்களைக் கொண்டது.

**கடல் பாதுகாப்பு மேலாண்மையில், சதுப்பு நிலத் தாவரங்களின் பங்கு:** கடல் அலைகள் மற்றும் புயலால் ஏற்படும் பாதிப்பிலிருந்து கடற்கரைப் பகுதிகளைப் பாதுகாக்கின்றது. மேலும் பவளப்பாறைகளையும், கடலோர புல்வெளிகளையும் மணல் படிவுகளால் மூழ்கடிக்கப்படாமல் பாதுகாக்கின்றது.

**தமிழ்நாட்டிலுள்ள உயிர்க்கோளப் பெட்டகங்கள்:** நீலகிரி உயிர்க்கோளப் பெட்டகம். மன்னார் வளைகுடா உயிர்க்கோளப் பெட்டகம். அகத்தியர் மலை உயிர்க்கோளப் பெட்டகம்.

| தமிழ்நாட்டில் அதிகக் காடுகளைக் (பரப்பளவு) கொண்ட மாவட்டங்கள் | |
|---|---|
| மாவட்டம் | பரப்பளவு (சதுர கிலோ மீட்டர்) |
| தர்மபுரி | 3, 280 |
| கோயம்புத்தூர் | 2, 627 |
| ஈரோடு | 2, 427 |
| வேலூர் | 1, 857 |
| நீலகிரி | 1, 583 |
| திண்டுக்கல் | 1, 662 |

**நீர் சேகரிப்பதற்கான சில வழிமுறைகள்:** நீர் மாசுபடுதலைத் தடுத்தல், நீர் மறுசுழற்சி, சிக்கனமான நிலத்தடி நீர் பயன்பாடு, மக்கள் தொகை கட்டுப்பாடு, மரபுவழி நீர்வளங்களைப் புதுப்பித்தல், நவீன நீர்ப்பாசன முறைகளைப் பயன்படுத்தல், காடுகளின் பரப்பளவை அதிகரித்தல், பயிரிடும் முறைகளை மாற்றுதல், வெள்ளப்பெருக்கு மேலாண்மை, புவி வெப்ப நிர் பயன்பாடு ஆகியன நீர்வளத்தை பாதுகாக்கும் சில வழிமுறைகள் ஆகும்.

**மாநில/யூனியன் பிரதேச அமைப்புகள்:** (1) மாநிலப் பேரிடர் மேலாண்மை ஆணையம் (தலைவர்– முதலமைச்சர்). (2) நிவாரண/பேரிடர் மேலாண்மை துறை. (3) காவல்துறை. (4) வனத்துறை. (5) தீ மற்றும் குடிமையியல் பாதுகாப்பு சேவைகள். (6) சுகாதார சேவைகள். (7) போக்குவரத்துத் துறை. (8) பொதுப்பணித் துறை. (9) கால்நடைத் துறை. (10) உணவு மற்றும் வட்ட வழங்கல் துறை.

**மாவட்ட அமைப்புகள் கீழ்க்கண்டவாறு:** (1) மாவட்ட நீதிபதி (தலைவர் – மாவட்ட ஆட்சியர்). (2) வருவாய்த்துறை. (3) குடிமை பணி நிர்வாகம். (4) உள்ளூர் காவல்துறை. (5) குடிமை பாதுகாப்பு. (6) தீயணைப்பு மற்றும் அவசர சேவைகள். (7) ஊர்க் காவல் படை (உள்ளூர், சமூகம், அரசு சாரா அமைப்பு, தன்னார்வ நிறுவனங்கள்).

**<u>சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:</u>**

1. தமிழ்நாட்டின் அட்சப் பரவல் __________ முதல் _________ வரை உள்ளது.

(அ) 8° 4' வ முதல் 13° 35' வ வரை

(ஆ) 8° 5' தெ முதல் 13° 35' தெ வரை

(இ) 8° 0' வ முதல் 13° 05' வ வரை

(ஈ) 8° 0' தெ முதல் 13° 05' தெ வரை

2. தமிழ்நாட்டின் தீர்க்க பரவல் __________ முதல் __________ வரை உள்ளது.

(அ) 76°18' கி முதல் 80° 20' கி வரை

(ஆ) 76° 18' மே முதல் 80° 20' மே வரை

(இ) 10° 20' கி முதல் 86° 18' கி வரை

(ஈ) 10° 20' கி முதல் 86° 18' மே வரை

3. தமிழ்நாட்டில் உள்ள மிக உயரமான சிகரம் __________ ஆகும்.

(அ) ஆனைமுடி

(ஆ) தொட்டபெட்டா

(இ) மகேந்திரகிரி

(ஈ) சேர்வராயன்

4. கீழ்க்கண்டவற்றில் தமிழ்நாட்டின் மேற்கு தொடர்ச்சிமலையில் அமையாத கணவாய் எது?

(அ) பாலக்காடு

(ஆ) செங்கோட்டை

(இ) போர்காட்

(ஈ) அச்சன்கோவில்

5. கீழ்க்கண்டவற்றில் அரபிக் கடலில் கலக்கும் ஆறு எது?

(அ) பெரியார்

(ஆ) காவிரி

(இ) சிற்றார்

(ஆ) பவானி

6. தமிழ்நாட்டில் அதிக பரப்பளவில் மாங்குரோவ் காடுகள் காணப்படும் மாவட்டம் எது?

(அ) இராமநாதபுரம்

(ஆ) நாகப்பட்டினம்

(இ) கடலூர்

(ஈ) தேனி

7. பின்னடையும் பருவக்காற்று ___________ லிருந்து ஈரப்பதத்தை எடுத்துக் கொள்கிறது.

(அ) அரபிக்கடல்

(ஆ) வங்கக் கடல்

(இ) இந்தியப் பெருங்கடல்

(ஈ) தைமுர்க்கடல்

8. கீழ்க்கண்டவற்றுள் மண் அரிப்பினால் அதிக அளவு பாதிக்கப்பட்ட மாவட்டம் ___________

(அ) தேனி

(ஆ) மதுரை

(இ) தஞ்சாவூர்

(ஈ) இராமநாதபுரம்

9. தமிழ்நாட்டில் அதிக பரப்பளவில் காடுகளைக் கொண்ட மாவட்டம் _____________

(அ) தர்மபுரி

(ஆ) வேலூர்

(இ) திண்டுக்கல்

(ஈ) ஈரோடு

**<u>கோடிட்ட இடங்களை நிரப்புக:</u>**

1. நீலகிரி மற்றும் தர்மபுரி மாவட்டங்களுக்கிடையே காணப்படும் பீடபூமி ___________ ஆகும்.

2. கிழக்கு தொடர்ச்சி மலையின் தென் பகுதியில் உள்ள உயரமான சிகரம் ____________ ஆகும்.

3. ஆற்றுத் தீவான ஸ்ரீரங்கம் ____________ மற்றும் ____________ ஆறுகளுக்கு இடையே அமைந்துள்ளது.

4. _____________ தமிழ்நாட்டின் மாநில விலங்கு ஆகும்.

**<u>பொருத்துக:</u>**

1. குளிர்காலம் – முன் பருவ மழை

2. கோடைக்காலம் – ஜீன் – செப்டம்பர்

3. தென்மேற்கு பருவக்காற்று – மார்ச் – மே

4. வடகிழக்கு பருவக்காற்று – டிசம்பர் – பிப்ரவரி

5. மாஞ்சாரல் – அக்டோபர் – நவம்பர்

**<u>பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:</u>**

1. கூற்று: தமிழ்நாடு தென்மேற்கு பருவகாற்று காலங்களில் அதிக மழையைப் பெறுவதில்லை.

காரணம்: இது மேற்கு தொடர்ச்சி மலையின் மழை மறைவுப் பிரதேசத்தில் அமைந்துள்ளது.

(அ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.

(ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

(இ) கூற்று சரி. ஆனால் காரணம் தவறு.

(ஈ) காரணம் சரி. ஆனால் கூற்று தவறு.

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: (விடைகள்)**

1. ($8^{\circ}4'$ வ முதல் $13^{\circ}35'$ வ வரை) 2. ($76^{\circ}18'$ கி முதல் $80^{\circ}20'$ கி வரை) 3. தொட்டபெட்டா

4. போர்காட் 5. பெரியார் 6. கடலூர் 7. வங்கக்கடல் 8. தேனி 9. தருமபுரி

**கோடிட்ட இடங்களை நிரப்புக: (விடைகள்)**

1. கோயம்புத்தூர் பீடபூமி 2. சோலைக்கரடு 3. கொள்ளிடம், காவிரி 4. வரையாடு

**பொருத்துக: (விடைகள்)**

1. குளிர்காலம் – டிசம்பர் – பிப்ரவரி

2. கோடைக்காலம் – மார்ச் – மே

3. தென்மேற்கு பருவக்காற்று – ஜீன் – செப்டம்பர்

4. வடகிழக்கு பருவக்காற்று – அக்டோபர் – நவம்பர்

5. மாஞ்சாரல் – முன் பருவக்காற்று

**பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றைத் தேர்வு செய்க:**

1. கூற்று, காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது.

10th Social Science Lesson 17

**17] தமிழ்நாடு – மானுடப் புவியியல்**

**உங்களுக்குத் தெரியுமா?**

தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தின் (TANU) கீழ் செயல்பட்டு வரும் தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிறுவனம் (TRRI) நெல் ஆராய்ச்சியை மேற்கொள்ளும் ஓர் இந்திய நிறவனமாகும். இது தஞ்சாவூர் மாவட்டத்தில் ஆடுதுறை என்னுமிடத்தில் 1985ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடங்கப்பட்டது. இந்நிறுவனம் இப்பகுதியிலுள்ள கல்லூரிகள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு நெல் சாகுபடி மற்றும் உற்பத்தி முறை குறித்த ஆராய்ச்சிகளுக்கு தேவையான உதவிகளைச் செய்து வருகிறது.

இந்தியா, 2018ஆம் ஆண்டை தினைப்பயிர்களின் தேசிய ஆண்டாக அனுசரித்தது. உலக உணவு மற்றும் வேளாண்மைக் கழகம் (FAO), 2023ஆம் ஆண்டை சர்வதேச தினைப்பயிர்கள் ஆண்டாக அனுசரிக்கத் தீர்மானித்துள்ளது.

**இரண்டாவது பசுமைப்புரட்சி (இயற்கை வேளாண்மை அல்லது கரிம வேளாண்மை):** இயற்கை வேளாண்மையில் செயற்கை உரங்கள், பூச்சிக்கொல்லிகள், தாவர வளர்ச்சி சீராக்கிகள் (செயற்கை இரசாயனம்) கால்நடை தீவனக் கலப்புகள் பயன்படுத்துவதில்லை. இவ்வகை விவசாயம், பயிர் சுழற்சி, பயிர் கழிவுகள், விலங்குகளின் கழிவுகள், விவசாயம் அல்லாத கரிம கழிவுகள், உயிரியல் பூச்சிக் கொல்லிகள் ஆகியனவற்றை மண்வளப் பாதுகாப்பிற்கு நம்பியுள்ளனர். குறைவான விவசாயிகளே இம்முறையினைப் பின்பற்றுகின்றனர்.

டான் டீ (TANTEA) இந்நிறுவனம் இந்தியாவில் கருப்பு வகை தேயிலை உற்பத்தியிலும், கலப்பு வகை தேயிலை உற்பத்தியிலும் முன்னணி வகிக்கும் நிறுவனங்களுள் ஒன்றாகும். (தமிழ்நாடு தேயிலை தோட்டக் கழகம்) இந்நிறுவனத்தின் தேயிலை பயிரிடும் பரப்பு ஏறத்தாழ 4, 500 ஹெக்டேர் ஆகும்.

இயற்கை வேளாண்மையை மேம்படுத்தும் நோக்கத்தோடு மத்திய அரசானது தேசிய இயற்கை கரிம வேளாண்மைத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. விழிப்புணர்வு ஏற்படுத்துதல், இயற்கை உரங்களை மேம்படுத்துதல், பயிற்சியளித்தல் போன்றவற்றை இத்திட்டம் செயல்படுகிறது. மேலும் கரிமப் பொருள்களை மறுசுழற்சி செய்யவும், தொழிற்கூடங்கள், உயிரி உரங்கள், உயிரி பூச்சிக்கொல்லிகள் உற்பத்தி செய்யவும்

தெழிற்கூடங்களுக்கு மாநிலத்தில் நிதி உதவி அளித்தல், தர மேம்பாட்டு வளர்ச்சி மற்றும் அதனை நடைமுறைப்படுத்தும் குழுமத்தின் மனித வளத்தை மேம்படுத்துதல் போன்றவை இத்திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

தமிழ்நாடு பால் வளர்ச்சி கழகம் என்ற அமைப்பானது தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் என்ற புதிய அமைப்பாக பதிவு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இது பிரபலமாக ஆவின் என்று அழைக்கப்படுகிறது.

**புவியியல் குறியீடு (GI Tag):** புவியியல் குறியீடு என்பது ஒரு குறிப்பிட்ட புவியியல் பிரதேசத்தில் தயாரிக்கப்படும் பொருள்களின் மீது பயன்படுத்தப்படும் குறிப்பாகும். இது உற்பத்தி செய்யும் உரிமையாளர்களுக்கு உரிமைகள் மற்றும் பாதுகாப்பை வழங்குகிறது.

**சில முக்கியப் புவியியல் குறியீடுகள்:** ஆரணி – பட்டு; காஞ்சிபுரம் – பட்டு; கோயம்புத்தூர் – மாவு அரைக்கும் இயந்திரம், கோரா பட்டு சேலை; தஞ்சாவூர் – ஓவியங்கள், கலைநயம் மிக்க தட்டுகள், தலையாட்டி பொம்மைகள், வீணை; நாகர்கோவில் – கோயில் நகைகள்; ஈரோடு – மஞ்சள்; சேலம் – வெண்பட்டு (சேலம்பட்டு); பவானி – போர்வைகள்; மதுரை – சுங்கடி சேலை; சுவாமிமலை – வெண்கலச் சிலைகள்; நாச்சியார் கோவில் – குத்துவிளக்கு; பத்தமடை – பாய்; நீலகிரி – பாரம்பரிய பூ தையல்; மகாபலிபுரம் – சிற்பங்கள்; சிறுமலை – மலை வாழை; ஏத்தோமொழி – தேங்காய்.

**தமிழ்நாட்டில் உள்ள முக்கிய தகவல் தொழில் நுட்ப பூங்காக்கள்:** டைடல் பூங்கா, அசெண்டாஸ், தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகளுக்கான மகேந்திரா உலக நகரம், சிறப்பு பொருளாதார மண்டலம்–டைடல் பூங்கா II மற்றும் டைடல் பூங்கா III, கோயம்புத்தூர் சிறப்பு பொருளாதார மண்டலம்–டைடல் பூங்கா ஆகியனவாகும்.

தமிழ்நாட்டின் மிக நீளமான தேசிய நெடுஞ்சாலை எண் 44–ஐ உடையதாகும். இது ஓசூரிலிருந்து தர்மபுரி, சேலம், கரூர், திண்டுக்கல், மதுரை, திருநெல்வேலி வழியாக கன்னியாகுமரி வரை 627. 2 கிலோமீட்டர் தூரம் செல்கிறது. தமிழ்நாட்டின் மிகக் குறைவான நீளங்கொண்ட தேசிய நெடுஞ்சாலை எண் 785–ஐக் கொண்டதாகும். இது மதுரையிலிருந்து துவரங்குறிச்சி வரை செல்கிறது. இதன் நீளம் 38 கிலோ மீட்டர் ஆகும்.

**தமிழ்நாட்டின் அஞ்சலக மாவட்டங்கள் மற்றும் தலைமையகம்:** சென்னை – சென்னை; மேற்கு மண்டலம் – கோயம்புத்தூர்; மத்திய மண்டலம் – திருச்சிராப்பள்ளி; தெற்கு மண்டலம் – மதுரை.

| **தமிழ்நாட்டின் முக்கிய ஏற்றுமதிகள்:** | |
|---|---|
| வேளாண் பொருள்கள் | புகையிலை, தானியங்கள், பருத்தி, கரும்பு, நெல், நிலக்கடலை, வாசனைப் பொருள்கள் மற்றும் காய்கறிகள் |
| தோல் பொருள்கள் | சிறுதோல் பைகள், பணப்பைகள், கைப்பைகள், இடுப்பு கச்சை, காலணிகள் மற்றும் கையுறைகள் |
| இரத்தின கற்கள் மற்றும் நகைகள் | விலை மதிப்பு மிக்க கற்கள், முத்துக்கள், தங்க நகைகள், கலை மற்றும் அலங்காரம் பொருள்கள் |
| இரசாயன மற்றும் இரசாயனம் சார்ந்த பொருள்கள் | காகிதம், இரசாயனங்கள், இரப்பர் மற்றும் கண்ணாடி |

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. தென்னிந்தியாவின் நெற்களஞ்சியம் என்று அழைக்கப்படும் டெல்டா ___________

(அ) காவிரி டெல்டா

(ஆ) மகாநதி டெல்டா

(இ) கோதாவரி டெல்டா

(ஈ) கிருஷ்ணா டெல்டா

2. தமிழ்நாட்டு மக்களின் இரண்டாவது முக்கிய உணவுப்பயிர் ____________

(அ) பருப்பு வகைகள்

(ஆ) சிறுதானியங்கள்

(இ) எண்ணெய் வித்துக்கள்

(ஆ) நெல்

3. தமிழ்நாட்டின் மிகப்பெரிய நீர்மின்சக்தி திட்டம் _______________

(அ) மேட்டூர்

(ஆ) பாபநாசம்

(இ) சாத்தனூர்

(ஈ) துங்கபத்ரா

4. தமிழ்நாட்டிலுள்ள பெரிய மற்றும் சிறிய துறைமுகங்களின் எண்ணிக்கை ____________

(அ) 3 மற்றும் 15

(ஆ) 4 மற்றும் 16

(இ) 3 மற்றும் 16

(ஈ) 4 மற்றும் 15

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. தமிழ்நாட்டின் பொருளாதாரத்தில் வேளாண்மை துறையின் பங்கு ___________ சதவிகிதத்தை வகிக்கிறது.

2. சாத்தனூர் அணை ___________ ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது.

3. மும்பை மற்றும் டில்லியை அடுத்த இந்தியாவின் மூன்றாவது பெரிய விமான நிலையம் ___________ ஆகும்.

4. இறக்குமதி மற்றும் ஏற்றுமதி மதிப்புகளுக்கு இடையிலுள்ள வேறுபாடு ____________ என அழைக்கப்படுகிறது.

**பொருத்துக:**

1. பாக்சைட் – சேலம்

2. ஜிப்சம் – சேர்வராயன் மலை

3. இரும்பு – கோயம்புத்தூர்

4. சுண்ணாம்புக்கல் – திருச்சிராப்பள்ளி

**பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. கூற்று: கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஈரோடு மண்டலம் தமிழ்நாட்டின் ஜவுளி பள்ளத்தாக்கு என அழைக்கப்படுகிறது.

காரணம்: இவைகள் நெசவாலைகள் மூலம் நாட்டின் பொருளாதாரத்திற்கு முக்கிய பங்களிப்பை அளிக்கின்றன.

(அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி; காரணம், கூற்றுக்கான சரியான விளக்கம் ஆகும்.

(ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி ஆனால் காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல.

(இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.

(ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி

2. கூற்று: நீலகிரி தமிழ்நாட்டின் குறைந்த மக்கள்தொகை கொண்ட மாவட்டம்.

காரணம்: இது தமிழ்நாட்டின் மேற்கு பகுதியில் அமைந்துள்ளது.

(அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி காரணம் கூற்றை விளக்குகிறது.

(ஆ) கூற்று மற்றும் காரணம் சரி ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் அல்ல.

(இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.

(ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: (விடைகள்)**

1. காவிரி டெல்டா 2. சிறுதானியங்கள் 3. மேட்டூர் 4. (3 மற்றும் 15)

**கோடிட்ட இடங்களை நிரப்புக: (விடைகள்)**

1. (21) 2. தென்பெண்ணை 3. சென்னை 4. வர்த்தக சமநிலை

**பொருத்துக: (விடைகள்)**

1. பாக்சைட் – சேர்வராயன் மலை

2. ஜிப்சம் – திருச்சிராப்பள்ளி

3. இரும்பு – சேலம்

4. சுண்ணாம்புக்கல் – கோயம்புத்தூர்

**பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றைத் தேர்வு செய்க:**

1. கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் ஆகும்.

2. கூற்று மற்றும் காரணம் சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் அல்ல.

10th Social Science Lesson 18

**18] இந்திய அரசியலமைப்பு**

**உங்களுக்குத் தெரியுமா?**

பிரேம் பெஹாரி நரேன் ரைஜடா என்பவரால் இந்திய அரசியலமைப்புச் சட்டம் இத்தாலிய பாணியில், அவரது கைப்பட எழுதப்பட்டது.

1789ஆம் ஆண்டு பிரெஞ்சு புரட்சியின் போது சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியன முக்கிய முழக்கங்களாயின. இந்திய அரசியலமைப்பின் முகவுரையில் இவற்றிற்கு முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது.

I. **சமத்துவ உரிமை:** பிரிவு 14 – சட்டத்தின் முன் அனைவரும் சமம்; பிரிவு 15 – மதம், இனம், சாதி, பாலினம் மற்றும் பிறப்பிடம் இவற்றின் அடிப்படையில் பாகுபடுத்துவதைத் தடை செய்தல்; பிரிவு 16 – பொது வேலைவாய்ப்புகளில் சமவாய்ப்பளித்தல்; பிரிவு 17 – தீண்டாமையை ஒழித்தல்; பிரிவு 18 – இராணுவ மற்றும் கல்விசார் பட்டங்களைத் தவிர மற்ற பட்டங்களை நீக்குதல்.

II. **சுதந்திர உரிமை:** பிரிவு 19 – பேச்சுரிமை, கருத்து தெரிவிக்கும் உரிமை, அமைதியான முறையில் கூட்டம் கூடுவதற்கு உரிமை, சங்கங்கள், அமைப்புகள் தொடங்க உரிமை, இந்திய நாட்டிற்குள் விரும்பிய இடத்தில் வசிக்கும் மற்றும் தொழில் செய்யும் உரிமை; பிரிவு 20 – குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களுக்கான உரிமை மற்றும் தண்டனைகளிலிருந்து பாதுகாப்பு பெறும் உரிமை; பிரிவு 21 – வாழ்க்கை மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்திற்குப் பாதுகாப்பு பெறும் உரிமை; பிரிவு 21 – தொடக்கக் கல்வி பெறும் உரிமை; பிரிவு 22 – சில வழக்குகளில் கைது செய்து, தடுப்புக் காவலில் வைப்பதற்கெதிரான பாதுகாப்பு உரிமை.

III. **சுரண்டலுக்கெதிரான உரிமை:** பிரிவு 23 – கட்டாய வேலை, கொத்தடிமை முறை மற்றும் மனிதத் தன்மையற்ற வியாபாரத்தைத் தடுத்தல்; பிரிவு 24 – தொழிற்சாலைகள் மற்றும் ஆபத்தான இடங்களில் குழந்தைத் தொழிலாளர் முறையைத் தடுத்தல்.

IV. **சமயசார்பு உரிமை:** பிரிவு 25 – எந்த ஒரு சமயத்தினை ஏற்கவும், பின்பற்றவும், பரப்பவும் உரிமை; பிரிவு 26 – சமய விவகாரங்களை நிர்வகிக்கும் உரிமை; பிரிவு 27 – எந்தவொரு மதத்தையும் பரப்புவதற்காக வரி செலுத்துவதற்கெதிரான சுதந்திரம்; பிரிவு 28 – மதம் சார்ந்த கல்வி நிறுவனங்களில் நடைபெறும் வழிபாடு மற்றும் அறிவுரை நிகழ்வுகளில் கலந்து கொள்ளாமலிருக்க உரிமை.

V. **கல்வி, கலாச்சார உரிமை:** பிரிவு 29 – சிறுபான்மையினரின் எழுத்து, மொழி, மற்றும் கலாச்சாரப் பாதுகாப்பு; பிரிவு 30 – சிறுபான்மையினரின் கல்வி நிறுவனங்களை நிறுவி, நிர்வகிக்கும் உரிமை.

VI. **அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை:** பிரிவு 32 – தனிப்பட்டவரின், அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படும் போது, நீதிமன்றத்தை அணுகி உரிமையைப் பெறுதல்.

1978ஆம் ஆண்டு, 44வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தப்படி, அடிப்படை உரிமைகள் பட்டியலிலிருந்து சொத்துரிமை (பிரிவு 31) நீக்கபட்டது. இது இந்திய அரசியலமைப்புச் சட்டம் பகுதி XII, பிரிவு 300 A வின் கீழ் ஒரு சட்ட உரிமையாக வைக்கப்பட்டுள்ளது.

2002ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட, 86வது அரசயிலமைப்புச் சட்டத்திருத்தத்தின்படி, இந்திய அரசியலமைப்பின் பிரிவு 45 திருத்தப்பட்டு, பிரிவு 21A வின் கீழ் தொடக்கக்கல்வி, அடிப்படை உரிமையாகச் சேர்க்கப்பட்டுள்ளது. இந்தத் திருத்தம், மாநில அரசுகள் முன்பருவ மழலையர் கல்வியை (Early Childhood Care and Education – ECCE) 6 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு வழங்க அறிவுறுத்துகிறது.

தற்போது அதிகாரப் பகிர்வு என்பது மத்திய அரசு பட்டியலில் 100 துறைகள், மாநில அரசு பட்டியலில் 61 துறைகள், மற்றும் இரண்டுக்கும் பொதுவான பொதுப்பட்டியலில் 52 துறைகள் என்றும் மாற்றப்பட்டுள்ளது. 1976ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட 42வது அரசியலமைப்பு சட்டத்திருத்தம் மாநிலப்பட்டியலில் இருந்து 5 துறைகளை, பொதுப் பட்டியலுக்கு மாற்றியது. அவை கல்வி, காடுகள், எடைகள் மற்றும் அளவுகள், பறவைகள் மற்றும் வனவிலங்குகள் பாதுகாப்பு, மற்றும் உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்ற அமைப்புகளைத் தவிர பிற நீதிமன்றங்களின் நீதி நிர்வாகம் ஆகியனவாகும்.

1969இல் மத்திய–மாநில அரசுகளின் உறவுகள் குறித்து முழுவதும் ஆராய தமிழக அரசு டாக்டர். P. V. இராஜமன்னார் தலைமையின் கீழ் மூவர் குழு ஒன்றை நியமித்தது.

2004ஆம் ஆண்டு இந்திய அரசு "செம்மொழிகள்" எனும் புதிய வகைப்பாட்டினை ஏற்படுத்த தீர்மானித்தது. அதன்படி 6 மொழிகள் செம்மொழி தகுதியை பெற்றுள்ளன. அவை தமிழ் (2004), சமஸ்கிருதம் (2005), தெலுங்கு (2008), கன்னடம் (2008), மலையாளம் (2013) மற்றும் ஒடியா (2014).

அரசியலமைப்பின் 42வது சட்டத்திருத்தம் "குறு அரசியலமைப்பு" என அறியப்படுகிறது.

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. கீழ்காணும் வரிசையில் "முகவுரை" பற்றிய சரியான தொடர் எது?

(அ) குடியரசு, ஜனநாயக, சமயச் சார்பற்ற, சமதர்ம, இறையாண்மை.

(ஆ) இறையாண்மை, சமதர்ம, சமயச்சார்பற்ற, குடியரசு, ஜனநாயக.

(இ) இறையாண்மை, குடியரசு, சமயச் சார்பற்ற, சமதர்ம, ஜனநாயக.

(ஈ) இணையாண்மை, சமதர்ம, சமயச் சார்பற்ற, ஜனநாயக, குடியரசு.

2. இந்திய அரசியலமைப்பின் முகவுரை எத்தனை முறை திருத்தப்பட்டது?

(அ) ஒரு முறை

(ஆ) இரு முறை

(இ) மூன்று முறை

(ஈ) எப்பொழுதும் இல்லை

3. ஒரு வெளிநாட்டவர், கீழ்க்காணும் எதன் மூலம் இந்திய குடியுரிமை பெறமுடியும்?

(அ) வம்சாவளி

(ஆ) பதிவு

(இ) இயல்புரிமை

(ஈ) மேற்கண்ட அனைத்தும்

4. மாறுபட்ட ஒன்றைக் கண்டுபிடி.

(அ) சமத்துவ உரிமை

(ஆ) சுரண்டலுக்கெதிரான உரிமை

(இ) சொத்துரிமை

(ஈ) கல்வி மற்றும் கலாச்சார உரிமை

5. கீழ்க்காண்பவற்றில் ஒன்று, அடிப்படை உரிமையைப் பயன்படுத்துவதற்கு உதாரணம் இல்லை.

(அ) கர்நாடகாவிலிருந்து கேரளா பண்ணைகளில் வேலையாட்கள் பணி செய்தல்

(ஆ) கிறத்துவ சமயக்குழு, தொடர்ச்சியாக, பள்ளிகளை அமைத்தல்.

(இ) ஆண், பெண் இருபாலரும் அரசுப்பணிகளுக்கு சம ஊதியம் பெறுதல்.

(ஈ) பெற்றோர்களின் பூர்வீக சொத்துகள் அவர்களது பிள்ளைகளுக்குச் செல்லுதல்

6. பின்வருவனவற்றுள் எந்த உரிமை டாக்டர். B. R. அம்பேத்கர் அவர்களால் "இந்திய அரசியலமைப்பின் இதயம் மற்றும் ஆன்மா" என விவரிக்கப்பட்டது?

(அ) சம உரிமை

(ஆ) சமத்துவ உரிமை

(இ) அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை

(ஈ) சொத்துரிமை

7. அடிப்படை உரிமைகள் எவ்வாறு நிறுத்தி வைக்கப்பட முடியும்?

(அ) உச்ச நீதி மன்றம் விரும்பினால்

(ஆ) பிரதம மந்திரியின் ஆணையினால்

(இ) தேசிய அவசர நிலையின் போது குடியரசு தலைவரின் ஆணையினால்

(ஈ) மேற்கண்ட அனைத்தும்

8. நமது அடிப்படை கடமைகளை __________ இடமிருந்து பெற்றோம்.

(அ) அமெரிக்க அரசியலமைப்பு

(ஆ) கனடா அரசியலமைப்பு

(இ) ரஷ்யா அரசியலமைப்பு

(ஈ) ஐரிஷ் அரசியலமைப்பு

9. எந்த பிரிவின் கீழ் நிதிநிலை அவசர நிலையை அறிவிக்க முடியும்?

(அ) சட்டப்பிரிவு 352

(ஆ) சட்டப்பிரிவு 356

(இ) சட்டப்பிரிவு 360

(ஈ) சட்டப்பிரிவு 368

10. எந்தக் குழுக்கள்/கமிஷன்கள் மத்திய–மாநில உறவுகள் பற்றி பரிந்துரை செய்தன?

1. சர்க்காரியா குழு 2. ராஜமன்னார் குழு 3. M. N. வெங்கடாசலையா குழு

கிழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளிலிருந்து சரியான விடையைத் தேர்ந்தெடு:

(அ) 1, 2 & 3

(ஆ) 1 & 2

(இ) 1 & 3

(ஈ) 2 & 3

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. முதன் முதலில் அரசியலமைப்பு எனும் கொள்கை ___________ ல் தோன்றியது.

2. அரசியல் நிர்ணய சபையின் தற்காலிக தலைவராக ___________ தேர்ந்தெடுக்கப்பட்டார்.

3. இந்திய அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்ட நாள் மற்றும் ஆண்டு ___________

4. ___________ பேராணைகள் சட்டப்பிரிவு 32இல் குறிப்பிடப்படுகின்றன.

5. இந்திய குடிமக்களுக்கு அடிப்படை கடமைகள் ___________ பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ளன.

**பொருத்துக:**

1. குடியரிமைச் சட்டம் – ஜவகர்லால் நேரு

2. முகவுரை – 42வது அரசியலமைப்புச் சட்டத்திருத்தம்

3. குறு அரசியலமைப்பு – 1955

4. செம்மொழி – 1962

5. தேசிய அவசரநிலை – தமிழ்

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: (விடைகள்)**

1. இறையாண்மை, சமதர்ம, சமயச் சார்பற்ற, ஜனநாயக, குடியரசு 2. ஒரு முறை

3. இயல்புரிமை 4. சொத்துரிமை

5. பெற்றோர்களின் பூர்வீக சொத்துகள் அவர்களது பிள்ளைகளுக்குச் செல்லுதல்

6. அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை

7. தேசிய அவசரநிலையின் போது குடியரசு தலைவரின் ஆணையினால் 8. ரஷ்யா அரசியலமைப்பு

9. சட்டப்பிரிவு 360 10. (1 & 2)

**கோடிட்ட இடங்களை நிரப்புக: (விடைகள்)**

1. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 2. டாக்டர் சச்சிதானந்தா சின்கா 3. (1949 நவம்பர் 26)

4. நீதிப் 5. (51A)

**பொருத்துக: (விடைகள்)**

1. குடியுரிமைச் சட்டம் – 1955

2. முகவுரை – ஜவகர்லால் நேரு

3. குறு அரசியலமைப்பு – 42வது அரசியலமைப்புச் சட்டத்திருத்தம்

4. செம்மொழி – தமிழ்

5. தேசிய அவசரநிலை – 1962

10th Social Science Lesson 19

**19] நடுவண் அரசு**

**உங்களுக்குத் தெரியுமா?**

புதுதில்லியில் உள்ள ராஷ்டிரபதி பவன் – குடியரசுத் தலைவரின் இல்லம் ஆகும். அவருடைய இல்லம் மற்றும் அலுவலகம் இரண்டும் ஒரே கட்டடத்தில் அமைந்துள்ளன. இருந்த போதிலும் அவருக்கு இருப்பிடத்துடன் கூடிய அலுவலகங்கள் மேலும் இரண்டு இடங்களில் உள்ளன. அங்கு வருடத்திற்கு ஒரு முறை சென்று தன்னுடைய அலுவலக பணிகளை அவர் மேற்கொள்கிறார். அவைகள் சிம்லாவில் உள்ள ரிட்ரீட் கட்டடம் (The Retreat Building) மற்றும் ஹைதராபாத்தில் உள்ள ராஷ்டிரபதி நிலையம் ஆகும். இவைகளில் ஒன்று வடக்கிலும் மற்றொன்று தெற்கிலும் அமைந்துள்ளது. இது நாட்டின் ஒற்றுமையையும், மக்களின் பல்வேறுபட்ட கலாச்சாரத்தின் ஒற்றுமையையும் பறைசாற்றுகின்றது.

கேரளா மற்றும் பஞ்சாப் மாநிலங்களில் அதிக பட்சமாக 9 முறை குடியரசுத் தலைவர் ஆட்சி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

**முடிவு வாக்கு (Casting vote):** மாநிலங்களவையில் சட்ட மசோதாவின் மீது நடைபெற்ற வாக்கெடுப்பு சமநிலையில் இருக்கும் பட்சத்தில் அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 100இன் படி துணைக் குடியரசுத் தலைவர் வாக்கு அளிக்கலாம். இது சட்ட மசோதாவின் ஒப்புதலுக்கு ஒரு வாக்கு மட்டுமே தேவை என்ற நிலையைக் குறிக்கிறது. அவருடைய முடிவுக்கு எதிர்ப்பு தெரிவிக்க எவருக்கும் உரிமை இல்லை.

குடியரசுத் தலைவர் மற்றும் துணைக் குடியரசுத் தலைவர் பதவிகள் ஒரே சமயத்தில் காலியாக இருக்கும் பட்சத்தில் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி குடியரசுத் தலைவரின் பணிகளைச் செயலாற்றுவார். 1969ஆம் ஆண்டு இத்தகைய ஒரு நிகழ்வின் போது உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி M. ஹிதயதுல்லா குடியரசுத் தலைவராக நியமிக்கப்பட்டார்.

**நிதி மசோதா:** நிதி மசோதாவினை திருத்தம் செய்யவோ அல்லது நிராகரிக்கவோ மாநிலங்களவைக்கு அதிகாரம் இல்லை. மக்களவையில் மட்டுமே நிதி மசோதாவினை அறிமுகப்படுத்த முடியும். இம்மசோதா மாநிலங்களவையின் ஒப்புதலுடன் சட்டமாக மாறும். மாநிலங்களவை 14 நாட்களுக்குள் ஒப்புதல் அளிக்கவில்லையெனில், ஒப்புதல் பெறாமலேயே சட்டமாகிவிடும். மாநிலங்களவையின் சட்டத் திருத்தத்திற்கான முன்மொழிவுகளை மக்களவை கருத்தில் கொள்ள வேண்டியதில்லை. எந்த முன்மொழிவுகளையும் மக்களவை நிராகரிக்கலாம்.

**தமிழகத்திலிருந்து நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள்:** மாநிலங்களவை – 18 உறுப்பினர்கள்; மக்களவை – 39 உறுப்பினர்கள்.

**நாடாளுமன்றக் கூட்டத் தொடர்:** பட்ஜெட் கூட்டத்தொடர் – பிப்ரவரி முதல் மே வரை; மழைக் (பருவ) காலக் கூட்டத்தொடர் – ஜீலை முதல் செப்டம்பர் வரை; குளிர் காலக் கூட்டத் தொடர் – நவம்பர் மற்றும் டிசம்பர்.

புதுதில்லியில் அமைந்துள்ள இந்திய உச்ச நீதிமன்றம் 1950 ஜனவரி 28ஆம் நாள் துவங்கப்பட்டது. இது 1935ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட கூட்டாட்சி நீதிமன்றத்தைத் தொடர்ந்து உருவாக்கப்பட்டது.

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. நடுவண் அரசின் அரசியலமைப்புத் தலைவர் ____________ ஆவார்.

(அ) குடியரசுத் தலைவர்

(ஆ) தலைமை நீதிபதி

(இ) பிரதம அமைச்சர்

(ஈ) அமைச்சர்கள் குழு

2. ஒரு மசோதாவை நிதி மசோதாவா அல்லது இதர மசோதாவா என தீர்மானிக்கும் அதிகாரம் பெற்றவர்.

(அ) குடியரசுத் தலைவர்

(ஆ) இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர்

(இ) நாடாளுமன்ற விவகார அமைச்சர்

(ஈ) லோக் சபாவின் சபாநாயகர்

3. அமைச்சர்கள் குழு ஒட்டுமொத்தமாக இதற்குப் பொறுப்புடையவர்களாவர்.

(அ) குடியரசுத் தலைவர்

(ஆ) மக்களவை

(இ) பிரதம அமைச்சர்

(ஈ) மாநிலங்களவை

4. லோக்சபா தேர்தலில் போட்டியிட தேவையான குறைந்த பட்ச வயது ____________

(அ) 18 வயது

(ஆ) 21 வயது

(இ) 25 வயது

(ஈ) 30 வயது

5. இந்திய மாநிலங்களின் எல்லைகளை மாற்றியமைக்கும் அதிகாரம் பெற்றவர்/பெற்ற அமைப்பு.

(அ) குடியரசுத் தலைவர்

(ஆ) பிரதம அமைச்சர்

(இ) மாநில அரசாங்கம்

(ஈ) நாடாளுமன்றம்

6. கீழ்க்காணும் எந்த விதியின் அடிப்படையில் குடியரசுத் தலைவர் நிதி நெருக்கடி நிலையினை அறிவிக்கிறார்?

(அ) சட்டப்பிரிவு 352

(ஆ) சட்டப்பிரிவு 360

(இ) சட்டப்பிரிவு 356

(ஈ) சட்டப்பிரிவு 365

7. உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் மற்ற நீதிபதிகளை நியமிப்பவர்.

(அ) குடியரசுத் தலைவர்

(ஆ) இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர்

(இ) ஆளுநர்

(ஈ) பிரதம அமைச்சர்

<u>**கோடிட்ட இடங்களை நிரப்புக:**</u>

1. ___________ மசோதா குடியரசுத் தலைவரின் ஒப்புதல் இன்றி நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்த முடியாது.

2. ____________ நாட்டின் உண்மையான தலைவராகவும், நாட்டின் முக்கியச் செய்தி தொடர்பாளராகவும் செயல்படுகிறார்.

3. ____________ அலுவல் வழியில் மாநிலங்களவையின் தலைவர் ஆவார்.

4. நாடாளுமன்ற இரு அவைகளிலும் உரையாற்றவும், கூட்டத்தொடரில் பங்கு கொள்ளவும் உரிமை பெற்றவர் ______________

5. உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் மற்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயது ___________

6. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பாதுகாவலன் ___________ ஆகும்.

7. தற்சமயம், உச்ச நீதிமன்றத்தில் தலைமை நீதிபதி உட்பட நீதிபதிகளின் எண்ணிக்கை -------------

<u>**பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**</u>

1. i) மாநிலங்களவையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 250.

ii) இலக்கியம், அறிவியல், கலை, சமூக சேவை ஆகிய துறைகளில் சிறந்த அறிவு மற்றும் அனுபவம் பெற்ற 12 நபர்களை மாநிலங்களவைக்கு குடியரசுத் தலைவர் நியமிக்கிறார்.

iii) மாநிலங்களவை உறுப்பினராவதற்கு 30 வயதுக்குக் குறைவாக இருத்தல் கூடாது.

iv) மாநிலங்களவை உறுப்பினர்கள் நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

(அ) ii & iv சரியானவை

(ஆ) iii & iv சரியானவை

(இ) i & iv சரியானவை

(ஈ) i, ii & iii சரியானவை

2. i) உச்ச நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் மற்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயது 62.

ii) நடுவண் அரசின் மூன்றாவது அங்கம் நீதிதுறை ஆகும்.

iii) அடிப்படை உரிமைகள் தொடர்பான வழக்குகள் உச்ச நீதிமன்றத்தின் மேல்முறையீட்டு அதிகாரங்களுக்கு உட்பட்டது.

iv) உச்ச நீதிமன்றம் பிறப்பிக்கும் ஆணை இந்தியாவின் அனைத்துப் பகுதியிலுள்ள நீதிமன்றங்களையும் கட்டுப்படுத்தும்.

(அ) ii & iv சரியானவை

(ஆ) iii & iv சரியானவை

(இ) i & iv சரியானவை

(ஈ) i & ii சரியானவை

**பொருத்துக:**

1. சட்டப்பிரிவு 53 – மாநில நெருக்கடி நிலை

2. சட்டப்பிரிவு 63 – உள்நாட்டு நெருக்கடி நிலை

3. சட்டப்பிரிவு 356 – குடியரசுத் தலைவரின் நிர்வாக அதிகாரங்கள்

4. சட்டப்பிரிவு 76 – துணைக் குடியரசுத் தலைவரின் அலுவலகம்

5. சட்டப்பிரிவு 352 – இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர் அலுவலகம்

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: (விடைகள்)**

1. குடியரசுத் தலைவர் 2. லோக்சபாவின் சபாநாயகர் 3. மக்களவை 4. (25 வயது)

5. நாடாளுமன்றம் 6. சட்டப்பிரிவு 360 7. குடியரசுத் தலைவர்

**கோடிட்ட இடங்களை நிரப்புக: (விடைகள்)**

1. நிதி 2. பிரதம அமைச்சர் 3. துணைக் குடியரசுத் தலைவர்

4. இந்திய அட்டர்னி ஜெனரல் 5. (65) 6. உச்சநீதிமன்றம் 7. (28)

**பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றைத் தேர்வு செய்க:**

1. i, ii & iii சரியானவை

2. ii & iv சரியானவை

**பொருத்துக: (விடைகள்)**

1. சட்டப்பிரிவு 53 – குடியரசுத் தலைவரின் நிர்வாக அதிகாரங்கள்

2. சட்டப்பிரிவு 54 – துணைக் குடியரசுத் தலைவரின் அலுவலகம்

3. சட்டப்பிரிவு 356 – மாநில நெருக்கடிநிலை

4. சட்டப்பிரிவு 76 – இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர் அலுவலகம்

5. சட்டப்பிரிவு 352 – உள்நாட்டு நெருக்கடி நிலை

10th Social Science Lesson 20

20] மாநில அரசு

**உங்களுக்குத் தெரியுமா?**

தமிழகத்தில் சட்ட மன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையின் படி (234 உறுப்பினர்கள்) அமைச்சர்களின் எண்ணிக்கை 36 வரை இருக்கலாம். அதாவது 234இல் 15 விழுக்காடு.

1986இல் இயற்றப்பட்ட தமிழ்நாடு சட்ட மேலவை (நீக்கம்) மசோதா மூலம் தமிழ்நாட்டில் சட்ட மேலவை நீக்கப்பட்டது. இச்சட்டம் 1986 நவம்பர் முதல் நாளன்று நடைமுறைக்கு வந்தது.

1862ஆம் ஆண்டு ஜீன் 26ஆம் நாளில் விக்டோரியா மகாராணி வழங்கிய காப்புரிமை கடிதத்தின் மூலம் சென்னை, மும்பை, கொல்கத்தா ஆகிய மாகாணங்களில் உயர் நீதிமன்றங்கள் தோற்றுவிக்கப்பட்டன. இவற்றில் மெட்ராஸ் உயர் நீதிமன்ற வளாகம் உலகிலேயே இலண்டனுக்கு அடுத்து இரண்டாவது பெரிய நீதித்துறை வளாகமாகும்.

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. மாநில ஆளுநரை நியமிப்பவர்

(அ) பிரதமர்

(ஆ) முதலமைச்சர்

(இ) குடியரசுத் தலைவர்

(ஈ) தலைமை நீதிபதி

2. மாநில சபாநாயகர் ஒரு ____________

(அ) மாநிலத் தலைவர்

(ஆ) அரசின் தலைவர்

(இ) குடியரசுத் தலைவரின் முகவர்

(ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

3. கீழ்க்காணும் எந்த ஒன்று ஆளுநரின் அதிகாரமல்ல

(அ) சட்டமன்றம்

(ஆ) நிர்வாகம்

(இ) நீதித்துறை

(ஈ) தூதரகம்

4. ஆங்கிலோ–இந்தியன் வகுப்பினரிலிருந்து ஒரு பிரதிநிதியை சட்டமன்றத்திற்கு யார் நியமிக்கிறார்?

(அ) குடியரசுத் தலைவர்

(ஆ) ஆளுநர்

(இ) முதலமைச்சர்

(ஈ) சட்டமன்ற சபாநாயகர்

5. ஆளுநர் யாரை நியமனம் செய்வதில்லை?

(அ) முதலமைச்சர்

(ஆ) அரசுப் பணியாளர் தேர்வாணயத்தின் தலைவர்

(இ) மாநில தலைமை வழக்குரைஞர்

(ஈ) உயர் நீதிமன்ற நீதிபதிகள்

6. அமைச்சரவையின் தலைவர்

(அ) முதலமைச்சர்

(ஆ) ஆளுநர்

(இ) சபாநாயகர்

(ஈ) பிரதம அமைச்சர்

7. மேலவை உறுப்பினராவதற்கு குறைந்த பட்ச வயது

(அ) 25 வயது

(ஆ) 21 வயது

(இ) 30 வயது

(ஈ) 35 வயது

8. கீழ்க்காணும் மாநிலங்களில் எந்த ஒன்று ஈரவை சட்டமன்றத்தைப் பெற்றிருக்கவில்லை?

(அ) ஆந்திரப் பிரதேசம்

(ஆ) தெலுங்கானா

(இ) தமிழ்நாடு

(ஈ) உத்தரப் பிரதேசம்

9. இந்தியாவில் முதன்முதலில் உயர் நீதிமன்றங்கள் தொடங்கப்பட்ட இடங்கள்

winmeen.com

(அ) கொல்கத்தா, மும்பை, சென்னை

(ஆ) டெல்லி மற்றும் கொல்கத்தா

(இ) டெல்லி, கொல்கத்தா, சென்னை

(ஈ) கொல்கத்தா, சென்னை, டெல்லி

10. கீழ்க்காணும் எந்த மாநிலங்கள் பொதுவான உயர் நீதிமன்றத்தைப் பெற்றுள்ளன?

(அ) தமிழ்நாடு மற்றும் ஆந்திரப்பிரதேசம்

(ஆ) கேரளா மற்றும் ஆந்திரப்பிரதேசம்

(இ) பஞ்சாப் மற்றும் ஹரியானா

(ஈ) மகாராஷ்டிரா மற்றும் குஜராத்

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. ஆளுநர் தனது இராஜினாமா கடிதத்தை _______________ இடம் கொடுக்கிறார்.

2. சட்டமன்ற உறுப்பினர்கள் (MLAs) ____________ ஆல் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

3. ______________ மாநிலங்களில் உள்ள பல்கலைக்கழகங்களின் வேந்தராக யெசல்படுகிறார்

4. அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் ______________ஆல் மட்டுமே பணிநீக்கம் செய்ய முடியும்.

**பொருத்துக:**

1. ஆளுநர் – அரசாங்கத்தின் தலைவர்

2. முதலமைச்சர் – மாநில அரசின் தலைவர்

3. அமைச்சரவை – தீர்ப்பாயங்கள்

4. மேலவை உறுப்பினர் – சட்டமன்றத்திற்குப் பொறுப்பானவர்கள்

5. ஆயுதப் படையினர் – மானியங்களுக்கு வாக்களிக்க முடியாது

**பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. கூற்று: மாநில சட்டமன்றத்திற்கு சட்ட அதிகார வரம்பு உண்டு.

காரணம்: குடியரசுத் தலைவரின் ஒப்புதலுடன் மட்டுமே மாநிலப் பட்டியலிலுள்ள சில மசோதாக்களைச் சட்டமன்றத்தில் அறிமுகம் செய்யலாம்.

(அ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி

(ஆ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு

(இ) கூற்று மற்றும் காரணம் சரி மேலும் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்

(ஈ) கூற்று மற்றும் காரணம் சரி மேலும் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: (விடைகள்)**

1. குடியரசுத் தலைவர் 2. மேற்கண்ட எதுவுமில்லை 3. தூதரகம் 4. ஆளுநர்

5. உயர்நீதிமன்ற நீதிபதிகள் 6. முதலமைச்சர் 7. (30 வது) 8. தமிழ்நாடு

9. கல்கத்தா, பம்பாய், சென்னை 10. பஞ்சாப் மற்றும் ஹரியானா

**கோடிட்ட இடங்களை நிரப்புக: (விடைகள்)**

1. குடியரசுத் தலைவர் 2. மக்கள் 3. ஆளுநர் 4. குடியரசுத் தலைவர்

**பொருத்துக: (விடைகள்)**

1. ஆளுநர் – மாநில அரசின் தலைவர்

2. முதலமைச்சர் – அரசாங்கத்தின் தலைவர்

3. அமைச்சரவை – சட்டமன்றத்திற்குப் பொறுப்பானவர்கள்

4. மேலவை உறுப்பினர் – மானியங்களுக்கு வாக்களிக்க முடியாது

5. ஆயுதப் படையினர் – தீர்ப்பாயங்கள்

**பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றைத் தேர்வு செய்க:**

1. கூற்று சரி ஆனால் காரணம் தவறு

10th Social Science Lesson 21

**21] இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை**

**உங்களுக்குத் தெரியுமா?**

**இந்திய அரசியலமைப்புச் சட்டம் 1950 சட்டப்பிரிவு 51:**

**அரசு நெறிமுறையுறுத்தும் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைகள்: அரசு முயற்சி செய்ய வேண்டியவைகள்:** சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துதல். நாடுகளிடையே நியாயமான மற்றும் கௌரவமான உறவுகளைப் பேணுதல். சர்வதேச சட்டம் மற்றும் சர்வதேச அமைப்புகளை மதித்தல். சர்வதேசப் பிரச்சனைகளை நடுவர் மன்றம் மூலம் தீர்க்க ஊக்குவித்தல்.

வெளியுறவு அமைச்சகம் எனப்படும் இந்திய வெளிவிவகார அமைச்சரவை இந்திய அரசின் ஒரு அங்கமாக இருந்து நாட்டின் ளெவியுறவுகளைப் பொறுப்பேற்று நடத்துகிறது. 1986ஆம் ஆண்டு புது டெல்லியில் நிறுவப்பட்ட இந்திய வெளிநாட்டுச் சேவை பயிற்சி நிறுவனம் இந்திய வெளியுறவுச் சேவை அதிகாரிகளுக்கு (IFS) பயிற்சி அளிக்கிறது.

வெளியுறவுக் கொள்கை என்பது மற்ற நாடுகளுடன் உறவைப் பேணுவதற்காக ஒரு நாட்டால் கவனமாக வடிவமைக்கப்பட்ட உத்திகளின் கலவையாகும். இராஜதந்திரம் என்பது ஓர் அரசின் வெளியுறவுக் கொள்கையைச் சூழலுக்குத் தகுந்தாற்போல் செயல்படுத்துவதற்கான கருவி ஆகும்.

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. இந்தியாவின் அயலுறவுக் கொள்கையை வடிவமைப்பதில் எந்த அமைச்சர் முக்கிய பங்கு வகிக்கிறார்?

(அ) பாதுகாப்பு அமைச்சர்

(ஆ) பிரதம அமைச்சர்

(இ) வெளிவிவகாரங்கள் அமைச்சர்

(ஈ) உள்துறை அமைச்சர்

2. எந்த இரு நாடுகளுக்கிடையே பஞ்சசீல ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது?

(அ) இந்திய மற்றும் நேபாளம்

(ஆ) இந்தியா மற்றும் பாகிஸ்தான்

(இ) இந்தியா மற்றும் சீனா

(ஈ) இந்தியா மற்றும் ஸ்ரீலங்கா

3. இந்திய வெளியுறவுக் கொள்கையை ஏற்றுக்கொண்டு வழிநடத்தும் இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு எது?

(அ) சட்டப்பிரிவு 50

(ஆ) சட்டப்பரிவு 51

(இ) சட்டப்பிரிவு 52

(ஈ) சட்டப்பிரிவு 53

4. இன ஒதுக்கல் கொள்கை என்பது

(அ) ஒரு சர்வதேச சங்கம்

(ஆ) இராஜதந்திரம்

(இ) ஒரு இனப் பாகுபாட்டுக் கொள்கை

(ஈ) மேற்கூறியவைகளில் எதுவுமில்லை

5. 1954இல் இந்தியா மற்றும் சீனாவால் கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தம் இது தொடர்பானது.

(அ) வியாபாரம் மற்றும் வணிகம்

(ஆ) சாதாரண உறவுகளை மீட்டெடுப்பது

(இ) கலாச்சார பரிமாற்றங்கள்

(ஈ) ஐந்து கொள்கைகளுடன் இணைந்திருத்தல்

6. நமது வெளியுறவுக் கொள்கையுடன் தொடர்பு இல்லாதது எது?

(அ) உலக ஒத்துழைப்பு

(ஆ) உலக அமைதி

(இ) இனச் சமத்துவம்

(ஈ) காலனித்துவம்

7. கீழ்க்கண்டவைகளில் அணிசேரா இயக்கத்தில் நிறுவன உறுப்பினர் அல்லாத நாடு எது?

(அ) யுகோஸ்லாவியா

(ஆ) இந்தோனேசியா

(இ) எகிப்து

(ஈ) பாகிஸ்தான்

8. பொருந்தாத ஒன்றினைக் கண்டுபிடி

(அ) சமூக நலம்

(ஆ) சுகாதாரம்

(இ) ராஜதந்திரம்

(ஈ) உள்நாட்டு விவகாரங்கள்

9. அணிசேராமை என்பதன் பொருள்

(அ) நடுநிலைமை வகிப்பது

(ஆ) தன்னிச்சையாகப் பிரச்சனைகளுக்கு முடிவு எடுக்கும் சுதந்திரம்

(இ) இராணுவமயமின்மை

(ஈ) மேற்கூறியவற்றில் எதுவும் இல்லை

10. இராணுவம் சாராத பிரச்சனைகள் என்பது

(அ) ஆற்றல் பாதுகாப்பு

(ஆ) நீர் பாதுகாப்பு

(இ) தொற்றுநோய்கள்

(ஈ) இவை அனைத்தும்

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. இந்தியா தனது முதல் அணு சோதனையை நடத்திய இடம் ____________

2. தற்போது நமது வெளியுறவுக் கொள்கையானது உள்நாட்டு வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான __________ உருவாக்குவதற்கான வழிமுறையாகச் செயல்படுகிறது.

3. ____________ என்பது ஓர் அரசின் வெளியுறவுக் கொள்கையை செயல்படுத்துவதற்கான கருவி ஆகும்.

4. இரு வல்லரசுகளின் பனிப்போரினை எதிர்கொள்ள இந்தியா பின்பற்றிய கொள்கை ____________

5. நமது மரபு மற்றும் தேசிய நெறிமுறைகள் _____________ நடைமுறைப்படுத்துவதாகும்.

**பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. பின்வருவனவற்றைக் காலவரிசைப்படுத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளிலிருந்து சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:

winmeen.com

(i) பஞ்சசீலம்

(ii) சீனாவின் அணுவெடிப்புச் சோதனை

(iii) 20 ஆண்டுகள் ஒப்பந்தம்

(iv) இந்தியாவின் முதல் அணுவெடிப்புச் சோதனை

(அ) i, iii, iv, ii

(ஆ) i, ii, iii, iv

(இ) i, ii, iv, iii

(ஈ) i, iii, ii, iv

2. பின்வருவனவற்றில் அணிசேரா இயக்கத்துடன் தொடர்பு இல்லாதது எது?

(i) அணிசேரா இயக்கம் என்ற சொல் வி. கிருஷ்ணமேனன் என்பவரால் உருவாக்கப்பட்டது.

(ii) இதன் நோக்கம் இராணுவக் கூட்டமைப்பில் சேர்ந்து வெளி விவகாரங்களில் தேசிய சுதந்திரத்தைப் பராமரித்தல் ஆகும்.

(iii) தற்போது இது 120 உறுப்பு நாடுகளைக் கொண்டுள்ளது.

(iv) இது பொருளாதார இயக்கமாக மாற்றமடைந்துள்ளது.

(அ) i மற்றும் ii

(ஆ) iii மற்றும் iv

(ஆ) ii மட்டும்

(இ) iv மட்டும்

3. கீழ்க்காணும் ஒவ்வொரு கூற்றுக்கும் எதிராக சரியா/தவறா என எழுதுக

(அ) பனிப்போரின் போது சர்வதேச விவகாரங்களில் இந்தியா மூன்றாவது அணியை உருவாக்க முயற்சித்தது.

(ஆ) இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையை நிறைவேற்றும் பொறுப்பு இந்திய உள்துறை அமைச்சகத்தைச் சார்ந்தது.

(இ) இந்தியாவின் அணுசக்தி சோதனை பூமிக்கடியிலான அணு சோதனை திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டது.

4. கூற்று: 1971இல் இந்தோ–சோவியத் ஒப்பந்தத்தின் மூலம் இந்தியா சோவியத் யூனியனுடன் இணைந்தது.

காரணம்: இது 1962இன் பேரழிவுகரமான சீனப் போருக்குப் பின் தொடங்கியது.

(அ) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்

(ஆ) கூற்று சரி ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல

(இ) கூற்று சரி காரணம் தவறு

(ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு

5. கூற்று: இந்தியா உலகின் பெரும்பான்மையான நாடுகளுடன் தூதரக உறுவுகளைக் கொண்டுள்ளது.

காரணம்: உலகின் இரண்டாவது அதிக அளவிலான மக்கள் தொகையைக் கொண்ட நாடு இந்தியா ஆகும்.

(அ) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்

(ஆ) கூற்று சரி ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல

(இ) கூற்று தவறு காரணம் சரி

(ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு

6. இந்தியா சுதந்திரத்திற்குப் பின்னர் இராணுவ முகாம்களில் இணைவதைத் தவிர்ப்பது அவசியமாக இருந்தது. ஏனெனில், இந்தியா இதனை/இவைகளை மீட்க வேண்டி இருந்தது.

(அ) கடுமையான வறுமை

(ஆ) எழுத்தறிவின்மை

(இ) குழப்பமான சமூக பொருளாதார நிலைமைகள்

(ஈ) மேற்கூறிய அனைத்தும்

**<u>பொருத்துக:</u>**

1. இந்தியப் பெருங்கடலில் அமைந்துள்ளது – 1955

2. தென் கிழக்காசிய நாடுகள் கூட்டமைப்பின் பாலம் – 1954

3. பஞ்சசீலம் – மாலத்தீவு

4. ஆப்பிரிக்க–ஆசிய மாநாடு – வெளியுறவுக் கொள்கை

5. உலக அமைதி – மியான்மர்

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: (விடைகள்)**

1. வெளி விவகாரங்கள் அமைச்சர் 2. இந்தியா மற்றும் சீனா 3. சட்டப்பிரிவு 51

4. ஒரு இனப் பாகுபாட்டுக்கொள்கை 5. ஐந்து கொள்கைகளுடன் இணைந்திருத்தல்

6. காலனித்துவம் 7. பாகிஸ்தான் 8. ராஜதந்திரம்

9. தன்னிச்சையாகப் பிரச்சனைகளுக்கு முடிவு எடுக்கும் சுதந்திரம் 10. இவை அனைத்தும்

**கோடிட்ட இடங்களை நிரப்புக: (விடைகள்)**

1. பொக்ரான் 2. உள் முதலீட்டை அதிகரித்தல், வணிகம், தொழில்நுட்பம்

3. இராஜதந்திரம் 4. அணிசேராக்கொள்கை 5. படை வலிமை குறைப்பு

**பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றைத் தேர்வு செய்க:**

1. i, iii, iv, ii

2. ii மட்டும்

3. அ) சரி ஆ) தவறு இ) சரி

4. கூற்று சரி காரணம் தவறு

5. கூற்று சரி ஆனால் காரணம் கூற்றுக்கான விளக்கமல்ல.

6. மேற்கூறிய அனைத்தும்

**பொருத்துக: (விடைகள்)**

1. இந்தியப் பெருங்கடல் அமைந்துள்ளது – மாலத்தீவுகள்

2. தென் கிழக்காசிய நாடுகள் கூட்டமைப்பின் பாலம் – மியான்மர்

3. பஞ்சசீலம் – 1954

4. ஆப்பிரிக்க – ஆசிய மாநாடு – 1955

5. உலக அமைதி – வெளியுறவுக் கொள்கை

10th Social Science Lesson 22

**22] இந்தியாவின் சர்வதேச உறவுகள்**

**உங்களுக்குத் தெரியுமா?**

சீனாவும் ரஷ்யாவும் அதிக எண்ணிக்கையிலான அண்டை நாடுகளுடன் தனது எல்லையைப் பகிர்ந்து கொள்கினறன.

சிந்துவெளி நாகரிக காலம் முதல் இந்தியாவும் ஆப்கானிஸ்தானும் பன்முகத்தன்மையையும் மிக ஆழமான நட்புறவையும் கொண்டிருந்தன. கனிஷ்கருடைய ஆட்சியின் போது ஏராளமான இந்திய சமய பரப்புக் குழுக்கள் சீனா, மத்திய ஆசியா மற்றும் ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளுக்குத் தங்கள் மதத்தைப் பரப்பச் சென்றனர். பலுசிஸ்தான் (தற்காலத்திய பாகிஸ்தானின் எல்லைப்புற மாகாணம்) பகுதியைச் சார்ந்த கான் அப்துல் கபார்கான் இந்திய விடுதலைப் போராட்ட இயக்கத்தின் முக்கியத் தலைவரும் இந்திய தேசிய காங்கிரசின் தீவிர ஆதரவாளரும் ஆவார்.

குரு பத்மசம்பவா எனும் புத்த துறவி இந்தியாவிலிருந்து பூடானுக்குச் சென்றார். அங்கு தனது செல்வாக்கை ஏற்படுத்தி புத்த சமயத்தைப் பரப்பியதன் மூலம் இரு நாட்டு மக்களிடையே பாரம்பரியத்தை உறுதிப்படுத்தினார்.

இந்தியாவிற்குச் சொந்தமான டீன்பிகா (Teen Bigha) என்ற பகுதி மேற்கு வங்காளம் மற்றும் வங்காளதேசத்திற்கு இடையேயான எல்லையில் உள்ளது. குறுகலான இப்பாதை 2011ஆம் ஆண்டு வங்காள தேசத்திற்குச் குத்தகைக்கு விடப்பட்டது.

மக்மகான் எல்லைக்கோடு – இந்தியா, சீனா மற்றும் பூடானின் கிழக்குப் பகுதி ஆகிய பகுதிகளுக்கு இடையேயான எல்லைக்கோடு ஆகும். இது 1914ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் இந்தியா, திபெத் மற்றும் சீனா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. பிரிட்டிஷ் இந்தியாவின் சார்பில் இந்தியாவிற்கான செயலாளர் ஆர்தர் ஹென்றி மக்மகான் இக்கூட்டத்தில் கலந்து கொண்டார்.

**கட்டுப்பாடுக் கோடு:** 1949ஆம் ஆண்டு தீர்மானிக்கப்பட்ட போர் நிறுத்தக் கோடு 1972ஆம் ஆண்டிற்குப் பின்னர் எல்லைக் கட்டுப்பாடுக் கோடு என அழைக்கப்பட்டது. இது 1972ஆம் ஆண்டின் சிம்லா ஒப்பந்தத்தின் கீழ் இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையே ஏற்றுக்கொள்ளப்பட்ட எல்லையாகும். இக்கோடு பிரிவினை செய்யப்பட்ட போது ராட்க்ளிஃப் கோடு (RadCliffe Line) என்று அழைக்கப்பட்டது (ராட்க்ளிஃப் என்பவர் எல்லை ஆணையத்தின் தலைவராக இருந்தார்). இக்கோடு தற்போது கட்டுப்பாடுக் கோடு என அழைக்கப்படுகிறது.

அசோகர் புத்த மதத்தைப் பரப்புவதற்காக அவரது மகன் மகிந்தாவையும் மகள் சங்கமித்திரையையும் இலங்கைக்கு அனுப்பினார். சோழ அரசர்களான முதலாம் இராஜராஜன் மற்றும் முதலாம் இராஜேந்திரன் ஆகியோர் இலங்கையின் வடபகுதியைக் கைப்பற்றினர்.

உலகின் மிகப் பழமையான கடல் வர்த்தக பாதைகளில் ஒன்று சுமேரியாவில் இருந்து பஹ்ரைன் வழியாக மெலுக்கா என்று அழைக்கப்பட்ட சிந்துவெளி நாகரிகம் வரை அமைக்கப்பட்டிருந்தது.

பிரிக்ஸ் (BRICS) என்ற சொல் ஜிம் ஓ' நீல் (Jim O'Neill) என்ற பிரபலமான பிரிட்டிஷ் பொருளாதார நிபுணரால் உருவாக்கப்பட்டது. பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா ஆகிய நாடுகள் 2050ஆம் ஆண்டு வாக்கில் ஆறு தொழில் மயமாக்கப்பட்ட நாடுகளைவிட டாலர் மதிப்பில் பெரிய நாடுகளாக உருவாகும் என்றும் கடந்த 300 ஆண்டுகளின் அதிகாரப் போக்கு முற்றிலும் மாறுபடும் என்றும் அவர் கணித்தார்.

**OPEC இலச்சினை:** இது 1969ஆம் ஆண்டில் நடைபெற்ற ஒரு சர்வதேச வடிவமைப்புப் போட்டியின் மூலம் இச்சின்னமானது தேர்ந்தெடுக்கப்பட்டது. ஆஸ்திரிய வடிவமைப்பாளர் ஸ்வோபோடா இதை வடிவமைத்து போட்டியில் வென்றார். இது இந்த அமைப்பினுடைய பெயரின் வெவ்வேறு எழுத்துக்களை (OPEC) ஒரு வட்டமான வடிவமைப்பில் காணலாம்.

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. மக்மகான் எல்லைக்கோடு எந்த இரு நாடுகளுக்கும் இடையே உள்ள எல்லை ஆகும்?

(அ) பர்மா–இந்தியா

(ஆ) இந்தியா–நேபாளம்

(இ) இந்தியா–சீனா

(ஈ) இந்தியா–பூடான்

2. இந்தியா பின்வருவனவற்றுள் எந்த அமைப்பில் உறுப்பினராக இல்லை?

(1) ஜி 20

(2) ஏசியான் (ASEAN)

(3) சார்க் (SAARC)

(4) பிரிக்ஸ் (BRICS)

(அ) 2 மட்டும்

(ஆ) 2 மற்றும் 4

(இ) 2, 4 மற்றும் 1

(ஈ) 1, 2 மற்றும் 3

3. ஒபெக் (OPEC) என்பது

(அ) சர்வதேச காப்பீட்டு நிறுவனம்

(ஆ) ஒரு சர்வதேச விளையாட்டுக் கழகம்

(இ) எண்ணெய் ஏற்றுமதி நிறுவனங்களின் அமைப்பு

(ஈ) ஒரு சர்வதேச நிறுவனம்

4. இந்தியா தனது மிக நீண்ட நில எல்லையை எந்த நாட்டோடு பகிர்ந்து கொள்கிறது?

(அ) வங்காளதேசம்

(ஆ) மியான்மர்

(இ) ஆப்கானிஸ்தான்

(ஈ) சீனா

5. பின்வருவனவற்றைப் பொருத்தி கீழே கொடுக்கப்பட்ட குறியீடுகளிலிருந்து சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:

(i) சல்மா அணை – 1. வங்காளதேசம்

(ii) பராக்கா ஒப்பந்தம் – 2. நேபாளம்

(iii) சுக்கா நீர்மின்சக்தி திட்டம் – 3. ஆப்கானிஸ்தான்

(iv) சாரதா கூட்டு மின்சக்தித் திட்டம் – 4. பூடான்

(அ) 3 1 4 2

(ஆ) 3 1 2 4

(இ) 3 4 1 2

(ஈ) 4 3 2 1

6. எத்தனை நாடுகள் இந்தியாவுடன் தன் எல்லையைப் பகிர்ந்து கொள்கின்றன?

(அ) 5

(ஆ) 6

(இ) 7

(ஈ) 8

7. எந்த இரண்டு தீவுநாடுகள் இந்தியாவின் அண்டை நாடுகள் ஆகும்?

(அ) இலங்கை மற்றும் அந்தமான் தீவுகள்

(ஆ) மாலத்தீவு மற்றும் லட்சத் தீவுகள்

(இ) மாலத்தீவு மற்றும் நிக்கோபார் தீவு

(ஈ) இலங்கை மற்றும் மாலத்தீவு

8. எந்த இந்திய மாநிலம் மூன்று நாடுகளால் சூழப்பட்டுள்ளது?

(அ) அருணாச்சலப்பிரதேசம்

(ஆ) மேகாலயா

(இ) மிசோரம்

(ஈ) சிக்கிம்

9. எத்தனை மாநிலங்கள் நேபாளத்துடன் தங்கள் எல்லையைப் பகிர்ந்து கொள்கின்றன?

(அ) 5

(ஆ) 4

(இ) 3

(ஈ) 2

10. சுதந்திரமடைந்த பாகிஸ்தானுக்கான எல்லைகளை வகுத்தவர்

(அ) மவுண்ட்பேட்டன் பிரபு

(ஆ) சர் சிரில் ராட்க்ளிஃப்

(இ) கிளமன்ட் அட்லி

(ஈ) மேற்கூறிய ஒருவருமில்லை

**<u>கோடிட்ட இடங்களை நிரப்புக:</u>**

1. இமயமலையில் உள்ள ஒரு சிறிய முடியாட்சி நாடு ___________ ஆகும்

2. இந்தியா, தென்கிழக்காசியாவிற்குள் செல்வதற்கான ஒரு நுழைவு வாயிலாக ___________ இருக்கிறது.

3. இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையிலான இடைப்படு நாடு _____________ ஆகும்.

4. இந்தியாவிற்குச் சொந்தமான ___________ என்ற பகுதி மேற்கு வங்காளம் – வங்காளதேச எல்லையில் அமைந்துள்ளது

5. இடிமின்னல் நிலம் என்று அறியப்படும் நாடு ___________ ஆகும்.

6. இந்தியாவும் இலங்கையும் ____________ ஆல் பிரிக்கப்படுகின்றன.

**<u>பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:</u>**

1. இந்தியா மற்றும் மியான்மரின் கலடன் போக்குவரத்துத் திட்டம் பின் வரும் போக்குவரத்து முறைகளில் எந்த முறையில் அமைக்கப்பட்டுள்ளது?

1. சாலை

2. ரயில்வழி

3. கப்பல்

4. உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து

கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைப் பயன்படுத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:

(அ) 1, 2 மற்றும் 3

(ஆ) 1, 3 மற்றும் 4

(இ) 2, 3 மற்றும் 4

(ஈ) 1, 2, 3 மற்றும் 4

2. கூற்று: இந்தியாவும் பிரான்சும் சர்வதேச சூரிய சக்திக் கூட்டணியைத் (International Solar Alliance) தொடங்கியுள்ளன.

காரணம்: இது கடகரேகை மற்றும் மகரரேகை ஆகியவற்றுக்கு இடையேயான நாடுகளைச் சூரிய ஆற்றலுக்கான ஒத்துழைப்பில் ஒன்றிணைப்பதற்காகும்.

(அ) கூற்று சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமாகும்

(ஆ) கூற்று சரி, காரணம் கூற்றிற்கான சரியான விள்கமல்ல

(இ) கூற்று தவறு; காரணம் சரி

(ஈ) கூற்று, காரணம் இரண்டும் தவறு

3. பின்வரும் கூற்றுகளில் எது/எவை உண்மையானவை?

(1) இந்திய பண்பாட்டு உறுவுகளுக்கான குழு, டக்கா பல்கலைக்கழகத்தில் "தாகூர் இருக்கை" ஏற்படுத்த வழிவகை செய்துள்ளது.

(2) மேற்கத்திய நாடுகளுக்கான இந்தியாவின் நுழைவு வாயில் மியான்மர் ஆகும்.

(3) நேபாளம், பூடான் ஆகியவை நிலப்பகுதிகளால் சூழப்பட்ட நாடுகளாகும்.

(4) இந்தியாவின் நாளந்தா பல்கலைக்கழகத் திட்டத்தின் ஒரு பங்குதாரர் நாடு இலங்கையாகும்.

(அ) 1, 2 மற்றும் 3

(ஆ) 2, 3 மற்றும் 4

(இ) 1, 3 மற்றும் 4

(ஈ) 1, 2 மற்றும் 4

4. கூற்று: இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியில் ஒபெக் (OPEC) ஆர்வம் காட்டியுள்ளது.

காரணம்: தேவையான எண்ணெய் வளங்கள் இல்லாததால் இந்தியா விவசாயம் மற்றும் தொழில்துறை உற்பத்தியில் கவனம் செலுத்துகிறது.

(அ) கூற்று சரி, காரணம் கூற்றை விளக்குகிறது

(ஆ) கூற்று தவறு, காரணம் சரி

(இ) கூற்று காரணம் இரண்டும் சரி

(ஈ) கூற்று காரணம் இரண்டும் தவறு

**பொருத்துக:**

1. பிராண்டிக்ஸ் (Brandix) – வியன்னா

2. தகவல் தொடர்பப இணக்கத்தன்மை மற்றும்

பாதுகாப்பு ஒப்பந்தம் (COMCASA) – ஜப்பான்

3. ஷிங்கன்சென் – ஷாங்காய்

4. பிரிக்ஸ் (BRICS) – அமெரிக்க ஐக்கிய நாடுகள்

5. ஒபெக் (OPEC) – விசாகப்பட்டினத்தின் ஆடை நகரம்

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும் (விடைகள்)**

1. இந்தியா – சீனா 2. (2 மட்டும்) 3. எண்ணெய் ஏற்றுமதி நிறுவனங்களின் அமைப்பு

4. வங்காளதேசம் 5. (3 1 4 2) 6. (7) 7. இலங்கை மற்றும் மாலத்தீவுகள்

8. சிக்கிம் 9. (5) 10. சர் சிரில் ராட்க்ளிஃப்

**கோடிட்ட இடங்களை நிரப்புக: (விடைகள்)**

1. பூடான் 2. மியான்மர் 3. நேபாளம் 4. டீன்பிகா 5. பூடான் 6. பாக்நீர்ச்சந்தி

**பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றைத் தேர்வு செய்க:**

1. 1 3 மற்றும் 4

2. கூற்று சரி, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமாகும்.

3. 1 3 மற்றும் 4

4. கூற்று, காரணம் இரண்டும் சரி

**பொருத்துக: (விடைகள்)**

1. பிராண்டிக்ஸ் (Brandix) – விசாகப்பட்டிணத்தின் ஆடை நகரம்

2. தகவல்தொடர்பு இணக்கத்தன்மை

மற்றும் பாதுகாப்பு ஒப்பந்தம் (COMCASA) – அமெரிக்க ஐக்கிய நாடுகள்

3. ஷிங்கன்சென் – ஜப்பான்

4. பிரிக்ஸ் (BRICS) – ஷாங்காய்

5. ஒபெக் (OPEC) – வியன்னா

10th Social Science Lesson 23

23] மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் அதன் வளர்ச்சி: ஓர் அறிமுகம்

**உங்களுக்குத் தெரியுமா?**

1934ஆம் ஆண்டில் சைமன் குஸ்நட் என்பவரால் GDPயின் நவீன கருத்து முதன் முதலில் உருவாக்கப்பட்டது.

1867–68இல் முதன் முதலாக தாதாபாய் நௌரோஜி "வறுமையும் பிரிட்டனுக்கொவ்வாத இந்திய ஆட்சியும்" (Poverty and Un–British Rule in India) என்ற தனது புத்தகத்தில் தனி நபர் வருமானத்தைப் பற்றி கூறியுள்ளார்.

**GDPயின் மதிப்பீடு:** புள்ளியியல் துறை அமைச்சரவையின் கீழேயுள்ள மத்திய புள்ளியியல் அமைப்பு (CSO), GDP சம்பந்தப்பட்ட ஆவணங்களை பாதுகாக்கிறது. தொழிற்துறையின் உற்பத்தியை ஆண்டு கணக்கெடுப்பு நடத்தி தொழில்துறை உற்பத்தி குறியீடு (IIP), நுகர்வோர் விலை குறியீடு (CPI) போன்ற குறியீடுகளை வெளியிடுகிறது.

**மொத்த மதிப்பு கூடுதல்:** பொருளாதாரத்தில் ஒரு பகுதி, தொழில் அல்லது துறையில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மதிப்பே மொத்த மதிப்பு கூடுதல் (GVA) ஆகும். GVA = GDP + மானியம் – வரிகள் (நேர்முக வரி, விற்பனை வரி).

**மனித மேம்பாட்டுக் குறியீடு (HDI):** மனித மேம்பாட்டுக் குறியீடு என்பது 1990ம் ஆண்டு பாகிஸ்தானின் முகஹூப் – உல் ஹக் என்ற பொருளியல் அறிஞரால் அறிமுகப்படுத்தப்பட்டது. பிறப்பின் போது வாழ்நாள் எதிர்பார்ப்பு, வயது வந்தோரின் கல்வியறிவு மற்றும் வாழ்க்கைத் தரம், GDPயின் மடக்கை செயல்பாடு என கணக்கிடபட்டு, வாங்கும் சக்தி சமநிலைக்கு (PPP) சரி செய்யப்படுகிறது. UNDPயில் வெளியிடப்பட்ட சமீபத்தில் மனித வளர்ச்சி மதிப்பீடுகளில் இந்தியா 189 நாடுகளில் 130வது இடத்திற்கு உயர்ந்துள்ளது என வெளியிட்டுள்ளது. 1990–2017ன் இடைப்பட்ட காலத்தில் இந்தியாவின் HDIயின் மதிப்பு 0. 427லிருந்து 0. 640ஆக உயர்ந்தது. இது கிட்டத்தட்ட 50 சதவீதம் அதிகரித்து, மில்லியன் மக்களின் வறுமையை போக்கி நாட்டின் குறிப்பிடத்தக்க குறியீடாக உள்ளது.

மொத்த தேசிய மகிழ்ச்சி (GNH): 'GNH' என்ற வார்த்தையை 1972ல் உருவாக்கியவர் ஜிகமே சிங்கயே வாங்ஹுக் என்ற பூட்டான் அரசர். அவர் பம்பாய் விமான நிலையத்தில் நிதிகாலங்கள் (Financial Times) என்ற பத்திரிக்கைக்கு பிரிட்டிஷ் பத்திரிக்கையாளரின் நேர்காணலில் GNPஐ விட GNH மிக முக்கியம் என்றார். 2011ல் ஐக்கிய நாடுகள் சபை "வளர்ச்சிக்கான ஒரு முழுமையான அணுகுமுறைக்கு – மகிழ்ச்சி" என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது. உறுப்பு நாடுகள் பூடானை ஒரு எடுத்துக்காட்டாக பின்பற்றி மகிழ்ச்சியையும், நல்வழியையும் மகிழ்ச்சி என அழைத்தனர் ("அடிப்படை மனித குறிக்கோள்").

**GNHயின் 4 தூண்கள்:** (1) நிலையான மற்றும் சமமான சமூக பொருளாதார வளர்ச்சி; (2) சுற்றுச்சூழல் பாதுகாப்பு; (3) கலாச்சாரத்தை பாதுகாப்பதும் மேம்படுத்துவதும்; (4) நல்ல ஆட்சித் திறன். உளவியல் நலன், உடல் நலம், நேரப்பயன்பாடு, கல்வி, கலாச்சார பன்முகத் தன்மை, நல்ல ஆட்சித் திறன், சமூகத்தின் உயர்வு, சுற்றுச் சூழல் பன்முகத் தன்மை, வாழ்க்கைத் தரம் ஆகியவை GNH இன் 9 களங்களாகக் கருதப்படுகிறது.

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. GNPயின் சமம்

(அ) பணவீக்கத்திற்காக சரிசெய்யப்பட்ட NNP

(ஆ) பணவீக்கத்திற்காக சரிசெய்யப்பட்ட GDP

(இ) GDP மற்றும் வெளிநாட்டில் ஈட்டப்பட்ட நிகர சொத்து வருமானம்

(ஈ) NNP மற்றும் வெளிநாட்டில் ஈட்டப்பட்ட நிகர சொத்து வருமானம்

2. நாட்டு வருமானம் அளவிடுவது

(அ) பணத்தின் மொத்த மதிப்பு

(ஆ) உற்பத்தியாளர் பண்டத்தின் மொத்த மதிப்பு

(இ) நுகர்வு பண்டத்தின் மொத்த மதிப்பு

(ஈ) பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பு

3. முதன்மை துறை இதனை உள்ளடக்கியது

(அ) வேளாண்மை

(ஆ) தானியங்கிகள்

(இ) வர்த்தகம்

(ஈ) வங்கி

4. _____________ முறையில் ஒவ்வொரு இடைநிலை பண்டத்தின் மதிப்பை கூட்டும் போது, இறுதி பண்டத்தின் மதிப்பை கணக்கிடலாம்.

(அ) செலவு முறை

(ஆ) மதிப்பு கூட்டு முறை

(இ) வருமான முறை

(ஈ) நாட்டு வருமானம்

5. GDPயில் எந்த துறை மூலம் அதிகமான வேலைவாய்ப்பு ஏற்படுகிறது?

(அ) வேளாண் துறை

(ஆ) தொழில் துறை

(இ) பணிகள் துறை

(ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

6. பணிகள் துறையில் நடப்பு விலையில் மொத்த மதிப்பு கூடுதல் 2018–19இல் ___________ லட்சம் கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.

(அ) 91.06

(ஆ) 92.26

(இ) 80.07

(ஈ) 98.29

7. வேளாண் பண்டங்களின் உற்பத்தியில் இந்தியா ____________ அதிகமாக உற்பத்தியாளர் ஆகும்.

(அ) 1வது

(ஆ) 3வது

(இ) 4வது

(ஈ) 2வது

8. இந்தியாவில் பிறப்பின் போது எதிர்பார்க்கப்பட்ட ஆயுட்காலம் ___________ ஆண்டுகள் ஆகும்.

(அ) 65

(ஆ) 60

(இ) 70

(ஈ) 55

9. கீழ்கண்டவற்றுள் எது வர்த்தக கொள்கை?

(அ) நீர்பாசன கொள்கை

(ஆ) இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கொள்கை

(இ) நில சீர்திருத்தக் கொள்கை

(ஈ) கூலிக்கொள்கை

10. இந்திய பொருளாதாரம் என்பது

(அ) வளர்ந்து வரும் பொருளாதாரம்

(ஆ) தோன்றும் பொருளாதாரம்

(இ) இணை பொருளாதாரம்

(ஈ) அனைத்தும் சரி

**<u>கோடிட்ட இடங்களை நிரப்புக:</u>**

1. இந்தியாவில் ___________ துறை முதன்மை துறையாகும்.

2. ___________ மக்களின் வாழ்க்கைத் தரத்தை உணர்த்தும் ஒரு கருவியாகும்.

3. இரண்டாம் துறையை வேறுவிதமான ___________ துறை என அழைக்கலாம்.

**பொருத்துக:**

1. மின்சாரம்/எரிவாயு மற்றும் நீர் – நாட்டு வருமானம்/மக்கள் தொகை

2. விலைக்கொள்கை – மொத்த உள்நாட்டு உற்பத்தி

3. GST – தொழில்துறை

4. தலா வருமானம் – வேளாண்மை

5. C + I + G + (X–M) – பண்டம் மற்றும் பணிகள் மீதான வரி

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: (விடைகள்)**

1. பனி மற்றும் வெளிநாட்டில் ஈட்டப்பட்ட நிகர சொத்து வருமானம்

2. பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பு

3. வேளாண்மை 4. மதிப்பு கூட்டு முறை 5. பணிகள் துறை 6. (92, 26) 7. (2 வது)

8. (65) 9. இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கொள்கை 10. அனைத்தும் சரி

**கோடிட்ட இடங்களை நிரப்புக: (விடைகள்)**

1. வேளாண் 2. தலா வருமானம் 3. தொழில்

**பொருத்துக: (விடைகள்)**

1. மின்சாரம்/எரிவாயு மற்றும் நீர் – தொழில் துறை

2. விலைக் கொள்கை – வேளாண்மை

3. GST – பண்டம் மற்றும் பணிகள் மீதான வரி

4. தலா வருமானம் – நாட்டு வருமானம்/மக்கள் தொகை

5. C + I + G + (X–M) – மொத்த நாட்டு உற்பத்தி

10th Social Science Lesson 24

**24] உலகமயமாதல் மற்றும் வர்த்தகம்**

<u>உங்களுக்குத் தெரியுமா?</u>

**2018இல் இந்தியாவின் மிகப் பெரிய பன்னாட்டு நிறுவனங்கள்:** சோனி கார்ப்பரேசன் – நெட்டில்; ஹவுலக் பேக்கார்டு (HP) – பிராக்டர் & கேம்பில்; டாட்டா குழுமம் – சிட்டி குழுமம்; மைக்ரோ சாப்ட் கார்ப்பரேசன் – பெப்சி நிறுவனம்; ஐ. பி. எம் – கோகோ–கோலா நிறுவனம்.

**காட்டின் (GATT) சுற்றுகள்:** I வது ஜெனிவா (சுவிசர்லாந்து) – 1947; II வது அன்னிசி (பிரான்ஸ்) – 1949; III வது டார்க்குவே (இங்கிலாந்து) – 1950–51; IV, V மற்றும் VI ஜெனிவா (சுவிட்சர்லாந்து) – 1956, 1960–61, 1964–67; VII வது டோக்கியோ (ஜப்பான்) – 1973–79; 1986–1994இல் VIII வது மற்றும் இறுதிச் சுற்று பன்டாடெல் எஸ் டீ (உருகுவே). இதை "உருகுவே சுற்று" என அழைத்தனர்.

**உலக வர்த்தக அமைப்பு (World Trade Organisation):** தலைமையகம் – ஜெனிவா, சுவிட்சர்லாந்து; நோக்கம் – வணிகத்தினை கட்டுப்படுத்தல், அயல்நாட்டு வாணிபம்; உறுப்பினர்கள் – தலைமை இயக்குநர், துணை தலைமை இயக்குநர் 4 மற்றும் 80 உறுப்பு நாடுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 600 அலுவலக ஊழியர்கள்.

**அந்நிய செலாவணி கட்டுப்பாட்டுச் சட்டம் 1974 (Foreign Echange Regulation Act):** இந்த சட்டம் இந்தியாவில் பன்னாட்டு நிறுவனங்களின் செயல்பாட்டை நேரடியாக குறிப்பிடுகிறது.

**அந்நிய செலாவணி மேலாண்மைச் சட்டம் 1999** (Foreign Exchange Management Act): இது பாராளுமன்றத்தால் 1999ல் ஏற்றுக்கொள்ளப்பட்டது. "கட்டுப்பாட்டுக்கு" மாறாக "நிர்வாகத்தை" FEMAவின் கீழ் வலியுறுத்தியது.

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. உலக வர்த்தக அமைப்பின் (WHO) தலைவர் யார்?

(அ) அமைச்சரவை

(ஆ) தலைமை இயக்குநர்

(இ) துணை தலைமை இயக்குநர்

(ஈ) இவற்றில் எதுவுமில்லை

2. இந்தியாவில் காலனியாதிக்க வருகை

(அ) போர்ச்சுகீசியர், டச்சு, ஆங்கிலேயர், டேனிஷ், பிரெஞ்சு

(ஆ) டச்சு, ஆங்கிலேயர், டேனிஷ், பிரெஞ்சு

(இ) போர்ச்சுகீசியர், டேனிஷ், டச்சு, பிரெஞ்சு, ஆங்கிலேயர்

(ஈ) டேனிஷ், போர்ச்சுகிசியர், பிரெஞ்சு, ஆங்கிலேயர், டச்சு

3. காட் (GATT)–இன் முதல் சுற்று நடைபெற்ற இடம்

(அ) டோக்கியோ

(ஆ) உருகுவே

(இ) டார்குவே

(ஈ) ஜெனீவா

4. இந்தியா எப்போது டங்கல் திட்டத்தில் கையெழுத்திட்டது?

(அ) 1984

(ஆ) 1976

(இ) 1950

(ஈ) 1994

5. 1632இல் ஆங்கிலேயர்களுக்கு "கோல்டன் ஃபயர்மான்" வழங்கியவர் யார்?

(அ) ஜஹாங்கீர்

(ஆ) கோல்கொண்டா சுல்தான்

(இ) அக்பர்

(ஈ) ஔரங்கசீப்

6. வெளிநாட்டு முதலீட்டுக் கொள்கை (FIP) அறிவித்த ஆண்டு

winmeen.com

(அ) ஜீன் 1991

(ஆ) ஜீலை 1991

(இ) ஜீலை–ஆகஸ்ட் 1991

(ஈ) ஆகஸ்ட் 1991

7. இந்திய அரசாங்கத்தால் 1991இல் __________ ஐ அறிமுகப்படுத்தப்பட்டது.

(அ) உலகமயமாக்கல்

(ஆ) உலக வர்த்த அமைப்பு

(இ) புதிய பொருளாதார கொள்கை

(ஈ) இவற்றில் எதுவுமில்லை

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. ஒரு நல்ல பொருளாதாரம் ___________ ன் விரைவான வளர்ச்சிக்காக அறிமுகப்படுத்தப்படுகிறது.

2. உலக வர்த்தக அமைப்பு ஒப்பந்தம் ___________ ஆம் ஆண்டு அமுலுக்கு வந்தது.

3. ___________ ஆல் உலகமயமாக்கல் என்ற பதம் கண்டுபிடிக்கப்பட்டது.

**பொருத்துக:**

1. இந்தியாவில் பன்னாட்டு நிறுவனம் – 1947

2. பன்னாட்டு நிதி நிறுவனம் (MNC) – அயல்நாட்டு வாணிபத்தை செயல்படுத்தல்

3. சுங்கவரி, வாணிபம் குறித்த பொது உடன்பாடு (GATT) – உற்பத்தி செலவு குறைத்தல்

4. 8வது உருகுவே சுற்று – இன்ஃபோசிஸ்

5. உலக வர்த்தக அமைப்பு (WTO) – 1986

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: (விடைகள்)**

1. தலைமை இயக்குநர் 2. போர்ச்சுகீசியர், டச்சு, ஆங்கிலேயர், டேனிஷ், பிரெஞ்சு 3. ஜெனீவா

4. (1994) 5. கோல்கொண்டா சுல்தான் 6. ஜீலை – ஆகஸ்ட் 1991

7. புதிய பொருளாதார கொள்கை

**கோடிட்ட இடங்களை நிரப்புக: (விடைகள்)**

1. மூலதன சந்தையின் 2. ஜனவரி 1, 1995 3. தியோடோர் லெவிட்

**பொருத்துக: (விடைகள்)**

1. இந்தியாவில் பன்னாட்டு நிறுவனம் – இன்ஃபோசிஸ்

2. பன்னாட்டு நிதி நிறுவனம் (MNC) – உற்பத்தி செலவு குறைத்தல்

3. சுங்கவரி, வாணிபம் குறித்த பொது உடன்பாடு (GATT) – 1947

winmeen.com

4. 8வது உருகுவே சுற்று – 1986

5. உலக வர்த்தக அமைப்பு (WTO) – அயல்நாட்டு வாணிபத்தை செயல்படுத்தல்

10th Social Science Lesson 25

## 25] உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து

**உங்களுக்குத் தெரியுமா?**

**குறைந்தபட்ச ஆதரவு விலை (Minimum Support Price):** குறைந்த பட்ச ஆதரவு விலை என்பது அந்த பயிரின் சாகுபடியில் பல்வேறு செலவுகளை கருத்தில் கொண்டு ஒரு குறிப்பிட்ட பயிருக்கு ஒரு விலை, நிபுணர் குழுவால் நிர்ணயிக்கப்படுகிறது. குறைந்தபட்ச ஆதரவு விலை அறிவித்த பின்னர், இந்த பயிர்கள் பரவலாக வளர்க்கப்படும் இடங்களில் அரசு கொள்முதல் மையங்களைத் திறக்கும். எனினும், அந்த விவசாயிகள் தங்கள் பயிர், விளை பொருள்களுக்கு நல்ல விலையைப் பெற்றால் திறந்தவெளி சந்தையில் விற்க இயலும். மறுபுறம், திறந்த வெளி சந்தையில் விலை குறைந்தபட்ச ஆதரவு விலையை விட குறைவாக இருந்தால், விவசாயிகள் தங்கள் விளைபொருள்களை குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு விற்பதன் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட விலையைப் (MSP) பெறுவார்கள்.

**தமிழ்நாட்டில் தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம்:** இந்தியாவில் தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் துவங்கி மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர், இச்சட்டம் தமிழ்நாட்டில் நவம்பர் 1, 2016 அன்று துவங்கப்பட்டது.

**தாங்கியிருப்பு (Buffer Stock):** தாங்கியிருப்பு என்பது உணவு தானியங்களான கோதுமை மற்றும் அரிசி, இந்திய உணவுக் கழகத்தின் (Food Corporation of India) மூலம் அரசாங்கத்தால் வாங்கப்படுகிறது. உபரி உற்பத்தி இருக்கும் மாநிலங்களில் விவசாயிகளிடமிருந்து கோதுமை மற்றும் அரிசியை FCI வாங்குகிறது. விவசாயிகளுக்கு அவர்களின் பயிர்களுக்கு முன்பே அறிவிக்கப்பட்ட விலை வழங்கப்படுகிறது. இந்த விலை குறைந்த பட்ச ஆதரவு விலை (Minimum Support Price) என்று அழைக்கப்படுகிறது. இந்த பயிர்களின் உற்பத்தியை உயர்த்துவதற்காக விவசாயிகளுக்கு ஊக்கத் தொகை வழங்குவதற்காக விதைப்பு பருவத்திற்கு முன்னர் ஒவ்வொரு ஆண்டும் குறைந்த பட்ச ஆதரவு விலை (MSP) அரசாங்கத்தால் அறிவிக்கப்படுகிறது. கொள்முதல் செய்யப்பட்ட உணவு தானியங்கள் களஞ்சியங்களில் சேமிக்கப்படுகின்றன.

**வாங்கும் சக்தி சமநிலை (Purchasing Power Parity):** வாங்கும் சக்தி சமநிலை (PPP) என்பது வாங்கும் சக்தி தொடர்பான ஒரு கருத்தாகும். இது ஒரு பொருளாதாரக் கோட்பாடாகும். ஒரு பொருளின் விலையுடன் சரி செய்யப்பட வேண்டிய தொகையை மதிப்பிடுகிறது. நாடுகளின் வருமான நிலைகள் மற்றும் வாழ்க்கைச் செலவு தொடர்பான பிற தொடர்புடைய பொருளாதாரத் தரவு அல்லது பணவீக்கம் மற்றும் பணவாட்டத்தின் சாத்தியமான விகிதங்களை ஒப்பிடுவதற்கு வாங்கும் சக்தி சமநிலையை பயன்படுத்தலாம். சமீபத்தில் வாங்கும் சக்தி சமநிலையின் அடிப்படையில் இந்தியா மூன்றாவது பெரிய பொருளாதாரமாக மாறியுள்ளது. சீனா மிகப்பெரிய பொருளாதாரமாக மாறி, அமெரிக்காவை இரண்டாவது இடத்திற்கு தள்ளியுள்ளது.

**தமிழ்நாட்டின் அதிக மற்றும் குறைவான MPI மாவட்டங்கள்:** முதல் ஐந்து மாவட்டங்கள் – காஞ்சிபுரம், சென்னை, கடலூர், கோயம்புத்தூர், நாகப்பட்டினம். கடைசி ஐந்து மாவட்டங்கள் – தர்மபுரி, பெரம்பலூர், இராமநாதபுரம், விருதுநகர், அரியலூர்.

**தமிழ்நாட்டில் செயல்படும் முக்கியமான திட்டங்கள்:** (1) டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நலத்திட்டத்தின் (Dr. Muthulakshmi Reddy Maternity Benefit Scheme) கீழ், ஏழை கர்பிணிப் பெண்களுக்கு ₹ 12, 000/– நிதியுதவி வழங்கப்படுகிறது. (2) முதலமைச்சரின் விரிவான சுகாதார காப்பீடு திட்டம் (Chief Minister's Comprehensive Health Insurance Scheme) 2011–12ஆம் ஆண்டில் இந்த திட்டம் தொடங்கப்பட்டது. இதன் நோக்கம் அனைவருக்கும் உடல் நலம் வழங்கும் நோக்கில் அரசாங்கத்தால் இலவச மருத்துவ மற்றும் அறுவை சிகிச்சை வழங்குவதாகும். (3) தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்டங்கள் (Tamil Nadu Health Systems Projects) இலவசமாக ஆம்புலன்ஸ் சேவைகளை அறிமுகப்படுத்தியுள்ளது (108 அவசர ஆம்புலன்ஸ் சேவை). (4) "பள்ளி சுகாதார திட்டம்" (School Health Programme) விரிவான சுகாதார சேவையை அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் படிக்கும் அனைத்து மாணவர்களுக்கும் வழங்குவதை வலியுறுத்துகிறது. (5) தேசிய தொழுநோய் ஒழிப்பு திட்டத்தின் (National Leprosy Eradication Programme) மூலம் அனைத்து தொழுநோயாளிகளையும் கண்டறிந்து தொடர்ச்சியான சிகிச்சையை வழங்குவதை நோக்கமாக கொண்டு மாநிலத்தில் செயல்படுத்தப்படுகிறது.

**தமிழ்நாட்டில் சில ஊட்டச்சத்து திட்டங்கள்:** (1) புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர் ஊட்டச்சத்து உணவுத்திட்டம்; (2) ஆரம்பக் கல்விக்கு தேசிய ஊட்டச்சத்து ஆதரவு திட்டம்; (3) பொது ICDS திட்டங்கள் மற்றும் உலக வங்கி உதவியுடன் ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு சேவைகள் (General ICDS Projects and World Bank Assistegrated Integrated Child Development Services); (4) பிரதம மந்திரி கிராமோதயா யோஜனா திட்டம்; (5) தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம்; (6) மதிய உணவுத் திட்டம்.

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1. ____________ என்பது விரும்பிய அளவுகளில் உணவு இருப்பு இருப்பது, உள்நாட்டு உற்பத்தியில் இருப்பில் மாற்றங்கள் மற்றும் இறக்குமதி பற்றிய ஒரு செயல்பாடாகும்.

(அ) உணவு கிடைத்தல்

(ஆ) உணவுக்கான அணுகல்

(இ) உணவில் முழு ஈடுபாடு

(ஈ) இவை ஏதுமில்லை

2. தாங்கியிருப்பு என்பது உணவுப் பங்கு தானியங்கள் அதாவது கோதுமை மற்றும் அரிசியை ___________ மூலம் அரசாங்கம் கொள்முதல் செய்கிறது.

(அ) FCI

(ஆ) நுகர்வோர் கூட்டுறவு

(இ) ICICI

(ஈ) IFCI

3. எது சரியானது?

(i) HYV – அதிக விளைச்சல் தரும் வகைகள்

(ii) MSP – குறைந்தபட்ச ஆதரவு விலை

(iii) PDS – பொது விநியோக முறை

(iv) FCI – இந்திய உணவுக் கழகம்

(அ) i மற்றும் ii சரியானவை

(ஆ) iii மற்றும் iv சரியானவை

(இ) ii மற்றும் iii சரியானவை

(ஈ) மேற்கூறிய அனைத்தும் சரி

4. நீட்டிக்கப்பட்ட உதவி பொதுச் சட்டம் 480ஐ கொண்டு வந்த நாடு ___________

(அ) அமெரிக்கா

(ஆ) இந்தியா

(இ) சிங்கப்பூர்

(ஈ) இங்கிலாந்து

5. _________ இந்தியாவில் தோன்றியதால் உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற வழி வகுத்தது.

(அ) நீலப்புரட்சி

(ஆ) வெள்ளைப்புரட்சி

(இ) பசுமைப்புரட்சி

(ஈ) சாம்பல் புரட்சி

6. உலகளாவிய பொது வழங்கல் முறையை ஏற்றுக் கொண்ட ஒரே மாநிலம் ____________

(அ) கேரளா

(ஆ) ஆந்திரபிரதேசம்

(இ) தமிழ்நாடு

(ஈ) கர்நாடகா

7. ___________ என்பது உடல் நலம் மற்றும் வளர்ச்சிக்குத் தேவையான உணவை வழங்கும் அல்லது பெறும் செயல்முறையாகும்.

(அ) ஆரோக்கியம்

(ஆ) ஊட்டச்சத்து

(இ) சுகாதாரம்

(ஈ) பாதுகாப்பு

**<u>கோடிட்ட இடங்களை நிரப்புக:</u>**

1. ____________ ஊட்டச்சத்து குறைபாட்டின் முக்கியமான குறியீடாகும்.

winmeen.com

2. _____________ ஆம் ஆண்டில் தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் இந்திய நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது.

3. பொதுவான மக்களுக்கு பொறுப்பான விலையில் தரமான பொருள்களை வழங்குவதில் ___________ முக்கியப்பங்கு வகிக்கிறது.

**<u>பொருத்துக:</u>**

1. நுகர்வோர் கூட்டுறவு – மானிய விகிதங்கள்

2. பொது விநியோக முறை – 2013

3. UNDP – குறைந்த ஏழ்மை உள்ள பகுதி

4. தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் – தரமான பொருள்களை வழங்குதல்

5. கேரளா – ஐக்கிய நாடுகள் சபை வளர்ச்சித் திட்டம்

**<u>பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:</u>**

1. கூற்று: விலை குறைந்தால் வாங்கும் சக்தி அதிகரிக்கிறது மற்றும் இது நேர்மாறானது.

காரணம்: பொருள்களின் உற்பத்தி குறைந்து, விலை அதிகரிப்பதால் வாங்கும் திறன் பாதிக்கப்படுகிறது.

(அ) கூற்று சரியானது, காரணம் தவறானது

(ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறானது

(இ) கூற்று சரியானது, ஆனால் காரணம் சரியான விளக்கம் அல்ல

(ஈ) கூற்று சரியானது, காரணம் கூற்றின் சரியான விளக்கம்

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: (விடைகள்)**

1. உணவு கிடைப்பது 2. FCI 3. மேற்கூறிய அனைத்தும் சரி 4. அமெரிக்கா

5. பசுமைப் புரட்சி 6. தமிழ்நாடு 7. ஊட்டச்சத்து

**கோடிட்ட இடங்களை நிரப்புக: (விடைகள்)**

1. எடை குறைவு 2. (2013) 3. நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள்

**பொருத்துக: (விடைகள்)**

1. நுகர்வோர் கூட்டுறவு – தரமான பொருட்களை வழங்குதல்

2. பொது விநியோக முறை – மானிய விகிதங்கள்

3. UNDP – ஐக்கிய நாடுகள் சபை வளர்ச்சித் திட்டம்

4. தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் – 2013

5. கேரளா – குறைந்த ஏழ்மை உள்ள பகுதி

**பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றைத் தேர்வு செய்க:**

1. கூற்று சரியானது, காரணம் கூற்றின் சரியான விளக்கம்.

10th Social Science Lesson 26

## 26] அரசாங்கமும் வரிகளும்

**உங்களுக்குத் தெரியுமா?**

**வரி அமைப்பு:** ஒவ்வொரு வகையான வரியும் சில நன்மைகள் மற்றும் தீமைகளைப் பெற்றுள்ளன. நாம் கொண்டுள்ள வரி அமைப்பு, பல்வேறு வகையான வரிகளின் தொகுப்பாகும். ஆடம் ஸ்மித் முதல் பல பொருளாதார வல்லுநர்கள் வரி விதிப்புக் கொள்கைகளைக் கொடுத்துள்ளனர். அவைகளில் பொதுவான வகைகளை இங்கு நினைவு கூறுவது முக்கியமானதாகும்.

**1. சமத்துவ விதி:** வரி ஒரு கட்டாயக் கட்டணம் என்பதால், வரி முறையை வடிவமைப்பதில் சமத்துவம் என்பது முதன்மை என்பதை அனைத்து பொருளாதார வல்லுநர்களும் ஒப்புக் கொள்கிறார்கள். பணக்காரர்கள் ஏழைகளை விட அரசாங்கத்திற்கு அதிக வரி வருவாயை செலுத்த வேண்டும், ஏனென்றால் ஏழைகளை விட பணக்காரர்களுக்கு அதிக வரி செலுத்தும் திறன் உள்ளது.

**2. உறுதி விதி:** ஒவ்வொரு வரி செலுத்துவோரும் ஒரு வருடத்தில் எவ்வளவு வரித்தொகையை அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டும் என்பதைக் கணக்கிட ஒவ்வொரு அரசாங்கமும் வரி முறையை முன் கூட்டியே அறிவிக்க வேண்டும்.

**3. சிக்கன மற்றும் வசதி விதி:** வரி எளிமையானதாக இருந்தால், வரி வசூலிப்பதற்கான செலவு (வரி செலுத்துவோர் செலவு + வரி வசூலிப்போர் செலவு) மிகக் குறைவாக இருக்கும். மேலும், ஒரு நபருக்கு வரி செலுத்தப் போதுமான பணம் கிடைக்கும் நேரத்தில் வரி வசூலிக்கப்பட வேண்டும். இது வசதிக்கான வரி என்று அழைக்கப்படுகிறது. ஒரு வசதியான வரி, வரி வசூலிக்கும் செலவை குறைக்கிறது.

**4. உற்பத்தித் திறன் மற்றும் நெகிழ்ச்சி வரி:** அரசாங்கம் போதுமான வரி வருவாயைப் பெறக்கூடிய வரிகளை தேர்வு செய்ய வேண்டும். நிறைய வரிகளுக்குப் பதிலாக அதிக வரி வருவாயைப் பெறக் கூடிய சில வரிகளைத் தேர்வு செய்ய வேண்டும். இது உற்பத்தித் திறன் வரியாகும். மக்கள் தங்கள் வருமானத்திலிருந்து வரி செலுத்துகிறார்கள். எனவே, மக்கள் வருமானம் அதிகரித்தால் தானாகவே அதிக வரி வருவாயை செலுத்தும் வகையில் வரி அமைப்பு வடிவமைக்கப்பட வேண்டும். இது நெகிழ்ச்சி வரி எனப்படுகிறது.

இந்தியாவில் முதன்முதலாக வருமானவரி 1860ஆம் ஆண்டு சர் ஜேம்ஸ் வில்சன் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது. 1857ஆம் ஆண்டு கலகத்தின் மூலம் ஏற்பட்ட இழப்புகளை ஈடுகட்ட அரசாங்கத்தின் மூலம் போடப்பட்ட ஆணையே வரி விதிப்பாகும்.

வருமான வரி வலைத்தளத்தின் மூலம் நடப்பு ஆண்டிற்கான வருமான வரி அறிக்கையினை மாணவர்களை அறிந்து கொள்ளக் கூறுதல்.

இந்தியாவில் வரி விதிப்பின் வேர்கள் மனு ஸ்மிருதி மற்றும் அர்த்தசாஸ்திர காலத்திலிருந்தே பின்பற்றப்பட்டது. தற்கால இந்திய வரி முறையானது பண்டைய கால வரி முறையை அடிப்படையாகக் கொண்டது.

இந்தியாவில் அரசாங்கத்தினால் மூன்று அடுக்குகள் வரி வசூலிக்கப்படுகிறது. நடுவண் அரசால் எளிதில் வசூலிக்கக் கூடிய வரிகள் உள்ளன. இந்தியாவில் கிட்டத்தட்ட அனைத்து நேரடி வரிகளும் நடுவண் அரசால் வசூலிக்கப்படுகின்றன. பொருள்கள் மற்றும் சேவைகளுக்கான வரி நடுவண் மற்றும் மாநில

அரசாங்கங்களால் வசூலிக்கப்படுகிறது. சொத்துக்களுக்கான வரி உள்ளூர் அரசாங்கங்களால் வசூலிக்கப்படுகிறது. இந்தியாவில் நேரடி வரிகளை விட மறைமுக வரி மூலம் அதிக வரி வருவாய் வசூலிக்கப்படுகின்றது. இந்தியாவின் முக்கிய மறைமுக வரி சுங்க வரி மற்றும் பண்டங்கள் மற்றும் பணிகள் வரி (GST) ஆகும்.

**பண்டங்கள் மற்றும் பணிகள் வரியின் அமைப்பு (GST): மாநில பண்டங்கள் மற்றும் பணிகள் வரி (SGST) (மாநிலத்திற்குள்):** மதிப்புக் கூட்டு வரி (VAT)/விற்பனை வரி, கொள்முதல் வரி, பொழுதுபோக்கு வரி, ஆடம்பர வரி, பரிசுச்சீட்டு வரி, மற்றும் மாநில கூடுதல் கட்டணம் மற்றும் வரிகள்.

**மத்திய பண்டங்கள் மற்றும் பணிகள் வரி (CGST) (மாநிலத்திற்குள்):** மத்திய சுங்கத்தீர்வை, சேவை வரி, ஈடுசெய்வரி, கூடுதல் ஆயத்தீர்வை, கூடுதல் கட்டணம், கல்வி கட்டணம் (இடைநிலைக் கல்வி மற்றும் மேல்நிலைக் கல்வி வரி).

**ஒருங்கிணைந்த பண்டங்கள் மற்றும் பணிகள் வரி (IGST) (மாநிலங்களுக்கு இடையே):** நான்கு முக்கிய GST விகிதங்கள் உள்ளன. (5%, 12%, 18%, மற்றும் 28%) காய்கறிகள் மற்றும் உணவு தானியங்கள் போன்ற வாழ்க்கைக்குத் தேவையான அத்தியாவசிய தேவைகளுக்கான அனைத்து பண்டங்களுக்கும் இந்த வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகின்றன.

1954ஆம் ஆண்டு முதன்முதலில் பண்டங்கள் மற்றும் பணிகள் வரியை அமல்படுத்திய நாடு பிரான்ஸ் ஆகும்.

**<u>சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:</u>**

1. இந்தியாவிலுள்ள மூன்று நிலைகளான அரசுகள்

(அ) மைய, மாநில மற்றும் உள்ளாட்சி

(ஆ) மைய, மாநில மற்றும் கிராம

(இ) மைய, நகராட்சி மற்றும் பஞ்சாயத்து

(ஈ) ஏதுமில்லை

2. இந்தியாவில் உள்ள வரிகள்

(அ) நேர்முக வரிகள்

(ஆ) மறைமுக வரிகள்

(இ) இரண்டும் (அ) மற்றும் (ஆ)

(ஈ) ஏதுமில்லை

3. வளர்ச்சிக் கொள்கையில் அரசாங்கத்தின் பங்கு எது?

(அ) பாதுகாப்பு

(ஆ) வெளிநாட்டுக் கொள்கை

(இ) பொருளாதாரத்தை கட்டுப்படுத்தல்

(ஈ) மேற்கூறிய அனைத்தும்

winmeen.com

4. இந்தியாவில் தனி நபர்களின் மேல் விதிக்கப்படுகின்ற பொதுவான மற்றும் மிக முக்கியமான வரி

(அ) சேவை வரி

(ஆ) கலால் வரி

(இ) விற்பனை வரி

(ஈ) மத்திய விற்பனை வரி

5. ஒரு நாடு, ஒரே மாதிரியான வரி என்பதை எந்த வரி உறுதிப்படுத்துகிறது?

(அ) மதிப்புக் கூட்டு வரி (VAT)

(ஆ) வருமான வரி

(இ) பண்டங்கள் மற்றும் பணிகள் வரி

(ஈ) விற்பனை வரி

6. இந்தியாவில் வருமான வரிச்சட்டம் முதன் முதலில் ___________ ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

(அ) 1860

(ஆ) 1870

(இ) 1880

(ஈ) 1850

7. சொத்து உரிமையிலிருந்து பெறப்பட்ட நன்மைகளுக்கு _____________ வரி விதிக்கப்படுகிறது.

(அ) வருமான வரி

(ஆ) சொத்து வரி

(இ) நிறுவன வரி

(ஈ) கலால் வரி

8. கருப்பு பணத்திற்கான காரணங்கள் என கண்டறியப்பட்ட அடையாளம் எவை?

(அ) பண்டங்களின் பற்றாக்குறை

(ஆ) அதிக வரி விகிதம்

(இ) கடத்தல்

(ஈ) மேற்கூறிய அனைத்தும்

**<u>கோடிட்ட இடங்களை நிரப்புக:</u>**

1. _____________ மாநிலங்களின் பொருளாதார வளர்ச்சிக்காக அரசாங்கத்தால் விதிக்கப்படுகிறது.

2. "வரி" என்ற வார்த்தை ____________ சொல்லிலிருந்து பெறப்பட்டது.

3. __________ வரியில் வரியின் சுமையை மற்றவர்களுக்கு மாற்ற முடியாது.

4. பண்டங்கள் மற்றும் பணிகள் வரி ___________ ஆண்டு முதல் நடைமுறைக்கு வந்தது.

5. வரி நிர்வாகியிடமிருந்து மறைக்கப்பட்ட, கணக்கிடப்படாத பணம் ____________ என்று அழைக்கப்படுகிறது.

**பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை தேர்வு செய்க:**

1. GST பற்றி கீழ்க்கண்ட கூற்றுகளில் எது சரியானது?

(i) GST "ஒரு முனைவரி"

(ii) இது மத்திய மற்றும் மாநில அரசாங்கங்களால் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு விதிக்கப்படும் அனைத்து நேரடி வரிகளையும் மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

(iii) இது ஜீலை 1, 2017 முதல் நாடு முழுவதும் அமுல்படுத்தப்பட்டது.

(iv) இது இந்தியாவில் வரி கட்டமைப்பை ஒன்றிணைக்கும்.

(அ) i மற்றும் ii சரி

(ஆ) ii, iii மற்றும் iv சரி

(இ) i, iii மற்றும் iv சரி

(ஈ) மேற்குரிய அனைத்தும் சரி

**பொருத்துக:**

1. வருமான வரி – மதிப்புக் கூட்டு வரி

2. ஆயத்தீர்வை – ஜீலை 1, 2017

3. VAT – கடத்துதல்

4. GST – நேர்முக வரி

5. கருப்பு பணம் – மறைமுக வரி

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: (விடைகள்)**

1. மைய, மாநில மற்றும் உள்ளாட்சி 2. இரண்டும் (அ) மற்றும் (ஆ) 3. மேற்கூறிய அனைத்தும்

4. விற்பனைவரி 5. பண்டங்கள் மற்றும் பணிகள் வரி 6. (1860) 7. சொத்து வரி

8. மேற்கூறிய அனைத்தும்

**கோடிட்ட இடங்களை நிரப்புக: (விடைகள்)**

1. வரி 2. வரிவிதிப்பு 3. நேர்முக 4. (1 ஜீலை 2017) 5. கருப்பு பணம்

**பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றைத் தேர்வு செய்க:**

1. i, iii மற்றும் iv சரி

**பொருத்துக: (விடைகள்)**

1. வருமான வரி – நேர்முக வரி

2. ஆயத்தீர்வை – மறைமுக வரி

3. VAT – மதிப்புக் கூட்டு வரி

4. GST – ஜீலை 1, 2017

5. கருப்பு பணம் – கடத்துதல்

10th Social Science Lesson 27

**27] தமிழ்நாட்டில் தொழில் துறை தொகுப்புகள்**

**உங்களுக்குத் தெரியுமா?**

தெற்கு அரைக்கோளத்தில் உள்ள நாடுகள் உலகளாவிய தெற்கு நாடுகள் (Global South) என்று அழைக்கப்படுகின்றன.

**குறிப்பிட்ட சில தகவல் தொழில்நுட்ப பொருளாதார மண்டலங்கள்:** வளர்ச்சியை மேலும் அதிகப்படுத்தும் பொருட்டு சென்னை வட்டார பகுதிகளைத் தவிர, இரண்டடுக்கு (Tier – II) நகரங்களான கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, ஒசூர் மற்றும் சேலம் ஆகியவை தகவல் தொழிற்நுட்ப முதலீட்டிற்கான இடங்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இதனை எளிதாக்குவதற்காக ELCOT நிறுவனம் பின்வரும், எட்டு இடங்களில் ELCOSEZs (IT குறிப்பிட்ட பொருளாதார சிறப்பு மண்டலங்கள்) நிறுவியுள்ளது. சென்னை – சோழிங்கநல்லூர்; கோயம்புத்தூர் – விளாங்குறிச்சி; மதுரை – இலந்தை குளம்; மதுரை – வடபாலஞ்சி, கிண்ணிமங்கலம்; திருச்சிராப்பள்ளி – நாவல்பட்டு. மாநிலத்தின் அலகுகளை அமைக்க விரும்பும் நிறுவனங்கலுக்கு ELCOSEZs மூலம் வசதிகள் வழங்கப்படுகிறது. புதிய இடங்களில் ELCOSEZs அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள், தேவை மற்றும் நம்பகத் தன்மையின் அடிப்படையில் வழங்கப்படுகிறது. (வரைபட தகவல் தொழில் நுட்பக் கொள்கை – 2018–19). திருநெல்வேலி – கங்கைகொண்டான்; சேலம் – ஜாகீர் அம்மாபாளையம்; ஒசூர் – விஸ்வநாதபுரம்.

**சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (Special Economic Zones – SEZs):** நாட்டில் ஏற்றுமதிக்கு இடையூறு இல்லாத சூழலை கருத்தில் கொண்டு சிறப்புப் பொருளாதார மண்டலங்களை அமைப்பதற்கான ஒரு கொள்கை ஏப்ரல் 2000ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. அதன்படி, பின்வரும் இடங்களில் ஏற்றுமதி செயலாக்க மண்டலங்களை அரசு அமைந்துள்ளது. நாங்குநேரி SEZ – பல்நோக்கு உற்பத்தி SEZ திருநெல்வேலி; எண்ணூர் SEZ – அனல் மின் திட்டம், வயலூர்; கோயம்புத்தூர் SEZ – தகவல் தொழிற்நுட்ப பூங்காக்கள்; ஒசூர் SEZ – தானியங்கி பொறியியல், மின்னணுவியல், விண்வெளி மற்றும் பாதுகாப்பு; பெரம்பலூர் SEZ – பல்நோக்கு உற்பத்தி SEZ; தானியங்கி நகரம் (Auto city) SEZ – தானியங்கிகள்/தானியங்கி உதிரி பாகங்கள், திருவள்ளூர்; இந்தியா–சிங்கப்பூர் SEZ – IT/ITEs, மின்னணு வன்பொருள், தளவாடங்கள் மற்றும் கிடங்குகள்–திருவள்ளூர் மாவட்டங்கள்; உயிரி–மருந்துகள் SEZ – மருத்துவ ஆராய்ச்சி அமைப்பு, விஷக்கட்டுப்பாட்டு மையம், மைய மீள் உருவாக்க மருத்துவம், மருத்துவ ஆராய்ச்சி.

**மெட்ராஸ் ஏற்றுமதி செயலாக்க மையம் (Madras Export Processing Zone – MEPZ):** மெட்ராஸ் ஏற்றுமதி செயலாக்க மையம் சென்னையில் ஒரு சிறப்புப் பொருளாதார மையமாகும். மத்திய அரசு அமைத்த நாட்டின் ஏழு ஏற்றுமதி செயலாக்க மண்டலங்களில் இதுவும் ஒன்றாகும். இது அந்நிய நேரடி முதலீட்டினை

ஊக்குவிப்பதற்கும் அந்நிய செலாவணியை ஈட்டுவதற்கும், வட்டாரப் பகுதிகளில் அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் 1984ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. MEPZ தலைமையகம் சென்னையை அடுத்த தாம்பரம் GST சாலையில் அமைந்துள்ளது.

**ஸ்டார்ட் அப் இந்தியா திட்டம் (ஜனவரி 16, 2016):** ஸ்டார்ட் அப் இந்தியா திட்டம் என்பது இந்திய அரசின் ஒரு முன் முயற்சித் திட்டமாகும். இதன் முதன்மையான நோக்கம் தொழில் தொடங்குவதற்கான தொடக்க முயற்சிகளை ஏற்படுத்துதல், வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் வளங்களை உருவாக்குதல் ஆகும்.

**ஸ்டாண்ட் அப் இந்தியா திட்டம் (ஏப்ரல் 5, 2016):** ஸ்டாண்ட் அப் இந்தியா திட்டம் என்பது பச்சைப் புல்வெளி (Greenfield Enterprise) நிறுவனம் அமைப்பதற்காக குறைந்தபட்சம் 10 லட்சத்துக்கும், 1 கோடிக்கும் இடையில், ஒரு பட்டியல் சாதியினர் (SC) அல்லது பட்டியல் பழங்குடியினர் (ST) மற்றும் ஒரு வங்கிக் கிளைக்கு ஒரு பெண் கடன் பெறுபவர் என கடன் வழங்கி வங்கிக்கடன்களை எளிதாக்குவதே இத்திட்டமாகும்.

**<u>சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:</u>**

1. ஆசியாவின் டெட்ராய்ட் என அழைக்கப்படுவது ___________

(அ) தூத்துக்குடி

(ஆ) கோயம்புத்தூர்

(இ) சென்னை

(ஈ) மதுரை

2. குழாய்கள் மற்றும் நீரிறைக்கும் இயந்திரம் பெருமளவில் உற்பத்தி செய்யப்படுவது _____________

(அ) சேலம்

(ஆ) கோயம்புத்தூர்

(இ) சென்னை

(ஈ) தருமபுரி

3. ____________ என்பது ஒரு நாட்டின் வளர்ச்சியின் முக்கிய அம்சமாகும்.

(அ) வேளாண்மை

(ஆ) தொழில்

(இ) இரயில்வே

(ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

4. திருப்பூர் ____________ தொழிலுக்குப் பெயர்பெற்றது.

(அ) தோல் பதனிடுதல்

(ஆ) பூட்டு தயாரித்தல்

(இ) பின்னலாடை தயாரித்தல்

(ஈ) வேளாண் பதப்படுத்துதல்

5. ___________ இல் ஒரு வெற்றிகரமான தொழில் துறை தொகுப்பு முற்றிலும் தமிழ்நாட்டால் உருவாக்கப்பட்டது.

(அ) ஓசூர்

(ஆ) திண்டுக்கல்

(இ) கோவில்பட்டி

(ஈ) திருநெல்வேலி

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. நூற்றுக்கணக்கான தோல் மற்றும் தோல் பதனிடும் வசதிகள் தமிழ்நாட்டில் __________ மாவட்டத்தைச் சுற்றி அமைந்துள்ளன.

2. சிறப்புப் பொருளாதார மண்டலக் கொள்கைகள் ___________ ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

3. ______________ என்பவர் புத்தாக்க சிந்தனைகள் மற்றும் வணிக செயல்முறைகளின் புத்தாக்கம்புனைபவர் ஆவார்.

**தவறான ஒன்றினை தேர்வு செய்க:**

1. பின்வருவனவ்றில் தோல் தொழிற்சாலைகள் இல்லாதது எது?

(அ) ராணிப்பேட்டை

(ஆ) தர்மபுரி

(இ) ஆம்பூர்

(ஈ) வாணியம்பாடி

2. பின்வருவனவற்றில் எது தொழில்துறை வளர்ச்சி நிறுவனம் அல்ல?

(அ) TIDCO

(ஆ) SIDCO

(இ) MEPG

(ஈ) SIPCOT

**பொருத்துக:**

1. தொழில் முனைவோர் – ஏற்றுமதி செயலாக்க மண்டலம்

2. MEPZ – கோயம்புத்தூர்

3. இந்திய ஒழுங்குமுறை தொழிற்சாலை – அமைப்பாளர்

4. TNPL – அரவங்காடு

5. தென்னிந்தியாவின் மான்செஸ்டர் – கரூர்

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: (விடைகள்)**

1. சென்னை 2. கோயம்பத்தூர் 3. தொழில் 4. பின்னலாடை தயாரித்தல்

5. ஓசூர்

**கோடிட்ட இடங்களை நிரப்புக: (விடைகள்)**

1. வேலூர் 2. ஏப்ரல் 2000 3. தொழில் முனைவோர்

**தவறான ஒன்றினை தேர்வு செய்க: (விடைகள்)**

1. தர்மபுரி 2. MEPG

**பொருத்துக: (விடைகள்)**

1. தொழில் முனைவோர் – அமைப்பாளர்

2. MEPZ – ஏற்றுமதி செயலாக்க மண்டலம்

3. இந்திய ஒழுங்குமுறை தொழிற்சாலை – அரவங்காடு

4. TNPL – கரூர்

5. தென்னிந்தியாவின் மான்செஸ்டர் – கோயம்புத்தூர்

winmeen.com